
விக்கிரமன்
கடல் மல்லிகை
காதலி

சென்னை ... நூலகம்
கொளத்தூர், சென்னை

## நூல் விளக்கம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | கடல் மல்லைக் காதலி<br>முதல் பாகம் |
| ஆசிரியர் | : | கலைமாமணி. விக்கிரமன் |
| பதிப்பாளர் | : | நா. பாலகிருஷ்ணன் |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | சரித்திர நாவல் |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| முதல் பதிப்பு | : | டிசம்பர் 2001 |
| நூலின் அளவு | : | 1 x 8 கிரவுன் |
| எழுத்து | : | 10 புள்ளி |
| பக்கம் | : | 200 |
| தாள் | : | 11.6 kg |
| விலை | : | ரூ.50.00 |
| நூல் வெளியீடு | : | ஜெயலட்சுமி பதிப்பகம்<br>4, முத்து கிருஷ்ணன் தெரு<br>தி. நகர், சென்னை - 600017 |
| ஒளியச்சு | : | போனிக்ஸ் கம்ப்யூட்டர்ஸ்<br>சென்னை - 87. ✆ : 4868128 |
| அச்சிட்டோர் | : | ஸ்ரீ சரவணா ஆப்செட் பிரிண்டர்ஸ்<br>சென்னை - 81 |

32952
5008114

# முன்னுரை

வரலாற்றுப் புதினத்தைத் தொடர்கதையாக எழுதி பல்லாயிரக் கணக்கான வாசகர்களைப் படிக்கத் தூண்டியவர் அமரர் கல்கி. சமூக நாவல்களால் சமூகத்திற்குப் பயன் ஏற்படுகிறதோ இல்லையோ, வரலாற்று நாவல்களால் ஏற்படும் என்பது உண்மை. அதுதான் நம் பண்டைய பெருமையை அறிய வழி செய்வது.

'பார்த்திபன் கனவு', 'சிவகாமியின் சபதம்' இரு உயர் உரை நடைக் காவியங்களை அமரர் கல்கி எழுதிய பிறகுதான் பல்லவர்களின் பெருமை நாட்டு மக்களுக்குத் தெரிய வந்தது. பல்லவர்களின் கலைத் திறமையைத் தமிழ் மக்கள் உணர்ந்தனர். 'மகாபலிபுரம்' என்று புராணக் கதைகளுடன் தொடர்புப் படுத்தி அழைக்கப்பட்ட, மாமல்லபுரத்தின் பெயர்க் காரணம், அங்குள்ள சிற்ப அற்புதங்களின் சிறப்பு, பெருமை அனைத்தும் பிறகே மக்கள் உணர்ந்தனர்.

நானும், என் உயர் நண்பர் ஓவியர் ஸீபாவும் 1945-46ல் மாமல்லபுரத்தைக் காண மிகப் பிரயாசையுடன் சென்றோம். 'மாமல்லபுரம் வழி குறிப்புப் புத்தகம்' என்ற பெயரில் மாமல்லபுரச் சிற்பங்களின், குடைவரைக் கோயில்களின் சிறப்பு, பாறையில் செதுக்கப்பட்ட புடைச் சிற்பங்களின் அற்புதம் இவற்றை அந்த நூலில் குறிப்பிட்டிருந்தேன். பல பதிப்புகள் விற்பனையானதுடன், மாமல்லபுரத்தை நிலைக் களனாகக் கொண்ட புதினம் ஒன்று எழுத வேண்டும் என்ற ஆவலும் என் உள்ளத்தில் எழுந்தது. பரிவாதினி, உதயசந்திரன், காஞ்சி சுந்தரி போன்ற வரலாற்றுப் புதினங்களையும் எழுதினேன். ஆனால் 'கடல் மல்லைக் காதலி' எழுதும்போது பல்லவ சக்கரவர்த்தி இராஜசிம்மனின் இளம் பிராய நிகழ்ச்சிகளுக்காக நான் பல ஆண்டுகள் குறிப்புகளைத் தேடினேன்.

மாமல்லபுரக் கடற்கரையிலுள்ள கடற்கரைக் கோயில் ஓர் அமர படைப்பு. இராஜசிம்மனின் கனவு அது. தம் பாட்டனார் மாமல்லன் என்ற புகழ்ப் பெயர் கொண்ட நரசிம்மவர்மரைப் போன்று கலை ஆர்வம் படைத்தவர் ராஜசிம்மன். நரசிம்மவர்மன்தான் கடற்கரைக் கோயிலை அமைத்தவன் என்று எண்ணியிருந்த காலம் உண்டு.

அவர் அரியணை ஏறும்போது நாட்டில் பஞ்சமும், சாளுக்கியர்களால் தொல்லையும் சமயவாதிகளால் குழப்பங்களும் ஏற்பட்டன. ஆனால், பல்லவ நாட்டை மகத்தான பெருமையுடன் ஆண்டவர் நரசிம்மன் என்ற பிள்ளைப் பிராயப் பெயர்கொண்ட இராஜசிம்மன்.

"கடல் மல்லைக் காதலி" - புதினம் மலேசியா நாட்டில் தமிழ் நேசன் நாளிதழின் வாரச் சிறப்புப் பகுதியில் தொடராக வெளிவந்தது.

இந்த வரலாற்று நாவலில் பல சம்பவங்கள், எதிர்பாராத பல திருப்பங்கள் கற்பனை செய்யப்பட்டிருந்தாலும், புதினத்தின் சிறப்புக்கு, போக்குக்கு அவை பெரிதும் துணை செய்துள்ளன என்று நம்புகிறேன்.

ஜெயலட்சுமி பதிப்பத்தார் இந்த நாவலை வெளியிட்டதற்காக அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் ஆதரவும் எனக்கு எப்போதும்போல் இருக்கும் என்று நம்புகிறேன்.

விக்கிரமன்

சென்னை மாவட்ட கிளை நூலகம்
32952
5008114
கொளத்தூர், சென்னை - 99

அத்தியாயம் - 1

# அழகின் குற்றம்

வட்டத் திரைக் கடலிலிருந்து மெல்ல மெல்ல எழுந்து கொண்டிருந்தது முழு நிலவு.

கடல் நீராடிய புத்துணர்ச்சியுடன், சந்தனப் பொன் வண்ண மேனியுடன் வானவீதியில் மதி பவனி வருவதைக் கண்டு அலைகள் மகிழ்ச்சியுடன் ஆர்ப்பரித்தன.

நிலமடந்தைக்கு அவன் வருகையை அறிவிக்கக் கரை வரை விரைந்தன அலைகள்.

அவை இடும் குதூகல ஓசை தொலைவில் எழும் இசைக்குச் சுருதி கூட்டுவதுபோல் தோன்றியது.

சிலரை மட்டுமல்லாது பலரையும் நோக்கி ஏழை செல்வந்தர் என்ற ஏற்றத் தாழ்வில்லாமல் வீசும் காற்று மரங்களினூடே நுழைந்து புதுவித ஓசையை எழுப்பிக் கொண்டிருந்தது.

மாமல்லபுரத்தினின்று தெற்கே சில கல் தொலைவில் இருந்த சிறு கிராமத்திலிருந்த வீடுகள் ஓரிரண்டைத் தவிர மற்ற வீடுகளில் யாரும் வசிக்கவில்லை. திறந்திருந்த ஒரு வீட்டிலும் அமைதி குடிகொண்டிருந்தது. மற்றொரு வீட்டில் கால் சதங்கை ஒலி எழுந்து கொண்டிருந்தது.

தாழ்வாரத்தில் உட்கார்ந்து கொண்டு ஒவ்வொரு சதங்கையாக எடுத்துச் சரிபார்த்துக் கோத்துக் கொண்டிருந்தாள் சந்திரமாலா. மாடத்தில் அகல் விளக்கொன்று எரிந்து கொண்டிருந்தது. அவள் எதிரே பேழையொன்று திறந்திருந்தது. பேழைக்குள்ளிருந்து வெள்ளி, தங்க ஆபரணங்கள் வெளியே எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தன.

சந்திரமாலா ஒவ்வொரு ஆபரணத்தையும் சரிபார்த்துக் கொண்டிருப்பதை, எழுபது பிராயத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் மூதாட்டி கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"எப்பொழுது வருவதாக வல்லபன் கூறினான்?" என்று மூதாட்டி கேட்டாள். ஆவலைவிடக் கவலை அவள் குரலில் ததும்பி நின்றது.

"பொழுது சாய்ந்தவுடனே மாட்டு வண்டியுடன் வந்துவிடுவதாக வல்லபன் கூறிச் சென்றான்" என்றாள் சந்திரமாலா. உதிர்ந்த சதங்கை மணிகளைக் கோத்துக் கொண்டு.

"வல்லபனா...! பொழுது சாய்ந்தவுடனே வருகிறேன் என்றால் பொழுது புலரும்போது வந்துவிடுவான்..." என்று கூறித் தன் பொக்கை வாயைக் காட்டிச் சிரித்தாள் மூதாட்டி முத்தம்மாள்.

முத்தம்மாளை மாமல்லை வட்டாரத்தில் அறியாதவர்கள் இருக்கமாட்டார்கள். இந்தக் கிராமத்திலேயே பிறந்து வளர்ந்து வாழ்ந்து வருபவள். கடைசி மூச்சையும் அந்த மண்ணிலேயே விட்டுவிட நினைப்பவள்.

"வல்லபன் மத்தளம் நன்றாகக் கொட்டுவதாகக் கேள்விப்பட்டேன்" என்றாள் முத்தம்மாள்.



"பாட்டி, நீங்கள் ஒரு நாளாவது என் நாட்டியத்தைப் பார்த்து வாழ்த்த மாட்டேன் என்கிறீர்களே.. வல்லபனின் மத்தளமும், தருமனின் தாளமும், விசயனின் குழலும் கேட்டால் அந்த இடத்தைவிட்டு நீங்கள் நகரவே மாட்டீர்கள்..." என்றாள் சந்திரமாலா.

"நாட்டியம் - பாட்டு - கூத்து, ஹூம்" என்று பெருமூச்சுவிட்ட முத்தம்மாள், "இப்பொழுது எனக்கு வேண்டியது ஒரு வேளையாவது வயிற்றுக்குக் கூழ். அந்தக் கூழை நீ வார்த்து வருகிறாய். அதற்காகவாவது நீ நன்றாய் இருக்க வேண்டும்; உன் கலைத்திறமை வளரவேண்டும் என்று வாழ்த்துகிறேன். நாட்டியம், நடனம், இசை எல்லாம் என் வாழ்நாளில் வேண்டிய அளவுக்குக் கேட்டு, ரசித்து அனுபவித்து விட்டேன். இப்போது என் காதுகளில் கடலோசைதான் கேட்கிறது. அதே கடல் 'இன்னும் தொலைவில் இருந்ததையும் நான் அறிவேன்.. என்று கூறி முத்தம்மாள் பெருமூச்சு விட்டாள்.

"இருபது ஆண்டுகளில் கடல் மிக அருகே வந்து விட்டதா பாட்டி?" - சந்திரமாலா காலில் சதங்கையை மாட்டிக் கொண்டாள்.

"ஆமாம்... ஆமாம்... இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளில் இந்தக் கிராமத்தையே தன் பசிக்கு இரையாக்கிவிடும். மனிதனுக்கு இப்பொழுது ஏற்பட்டிருக்கும் கொடிய பசியைக் கடல்தான் முடிவுக்குக் கொண்டு வர வேண்டும்", முத்தம்மாள் உலகப்பற்று அற்றவள்போல் பேசினாள்.

எழுபது வருட வாழ்க்கையில் இதுபோன்ற பசிக்கொடுமையை அவள் அறிந்தவளல்லள். மழை பெய்து இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன. வயல்களில் ஏர் முனை பட்டு பல மாதங்கள் ஆகிவிட்டன. ஒரு மணி நெல்கூட எங்கும் கிடைக்கவில்லை. கிராமப்புறங்களில் அரிசி கிடைக்காததால் அருகேயுள்ள சிறு ஊர்களுக்குச் செல்லத்

தொடங்கினர். சிறு ஊர்களில் நெருக்கடி அதிகமானதால் நகர்ப் பகுதிக்குச் செல்லத் தொடங்கினர். நகரங்களில் நெருக்கடி அதிகமானதால், பல்லவத் தலைநகரான காஞ்சிமா நகரில் கூட்டம் கூட்டமாக குடியேறினர்.

சந்திரமாலாவும், முத்தம்மாளும் அந்தக் கிராமத்தை விட்டு வெளியேறவில்லை. மற்றவர்கள் வேலை தேடி வெவ்வேறு ஊர்களுக்குச் சென்றுவிட்டனர். சந்திரமாலா ஊர் ஊராகச் சென்று பாரதக் கதைகளை நாட்டியமாக ஆடுவாள். நாடகத்தில் முக்கிய பாத்திரமேற்று நடிப்பாள். அதற்காக அவளுக்குக் கிடைக்கும் பொருளைக் கொண்டு அந்தக் கிராமத்தில் வாழ்ந்து வந்தாள். முத்தம்மாளின் துணை அவளுக்குப் பக்கபலமாக இருந்தது. முத்தம்மாளின் பசியைச் சந்திரமாலா தீர்த்து வந்தாள். முத்தம்மாளின் வீட்டில் விளக்கேற்றக்கூட எண்ணெய் கிடையாது. அதனால், இரவு வேளைகளில் சந்திரமாலாவின் வீட்டிலேயே படுப்பாள்.

சந்திரமாலா எழுந்து நின்று கொண்டாள். தன் ஆடையை மாற்றிக்கொள்ள முனைந்தாள்.

கூடத்திலிருந்த கண்ணாடி எதிரே நின்றுகொண்டு பழைய கச்சையை அவிழ்த்தாள்.

"பாட்டி, தெருவாசலைச் சற்றுப் பார்த்துக் கொள்ளுங்கள்; வல்லபன் குரல் கொடுக்காமலே உள்ளே நுழைந்துவிடுவான்" என்றாள். பிறகு பரபரப்புடன் உடுத்தியிருந்த ஆடையைக் களைந்து வேறு ஆடையை அணிந்து கொண்டாள். ஒரு சில கணத்தில் அவளது பிறந்தமேனித் தோற்றத்தைக் கண்டு முத்தம்மாள் பெருமூச்சு விட்டாள். வளர்ந்து பூத்துக் குலுங்க வேண்டிய மலர்க்கொடி உரமும் நீரும் இன்றி வாடுகிறதே என்று வேதனைப்பட்டாள். அவளும் ஒரு பெண்தானே! அதுபோன்ற பருவ வயதில் செழுமையாக இருக்க வேண்டிய அவசியத்தை அவள் உணர்ந்தவள்.



"மாலா, வேளா வேளைக்கு வயிற்றுக்குப் போட்டால்தான் நல்லது. வளரவேண்டிய பருவத்தில் எழில் பூத்துக் குலுங்க வேண்டியவை வளர்ச்சியடையும். பகலில் ஓய்வு இன்றிக் கடற்கரையில் புன்னைமர நிழலில் அமர்ந்திருக்கிறாய். கடல் கடந்து சென்ற உன் தந்தை வந்துவிடுவாரா என்ற ஏக்கத்துடன் இருக்கிறாய். இரவில் நாட்டியம் கூத்து என்று ஊர் சுற்றப் போய்விடுகிறாய். அழகு யாருக்காகவும் காத்திருக்காது. இந்த வயதில் அழகைப் பாதுகாத்து வளர்த்துக் கொள்ளாவிடில்..." - முத்தம்மாள் சிரித்தாள்.

"பாட்டி, எவ்வளவு நாளைக்கு இப்படி ஆடி ஆடிப் பிழைக்க முடியும் என்று நினைக்கிறீர்கள்? இன்னும் ஒரு வாரத்தில் மழை பெய்யாவிட்டாலோ, களஞ்சியத்திலிருந்து அரிசி வராவிட்டாலோ, கிராம மக்கள் தெற்கு நோக்கிப் போய்விடுவார்கள். பசியைத் தீர்க்க அவர்கள் பறக்கும்போது பாட்டாவது கூத்தாவது? என் வயிற்றுக்கு இறைவன் எப்படிப் படியளக்கப் போகிறாரோ" - சந்திரமாலா மாடத்து விளக்கைத் தூண்டிவிட்டுத் திரும்பினாள்.

அந்த மங்கிய ஒளியிலும் அவளுடைய அழகு சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. வளைந்த புருவமும், எடுப்பான நாசியும், உணர்ச்சியை உமிழும் அதரங்களும், செவ்விள நீர்க்குலை போன்ற தனங்களும், அதைத் தாங்க முடியாமல் துவளும் இடையும், பட்டத்து யானையின் துதிக்கை போன்ற தொடையும், மூங்கில் போன்ற தோளும், பூங்கரங்களும், ஆடப்பிறந்த பாதங்களும், திரும்பி நடந்து செல்லும்போது அசைந்து அசைந்து கண்டவரைக் கவர்ந்திழுக்கும் பின்னழகும் அந்த மூதாட்டியை வைத்தவிழி வாங்காது பார்க்கச் செய்தன.

"இன்று எந்த ஊருக்குப் போகப் போகிறாய்?"

"திருவிடவெந்தை... அழகிய கோயில் அங்கே இருக்கிறதாமே! வராஹமூர்த்தி திருமகளை இடது பக்கத்தில் தூக்கிக் கொண்டிருக்கிறாராம்".

"ஆமாம்... ஆமாம்! ஆண்களுக்குத் தேவைப்பட்டால் தலை மீதுகூடத் தூக்கிக்கொள்வார்கள். அந்த ஊரில்தான் என் அம்மா பிறந்தாள்".

"பாட்டி, இவ்வூர் கடற்கரைப் பகுதியைவிட்டு வேறு எங்கும் நீங்கள் சென்றதில்லையா?"

சந்திரமாலாவின் கேள்விக்குப் பெருமூச்சு மட்டுமே விடையாக முத்தம்மாளிடமிருந்து வந்தது. இதுவரை ஒருவருக்கொருவர் தங்கள் கதையைச் சொல்லிக் கொண்டார்களில்லை. அறிந்து கொள்ளவுமில்லை.

"சந்திரமாலா! நான் போகாத ஊரில்லை. எங்குச் சென்றாலும் இந்தக் கிராமத்து அமைதி எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. அதனால் திரும்பவும் இங்கேயே வந்துவிடுவேன்..." மீண்டும் பெருமூச்சு விட்டாள் முத்தம்மாள்.

சந்திரமாலா வெளியே எட்டிப் பார்த்துவிட்டு வந்தாள். "இன்னும் வல்லபனைக் காணவில்லையே... அவன் எப்போது வருவானோ!" சந்திரமாலாவுக்கு வீட்டிற்குள்ளேயே இருப்புக் கொள்ளவில்லை. திண்ணையிலேயே உட்கார்ந்து கொண்டாள். முத்தம்மாளும் மெல்ல எழுந்து வெளியே வந்தாள்.

"புழக்கடைக் கதவைத் தாழிட்டு வந்துவிடு. இல்லாவிடில் நாய் சோற்றுப் பானையை உருட்ட நுழைந்துவிடும்" என்று கூறிய முத்தம்மாளும் வாயில் திண்ணைக்கு வந்தாள். வெளியே மங்கிய நிலவொளி. அந்தக் கிராமத்து வீதியின் அமைதியும், கடலோசையும் ஒருவிதப் பயங்கரத்தை அளித்துக் கொண்டிருந்தன.



"இந்தக் கிராமம் இப்போது இருப்பதைப் போலவே களையிழந்திருந்தது. ஒரு காலத்தில் காடும் மலையுமாக இந்தப் பகுதி இருந்ததையும் அறிவேன். மளமளவென்று காட்டுப்பகுதிகள் அழிக்கப்பட்டுப் பாறைகளில் சிற்றுளியின் நாதம் ஒலிக்க ஆரம்பித்ததையும் அறிவேன்". முத்தம்மாள் பழைய நினைவிற் கூறினாள்.

சந்திரமாலா நிமிர்ந்து உட்கார்ந்தாள். "பாட்டி... பாட்டி சொல்லுங்கள். மாமல்லபுரம் உருவாக்கப்பட்டதை நீங்கள் அறிவீர்களா? வாதாபியில் நாங்கள் இருந்தபோது என் தாயார் அடிக்கடி சொல்லுவாள் மாமல்லபுரத்திற்குச் சென்றுவிட வேண்டுமென்று..."

"ஓ! நீ வாதாபியிலிருந்து வந்தவளா? உன் தாய் சாளுக்கிய நாட்டைச் சேர்ந்தவளா? அதனால்தான் உயரமும், கம்பீரமும், வனப்பும், வாளிப்பும் உன்னிடம் ததும்பி நிற்கின்றன. உம்... சொல்லு... சொல்லு... உன் கதையைச் சொல்லு" என்று முத்தம்மாள் சிறு குழந்தையைப்போல் கேட்டாள்.

சந்திரமாலா கலகலவென்று சிரித்தாள். "கதை கேட்பதில் என்னைவிடக் குழந்தை போலிருக்கிறீர்களே...? என் கதை இருக்கட்டும். வேதனையும் சோதனையும் நிறைந்த கதை. எனக்கு மாமல்லபுரத்துச் சிற்ப பூமியைப் பற்றித் தெரிந்துகொள்ள ஆசை. காட்டை அழித்து மலையைக் குடைந்த அரசர்களைப் பற்றித் தெரிந்துகொள்ள ஆசை. அவர்கள் ஏன் திட்டப்படி மாமல்லபுரத்தில் சிற்பக் கோயில்களைக் கட்டி முடிக்கவில்லை.... சொல்லுங்கள் பாட்டி?" சந்திரமாலா பாட்டியின் தோள்களைப் பிடித்துக் கொண்டாள். வயது முதிர்ந்த முத்தம்மாள் சந்திரமாலாவின் ஸ்பரிச மென்மையை உணர்ந்து உடல் சிலிர்த்தாள்.

"பத்துப் பதினைந்து வயதிருக்கும். ஒரு நாள் என் தாயார் என்னை அழைத்துக்கொண்டு திருவிடவெந்தையிலிருந்து இந்தக் கிராமத்துக்கு வந்தாள். அப்போது

வெறும் மலைப்பகுதிதான் இங்கே. நாங்கள்தான் இந்தக் கிராமத்தையே உருவாக்கினோம். எங்களுக்கு உறுதுணையாக நூற்றுக்கணக்கான சிற்பிகள் இருந்தனர். அவர்கள் மாமல்லபுரத்தில் பணியாற்றத் தெற்கே இருந்து வந்தவர்கள்..."

"ஓ! நீங்களும் சிற்பியின் மகளா?" சந்திரமாலா ஆவலுடன் கேட்டாள்.

"இல்லை... இல்லை... நாட்டியராணியின் அருமைப் புதல்வி. ஆனால் எனக்கு ஆடவே வராது!"

இருவரும் சிரித்தனர். "பாட்டி, பாட்டி சொல்லுங்கள். என்னுடைய கதையைப் போலவே இருக்கிறது. நானும் நாட்டியக்காரியின் மகள். என் தந்தை ஓர் சிற்பி, உங்கள் தந்தை?" சந்திரமாலா கேட்டாள்.

"என் தந்தை பல்லவப் படையில் பணியாற்றிய போர் வீரர். போரில்லாத காலத்தில் உழுது பயிரிடுவார். மகேந்திர சக்கரவர்த்திக்கு என் தந்தையிடம் மிகுந்த அன்பு உண்டு. நீ மகேந்திர சக்கரவர்த்தியைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறாயா?"

"ஆகா... கேள்விப்பட்டிருக்கிறேன். மகேந்திர சக்கரவர்த்தியைப் போன்ற குணமுடையவர்கள் இனி எங்கே பிறக்கப் போகிறார்கள். அவர் சிறு வயதில் வாதாபிக்கு வந்திருக்கிறாராம். அருகேயுள்ள குகைக்கோயில்களைப் பார்த்துவிட்டு பல்லவ நாட்டிலும் அதுபோல் அமைக்க ஆசை கொண்டாராம். என் தாய் சொல்வாள்..."

"மகேந்திர சக்கரவர்த்தியை நான் பார்த்திருக்கிறேன். அவரது புதல்வர் நரசிம்மவர்மரைப் பலமுறை பார்த்திருக்கிறேன். அது பெரிய கதை. அதையெல்லாம் பிறகு சொல்கிறேன். அவர் காலத்தில்தான் கடல்மல்லை என்ற ஊரின் பெயரை மாமல்லபுரம் என்று மாற்றினார்கள். அவரது தணியாத கலையார்வம்தான் இந்தப் பகுதியைக் கலைப் பூமியாக்கியது..."



"ஆனால், அவரது திட்டப்படி ஏதும் முடிவடையவில்லை போலிருக்கிறதே...?"

"ஆமாம், சந்திரமாலா. மகேந்திரவர்மர் போரை வெறுப்பவர். ஆனால், நரசிம்மவர்மரோ சிறந்த மல்லர். மகா வீரர். அதே சமயம் கலை ஆர்வம் மிக்கவர். சாளுக்கியர்களின் தாக்குதலுக்கு அவர் ஈடு கொடுக்க வேண்டி வந்தது. சத்யாச்ரய புலிகேசியின் தொல்லை தாளாமல் அவரை நிரந்தரமாக அழித்துவிட நினைத்து வாதாபிக்குப் படைகளுடன் சென்று அந்த நகரையே கொளுத்தினார்..."

"பாட்டி... என் தாய் அந்தச் சம்பவத்தைச் சொல்லியிருக்கிறார்கள்..."

முத்தம்மாள் சிறிது நேரம் மௌனமாக இருந்தாள். பிறகு, "நரசிம்மவர்மர் காலத்தில் நான் சிறுமி. என் தாயின் நாட்டியத்தைக் காண அவர் வருவார். பெருந்திட்டமிட்டுச் சிற்பிகளை வரவழைத்து தமது எண்ணத்தைக் கூறுவார். இதே கிராமத்தில்தான். உம்... அவருக்குப் பிறகு பரமேச்வர வர்மர் பட்டத்துக்கு வந்தார். நானும் என் கணவரும் பலபல ஊர்களுக்குச் செல்ல ஆரம்பித்தோம். பரமேச்வரவர்மர் பட்டமேறிய வேளை; எப்போதும் யுத்தம், யுத்தம், யுத்தம்தான். ஆனாலும் என் வாழ்நாளில் மறக்க முடியா இன்பப் பகுதி அப்போதுதான். சுகவாழ்வு கணவரின் அன்பு. எப்போதுமே இன்பத்தின் உயர் நிலையில் வாழ முடியுமா...? ஒன்று வாழ்வு முடிந்துவிடும் அல்லது துன்பத்தின் கோரப்பிடிகள் பிடித்துவிடும். என் அழகே எனக்குச் சத்ருவானது. என் அழகைப் பற்றி நான் இப்போது புகழ்ந்து கொள்ள முடியுமா? நம்புவதற்கு ஆள் வேண்டாமா...?" என்று முத்தம்மாள் வாய்விட்டுச் சிரித்தாள்.

"நானிருக்கிறேன் பாட்டி பாராட்ட. நூறு ஆண்டு ஆனாலும் சந்தனத்தின் வாசனை மாறிவிடுமா? ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு நீங்கள் எப்படி இருந்திருப்பீர்கள் என்று கற்பனை செய்து பார்த்துக் கொள்கிறேன்... என்று

கூறிய சந்திரமாலா பாட்டியின் அந்தக் கால அழகைக் கற்பனை செய்து கொண்டாள்.

"என்ன இருந்தாலும் உன் அழகுக்கு இணையாக மாட்டேன். மறுபடியும் சொல்கிறேன். அழகுதான் பெண்ணின் கொடிய எதிரி. ஆனால் உறுதியும், வலிமையும் ஓர் அழகிக்கு இருந்துவிட்டால் இந்த உலகத்தையே அடிபணிய வைத்துவிடலாம். என் அழகு ஆடவர் பலரைக் கவர்ந்தது; கலங்க வைத்தது. என் கணவருக்குக் கிடைத்த பொக்கிஷம் என்று என்னைப் பாராட்டினர். சந்திரமாலா, எந்த ஆடவரை நம்பினாலும் நம்பலாம், துறவி வேடம் பூண்டிருக்கும் கபட சந்நியாசிகளை நம்பக்கூடாது.

"என் கணவர் சிவபக்தர். என்றாலும், காபாலிகன் ஒருவன் அவனுக்கு நண்பன். ஒழுக்கமற்ற வாழ்வும், குடிபோதையும், மயானக் குடியிருப்பும், போலிப் பக்தியும் கொண்ட அவனுக்கு என் மீது ஒரு கண். அதே போல புத்த பிட்சு ஒருவருக்கும் என் அழகு அவர் இதயத்தில் பெரும் கனலை மூட்டிவிட்டது போலிருக்கிறது. நான் அதை அறியவில்லை. ஆண் உள்ளத்தை நம்பினேன். காபாலிகன் நினைத்தபோது என் கணவரைச் சந்திக்க வருவான். ஒருநாள் அவர் இல்லாதபோது மது போதையில் வந்த காபாலிகன், நான் தூங்கிக் கொண்டிருந்தபோது என் அருகில் அமர்ந்து....

"உம்... உடனே விழித்தெழுந்த நான், அவனை அங்கிருந்து திரும்பிப்பாராமல் ஓடிவிடச் செய்தேன். என் மனமே சரியில்லை. கணவர் வந்தவுடன் சொன்னேன். அவர் மிகவும் முன் கோபக்காரர். அந்தக் கணத்திலேயே காபாலிகனைத் தேடிப்பிடித்து அழைத்து வந்து காலில் வீழ்ந்து மன்னிப்புக் கேட்கச் செய்தார். அதேபோல் சஞ்சல மனதுடைய பிட்சுவையும் தேடி அழைத்து வந்த மன்னிப்புக் கேட்கச் செய்தார்.

"அதன் விளைவு, அடிப்பட்ட வேங்கைபோல் இருவரும் என் கணவர் மீது கோபங்கொண்டு பழிக்குப்பழி வாங்கக் காத்திருந்தனர். புத்தப்பிரானின் கொள்கைளை ஏற்று



நல்வழி நடக்கவேண்டிய பிட்சுவிற்கு இப்படி ஒரு கபட எண்ணம். அன்பே சிவம் என்ற சிவபிரானின் பக்தனான காபாலிகனுக்கும் இப்படி ஒரு கெட்ட எண்ணம். பாவிகள்! ஒருநாள்; தனியே வந்துகொண்டிருந்த என் கணவரைப் பிட்சு வம்புச் சண்டைக்கு இழுத்தான். உடைவாளை எடுத்துக் கொண்டு அவன்மீது பாயத் தயாரான என் கணவரைப் பின்புறமிருந்து காபாலிகன் சூலாயுதத்தால் குத்தி வீழ்த்தினான்..."

சந்திரமாலாவின் உடலில் இலேசான நடுக்கம். அந்த வரலாற்றை அதற்கு மேல் அவள் கேட்க விரும்பவில்லை.

"பாட்டி, பாட்டி... போதும். வேண்டாம். எனக்குக் கேட்கவே பயமாயிருக்கிறது. அழகு சத்ருதான். என்னைப் போன்ற தனிமையே துணையென்றிருக்கும் பெண்ணுக்கு எப்போதும் ஆபத்துதான். என்னைவிட்டுப் பிரிந்த என் தந்தை எப்போது வருவாரோ?..." அவர் வராமலே போய்விடுவாரோ..? சந்திரமாலா பாட்டியின் கரங்களைப் பிடித்துக்கொண்டாள். அவள் கரங்கள் சில்லிட்டிருந்தன.

அவளை மெல்ல அணைத்துக் கொண்ட முத்தம்மாள், "சந்திரமாலா, ஒருவருக்கு நேர்ந்தது மற்றவருக்கும் நடக்க வேண்டும் என்ற நியதி இல்லை. ஆனால், ஒருவருக்கு ஏற்பட்ட அநுபவம் மற்றவருக்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அதனால்தான் என் கதையைக் கூறினேன். மாலா எந்த ஆண்கள் விஷயத்திலும் ஜாக்கிரதையாக நடந்துகொள். அதிலும் காபாலிகன், புத்த பிட்சு, பைரவன், காளாமுகன் இவர்களிடமெல்லாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.." என்றாள்.

"பாட்டி, எனக்குப் பிட்சுகளைக் கண்டாலே பயம். இந்தக் கிராமத்துக்கு நான் வந்தது கொடிய பிட்சுவின் கோரப் பிடியிலிருந்து தப்புவதற்கே. மறுபடியும் அவன் நினைவை எனக்கு ஏற்படுத்தி விடாதீர்கள்" - சந்திரமாலாவின் குரலில் நடுக்கமிருந்தது.

"பயப்படாதே சந்திரமாலா. நானிருக்கும்வரை உனக்கும் பயம் ஏன்? உன்னைப்பற்றி நான் இதுவரை அறிந்த கொள்ளவே இல்லை... உன் கதையைச் சொல்லு. இனி வல்லபன் எங்கே வரப்போகிறான்? கதை கேட்டும் சொல்லியும் பொழுதைக் கழிப்போம்...." என்றாள் பாட்டி.

"இன்றைக்கு வேண்டாம் பாட்டி. இன்னொரு நாளைக்குச் சொல்லுகிறேன். எப்படியும் வல்லபன் வந்துவிடுவான்..." என்று அவள் சொல்லி முடிப்பதற்குள் வண்டியொன்று வந்து வீட்டு வாசலில் நின்றது. கம்பீரமான இரட்டைக் காளைகள் பூட்டிய வண்டி.

வண்டியில் ஏறிக் கொள்ளச் சந்திரமாலா விரைந்தாள். "ஜாக்கிரதையாகப் போய் வா அம்மா. இரவு எந்நேரமானாலும் படுப்பதற்கு இங்கே வந்துவிடு. நான் தூங்காமல் விழித்துக் கொண்டிருப்பேன்" என்று சொந்தப் பாட்டியைப் போன்ற வாஞ்சையுடன் வழியனுப்பினாள் முத்தம்மாள். வண்டி தெருக்கோடியில் சென்று மறையும்வரை அவள் திண்ணை ஓரத்திலேயே நின்றிருந்தாள்.

இரவு நடுநிசி இருக்கும். தெருவில் நாய்கள் பலமாகக் குரைத்தன. யாரோ ஓடிவரும் ஓசை கேட்டது. முத்தம்மாள் அரைத் தூக்கத்திலிருந்தவள் திடுக்கிட்டு விழித்தாள். கொல்லைக் கதவை யாரோ பலமாகத் தட்டும் சப்தம் கேட்டது.

"பாட்டி... பாட்டி... கதவைத் திறங்க... சீக்கிரம் திறங்க... ஆபத்து... பாட்டி... சீக்கிரம் திறங்க" என்ற குரல் கேட்டது.

முத்தம்மாள் தட்டுத் தடுமாறி எழுந்து வாயிற் கதவருகே சென்றாள். கதவு தட்டப்படும் சப்தம் கொல்லைப் பகுதியினின்று கேட்டது.

நாய்களின் குரைக்கும் ஓசை பலமாகக் கேட்டது. முத்தம்மாள் கொல்லைக் கதவைத் திறந்தாள். சந்திரமாலா



ஓடிவந்த வேகத்தில் மேல்மூச்சு வாங்கிக் கொண்டிருந்தது. உள்ளே ஓடி வந்தவள் தரையில் தடாரென வீழ்ந்தாள்.

"கதவைத் தாளிடுங்கள் பாட்டி... சீக்கிரம்... சீக்கிரம்..." என்று சந்திரமாலா பரபரப்புடன் கூறினாள். அவள் முகத்தில் பீதி பரவியிருந்தது.

தொலைவில் புத்த பிட்சு ஒருவன் ஓடிவந்து கொண்டிருந்தது மங்கிய நிலவொளியில் தெரிந்தது.

"பாட்டி... பாட்டி... அந்தப் பொல்லாத பிட்சு என்னைப் பார்த்துவிட்டார். துரத்தி வருகிறார்... என்று கூறிய சந்திரமாலா, ஓடிவந்த களைப்பாலும், பயத்தாலும் மூர்ச்சையானாள்.

## அத்தியாயம் - 2

# இரவில் வந்த இளைஞன்

இரவு வேளையின் அமைதியைக் கலைத்துக்கொண்டு அந்த ஒலி எழுந்து கொண்டிருந்தது தொலை தூரத்திற்குத் தொலை தூரம் கேட்டுக் கொண்டிருந்த அந்த ஒலி புரிய முடியாத பயத்தை விளைவித்துக் கொண்டிருந்தது. ஒரு சமயம் பத்து நரிகள் சேர்த்து ஊளையிடுவதுபோல் கேட்கும். ஒரு சமயம் நூறு ஆந்தைகள் ஓலமிடுவதுபோல் தோன்றும். ஆயிரம் பேய்கள் சேர்த்துச் சிரித்தால் எப்படியிருக்குமோ தெரியாது; ஆனால் சிரிப்பொலி அமைதியான இரவைத் தனக்கு அடிமையாக்கிக் கொண்டது என்னவோ உண்மை.

மணற்பாங்கான நிலமும், குட்டை மரங்களும், கடற்கரைப் பகுதிக்கு உரிய தாழைப் புதர்களும் சிறுசிறு

பாறைகளும் நிறைந்த பகுதியில் ஓரிடத்திலிருந்துதான் அந்த ஓசை எழுந்து கொண்டிருந்தது.

ஓசை வந்த திசையை நோக்கி அந்த இளைஞன் விரைந்து நடந்தான். ஒற்றையடிப் பாதை சிறிது தூரம் செல்லும். பிறகு புதர்களைக் கடக்க வேண்டியிருக்கும். புதர்களில் மறைந்து கொண்டிருக்கும் காட்டெலி பயந்து ஓடும்.

நான்கு பக்கமும் சிறு குன்று போன்ற பாறைகளால் சூழப்பட்ட இடத்தில் பத்து இருபது பேர் கூடியிருந்தனர். இரண்டு மூன்று தீவர்த்திகள் எரிந்து கொண்டிருந்தன. அவற்றிலிருந்து வரும் புகை காற்றில் பரவியது. தீவர்த்தி வெளிச்சம்படாத பகுதியில் அமர்ந்திருந்தவர்கள் நிலவொளியில் பயங்கரமாகக் காட்சியளித்தார்கள்.

'தம் தம்' - என்று சிறு பறை ஒலி எழுந்து கொண்டிருந்தது. 'டமுக, டமுக' என்று உடுக்கை ஒலி அதற்கு ஏற்ப ஒலித்துக் கொண்டிருந்தது. இவ்விரு ஒலிகளையும் 'பூம் பூம்' என்ற சங்கின் முழக்கம் அடக்கி ஆண்டு கொண்டிருந்தது. உணவு வட்டில் போன்ற வெண்கலத் தட்டை ஒருவன் ஓசைப்படுத்திக் கொண்டிருந்தான்.

இவ்வளவு கருவிகளும் எழுப்பும் ஓசைக்கேற்ப அவள் நடனமாடிக் கொண்டிருந்தாள். அவள் காலில் சதங்கை இல்லை; ஆனால் சதங்கை ஒலிபோல் இரும்பாலான வளையங்களைக் கோத்து ஒருவன் சப்தப்படுத்திக் கொண்டிருந்தான்.

அவள் கரங்கள் நாகம்போல் வளைந்தன. அவள் பாதங்கள் பூமியில் பாவவில்லையோ என்று கூறுமாறு அவள் ஆடினாள். அவள் இடை அசைந்தது. இடை அசைவையே பார்த்துக் கொண்டிருந்த பைரவன் ஒருவன், "ஆ, ஆ" என்று குரல் எழுப்பினான். அசைவிற்கேற்பக் குலுங்கும் தனங்களின் அழகைக் கண்டு மோகித்துத் தானும் ஆட முனைந்தான் காபாலிகன்.



மண்டை ஓட்டில் மதுவை ஊற்றிக் குடித்துவிட்டு காபாலிகன் ஆடத் தொடங்கினான். காபாலிகர்கள் மயானத்திலுள்ள சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டவர்கள். புலித் தோலைக் கோவணமாக அணிந்து, மண்டை ஓட்டு மாலையைக் கழுத்தில் அணிந்து, சடைமுடியுடையவராய்க் காட்சி அளிக்கும் காபாலிகர்கள் தமது சமயத்தின் குறிக்கோளை மறந்து மது குடித்தல், காமக் களியாட்டங்களில் காலங்கழித்தல், இவற்றில் ஈடுபட்டு நகரங்களினின்று ஒதுங்கிக் கிராமப் பகுதிகளில் வாழலாயினர். காபாலிகப் பெண்களும் வாழ்க்கை நெறி தவறி நடக்கத் தொடங்கினர்.

''சத்திய சோமனுக்கு உற்சாகம் பிறந்துவிட்டது'' என்றான் அருகே இருந்த காபாலிகன். அவன் கையிலுள்ள கபாலத்தில் மது நிறைந்திருந்தது.

"தேவ சோமை ஆட ஆரம்பித்துவிட்டால் உனக்கும் எனக்கும்கூட உற்சாகம் பொங்குமே - சத்திய சோமனுக்குக் கேட்க வேண்டுமா?" என்றான் பைரவன். காபாலிகனைப் போல் சிவபெருமானை வணங்குபவர்தான் பைரவர்களும்.

தேவசோமை சுழன்று சுழன்று ஆடத் தொடங்கினாள். மதுவின் போதையும், உடுக்கை, மத்தளம், சங்கின் முழக்கமும் அவளது வேகத்தை அதிகரிக்கச் செய்தன. தேவசோமை ஆடும்போது காளிதேவியே ஆடுவதுபோல் தோன்றியது. அவள் விழிகள் கனல் கக்கின. அவள் ஆடை நெகிழ்ந்து கொண்டிருந்தது. சத்திய சோமனால் அவளுடைய வேகத்துக்கு, துடிப்பிற்கு, பம்பரம்போல் சுழலும் தன்மைக்கு ஏற்ப ஆட முடியவில்லை.

''ஏ.... தேவசோமை! போதும் நிறுத்து... இந்த உலகத்தையே ஏன் இப்படிச் சுழற்றுகிறாய்" என்று சோமன் குடி மயக்கத்தில் குழறினான்.

"நேற்று என்னுடன் பந்தயம் போட்டாயே... நீ ஆடாவிடில் உன்னை யார் விட்டது.. ஏ, சந்திர சூட பைரவா! நீ சாட்சி. இவன் தோற்றுவிட்டால் எனக்கு அடிமையாக விடவேண்டும் -" என்று தேவசோமை கூறியபோது, "ஆ ஆ" என்று பரிகாசச் சிரிப்பு எழுந்தது.

சத்யசோமன் தாவிப் பிடிக்க முயன்றான், அவள் இடையை. ஆடும் ஆட்டத்தில் அவளது ஆடை மெல்ல மெல்லத் தளர்ந்து கொண்டிருந்தது.

"ஏய்... ஏய்... ஆடியது போதும் நிறுத்து.... ஆடை அவிழ்வது தெரியவில்லையா....? உன்னை இப்போதே கடித்துத் தின்றுவிட நினைக்கிறார்கள்... ஆடை அவிழ்ந்த உன்னைப் பார்த்தால்... ஐயோ... தேவசோமை நிறுத்து.... நான் உனக்கு அடிமைதான்" என்று, அவள் இடையைப் பிடித்து அவள் ஆட்டத்தை நிறுத்தினான். அவள் அவனது கரங்களில் தவழ்ந்தாள். வாத்திய முழக்கங்கள் நின்றன. கூடியிருந்தவர்கள் தத்தம் கரத்திலிருந்த மதுக் கிண்ணத்திலிருந்தவற்றை முழு மூச்சுடன் குடித்தனர்.

சத்தியசோமன், தேவசோமையின் கரம்பற்றி இழுத்துக்கொண்டே அருகே புதர் மறைவிற்குச் சென்றான். அவன் கால்கள் தள்ளாடின; மணலில் அப்படியே வீழ்ந்தான்.

"என்ன... தள்ளாடி வீழ்ந்துவிட்டாய்..?' எனக்கூறித் தேவசோமை நகைத்தாள். அவன் அருகே உட்கார்ந்து கொண்டு தன் மடி மீது அவனது தலையை எடுத்து வைத்துக்கொண்டு, "சத்தியா, வரவர உன்னால் சிறிது நேரங்கூட ஆட முடியவில்லை... ஏன்... வயதாகிறதா....?" என்று கேட்டாள்.

"நீ மட்டும் சின்னக் குழந்தையோ... உனக்கு வயது கூடும்போது எனக்கு மட்டும் அப்படியே இருக்குமா....? இன்று பகலில் ஒரு பருக்கைச் சோறுகூடக் கிடைக்கவில்லை. மது இல்லாவிடில் செத்துப் போயிருப்பேன்..." என்று அவள் மடியில் சிறு குழந்தை போல் தலையைப் புதைத்துக் கொண்டான்.



"அப்போ... எனக்குப் பசிக்கிறதே. ஓர் ஊரில்கூடவா சோறு கிடைக்கவில்லை....?" தேவசோமை கேட்டாள்.

"இரண்டு மூன்று கிராமங்களிலும் ஆள் அரவமே இல்லை.... இன்றைக்கு எல்லாரும் பட்டினிதான்... இந்தா கொஞ்சம் குடி... பசிக்காது...." சத்தியசோமன் மதுப் பாத்திரத்தை அவள் உதட்டருகே நீட்டினான்.

தேவசோமை அதைத் தட்டிவிட்டு அவன்மீது சாய்ந்தாள்.

"இந்தப் பல்லவ நாட்டிற்கு என்ன நேர்ந்துவிட்டது? சோற்றுக்குக்கூடப் பஞ்சமா... அதுதான் நான் சொன்னேன் காஞ்சிபுரம் போய்விடுவோம் என்று" - தேவசோமை அவன் காதருகில் மெல்லப் பேசினாள்.

"உச்... மெல்ல... மெல்லப் பேசு... அங்கே இருப்பவர்கள் காதில் விழுந்தால் கொன்று விடுவார்கள்; நமது சபதத்தை மறந்துவிட்டாயா?" சத்தியசோமன் அவள் அங்கங்களை மெல்லத் தடவினான்.

"உம்... கை நீளுகிறதே... உச்... தொடாதே... வயிற்றில் ஒரு கவளம் வீழ்ந்தால்தான் உன்னுடன் பேசுவேன்..." அவன் கரத்தை அவள் ஒதுக்கினாள்.

" உனக்குக் கொடுத்தால் மற்றவர்கள் கோபப்பட மாட்டார்களா?" சத்யசோமன் குழைந்தான்.

"அவர்களுக்கும் கொணடு வா - எல்லாரும் ஒன்றாக உண்போம்" தேவசோமை எழுந்து நின்றுகொண்டாள். புதர் மறைவிற்கு அப்பால் மது மயக்கத்தில் ஏதேதோ பிதற்றிக் கொண்டே காபாலிகர்களும், பைரவர்களும் கூச்சலிடுவது கேட்டது.

"இன்னும் சிறிது நேரத்தில் அவர்கள் ஆழ்ந்து தூங்கிவிடுவார்கள். பசி நினைவெல்லாம் மறுநாள்தான். உனக்கு மட்டும் நான் அடுத்த கிராமத்திலிருந்து ஏதாவது வாங்கி வருகிறேன்" என்றான் சத்யசோமன்.

"என்னை விட்டுவிட்டுப் போகப் போகிறாயா? முடியாது, நானும் வருவேன்..." என்றாள் தேவசோமை.

"ஆடிக் களைத்திருக்கிறாயே? உன்னால் நடந்துவர முடியுமா?"

"முத்தம்மாள் பாட்டி இருக்கும் கிராமத்திற்குத்தானே போகிறாய்? கூப்பிடு தூரம்தானே அது. நான் வருகிறேன்."

"எப்போது போனாலும் பாட்டி சோறு போடுவாள். காபாலிகர்கள் மீது அவளுக்குக் கோபம் உண்டு. ஆனால் உன்னையும் என்னையும் பார்த்தால் அவளுக்குக் கோபம் பறந்து போய்விடும்".

"பாட்டி கோபப்படுவது நியாயம். காபாலிகையைத் தவிர மற்றப் பெண்கள்மீது ஆசைப்படலாமா? ஆசைப்பட்டதோடு பாட்டியின் கணவனைக் குத்திக் கொன்றுவிட்டால்...?"

"உம்; இப்போது அதைப்பற்றி ஏன் பேசுகிறாய்? பாட்டியே மறந்து போயிருப்பாள்... அதனால்தான் நம்மைக் கண்டு கோபப்படாமலிருக்கிறாள். இப்பொழுதும் நான் ஒன்று சொல்வேன்: நீ கூட என்னைத் தவிர வேறு எந்தப் பெண்மீதாவது ஆசை கொண்டதாகத் தெரிந்ததோ... நானே உன்னைச் சூலாயுதத்தால் குத்திக் கொன்றுவிடுவேன்..." - தேவசோமை கோபமாகப் பேசினாள்.

"என்னைக் கொன்றுவிட்டு நீ என்ன செய்வாயாம்?"

"என்னவோ செய்கிறேன்... அப்படியென்றால் உனக்கு வேறு யார்மீதோ ஆசை இருக்கிறது என்று சொல்லு..."



"பூமியில் ஆண்பிள்ளையாகப் பிறந்தால் ஆசைப்படாமல் முடியுமா? உன்மீதுகூட மற்றவர்கள் ஆசைப்படுகிறார்கள்..."

"என்ன சொன்னாய்...? இங்கேயே உன்னைக் கிழித்து மாலையாய் போட்டுக்கொண்டு விடுவேன். சத்யசோமா உன் புத்தி மாறி வருகிறதை நான் பார்த்துக் கொண்டுதான் வருகிறேன்... இப்போதே சொல்லிவிடு... உனக்கு யார் மீது ஆசை... தேவசோமை வழியை மறைத்துக்கொண்டு நின்றாள்.

சத்யசோமன் சிரித்து... அவளது கரத்தைப் பிடித்து இழுத்து அணைத்துக்கொண்டு.... "உன் மனசை அறிய அப்படிச் சொன்னேன். அதற்குள் கோபப்பட்டுவிட்டாயே... பசிக்கு உணவுகேட்க நாம் செல்கிறோம் என்பதை மறந்துவிட்டாய். நடுநிசி ஆகப்போகிறது; வா, வா... போகலாம்" என்று கூறினான். இருவரும் ஒற்றையடிப் பாதையைக் கடந்து சிறிய சாலைக்கு வந்து சேர்ந்தார்கள்.

அப்போதுதான் தொலைவில் யாரோ ஓடிவரும் ஓசை கேட்டது. சந்திரமாலா பதைபதைக்க ஓடி வந்து கொண்டிருந்தாள். அவளைத் தொடர்ந்து ஓட முடியாமல் பிட்சு ஒருவர் தொடர்ந்து கொண்டிருந்தார். தேவசோமையும், சத்யசோமனும் வியப்புடன் நிற்கையில், அவர்கள் அருகேயிருந்து ஓர் இளம் வாலிபன் அவர்களைத் தள்ளிக்கொண்டு பிட்சுவைத் தொடர்ந்து ஓடினான்.

அந்த இளைஞன் தேவசோமையயும், சத்யசோமனையும் தொடர்ந்து வந்து கொண்டிருந்தான். அவர்கள் ஆடிக்கொண்டிருந்த இடத்திற்கு வந்து சேர்வதற்குள், மதுவின் மயக்கத்தால் அனைவரும் மயங்கிக் கிடக்கத் தேவசோமையம், சத்யசோமனும் எங்கோ புறப்பட்டுச் செல்வதைக் கண்டவுடன் அவர்களைத் தொடர்ந்து செல்லத் தீர்மானித்தான். அவன் ஏற்றுக் கொண்டிருக்கும் பணி மகத்தானது. கிராமத்திலுள்ளவர்கள் பசியால் வாடித் துடிக்கும்போது, யாரோ சிலர் ஏராளமாகத் தானியங்களைச் சேமித்து வைத்திருப்பதாக அறிந்தான்.

அதைக் கண்டுபிடிக்கும் பணியைத் தானே ஏற்றுக் கொண்டான். காபாலிகர்கள் கூட்டத்திற்குத் தானியம் பதுக்கப்பட்டுள்ள இடம் தெரிந்திருக்கும்; அவர்கள் மூலமாக அறிந்து கொள்ளலாம் என்ற நோக்கத்தோடு அவர்கள் ஆடிப்பாடும் இடம் நோக்கி வந்தான். தேவசோமையும், சத்யசோமனும் புறப்பட்டவுடன் அவர்களைப் பின் தொடர்ந்தான்.

அப்போது சாலையில் சந்திரமாலா ஓடிவருவதையும் அவளைத் தொடர்ந்து பிட்சு வருவதையும் கண்டவுடன் ஏதோ ஆபத்து இருக்கிறது என்பதை உணர்ந்து பிட்சுவைத் தொடர்ந்து ஓடலானான்.

சந்திரமாலா வீட்டிற்குள் ஓடிச் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டாள். பிட்சு தட்டுத் தடுமாறி ஓடிவந்து கதவைத் தட்டினார்.

"ஏய்... கதவைத்... திற... என்னிடமிருந்து தப்பிவிட முடியாது" என்று பிட்சு குரல் கொடுத்தார்.

சந்திரமாலா நடுங்கிக் கொண்டிருந்தாள். "பாட்டி... பாட்டி... அதோ அவர் கதவைத் தட்டுகிறார். என்ன செய்வது பாட்டி...?" சந்திரமாலா தவித்தாள்.

"யார் அவர்? உன்னை ஏன் துரத்தி வருகிறார்?" - பாட்டி அவளை அணைத்துக் கொண்டாள்.

"பாட்டி... பாட்டி... அது பெரிய கதை... நான் இப்போது அவரிடமிருந்து தப்பிவிட்டால் பிறகு சொல்கிறேன். என்ன செய்வது பாட்டி...? கதவை உடைத்துக்கொண்டு உள்ளே வந்துவிடுவாரே..." சந்திரமாலா பயத்தால் பேசமுடியாமல் தடுமாறினாள்.

"கதவை உடைத்துவிடுவாரோ... அப்படித்தான் உள்ளே வந்தாலும் இந்த உலக்கையால் அவர் மண்டையில் ஒரு போடு போட்டுவிடுகிறேன்..." முத்தம்மாள் தைரியப் படுத்தினாள்.



"கதவையும் உடைப்பார்; இந்த உலக்கையையும் தூள் தூளாக்கிவிடுவார். நான் சென்ற வண்டியையே குடைசாய்த்து விட்டாரே..." சந்திரமாலா பயம் அதிகரித்தது.

கதவு பலமாகத் தட்டப்பட்டது. உடைந்து விழுந்து விடுவதுபோல் கதவைத் தட்டினார் பிட்சு.

"இங்கிருந்து புறப்படும்போதே எனக்கு மனது சரியாயில்லை... திருவிட எந்தையில் நாடகம் நடக்காது என்று ஏதோ உணர்த்திக் கொண்டிருந்தது. நான்கு கல் தொலைவுகூடப் போயிருக்க மாட்டோம். வெளிச்சமே இல்லாத வழியே போகையில் பயங்கரமான குரல் கேட்டது.

"ஏய்... யாரது... வண்டியை நிறுத்து" என்று கடுமையான குரல். வண்டிக்காரன் நிறுத்தாமல் ஓட்டிக்கொண்டிருந்தான். தூங்கி வழிந்து கொண்டிருந்த வல்லபன், திடுக்கிட்டு விழித்துக்கொண்டான். மறுபடியும் அதே குரல். வண்டியை நோக்கிப் பலர் ஓடிவரும் ஓசை.

"இருளில் எனக்கு அடையாளம் தெரியவில்லை. வண்டியை வண்டிக்காரன் நிறுத்தினான்.

"கீழே இறங்குங்கள்" என்ற அதட்டல் கேட்டது.

"நாங்கள் நாடகக் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள். எங்களிடம் பணம் இல்லை" என்று வண்டிக்காரன் முறையிட்டான்.

"தெரியும்; பணம் காசு பறிக்கும் திருடர்களா நாங்கள்..." என்று கூறி வண்டிக்காரனை நோக்கி ஒரு குத்துவிட்டான் வழிமறித்தவர்களுள் ஒருவன். வண்டிக்காரன் சுருண்டு விழுந்தான்; வல்லபன் நடுங்கிக் கொண்டிருந்தான்.

"ஏ பெண்ணே, கீழே இறங்கு" என்று ஒருவன் கர்ஜித்தான். வல்லபனும் நானும் மௌனமாயிருந்தோம்.

"ஏ, சந்திரமாலா... கீழே இறங்கு... தாளக்காரா இறங்கு..." என்ற குரல் எங்கோ கேட்ட குரலாகத் தோன்றியது.

வல்லபன் இறங்கினான். நானும் இறங்கினேன். ஒரு முரட்டுக் கரம் என்னைப் பற்றியது. வல்லபனுக்கு எங்கிருந்துதான் தைரியம் வந்ததோ; "மரியாதையாக இங்கிருந்து ஓடிவிடுங்கள்..." என்றான். தொடர்ந்து... "உதயா, முத்தரையா... பைரவா... ஓடிவாங்க.... இங்கே பாருங்க அக்கிரமம்" என்று கற்பனைப் பெயர்களைக் கூறிக் கூவினான். அவனுடைய திட்டம் பலித்தது. யாரோ வருகிறார்கள் என்றெண்ணி மற்றவர்கள் ஓடிவிட்டார்கள். ஆனால், இந்தப் பொல்லாத பிட்சு மட்டும் ஏமாறவில்லை. "ஏய், வல்லபா! யார் பெயரையோ சொல்லி அழைத்து, என்னையா ஏமாற்றப் பார்க்கிறாய்', என்று கூறி இவன் புஜத்தில் தன் கைத்தடியால் தாக்கினார். நான் பயந்து ஓரமாக நின்றேன். பிறகு ஓடத் தலைப்பட்டேன். வல்லபனும் பிட்சுவும் சண்டையிட்டுக் கொள்கிறார்கள் என்ற தைரியத்தில் தப்பினோம் பிழைத்தோம் என்று நான் ஓடினேன். ஆனால் அந்தப் பொல்லாத பாவியா விடுவான்? என்னைத் தொடர்ந்து வந்துவிட்டார்..." என்று முடித்தாள் சந்திரமாலா. கதவு பலமாக இடிக்கப்பட்டது.

"பாட்டி, பாட்டி கதவை உடைத்துக்கொண்டு வரும் அவர் கையில் சிக்கிக் கொள்வதைவிட உயிரை விட்டுவிடலாம்" என்றாள் சந்திரமாலா நடுங்கிக்கொண்டே. அவளை மேலும் இறுக அணைத்தவாறு... பாட்டி "பயப்படாதே சந்திரமாலா, கடவுள் காப்பாற்றுவார்..." என்றாள்.

கதவு உடைக்கப்படும் ஓசை. முத்தம்மாளுக்கும் பயம் ஏற்பட்டது.

"கடவுளே காப்பாற்று... சிவபெருமானே... நாராயணா..." என்றாள் முத்தம்மா.

"உம்... எல்லாருடைய பெயரையும் சொல்லு பாட்டி. நாராயணா, ஸோமஸ் கந்தா, காளிதேவி, புத்த பகவானே, அருகதேவா..."



கதவு மடமடவென்று முறியும் ஓசை. பாட்டி கூடத்து அகல் விளக்கை ஏற்றினாள்.

சாய்ந்த கதவின் வழியே யாரும் உள்ளே வரவில்லை. வெளியே தடால் தடால் என்ற ஓசை கேட்டது.

கதவை உடைத்து உள்ளே நுழைய முயன்ற பிட்சுவை, அந்த இளைஞனின் கரம் பிடித்து இழுத்தது. பலமான குத்து ஒன்று பிட்சுவின் முகத்தில் பாய்ந்தது. பிட்சு எதிர்பாராததால் நிலை தடுமாறினார்.

"ஏய்... யார் நீ? என் வழியில் குறுக்கிடுகிறாயே... ஊருக்குப் புதியவனோ...?" பிட்சு உறுமினார்.

"புதுசோ... பழசோ... நீதான் புதியவன்... மகான் புத்தரின் புனித நெறியைப் பாழ்படுத்த வந்த போலி பிட்சு... உன்னால் நமது கொள்கைக்கே தீமை..." என்று கூறிய இளைஞன், தட்டுத் தடுமாறி எழ முயன்ற பிட்சுவை மீண்டுத் தாக்கத் தயாரானான்.

"உபதேசம் செய்கிறாயா... ஒழிந்து போ மூடா..." என்று பிட்சு பாய்ந்தார். வாலிபன் கீழே சாய்ந்தான். மண்ணில் இருவரும் புரண்டனர்.

முத்தம்மாள் உடைந்த கதவு வழியே மல்யுத்தக் காட்சியைப் பார்த்து அஞ்சி நின்றாள்.

"சந்திரமாலா இங்கே வா... ஓடிவா... கடவுளாகப் பார்த்து ஓர் இளம் பிள்ளையை அனுப்பியுள்ளார். பிட்சுவுக்கு நல்ல மரியாதை கிடைக்கிறது பார்..." என்று குதூகலத்துடன் முத்தம்மாள் கூறினாள்.

"நான் வரவில்லை... பிட்சுவை வெல்ல இனி ஒருவன் பிறக்கவேண்டும்... இன்று எனக்கு முடிவு காலம்தான்..." சந்திரமாலா நடுக்கத்துடன் கூறினாள்.

ஆனால், நிலவொளியில் பிட்சு திரும்பிப்பாராமல் ஓடிக்கொண்டிருந்தது தெரிந்தது. சிறிது தூரம் அவரை ஓட்டிவிட்டு இளைஞன் திரும்பி வந்து கொண்டிருந்தான்.

"தம்பி நீ யார்..? ஈசனே அனுப்பியதுபோல் வந்தாய். இல்லாவிடில் நாங்கள் அதோகதிதான்..." என்று கூறி அவனை உள்ளே அழைத்தாள் முத்தம்மாள்.

"அந்தப் பிட்சு... போலி பிட்சு... மூதாட்டியை ஒன்றும் செய்யமாட்டார்... அவருக்கு வேண்டியது இளம்பெண்..." என்று கூறி மேனி மீது படிந்த மண்ணைத் தட்டிக் கொண்டான்.

முழங்கையிலிருந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. "ஐயோ... ரத்தம் பாட்டி..." என்று சந்திரமாலா பதறினாள்.

முத்தம்மாள் அவன் கரத்தைப் பற்றினாள். "தம்பி தம்பி... பலமாக அடிபட்டுவிட்டதா..? என்ன செய்வோம்?"

"இல்லை... இல்லை... அந்தப் போலியிடமிருந்து உங்கள் மகளைக் காப்பாற்ற முடிந்ததே அதுவே போதும்..." என்று அந்த இளைஞன் சந்திரமாலாவைப் பார்த்தவாறு கூறினான்.

முற்றத்தின் வழியே நிலவு வந்து இருளை ஓட்ட முயன்றது. தவழ்ந்து வந்த கடற்காற்று இதமாக வீசியது.

சந்திரமாலா செம்பில் தண்ணீருடன் வந்தாள். "பாட்டி... காயத்தைக் கழுவி ஏதாவது மூலிகையை வைத்து..." என்று கூறுவதற்குள், அவள் குரலில் ஏனோ நடுக்கம் ஏற்பட்டது.

முத்தம்மாள் மெல்லக் காயத்தைக் கழுவினாள். "தம்பி எங்களால் உனக்கு மிகவும் சிரமம். அந்த ஈசனே அனுப்பியதுபோல் சமயத்திற்கு வந்தாய்..." என்றாள்.



"ஆமாம்; ஈசன்தான் அனுப்பினார். நமது சக்கரவர்த்தி பரமேச்வரவர்மர் என்னை அனுப்பினார். உணவுப் பொருளைப் பதுக்கியிருப்பவர்களைக் கண்டு பிடிக்குமாறு சொல்லியிருந்தார். ஆனால் காமப் பேயைக் கண்டுபிடித்து விட்டேன். போலி மதவாதியை ஒழிப்பதற்குத் திட்டமிட்டிருந்தோம்... முதல் குற்றவாளி கிடைத்துவிட்டார்..." என்றான் இளைஞன்.

"உன் பெயர் என்னப்பா... இரவு ஆகாரமாச்சா..? எங்கிருந்து வருகிறாய்... சந்திரமாலாவை எப்படிச் சந்தித்தாய்?" என்று முத்தம்மாள் கேள்விமேல் கேள்வி கேட்டாள்.

"குமாரதேவன் என்பது என் தாயிட்ட பெயர். எங்கிருந்து வருகிறேன், எங்கே போகிறேன் என்று கேட்காதீர்கள். நல்லவேளை - நான் உங்கள் மகளைக் காப்பாற்ற முடிந்தது. எனக்கு உணவு தருவது இருக்கட்டும், இன்னும் கொஞ்ச நேரத்தில் காபாலிகனும், காபாலிகையும் இங்கே வரப்போகிறார்கள். அவர்களுக்கு அபார பசி..." என்று குமாரதேவன் சொல்லி முடிப்பதற்குள் வெளியே மீண்டும் நாய் குரைக்கும் ஒலி.

"பவதி பிஷாம் தேஹி. ஏதாவது இருந்தா போடுங்க" என்று சத்தியசோமன் குரல் கொடுத்தான்.

"பாட்டி.... ஏதாவது ஒரு கவளமாவது சோறு போடுங்கோ... பெருங்குடலைச் சிறுகுடல் தின்றுவிடும்போல் இருக்கிறது..." என்று வெளியே மற்றொரு குரல் கேட்டது.

"பார்த்தீர்களா அவர்கள் வந்துவிட்டார்கள். நான் இங்கு வந்ததாகவோ - பிட்சுவை ஓட்டியதாகவே சொல்லாதீர்கள். அவர்களுக்குச் சோறுபோட்டு அனுப்புங்கள். அவர்கள் போன பிறகு நான் திண்ணையில் படுத்துத் தூங்கிவிட்டுக் காலையில் எழுந்து சென்று விடுகிறேன்..." என்றான்.

நனவுதானா ஏதாவது கனவு காண்கிறோமா... என்று சந்திரமாலா திகைத்து நின்றாள். குமாரதேவனின் சுருண்ட கேசத்தையும் கூர்மையான நாசியையும் அழகிய அதரங்களையும் அதற்கு மகுடம் வைத்தது போன்ற மெல்லிய அரும்பு மீசையையும் உருண்டு திரண்ட தோள்களையும் அவள் இமைகொட்டாமல் பார்த்தவாறு இருந்தாள்.

குமாரதேவன் சந்திரமாலாவின் பக்கம் திரும்பினான். சந்திரமாலா முகத்தைத் திருப்பிக் கொண்டு கூடத்தின் பக்கம் சென்றாள்.

முத்தம்மாள் ஒரு தட்டில் சோறெடுத்துக்கொண்டு வாயில் கதவைத் திறந்து கொண்டு சென்றாள்.

குமாரதேவன் கூடத்தின் ஓர் மூலையில் மறைவாக நின்றான்.

"ஏ, சத்யசோமா... நினைத்த வேளையில் வந்தால் யார் சோறுபோடுவார்கள்..." என்றாள் முத்தம்மா.

"பல்லவ நாட்டில் பஞ்சம் வந்தாலும், முத்தம்மா பாட்டி வீட்டில் பஞ்சம் வராது... தெரியுமா...?" என்று கூறிக் காவிப் பற்கள் தெரிய நகைத்த சத்யசோமன், "பாட்டி நீங்கள் தூங்காமல் விழித்துக் கொண்டிருப்பீர்கள் என்பதும் தெரியும்..." என்றான்.

"எப்படித் தெரியும்...? அந்தப் பொல்லாத பிட்சு இங்கே வந்து கலவரம் செய்வான் என்பதும் தெரியுமா....?" என்று முத்தம்மாள் கேட்டாள்.

"பொல்லாத பிட்சு ஓடிவந்ததையும், அவரைத் தொடர்ந்து இளம் வாலிபன் ஒருவன் ஓடிவந்ததையும் பார்த்தோம். எங்கே அவர்கள்...?" சத்யசோமன் கேட்டான். மதுவின் வாடை முத்தம்மாளின் வயிற்றைக் குமட்டியது.



"அவர்கள் போய்விட்டார்கள்...." - முத்தம்மாள் சலிப்புடன் கூறினாள்.

"அந்த இளைஞன்..." - சத்யசோமன் கேட்டான்.

"அவனும் போய்விட்டான்..."

காபாலிகர்கள் இருவரும் சிறிது நேரம் மௌனமாய் இருந்தார்கள். பிறகு, "சரி பாட்டி... நீ இருநூறு வயது வாழணும், வயிற்று அக்னிக்குப் பால் வார்த்தாயே..." என்று கூறி அங்கிருந்து சென்றார்கள். பெருமூச்சுவிட்டவாறு முத்தம்மாள் கதவைத் தாளிட்டுக் கொண்டு உள்ளே சென்றாள்.

தெருக்கோடிக்குச் சென்று சத்யசோமன், "ஏய், தேவசோமா... அந்த இளைஞன் அதற்குள் எங்கே போயிருப்பான்? இப்படியே மறைவில் இருந்து பார்ப்போம். அவனைப் பார்க்காமல் போகக்கூடாது" என்றான்.

"சத்யசோமா... சோற்றை எடு... தின்றுவிட்டு, உட்கார்ந்திருப்போம்... நீ தேடிக் கொண்டிருந்த இளம்பிள்ளை கிடைத்துவிட்டான்... இனி நமக்கு வெற்றிதான்" என்றாள்.

காபாலிகர்கள் போய்விட்டார்கள் என்ற எண்ணத்தில் சிறிது நேரம் கழித்து குமாரதேவன் திண்ணையில் வந்து படுத்தான். களைப்பின் மிகுதியால் உடனே உறங்கிவிட்டான்.

கிழக்கே வெள்ளி முளைக்கவில்லை. குமாரதேவன் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தான். கையில் சூலாயுதம் ஏந்திக் கொண்டிருந்த காபாலிகர்கள் கோஷ்டியொன்று அவனைச் சூழ்ந்துகொண்டது.

## அத்தியாயம் - 3

# உயிர் பெற்ற ஓவியம்

மயில் ஒன்று அசைந்து அசைந்து நடந்து வந்தது. அதனழகில் ஈடுபட்டிருந்த குமாரதேவன் கண்கள் கலங்கின. இதே சாயலுடைய அவள், இதுபோன்று நடந்து வந்து பூக்கொய்யும் அழகை ரசித்து இன்புற்றிருக்கிறான். தெளிந்த நீரோடையில் காலைத் தொங்கவிட்டு, நீரை அளைந்து கொண்டிருக்கும் எழிலைக் கண்டு பூரித்திருக்கிறான்.

அவளுடன் பேச முயல்வான். ஆனால் கட்டளை நினைவிற்கு வரும். இதயத்தை அழுத்திப் பிடித்துக் கொண்டு தன் குடிலுக்குத் திரும்பிவிடுவான். இன்னும் எவ்வளவு நாள்கள்? குமாரதேவன் கணக்கிடுவான். நான்கு சாதுர்மாச்யங்களைக் கழிக்க வேண்டும்.

சித்திரை பிறந்து நான்காவது மாதம், ஆடிமாதம், ஆடி மாதத்திலிருந்தே அஜந்தா மலைத்தொடர் காடுகளில் இயற்கையின் வனப்பு மிகுந்திருக்கும். நீரோடை நிறைந்திருக்கும். ஆறுகளில் புதுவெள்ளம் வரும். அருவி இழுமென இறங்கும். பசுமையான மரஞ்செடி கொடிகளின் புதுமை அழகு கண்ணையும் கருத்தையும் கவரும்.

குமாரதேவன் அஜந்தா மலைச்சாரலுக்கு வந்து இரண்டாண்டுகள் பூர்த்தியாகிவிட்டன. காஞ்சிமா நகரினின்று வந்தவன் அவன். சாளுக்கியவர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த அஜந்தாக் காடுகளில் அலைந்து பிட்சுக்களுடன் பழகி, அங்குள்ள குகைகளில் தீட்டப்பட்டிருக்கும் ஓவியங்களைப் கண்டு, அவற்றைக் குறிப்பெடுத்துப் போகும் திட்டத்துடன் அவன் வந்திருந்தான். அவனை அனுப்பியவர் நரசிம்மவர்மன்.



நரசிம்மவர்மன் பல்லவ சக்கரவர்த்தி பரமேச்வர வர்மரின் மகன்; இளவரசன், பரமேச்வர வர்மர் தன் மகனுக்குத் தன் தந்தையின் பெயரான நரசிம்மவர்மன் என்றே சூட்டியிருந்தார். பாட்டனின் பெயரைச் சூட்டுவது அரசகுல மரபு. பரமேச்வர வர்மரின் தந்தை நரசிம்மனுக்கு மாமல்லன் என்னும் பெயர் உண்டு. தன் தந்தையைப் போல் தன் மகனும் வீரத்திலும், கலை உணர்விலும் சிறந்து விளங்க வேண்டும் என்று அவர் விரும்பினார்.

அவருடைய விரும்பம் போலவே நரசிம்மன் தன் பாட்டனாரையொப்ப வீராதி வீரனாகத் திகழ்ந்தான்.

தன் பாட்டனாரைப் போல் கலைரசிகனாகத் திகழ்ந்தான். பாட்டனார் சிற்பத்தில் ரசனை மிக்கவர். பேரனோ சிற்பம், சித்திரம், இசை, நடனம் ஆகச் சகல கலைகளிலும் வல்லவனாகத் திகழ்ந்தான்.

நரசிம்மனின் இளம் வயதுத் தோழனாக குமாரதேவன் அமைந்திராவிடில் இளவரசனின் கலை ஆர்வம் மேலும் வளர்ந்திருக்காது. அந்தக் கலை ஆர்வமே குமாரதேவனை அஜந்தாக் காடுகளுக்கு அனுப்பி வைத்தது.

"குமாரதேவா, எப்படியாவது அஜந்தாக் குகைகளுக்குச் சென்று, அங்குள்ள சித்திரங்களின் அமைப்பைத் தெரிந்து வா. நானும் சில மாதங்கள் கழித்து உன்னை அங்கே சந்திக்கிறேன். பிறகு இருவரும் கலைச் செல்வங்களைக் கற்றறிந்து காஞ்சிக்கு வருவோம்" என்று நரசிம்மன் சொல்லி அனுப்பினான்.

குமாரதேவனுக்கு முதலில் சற்று அச்சமாகவே இருந்தது. அஜந்தாக் குகைகள் சாளுக்கிய மன்னனின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தன. அந்தக் குகைகளில் பௌத்த பிட்சுக்கள் வசித்து வந்தனர். அந்நியர் எவரும் அந்தக் குகைகளை வந்து அடைந்துவிட முடியாது. அப்படி வந்தாலும் உயிர் உடலில் இருப்பதே சந்தேகம்.

விஷப் பரீட்சையைக் குமாரதேவன் ஏற்றான். அவன் அஜந்தாக் காடுகளை அடையும்போது சாளுக்கியப் படைகள் பல்லவர்களிடம் தோற்றுச் செத்தோம் பிழைத்தோம் என்று ஓடிவந்த சமயம். அஜந்தாக் குகைகளிலிருந்த பிட்சுக்களும் வடக்கே சென்றுவிட்டனர். அருகேயுள்ள கிராமத்தில் தங்கிருந்தவர்கள் ஓரிரு குடும்பத்தினரே.

குமாரதேவன் முதன்முதல் சென்ற அன்றே சுமுகமான வரவேற்புக் கிடைத்தது. நாற்பது வயதை நெருங்கிக் கொண்டிருந்த ஒரு பெண் தன் மகளுக்கு நாட்டியம் கற்பித்துக் கொண்டிருந்தாள்.

அருவிக்கரை ஓரம் மகிழ மலரின் பூங்கொத்துக்கள் பாய் விரித்திருக்க, மலைச்சிகரங்கள் பின்னணியில் காட்சியளிக்க, தாயின் அங்க அசைவுகளை மகள் கவனமாகக் கண்டு அதற்கேற்பத் தானும் தவறாது செய்து காட்டினாள்.

வண்டுகளின் ரீங்கார ஒலி சுருதி சேர்த்துக் கொண்டிருந்தது. தாயையும் மகளையும் பார்ப்பவர்கள் அக்கா, தங்கை என்றுதான் சொல்லுவார்கள்.

'அம்மா, இப்படித்தானே விரல்களை வளைக்க வேண்டும்' என்று இளம்பெண் கூறுவதைக் கொண்டே அவர்கள் தாயும் மகளும் என்பதை குமாரதேவன் உணர்ந்தான்.

"நாட்டியத்திற்கு இங்குகூட வரவேற்பு இருக்கிறதே" என்று குமாரதேவன் ரசித்துக் கூறிய குரல் கேட்டு திடுக்கிட்டுத் திரும்பினாள் தாய்.

குமாரதேவன் பாலசந்நியாசிபோல் நின்று கொண்டிருந்தான். இளம் வயதுக்கேற்ப வளர்ந்த குறுந்தாடி; தொங்கிய கனமான பையில் மாற்று உடை; ஓவியந் தீட்டும் சாதனங்கள்; அழுக்குப் படிந்தாலும் தெரியாது இருக்கக் காவி உடை.



தீட்சண்யமான கண்கள் அவன் இளமையைக் காட்டிக் கொடுத்தன.

மங்கையின் ஆட்டம் நின்றது. மருண்ட பார்வையை ஒரு கணம் வீசிய அழகுப் பிம்பம் துள்ளிக் குதித்து அருகே யுள்ள குடிலுக்குள் ஓடி மறைந்தது. அவள் பின்னே மான் ஓடியது. மயில் நடந்து சென்றது.

தாய் பயந்த அதே சமயத்தில் யார் என்று கேள்வி கேட்கும் விழிகளுடன் குமாரதேவனை நோக்கினாள்.

"அழகெனும் அழகு ஓர் அழகு பெற்று இங்கு ஆடியதை கண்டு என் களைப்பெல்லாம் பறந்துவிட்டது நடந்து வந்ததால் துவண்ட கால்கள் கம்பீரமாக நிற்கத் தொடங்கிவிட்டன. பசியால் பஞ்சடைந்த கண்களுக்கு அழகிய நாட்டியம் விருந்தாக அமைந்துச் சோர்வை ஓட்டிவிட்டது. ஏன் ஆடுவதை அழகு மயில் நிறுத்திவிட்டாள்?" என்று குமாரதேவன் உணர்ச்சி வயப்பட்டுக் கேட்டான்.

அவள் முகத்தில் மெல்லிய முறுவல் பூத்தது. இனிய தமிழில் பேசிய குமாரதேவனைக் கண்டவுடன் அவளுடைய பயம் மெல்ல விலகியது.

"பல்லவ நாட்டிலிருந்து வருகிறீர்களா?" என்று கேட்டாள் அவள்.

"ஆமாம், காஞ்சிமா நகரினின்று வருகிறேன். எப்படித் தெரியும் தங்களுக்கு?"

"இனிய தமிழில் பேசுகிறீர்கள், கலையார்வம் தங்கள் பேச்சில் மணக்கிறது. பல்லவ நாட்டினருக்கு அன்றி வேறுயாருக்குக் கலை ஆர்வம் ததும்பி நிற்கும்?"

"தாங்கள் காஞ்சியை அறிவீர்களா? தாங்கள் பல்லவ நாட்டைச் சேர்ந்தவரா?"

"என் கதை அப்புறமிருக்கட்டும்; பசியால்வாடி வந்திருக்கிறீர்கள்; நடந்து களைத்துப்போய் வந்திருக்கிறீர்கள். தங்களுடைய வரலாறு எதுவாயிருந்தாலும் முதலில் உங்கள் பசியைப் போக்கவேண்டும்; கொஞ்சம் இருங்கள்..." என்று கூறிய அவள் குடிலுக்குள் சென்றாள். தாமரை இலையில் மணக்க மணக்க கம்புச் சோறும், கிழங்குக் குழம்பும் ஊற்றிக் கொண்டு வந்தாள்.

"பசியால் வாடி வந்தேன் என்று தங்களுக்கு எப்படித் தெரியும்? களைத்து வந்துள்ளேன் என்பதை எப்படி அறிந்து கொண்டீர்கள்?" என்று கேட்ட குமாரதேவனின் கண்கள் குடிலின் பக்கமே நோக்கின. குடிலுக்குள் சென்ற அழகு மயிலின் முகம் தெரியாதா என்று ஏங்கினான்.

"தங்கள் பேச்சிலிருந்து கண்டு கொண்டேன். பசியால் பஞ்சடைந்த கண்களுக்கு அழகிய நாட்டியம் விருந்தாக அமைந்தது என்று கூறினீர்களே..." - அவள் சிரித்தாள்.

"காடும் மலையும் கடந்து வந்தாலும் பல்லவ நாட்டு உபசாரம் தங்களிடமிருந்து மாறவில்லை" குமாரதேவன் ஆவலுடன் கம்பஞ்சோற்றை உண்டவாறு சொன்னான்.

"பசியால் வந்தவர்களுக்கு உணவு அளிப்பது எல்லா நாட்டிற்கும் உரித்தானதுதான்... அதில் பல்லவ நாட்டிற்கென்று தனிப் பண்பு இருக்கிறதா?"

"இந்தக் கானகத்தில் நீங்கள் என்ன செய்கிறீர்கள்? தனியே தங்கியிருக்கக் காரணமென்ன?" குமாரதேவன் சுற்றி வளைக்காமல் நேராகக் கேட்டுவிட்டான்.

"காஞ்சியில் வாழும் தங்களுக்கு இந்தக் கானகத்தில் என்ன வேலை பல்லவ நாட்டினின்று ஒற்றராக வந்திருந்தால் வாதாபிக்குச் செல்லவேண்டும். இங்கே வேலையில்லை..."



"நான் ஒற்றனல்லன். ஆனால், தனி ஆளாகத்தான் வந்திருக்கிறேன் இங்கே உள்ள குகைகளில் தீட்டப்பட்டிருக்கும் ஓவியங்களைக் காணவந்தேன்..."

"ஓ! ஓவியக்கலையில் அவ்வளவு ஆர்வமா?"

"நான் வந்த காரியத்தைக் கூறிவிட்டேன். நீங்கள் யார் என்று சொல்லவில்லையே...?"

அவள் குமாரதேவன் கண்களை ஊடுருவிப் பார்த்தாள். அவன் பல்லவநாட்டு ஒற்றனல்லன் என்பது தெரிந்துவிட்டது.

"நிற்கிறீர்களே... உட்கார்ந்து பேசுங்கள்..." என்றாள் அவள்.

"தங்களைப் போன்றே கலை ஆர்வம் மிகுதியால்தான் நாங்கள் இங்கே வந்தோம்..." என்றாள் அவள்.

"நாட்டியமும் இசையும் காஞ்சியில் இல்லாதவையா?"

"அதற்காக வரவில்லை..."

அவள் சற்று நிறுத்தினாள். திடீரென்று வந்தவனை யார் என்று அறிந்துகொள்ளமலேயே பேசுகிறோமே என்ற கவலையுடன் சிறிது நேரம் மௌனமாக நின்றாள்.

குமாரதேவன் அருகே இருந்த பாறையின் மீது உட்கார்ந்து கொண்டான். குடிலுக்குள்ளிருந்த அழகு மயில் ஒயிலாகக் குடத்தை எடுத்துக்கொண்டு அருவிக் கரையை நோக்கிச் சென்றது. தன் விழிகளை நிழல்போல் அவளைத் தொடர்ந்து செல்லவிட்ட குமாரதேவனைத் தாயின் குரல் திருப்பியது.

"காஞ்சியிலிருந்து வருகிறீர்களே... யுத்த பயம் எப்படி இருக்கிறது..." என்றாள் அவள்.

"யுத்தமா... சாளுக்கியர்களை ஓட ஓட விரட்டிவிட்டு இப்பொழுதுதான் எங்கள் சக்கரவர்த்தி காஞ்சியை வந்தடைந்திருக்கிறார். இனி யுத்த பயத்தைச் சாளுக்கியர்கள் தான் கொள்ள வேண்டும்..." என்றான் குமாரதேவன்.

"மெல்லப் பேசுங்கள்... பல்லவ நாட்டிலிருந்து வருகிறவர் எனத் தெரிந்தால் ஓடும் நதியில் தூக்கிப்போட்டு விடுவார்கள்..." அவள் சிரித்தாள்.

பிறகு தொடர்ந்து பேசினாள்; "பல்லவர்களின் படை வாதாபியை அழித்துவிட்ட பிறகு இங்குள்ளவர்கள் வேறிடத்துக்குச் சென்றுவிட்டார்கள்.

"இங்குள்ளவர்கள் என்றால், யார் யார் இருந்தார்கள்...?" குமாரதேவன் குறுக்கிட்டான்.

"இங்கே புத்த பிட்சுக்கள் இருந்தார்கள். ஓவியர்கள் இருந்தார்கள். சாளுக்கிய நாட்டுப் போர் வீரர்கள் இருந்தார்கள்... அவர்கள் அனைவரும் ஓடிவிட்டார்கள்..." அவள் கூறியவுடன் குமாரதேவன் மீண்டும் கேட்டான்:

"நீங்கள் மட்டும் தங்கிவிட்டீர்களா...?"

"ஆமாம், நானும் என் மகளும் தங்கிவிட்டோம். இன்னும் கடைசிக் குகையில் சில ஓவியங்கள் எழுதுவதற்குப் பாக்கியிருக்கின்றன..."

"ஓ! ஓவியரின் மகளா தாங்கள்..." குமாரதேவன் கண்கள் விரிந்தன.

"இல்லை... மனைவி..."

"பொறுத்தருள வேண்டும்...! மனைவியை மகள் என்று கூறிவிட்டேன்..."

"மகளும் எனக்கிருக்கிறாள்..."



"அவள் நாட்டிய அரசி..."

"இல்லை... இளவரசி என்று சொல்லுங்கள். நான்தான் நாட்டிய அரசி..."

"சொன்னால்தான் தெரிகிறது..."

"நாட்டிய அரசி... என்றால் அந்தக் கலையில் வல்லமை மிக்கவள் என்ற அர்த்தத்தில் கூறவில்லை. என் பெயர் நிருத்தியவல்லி..."

"பட்டப் பெயரா?"

"இல்லை... என் தாய் வைத்த பெயர். எனக்குத் தெரிந்த நடனத்தை என் மகளுக்குச் சொல்லித் தருகிறேன்..."

"பாக்கியசாலி... ஓவியருக்கு நீங்கள் பல விதங்களில் உதவுகிறீர்கள் அல்லவா?"

நிருத்தியவல்லியின் கன்னம் குழிந்தது. அவள் தன் கணவருக்கு உதவுவது ஒருவிதத்திலா...? அவருக்குப் பணிவிடைகள் செய்வதுடன் அவர் படைக்கும் ஓவியத்தின் உயிராகவே அவள் அமைகிறாள். அவளை முன்மாதிரியாக வைத்துக்கொண்டுதான் அவர் ஓவியம் வரைகிறார். இதயத்தில் அவளையே உருவமாக ஏற்றிவைத்து அதையே தூரிகையில் வடிக்கிறார்.

"நான் ஓவியரைச் சந்திக்கலாமா? காஞ்சி மாநகரினின்று இங்கு வந்ததே அஜந்தா ஓவியங்களைக் காணத்தான். உண்மையைச் சொன்னால் என்னை இளவரசர் அனுப்பி வைத்தார். இங்கே ஓவியங்களில் உள்ள அழியாத வர்ணத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும். தங்கள் கணவர் எனக்கு உதவி செய்வாரா?" குமாரதேவன் குரலில் குழைவு இருந்தது.

'அதெப்படி என்னால் சொல்லமுடியும்? அவர் இஷ்டம்..."

"அவரையே நான் கேட்கலாமா?"

"ஓ"

"இப்போதே போகலாமா....?" குமாரதேவனின் பரபரப்பையும் ஆர்வத்தையும் கண்ட வல்லி அவனையும் அழைத்துக் கொண்டு மலைச் சாரலுக்குச் சென்றாள்.

இயற்கையாகவே ஓவியந் தீட்டுவதற்காக அமைந்திருந்த மலைச் சரிவுகளைக் குடைந்து உள்ளே பெரும் மண்டபங்களை அமைத்து அதன் பக்கப் பாறைச் சுவர்களில் ஓவியங்களைத் தீட்டியிருந்தனர் சாளுக்கியர்கள்.

வல்லி அவனை நேரே கடைசிக் குகைக்கு அழைத்துச் சென்றாள்.

வல்லியின் உடலில் இளமை துள்ளி விளையாடியது. ஓவியங்களே நேரே உயிர் பெற்று வந்துவிட்டனவோ என்ற வடிவுடன் கூடிய அவள் வனப்பு அவனுக்குப் போதை ஊட்டியது!

ஓவியர் வர்ணங்களைத் தீட்டிக் கொண்டிருப்பார். அவரைச் சந்திக்கப் போகிறோம் என்ற ஆவலில் குமாரதேவன் சென்றான்.

தூரிகைகள் கீழே கிடந்தன. வல்லியின் கணவர் சித்திரசேனர் தரையில் வீழ்ந்து கிடந்தார்.

வல்லி பதறி ஓடினாள். சித்திரசேனரின் உடல் நெருப்பாய்க் காய்ந்து கொண்டிருந்தது.

"ஐயோ... கடுஞ் சுரம்..." என்று வல்லி பதறினாள்.

குமாரதேவன் அவரது நெற்றியைத் தொட்டுப் பார்த்தான்! கொதித்தது.



"என்ன செய்வது. இங்கேயே இவரை விட்டுவிட்டுச் செல்லவோ, இரவு இங்கேயே தங்கிருக்கவோ முடியாதே..." வல்லி துடிதுடித்தாள்.

"கவலைப்படாதீர்கள்... நான் இங்கேயே... தங்கி இவரைப் பார்த்துக் கொள்கிறேன்..." குமார தேவன் கூறினான்.

"அது முடியாது...?" வேங்கையின் நடமாட்டம் உண்டு அதற்கு நீங்களிருவரும் உணவாகிவிடுவீர்கள்..."

குமாரதேவன் சற்று யோசித்தான். பிறகு, "இங்குள்ள தூரிகை வண்ணங்கள் யாவற்றையும் நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். நான் இவரைத் தூக்கி வருகிறேன்" என்று கூறிச் சித்திரசேனரை மிகமிக எளிதாகத் தூக்கித் தோள் மீது கிடத்திக் கொண்டு அங்கிருந்த குடிலை நோக்கிப் புறப்பட்டான்.

இரண்டு பகலும் இரண்டு இரவுகளும் கழிந்தன. சித்திசேனர் கண் விழித்தார். அருகே இருந்த வல்லிக்கும் அவள் மகளுக்கும் ஆனந்தம் சொல்லிமுடியாது. ஓவியர் கண் விழித்து உதவியதில் குமாரதேவனுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. கலைஞருக்கு உதவியது ஒன்று; அவரது மகளுடன் பழகுவதற்கு வாய்ப்பு கிடைத்தது மற்றொன்று.

விழித்தெழுந்த சித்திரசேனரிடம், வல்லி, குமார தேவனை அறிமுகப்படுத்தினாள். அவன் செய்த சேவையை எடுத்துக் கூறினாள். அவன் அங்கு வந்திருக்கும் நோக்கத்தை விவரித்தாள்.

சித்திரசேனன் நன்றி என்று ஒரு வார்த்தை கூடக் கூறவில்லை; முகத்தில் புன்முறுவல்; ஒரு சிரிப்பு.

"பல்லவ நாட்டிலிருந்து வருகிறாயா?" என்று அவர் கேட்டார்.

"ஆமாம்..." என்று மெல்லக் கூறினான் குமாரதேவன்.

"பல்லவ நாட்டவருக்குச் சித்திரக்கலையைக் கற்பிக்க நான் விரும்பவில்லை" என்றார் சித்திரசேனர்.

குமாரதேவன் திடுக்கிட்டான். என்ன செய்வது என்று புரியாமல் திகைக்க அவனைச் சைகை செய்து அழைத்தாள் வல்லியின் மகள்.

குமாரதேவன் திகைத்தான். ஆம்! அவள்தான் குடிலுக்கு வெளியே நின்றுகொண்டு அவனை அழைத்தாள்.

அவளே அழைக்கிறாள். எந்தப் பைங்கிளியிடம் பேச வேண்டும் என்று இரண்டு நாட்களாகத் துடித்தானோ அவளே அழைக்கிறாள். போகலாமா வேண்டாமா என்று ஒரு கணம் எண்ணினான். பிறகு தலை குனிந்தவாறு குடிலுக்கு வெளியே வந்தான்.

அவள் அவனை அருகேயுள்ள ஓடைக் கரைக்கு அழைத்துச் சென்றாள். பாறையின் ஓரமாக அருவி சலசலத்து ஓடிக் கொண்டிருந்தது. அவள் பாறையின்மீது அமர்ந்து கால்களை நீரில் இட்டுக்கொண்டாள்.

"என்னை எதற்காக அழைத்தாய்?" குமாரதேவன் சற்றுக் கோபமாகவே கேட்டான்.

"அங்கேயே நின்றிருந்தால் என் தந்தையின் கோபம் அதிகமாகும். உங்களைச் சோதிப்பதற்காகவே அவர் அப்படிக் கூறினார். உண்மையிலேயே உங்களுக்குக் கலை ஆர்வம் இருக்கிறதா? அல்லது என் அழகில் மயங்கி இங்கே வந்திருக்கிறீர்களா என்ற சந்தேகம் அவருக்கு" இப்படிச் சொல்லிவிட்டு அவள் சிரித்தாள்.

குமாரதேவன் உதட்டைக் கடித்துக் கொண்டான்.

"பல்லவ நாட்டிலில்லாத அழகா? அதைவிட்டுவிட்டு காடு மலையைக் கடந்து நான் ஏன் வரவேண்டும்" குமாரதேவன் பேச்சில் சற்றுக் கடுமை இருந்தது.



"பல்லவ நாட்டிலில்லாத அழகிகளா?" அவள் கேட்டாள்.

"நிச்சயமாக..."

"அஜந்தாக் குகைகளிலுள்ள பெண்களின் ஓவியத்தை விடவா?"

"நான் இன்னும் பார்க்கவில்லையே!"

"என்னைப் பார்க்கவில்லையா?"

"இதோ பார்க்கிறேனே..."

"நான் அழகியில்லையா?"

இதற்கு குமாரதேவன் மறுமொழி கூறவில்லை. சிறிது நேரம் கழித்து, "அஜந்தா அழகியே! கருணை கூர்ந்து எனக்கு ஓர் உதவி செய்யமாட்டாயா? நான் அஜந்தா ஓவியங்களைக் காண வேண்டும். வர்ண இரகசியங்களை அறிந்துகொள்ள வேண்டும். அதற்கு உதவமாட்டாயா? அதற்காகவே நான் காஞ்சியினின்று வருகிறேன். இளவரசரிடம் வாக்களித்து வந்திருக்கிறேன். காஞ்சியில் இதைப்போன்ற ஓவியங்களை வரைய வேண்டும்" என்று குழைந்தான்.

அவள் மீண்டும் சிரித்தாள். துள்ளிக் குதித்து எழுந்தாள். அவளது இளமை துள்ளியது. தண்ணீரால் நனைந்த அவளது முழங்காலும் ஈரத்துணிகளோடு ஒட்டிக்கொண்ட தொடையும் அவன் இதயத்தைச் சுண்டின.

"என்னையும் காஞ்சிக்கு அழைத்துச் செல்வதாக வாக்களியுங்கள். நான் என் தந்தையிடம் சிபாரிசு செய்கிறேன்" என்றாள்.

குமாரதேவன் திகைத்தான். இவளுக்கென்ன சித்தப்பிரமையா? இவளை எதற்காகக் காஞ்சிக்கு அழைத்துச் செல்வதாம்?

"ஆமாம். கையடித்துச் சத்தியம் செய்து கொடுத்தால் நான் உடனே உங்கள் கோரிக்கையை நிறைவேற்றுகிறேன்" அவள் நடந்துகொண்டே பேசினாள்.

குமாரதேவன் நின்ற இடத்திலேயே நின்றான். அவள் நடந்து சென்றதைப் பார்த்தவாறு நின்றான்.

வல்லியின் மகளா? அல்லது அஜந்தா ஓவியம் உயிர் பெற்று வந்து பேசுகிறதா! அவள் கேட்டபடி வாக்களித்து விடுவோமா? குழப்பத்திலாழ்ந்தான் குமாரதேவன்.

## அத்தியாயம் - 4

# மனித இரத்தம்!

காபாலிகர்கள் கூட்டம் அந்த இளைஞனைச் சுமந்து மிக வேகமாகச் சென்றது. சத்தியசோமனும் தேவசோமையும் பசியை மறந்தனர். ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் சென்றனர். மதுவின் போதை தலைக்கேறியிருந்ததால் ஒவ்வொருவரும் என்ன பேசுகிறோம் என்பது அறியாமலேயே பேசிக்கொண்டனர். பேச்சில் தொடர்பும் இல்லை; முன்னுக்குப்பின் முரண்பாடு இருந்தது. என்றாலும் ஒரு விஷயத்தில் மட்டும் மிகத் தெளிவாக இருந்தனர். அவர்கள் எதிர்பார்த்திருந்த இளைஞன் கிடைத்துவிட்டான்; இனி எடுத்த காரியம் நிறைவேறிவிடும் என்ற நம்பிக்கை அவர்களிடையே ததும்பி நின்றது.

இளைஞன் மயங்கிய நிலையில் இருந்தான். கொடிய மயக்கம் தரும் மூலிகையை அவன் நுகருமாறு செய்ததால் சுயநினைவே அவனுக்கு இல்லை. ஒற்றையடிப் பாதை வழியாக மேட்டிலும், பள்ளத்திலுமாக ஏறி இறங்கி அவர்கள்



தங்களுடைய இருப்பிடத்தை அடைந்தனர். எளிதில் யாரும் அடைய முடியாத இடம். அன்று இரவு கூட்டமாக ஆடிப்பாடிக் கொண்டிருந்த அந்த இடத்தில் குடி மயக்கத்தில் சிலர் கிடந்தனர். வானத்தில் நிலவு சாட்சியாகத் திகழ்ந்தது.

பொழுது புலர்ந்தது. சுற்றிலும் பாறைகளும் மரங்களும் சூழ்ந்த பகுதியாக இருந்ததால், கதிரின் கிரணங்கள் அங்கே எட்டுவதற்கு இரண்டு நாழிகை நேரமாகும், காபாலிகர்கள் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தனர். தேவசோமையும், சத்தியசோமனும், மறைவான ஓரிடத்தில் அருகருகே படுத்திருந்தனர். அவளுடைய ஆடை குலைந்திருந்தது. அவள் சத்தியசோமனை அணைத்தபடி உறங்கிக் கொண்டிருந்தாள். பசியால் ஏற்பட்ட களைப்பும், இரவு கடைசி ஜாமம் வரை சத்தியசோமனுடன் சல்லாபித்ததால் ஏற்பட்ட சோர்வும் அவள் முகத்தில் பிரதிபலித்தன.

இளைஞனின் மயக்கம் மெல்லத் தெளிந்தது. இளங்காற்று புது உற்சாகத்தை ஏற்படுத்தியது. இமைகளின் மீது பெரும் பாறையை வைத்திருந்ததுபோல் தோன்றிய பார உணர்ச்சி மெல்லக் குறைந்தது. ஆனால் ஆயிரம் சாட்டைகள் கொண்டு அடித்ததுபோன்ற உடல்வலி அவனைப் புரண்டு கூடப் படுக்க முடியாமல் செய்தது. எங்கிருக்கிறோம் என்று முதலில் உணர்ந்துகொள்ள முயன்றான்.

சுற்றிலும் தரையில் வெண் மணல், எதிரேயும், நான்கு புறமும் பெரும் பாறைகள். நேற்று இரவு பார்த்தோமே அதே இடந்தானா? எழ முயன்றான். ஏதோ ஒருவிதக் கொடியால் அவனைச் சுற்றிப் பிணைத்திருந்தார்கள். படுத்தபடியே பார்த்தபோது சற்றுத் தொலைவில் காபாலிகர்கள் சிலர் உறங்கிக் கொண்டிருப்பது தெரிந்தது. மெல்ல மெல்ல முதல் நாள் நிகழ்ச்சிகளை நினைவுக்குக் கொண்டு வந்தான். நடனப் பெண்ணை பிட்சு ஒருவன் துரத்தி வந்தது; தாளிட்ட கதவை உடைத்து அவன் திறக்க முயன்றது; அதைத் தடுத்து பிட்சு உள்ளே நுழைய முடியாமல் செய்தது; தன்னைக் கண்டு அவன் பயந்து ஓடியது... ஏற்பட்ட சிறு சண்டையில் கையில்

ஏற்பட்ட காயம்; அந்தக் காயத்திற்கு அவன் மருந்திட்டுக் கட்டியது.

ஆ... இப்போதுதான் அந்தக் காயம் வலியை ஏற்படுத்தியது. காயத்தின் வலிகூட அவனுக்குப் பெரியதாகப் படவில்லை; வேங்கையின் வாயிலிருந்து தப்பி ஓடும் மான்போல் அவள் ஓடி வந்தாளே... அந்தக் காட்சி அவனைச் சிலிர்க்க வைத்தது. அவ்வளவு வேகமாக அவளால் ஓடமுடியாமலிருந்திருந்தால்... என்ன வேகமாக ஓடிவருகிறான் அந்தப் பிட்சு. அந்தப் பிட்சுவின் முகத்தை எங்கோ பார்த்த நினைவு வருகிறது. எங்கே இருக்கும்... அந்த அழகு மங்கையைக்கூட எங்கோ பார்த்ததுபோல் தோன்றுகிறது.

முற்றத்தில் விழுந்த நிலவு ஒளியில் மூதாட்டி தண்ணீர் ஊற்றிக் காயத்தைக் கழுவிப் பரிவுடன் மருந்திட்ட அந்த மங்கையின் விழிகளின் அழகை இதற்கு முன்பு எங்கோ பார்த்திருக்கிறோம்... நினைவில் கொண்டு வர முயன்றான். வனவனாந்திரங்கள்; காடுமேடுகள்; அலைகடல்; நகரத்தின் சந்தடி... இப்படியாக அவன் சிந்தனை சென்றது. விழிகள் கற்பனைக்கு ஏற்பச் சுழன்றன. மெல்ல மெல்ல மீண்டும் உறக்கம் வந்துத் தழுவியது.

மீண்டும் அவன் விழித்தபோது அவன் முகத்தருகே யாரோ குனிந்து இருப்பதுபோல் தோன்றியது.

சிரிப்பு; பெண்ணின் சிரிப்புதான். ஆனால், அதில் நளினம் இல்லை.

"மூச்சு வருகிறதா என்று பார்த்தேன்..." என்று கூறி தேவசோமை சிரித்தாள்.

பார்வை தெளிவாகத் தெரிவதற்குச் சிறிது நேரம் ஆகியது. அதே காபாலிகப் பெண்தான், அவன் இமை கொட்டாமல் அவளைப் பார்த்தான்.



காபாலிகப் பெண்; இளமை ததும்பும் முகம். ஆனால் அதில் ஓர் கடுமை. வெயிலென்றும், மழை என்றும் பாராமல் அலைவதால் ஆண்மையின் கம்பீரமும் கலந்திருந்தது. வஞ்சனையும் கட்டுப்பாடும் இல்லாமல் செழித்திருந்த மார்பகங்கள் அவன் உடல்மீது பதிந்திருந்ததை அவள் இலட்சியம் செய்ததாகத் தெரியவில்லை, எந்தவித உணர்ச்சியும் அவளுக்கு ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

"என்ன பார்க்கிறாய்? நான்தான் தேவசோமை..." என்று கூறி அவள் சிரித்தாள். பற்கள் காவி படிந்திருந்தன. தன்னுடைய வலது கரத்தால் அவன் நெற்றியில் மெல்லத் தடவி, "நன்றாக உறங்கிக் கொண்டிருந்தாய்" என்றாள்.

அந்த ஸ்பரிசத்தில் மென்மை இல்லை. நெற்றியில் இட்டிருந்த பெரிய குங்குமப் பொட்டும், கழுத்தில் அணிந்திருந்த மணி மாலைகளும் அவன் கண் எதிரே மிகப் பிரம்மாண்டமாக காட்சியளித்தன. கரங்களில் அணிந்திருந்த எலும்பால் ஆன வளையல்கள், இடையில் சுற்றப்பட்டிருந்த புலித்தோல் ஆடையும் மார்பகத்தை மறைக்க அணிந்திருந்த மெல்லிய துகிலும் உலகத்துக்குப் பயந்து அணிந்தவைபோல தோன்றின.

"என்ன அப்படிப் பார்க்கிறாய்...? நான்தான் தேவசோமை, என்னை உனக்குத் தெரியாது..." என்று கூறி அவன் அருகே முழங்காலைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்தாள்.

அவளைத் தெரியாது உண்மையில் அவனுக்கு. அதனால் தலையை அசைத்தான்.

"நேற்று நீ நாட்டியக்காரி வீட்டுத் திண்ணையில் உறங்கிக் கொண்டிருந்தாய்..." தேவசோமை கேட்டாள்.

"ஆமாம்" என்பதற்கு அடையாளமாகத் தலையசைத்தான் அவன்.

"அந்த நாட்டியப் பெண்ணைத் துரத்திக்கொண்டு பிட்சு ஓடினான். அவனுக்குப் பெண்கள் என்றால் சபலம். என்னிடமே தன் கரத்தை ஒருநாள் நீட்டினான். சூலாயுதத்தால் குடலைக் கிழித்துவிடுவேன் என்றேன். பிறகு என் பக்கமே வருவதில்லை. நேற்று நாட்டியப் பெண்ணைப் பார்த்துவிட்டான். அவளைப் பார்த்தால் மரமும், மலையும் கூட ஆசைப்படுமே..." என்று கூறி மீண்டும் பயங்கரமாக நகைத்த தேவசோமை, அவன் மீது சாய்ந்துகொண்டு, "ஆமாம், நீ எங்கே வந்தாய்? பிட்சுவின் பின்னால் ஓடினாய்... பிட்சு அந்த நாட்டியப் பெண்ணின் கரத்தைப் பிடித்து அவளை அணைக்க முற்பட்டபோது நீ போய்ச் சேர்ந்தாய். பிட்சுவை அடித்து வீழ்த்திவிட்டாய்... பிறகு என்ன செய்தாய்?" என்று கேட்டாள்.

தன்மீது அவன் சாய்ந்து கொண்டது அவனுக்குப் பிடிக்கவில்லை.

"கொஞ்சம் நகர்ந்து கொள்கிறாயா...?" என்றான் அவன்.

தேவசோமை விழிகளைத் தாழ்த்திக்கொண்டு, "ஏன் பெண் ஸ்பரிசமே உனக்குப் பிடிக்காதோ? ஆனால் நேற்று அந்த நாட்டியப் பெண்ணைக் காப்பாற்றினாயே... அதற்குப் பிறகு என்ன செய்தாய்?" என்று ஆவலுடன் கேட்டாள்.

அவன் மெல்ல இமைகளை மூடிக்கொண்டான்.

அதற்குப் பிறகு என்ன செய்தோம், அவன் நினைவுப் படுத்திக்கொள்ள முயன்றான். திண்ணையில் படுத்துக் கொண்டோம்.

"நீ ஏன் திண்ணையில் படுத்துக் கொண்டாய்? அவளுடன் கூடிக் குலாவிய பிறகு அங்கேயே படுக்கக் கூடாதா...? நானும் சத்தியசோமனும் எங்கே இருந்தாலும் ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாமல்தான் உறங்குவோம்..." என்றாள் தேவசோமை.



"சே..." என்று வெறுப்பு நிறைந்த குரல் அவனிடமிருந்து வந்தது. இந்தக் காபாலிகைக்கு அச்சம் என்பதுதான் கிடையாது; நாணங்கூட இல்லையா? ஒரு பெண் பேசுவது போல் பேசவில்லையே..!

"ஏன்... அவள் உன்னைப் போன்ற அழகிய இளைஞனை மதிப்புக் குறைவாக நடத்தமாட்டாளே... ஒரு வேளை அந்தப் பாட்டி இருப்பதால்..." என்று கூறி மீண்டும் சிரித்தாள் தேவசோமை.

"சுரீர்" என்று வெயில் அவன் முகத்தின் மீது பட்டது.

"நிழலில் இருக்கிறாயா...?" என்று கேட்டாள் தேவசோமை.

இதென்ன கொடுமை. ஏதேதோ பேசுகிறாளே தவிர, காலையில் ஏதாவது ஆகாரம் உண்டாயா என்று கேட்கத் தெரியவில்லையே" என்று எண்ணிய அவன் அவள் முகத்தை நோக்கினான்.

"நிழல் - வெயில்! அந்தப் பேதம்கூட உனக்குத் தெரிகிறதா!" அவன் கேட்டான்.

"எனக்கு எல்லாம் ஒன்றுதான். ஆனால், மயான பூமியில் ருத்திர தாண்டவமாடும் கபாலீசனை நம்புபவர்களுக்கு வெயில் குளிரும்; நிழல் குளுமை தரும். நீ யாரை நம்புகிறாய்? சிவனையா, விஷ்ணுவையா, புத்தனையா, சாளுக்கியனையா...?"

இந்தச் சமயத்தில் அவன் நம்பக்கூடியது அவள் ஒருத்தியைத்தான்.

அவன் சிரித்துக்கொண்டே, "உன்னை..." என்றான்.

இப்படி அவன் கூறியதைக் கேட்ட வேறு எந்தப் பெண்ணாயிருந்திருந்தாலும் அவள் உடல் சிலிர்த்திருக்கும்.

தேவசோமை உணர்ச்சி ஏதுமில்லாமல் மீண்டும் "நிழலுக்கு வருகிறாயா?" என்று கேட்டாள்.

"கையைக் காலை அசைக்க முடியவில்லை... நான் எப்படி எழுந்திருக்க முடியும்?" அவன் குரலில் கடுமையிருந்தாலும் மெல்லப் புன்னகையை வரவழைத்துக் கொண்டான்.

"ஓ! உன்னைக் கட்டிவிட்டார்களா...?" என்று அப்போதுதான் பார்த்தவள்போல் சுற்றும் முற்றும் பார்த்துக் கையைத் தட்டினாள்.

இரண்டு மூன்று காபாலிகர்கள் ஓடிவந்தனர். தேவசோமை அதிகாரம் தொனிக்கும் குரலில், "ஏன் இவனைக் கட்டியிருக்கிறீர்கள்...?" என்று கேட்டாள்.

அவர்கள் சிரித்தனர்.

"ஏன் சிரிக்கிறீர்கள்...? இவனது கட்டுக்களை அவிழ்த்து விட்டால்தானே இவனால் எழுந்திருக்க முடியும்...?" தேவசோமையின் குரலில் கோபம் பொங்கியது.

"அது சரி... எல்லாரும் முடிவு செய்ய வேண்டாமா...?"

"ஏன்...?"

"அவிழ்ந்து விட்டால் தப்பி ஓடிவிடுவானே..."

அவர்கள் கூறியது கேட்டுத் தேவசோமை சிரித்தாள். இளைஞனுக்குப் புரிய முடியா அச்சம் ஏற்பட்டது.

"இவன் எங்கே ஓடுவான்... நமது சூலாயுதத்திற்குத் தப்பி ஓடுவானா...? வர வர உங்களுடைய புத்தி மழுங்கி வருகிறது. மகத்தான காரியத்திற்காக இவனைக் கண்டெடுத்தோம். ஒரு மாதமாகச் சுற்றி வந்தும் கிடைக்காத வாலிபனைக் கொண்டு வந்தோம். நாம் அவனுக்குச் செய்ய வேண்டியவை என்ன? உமக்குத் தெரியாதா?" - அவள் சீறினாள்.



32952
500814

அவர்கள் தலையை அசைத்தனர்.

"முட்டாள்களே... இவனுக்கு ஒரு குறையும் வாராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இவன் கேட்பதெல்லாம் கொடுக்க வேண்டும், தெரியுமா?" தேவசோமை கம்பீரமாகக் கூறினாள். அவள் காபாலிகர்கள் கூட்டத்தின் தலைவி அல்லள்; என்றாலும் அவளுடைய பேச்சுக்கு அங்கு மதிப்பு இருந்தது.

"கேட்டதெல்லாம் கொடுப்பதற்கு எங்கே போவோம்? நம் ஆகாரத்திற்கே எங்கெங்கோ அலைகிறோம்..." என்றான் ஒரு காபாலிகன்.

சத்தியசோமன் அங்கே வந்துவிட்டான். "எங்கும் பசி பஞ்சம் என்று திண்டாடுகிறார்கள். பசியைப் போக்கத்தானே பெரிய பூஜை போடப்போகிறோம்... பூஜையை இப்பொழுது இவ்வளவு நாள் தள்ளிக்கொண்டே வந்தோம். இவன் கிடைத்துவிட்டான்..." என்று கூறியவாறு, தேவசோமைக்கு அருகே அவனும் மண்டியிட்டு உட்கார்ந்தான். வெயில் மளமளவென்று ஏறிக்கொண்டே வந்தது. மணல் சுட ஆரம்பித்தது.

"உம்... ஏன் நிற்கிறீர்கள்...? இவன் கட்டை அவிழ்த்து விடுங்கள். ஓடிப்போய்ச் சோமபானம் கொண்டு வாருங்கள்; பழங்களைக் கொண்டு வாருங்கள்" என்று சத்தியசோமன் கட்டளையிட்டான்.

இளைஞனின் கட்டுகளை அவிழ்த்தார்கள். அவன் மெல்ல எழுந்தான். அவன் உடலில் படிந்திருந்த மணலைத் தட்டினாள் தேவசோமை. அவன் கையிலே கட்டப்பட்டிருந்த காயத்தின் கட்டு அவளுக்குத் தென்பட்டது.

"இதென்ன?" அவள் பதறினாள். சத்தியசோமனும் பார்த்தான். "காயம் பட்டிருக்கிறதோ, எப்போது...?" என்று கேட்டான். குரலில் கவலை நிறைந்திருந்தது.

"பின்னப்பட்ட உடல் கூடாது..." என்று முணுமுணுத்தான், அவன் கரத்தை எடுத்துக் குனிந்து நோக்கினாள் தேவசோமை.

"சிறிய காயம்தான். வருகிற அமாவாசைக்குள் ஆறிவிடும்..' என்றாள் அவள்.

"இதோ பார்" என்று இளைஞனை நோக்கிச் சத்தியசோமன் கூறினான்: "உன்னைப் போன்ற ஓர் அழகிய வாலிபனைத் தேடிக் கொண்டிருந்தோம். நீ கிடைத்தது காபாலீச்வரன் அருள். இங்கிருந்துத் தப்பிச் செல்ல முயன்றாலும் உன்னால் முடியாது. வீணாகப் பிரயத்தனப் படாதே... உனக்கு வேண்டியது கிடைக்கும். என்ன வேண்டுமானாலும் கேள்... ஆனால் தேவசோமையை மட்டும் கேட்டுவிடாதே...?" என்று கூறிப் பெரியதாகச் சிரித்தான்.

தேவசோமையும் "ஹோ ஹோ" என்று சிரித்தாள். இளைஞனுக்கு அருவருப்பாக இருந்தது. இவர்கள் எதற்காகத் தன்னை அழைத்து வந்தார்கள்? எதற்காக இவ்வளவு உபசாரம்! அவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

ஆனால் ஒன்றுமட்டும் அவனுக்குப் புரிந்தது. எந்த ஒரு காரியத்திற்காக அவன் புறப்பட்டானோ, அந்தக் காரியத்தில் வெற்றி ஏற்பட்டுக் குற்றவாளிகளைக் கண்டுபிடித்துப் பல்லவ மன்னர் முன்கொண்டு நிறுத்துவதற்கு இந்தக் காபாலிகர்கள் கோஷ்டி பெரிதும் உதவும் என்பது புரிந்தது.

பல்லவ நாட்டில், அதிலும் காஞ்சிபுரம் பகுதிகளில் மணி தானியங்கூடக் கிடைக்கவில்லை. களஞ்சியங்களில் இருந்த தானியங்களை எங்கோ பதுக்கிவிட்டார்கள். பதுக்கியவர்களைக் கண்டு பிடிக்கும் பெரும் பொறுப்பு அவனுக்கு அளிக்கப்பட்டது.

உச்சி வேளையில் உணவு வந்தது. பெரும் வாழை இலையில் விதவிதமான பதார்த்தங்கள் பரிமாறப்பட்டன. தனது முன் கோபத்தையும், ஆத்திரத்தையும், பலத்தையும்,



தான் யார் என்பதையும் அந்தச் சமயம் அவன் புலப்படுத்த விரும்பவில்லை. என்ன நடக்கிறது பார்ப்போம் என்று மௌனமாக இருந்தான். உண்ட பிறகு மரத்தடியில் இளைப்பாறினான். மீண்டும் அவனுக்கு உறக்கம் வந்தது.

மாலைக் கதிரவன் மிக வேகமாக மறைந்து கொள்ள மேற்குத் திசையை நோக்கி ஓடிக் கொண்டிருந்தான்.

இளைஞன் உறக்கத்தினின்று விழித்தபோது நன்றாக இருட்டிவிட்டது. அருகே சிலர் இருப்பது தெரிந்தது. கண் விழிக்க விரும்பவில்லை. அவர்கள் அவனையே உற்று நோக்கிக் கொண்டிருப்பதும் தெரிந்தது.

"நன்றாகப் பார்த்துவிட்டாயா ருத்திரதேவா?" என்று யாரோ கேட்கிறார்கள்.

"ஆகா, நன்றாகப் பார்த்துவிட்டேன். சாமுத்ரிகா லட்சணங்களுடன் கூடிய வாலிபனைத் தேர்ந்தெடுத்து வந்திருக்கிறீர்கள். கை. கால், புஜங்கள், முகம், நாசி, இடுப்பு, வயிறு - எல்லாம் இலட்சணமாக - சாத்திரத்தில் கூறியதுபோல் அமைந்துவிட்டன. பைரவமூர்த்திக்கு ஏற்ற பலி இவன்தான்..." என்கிறான் ருத்திரதேவன் எனும் காபாலிகன். பார்ப்பதற்கு அவர்களுடைய குருவைப்போல் தோன்றினான்.

"ஆனால்... கையிலுள்ள காயம் ஆறிவிட வேண்டும். பின்னப்பட்ட உடலைப் பலியாக ஏற்கமாட்டார் நமது பெருமான் காபாலமூர்த்தி" என்று கரகரப்பான குரலில் கூறினான்.

"ஏன் சுவாமி... இந்தக் காயம் அமாவாசைக்குள் ஆறிவிடாதோ?" ஒரு காபாலிகன் கேட்டான்.

"ஓ, ஆறிவிடும். இவனுக்கு ஒரு குறைவும் வராமல் பார்த்துக்கொள்... அமாவாசை அன்று விசேஷ பூஜை நடக்கும். இரவு நடுநிசியில் இவனது தலையைக்

காபாலீச்வரருக்குப் பலி கொடுப்போம். அப்போது சிந்தும் இரத்தத்தைக் குடிப்போம். ருத்ர தாண்டவம் ஆடுவோம்... மறுநாளே மழை பெய்யும்... ஏரி, குளம் நிரம்பும், பசி, பஞ்சம், பட்டினி ஓடிப்போகும். அப்போதாவது அரசர் பரமேச்வரவர்மன் நம்மையும், நமது கொள்கைகளையம் நம்புகிறாரா பார்ப்போம்..."

இளைஞன் இதைக் கேட்டு நடுநடுங்கினான். "பசி, பஞ்சம், பட்டினி ஒழிய வேண்டியதுதான்; அதை ஒழிக்கத் தன்னைப்போல் நூறு அல்லர்; ஆயிரம் இளைஞர்கள் தியாகம் செய்ய ஆயத்தமாக இருக்கிறார்கள். ஆனால் இந்தக் காபாலிகர் கூட்டத்தாரின் கையில் சிக்கி நரபலிக்கு இரையாவதா? சிவபெருமான் நரபலியை விரும்புகிறாரா? ஐயோ இந்தக் காபாலிகர்களின் கொடிய திட்டத்தைத் தடுக்கவே வழியில்லையா...?" என்று எண்ணினான்.

நரபலி - அமாவாசை இரவு - இதை நினைக்கும்போது அவன் குலை நடுங்கியது.

## அத்தியாயம் - 5

# 'உன்னிடமிருந்து எனக்கு ஓர் உதவி...'

**கா**ஞ்சிமா நகரின் புராதன வீதிகளில் கலகலப்பு குறைந்து காணப்பட்டது. வீதியின் இரு முனைகளிலும் ஒளி வீசும் தீவர்த்திகளுக்கு எண்ணெய் இட்டு ஏற்றும் பணியாட்கள் இன்னும் வராததால் வீதிகள் இருள் கவிந்திருந்தன. சந்திரன் இன்னும் உதயமாகாததால் முன் ஜாம இருட்டு நடமாடுகிறவர்களுக்கு இடையூறாக இருந்தது. பிரதான கடைவீதிகளில் மட்டும் சில அங்காடிகள் திறந்திருந்தன. அவையும் ஆபரணக் கடைகள், பட்டுப்



பீதாம்பரம் விற்கும் கடைகள், முத்துப் பவளம் விற்கும் கடைகள். அநேகமாக அயல் நாட்டார் நடத்தும் கடைகள் அவை.

முத்து, பவளம், வைர வைடூரியம் விற்கும் கடை வாயிலில் மூடிய சிவிகை ஒன்று இருந்தது. அதைச் சுமப்பவர்கள் சற்று ஒதுக்குப் புறமாக அமர்ந்து வெற்றிலையைச் சுவைத்துக் கொண்டிருந்தார்கள். கடைக்குள் சென்றிருக்கும் ராஜ சுந்தரி அவ்வளவு சீக்கிரம் திரும்பி வரமாட்டாள் என்பது அவர்களுக்குத் தெரியும். அதனால் அமைதியாக அவர்கள் அமர்ந்து ஊர் உலகக் கதைகளைப் பேசிக் கொண்டிருந்தனர்.

"இன்றைக்கு ஏன் வீதி விளக்குகளை ஏற்றவில்லை. பௌர்ணமி போய் ஒரு வாரத்திற்குமேல் ஆகிவிட்டதே. இருட்டில் எதிரே வருபவர்கள்கூடத் தெரியமாட்டார்கள் போலிருக்கிறதே" என்றான் சிவிகை சுமக்கும் ஒருவன்.

"ஏதோ முக்கிய காரணம் இருக்க வேண்டும்" என்றான் மற்றொருவன்.

"முக்கியக் காரணம் என்ன தெரியுமா?" என்று கேட்டான் மூன்றாமவன்.

"எங்களுக்கு எப்படியப்பா தெரியும்? அரண்மனை இரகசியம் உனக்குத்தான் தெரியும்!" என்றான் நாலாவது பேர்வழி.

"விளக்கு ஏற்றாததற்கும் அரண்மனை இரகசியத்துக்கும் என்ன சம்பந்தம்? அப்பொழுது உனக்குத்தான் ஏதோ இரகசியம் தெரிந்திருக்கிறது" என்றான் முதல் சிவிகையாளன்.

"இரகசியம் என்ன? சக்கரவர்த்தி கூரம் போயிருக்கிறார். அதனால் வீதி விளக்குகளைத் தாமதமாக ஏற்றுகிறார்கள்" என்றான் ஒருவன்.

"அதெல்லாம் இல்லையப்பா.. எண்ணெயில் சிக்கனம் பிடிக்குமாறு மூலப்பண்டாரத்தின் கட்டளை. பண்டக சாலையில் எண்ணெய் கையிருப்பு குறைந்து வருகிறது" என்றான் இரண்டாமவன்.

"அரண்மனையில் அந்த அவதி. நம்ம அம்மா வீட்டில் எவ்வளவு விளக்குகள்! நாளைக்கு ஏதோ விசேஷமாம்; விதவிதமான விளக்குகளை உள்ளேயிருந்து எடுத்து அதைத் துலக்கி வைத்திருக்கிறார்கள். அவ்வளவுக்கும் எண்ணெயிட்டு ஏற்ற வேண்டுமானால் எவ்வளவு எண்ணெய் செலவாகும்?" என்றான் முதல் பேர்வழி.

அவன் கூறியது உண்மைதான். ராஜசுந்தரியின் வீட்டில் மறுநாள் கோலாகலமான விழா. அவளது பிறந்த நாள் விழா. ராஜசுந்தரி சிறந்த நடனக்காரி. ராஜநர்த்தகி அவளழகும் நாட்டியத் திறமையும் போட்டி போட்டுக் கொண்டு அவளது பெயரைப் பிரபலப்படுத்தின.

ராஜசுந்தரி தனது பிறந்த நாளுக்காகப் புதுவித ஆபரணங்களை வாங்க வந்திருந்தாள். அவள் வந்துவிட்டாள் என்றாலே நகைக் கடைக்காரர்களுக்குக் கொண்டாட்டம் தான்.

அவளது விழிகள் நான்கு புறமும் சுழலும் அழகைப் பணியாட்கள் ரசிப்பார்கள். அந்த விழிகள் மரகதப் பச்சைக் கற்கள் ஒளி வீசுவதுபோல் வீசின. மெல்ல இதழ் விரித்து அவள் பேசும்போது பாண்டிய நாட்டு முத்தினைக் கொட்டியதுபோல் தோன்றியது. அவள் கழுத்தைத் திருப்பி நோக்கும்போது வெண்சங்கை எடுத்து ஊதுவதுபோல் தோன்றியது. விழிகளால் மட்டும் பேசி வாய் திறவாமல் இருக்கும்போது பவழங்களை முகத்தில் ஒட்ட வைத்ததுபோல் தோன்றியது.



இலவம் பஞ்சினால் ஆன மெத்தையின் மீது ஒயிலாக அமர்ந்தாள் ராஜசுந்தரி. கடையின் உரிமையாளர் நவரத்தினம் பதித்த ஆபரணங்களை ஒவ்வொன்றாக எடுத்துக் காட்டினார்.

வைரமாலை ஒன்று அந்த இடத்தையே கோடி சூர்யப் பிரகாசம் போல் ஒளிவிடச் செய்தது.

கோமேதக, மரகத, இரத்தினம் பதித்த மாலை ஒன்று வான வில்லின் வண்ண ஜாலத்தை அங்கே பிரகாசிக்கச் செய்தது.

"இந்தக் கண்டிகை உங்களுக்கு அழகாக இருக்கும்" என்று உரிமையாளரின் புதல்வன் புவனேச்வரன் கூறி ஓர் ஆபரணத்தை எடுத்து அவளருகே நீட்டினான்.

"இந்தக் கண்டிகையை இவர்கள் அணிவதால் கண்டிகைதான் இன்னும் அழகாக இருக்கும் என்று சொல்லடா" என்று திருத்தினார் அவனது தந்தை அங்கே சிரிப்பொலி பொங்கி எழுந்து வெளியே எதிரொலித்தது.

ராஜசுந்தரி தனது வெட்டும் விழிகளால் ஒரு முறை அனைவரையும் பார்த்து அந்த நவரத்தின கண்டிகையை வாங்கித் தன் கழுத்தில் வைத்து அழகு பார்த்தாள். அவளது மார்பின் மீது தவழ்ந்து அவளது செவ்வுடலுக்கு அழகு செய்தது. அந்த ஆபரணம்.

ராஜசுந்தரி புறப்பட்டு விட்டாள். கடைக்காரருக்கு நல்ல வருவாய். புவனேச்வரன் கடை வாயில்வரைச் சென்று வழியனுப்பினான்.

"ஏய்" என்று கூறினார் அவனது தந்தை அவன் திரும்பி வந்தான்.

"எங்கே நீ சிவிகையைச் சுமந்து சென்றுவிடுவாயோ என்று பயந்தேன்!" என்று அவர் சிரித்தார்.

"அப்பா! நாளைக்கு ராஜசுந்தரியின் பிறந்த நாளாம். சிவிகைக்குள் ஏறி அமரும்போது என்னையும் வருமாறு அழைத்தாள்" என்றான் புவனேச்வரன்.

"நாமெல்லாம் அங்கே போகக்கூடாது" என்றார் அவனது தந்தை.

"ஏனப்பா?"

"பிறந்த நாள் விழாவுக்குச் சென்றால் ஏதாவது பரிசு தர வேண்டும்".

ஆமாம், தரத்தான் வேண்டும். அவள் நமது கடையில் வாங்கும் ஆபரண மதிப்புக்கு எல்லையுண்டா?"

"அதனால்தான் சொல்கிறேன். அதற்கு ஈடாக நம்மால் கொடுக்க முடியுமா?"

புவனேச்வரன் மௌனமாய் இருந்தான்.

சிவிகையைச் சுமப்பவர்கள் ஏற்படுத்தும் ஒலியைத் தொடர்ந்து குதிரை மீது பாதுகாவலாக ஆஜானுபாகுவான ஆள் ஒருவன் வந்து கொண்டிருந்தான். ராஜசுந்தரி எங்கு சென்றாலும் மெய்க்காவலாக அவன் செல்வான். இருண்டிருந்த வீதியின் திருப்பத்தில் சென்று கொண்டிருந்தபோது குதிரைமீதிருந்து அவன் மீது கயிறு ஒன்று வீசப்பட்டது. அது நொடியில் அவனைக் குதிரை மீதிருந்து கீழே தள்ளியது. குதிரை மட்டும் சென்று கொண்டிருந்தது. கீழே வீழ்ந்தவனது முகத்தின்மீது துணிப்போட்டு மூடப்பட்டது. கை கால்கள் கட்டப்பட்டன. தூக்கிக்கொண்டு அருகேயிருந்த சிறு சந்துக்குள் எடுத்துச் சென்று மறைந்தனர்.

சிவிகை சென்று கொண்டிருந்தது. தெருவின் திருப்பத்தில் சிவிகை சுமப்பவரில் ஒருவன் கூறினான்:



"குதிரை மட்டும் வருகிறது; அதன் மீதிருந்த வீரபத்திரன் எங்கே?"

அனைவரும் திரும்பினர். அவர்கள் திரும்பிப் பார்ப்பதற்குள் நான்கு பேர் அவர்களது மார்பை நோக்கிச் கூர்மையான வேலினை நீட்டியிருந்தனர்.

"உம்... சிவிகையை இறக்குங்கள்..." என்ற குரல் மட்டும் கேட்டது.

நெஞ்சை நோக்கி வேல் அழுத்தியது. அவர்கள் சிவிகையை இறக்கினர். குதிரை மீதிருந்தவனுக்கு ஏற்பட்ட கதிதான் அனைவருக்கும்.

சிவிகை இறக்கப்பட்டது. ஏதோ வெளியே சந்தடி கேட்டதும் ராஜசுந்தரி திரையை விலக்கி நோக்குவதற்குள், சிவிகையைச் சுமந்துகொண்டு விரைந்து சென்றனர் புதியவர்கள்.

சிறிது நேரம் கழித்து மீண்டும் சிவிகை இறக்கப்பட்டது.

ராஜசுந்தரி இறங்கினாள்.

சிவிகை சுமப்பவர்கள் புதியவர்கள் என்பதையும், வந்திருக்கும் இடம் தன் மாளிகை வாயில் அன்று என்பதையும் அவள் புரிந்துகொண்டாள். அவள் உடல் நடுங்கியது. எனினும் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, "நீங்கள் யார்? என்னை எங்கே கொண்டு வந்திருக்கிறீர்கள்?" என்று கூவினாள்.

"உச். சப்தம் போடாதே நாட்டியராணி... இதுவும் ஒரு மாளிகைதான். உள்ளே போ. சப்தம் போட்டால் இந்தக் கூர்மையான வாள் உனது அழகிய மார்பில் கோலங்கள் வரையும்" என்றான் ஒருவன்.

கூரிய வாள் பளபளத்தது. கூறியவனின் விழியும் பளபளத்தது! ராஜசுந்தரி செய்வதறியாது திகைத்தாள். சிவிகையில் விலைமதிப்பற்ற ஆபரணங்கள் இருந்தன. அதை எடுப்பதற்காகத் திரும்பினாள்.

"ஆபரணங்கள் எங்கும் போய்விடாது. பத்திரமாக உன் வீட்டிலேயே சேர்க்கப்படும்" என்று அழுத்தமான குரல் கேட்டது.

ராஜசுந்தரி அந்த மாளிகையின் படிக்கட்டுகளில் ஏறினாள். அவள் அதற்கு முன் அந்த மாளிகையைப் பார்த்ததில்லை.

முதல் கூடம் இருண்டிருந்தது. மெல்லத் தட்டுத் தடுமாறி நடக்க வேண்டியிருந்தது. முரடர்கள் அவள் கரம் பிடித்து அழைத்துச் சென்றது அவளுக்குப் பிடிக்கவில்லை.

"கையை விடுங்கள்; நானே நடப்பேன்" என்று அவர்கள் கரத்தை உதறினாள்.

"ஏன், எங்கள் கரம் பாம்பாய்க் கடிக்கிறதா?" என்று ஏளனமாகக் கேட்டான் ஒருவன்.

"ஏய், வார்த்தையை அளந்து பேசு" என்ற மற்றவனின் கட்டளை அதிகாரமாகக் கேட்டது.

ராஜசுந்தரிக்குச் சற்றுத் துணிவு பிறந்தது. கால் சதங்கைகளின் மெல்லிய சப்தம் அந்த இடத்தின் அமைதியைக் கலைத்தது.

இரண்டாவது கூடமும் தாண்டப்பட்டதை உணர்ந்தாள் அவள். அவளது வீடும் மூன்று கட்டுகளும், இரண்டு விசாலமான கூடமும், மேல் மாடமும் கொண்டது. நிறைய விளக்குகளுடன் காட்சியளித்தால் அந்த வீடும் அவள் வீட்டைப் போலவே இருக்கலாம். அதனால் வசதி படைத்தவரது இருப்பிடமாகத்தான் தோன்றுகிறது என்று எண்ணினாள் அவள்.



"உம்... இப்படித் திரும்புங்கள்?" என்று குரல் கேட்டது.

"இன்னும் எங்கே போக வேண்டும்?" என்று சலித்துக் கொண்டாள் சுந்தரி.

"இதோ இப்படி - படிக்கட்டுகள் இருக்கின்றன. சற்றுக் கவனித்துச் செல்லுங்கள். உங்கள் நன்மைக்காகத்தான் சொல்லுகிறேன்... பாதத்தில் காயம் பட்டால் கஷ்டம்தானே... நாளை நடனத்திற்கு இடையூறு வரக்கூடாதல்லவா?" என்றது அந்தக் குரல்.

சுந்தரி தனக்குள் சிரித்துக் கொண்டாள். ஆகா, என்ன அக்கறை. என்னையே பலிகொடுக்க அழைத்துச் செல்வதுபோல் அழைத்துச் செல்கிறார்கள் என் பாதத்தின்மீது அன்பு; நடனத்தின் மீது ஆசை!

மேல் மாடத்திற்கு வந்துவிட்ட உணர்ச்சியை அடைந்தாள் சுந்தரி. இருளில் நடப்பதும் தனி அனுபவம்தான் என்று எண்ணினாள்.

திடீரென்று கதவு திறக்கப்பட்டது. ராஜசுந்தரியின் கண்கள் கூசின. பகல் போல அந்தக் கூடத்தில் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன.

இரத்தினக் கம்பளங்கள் விரிக்கப்பட்டிருந்தன. அன்னத்தின் தூவியை எடுத்து கீழே விரித்திருக்கிறார்களா? மல்லிகை முல்லை அரும்புகளைத் தூவி இருக்கிறார்களா?

"இப்படி உட்காருங்கள்" என்று கட்டளையிட்டவனைச் சுந்தரி திரும்பிப் பார்த்தாள்.

ஐயோ... இப்படி ஓர் அவலட்சணம் பூமியில் பிரம்மனால் படைக்கப்பட முடியாது என்பதற்குச் சாட்சியாக அவன் திகழ்ந்தான். அவன் ஒருவன்தான் நின்று கொண்டிருந்தான். மற்றவர்கள் இருளில் விலகிவிட்டனர்.

அவன் உட்காரவில்லை.

"உட்காருங்கள் அம்மா... நீங்கள் உட்காரவிடில் தங்களை நிற்க வைத்ததற்காக எங்களைச் சாட்டையால் அடிப்பார் என் தலைவர்" என்றான் அந்த அதிரூப சுந்தரன்!

அவனைப் பார்க்க விரும்பாமல், "புலகேசின் பரம்பரையோ... எப்போதும் சாட்டையும் கையுமாக உங்கள் தலைவர் இருப்பாரோ?" என்றாள் குரலில் ஆத்திரமும் எரிச்சலும் நிறைந்திருந்தன.

அவன் திடுக்கிட்டான். சுந்தரிக்கு உண்மை ஏதாவது தெரிந்தவிட்டதா? சாளுக்கிய நாட்டைச் சேர்ந்தவர்கள் அந்த மாளிகையிலிருப்பவர்கள் என்பதைப் புரிந்துகொண்டு விட்டாளா?

"உங்களுக்கு என் எசமானரைத் தெரியுமா?" அவன் கேட்டான்.

சுந்தரி மறுமொழி கூறவில்லை. அதற்குள் அவன் கூறிய தலைவரே வந்துவிட்டார்.

உயரமான உருவம்; அதிகச் சதைப் பற்றில்லாத உடல்; அடர்ந்த மீசை. கூர்மையான மூக்கு. முழங்கால்வரை நீண்டு தொங்கும் அங்கி. சிவந்தமேனி. தலைமுடி கழுத்துவரை தொங்கியது.

"உட்காரமல் நிற்பதற்காகவா வந்தாய்?" என்ற குரலில் கரகரப்பு இருந்தது.

"உங்கள் இரத்தினக் கம்பளத்தின் மென்மையை என் பாதம் சுவைக்கட்டுமே. அதற்காக நிற்கிறேன்!" என்று சட்டென்று கூறினாள் சுந்தரி. தொடர்ந்து "நீங்கள் யார்? என்னை எதற்காக அழைத்து வந்தீர்கள்? அழைத்த முறை சரியாக இல்லை; நான் யார் என்று தெரிந்திருந்தால் அழைத் திருக்கமாட்டீர்கள்... உடனே என்னை என் இருப்பிடத்திற்குக்



கொண்டு விட்டுவிடுங்கள்" என்று பரபரப்புடன் பேசினாள் ராஜசுந்தரி.

விழிகளால் கூர்ந்து நோக்கிய அவன், "எனது பணியாட்கள் தவறாக ஒருவரையும் கொண்டுவர மாட்டார்கள். பல்லவ நாட்டின் ராஜநர்த்தகியை அவளது மாளிகையில் சென்று காணத் தவம் கிடப்பார்கள் என்பது எனக்குத் தெரியும். என்னால் அங்கே வரமுடியாது. அதனால்தான் நான் இங்கே அழைத்து வந்தேன்..." என்றான்.

"ஏன்... என் வீட்டிற்கு வரத் தடையில்லையே...? அதற்கான அந்தஸ்து இருந்தால் போதும். அதேபோல் என்னை வரவழைக்கவும் தனிப்பட்ட தகுதி வேண்டும்..." என்று அலட்சியமாகப் பேசினாள் சுந்தரி.

கடகடவெனச் சிரித்தான் அவன். "அந்தஸ்து... தகுதி... அதற்கும் அப்பாற்பட்டவன் நான்... என்னைத் தெரியுமா?"

"முதலிலேயே கேட்டேன்; நீங்கள் யார் என்று, மறுபடியும் கேட்கிறேன்; நீங்கள் யார்? என்னைப் பலாத்காரமாகத் தூக்கி வந்த காரணமென்ன?

"பலாத்காரமாகத் தூக்கி வந்தார்களா? உன் மீது ஒரு சிறு துரும்புகூடப் படக்கூடாது என்று சொல்லியிருந்தேனே...?"

தூக்கி வருவதும் என் ஆட்களைக் கட்டிப்போட்டு அழைத்து வருவதும், ஒன்றுதான். பல்லவ நாட்டின் தலைநகரில் இப்படியொரு அக்கிரமம் நடந்த செய்தி சக்கரவர்த்திக்குத் தெரிந்தால் உனக்கு என்ன நேரும் தெரியுமா? சரி சரி... வீண் பேச்சு எதற்கு... என்னை எப்படி அழைத்து வந்தாயோ, அப்படியே என் மாளிகையில் கொண்டு சேர்த்து விடு. எனக்காக என் செவிலித் தாய் காத்திருப்பாள். நாளைக்கு நடக்க வேண்டிய காரியங்களுக்குத் திட்டமிட, கட்டளையிட, ஏற்பாடு செய்ய, ஏராளமான வேலைகள் உள்ளன..."

"செவிலித்தாயா?... யார்?... அதே... சிமந்தனி தேவிதானே..."

இதைக் கேட்டதும் ராஜசுந்தரி திடுக்கிட்டாள். அவளது செவிலித் தாயின் பெயர் அவள் ஒருத்திக்குத்தான் தெரியும்.

"ஏன் திகைக்கிறாய்? சிமந்தனியைத் தெரிந்து வைத்திருக்கிறேன் என்றா? உன்னைப் பற்றியும் எனக்குத் தெரியும். என்னையும் உனக்குத் தெரியும். இப்பொழுது அடையாளம் தெரியவில்லை... இன்னும் சிறிது நேரத்தில் தெரிந்தவுடன் நீ என் பாதங்களில் வீழ்வாய்..!"

ராஜசுந்தரி மீண்டும் நடுங்கினாள். முதலில் இருந்த தைரியம் இப்போது குறைந்துவிட்டது.

"பயப்படாதே... என்னால் உனக்கு ஏதும் ஆபத்து நேராது. நீ நன்றாக வாழ்ந்தால்தான் என் காரியம் நிறைவேறும். உன்னிடம் ஓர் உதவி பெற உன்னை அழைத்து வந்தேன்..." என்றான்.

ராஜசுந்தரியின் புருவத்தில் சுருக்கம் வீழ்ந்தது. அவள் அடையாளம் புரிந்துகொண்டு விட்டாள்.

"ஐயோ... இவரா?" என்று நினைத்தவளின் உடல் வியர்த்தது. தலை சுற்றுவதுபோன்ற உணர்ச்சி. அந்தக் கூடமே சுழலுவதுபோல தோன்றியது. அதோ... அதோ... அவள் கீழே விழப்போனாள்.

மயங்கி விழப்போன ராஜசுந்தரியை அவன் தாங்கி மெல்ல அணைத்து அழைத்துச் சென்று மஞ்சத்தில் கிடத்தினான்.

அத்தியாயம் - 6

# எப்படியும் கண்டு பிடிப்பேன்

சந்திரமாலா காலையில் எழுந்ததிலிருந்து உற்சாகங் குறைந்து காணப்பட்டாள். முத்தம்மாள் கொண்டுவந்து வைத்த பலகாரத்தைத் தொட்டுக்கூடப் பார்க்கவில்லை.

"ஏன் சோர்ந்து காணப்படுகிறாய் சந்திரமாலா? நேற்று இரவு ஏற்பட்ட அதிர்ச்சி இன்னும் நீங்கவில்லையா..?" என்று முத்தம்மாள் கேட்டாள்.

சந்திரமாலா ஏதும் மறுமொழி கூறவில்லை. அவள் நினைவு எங்கோ சென்றது.

"இதற்கெல்லாம் பயப்படக்கூடாது குழந்தாய்! பயப்படுவது என்றால் இந்தக் கிராமத்திலேயே இருக்கக்கூடாது. கிராமமே புறப்பட்டுப்போய்விட்ட பிறகு நாம் மட்டும் இருக்கிறோம்... என்ன பயம்?" என்று முத்தம்மாள் மீண்டும் கேட்டாள்.

சந்திரமாலா வாய் திறக்கவில்லை. தூணின் மீது சாய்ந்து கொண்டாள்.

"சந்திரமாலா... உச்சிப் பொழுது நெருங்கப்போகிறது. இப்படி ஏதும் சாப்பிடாமல் இருந்தால் உடம்பு எதற்காகும். நேற்று இரவும் சாப்பிடவில்லை" மீண்டும் முத்தம்மாள் கேட்டாள்.

அவள் தொந்தரவு தாங்காமல், "பாட்டி, எனக்கு மனதே சரியில்லை... பலகாரம் வேண்டாம்" என்றாள்.

"பட்டினி கிடந்தால் மனம் சரியாகிவிடுமா?"

"அவர் எங்கே அலைகிறாரோ... என்ன ஆனாரோ...?"

"யாரைச் சொல்கிறாய்...?"

"என்னைக் காப்பாற்றினாரே... அவரைத்தான்..."

"ஓ! அந்த இளைஞனையா? நான்கூட மறந்துவிட்டேன். திண்ணையில் படுத்திருந்தானே... காலையில் மிகவும் சீக்கிரம் எழுந்துச் சென்றுவிட்டானே... தெரிந்திருந்தால் ஏதாவது ஆகாரம் செய்து கொடுத்திருப்பேன்..."

பாட்டியின் பேச்சு அவளுக்குச் சிரிப்பை அளித்தது.

"நேற்று நடந்த சம்பவத்தை அவ்வளவு சீக்கிரம் பாட்டி மறந்துவிட்டாளே..."

"பாட்டி... நேற்று அவர் அந்தப் போலிப் பிட்சுவைத் தாக்கியதை நீங்கள் கண்களால் பார்த்தீர்கள்... பிட்சுவை வெல்ல யாராலும் முடியாது என்றுதான் நான் நினைத்தேன். களைப்புடன் திண்ணையில் படுத்தார். பொழுது விடிவதற்குள் எங்கே போயிருப்பார்... எனக்கு என்னவோ பயமாயிருக்கிறது..." - சந்திரமாலாவின் குரலில் வேதனை ததும்பி நின்றது.

"பயம் பயம் என்கிறாயே... இளைஞனுக்கு ஏதாவது ஏற்பட்டிருக்கும் என்று நினைக்கிறாயா?" - முத்தம்மாள் கேட்டாள்.

"ஆமாம் பாட்டி; ஒன்று அந்தப் பிட்சு திரும்பி வந்து தாக்கியிருக்க வேண்டும். அல்லது அந்தக் காபாலிகர்கள் ஏதாவது செய்திருக்க வேண்டும்" என்று சந்திரமாலா கவலையுடன் கூறினாள்.

"உம்... பிட்சு வந்துத் தாக்கியிருந்தால் ஓசை கேட்டிருக்காதா? காபாலிகர்கள் வந்தால் அந்த இளைஞனை ஒன்றும் செய்திருக்க முடியாது. இதற்காகவா கவலைப்படுகிறாய்...?" என்றாள் முத்தம்மாள்.



"ஏன் சந்திரமாலா கவலைப்படுகிறாய்? எதற்காக! ஏன்... நேற்று ஏற்பட்ட ஆபத்திலிருந்து தப்பியதற்குச் சந்தோஷமல்லவா படவேண்டும்...?" என்று கேட்டுக் கொண்டு வல்லபன் வந்தான்.

அடக்கி வைத்திருந்த கோபத்தை அவன் மீது கொட்டினாள் சந்திரமாலா.

"நீங்களும் ஆண்பிள்ளைகளா? சமயத்தில் விட்டு விட்டு ஓடிவிட்டீர்களே...?" என்று சீறினாள்.

"ஓடிவிட்டேனா...? என் மிருதங்கத்தை உடைத்து விட்டானே பாவி... அப்பப்பா எப்படி ஓடுகிறாய் நீ... மான் தோற்றது. இதுபோன்ற பாய்ச்சலைப் பார்த்திருக்கிறேன். சந்திரமாலா நீ பெண் புலி..." என்று கூறிச் சிரித்தான் வல்லபன்.

"சிரிக்காதே வல்லபா... ஆபத்து வேளையில் நீயும் வண்டியோட்டியும் மற்றவரும் சேர்ந்தால் பிட்சுவைத் தாக்கி விரட்டியிருக்க முடியாதா...?" - சந்திரமாலா அவனைச் சுட்டெரிப்பவள்போல் பார்த்தாள்.

"அந்தப் பிட்சு என்னைத் தாக்கவில்லையே..." என்று வல்லபன் கூறியபோது முத்தம்மாள் குறுக்கிட்டு, "வல்லபா நகைச்சுவையுடன் பேச இதுவா வேளை...? சந்திரமாலா கவலையுடனிருக்கிறாள்... உங்களை நம்பி அவளை இனி எப்படி அனுப்புவது...?" என்றாள்.

"நான் ஒன்றுமே செய்துவிடமாட்டேன் பாட்டி! அந்தப் பிட்சுவுக்கு ரொம்ப நாளாகச் சந்திரமாலாவின் மீது ஒரு கண்" என்றான் வல்லபன்.

"உனக்கு முன்பே தெரிந்தும் ஏன் சொல்லவில்லை...?" சந்திரமாலா சீறினாள்.

"என்னவென்று சொல்வேன்; அந்தப் பிட்சு சாதாரணமாக என்னிடம் பேசுவார். ஏன் இப்படி அழகாக இவள் பிறந்துவிட்டாள்? ஏன் அற்புதமாக நாட்டிய மாடுகிறாள் என்று. அதனால் அந்தப் பிட்சு எங்கள் கூத்து நடக்குமிடமெங்கும் வருவார்..."

"வருவாரா? அதை ஏன் முன்பே சொல்லவில்லை?" சந்திரமாலா மீண்டும் சீறினாள்.

"பிட்சு மட்டுமா வருவார்... இவள் நடனத்தை ரசிக்க காபாலிகர்களும் வருவார்கள்..." என்று வல்லபன் கூறினான்.

சந்திரமாலா மௌனமானாள். பிறகு வல்லபனை நோக்கி, "வல்லபா, காபாலிகர்கள் என் நாட்டியத்தைக் காண ஏன் வருகிறார்கள்?" என்று கேட்டாள்.

"ஏன் வருகிறார்களா? நாட்டியத்தின் மீது ஆசை..." வல்லபன் சிரித்தான்.

சந்திரமாலா மீண்டும் ஏதோ சிந்திக்கலானாள். அவள் சிந்தனையை வல்லபன் கலைத்தான்.

"இப்படியே நீ உட்கார்ந்திருந்தால் எப்படி? இன்று பொழுதுடன் புறப்பட்டுவிட வேண்டும். இன்றும் நாம் போகாமல் ஏமாற்றிவிடக்கூடாது" என்றான் வல்லபன்.

"நான் வரவில்லை. இனிமேல் வரப்போவதே இல்லை" சந்திரமாலா அழுந்தந் திருத்தமாகக் கூறினாள்.

வல்லபன் திடுக்கிட்டான். சந்திரமாலாவுக்கு என்ன வந்துவிட்டது? சிறிது நேரம் அங்கே யாரும் பேசவில்லை.

"சரி... சரி... சூடாக கம்பு அடையை எடுத்துக்கொள்" என்றாள் முத்தம்மாள். வல்லபன் சிரித்தான்... "எனக்கும் உண்டல்லவா? பசிக்கிறது" என்றான்.



முத்தம்மாள் மற்றொரு தட்டில் அடையைக் கொண்டு வந்தாள். "நீயும் எடுத்துக்கொண்டு அவளையும் உண்ணச் சொல்" என்றாள்.

அதைக் காதில் போட்டுக் கொள்ளாமலேயே, "சந்திரமாலாவுக்கு என்ன கோபம்?" என்று முத்தம்மாளைக் கேட்டான், வல்லபன்.

"எனக்குத் தெரியாது தம்பி! நீயே கேள்" என்று கூறிவிட்டு உடனே போய்விட்டாள் முத்தம்மாள்.

சந்திரமாலா எழுந்தாள். கிணற்றங்கரைக்குச் சென்று திரும்பி வந்தாள்.

"வல்லபா... இன்று மட்டும் நான் வருகிறேன்; இனி நாட்டிய நிகழ்ச்சியை ஏற்பாடு செய்யாதே" என்றாள்.

அவளுடைய மன மாறுதல் வல்லபனைத் திகைக்க வைத்தது. அவன் ஏதும் கேட்கவில்லை. ஆனால் சந்திரமாலவே கூறினாள்.

"வல்லபா, எனக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை. இந்தப் பல்லவ நாட்டை விட்டே எங்காவது போய்விடலாமா என்று நினைக்கிறேன்..." என்றாள்.

வல்லபன் சிரித்தான். "இந்தக் கிராமம், கடற்கரை, இந்த வீடு இவற்றைவிட்டு வரமாட்டேன் என்று சொல்வாயே, இப்போது ஏன் மனமாற்றம்...?" என்று கேட்டான்.

"எல்லாம் பிறகு சொல்லுகிறேன்... நீ வண்டியைச் சீக்கிரம் கொண்டு வந்துவிடு..." என்றாள்.

திருவிடவெந்தையில் கூத்தை முடித்துக்கொண்டு இரவு திரும்பி வந்த சந்திரமாலாவை முத்தம்மாள் வரவேற்று, "இன்று ஒன்றும் பயமில்லையோ" என்றாள்.

"இன்றுமில்லை, என்றுமே இல்லை" என்று கூறி சந்திரமாலா உள்ளே நுழைந்தாள். அவள் கையில் ஒரு மூட்டையிருந்தது.

மறுநாள் முத்தம்மாள் தன் வீட்டிலிருந்து சந்திரமாலாவின் வீட்டிற்குள் நுழையும்போது தாழ்வாரத்தில் காபாலிகை ஒருத்தி நிற்பதைப் பார்த்தாள்.

"ஏய்.. வீட்டிற்குள்ளேயே வர ஆரம்பித்து விட்டாயா?" என்று அதட்டினாள் முத்தம்மாள்.

காபாலிகை திரும்பவில்லை.

"சொல்கிறேன், பேசாமல் நிற்கிறாயே..? போ வெளியே" என்று மீண்டும் கூவினாள் முத்தம்மாள்.

காபாலிகை திரும்பிச் சிரித்தாள். சந்திரமாலா காபாலிகை வேடத்தில் நின்று கொண்டிருந்தாள்.

"நீயா? இதென்ன வேஷம்?" என்று வியப்புடன் கேட்டாள் முத்தம்மாள்.

"வேஷமில்லை பாட்டி; இனி கொஞ்ச நாள்கள் காபாலிகையாகவே இருக்கப்போகிறேன். சுற்றப் போகிறேன்... திரியப் போகிறேன்... அதோ பாருங்கள்..." என்றாள்.

வல்லபன் காபாலிகன் வேடத்தில் உள்ளே நுழைந்தான். முத்தம்மாள் வியப்புடன் பார்த்தாள்.

"இருவரும் எதற்காக இந்த வேடத்தைப் போட்டுக் கொண்டிருக்கிறீர்கள்?" முத்தம்மாள் கேட்டாள்.

"பாட்டி, ஒரு பயங்கரமான காரியத்திற்காக நாங்கள் காபாலிகர்களாக மாறிவிட்டோம்" என்றான் வல்லபன்.



"பாட்டி பயங்கரமான செய்தி. நேற்று என்னைக் காப்பாற்றிய அந்த வாலிபரைக் காபாலிகர்கள் கடத்திச் சென்றுவிட்டார்களாம்" என்றாள் சந்திரமாலா.

"காபாலிகர்கள் கடத்திச் சென்று விட்டார்களா? எதற்காக...?" முத்தம்மாள் திடுக்கிட்டுக் கேட்டாள்.

"அதைக் கண்டு பிடிக்கத்தான் செல்கிறோம்".

"நீ கண்டு பிடிக்கப் போகிறாயா? உனக்கு எதற்கு இந்த வம்பெல்லாம்... யாரையோ எதிர்பார்த்துக் கடற்கரையில் காத்திருப்பதாகச் சொன்னாய்... இப்போது காபாலிகர்களிடமிருந்து அந்த இளைஞனை மீட்கப் போவதாகச் சொல்கிறாய். எனக்கு ஒன்றுமே புரியவில்லையே? இப்போது எனக்குப் பயமாக இருக்கிறது" என்றாள் முத்தம்மாள்.

சந்திரமாலாவும், வல்லபனும் சாலை வழியே சென்று குறுக்குப் பாதையருகே சற்று நின்றனர்.

"உனக்குத் தெரியுமா வல்லபா, இங்கேதான் அவர்கள் இருக்கிறாரக்ள் என்று?" சந்திரமாலா கேட்டாள்.

"நன்றாகத் தெரியும்? ஆனால் அதற்குள் அவர்கள் அந்த இடத்திலிருந்துப் புறப்பட்டு விடாமலிருக்க வேண்டும்" வல்லபன் கூறினான்.

"உனக்கு எப்படித் தெரியும்?" சந்திரமாலா கேட்டாள்.

"நான் நேற்று இரவு காபாலிகனைச் சந்தித்தேன். அவனிடம் பேச்சுக் கொடுத்தபோது சொன்னான்" என்று கூறிய வல்லபன், "அதெல்லாம் சரி... எதற்காக நீ அவனைக் கண்டுபிடிப்பதில் அக்கறை காட்டுகிறாய்?... அது உயிரையே பணயம் வைப்பது போலாகும் தெரியுமா?" என்று எச்சரித்தான்.

"உம், உயிரா?... என் உயிரை நேற்றுக் காப்பாற்றியவர் அவர். உயிரைவிட மானத்தைக் காப்பாற்றினார். அவர் உயிரை நான் காப்பாற்ற வேண்டாமா?"

"அந்த வாலிபனின் உயிருக்கு ஆபத்து என்று உனக்கு எப்படித் தெரியும்?"

"பிறகு ஏன் அவரைத் தூக்கிச் சென்றார்கள்?" என்று கூறிய சந்திரமாலா பேச்சை நிறுத்தி, வல்லபனை அழைத்து "அதோ பார்! கூட்டங் கூட்டமாகக் காபாலிகர்கள் செல்கிறார்கள்..." என்றாள்.

வல்லபனும், சந்திரமாலாவும் காபாலிகர்களை நோக்கிச் சென்றனர்.

மாலைக் கதிரவன் தனது பயணத்தை முடித்துக் கொள்வதற்கு மிக வேகமாக மேல் திசையில் இறங்கிக் கொண்டிருந்தான்.

இருள் சூழும் நேரத்திற்குத்தான் அந்த இடத்தை அடைய முடிந்தது.

கைகால்கள் கட்டப்பட்ட நிலையில் குமாரதேவன் கிடந்தான்.

காபாலிகர்கள் ஆங்காங்கே உட்கார்ந்திருந்தனர். சந்திரமாலாவும், வல்லபனும் அவர்களுடன் சேராமல் சற்று மறைவாக நின்று கொண்டிருந்தனர்.

"அவன்தானே நேற்று உன்னைக் காப்பாற்றியவன்?" என்று வல்லபன் கேட்டான்.

"ஆமாம்... ஏன் அவரைக் கட்டிப் போட்டிருக்கிறார்கள்?" சந்திரமாலா கேட்டாள்.

"அதைக் கண்டுபிடிக்கத்தானே நாம் வந்திருக்கிறோம்" என்றான் வல்லபன்.



"அவரிருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து விட்டோம். ஆனால் அவருக்கு ஆபத்து ஏற்படுவதற்கு முன்பு அவரை எப்படியாவது காப்பாற்றிவிட வேண்டும்... நீ உடனே இங்கிருந்து திருக்கழுக்குன்றத்திற்குச் சென்று அதிகாரிகளிடம் சொல்லிவிடுகிறாயா?" என்று பரபரப்புடன் கேட்டாள்.

"நல்ல யோசனைதான். நான் எவ்வளவு வேகமாகச் சென்றாலும் பொழுது விடிவதற்குள்தான் போய்ச்சேர முடியும். வீரர்கள் வருவதற்கு விடிந்து ஒரு நாழிகை ஆகிவிடும். இப்போதே போகிறேன்" என்று கூறி வல்லபன் புறப்பட்டான். சந்திரமாலா தனியே விடப்பட்டாள். அவளை அடையாளம் கண்டுகொண்டால் ஆபத்துதான். சந்திரமாலா மறைவிடத்தில் பதுங்கிக்கொண்டாள்.

தீவர்த்தி ஏற்றப்பட்டது. வாத்தியங்கள் முழங்கின. தீ எரிந்து கொண்டிருந்தது. அதன் மீது பெரும் அண்டா. ஆவி வந்து கொண்டிருக்கும் அந்தப் பாத்திரத்திலிருந்து காபாலிகன் ஒருவன் ஒவ்வொருவருக்கும் ஏதோ முகர்ந்து ஊற்றிக் கொண்டிருந்தான். பிறகு மது வழங்கப்பட்டது. ஒவ்வொருவரும் கபால பாத்திரத்திலிருந்து மதுவை உறிஞ்சிக் குடித்தனர்.

நேரமாக ஆக அவர்கள் தங்களை மறந்து ஆடத் தொடங்கினர். யாரோ பாடினார்கள். சுடலையில் சிவபெருமான் ஆடுவதைப் பற்றிப் பாடினார்கள். பாட்டுக்கேற்பத் தாளம் முழங்கியது.

நேரம் ஆகிக் கொண்டிருந்தது. நடுநிசியையும் தாண்டியிருக்கலாம். குமாரதேவன் அப்படியே உறங்கிக் கொண்டிருந்தான். சந்திரமாலாவுக்குத் தூக்கம் கண்களைச் சுழற்றியது. தூங்காமல் விழித்திருக்க முயன்றாள். ஆனால் பகலெல்லாம் நடந்து வந்த களைப்பு அவள் விழிகளைத் தாக்கியது. தலை சுற்றியது. இருந்த இடத்திலேயே மரத்தின்மீது சாய்ந்துகொண்டு தூங்கிவிட்டாள்.

பொழுது விடிந்து வெகுநேரம் ஆகியிருக்கவேண்டும். "சந்திரமாலா, சந்திரமாலா!" என்ற குரல் கேட்டு திடுக்கிட்டு விழித்தாள் அவள்.

வல்லபன் நின்று கொண்டிருந்தான். அவன் அருகே ஏழெட்டு வீரர்கள்.

"அவர்கள் எல்லாம் எங்கே?" என்று பரபரப்புடன் கேட்டான் வல்லபன்.

கண்களைக் கசக்கிக்கொண்டு சந்திரமாலா சுற்று முற்றும் பார்த்தாள்.

நேற்று இரவு ஆட்டமும் பாட்டுமாக இருந்த இடம் வெறிச்சோடிக் கிடந்தது. கருகிய தீவர்த்தி புகைந்து கொண்டிருந்தது. ஏழெட்டு மண்டை ஓடுகள் சிதறிக் கிடந்தன. சூலாயுதம் ஒன்று மண்ணில் கிடந்தது.

"எங்கே அவர்கள்?" என்று காவல் தலைவன் கேட்டான்.

"இரவெல்லாம் கும்மாளவிட்டுக் கொண்டு இங்கே தானிருந்தார்கள்..." என்றாள் சந்திரமாலா.

"தப்பிவிட்டார்கள். குமாரதேவனை நரபலியிட முடிவு செய்திருப்பதாகத் தகவல் வந்தது. எங்கோ கொண்டு சென்றுவிட்டார்கள். கண்டுபிடிக்காமல் திரும்பக்கூடாது" என்றான் காவல் தலைவன்.

"நானும் வருகிறேன்..." என்றாள் சந்திரமாலா.

"வேண்டாம். நீ உன் வீட்டிற்குப் போகலாம். நாங்கள் கண்டுபிடித்து விடுகிறோம்" என்றான் தலைவன். வல்லபன் மட்டும் அவர்களுடன் சென்றான்.



சந்திரமாலா சோர்ந்த உள்ளத்துடனும், களைப்படைந்த உடலுடனும் தள்ளாடித் தள்ளாடித் தன் கிராமத்தை நோக்கி நடந்தாள்.

உச்சி வேளைக்குப் பிறகு கிராமத்தை அடையும்போது தன் வீட்டு வாயிலில் இரண்டு குதிரைகள் கட்டப் பட்டிருப்பதைக் கண்டாள்.

வீட்டிற்குள்ளே நுழைந்தபோது முத்தமாளுடன் இருவர் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டாள்.

"ஆ! நீங்களா?" என்று தன்னையறியாமல் கூவிவிட்டாள் சந்திரமாலா.

## அத்தியாயம் - 7

# கலைக்கு ஒரு சோதனை

அஜந்தாக் குகைக்கருகே வல்லியின் மகள் ஒயிலாக நடந்து செல்வதைப் பார்த்தவாறு சிறிது நேரம் நின்ற குமாரதேவன் அவளைத் தொடர்ந்து வேகமாகச் சென்றான்.

தன்னைக் காஞ்சிபுரத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்று கையடிக்கச் சொல்கிறாள். இதற்கு எதற்குச் சத்தியம்? பழகிச் சிறிதநேரம்கூட ஆகவில்லை. இதற்குள் உறுதி கேட்கிறாளே, எப்படி உறுதி கொடுக்க முடியும்.

"சற்று நில். போய்க்கொண்டே இருக்கிறாயே" என்று அவள் அருகே சென்று நின்றான்.

அவள் திரும்பிப் பார்த்தாள். "போகாமல் என்ன செய்வது? அம்மா தேடுவாள்" என்றாள்.

"நீ தானே என்னை இங்கே அழைத்து வந்தாய்...?" என்றான் குமாரதேவன்.

"அதனால் என்ன... அங்கே நின்றிருந்தால் என் தந்தைக்குக் கோபம் வந்திருக்கும்" என்றாள் வல்லியின் மகள்.

"உன் தந்தைக்குப் பல்லவ நாட்டைக் கண்டாலே ஏன் பிடிக்கவில்லை?" என்று கேட்டான் குமாரதேவன்.

அவள் பெருமூச்சு விட்டாள். பெருமூச்சு இதயத்தையே வெளிக்கொணர்வதுபோல விம்மித் தணிந்தது.

"தந்தையின் கோபம் நியாயமானது. அவர் பிறவிக் கலைஞர். அவர் பிறந்து வளர்ந்தது தொண்டை மண்டலத்தில். பிறந்த நாட்டில் மதிப்பில்லையென்றால், கோபம்வராமல் என்ன செய்யும்?" அவள் குரலில் கோபம் பொங்கியது.

"ஆச்சரியமாயிருக்கிறதே! பல்லவ நாட்டில் ஓவியருக்கு மதிப்பில்லையா?" குமாரதேவன் வியப்புடன் கேட்டான்.

"உண்மைதான். ஆனால் அது ஒரு பெரிய கதை" வரவேற்பு இல்லாததால் சாளுக்கிய மன்னருடன் நாங்கள் புறப்பட்டு விட்டோம்".

அவள் குரலில் உற்சாகம் இருந்தது.

"ஓகோ... பல்லவரைவிடச் சாளுக்கியர் கலை அறிவு மிக்கவர்களோ?"

"ஆமாம், அஜந்தா ஒன்றே சாட்சி கூறுமே!"

அவள் கூறியதற்கு அவனால் மறுமொழி ஏதும் கூற முடியவில்லை. 'ஏதோ தவறு நடந்திருக்க வேண்டும். அதனால்தான் ஓவியர் கோபித்துக்கொண்டு வந்துவிட்டார் என்று முடிவு செய்த குமாரதேவன், பேச்சை மாற்ற விரும்பி, "உன் தந்தைக்குத் தவறு இழைத்திருக்கலாம். ஆனால், எங்கள்



இளவரசர் கலை ரசிகர். அவர் பல்லவ நாட்டில் பெரும் ஓவியக்கூடம் அமைக்க விரும்புகிறார். அதற்கு உன் தந்தையின் உதவி தேவை" என்றான்.

"இளவரசரின் பெயர் என்னவோ?" என்று அவள் கேட்டாள்.

"நரசிம்மவர்மர், அவர்தான் என்னை இங்கே அனுப்பினார். அஜந்தா ஓவியங்களைக் காணும் பாக்கியமும் எனக்குக் கிடைத்தது. உன்னைச் சந்திக்கும் அதிர்ஷ்டமும் கிடைத்தது" என்றான் குமாரதேவன்.

அவள் முகம் நாணத்தால் சிவந்தது.

"உங்களுக்குச் சித்திரம் வரையத் தெரியுமா?" என்று அவள் கேட்டாள்.

"எனக்குத் தெரியும். எங்கள் இளவரசருக்கும் தெரியும்" என்றான் குமாரதேவன்.

அவள் சிறிது மௌனமாக இருந்தாள். அவள் விழிகள் திடீரென மலர்ந்தன. முகத்தில் எதையோ புதுமையாகக் கண்டுவிட்டதைப் போன்ற மகிழ்ச்சி.

"உங்கள் இளவரசருக்கு உண்மையிலேயே கலை ஆர்வம் உண்டு என்று சத்தியம் செய்வீர்களா?" என்று கேட்டாள்.

முதலில் கேட்ட உறுதிப்பாட்டைவிட இது எவ்வளவோ தேவலை. உள்ளதை உறுதிப்படுத்துவதில் என்ன தவறு?

"எங்கள் இளவரசர் இந்த உலகத்திற்கே கலைச் சக்கரவர்த்தியாகப் போகிறார். பல்லவ நாட்டிலுள்ள ஒவ்வொரு கோயிலும் வண்ணச் சித்திரத்துடன் காட்சியளிக்கப்போகிறது. அழியாத வண்ணங்களின்

ரகசியத்தை அறியத்தான் நான் இங்கு வந்தேன்" என்றான் குமாரதேவன்.

"உங்கள் இளவரசரும் வரப்போவதாகச் கூறினீர்களே?"

"ஆமாம். அவரும் வந்து விடுவார். அதற்குள் நான் அஜந்தா ஓவியங்களைப் பார்த்துவிட வேண்டும்; வண்ண ரகசியங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும்"

குமாரதேவனின் பரபரப்பான பேச்சைக்கேட்டு அவள் சிரித்தாள்.

"எல்லாவற்றிற்கும் ரொம்ப அவசரம்!" என்றாள்.

"ஆமாம்! காலம் பொன்போன்றது. போனாலும் வராது" என்றான் குமாரதேவன்.

"ஆபத்தான சூழ்நிலையில் காலத்திற்கும் அழிவு ஏற்பட்டுவிடும். சாளுக்கிய வீரர்கள் உங்களைப் பார்த்துவிட்டால் என்ன செய்வார்கள் தெரியுமா" என்று கேட்கும்போது முகத்தில் பீதி பரவியிருந்தது.

குமாரதேவன் சர்வசாதாரணமாகக் கேட்டான். "என்ன செய்வார்கள்?"

"உடலைக் கண்ட துண்டமாக வெட்டிக் கழுகுக்கு எறிந்துவிடுவார்கள்".

"செய்யட்டுமே! என்னுடைய ஒவ்வொரு அங்கமும் ஓராயிரம் வீரர்களாக மாறிச் சாளுக்கிய நாட்டைத் தாக்கும். எங்கள் இளவரசரின் பாட்டனார் பெயரும் நரசிம்ம வர்மன்தான். அவர், வாதாபியை எரித்ததுபோல் பல்லவ வீரர்கள் சாளுக்கிய நாட்டைச் சர்வநாசமாக்கி விடுவார்கள்".

"வாதாபி எரியட்டும்; சாளுக்கியர்கள் சர்வநாசமாகட்டும். எனக்கும் கவலையில்லை. உங்களையல்லவா கண்டதுண்டமாக்கி விடுவார்கள்..." அவள் குரலில் கவலையிருந்தது.



குமாரதேவனுக்கு வியப்பு ஏற்பட்டது. "நான் சித்தரவதை செய்யப்பட்டால் உனக்கு என்ன கவலை. ஒரு சித்திரத்தைப் பார்க்க, வரைவதைக் கற்க உதவமாட்டேன் என்பவளுக்கு நான் சித்திரவதைக்கு உள்ளாவதில் என்ன கவலை?".

அவள் தன் விழியால் கோபமாக அவனைப் பார்த்தாள். கோபத்திலும் கருணை கலந்திருந்தது. அவளுக்கு அவன் மீது கவலை ஏற்பட்டுவிட்டது என்பதை எவ்வாறு எடுத்துச் சொல்வாள். எடுத்துச் சொல்வதற்கு ஏற்ற பக்குவம் வரவில்லையா? இதயத்தினின்று வார்த்தைகள் வெளிவர மறுக்கின்றனவா? "ஐயா, ஓவியரே! தங்களை எவ்வாறு அழைப்பது? ஓவியர் என்றா? வீரர் என்றா? எப்படி?" அவள் கேட்டாள்.

"என் பெயர் குமாரதேவன். அப்படியே அழைக்கலாம். உன் பெயர்...?" குமாரதேவன் குரலில் குழைவு இருந்தது

"என் பெயரை இன்னும் நீங்கள் தெரிந்து கொள்ளவில்லையா? என் பெயர் சந்திரமாலா..."

"ஆகா! அழகான பெயர்... சந்திரனின் குளிர்க்கிரணங்களை மாலையாக அணிந்தால் எவ்வளவு அழகாக இருக்கும். சந்திரனுடைய அழகுக்கு உன் முகத்தை ஒப்பிடலாம். உன் முகத்து இரு விழிகளை, இதழ்களை, நாசியை, புருவத்தைச் சந்திரனில் தென்படும் உருவத்துக்கு ஒப்பிடலாம்."

"உம். கவிஞரோ நீங்கள்?"

"கவிஞர், ஓவியர், வீரர், எல்லாம்தான். ஆனால் இப்போது நான் ஒரு யாசகன். அஜந்தா ஓவியங்களைச்

காணத் துடித்து அதற்கு வழிகேட்டு வேண்டி நிற்கும் யாசகன்..."

சந்திரமாலா பருத்தி வெடிப்பதுபோல் வெண் பற்கள் தெரியச் சிரித்தாள். "அப்படியெல்லாம் சொல்லிக் கொள்ளாதீர்கள். நான்தான் முதலிலேயே கேட்டேனே எனக்குச் சத்தியம் செய்து தந்தால் தங்களுக்கு வழிகாட்டுகிறேன் என்று."

"என்ன கேட்டாய்?"

"காஞ்சிக்கு என்னை அழைத்துச் செல்லுமாறு..."

"காஞ்சியில் யார் இருக்கிறார்கள்?"

"யார் இருக்கிறார்களா? கலைஞர்கள் இருக்கிறார்கள். எனக்கு இந்தக் காடு அலுத்துவிட்டது. காட்டைவிட அத்தப் பிட்சுவின் கடுகடுப்பு முகம் அலுத்துவிட்டது..."

"பிட்சுவா...? இங்கே புத்த பிட்சு இருக்கிறாரா?"

"நிறைய இருந்தார்கள். இப்போது அவர்கள் வாதாபிக்குச் சென்றுவிட்டார்கள். அந்த கருங்குரங்கு மட்டும் மாதம் ஒரு தடவை வரும்".

"எனக்குச் சிரிப்பு வருகிறது. இப்படி நீ கருங்குரங்கை அவமதிப்பது எனக்குப் பிடிக்கவில்லை!"

சந்திரமாலா களுக்கென்று சிரித்துவிட்டாள். அவனையே சிறிது நேரம் விழி எடுக்காமல் பார்த்து நின்ற அவள் மறு கணமே பரபரப்புடன், "ஐயோ... என்னை அம்மா தேடுவாள், நான் போகிறேன்..." என்றாள்.

"என் வேண்டுகோளுக்கு விடைகூறாமல் போகிறாய்?"

"என் கோரிக்கைக்கு நீங்கள் முடிவு சொல்லவில்லையே..."



"காஞ்சிக்கு உன்னை எப்படி அழைத்துச் செல்ல முடியும்? நான் எப்பொழுது காஞ்சிக்குத் திரும்புவேன் என்பதைச் சொல்ல முடியாது".

"நீங்கள் எப்பொழுது சென்றாலும் அப்பொழுது அழைத்துச் செல்லுங்கள்... நான் காத்திருக்கிறேன்..."

"விஷப் பரீட்சை. நான் முள்ளிலும் நடப்பேன். கல்லிலும் போவேன். குதிரை ஏறிப்போக... உன்னால் முடியுமா?"

"முடியும் எனும் துணிவு உள்ளத்தில் இருக்கிறது. உங்களுக்கு விருப்பம் இருந்தால்..."

அவர்களிருவரிடையேயும் சிறிது நேரம் மௌனம் நிலவியது. எங்கிருந்தோ, "சந்திரமாலா... சந்திரமாலா..." என்றழைக்கும் குரல் கேட்டது.

காட்டு மரங்களிடையே அந்தக்குரல் தவழ்ந்து வந்தது. பறவை இனங்களின் இனிய குரலுக்கு இணையாக அது பறந்து வந்தது.

"அம்மா கூப்பிடுகிறார்கள்... கோபிப்பாள். நான் போய் வருகிறேன்" என்று சந்திரமாலா பரபரப்புடன் கூறிச் செல்ல முயன்றாள்.

"சென்று நல்ல முடிவுடன் வருகிறாயா?" குமாரதேவன் அவளுடன் நடந்தான்.

"என் முடிவு உங்களிடமிருக்கிறது!"

"சந்திரமாலா, சந்திரமாலா! அஜந்தா ஓவியங்களைக் கண்டு கற்பதைவிட உன்னைக் காஞ்சிக்கு அழைத்துச் செல்வதில் கஷ்டமிருக்கிறது".

"கஷ்டப்பட்டால்தான் கலையைக் கற்கலாம்".

குமாரதேவனும் சந்திரமாலாவும் சிறிது தூரம் மௌனமாக நடந்தார்கள். இணைந்து நடக்கும்போது ஏற்பட்ட நெருக்கம் இருவருக்கும் புத்துணர்ச்சியை ஏற்படுத்தியது. வழியில் குறுக்கே படர்ந்திருந்த கொடியொன்றை விலக்கும்போது இருவர் கரங்களும் துரிதமாக இயங்கின. அதனால் இரண்டும் இணைந்தன.

ஒரு கணம் இருவரும் நின்றனர். விழிகள் சந்தித்துக் கொண்டன.

குமாரதேவன் சந்திரமாலாவின் வலது கரத்தை எடுத்துத் தனது கரங்களால் அழுத்தி, "காஞ்சிக்கு அழைத்துச் செல்கிறேன்" என்றான்.

அந்த வார்த்தைகள் சந்திரமாலாவின் செவியில் அமுத அருவியாகப் பாய்ந்தன.

"இன்று மாலைக்குள் நான் என் தந்தையின் மனதை மாற்றி விடுவேன், நீங்கள் இங்கேயே இருங்கள்".

"இங்கேயா! பொழுது போகாதே. உன்னை எதிர் பார்த்து ஏங்கி நிற்பேனே!"

சந்திரமாலாவின் விழிகள் விரிந்தன. "ஏக்கமா?" என்று அவள் உதடுகள் முணுமுணுத்தன.

"உன்னிடமிருந்து நல்ல முடிவை எதிர்பார்த்து ஏங்கி நிற்பேன்" என்று குமாரதேவன் கூறினான்.

சந்திரமாலா பெருமூச்சுவிட்டாள். பருவத்தின் சின்னம் இன்னும் பிரபலமாக நிமிர்ந்துக் காட்சியளித்தது.

ஒரு நாழிகை நேரத்தில் சந்திரமாலா திரும்பி வந்துவிட்டாள். வரும்போது கையில் உணவு எடுத்து வந்தாள்.

"பசியோடு இருக்கிறீர்களல்லவா, எடுத்துக் கொள்ளுங்கள்" என்று அவன் அருகே உட்கார்ந்தாள்.



"போன காரியம் காயா பழமா?" குமாரதேவன் ஆவலுடன் கேட்டான்.

"காய் - பழம்" என்று கூறி நகைத்தாள் சந்திரமாலா.

"அப்படியென்றால்!" கவலையுடன் கேட்டான் குமாரதேவன்.

"காய்க்குப் பிறகுதானே பழம்" என்றாள் சந்திரமாலா. பிறகு, "கவலைப்படாதீர்கள் என் தந்தையிடம் அனுமதி பெற்றுவிட்டேன். தங்களை அழைத்து வரச் சொன்னார். தன்னிடம் உதவியாளராகத் தங்களை நியமித்துக் கொள்ள ஒப்புக் கொண்டார். ஆனால் ஒரு நிபந்தனை" என்று கூறினாள்.

அவன் கவனிக்கவில்லை. துள்ளி எழுந்தான்.

"இப்போதே போவோம். எந்த நிபந்தனைக்கும் ஒப்புக் கொள்ளச் சித்தமா இருக்கிறேன்".

"உம். உணவருந்திவிட்டுப் போகலாம். இனி இரவு கஞ்சிதான் ஆகாரம்" என்று கூறி அவனை உட்கார வைத்தாள்.

ஆகா, அந்தக் கரத்திற்குத்தான் என்ன மாய சக்தி! கரங்கள் அன்னத்தின் தூவியால் ஆக்கப்பட்டனவா? இமயத்துப் பனியின் துகள்களால் உருவாக்கப்பட்டனவா? பட்டு இழைகளால் பக்குவப்படுத்தப்பட்டனவா?

இதுபோன்ற மென்மை ஸ்பரிசத்தை இதுவரை அவன் உணர்ந்தவனல்லன். அவள் கொண்டு வந்திருந்த உணவை ஒரே வாயில் திணித்துக்கொண்டு புறப்பட ஆயத்தமானான். போகும்போதே இருவரும் பேசிக்கொண்டு சென்றனர். தந்தையிடம் மிகவும் சாமர்த்தியமாகத் தான் பேசியதைப் பற்றி அவள் விவரித்தாள். அவளுடைய சொல் திறமையைக் கண்டு குமாரதேவன் வியப்படைந்தான். அவளுடைய

அங்கங்கள் ஒவ்வொன்றும் பாவ உணர்ச்சியைப் பிரதிபலிப்பனவாக அமைந்திருக்கும் அதிசியத்தை அவன் ரசித்தான்.

"என் தந்தைக்கு இந்தக் காட்டுப் பகுதியின்மீது வெறுப்பு ஏற்பட்டுவிட்டது. அதை நான் அறிந்து கொண்டேன். பல்லவ இளவரசர் வரப்போவதாக சொன்னீர்கள் அல்லவா?"

"ஆமாம்... இன்னும் சில நாள்களில் வந்து விடுவார்".

"அவர் வந்தவுடன் என் தந்தை அவரைக் கேட்கப் போகிறாராம், தன்னையும் காஞ்சிமா நகரம் அழைத்துச் செல்லுமாறு. இளவரசர் சம்மதிப்பாரல்லவா?"

'ஆகா... அதைவிடப் பெரும் பாக்கியம் வேறு வேண்டுமா?"

"அதுவரையில் நீங்கள் அவருக்கு உதவியாளராக இருந்து ஓவிய நுணுக்கங்களைக் கற்றுக்கொண்டுவிடுங்கள்".

"காஞ்சி செய்த பாக்கியம் ஓவியரும் அவரது மகளும் பல்லவ நாட்டிற்கு வரப்போவதில் இரட்டிப்பு மகிழ்ச்சி".

ஓவியர் சித்திரசேனர் குமாரதேவனை வரவேற்றார். காலையில் இருந்த கடுமை அவர் முகத்திலில்லை; சொல்லிலும் இல்லை. காஞ்சியைப் பற்றி விசாரித்தார்; பல்லவ சக்கரவர்த்திகளைப் பற்றி விசாரித்தார்.

"சாளுக்கியர்களின் படையெடுப்பால் பல்லவநாடும், மக்களும் சொல்லொணாத் துயருற்றிருப்பார்களல்லவா?" என்று ஓவியர் கேட்டார். மேலும் அவர் சொன்னார்: "போரினால் மக்கள் படும்பாடு சொல்லி முடியாது. அதனால் கலைக்குத்தான் துன்பம். தோற்றோடி வந்த சாளுக்கியர்கள் அஜந்தாவை மறந்துவிட்டார்கள். இன்னும் முடிவடைய வேண்டிய மண்டபங்கள் பல இருக்கின்றன. அவற்றைப் பூர்த்தி செய்ய முடியாது என்றே தோன்றுகிறது. கலைக்குரிய எனது பணியைப் பாதியில் விடக்கூடாதே என்ற கவலை எனக்கு...".



"ஐயா! நீங்கள் கவலைப்படாதீர்கள். பல்லவநாடு தங்களை ஆதரிக்கும். எங்கள் இளவரசர் கலைக்காகத் தம் உயிரையே விட்டுவிடுவார்" என்றான் குமாரதேவன். "உயிரை விட்டுவிட வேண்டாம். கலை வாழ அவர் நீண்ட நாள் வாழட்டும்..." என்று சித்திரசேனர் கூறி நகைத்தார்.

ஓவியக் கலையைப் பற்றி அவர் நீண்ட நேரம் பேசினார். கடைசியாக அவர், "உனக்குச் சித்திரத்தின் மீது இருக்கும் ஆர்வத்தைக் கண்டு மெச்சுகிறேன். பல்லவ நாட்டைச் சேர்ந்தவன் என்பது தெரியாமல் நீ இங்கே இருக்க வேண்டும். தெரிந்து விட்டால்..." என்று கூறிச் சற்று நிறுத்தினார்.

"உடலைத் துண்டு துண்டாக வெட்டி விடுவார்கள்".

"உன்னை மட்டுமல்ல... என்னையும்... என் மனைவியையும்... என் மகளையும்..."

ஓவியர் இப்படிக் கூறும்போது குமாரதேவன் நடு நடுங்கினான்.

"வேண்டாம் ஐயா... வேண்டாம். நான் இப்பொழுதே திரும்பிப் போய் விடுகிறேன். நான் உயிரிழக்க ஆயத்தமாக இருக்கிறேன். ஆனால், உங்கள் குடும்பத்தையே கூண்டோடு மேலுலகம் அனுப்பும் அந்தத் துர்ப்பாக்கியம் நேர வேண்டாம்..." என்று வேதனையுடன் கூறினான்.

"உம்... பயந்தால் முடியுமா? துணிவு இருந்தால் முடியாதது ஏதுமில்லை... நான் சொல்வதுபோல் நீ செய்ய முடியுமா?"

"கட்டளையிடுங்கள்..."

"புத்த பிட்சுவாக மாற வேண்டும்.. உன்னுடைய கருள் சுருளான முடியைப் பார்க்கும்போது அதை மழிக்கச் சொல்ல வேண்டுமே என்ற கவலை எனக்கு..."

"பிட்சுவாக மாறவேண்டும்; அவ்வளவுதானே. நாளையே தலையை மழித்து விடுகிறேன். காவி உடை அணிந்து விடுகிறேன். அப்போது மட்டும் கண்டுவிட மாட்டார்களா?"

"சந்தேகப்படமாட்டார்கள். உன்னைப்போன்ற இளம் பிட்சு எனக்கு உதவியாக இங்கே இருந்தார். அவர் சில நாள்களுக்கு முன்பே இங்கே ஓடும் அருவியில் தவறி விழுந்து இறந்துவிட்டார். அவர் வெளியூர் போயிருப்பதாகப் பலர் நினைக்கிறார்கள். நீ இளந் துறவியாக மாறிவிடு. இளம் மீசையையும் தாடியையும் எடுத்துவிடு. காவி உடை அணிந்துவிடு.. முடியுமா?"

"முடியாமல் என்ன? அஜந்தா ஓவியங்களைக் கற்க என்றென்றும் துறவியாகவே இருக்கிறேன்..." என்றான் குமாரதேவன். அவனுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியில் அவன் உடல் சிலிர்த்தது. அப்பொழுதே ஓவிய நுணுக்கங்களை அறிந்து விட்ட திருப்தி. அவன் விழிகள் சுழன்றன. சந்திரமாலாவும், அவள் தாய் நிருத்தியவல்லியும் அங்கே நின்று கொண்டிருந்தனர். தாயும் - மகளும் ஒரே அச்சில் வார்த்ததுபோல் தோன்றினர். சந்திரமாலாவின் முகத்தில் சோகம் நிறைந்திருந்தது. மகிழ்வுடன் காணப்பட வேண்டிய அவள் முகத்தில் ஏன் கவலையும் சோர்வும்?

சித்திரசேனன் தொடர்ந்து கூறினார்: "குமாரதேவா, குருகுல முறைப்படி இங்கே நீ ஓவியம் கற்க வேண்டும். தூய்மையான உள்ளமும், ஒழுக்கமும் மிகவும் முக்கியம்..." என்றார்.

"தூய்மையும் ஒழுக்கமும் எனது பெற்றோர்கள் கற்றுக் கொடுத்தவை.."



"ஓவியக்கலை சிருங்காரத்தின் மறு பிம்பம். கலைஞர்கள் உணர்ச்சிக்கு எளிதில் வயப்பட்டு விடுவார்கள்.."

"கட்டுப்பாடு எனக்குக் கை வந்த கலை."

"நான் மிகவும் கடுமையானவன். அதை நீ மீறினால் மறுநாளே நீ இங்கிருந்துப் போய்விடலாம்".

"கட்டளையிடுங்கள், எந்தவிதமான கட்டுப்பாடுடன் இருக்கவேண்டும் என்று..."

'குமாரதேவா.. சித்திரங்களுக்கு முன்மாதிரியாக என் மனைவிதான் துணை செய்கிறாள். எனக்கு ஒரு மகள் இருக்கிறாள். அறிவும் - அறியாமையும் ஒன்று சேரும் பருவம். அவளைக்கண்டு உன் மனம் சஞ்சலமடையலாம். மனக் குழப்பம் ஓவியத்திற்கு விரோதி. நீ இங்கிருக்கும்வரை என் மகளைச் சந்திக்கவே கூடாது. அப்படிச் செய்கிறேன் என்று உறுதியளித்தால் நீ நாளை முதல் மாணவனாகலாம்..." என்றார்.

குமாரதேவனின் எதிரேயிருந்த ஓவியர் மறைந்தார். அஜந்தா குகைகள் மறைந்தன. சந்திரமாலா மறைந்தாள். அவளுடைய தாய் மறைந்தாள். என்ன கடுமையான பரீட்சை. "உம்; சந்திரமாலவைக் காணவா இங்கு வந்தோம். நமது பணி முடியும்வரை அவளை மறந்துவிட்டால் போகிறது. எப்படி முடியும்? சிறிது நேரத்திலேயே அவள் உருவம் இதயத்தில் பதிந்துவிட்டதே!"

'குமாரதேவா.. இன்று இரவுவரை உனக்கு அவகாசம் தருகிறேன். இந்தக் கட்டுப்பாடுகளை ஏற்றால் நாளை என்னிடம் வா. இல்லாவிட்டால் வந்த வழியே திரும்பிச் சென்றுவிடு..." என்று சித்திரசேனர் கூறினார்.

குமாரதேவன் இரவெல்லாம் உறங்கவில்லை. சந்திரமாலா அவன் அருகே உட்கார்ந்திருந்தாள்.

"நான் ஒன்று சொல்கிறேன் கேட்கிறீர்களா? என்னைச் சந்திக்காமல் தங்களால் இங்கே இருக்க முடியாது. என்னாலும் முடியாது. அதனால் நாமிருவரும் நாளையே காஞ்சிக்குப் புறப்பட்டுச் சென்றுவிடுவோம்... அஜந்தா ஓவியங்களைப் பற்றி எனக்குத் தெரிந்ததைக் கற்றுத் தருகிறேன்...".

சந்திரமாலாவின் யோசனைக்குக் குமாரதேவன் மறுமொழி கூறவில்லை. சிந்தித்தான், சிந்தித்தான், இரவெல்லாம் சிந்தித்தான்.

மறுநாள் கீழ்வானில் கதிரவன் உதயமானான். குமாரதேவன் எழுந்தான். சித்திரசேனனின் கட்டளையை நிறைவேற்றப் போகிறானா அல்லது காஞ்சிக்குத் திரும்பிவிடப் போகிறானா?

## அத்தியாயம் - 8

# விரத பங்கம்

**த**ன் வீட்டு வாசலில் இரு குதிரைகள் நிற்பதைக் கண்ட சந்திரமாலா, யாரோ புதியவர்கள் வந்திருக்கிறார்கள் என்பதை உணர்ந்தாள். காபாலிகை வேடத்துடன் அங்கே செல்லலாமா வேண்டாமா என்று யோசித்தாள்.

எல்லாமே வியப்பேற்படுத்தும் வகையில் நடைபெறுவதைக் காண அவளுக்கு ஒன்றும் விளங்கவில்லை. சற்றுப் பயமாகக்கூட இருந்தது. இனி அந்தக் கிராமத்தில் தனியே இருப்பது தகாது என்றும் நினைத்தாள்.



வீட்டிற்குள் நேரே நுழையாமல் வீட்டின் பின்புறமாகப் போய்க் கொல்லைப் புறக் கதவு வழியே உள்ளே வந்திருப்பவர்கள் யார் என்று கவனித்தாள்.

காபாலிகர்கள் நரபலி கொடுக்கக் கொண்டு சென்றனரே அதே குமாரதேவனைப் போன்ற தோற்றத்தில் ஓர் இளைஞன்; அவன் அருகே அதே வயதுடைய அழகிய தோற்றமுடைய மற்றொரு இளைஞன்; அவரது தோற்றத்தில் தனிவிதக் கம்பீரமிருந்தது. எளிமையான உடை அணிந்திருந்தாலும் முகத்திலே வீசும் ஒளியும் திரண்ட தோள்களும் ராஜகளையை அளித்தன. ஆம்; இளவரசர் நரசிம்மவர்மர்தான் அங்கே வந்திருந்தார்.

அவரருகே இருந்த இளைஞனை அவர் "குமாரதேவா" என்றுதான் அழைக்கிறார். அங்கே நடைபெற்ற முழு சம்பாஷணையும் சந்திரமாலாவுக்குத் தெரியாததால் அவள் குழம்பிய நிலையில் இருந்தாள்.

அவர்கள் பேசுவது அவள் காதில் தெளிவாக விழவில்லை. அதே காபாலிகை வேடத்தில் செல்லலாம் என்று எண்ணிய சந்திரமாலா, வாயிற்பக்கமாக வருவதற்குள் குதிரை மீதேறி இளவரசரும், அவருடன் வந்த இளைஞனும் புறப்பட்டுவிட்டனர்.

சந்திரமாலாவைக் கண்ட மூதாட்டி முத்தம்மா, "சந்திரமாலா, இதோ இப்பொழுதுதான் போகிறார்கள் இளவரசரும் குமாரதேவன் எனும் அவரது தோழரும். இந்த வீடு பெரும் பாக்கியம் செய்திருக்கிறது. இளவரசர் எதிர்பாராத விருந்தாளியாக வந்தார்; தக்கபடி உபசரிக்க முடியவில்லையே" என்று பரபரப்புடன் கூறினாள்.

"எதற்காக உபசரிப்பதாம்? இளவரசரது நாட்டில் சோறு கிடைப்பதே கஷ்டமாயிருக்கிறது. மானத்துடன் வாழ்வதும் இனி முடியாது போலிருக்கிறது. பாட்டி, நடந்தவற்றைச் சொன்னீர்களா?" என்று சந்திரமாலா

கோபத்துடன் கேட்டாள். ஆனாலும், இளவரசருடன் வந்திருப்பவரைப் பற்றி அறியும் ஆவல் அவளை உந்தியது. காபாலிகர்கள் கவர்ந்து சென்ற இளைஞனைப் போன்ற தோற்றமுடையவராய் விளங்கும் அந்த இளைஞனைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும் எனும் துடிப்பு அவளிடம் துள்ளியது.

"நடந்தவற்றையெல்லாம் சொல்லாமல் இருப்பேனா? உன்னைக் காப்பாற்றிய இளைஞனைத் தேடி நீ போயிருப்பதாகவும் கூறினேன்".

"அவர்கள் என்ன சொன்னார்கள்?"

"இளவரசரும் அந்த இளைஞரும் இப்போதுதான் அஜந்தாக் காடுகளிலிருந்துத் திரும்பி வருகிறார்களாம்!"

"அஜந்தாவிலிருந்தா..." என்று சந்திரமாலா பரபரப்புடன் கேட்டாள்.

"ஆமாம். சந்திரமாலா, உன்னைக் காண இளவரசர் விரும்பினார். மீண்டும் வருவதாகக் கூறிச் சென்றுள்ளார்" என்றாள் முத்தம்மாள்.

"பாட்டி..." என்று கூறி விம்மியவாறு முத்தம்மாளின் மார்பிலே தன் முகத்தை வைத்துக் குலுங்கிக் குலுங்கி அழுதாள் சந்திரமாலா.

"சந்திரமாலா, ஏன் அழுகிறாய்...?" என்ன நடந்து விட்டது.. ஏதோ மனத்திற்குள் புதைத்து வைத்திருப்பதை வெளியே சொல்லாமல் வேதனையடைகிறாய். எவ்வளவோ தடவை கேட்டுவிட்டேன். நடந்து போனவற்றை நீ சொல்லவுமில்லை. மனத்திலே உள்ளவற்றை யாரிடமாவது சொன்னால்தான் மனப்பாரம் குறையும்" என்றாள் முத்தம்மாள்.



தன் கதையை இப்பொழுது சொல்லிவிட்டால்தான் சற்று நிம்மதியாக இருக்கும் என சந்திரமாலாவுக்கும் தோன்றியது.

'பாட்டி, இளம் வயதிலேயே எனக்குச் சோதனை ஏற்பட்டுவிட்டது'' என்று தன் கதையைச் சொல்லத் தொடங்கினாள் சந்திரமாலா.

அஜந்தாக் காடுகளில் நடந்தவற்றைக் கூறினாள்.

சந்திரமாலாவின் தந்தை ஓவியர் சித்திரசேனர் குமாரதேவனிடம் கூறிவிட்டார். சந்திரமாலாவை இரண்டாண்டுகளுக்குச் சந்திக்கவோ பேசவோ கூடாது என்று. அப்படியிருந்தால் அஜந்தாவிலுள்ள சித்திரங்களின் நயத்தை அவரிடம் சீடராக இருந்துக் கற்கலாம். அதிலும் காவியுடை அணிந்து தலையை மழித்துக்கொண்டு இளம்பிட்சுவின் வடிவத்தில்தான் அவன் அவருக்குச் சீடராக விளங்க வேண்டும்.

சோதனை பயங்கரமானதுதான். கடுமையான அந்தச் சோதனையைப் பற்றிச் சந்திரமாலா தன் தந்தையிடம் வாதாடினாள். அதற்கு அவர் சொன்னார்:

"சந்திரமாலா, உன் வடிவழகைக் கண்டு மோகித்து என்னிடம் சீடராகப் பணிபுரியப் பல இளைஞர் வருவார்கள். கண்டதும் காதல் என்பதை ஏற்றுவிடக்கூடாது. உள்ளத்தின் மீது காதலா, உடலின்மீது காதலா என்பதைக் கண்டறியும் கடமை பெற்றோர்களுடையது. உள்ளத்தின் மீது ஏற்படும் காதலுக்கு என்றுமே அழிவு கிடையாது. நீங்கள் இருவரும் சந்திக்காமல் இருந்தும் பேசாமல் இருந்தும் அப்படியும் உங்கள் இருவர் இதயத்தில் அன்பு அழியாமல் இருந்தால் அது உன்னதமான காதல். நானே முன் நின்று உங்கள் திருமணத்தை நடத்திவிடுவேன். குமாரதேவன் பல்லவ நாட்டிலிருந்து வந்திருக்கிறான். பல்லவ இளவரசர் அவனை அனுப்பியுள்ளார். ஓவியம் கற்க வந்த இடத்தில் காதல்

வயப்பட்டு வந்த காரியத்தை மறந்துவிட்டால் கலைக்குப் பேரிழப்பு. கலைக்குச் சிறந்த தொண்டன் கிடைக்காமல் போவதை நான் விரும்பமாட்டேன். மேலும், உன் மனமும் இன்னும் பக்குவமடையட்டுமே. நீ இன்னும் எனக்குக் குழந்தைதானே அம்மா!"

தந்தையின் சொற்களை ஏற்காமல் இருக்கவும் முடியவில்லை. ஏற்கவும் முடியவில்லை. ஆனால் குமாரதேவன் அஜந்தா ஓவியங்களைக் கற்கவேண்டும் எனும் இலட்சியத்தை ஏற்று உடனே அழகான தன் கேசத்தை மழித்து ஆடைகளை மாற்றிக் காவியுடையணிந்து இளம் பிட்சுவைப்போல் மாறிவிட்டான். குனிந்த தலை நிமிராமல் சித்திரசேனருக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து கொண்டு கலையைக் கற்பதில் கவனம் செலுத்தலானான்.

சந்திரமாலாவுக்கு முதலில் சிறிது கஷ்டமாகத்தான் இருந்தது. அவளுடைய தாய் நிருத்தியவல்லி குகை மண்டபத்துக்குச் சென்றுவிடுவாள். தனிமை அவளை வாட்டி வதைக்கும். அருவிக்கரையின் அழகும், பூங்கொடிகளின் அசைவும், மான்களின் துள்ளலும் அவளுக்கு அலுப்பை ஏற்படுத்திவிட்டன.

"அம்மா, இரண்டு ஆண்டுகளுக்கு இன்னும் எவ்வளவு நாள்கள் பாக்கி?" என்று சந்திரமாலா தன் தாயைக் கேட்பாள்.

நிருத்தியவல்லி தன் மகளை அணைத்துக்கொண்டு "இன்னும் ஒரு வருடமும் முந்நூறு நாட்களும்" என்பாள்.

சந்திரமாலா பெருமூச்சு விடுவாள். அவள் முதுகை மெல்லத் தடவிக் கொடுத்துத் தாய் சொல்வாள்:

"உறுதியுடன் இருப்பது பெண்களுக்குக் கைவந்த கலை. அந்த வாலிபன் உறுதியுடனிருக்கிறான். கடுமையாய் உழைக்கிறான். கலையின் மீதுள்ள ஆர்வம் வரும் காலத்தில் அவன் மிகப் பெரிய ஓவியனாகிவிடுவான் என்பது



இப்பொழுதே புலப்படுகிறது. தெய்வ அருளிருந்தால் உனக்கு ஏற்ற மணாளன் அவன்தான்".

சந்திரமாலா இதயத்தைக் கல்லாக்கிக் கொள்ள முயன்றாள். உயர்ந்த மரங்களிடையே மனம்விட்டுப் பாடுவாள்.

மான் குட்டிகளை அணைத்துக்கொண்டு ஏதேதோ பேசுவாள். ஓடும் காட்டாற்றின் கரையில் அமர்ந்து குளிர்ந்த நீரைக் கையிலெடுத்து எங்கும் இரைப்பாள். பூக்களைப் பறித்து ஓடும் நீரில் வீசி அவை சுழன்று சுழன்று ஓடும் அழகைக் கண்டுக் குதூகலிப்பாள்.

"சந்திரமாலா இன்னும் எவ்வளவு நாள்கள் இருக்கின்றன என்று இப்பொழுதெல்லாம் ஏன் கேட்பதில்லை?" என்று நிருத்தியவல்லி தன் மகளைப் பார்த்துக் கேட்பாள்.

சந்திரமாலா பெருமூச்சுவிட்டு, "காலத்திற்குக் கால் நொண்டி. மெல்லச் செல்வதை அதன் போக்குப்படி விட்டுவிட வேண்டியதுதான்" என்றாள்.

"சந்திரமாலா, இன்னும் இருநூற்றைம்பது நாள்கள் இருக்கின்றன, உங்களுக்கிடப் பட்டிருக்கும் சோதனைக் காலம் முடிய" என்று தாய் கூறினாள்.

தாயை அணைத்துக் கொண்ட சந்திரமாலா, "அவர் எப்படி இருக்கிறாரம்மா?" என்று கேட்டாள்.

"இப்போதெல்லாம் அவர் கவலையுடனிருக்கிறார். அவரது உயிர் நண்பராம் பல்லவ நாட்டு இளவரசர் தானும் ஓவியம் கற்க வருவதாகக் கூறியவர் இதுவரை வரவில்லையாம்" என்றாள்.

சந்திரமாலா கலகலவென்று சிரித்தாள். "நல்லவேளை; என்னை நினைத்துக் கொண்டு கவலையுடனிருக்கிறாரோ

என்று பார்த்தேன். தந்தைக்குத் தெரிந்து மேலும் இரண்டு வருஷம் கட்டுப்பாடுடன் இருக்க வேண்டும் என்று சொல்லிவிட்டால்?' என்றாள்.

சந்திரமாலாவுக்கு இப்போதெல்லாம் புது உற்சாகம் பிறந்துவிட்டது. காட்டாற்றங்கரையில் காலத்தைக் கழிப்பதிலேயே கவனம் செலுத்தினாள். சிலீரென்று ஓடும் நீர் அவள் உடலுக்குப் புத்துணர்ச்சியை அளித்தது. காட்டாறு ஓரிடத்தில் மூன்று பாறைகளுக்கு நடுவே சற்று நின்று பிறகு பயணத்தைத் தொடர்ந்தது. அது ஒரு சிறு குளம்போல் காட்சியளித்தது. பாறையின்மீது தனது ஆடைகளைக் களைந்து வைத்துவிட்டு நீந்திக் குதூகலமாகக் குளிப்பதில் நேரம்போவதே அவளுக்குத் தெரியாது. காட்டுப் பகுதியில் வேற்று மனிதர் எவரும் வரமாட்டார்கள் என்ற துணிவு வேறு. உரத்த குரலில் பாடுவாள். நீரின்மேல் நடனமாட முடிந்தால்.... அற்புதமாக நடனமாடியே பொழுதைக் கழித்து விடலாமே என்று எண்ணுவாள். அவள் இதுபோல் நீராடுவதைப் பாறையின் மறைவிலிருந்து இளம் பிட்சுவின் கொடிய கண்கள் சில நாட்கள் பார்த்துக் கொண்டிருந்தன.

ஒருநாள்:

சந்திரமாலாவின் உள்ளுணர்வு திடீரென்று ஏதோ உணர்த்தியது. நிமிர்ந்து பார்த்தாள். பாறையின் மறைவில் யாரோ மறைவது போன்ற நிழலுருவம். காவியுடை மட்டும் தெரிந்தது.

சந்திரமாலா உடல் மெல்லச் சிலிர்த்தது. அவள் இதழ்களில் மெல்லிய முறுவல். பரபரப்புடன் எழுந்து ஆடைகளை அணிந்து வேகமாகக் குகைப்பகுதியை நோக்கிச் சென்றாள்.

இரண்டாண்டுகள் நிறைவேறியிருக்கும்; அதனால்தான் தன் அழகைப் பருக குமாரதேவன் தனியாக வருகிறான் என்று எண்ணினாள்.



குமாரதேவன் தோளில் குடத்துடன் வந்து கொண்டிருந்தான். அவன் எதிரே போய் நின்றாள் சந்திரமாலா.

குமாரதேவன் திடுக்கிட்டான். ஒருகணம் அவனால் ஏதும் பேசமுடியவில்லை.

"நீ... நீ..." என்று குழம்பினான்.

'நானேதான், தனிமையில் என்னைப் பருகிட உங்கள் எதிரே பிரத்யட்சமாகத் தோன்றிவிட்டேன்'' என்று சிரித்துக்கொண்டே கூறினாள் சந்திரமாலா.

"வழியை விடு சந்திரமாலா. இது என்ன விரத பங்கம்? நமது விரதம் முடிய இன்னும் சில மாதங்கள்தாம் இருக்கின்றன. அதுவரை பொறுத்திருக்க முடியவில்லையா? உன் தந்தை பார்த்துவிட்டால் காரியமே குட்டிச் சுவராகிவிடுமே..." என்று தடுமாறியவாறு பேசினான் குமாரதேவன்.

சந்திரமாலா புன்முறுவல் பூத்தாள். விழிகளைச் சுழற்றி, "நீங்கள் மட்டும் மறைந்திருந்து பார்க்கலாமா? அப்போது அந்த விரதம் எங்கே போயிவிட்டது?" என்று கேட்டாள்.

குமாரதேவன் திடுக்கிட்டான். அவன் சுமந்திருந்த குடம் கீழே நழுவி வீழ்ந்து உடைந்தது.

"என்ன சொல்கிறாய் சந்திரமாலா? நான் உன்னை மறைந்திருந்துப் பார்த்தேனா? இதென்ன அபாண்டம்?" என்று பதறினான்.

குறும்புச் சிரிப்புடன், "ஏன் பதறுகிறீர்கள்? என்னைத் தானே பார்த்தீர்கள். நீராடும் எழிலைக் காணவேண்டும் என்ற உங்கள் உள்ளத்து ஆசையை நிறைவேற்றிக் கொண்டீர்கள். சித்திரத்தில் அழகிய மங்கையைக் காண்கிறீர்கள். அப்பொழுதெல்லாம் என் நினைவு தங்களுக்கு வந்திருக்கும்.

விரதபங்கத்தைப் பற்றி நீங்களும் தந்தையிடம் சொல்லப் போவதில்லை. நானும் சொல்லப் போவதில்லை. தங்களைச் சந்திக்க வேண்டும் என்று நான் துடித்துக் கொண்டிருந்தேன். தங்களுக்கு அப்படி ஓர் உணர்ச்சி ஏற்பட்டதால்தானே மறைந்திருந்துப் பார்த்தீர்கள்..." - சந்திரமாலா சொல்லிக் கொண்டேபோனபோது குமாரதேவன் "சீ..." என்று சீறினான். அவன் குரலில் வேங்கையின் கோபமிருந்தது.

"நானா பார்த்தேன்? அபாண்டமாகச் சொல்வதற்கு வேறு ஏதும் உனக்குத் தோன்றவில்லையா?" என்று கூவினான் குமாரதேவன்.

✳ ✳ ✳ ✳ ✳

இந்தச் சம்பவத்தை இப்போது கூறும்போது சந்திரமாலா சற்று நிறுத்தினாள். பெரும் விம்மலொலி அவளிடமிருந்து எழுந்தது.

முத்தம்மாள் அவளை ஆதரவுடன் அணைத்தவாறு கேட்டாள்: "அழாதே சந்திரமாலா! எப்போதோ நடந்ததை நினைத்து இப்பொழுது ஏன் அழுகிறாய்? அப்புறம் என்ன நடந்தது சொல்" என்றாள்.

"நான் என்ன சொல்வேன் பாட்டி? எப்படிச் சொல்வேன் பாட்டி! நான் ஒரு கணத்தில் விரத பங்கத்தை ஏற்படுத்திவிட்டேனே... அவசரத்தில் தடையை மீறிவிட்டேனே..." என்று புலம்பினாள்.

"அப்படியென்றால் நீ நீராடும்போது குமாரதேவன் மறைந்திருந்துப் பார்க்கவில்லையா?" என்று முத்தம்மாள் பரபரப்புடன் கேட்டாள்.

"இல்லை பாட்டி; இல்லை. என் அழகை அந்தப் பாழும் பிட்சு பார்த்துக் கொண்டிருந்திருக்கிறான்" என்று கூறி, ஓவென்று அலறினாள் சந்திரமாலா.

## அத்தியாயம் - 9

# இளவரசர் எங்கே?

பல்லவ சக்கரவர்த்தி பரமேச்வர வர்மர் மெல்ல கண்களைத் திறந்துப் பார்த்தார். அவர் நெற்றியில் வியர்வை அரும்பியிருந்தது. அவர் உடல் முழுவதும் வியர்த்து விட்டிருந்தது. அதனால் படுக்கையின் மேல்விரிப்பு முழுவதும் மழைத்துளியில் நனைந்ததுபோல் நனைந்திருந்தது.

மயில் தோகையிலான விசிறிகொண்டு மெல்ல விசிறும் பணிப்பெண் இதைக் கவனித்துவிட்டாள். அவள் ஓடோடி அறைக் கதவுக்கருகே சென்று அங்குள்ள காவலனிடம் ஏதோ கூறிவிட்டு வந்தாள்.

சிறிது நேரத்திற்கெல்லாம் முதன் மந்திரி வித்யாதரர் அங்கு வந்து சேர்ந்தார்.

வித்தியாதரரைப் பார்த்தவுடன் பரமேச்வர வர்மரின் முகத்தில் மலர்ச்சி ஏற்பட்டது. இதழ்களில் ஏற்பட்ட புன்னகை அவருடன் பேசியது.

"இரவு நன்றாக உறங்கினீர்களா?" என்று கேட்டார் வித்தியாதரர்.

"எப்பொழுதும் உறங்கிக் கொண்டுதானிருக்கிறேன்; விழிப்பு என்று வரும் என்று எனக்கே தெரியவில்லை..." என்றார் பரமேச்வரர்.

வித்தியாதரருக்குப் புரியாமல் இல்லை. எனினும், மன்னருக்கு உடல் நோயைவிட உள்ள நோய் அதிகமாக இருப்பது தெரியும். அதை எடுத்துக் கூறினாலும் சங்கடம். எடுத்துச் சொல்லாவிட்டால் தனக்கு ஏதோ தீராத பிணி என்று சக்கரவர்த்தி நினைத்துவிடுவார்.

பணிப்பெண் மெல்ல அவரது வியர்வையைத் துடைத்தாள். படுக்கை விரிப்பை மாற்றினாள்.

"நன்றாக வியர்த்து விட்டிருக்கிறது. நோய் நீங்கியதன் அடையாளம்" என்றார் வித்தியாதரர்.

பரமேச்வரவர்மர் மெல்லச் சிரித்தார். "அது நோய் நீங்கியதால் ஏற்பட்டதன்று வித்தியாதரரே" என்றார் பரமேச்வர வர்மர்.

வித்தியாதரர் மன்னரின் முகத்தையே பார்த்தவாறு நின்று கொண்டிருந்தார். மன்னரின் உள்ளத்தில் ஏதோ பெரும் கலக்கம் ஏற்பட்டிருப்பது தெரிந்தது.

"நோய் நீங்கினாலும் வியர்க்கும்; பயம் பிறந்தாலும் வியர்க்கும் கடல் சூழ்ந்த இந்த உலகை நடுநடுங்க வைக்கும் தங்களுக்குப் பயம் வரக் காரணமில்லை. நோய் வருவதற்கும் காரணமில்லை" என்றார் வித்யாதரர்.

'மற்றொரு முறை சொல்லுங்கள். பயம் பிறந்தாலும் வியர்க்கும்" சக்கரவர்த்தியின் வார்த்தையிலே ஏதோ பெரும் செய்தி பொதிந்திருந்தது.

"தங்களுக்கு அந்த உதாரணம் பொருந்தாது".

"யாராயிருந்தால் என்ன அமைச்சரே! விடிகாலையில் நான் கண்ட பயங்கரக் கனவு என்னையே நடுநடுங்க வைத்துவிட்டது" என்று அரசர் கூறியவுடன் வித்யாதரரே திடுக்கிட்டார்.

"வித்தியாதரரே! விடியற்காலைக் கனவு பலிக்குமென்று சொல்வார்கள்."

"கனவு நமது மனச்சிந்தனையின் மறு பிரதிபலிப்பே...".

"அப்படியென்றால் அதுவும் உண்மையாக இருக்கலாம் வித்யாதரரே! இப்படி உட்காருங்கள் வித்யாதரரே... நிறையப்



பேசவேண்டும்..." என்று கூறி மெல்லத் தலையணையில் சாய்ந்து கொண்டார்.

"இன்று பேசவேண்டாம்... சற்று அமைதியாய் இருங்கள். நாளை பேசிக்கொள்ளலாமே.." என்று சொல்லிப் பார்த்தார் வித்யாதரர்.

ஆனால், பரமேச்வரவர்மர் தாம் கண்ட கனவை விவரிக்கத் தொடங்கினார்.

"காஞ்சிமா நகரை நோக்கிக் கடும் மேகம் ஒன்று வருகிறது. மேகமென்றால் மழை பொழியும் மேகமன்று. போர்வை போன்ற ஒன்று என்று சொல்லலாம்..."

"அந்த மேகத்தை தொடர்ந்து புழுதிக்காற்று. அந்தக் காற்று கடற்கரையிலிருந்து மணலை எடுத்து வந்து காஞ்சி நகரத்தின்மீது பொழிகிறது.

"மணல் வயல் வெளியில் விழுகிறது. உழுத நிலங்களில் விழுகிறது. பச்சை வயல்களின் மீது விழுகிறது. மாந்தோப்பின் மீது விழுகிறது. தென்னை மரத்தின் மீது விழுகிறது."

"பச்சைத் தென்னை மரம் பற்றி எரிகிறது. நமது வீரர்கள் நெருப்பை அணைக்க ஓடுகின்றனர். அவர்களால் நெருப்பை அணைக்க முடியவில்லை.

"வடக்குத் திசையினின்று முகமூடியணிந்தவர்கள் ஓடி வருகிறார்கள். நகரத்திலுள்ள மக்களை நோக்கி "நெருப்பு மழை பெய்யப் போகிறது ஓடுங்கள்... ஓடுங்கள்" என்கிறார்கள். மக்கள் தங்கள் உடைமைகளைவிட்டு ஓடுகிறார்கள். வயதானவர்களால் ஓடிமுடியவில்லை. நெருப்பில் முதியவர்கள் கருகி விழுகிறார்கள்.

"நகரமே வெறிச்சோடிக் கிடக்கிறது. நான் ஓடுகிறேன்... ஓடுகிறேன்..."

பரமேச்வரவர்மர் சொல்லி முடித்தவுடன் வித்தயாதரர் ஏதோ சிந்தனையிலாழ்ந்த வண்ணமிருந்தார். பிறகு விசிறும் பணிப் பெண்ணை அங்கிருந்து செல்லுமாறு சைகை காட்டிவிட்டு, "சக்கரவர்த்திகளே! இந்தக் கனவு தங்களுக்கு ஏற்பட்டதென்றால் ஆச்சரியமாகத் தானிருக்கிறது"

"கனவு என்பது நமது மனத்தின் சிந்தனையின் பிரதி பலிப்பு என்று கூறுவார்கள். தங்களுடைய உள்ளத்தில் இத்தகைய பயங்கரச் சிந்தனைகள் என்றுமே உதயமாகி யிருக்காதே என்று எண்ணினேன்" என்றார்.

"கனவு என்பது நமது மனச் சிந்தனையின் பிரதிபலிப்பு என்று மட்டும் கூறினால் போதாது வரப்போகும் சம்பவத்தின் எதிரொலி என்றும் கூறலாம்..." என்றார் பரமேச்வர வர்மர்!

"நெருப்பும் மழையும், மக்கள் ஓடுவதும் நிஜமாய் நடக்கும் என்று எண்ணுகிறீர்களா?"

"நெருப்பு மழை என்றால் நெருப்பு மழை பெய்துவிடுமா? கோடை மழை பெய்யாமல் அனல் காற்று வீசலாம் அல்லவா? பஞ்சம் ஏற்படலாம்..." என்றார் பரமேச்வர வர்மர்.

"பஞ்சமா? அப்படி ஏற்பட்டாலும் நமது களஞ்சியங்களில் பஞ்ச காலத்துக்குப் போதுமான தானியங்கள் உள்ளன. அரசே! தாங்கள் கவலைப்பட வேண்டாம்" என்றார் அமைச்சர்.

வித்தயாதரர் அவ்வாறு கூறிவிட்டாரே தவிர அவர் மனத்தில் கவலை நிறைந்திருந்தது. காஞ்சி நகரைச் சுற்றிப் பஞ்சம் தலைகாட்ட ஆரம்பித்துவிட்ட செய்தி அவருக்குத் தெரியும். நோய்வாய்ப்பட்டிருக்கும் மன்னரது கவனத்திற்குக் கொண்டு வராமலே பஞ்சத்தைச் சமாளித்துவிடலாம் என்று மந்திரி மண்டலத்தார் முடிவு செய்திருந்தனர். ஏனென்றால் மன்னருக்கு ஏற்பட்டிருக்கும் நோயின் வகையைக்



கண்டுபிடிக்க முடியாமல் மாளிகை மருத்துவர் தவித்ததால், அதிர்ச்சி தரும் எந்தச் செய்தியையும் அரசரிடம் ஒருவரும் கூறமுற்படுவதில்லை. மேலும், மன்னர் மனத்தில் பல மாதங்களாக ஏற்பட்டிருக்கும் கவலை சாதாரணமானதன்று. அவரது திருக்குமாரர் இளவரசர் நரசிம்மவர்மர் வடக்கே அஜந்தாக் குகைகளுக்குச் சென்று வருவதாகக் கூறிச் சென்றவர், இன்றளவும் திரும்பி வரவில்லை. அந்தக் கவலை அவர் உடலை வாட்டி வதைத்து, தீராத நோயால் பீடிக்கப்பட்டிருப்பதுபோல் செய்துவிட்டது.

மீண்டும் சக்கரவர்த்திகள் அமைச்சரை நோக்கி, "இளவரசரிடமிருந்து ஏதாவது செய்தி உண்டா?" என்று கேட்டார்.

அமைச்சர் மறுமொழி கூறவில்லை. இளவரசரைக் கோவூரில் கண்டதாக ஒற்றர்கள் தெரிவித்த செய்தியைக் கூறலாமா வேண்டாமா? என்று அமைச்சர் யோசித்தார்.

"எனக்கு அதுவே பெரும் கவலை. அமைச்சரே விரோதியின் நாட்டிற்குச் சென்று கலையை ரசித்து வருகிறேன் என்று துணிவு கொண்டபோதே நான் தடுத்திருக்க வேண்டும். ஆனால் நரசிம்மனின் ஆர்வம் கட்டுக்கடங்காத தாயிருந்தது. எப்பொழுதுமே போர், போர் என்று காலம் கழித்து அழிவுப் பாதையில் சென்றுகொண்டு இருப்பதைவிட காலத்தாலும் அழியாத கலையில் கவனத்தைச் செலுத்துதல் நல்லது என்று நரசிம்மன் அவ்வப்பொழுது சொல்லிக் கொண்டிருந்தான்" என்று கூறிப் பெருமூச்சுவிட்டார் மன்னர்.

"கலை மீது ஆர்வம் கொள்வது நல்லதுதான்".

"அப்படித்தான் நானும் நினைத்தேன். எனது தந்தை மாமல்லரைப் போன்று ஆர்வம் உடையவனாக என் மகன் இருப்பது எனக்குப் பெருமையாக இருந்தது. அதற்காக விரோதியின் நாட்டிற்குச் செல்வது அபாயம் என்று

அவனுக்குத் தெரியவில்லையே" என்று சோர்வுடன் கூறினார் பரமேச்வர வர்மர்.

"சக்கரவர்த்திகளே, எனக்கு ஒரு சந்தேகம்! அஜந்தாக் காடுகளுக்குச் சென்றுதான் கலை நுணுக்கம் அறியமுடியுமா?" என்று கேட்டார்.

"கலைத் திறமைக்கும் பெருமைக்கும் நம் நாட்டில் குறைவு ஏதுமில்லை. ஆனால் ஓவியக்கலையை மட்டும் நாம் புறக்கணித்துவிட்டோம். நரசிம்மனுக்குச் சித்திரத்தின் மீது உயிர். வாட்பயிற்சி செய்யும்போதுகூட கிடைக்கும் நேரத்தில் மண்தரையில் வாளின் முனையால் சித்திரம் வரைவான். அவன் நினைவெல்லாம் சித்திரம், நடனம், சிற்பம் என்பதிலேயே இருந்தது. ஒருநாள் என்னிடம் தனது யோசனையைத் தெரிவிக்க வந்தான்" என்று கூறிச் சற்று அமைதியானார் மன்னர். அமைச்சரும் ஏதும் பேசவில்லை.

பழைய சம்பவங்களை நினைவுபடுத்திக் கொள்வதன் மூலம் பரமேச்வரவர்மர் சற்று ஓய்வு எடுத்துக் கொண்டார்.

"சக்கரவர்த்திகளே! எப்போதும் ஏதாவது சிந்தனையில் இருப்பது உடலுக்குச் சோர்வை அளிக்கும். அதனால் இன்று ஒரு நாளாவது அமைதியாக இருங்கள்" என்றார் அமைச்சர்.

"அமைச்சரே! மனமெனும் கடலுக்கு அமைதி ஏது? அஜந்தாக் குகைகளைப்பற்றி ஒரு சமயம் நான்தான் நரசிம்மனுக்குச் சொன்னேன். அற்புதமான ஓவியங்கள் அங்கு இருப்பதைத் தெரிவித்தேன். அழியா வர்ணங்கள் தீட்டப்பட்டிருப்தைக் கூறினேன். ஏன் சொன்னேன் என்று இப்பொழுது வருத்தமாக இருக்கிறது. சாளுக்கியர்களின் பொக்கிஷமாகத் திகழும் அந்த இடத்துக்குப் போகலாமா? நான் தடுத்தேன். சாளுக்கிய மன்னன் விஜயாதித்தன் இப்பொழுதுதான் தோற்று ஓடியிருக்கிறான். அவனுக்குக் கோபம் அதிகமாக இருக்கும். அவனிடம் நீ சிக்கிவிட்டால் சித்ரவதை செய்து கொன்றுவிடுவான் என்று சொல்லிப்



பார்த்தேன். சித்திரங்களை அறிந்து கொள்ள சித்ரவதை அடைவது நல்லதுதான் என்றான் சிறுபிள்ளைத்தனமாக, நான் தடுத்தும் கேளாமல் புறப்பட்டுவிட்டான்..." என்று கூறிச் சற்று நிறுத்தினார்.

"அவர் மட்டுமா சென்றார். உடன் குமாரதேவனையும் அழைத்துச் சென்றிருக்கிறார்..."

"குமாரதேவனையா? பெரிய குமாரதேவனா? சிறிய குமாரதேவனா?"

"சிறிய குமாரதேவனுக்குத்தான் நமது இளவரசரைப் போல் கலைப்பித்து".

"உம்... சிறிய குமாரதேவன் வந்துவிட்டானா?"

"இல்லை... ஆனால்...?"

"என்ன, சொல்லுங்கள் அமைச்சரே...?"

"இளவரசரைப் பின் தொடர்ந்த நமது ஒற்றர்களையும் இளவரசர் திரும்பிப் போகுமாறு கட்டளையிட்டுவிட்டார். ஆனால் அவர்கள் அப்படிச் செய்யாமல் இளவரசருக்குத் தெரியாமல் பின் தொடர்ந்தார்கள்..."

"உம்... நிறுத்தாமல் சொல்லுங்கள்."

"இளவரசர் அஜந்தாக் காடுகளுக்குச் செல்லவில்லை."

"என்ன?"

'ஆமாம், சக்கரவர்த்திகளே! குமாரதேவன் அஜந்தாக் காடுகளுக்குச் சென்றுவிட்டான் நமது ஒற்றர்களால் காட்டிற்குள் செல்ல முடியவில்லை. அப்புறம் சென்ற ஒற்றன் ஒருவனைப் பிட்சு கண்டுபிடித்து சாளுக்கிய காவலர்களிடம் ஒப்படைத்துவிட்டாராம்."

32952
5008114

சக்கரவர்த்திகள் திடுக்கிட்டு, "பிறகு குமாரதேவன் என்ன ஆனான்? இளவரசர் எங்கே? சொல்லுங்கள் அமைச்சரே... இளவரசருக்கு ஏதாவது ஆபத்து என்றால் என் உயிர் ஒருகணம்கூட உடலில் நிற்காது" என்று பரபரப்புடன் கேட்டார். அமைச்சருக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை.

அப்போது ஒற்றர் படையைச் சேர்ந்த வீரனொருவன் வந்து வணங்கி நின்றான். அவன் கூறிய செய்தி சக்கரவர்த்திகளையும் அமைச்சரையும் திடுக்கிட வைத்தது.

## அத்தியாயம் - 10

# மர்ம மாளிகை

நடனமாது ராஜசுந்தரி கண்விழித்தபோது அந்தக் கூடத்தில் ஒருவரையும் காணவில்லை. தூண்டா விளக்கு ஒன்று கூடத்தின் மூலையில் எரிந்து கொண்டிருந்தது. எங்கிருந்தோ குளிர்ந்த காற்று இதமாக வீசிக்கொண்டிருந்தது. வெளியே வானம் தெரியவில்லை. வெளிப்புறத்து நிகழ்ச்சிகள் உள்ளே செல்வதற்குப் பலகணிகளும் இல்லை. ஆனால் அந்தக் காற்று மட்டும் வீசிக்கொண்டிருந்தது. அது எப்படி என்று ராஜசுந்தரி படுத்தபடியே சிந்தித்தாள். அவளுடைய வீடும் பெரும் மாளிகைதான். பளபளப்பான தரையும், சித்திர விதானமும், வழவழப்பாக இழைக்கப்பட்ட தூண்களும் கொண்ட அந்த மாளிகையை இன்னும் விரிவாக, விசாலமாகக் கட்ட அவளுக்கு ஆசைதான். ஆனால் பல்லவ அரசு அதிகாரிகள் அதைத் தடுத்துவிட்டனர்.

இந்த மாளிகையைப் பார்க்கும்போது பல்லவ அரண்மனையைவிடச் செல்வச் சிறப்போடு இது கட்டப்



பட்டிருப்பது தெரிகிறது. இந்த மாளிகையின் சொந்தக்காரர் யார்? நிச்சயமாகப் பல்லவ நாட்டைச் சேர்ந்தவரல்லர். இவரைச் சாளுக்கிய நாட்டில் சிறுவயதில் சந்தித்திருக்கிறோம். முன்பு விரோதி நாட்டைச் சேர்ந்தவராயிருந்தார். இப்போது பல்லவ நாட்டிற்கு வேண்டியவராகிவிட்டாரா? என்னிடம் ஓர் உதவி பெறவே என்னை அழைத்து வந்தேன் என்று சொன்னாரே... என்னிடம் உதவி பெறும் அளவுக்கு அவர் செல்வாக்கில் குறைந்தவரா?

ராஜசுந்தரியின் மயக்கம் நன்றாகத் தெளிந்துவிட்டது. இப்போது காற்றினூடே மெல்லிய மணம் பரவியது. அது மல்லிகையின் மணம். மல்லிகை தோட்டத்தில் அப்போது மலரும் மலர்க் குவியலை எடுத்துக் கூடையிலே போட்டு வருவது போன்ற மணம் திடீரென அறை முழுமையும் பரவியது.

எங்கிருந்து வந்தனர் என்று தெரியாதவாறு திரைச் சீலையைத் தள்ளிக்கொண்டு இரு பெண்கள் வந்தனர்.

கம்பீரமான உயரம், அகன்ற விழிகள். விசாலமான நெற்றி. நெற்றிக்கேற்ற கூர்மையான நாசி. நடந்து வரும்போது இடது வலதுமாக இடை அசைந்தது. இடை அசையும்போது மார்பகங்கள் குலுங்கின. குலுங்கிய மார்பகத்தோடு போட்டிப் போட்டுக்கொண்டு முத்துமாலையும் அசைந்தாடின. கை வீசி அசைந்து வந்த அந்த இரு அழகிகளையும் ராஜசுந்தரி இமைக்காமல் பார்த்தாள்.

அந்த நகரத்திலேயே தானே பெரும் அழகி என்று இதுவரை கர்வங்கொண்டிருந்தாள்.

தன்னை அணைப்பதற்கு, தன்னுடன் உறவாடுவதற்கு, தன்னுடன் பேசுவதற்கு, தன் நாட்டியத்தை ரசிப்பதற்குக் காஞ்சி நகரத்து இளையோரும், பெரியவரும், முதியவரும், செல்வந்தரும், செல்வாக்குள்ளவரும், அதிகாரிகளும், ஆளுங்கணத்தாரும் போட்டி போட்டுக்கொண்டு முந்தி

வருகிறார்கள் என்று அவள் இறுமாப்புக் கொண்டிருக்கிறாள். ஆனால் இந்த இரு அழகிகளையும் கண்டுவிட்டால் தன்னை ஒருவரும் மதிக்க மாட்டார்கள் என்பது அவளுக்குத் தெரியும்.

தங்களை விழி இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த ராஜசுந்தரிக்கு வணக்கம் தெரிவித்தனர் அவ்விரு அழகிகள்.

அவர்களிருவரும் சுந்தரியின் அருகில் வந்தனர். குனிந்துப் பார்த்து, "விழித்துக்கொண்டு விட்டீர்களா?" என்றாள் அவர்களுள் ஒருத்தி.

அவள் குனியும்போது கச்சையின் கட்டுப்பாட்டையும் மீறி அமுத கலசங்கள் அவள் மீது படிந்தன.

"தூங்கினாலல்லவா விழிப்பதற்கு?" என்றாள் ராஜசுந்தரி.

"நன்றாகப் பேசுகிறீர்கள்... நல்ல நடனத் திறமை; அழகு-பேச்சிலும் வல்லவள்" என்றாள் மற்றொரு பேரழகி.

"அழகு, பேச்சுத் திறன் இரண்டும் இங்கே ஒன்றும் செய்ய முடியவில்லையே... சிறைப்பட்டிருப்பதுபோல் இந்த இடத்திலே கிடக்கிறேனே... நீங்கள் யார்? என்னை ஏன் இங்கு அழைத்து வந்தீர்கள்?" என்று மீண்டும் கேட்டாள் ராஜசுந்தரி.

"ஏன், தலைவர் சொல்லியிருப்பாரே...?" என்றாள் அழகியரில் இளையவள்.

"யார் உங்கள் தலைவர்...? தலைவர் என்றால் நீங்கள் எல்லாம் அடிமைகளா?" என்று சினத்துடன் கேட்டாள் ராஜசுந்தரி.

"ஆமாம். அடிமைகள்தாம். எங்களுக்கு இருக்கும் சுகபோக சௌகரியங்கள் உனக்குக் கூட இருக்குமா என்பது சந்தேகம். உம்... அதைப்பற்றிப் பேச நாங்கள் இங்கே வரவில்லை. உன்னுடைய நலனை விசாரிக்க வந்தோம்" என்றாள் அழகியில் பெரியவள்.



"எனக்கு என்ன வந்துவிட்டது?' சலிப்புடன் கேட்டாள் ராஜசுந்தரி.

"மயங்கி விழுந்துவிட்டதாக தலைவர் சொன்னார். இப்போது எப்படி இருக்கிறது என்று பார்த்துவருமாறு எங்களை அனுப்பினர்" என்றாள் சிறியவள்.

"பார்த்தாகிவிட்டதல்லவா? போய் வாருங்கள். உங்கள் தலைவரிடம் கூறி என்னை என் வீட்டில் கொண்டு விட்டு வருமாறு சொல்லிவிடுங்கள்..." என்று கோபமாகப் பேசினாள்.

இரண்டு அழகிகளும் சிரித்தார்கள்.

"நகரத்துப் பேரழகியே!" என்று ஆரம்பித்தாள் சிறியவள்.

"நாட்டியச் சுடரே!" என்று கட்டியம் கூறுவதுபோல் தொடர்ந்தாள் பெரியவள்.

"இந்த மாளிகையில் அந்நிய மங்கையைத் தங்கவிட மாட்டோம். தங்கவிட்டவரைப் பிறகு வெளியே செல்லவிட மாட்டோம். அதனால்...!" என்று கூறி ராஜசுந்தரியின் முகத்தைப் பார்த்தவாறு பேச்சை நிறுத்தினாள்.

"அதனால்?"

"அதனால் நாட்டிய ராணியே! என் தலைவர் ஏதோ கேட்டாராமே? அதை நிறைவேற்றுவதாக வாக்களியுங்கள்".

"உன் தலைவர் ஏதும் கேட்கவில்லையே?"

"கேட்பார்; அவர் கேட்பதைச் செய்வதாகக் கூறுங்கள்".

"இதென்ன விசித்திரமாய் இருக்கிறது. அவர் என்ன கேட்பார், நான் என்ன வாக்களிப்பது?"

"அவர் கேட்பது தங்களால் முடியாததன்று. பிறரிடம் ஏதும் கேட்டு அவருக்குப் பழக்கமில்லை. ஆனால் உங்களிடம் ஆகவேண்டியது அவருக்கு ஒன்றுண்டு..."

இளையவளின் பேச்சைக் கேட்டு ராஜசுந்தரி வியப்புற்றாள். இதென்ன மர்மமான பேச்சு; மர்மமான இடம். இவர்கள் யாரென்று தெரியவில்லை. ஆனால் இவர்களது தலைவரைப் பற்றி இப்பொழுது மெல்லமெல்ல நினைவுக்கு வருகிறது.

"சமுத்திரநாதன், சமுத்திரநாதன்" என்ற பெயரைச் சொன்னால் சாளுக்கிய நாடே நடுநடுங்கும். அந்தச் சமுத்திரநாதன் காஞ்சிமா நகரில் பெரிய மாளிகையை அமைத்துக்கொண்டு, முரடர்களைத் துணைக்கு வைத்துக் கொண்டு அழகிகளை அடிமைகளாக வைத்துக் கொண்டு வாழ்கிறான். விரோதி நாட்டவன் பல்லவத் தலைநகரில் வாழ்கிறானென்பதை எப்படி அறிந்து கொள்ளாமல் இருக்கிறார்கள் பல்லவ ஒற்றர்கள்? நம்மை ஏன் இதில் சிக்க வைக்கிறார்கள்... உதவி செய்வதாக வாக்குக் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள் இந்த அடிமை அழகிகள். உம்.. இதென்ன சங்கடத்தில் சிக்கிக் கொண்டோம். நாளைப் பொழுது விடிந்தால் எனது பிறந்த நாள். பிறந்த நாளுக்கு முதல் நாள் இப்படியொரு பயங்கரமாயத் திகழ வேண்டுமா? யாருக்கும் அஞ்சாது, எதற்கும் கலங்காது இதுவரை வாழ்ந்துவிட்ட நமக்கு இப்படியொரு சங்கடமா?

அங்கே நிலவிய மௌனத்தைப் பெரியவள் கலைத்தாள். "ராஜசுந்தரி... பசித்தால் சொல்... வேண்டிய உணவு வகைகளை எடுத்து வருகிறோம்..." என்றாள்.



"பசித்தால்தான் எடுத்து வருவீர்களோ? வந்த விருந்தாளியே வலியக் கேட்க வேண்டுமோ? இதுதான் விருந்தோம்பலா?"

"விருந்தாளி என்று ஒப்புக்கொண்டீர்களே, அதற்கு நன்றி. ஏதோ சிறைப்பட்டிருக்கும் பெண் என்று கூறாமல்..."

"பசித்தால் உணவு கொண்டு செல்லுமாறு கட்டளை. நாட்டில் பஞ்சம் தலைவிரித்தாடும் நிலையில் உணவுப் பொருளை வீணாக்க வேண்டாம் என்று உத்தரவு. பசிக்கிறதா?

பெரிய அழகியின் பேச்சைக் கேட்டு வியப்படைந்த ராஜசுந்தரி, ஏதாவது சிறு ஆகாரத்தை ருசி பார்ப்போம். என்னதான் நடக்கிறது பார்ப்போம் என்ற எண்ணத்தில் "ஆமாம் பசிக்கிறது..." என்றாள்.

இளையவர் கையைத் தட்டினாள். நான்கு பெண்கள் வரிசையாக தங்கத் தாம்பாளத்தில் விதவிதமான உணவு வகைகளை ஏந்தி வந்தார்கள்.

ராஜசுந்தரி துள்ளி எழுந்தாள். "இதென்ன பசிக்கு உணவா? அல்லது கல்யாண விருந்தா? எனக்கு ஒரு குவளை எலுமிச்சைச் சாறு இருந்தால் போதும்" என்றாள்.

"இரவில் அவ்வளவுதான் சாப்பிடுவீர்களோ?" இளையவள் கேட்டாள்.

"இப்பொழுது என்ன நேரமிருக்கும்" ராஜசுந்தரி கவலையுடன் கேட்டாள்.

"உதயச் சந்திரன் இன்னும் உச்சியை அடையவில்லை. தாங்கள் மறுமொழி கூறும் வரையில் இங்கே நேரம்போவதே தெரியாது" என்றாள் இளையவள்.

பழரசம் வந்தது. ரசம் ததும்பி நிற்கும் கிண்ணத்தில் சித்திர சிங்கார வேலைப்பாடே தனி. ரசம் மிகுந்த ருசியாய் இருந்தது. ராஜசுந்தரிக்கு அந்த மாளிகையைப் பற்றியும், மாளிகையில் உள்ள பெண்களைப் பற்றியும் அவர்களது நடவடிக்கைகளைப் பற்றியும் அறியும் வேகம் ஏற்பட்டது.

இலவம் பஞ்சால் ஆன தலையணையில் ஒய்யாரமாகச் சாய்ந்துகொண்டு "உங்கள் தலைவரைப் பார்க்க வேண்டுமே?" என்றாள்.

"அவரைப் பார்க்க முடியாது".

"ஏன், என் முடிவைச் சொல்ல வேண்டாமா?"

"எங்களிடம் சொன்னால் போதும்".

"அவரைச் சந்தித்து அவரிடம் நேரிடையாகப் பேச வேண்டும்."

"அவர் மீண்டும் இங்கு வந்தால் நீங்கள் மயக்கமுற்று வீழ்ந்து விடுவீர்களாம். அதனால் உங்கள் சம்மதத்தை எங்களிடம் சொல்லுங்கள் போதும்".

பெரியவள் - சிறியவள் இருவருமே திறமைசாலிகள். அவர்களைப் பேச்சில் வெல்ல முடியாது என்பதைப் புரிந்து கொண்டாள் ராஜசுந்தரி. மிகவும் கவனமாக அறிவுப் பூர்வமாக, தந்திரமாக காரியத்தைச் சாதித்துக் கொள்ளத் திட்டமிட்டாள் ராஜசுந்தரி.

"உங்கள் தலைவரிடம் போய்ச் சொல்லுங்கள். அவருடைய கோரிக்கையை நிறேவேற்றுகிறேன் என்று" என்றாள்.

இரண்டு அழகிகளும் மின்னல் வேகத்தில் அங்கிருந்து மறைந்தனர்.

மீண்டும் இளையவள் மட்டும் திரும்பி வந்தாள்.



"காஞ்சிமா நகரத்து நாட்டிய ராணி! உங்களைப் போற்றுகிறேன். எங்கள் தலைவர் நமது நன்றியைத் தெரிவிக்குமாறு கூறினார். தங்களை மிகவும் ஜாக்கிரதையாகத் தங்கள் மாளிகையில் கொண்டு சேர்க்குமாறு கூறிவிட்டார்" என்றாள் மிகவும் பணிவுடன்.

"உங்கள் தலைவருடைய கோரிக்கை என்ன என்பதைச் சொல்லவில்லையே.." என்று ராஜசுந்தரி கேட்டாள்.

"நாளைய தினம் உங்கள் பிறந்த நாள் விழாக் கொண்டாட்டத்தின்போது எங்கள் தலைவர் தெரிவிப்பார்" என்றாள் அழகி.

"கொண்டாட்டத்திற்கு அவர் வருகிறாரா?" என்று ஆவலுடன் கேட்டாள் ராஜசுந்தரி.

"தெரியாது.. நேரமாகிறது. வருகிறீர்களா?" என்றாள் அழகி.

ராஜசுந்தரிக்கு ஒன்றுமே புரியவில்லை. அழகியைப் பின் தொடர்ந்தாள். மீண்டும் இருள் நிறைந்த வழியே சென்று வெளிப்புறத்தை அடைந்தாள். சிவிகையில் ராஜசுந்தரி அமர்ந்தாள். அவள் உள்ளத்திலே ஏற்பட்ட அதிர்ச்சியும் ஆச்சரியமும் எளிதில் அடங்கவில்லை. அன்று இரவு அவள் தூங்கவில்லை. மறுநாள் விழாவிற்குச் சமுத்திரநாதன் எப்படி எப்போது வருவான் என்பதிலேயே அவள் எண்ணம் சுழன்றது.

## அத்தியாயம் - 11

# தப்பியது ஒரு கதை

இளவரசர் நரசிம்மவர்மனும் பெரிய குமாரதேவனும் மூதாட்டியின் வீட்டினின்று புறப்பட்டு கடல் மல்லையில் கட்டப்பட்டுள்ள மாளிகைக்குச் சென்றனர்.

இளவரசரின் உள்ளத்தில் குழப்பம் நிறைந்திருந்தது. அவருடைய உள்ளத்திலுள்ள குழப்பத்தைவிட நாட்டில் மெல்ல மெல்ல உருவாகிவரும் குழப்பம் அவருக்கு வேதனையை அளித்தது. குதிரை மீதமர்ந்து செல்லும்போது இருவரும் பேசிக்கொள்ளவில்லை. மௌனமாக அவரவர் ஏதோ சிந்தனையிலீடுபட்டுச் சென்றனர். வழி நெடுக பாறைகளும் சிறு குன்றுகளும் காட்சியளித்தன.

இளவரசரின் உள்ளத்தில் பற்பல எண்ணங்கள் உதயமாகின.

"குமாரதேவா, இந்தப் பாறைகளைப் பார்க்கும்போது இவை ஏன் இப்படி ஒன்றுக்கும் உபயோகப்படாமல் இருக்கின்றன என்று தோன்றுகிறது" என்று மௌனத்தைக் கலைத்தார் இளவரசர்.

குமாரதேவன் மெல்ல நகைத்தான். அவனுக்குச் சிற்பம் கலை இலக்கியம் இவற்றின்மீது தணியாத ஆர்வம். அவனுடைய தம்பி இளைய குமாரதேவனுக்கோ வாள், வேல், கேடயம் இவற்றின் மீது ஆசை. போர்க்களத்திலே தனது திறமையை வெளிப்படுத்த ஆவல். இருவரும் இளவரசரின் நண்பர்கள். சிறு வயது முதல் இணைபிரியா நண்பர்கள்.

"எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. இந்தப் பாறைகளை அஜந்தாவில் என்ன பாடுபடுத்திவிட்டார்கள்



தெரியுமா இளவரசே?" என்று குமாரதேவன் ஆவலுடன் பேச்சைத் தொடங்கினான்.

"இதோ பார் குமாரதேவா! இளவரசே - இளவரசே என்று நொடிக்கு ஒரு தரம் அழைத்தால் எனக்குப் பேச்சே வருவதில்லை" என்றார் நரசிம்மன்.

குமாரதேவன் சிரித்துக்கொண்டே, "பிறகு எப்படி அழைப்பதாம்; எனக்குத் தெரியாது. குருநாதரைக் குருநாதா என்று அழைக்க வேண்டும். இளவரசரை இளவரசர் என்று அழைக்க வேண்டும். எனக்கு நீங்கள் நண்பராக இருக்கலாம்; ஆனால் இந்த நாட்டிற்கு இளவரசர். நான் இந்த நாட்டின் குடிமகன்..." என்றான்.

"நீ சாதாரண பிரஜை அல்லன். மகா கலைஞன். அழியாச் சித்திரத்தைப் பார்த்துவிட்டு வந்த ஓவியக் கலைஞன். இந்தப் பிறவியில் மாபெரும் பாக்கியம் செய்துவிட்டாய். எனக்குக் கூட கிடைக்காத அதிர்ஷ்டம் உனக்கு கிடைத்துவிட்டது..." என்று பேசினார் இளவரசர். குரலில் உற்சாகமிருப்பினும் ஏக்கமும் இருந்தது.

"தங்களுடைய உற்சாகமூட்டும் வார்த்தைகளும், உதவியும் இல்லாதிருந்தால் நான் அந்த அமர ஓவியங்களை எப்படிப் பார்த்திருக்க முடியும்! ஆனால் கண்ணுற்றான் பெற்று இழந்ததுபோல் முழுமையும் அனுபவிக்க முடியாதபடி ஆண்டவன் சோதனை செய்துவிட்டார். அந்தச் சோதனை ஒரு பெண்ணின் வடிவில் வந்தது..." என்று கூறிப் பெருமூச்சுவிட்டான் குமாரதேவன்.

"குமாரதேவா, உன்னுடன் பேசி நடந்தவற்றைப் அறிய நாள் முழுமையும் போதாது போலிருக்கிறது. உன்னை எப்படி எப்போது சந்திக்கப்போகிறோம் என்று துடித்துக் கொண்டிருந்தேன். மாமல்லபுரத்து இளவேனில் மாளிகையில் அமர்ந்து பேசுவோம்..." என்றார் இளவரசர்.

மாமல்லபுரத்து இளவேனில் மாளிகை மாமல்ல சக்கரவர்த்தியால் கட்டப்பட்டது. சுடு செங்கற்களைக் கொண்டே அந்த மாளிகையை உருவாக்கியிருந்தார் மாமல்லர். அவருக்குப் பிறகு அதைக் கவனிப்பவர்களின் ஆர்வக் குறைவால் அது பொலிவு இழந்திருந்தது.

மாளிகைக் காவலன் இளவரசரை அடையாளம் கண்டு கொள்ளச் சிறிது நேரமாகியது.

வயது முதிர்ந்த அவன் நலன்களை விசாரித்துவிட்டு இளவரசர் உள்ளே சென்று மஞ்சத்தில் அமர்ந்தார்.

"தங்களை அடையாளங் கண்டு கொண்டுவிட்டானே இந்தக் காவல்காரன்! உடனே செய்தி காஞ்சிக்குப் போய்விடாதா?" என்று கேட்டான் குமாரதேவன்.

"முதியவர் தன் காரியத்தில் மட்டுமே கண்ணாய் இருப்பார். மேலும் இனியும் மாறுவேடத்தில் அலைவதில் அர்த்தமில்லை. அஜந்தா காடுகளுக்குச் செல்ல மாறுவேடம் பூண்டேன். ஆனால் காட்டின் எல்லை வரையில்தான் செல்ல முடிந்தது. உன்னைப் பிட்சு ஒருவர் எதிரிகளிடம் காட்டிக் கொடுத்துவிட்டார் என்பதை அறிந்து உன்னை விடுவிக்க நான் பட்டபாடு" என்று இளவரசர் பெருமூச்சு விட்டுச் சொன்னார்.

அஜந்தாக் குகையினின்று சித்திரசேனரால் வெளியேற்றப்பட்ட குமாரதேவன் மொட்டைத் தலையுடன் காவி உடையுடன் சோர்ந்த உள்ளத்துடன் காட்டைவிட்டு வெளியேறிக் கொண்டிருந்தான்.

காட்டின் எல்லையை அடையும்போது எதிரே வயது முதிர்ந்த பிட்சு வந்து கொண்டிருந்தார். பிட்சுவைக் கண்டவுடனே "புத்தம் சரணம் கச்சாமி", "சங்கம் சரணம் கச்சாமி", "தர்மம் சரணம் கச்சாமி" என்று கூறி வணங்க வேண்டும். வழிப்போக்கனைப் போல் சென்று கொண்டிருந்த



குமாரதேவனை நின்று உற்றுப் பார்த்த முதிய பிட்சு கைதட்டி அழைத்தார்.

"யார் நீ" என்று அதிகாரத்துடன் கேட்டார். பிராகிருத மொழியில் குமாரதேவனுக்கு அந்தப் பாஷை புரியவில்லை. அவனது தயக்கத்தை ஒரு நொடியில் உணர்ந்த பிட்சு அவனது காதைப் பிடித்துக்கொண்டார். பிராகிருத மொழியில் ஏதோ கூச்சல் போட்டார். அவனை இழுத்துக்கொண்டு காட்டிற்கு வெளியே வந்தார்.

பல்லவர்களிடம் தோற்றோடி வந்த சாளுக்கியர்கள் சோர்வடைந்திருந்தனர். குறிப்பாக காவல் வீரர்களுக்கு எதிலும் சிரத்தையில்லை. அங்கேயிருந்த காவல் பிரிவு நிலையச் சாவடிக்குக் குமாரதேவனை இழுத்து வந்து ஒப்படைத்தார் பிட்சு.

"இந்த வேடதாரி அஜந்தாக் காட்டில் வந்து கொண்டிருந்தான். இவன் பிட்சு வேடத்தில் இருக்கிறான். இவனைப் பார்த்தால் சந்தேகமாயிருக்கிறது. விசாரியுங்கள்" என்று குமாரதேவனைக் காவல் வீரர்களிடம் ஒப்படைத்தார் முதிய பிட்சு.

பிட்சுவே பிட்சுவை ஒப்படைத்தது அவர்களுக்கு வேடிக்கையாயிருந்தது. அதனால் குமாரதேவனைக் கேலியும் கிண்டலும் செய்ய ஆரம்பித்தார்கள். குமாரதேவனுக்குப் பிராகிருதம் தெரியாது. அவர்களுக்கோ தமிழ் தெரியாது. சிறிது நேரம் ஒருவருக்கொருவர் ஏதேதோ சொல்லிக்கொண்டிருந்தனர். பிறகு காவல் தலைவன் குமாரதேவனின் கையிலிருந்த மூட்டையைப் பறித்துச் சோதனையிட்டான். சில ஆடைகள், தூரிகை, சிவப்பு, மஞ்சள் நிறக் கற்கள், அவற்றைப் பார்த்தவிட்டு குமாரதேவனைக் கண் கொட்டாமல் சிறிது நேரம் நோக்கிவிட்டு தனது அருகேயிருந்த வீரர்களிடம் "இந்தப் பிட்சுவைத் தமிழ் தெரிந்த அதிகாரியிடம் அழைத்துச் செல்லுங்கள்" என்று கட்டளையிட்டான்.

அந்த வீரர்கள் குமாரதேவனை அழைத்துக்கொண்டு அருகேயுள்ள நகரத்தை நோக்கிச் சென்றனர். நடந்து செல்ல வேண்டி வந்தது. குமாரதேவனுக்குப் பசியாலும் உள்ளச் சோர்வாலும் களைப்பு மிகுந்தது. நடை தள்ளாடியது. அவனை அழைத்துச் சென்ற சாளுக்கிய வீரர்கள் அவ்வளவு பொல்லாதவர்களல்லர். அவனது சோர்வைக் கண்டு அவர்களும் பரிதாபப்பட்டனர். சிறிது தொலைவிலுள்ள ஆற்றங்கரையில் அவர்கள் இளைப்பாற அமர்ந்தனர்.

வீரன் கேட்டான், "குதிரை ஓட்டத் தெரியுமா?" என்று. சைகை மூலமாக அதை அறிந்த குமாரதேவன் தலையை அசைத்தான் தெரியும் என்று. ஒருவன் இரண்டு குதிரைகளைக் கொண்டு வரச் சென்றான். ஒரு நாழிகைக்குப் பிறகு ஒரே ஒரு குதிரையுடன் திரும்பி வந்தான்.

இருவரும் ஒரே குதிரையில் செல்வதென்று முடிவு செய்தனர். அவர்கள் சென்றுகொண்டிருந்தபோது எதிரே இளவரசர் நரசிம்மவர்மன் வந்து கொண்டிருந்தார். முதலில் குமாரதேவனை அவருக்கு அடையாளம் தெரியவில்லை. ஒரே குதிரையில் பிட்சுவும், சாளுக்கிய வீரனொருவனும் சென்று கொண்டிருக்கும் அதிசயத்தைக் கண்டு சற்று நின்றார்.

குதிரை மீது வந்துகொண்டிருக்கும் வீரனொருவன் சற்று நிற்கிறானேயென்று குமாரதேவன் திரும்பிப் பார்த்தபோது தான் இளவரசர் என்று அடையாளம் கண்டு கொண்டான்.

திடீரென குமாரதேவன் 'ஓ'வென்று கூவினான். குதிரை வீரன் குதிரையை நிறுத்தி என்ன என்ன என்று பரபரப்புடன் கேட்டான்.

இளவரசரும் அங்கே வந்தார்; அப்போதுதான் குமாரதேவன் சைகை மூலம் இளவரசருக்கு வந்துள்ள ஆபத்தைத் தெரிவித்தான்.



இளவரசருக்குப் பிராகிருதம் நன்றாகத் தெரியும். அவர் குதிரை வீரனுடன் சரளமாகப் பிராகிருதத்தில் பேச ஆரம்பித்தார். தமிழ் தெரிந்த சாளுக்கிய அதிகாரியிடம் குமாரதேவனை அழைத்துச் செல்லும் விஷயத்தை அறிந்தார்.

"இந்தப் பிட்சு தெற்கே பாண்டிய நாட்டைச் சேர்ந்தவர். இவரை எங்கே அழைத்துச் செல்கிறாய்?"

"இவர் மீது எங்கள் தலைவருக்குச் சந்தேகம். விசாரிக்க அழைத்துச் செல்கிறேன்" என்றான் காவல் வீரன்.

"என்ன இருந்தாலும் பிட்சுவை இப்படி ஒரே குதிரையில் உட்காரவைத்து அழைத்துச் செல்வது தகாது" என்றார் இளவரசர்.

"ஒரு குதிரைதானே கிடைத்தது. இளம் பிட்சுவால் நடக்க முடியவில்லை. நானே பரிதாபப்பட்டு குதிரை மீதேற்றி அழைத்துச் செல்கிறேன்" என்றான் வீரன்.

"என் குதிரையைக் கொடுத்தால் பிட்சுவை அதில் உட்கார வைப்பாயா?"

"ஆகா? அப்படியே செய்வேன். நீங்கள் என்ன செய்வீர்கள்?"

"நான் உன்னுடன் உட்கார்ந்து வருகிறேன். எங்கேபோக வேண்டுமோ அங்கே சென்று பிறகு நீ இறங்கிக் கொள். நான் என் வழியே போகிறேன்".

காவல் வீரனுக்கு அந்த யோசனை சரியெனப்பட்டது. குதிரையினின்று இறங்கி பிட்சுவை சௌகரியமாக உட்காரச் சொல்லிவிட்டு இளவரசருடைய குதிரையருகே வந்தான் வீரன்.

கண்மூடித் திறப்பதற்குள் அந்த வீரனைக் கீழே ஒரே குத்தில் வீழ்த்திவிட்டு குதிரையைத் தட்டிவிட்டார் இளவரசர். குமாரதேவனும் இளவரசரும் காற்றினும் வேகமாகப் பறந்தோடினர்.

## அத்தியாயம் - 12

# அவன் எங்கே?

குமாரதேவனை அங்கிருந்து சென்றுவிடுமாறு கட்டளையிட்ட பிறகு சித்திரசேனருக்கு ஓவியந் தீட்டவதில் கவனம் செல்லவில்லை. அவன் இருந்த வரையில் அவருக்கும் புதுப் புதுக் கற்பனைகள் தோன்றின. வண்ணக் கலவைகளை அவன் குழைத்துக் கொடுக்கும்போது வண்ண வேறுபாட்டை மிக எளிதில் அவர் அமைத்துவிடுவார். குமாரதேவன் பலமுறை கேட்டிருக்கிறான் அந்த வர்ணங்கள் எப்படி உருவாகின்றன என்று.

சித்திரசேனர் எளிதில் மறுமொழி கூறிவிட மாட்டார். அந்த அழியாத வர்ணங்களை எப்படித் தயாரிப்பது என்பதைத் தெரிவிக்க அவர் விரும்பவில்லை. குமாரதேவனது ஆர்வத்தைச் சிலகாலம் சோதித்த பிறகு தெரிவிக்க எண்ணினார். சோதனை என்றால் கடுமையாக சோதனையை அவர் கடைப்பிடிப்பார், புடம் போட்டெடுத்த பொன்னாக விளங்க வேண்டும் என்பது அவரது எண்ணம்.

குமாரதேவன் பரீட்சையில் ஆரம்பத்திலேயே தோல்வியடைந்துவிட்டான். காதல் பரீட்சையில் அவன் வெற்றி அடையவில்லை என்பது அவரது முடிவு. அதன் பலன் அவன் வெளியேறிவிட்டான்.

சித்திரசேனர் வெகுநேரம் சிந்தித்தார். அவரது முடிவை எதிர்த்து ஒருவராலும் பேச முடியாது. இரவெல்லாம் அவருக்குத் தூக்கம் இல்லை.

விடிந்தது. ஆனால், காலைக் கதிரொளி பயங்கரம் ஒன்றையும் அழைத்து வந்தது.



முதிய பிட்சு அங்கு வந்தார். அவருடன் மற்றொரு இளைய பிட்சு. இளைய பிட்சுவிற்கு ஒன்றும் குறைந்த வயதில்லை. நடுத்தர வயது என்றாலும் கடுமையான விரதங்களால் உடலை வைரம்போல் வைத்துக் கொண்டிருந்தார்.

அவர்களிருவரையும் பார்க்கும்போது ஏனோ ஒருவித நடுக்கம் சித்திர சேனருக்கு ஏற்பட்டது. உடனே வார்த்தைகள் வெளிவரவில்லை. பிறகு சற்று தைரியப்படுத்திக் கொண்டு "வாருங்கள், வாருங்கள்" என்று பிட்சுக்களை வரவேற்றார்.

சுற்றும் முற்றும் பார்த்தார் முதிய பிட்சு.

அவருடைய கழுகுக் கண்கள் எதையோ வட்டமிட்டு அறிய முயன்றன.

'உம்...' என்ற கர்ஜனைக் குரல் பிட்சுவிடமிருந்து எதிரொலித்தது.

"இப்படி அமரலாமே" என்று உபசரித்தார் சித்திரசேனர்.

"நாங்கள் உட்கார வரவில்லை..." என்று இளைய பிட்சு அழுத்தமாகக் கூறினார்.

சித்திரசேனர் அவரை ஒருமுறை உற்று நோக்கினார்.

"எனது கடமை தங்களை உட்காரச் சொல்ல வேண்டும் என்பது. ஆனால் ஓவியந் தீட்டும் இடத்திற்கு ஒருவரையும் நான் அனுமதிப்பதில்லை, எனது வேலைக்கு இடையூறு நேரும் என்பதனால்..." என்று சித்திரசேனர் துணிவை வரவழைத்துக் கொண்டு பேசினார்.

"நீங்கள் ஒருவரையும் அனுமதிப்பதில்லை... அப்படித்தானே?" என்று முதிய பிட்சு சற்றுக் கடுமையான குரலில் கேட்டார்.

"ஆம்... ஆனால்..." என்றார் சித்திரசேனர்.

"அதெல்லாம் பேச வேண்டாம்... நேருக்கு நேர் கேட்கிறேன்... இங்கே அந்நியர் யாரும் வரவில்லையே...?" இளைய பிட்சு கேட்டார்.

சித்திரசேனர் சற்று மௌனமாக நின்றார். பிறகு, "வந்தார்..." என்றார்.

"அவர் யார்?" முதியவர் கேட்டார்.

"அவர் ஒரு கலை ரசிகர்" சித்திரசேனர் புன்முறுவலுடன் கூறினார்.

"திடீரென காட்டிற்கு கலை ரசிகர் வந்துவிடுகிறாரோ... கலை ரசிகர் என்றால் யாரை வேண்டுமானாலும் அனுமதித்து விடுவீர்களோ...?" இளையவர் சீறினார்.

"அப்படியில்லை... பரிசோதனைக்குப் பிறகுதான் ஏற்றுக் கொள்வேன்..." என்றார் சித்திரசேனர்.

"என்ன பரிசோதனை...?" என்று முதியவர் கேட்டார்.

சித்திரசேனர் உடனே மறுமொழி கூறவில்லை. இளைய பிட்சு சித்திரசேனரின் அருகே நெருங்கினார்.

"ஏன் மௌனமாயிருக்கிறீர்கள். நீங்கள் ஓர் ஒற்றனுக்கு இடங் கொடுத்தீர்கள்" என்று பெரிய பிட்சு கர்ஜித்தார்.

"இதுவரை உண்மையன்றி வேறு ஏதும் கூறியதில்லை" என்று சித்திரசேனர் கூறினார்.

"நான் கேட்டதற்கு இன்னும் மறுமொழி கூறவில்லை" பிட்சு சீறினார்.

"வார்த்தைகளை அதிகம் பேசும் வழக்கமில்லை..." சித்திரசேனர் அழுத்தந் திருத்தமாகக் கூறினார்.



"என்ன பரிசோதனை என்று கேட்டேனே...?" பிட்சு விடவில்லை.

"ஒழுக்கம் உடையவனா என்று சோதிப்பேன்..." பிட்சுவின் முகத்தைப் பார்க்காமலே ஓவியர் பேசினார்.

"ஒழுக்கம் என்பதற்கு உங்கள் அகராதியில் என்ன அர்த்தம்?" பிட்சு கேட்டார்.

"எல்லாவற்றிலும் ஒழுக்கம். கலை உணர்வை உண்மையிலேயே உள்ளத்தில் கொண்டிருப்பது. அதற்கு அடுத்த படியாக..." என்று கூறி சற்று நிறுத்தினார்.

"அதற்கு அடுத்த படியாக... வார்த்தைகளை முழுமையாகக் கூறுங்கள்..." பிட்சுவின் குரலில் கடுமை மிகுந்தது.

"என் இளவயது மகளிடம் பண்புடன் நடந்து கொள்ளக் கூடியவனாக இருக்க வேண்டும்..."

"ஓ... உம் மகளிடம் சரிவர நடந்து கொண்டால் உடனே அனுமதித்து விடுவீர்களல்லவா?"

"கலை ஆர்வம், ஒழுங்கு, பண்பு இருந்தால் என் சீடனாகுவதில் தடையில்லை..."

"அவன் வேற்று நாட்டு ஒற்றனாக இருந்தாலும் கவலைப்படமாட்டீர்கள்...?"

"ஒற்றன் என்ற சொல்லுக்கு எனக்குப் பொருள் தெரியாது. கலை ரசிகன், கலைஞன், கலை ஆதரவாளன் இவற்றையே அறிவேன்..."

"இங்கு வந்த அந்த இளைஞனை எப்படிச் சேர்த்துக் கொண்டீர்கள்?"

"இரண்டாண்டுகள் என் மகளை அவன் சந்திக்கக்கூடாது என்று கடும் பரீட்சை வைத்தேன். அந்த இரண்டு ஆண்டுகளிலும் அவன் கலை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டான்..."

"அவன் அதற்காகத்தானே வந்தான்; அந்த வாலிபன் நமது விரோதி நாட்டைச் சேர்ந்தவன். வாதாபி நகரைத் தீயிட்டுக் கொளுத்திய கொடிய பல்லவன் இங்கே சித்திரம் கற்றுக் கொள்ள அவனை அனுப்பினான். தாங்கள் தெரிந்தோ தெரியாமலோ அவனை அனுமதித்தீர்கள்..."

"அவன் எந்த நாட்டவன் என்பதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. என் மகளின் அழகை அபகரித்துச் செல்பவனாக அவன் இருக்கக்கூடாது என்பதே என் குறிக்கோள். அதனால் அவனுக்குக் கடும் பரீட்சை வைத்தேன். மேலும், அவன் உண்மைக் கலைஞன். எனக்கு மிக உதவியாக இருந்தான். புதிய புதிய கற்பனைகள் அவன் உதவியால் எனக்கு உதித்தன. இப்போது அவன் போய்விட்டான்..." சித்திரசேனர் குரலில் ஏனோ ஒருவித வருத்தம் தெரிந்தது.

பிட்சு நகைத்தார். அதில் கடுமை இருந்தது.

"அவன் போயிவிட்டானா, நீங்கள் அனுப்பினீர்களா? வர்ண இரகசியங்களோடு அனுப்பிவிட்டீர்களா?" என்று உரத்த குரலில் கேட்டார்.

"நான்தான் அனுப்பினேன். நான் விதித்த பரீட்சையில் அவன் கடைசியில் தோற்றுவிட்டான். என் மகளைச் சந்தித்துவிட்டான். அதனால் அனுப்பிவிட்டேன்."

"பொய்... பொய்... ஓவியரே பொய் சொல்லுகிறீர்கள். வர்ண இரகசியத்துடன் அவனைப் பல்லவ நாட்டிற்கு அனுப்பிவிட்டீர்கள்" என்று பிட்சு அழுத்தந் திருத்தமாகக் குற்றஞ் சாட்டினார்.



"இல்லை... இல்லவே இல்லை..." என்று அதே குரலில் ஓவியர் மறுமொழி கூறினார்.

பிட்சுவுக்கு ஆத்திரம் உச்சநிலையை அடைந்தது.

"ஓவியரே, உமது ஓவியத்தை ஓடும் நதியில் எடுத்துப் போடுங்கள்... சாளுக்கிய நாட்டிற்குத் துரோகம் செய்பவர்களுக்குக் கடுந் தண்டனை விதிக்க வேண்டும். குற்றம் புரிந்தீர்கள். குற்றத்தை மறைத்தீர்கள். இன்னமும் மறைக்கிறீர்கள். உண்மையைச் சொல்லிவிடுங்கள். அந்த வாலிபனை இங்கிருந்துப் போகச் சொல்லிவிட்டதாகப் பொய் சொல்லுகிறீர்கள். அவன் எங்கே சென்றான். உண்மையைச் சொல்லிவிடுங்கள்" என்று பிட்சு கூவினார்.

"இல்லை. இல்லவே இல்லை. குற்றம் புரியவில்லை... குற்றத்தை மறைக்கவுமில்லை... நீங்கள் இங்கிருந்து போகலாம். என்னைப் பணிசெய்ய விட்டு விட்டுச் செல்லலாம்" என்றார் கடுமையான குரலில்.

பிட்சு பயங்கரமாக நகைத்தார். "ஓ. உம்மைவிட்டு விட்டுப்போக நான் வரவில்லை. உண்மையை உடனே சொல்ல மாட்டீர்கள்... யாரங்கே?" என்று மீண்டும் குரல் கொடுத்தார்.

சாளுக்கிய வீரர்கள் இருவர் வந்து நின்றனர். "இவரைத் தூணில் கட்டி, உண்மையைக் கூறும்வரை சாட்டையால் விளாசுங்கள்" என்று கூறிவிட்டு, வேகமாக அந்த இடத்திலிருந்து சென்றுவிட்டார்.

# அத்தியாயம் - 13

# உனக்கு அவள் சகோதரி

வாதாபி நகரம் பரபரப்பு மிகுந்திருந்தது. அண்மைக் காலத்தில் களையிழந்திருந்த அந்த நகரத்தில் சென்ற சில நாள்களாகப் புத்துணர்வு பூத்திருந்தது.

இளவரசன் விநயாதித்தன் தலைநகருக்குத் திரும்பி வந்துவிட்டான். பல்லவ நாட்டின் மீது படையெடுத்துச் சென்று படுதோல்வியடைந்துத் திரும்பி வந்திருந்த சாளுக்கிய சக்கரவர்த்தி விக்கிரமாதித்தன் மனமுடைந்து நோய்வாய்ப் பட்டுக் கிடந்தார். மன்னர் வெளியே வருவதில்லை. பலகாத தூரம் படைகளைக் கொண்டு சென்றதால் ஏற்பட்ட செலவும், போரில் படை வீரர்களை ஆயிரக்கணக்கில் இழந்ததால் ஏற்பட்ட மக்கள் நஷ்டமும் சாளுக்கிய நாட்டில் அரசர்மீது வெறுப்பை ஏற்படுத்தி இருந்தன. துணிவுடன் வெளியே சொல்ல முடியாமல் மனத்திற்குள்ளேயே குமுறிக் கொண்டிருந்தனர்.

பல சிற்றரசர்கள் உரிய கப்பத் தொகைகளைச் செலுத்துவதையும் நிறுத்திவிட்டனர். அரசாங்கக் கருவூலம் கலகலத்துவிட்டது. விக்கிமாதித்தன் இவற்றை அறியாம லில்லை. அடிப்பட்ட வேங்கை குகைக்குள்ளே பதுங்கி யிருப்பதுபோல் மாளிகையை விட்டு வெளியே வராமலேயே இருந்தார். மன வியாகூலமும், முதிர்ச்சியும் ஒன்றுசேரவே படுத்த படுக்கையாகிவிட்டார். பெரும் தோல்விமட்டும் அவருக்குக் கவலையை அளிக்கவில்லை; அவரது அருமை மகன் விநயாதித்தன் கங்கநாடு சென்றவன் இன்னும் திரும்பி வரவில்லை என்பது அவருக்கு வேதனையை அளித்தது.



விநயாதித்தன் திரும்பி வந்துவிட்டான். வந்த களைப்பு நீங்கி ஓய்வு எடுக்காமல் தந்தையைக் காண அந்தப்புரத்திற்கு விரைந்தான்.

மகனைக் கண்டவுடன் விக்கிரமாதித்தனுக்குப் புதுத் தெம்பு பிறந்துவிட்டது.

"மகனே..." என்று வாய்விட்டுச் கூவினார். அவரால் எழுந்திருக்க முடியவில்லை. ஆனால் விநயாதித்தன் தந்தையிடம் ஓடோடிச் சென்று அவரை அணைத்துக் கொண்டு தந்தையின் கரங்களை எடுத்துத் தன் கண்களில் ஒத்திக் கொண்டான். கரங்கள் சில்லிட்டன. நீரால் நனைந்தன. விக்கிரமாதித்தன் திடுக்கிட்டான்.

"விநயாதித்தா ஏன் கண்கள் கலங்குகின்றன?" என்று கேட்டார்.

"கலங்கவில்லை தந்தையே" என்று கூறிய விநயாதித்தன் மீண்டும் கண்களைத் துடைத்துக் கொண்டான்.

"இரண்டு சமயங்களில்தான் விழியில் நீர் தளும்பும். பெரும் துக்கம் வரும்போது; மிக மகிழ்ச்சி ஏற்படும்போது..." என்றார் சாளுக்கிய மாமன்னர்.

"இரண்டுக்கும், இப்போது சந்தர்ப்பமில்லை" என்றார் விக்கிரமாதித்தன்.

"பிறகு?"

"மகாமேரு சிறு குன்று போலாகிவிட்டதே என்று நினைக்கும்போது கலங்கிவிட்டேன்".

சிறிது நேரம் தந்தைக்கும் மகனுக்குமிடையே பேச்சு ஏதும் நடைபெறவில்லை. மௌனம் குடி கொண்டிருந்தது. விக்கிரமாதித்தன் மௌனத்தைக் கலைத்தார்.

"எதற்கும் கலங்காதவன்தான் சுத்த வீரன். கலக்கம் கோழைத்தனத்தை வளர்த்துவிடும். நீ ஏன் கலங்குகிறாய் என் மகனே! என் மகன் விநயாதித்தன் மாபெரும் வீரன் என்று இதுவரை நம்பினேன். ஹூம் எனக்குப் பிறகு இனி சாளுக்கிய நாட்டில் வீரனே இல்லாது போய்விடுவானோ என்ற கவலை எனக்குப் புதிதாகப் பிறந்துவிட்டது விநயாதித்தா. புதிதாகப் பிறந்துவிட்டது" என்று அவர் கூறும்போது பழைய கம்பீரத்திற்குக் குறைவில்லை".

"தந்தையே! எனக்கும் கவலைதான் பிறந்துவிட்டது. சாளுக்கிய நாட்டில் வீரனே இல்லாது போயிவிடுவாரோ என்ற கவலை கடந்த சில நாள்களாகத் தோன்றிவிட்டது" என்று விநயாதித்தன் பேச்சைத் தொடங்கினான்.

"கடந்த சில நாள்களாக ஏற்படக் காரணம் என்ன? உன் மீதே உனக்கு நம்பிக்கை இப்போதுதான் குறைந்ததா?" என்று விக்கிரமாதித்தன் கேட்கும்போது அதில் நேரிடைத் தாக்குதல் இருந்தது.

"நான் இன்னும் சுய நம்பிக்கையை இழக்கவில்லை. ஆனால்..."

"ஆனால்... என்ன... சொல்வதை நேரிடையாக சுற்றி வளைக்காமல் சொல்".

"நமது பிரஜைகளுக்குத் தான் நம்பிக்கை குறைந்து வருகிறது".

"இன்றுதான் வருகிறாய்! எப்படி நமது மக்களின் நாடி உனக்குத் தெரிந்தது?"

"அரசே! நான் தங்கள் மகனாக இருந்தாலும் இந்த நாட்டில் சாதாரண குடிமகன். கடந்த பல மாதங்களாக நாட்டின் மூலை முடுக்குகளிளெல்லாம் சாதாரண பிரஜை என்ற முறையில் அலைந்தேன். அப்போது கண்டதையும் கேட்டதையும் கொண்டு ஒரு முடிவுக்கு வந்தேன்".



விநயாதித்தன் இவ்வாறு சொன்னபோது விக்கிரமாதித்தன் மெல்ல படுக்கையினின்று எழுந்து தலையணையில் சாய்ந்து கொண்டார். எழுந்து பல மாதங்களாகிவிட்டன. அவர் அப்படி உட்கார்ந்தது, தன் மகன் சொல்வதை ஆவலுடன் கேட்கச் சித்தமாயிருப்பதை உணர்த்தியது.

"தந்தையே! சாளுக்கிய நாட்டைக் கண்டு உலகமே நடுநடுங்கியது. நமது நாட்டின் வளப்பத்திற்கு ஈடு இணையே கிடையாது. நமது மக்கள் கடுமையான உழைப்பாளிகள். ஆனால் தெற்கே படையெடுத்துப் போன நமது செய்கையை அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை.

அவர்கள் என்றால் நமது மாபெரும் வீரர்களின் மனைவியர், தாய், சகோதரிகள் ஒப்புக் கொள்ளவில்லை. தந்தையை இழந்த மகளும், கணவனை இழந்த மனைவியும் அடைந்துள்ள துக்கம் சொல்லி முடியாது. ஒரு கிராமத்தின் வழியே வந்து கொண்டிருந்தேன். அறுவடையான கதிர்களை அறுக்க ஆளில்லை. சில நிலங்களில் நீர் இன்றி பயிர் காய்ந்து கொண்டிருந்தது. நான் கேட்டேன். அந்தக் கிராமத்துப் பெண்கள் கோவெனக் கதறி அழுதுவிட்டார்கள். ஓர் ஆண் பிள்ளைகூட இல்லாமல் அனைவரும் போரில் மாண்டு விட்டார்களாம். வீரனை இழந்த அந்தக் கிராமத்தில் வீரன் எப்படித் தோன்றுவான். அதை நினைக்கும்போது எனக்கு வேதனை மிகுந்துவிட்டது. போரின்மீது எனக்குக் கோபம் கோபமாக வந்தது. நான் அசோகரைப்போல் போரை வெறுக்கவில்லை. ஆனால் போரில் தோல்வி எனும் தரித்திர லட்சுமி நம்மைக் காதலித்தாளே அவளை வெறுக்கிறேன்..." என்றான்.

விக்கிரமாதித்தன் மெல்ல நகைத்தார்.

"என்னப்பா சிரிக்கிறீர்கள்?"

"நல்லவேளை தோல்வியைத்தானே வெறுக்கிறாய்... எங்கே போரையே வெறுத்து விடுவாயோ என்று நினைத்தேன்..."

"புலிக்குப் பிறந்தது பூனையாகுமா...? ஆனால், நமது வெற்றிப் பூரிப்பில் அகலக் காலை வைத்துவிட்டோம் என்று நாட்டு மக்கள் பேசிக் கொள்கிறார்கள்..."

"அகலக் காலை வைத்தேனா? காஞ்சியிலிருந்து பல்லவனை ஓடஓட விரட்டினேன். காவிரிக்கரை வரை அவன் ஓடினான்...' என்று கூறிச் சற்று நிறுத்தினார். விக்கிரமாதித்தன் பிறகு, "இங்குதான் நான் தவறு செய்துவிட்டேன். எதிரியின் நாட்டிற்குள் எவ்வளவு தூரம் செல்லலாமோ அவ்வளவுதான் செல்லலாம் என்பதை மறந்துவிட்டேன்..." என்று கூறும்போது அவரது குரல் தழுதழுத்தது.

தந்தையின் கண்கள் கலங்குவதை அறிந்த விநயாதித்தன் தந்தைக்கு உற்சாகமூட்ட விரும்பி, "சக்கரவர்த்தி அவர்களே! தங்கள் துயர் தீர்க்கவே, மனோ வியாகூலம் தீர்க்கவே நான் ஓடோடி வந்திருக்கிறேன். கவலையை விடுங்கள். உங்களுடைய திட்டம் என்றுமே தவறாகாது. பல்லவ நாட்டில் கடைசிக் கோடிவரையில் சென்றீர்கள். திரும்பி வரும்போது நமது படை வீரர்களுக்கு நல்ல விருந்து கொடுத்தீர்கள். அவர்கள் ஊரைக் கொளுத்தினார்கள். தானியக் கிடங்குகளைக் கொளுத்தினார்கள்..." என்று கூறி வரும்போது விக்கிரமாதித்தன் குறுக்கிட்டு, "நமது வீரர்கள் முட்டாள்கள்... தானியங்களைக் கொளுத்தாமல் அவற்றைக் கொண்டு வந்திருந்தால் நாட்டின் பஞ்சத்தையாவது தடுத்திருக்கலாம்" என்றார்.

"இப்போது பல்லவ நாட்டில் மெல்ல மெல்லப் பஞ்சம் பரவ ஆரம்பித்திருக்கிறது..." என்றான் விநயாதித்தன்.



விக்கிரமாதித்தன் கம்பீரமான குரலில், "மகனே! என் திட்டம் தோல்வியடைவதில்லை. இயற்கையான பஞ்சத்துடன் மேலும் திண்டாடவிடும் செயற்கைப் பஞ்சத்திற்கும் ஏற்பாடு செய்திருக்கிறேன். பானுகேசியும் அவரது சீடர்களும் காஞ்சிபுரத்திற்கு முன்பே சென்று விட்டனர். அங்கேயே திட்டங்களைத் தீட்டி பல்லவ நாட்டில் குழப்பத்தை விளைவிக்க ஏற்பாடு செய்துவிட்டேன்" என்றார்.

"பானுகேசியா? அவரால் பௌத்த சங்கத்திற்கே கெட்ட பெயராயிற்றே. முற்றும் துறந்த அந்த பிட்சு பெண்களைக் கண்டால் மட்டும் மனம் மாறிவிடுவாரே! அவரைக் காஞ்சிக்கா அனுப்பினீர்கள். அழகிய பெண்கள் அங்கு உண்டு. அவர்களது வலையில் வீழ்ந்து தான் வந்த கடமையை மறந்துவிடுவாரே?" என்றான் விநயாதித்தன்.

"பிட்சு ஏதாவது தவறு செய்தால் உடனே திருத்த சமுத்திரநாதனை அனுப்பியுள்ளேன்" என்று விக்கிரமாதித்தன் கூறவும் விநயாதித்தன் திருப்தியடைந்தவன் போல் தலையசைத்தான்.

"சமுத்திரநாதன் காஞ்சி மாநகரில் நடுவில் பெரும் மாளிகையில் வாழ்கிறான். அவனுக்கு ஏராளமான சிப்பந்திகள்! பல்லவ நாட்டில் எப்படியெல்லாம் குழப்பத்தை ஏற்படுத்த முடியுமோ அப்படியெல்லாம் செய்யத் திட்டமிட்டுள்ளான். ஆனால், காஞ்சி நர்த்தகி ராஜசுந்தரி அவன் வசப்பட்டால் பல்லவர்களின் கொட்டத்தை நான் நொடியில் அடக்கிவிடுவேன்" என்று கம்பீரமாகப் பேசினார்.

"ராஜசுந்தரியா?" என்று கேட்டான் விநயாதித்தன்.

"ஆமாம்..." என்று அழுத்தத் திருத்தமாக கூறிய விக்கிரமாதித்தன், "உனக்கு ஒரு வகையில் சகோதரியாக வேண்டும்" என்று கூறிச் சிரித்தார்.

"சகோதரியா?" என்று கேட்ட விநயாதித்தனுக்கு அவர் கூறிய மறுமொழி அதிர்ச்சியை அளித்தது.

# அத்தியாயம் - 14

# ஒற்றனின் மனைவி

**கா**ஞ்சி நகரத்துப் பேரழகி, ஆடலழகி ராஜசுந்தரியின் பிறந்த நாள் விழா. ராஜசுந்தரியின் மாளிகை விதவிதத் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மாளிகைக்கும் புதுச் சுண்ணம் அடித்திருந்தனர். மாளிகையின் வாயிலிலுள்ள பணியாட்களுக்குப் புத்தாடை வழங்கியிருந்தனர். மாளிகையிலுள்ள மகளிர் அனைவரும் பட்டாடை உடுத்திப் பட்டாம் பூச்சிகளைப் போல் இங்கும் அங்கும் அலைந்து கொண்டிருந்தனர். பன்னீர் செம்பில் ஊற்றப்பட்ட பன்னீரை வருபவர் மீது தெளிப்பதற்கு நான்கு பேர் வாயிலில் நின்று கொண்டிருந்தனர்.

முல்லையும் செண்பகமும் கூடைகூடையாகக் கொண்டுவர ஏற்பாடு செய்திருந்தனர். ஆனால் மலர் விளையும் நிலங்களில் போதுமான நீரில்லாமையால் அவை வாடி வதங்கியிருந்தன. அதனால் எதிர்பார்த்த பூக்கள் வரவில்லை. மலர்க்கூடையைக் கொண்டு வரும் பொறுப்பேற்றவன் இங்கும் அங்கும் ஓடிக்கொண்டிருந்தான்.

ராஜசுந்தரி நீராடுவதற்குப் பெருந் தொட்டியில் தண்ணீரை நிரப்பி வைத்திருந்தார்கள். இளஞ் சூடான அந்த நீரில் பலவித நறுமண மூலிகைகள் கலந்திருந்தன. செண்பக மொட்டுக்களைத் தூவியிருந்தார்கள்.

ராஜசுந்தரி தனது படுக்கை அறையினின்று எழுந்து வரவில்லை. விடியும் நேரத்திலேயே எழுந்து பழக்கப்பட்ட ராஜசுந்தரி அன்று அதிக நேரம் உறங்குவது பணிப் பெண்களுக்கு வியப்பாய் இருந்தது. செவிலித்தாய் கதவைத் தட்டி எழுப்பலாமா என்று கதவு அருகே செல்வதும் திரும்பி வருவதுமாக இருந்தாள்.



"குழந்தை, நேற்றுக் கடை வீதியினின்று திரும்பிவர நேரமாகிவிட்டதா?" என்று கேட்டாள் செவிலித்தாய். குழந்தை என்று ராஜசுந்தரியை அழைப்பது வழக்கம்.

"ஆமாம் ஆமாம்; வரும்போது அம்மாவின் முகம் கடுகடுவென்றிருந்தது. ஒன்றுமே பேசவில்லை. உணவுத் தட்டு அப்படியே இருந்தது..." என்றாள் பணிப்பெண் ஒருத்தி.

"என்னிடம் ஏன் சொல்லவில்லை...?" என்று கடிந்து கொண்டாள் செவிலித்தாய்.

"நீங்கள் தூங்கிவிட்டீர்கள். எப்படி எழுப்புவது என்று...!" எனப் பயத்துடன் கூறினாள்.

"தூங்கினால் என்ன? குழந்தைக்கு என்ன நேர்ந்ததோ? இப்படி பட்டினியாகப் படுத்துக்கொண்டால் என்ன ஆவது?" என்று கவலைப்பட்டாள் செவிலித்தாய்.

ராஜசுந்தரி படுத்திருக்கும் அறையின் கதவைத் தட்டினாள். ராஜசுந்தரி சிறிது நேரம் கழித்து வந்து கதவைத் திறந்தாள். அவள் முகம் கவலையால் கறுத்திருந்தது. கண்களுக்கு அடியில் கருவட்டம் அவளது உறக்க மின்மையைப் புலப்படுத்தின.

ராஜசுந்தரி வெளியே வரவில்லை. செவிலித்தாயை உள்ளே அழைத்தாள். மஞ்சத்தில் அமரச் செய்தாள்.

அந்த அறைக்குள் அவள் வந்து பல மாதங்களாகின்றன. தரையில், இரத்தினக் கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது. பெரு நிலைக் கண்ணாடி தத்ரூபமாக உருவத்தைப் பிரதிபலித்த வாறிருந்தது.

ராஜசுந்தரியின் முகத்தைக் கூர்ந்து கவனித்த செவிலித்தாய் "குழந்தாய், நேற்று உனக்கு என்ன நேர்ந்தது?" என்று கேட்டாள். ராஜசுந்தரி உடனே மறுமொழி கூறவில்லை.

"இரவு நேரங்கழித்து வந்தாயா? எங்கே சென்று இருந்தாய்?" என்று மீண்டும் கேட்டாள் செவிலித்தாய்.

ராஜசுந்தரியின் கண்கள் கலங்கின. தாயின் மார்பிலே முகத்தைப் புதைத்துக்கொண்டு விம்மினாள்.

"அம்மா, நேற்று நான் பெரும் அவமானமடைந்து விட்டேனம்மா" என்று கூறுவதற்குள் அவளுக்குக் 'கோ'வெனக் கதறிவிடலாமா என்று தோன்றியது.

"யார் உன்னை அவமானப்படுத்தியது, சொல் குழந்தாய்! இப்போதே அவனது தலையை உனது காலடியில் உருளச் செய்கிறேன்" என்று பரபரப்புடன் தனக்கே அவமானம் நேர்ந்துவிட்டதுபோல் கூறினாள் செவிலி.

ராஜசுந்தரிய கண்களைத் துடைத்துக் கொண்டாள். தாயின் முகத்தை உற்று நோக்கினாள்.

"அம்மா, தலையைக் காலடியில் உருளவைப்பது அவ்வளவு எளிதாகத் தோன்றவில்லை" என்றாள்.

"ஏன், எனக்குச் சக்தியும் செல்வாக்கும் இல்லை என்று நினைக்கிறாயா? கோட்டைத் தளபதி எனக்குத் தெரிந்தவர். நம் வீட்டிற்கு வருவாரே தனாதிகாரி அவரிடம் சொன்னால் போதாதா? எதுவும் வேண்டாம். நமது பரஞ்சோதியிடம் ஒரு வார்த்தை சொன்னால் என்ன ஆகும் தெரியுமா?" தாய் வேகமாகப் பேசினாள்.

"ஒன்றும் ஆகாது. அம்மா, அந்த மனிதரை ஒன்றுமே செய்ய முடியாது" என்று கூறிய ராஜசுந்தரி முதல் நாள் இரவு நடந்தவற்றைத் தெரிவித்தாள்.

"அவன் பெயர் என்னவென்று சொன்னாய்?" என்று கேட்டாள் செவிலி!



"சமுத்திர நாதன்" என்று அழுத்தந் திருத்தமாகக் கூறினாள் ராஜசுந்தரி.

செவிலி திடுக்கிட்டாள்.

"சமுத்திரநாதனா?" என்றாள்.

"ஆம்... ஏன் திகைக்கிறீர்கள்? உங்களை அவருக்குத் தெரியுமா?" என்று ராஜசுந்தரி கூறும்போது செவிலிக்குத் தலை சுற்றியது. எங்கிருக்கிறோம் என்ற நினைவேயில்லை.

வாதாபி நகரில் இருபதாண்டுளுக்கு முன்பு நடந்த சம்பவம் அவள் நினைவுக்கு வந்தது. பல்லவர் படைகள் வாதாபியை முற்றுகையிட்டன. வாதாபி மாளிகை தீக்கிரையாக்கப்பட்டது. இருள் வேளையில் மாளிகையினின்று சுரங்க வழியாக சிலர் தப்பி ஓடிக் கொண்டிருந்தனர். இன்னும் சிறிது தாமதித்தால் அந்த இரகசிய வழியை மூடிவிடுவார்கள். பணிப்பெண் சிறு விளக்கை ஏந்தியிருக்கிறாள். இருபத்தைந்து வயது மதிக்கத் தக்க மங்கை பிறந்து ஒரு வாரமே ஆகி இருந்த சிசுவுடன் வெளியேறுகிறாள்.

தப்பிப் பிழைத்தோம், என்று சுரங்கப் பாதையைக் கடந்து வந்து சேர்கிறாள். இனியும் வாதாபியில் இருந்தால் உயிருக்கு ஆபத்து. அந்தப் பணிப் பெண்ணும், இளமகளும், குழந்தையும் காடு மலைகளைக் கடந்து தெற்கு நோக்கி நடந்து வருகிறார்கள்.

பணிப் பெண்தான் செவிலித்தாய். பிறந்த சிசுதான் ராஜசுந்தரி. ராஜசுந்தரியின் தாயெங்கே? அது வேறு கதை.

செவிலித்தாய் பெருமூச்சுவிட்டாள்.

"ஏனம்மா, ஏதோ சிந்தனையிலாழ்ந்துவிட்டீர்கள்?" என்றாள் ராஜசுந்தரி.

"ஒன்றுமில்லை! பழைய சம்பவங்கள் நினைவுக்கு வந்துவிட்டன.

"எனக்கும்தான் சொல்லுங்களேன்".

"இப்போது வேண்டாம். சமயம் வரும்போது சொல்கிறேன். இப்போதே கவலை நிறைந்த மனத்தினளாய் இருக்கும் உனக்குப் பழைய கதை வேதனையைத் தரும். நேற்றைய சம்பவம் சாதாரணமான தன்று. ஆரம்பத்திலேயே கிள்ளி எறிய வேண்டும் குழந்தாய்" என்று செவிலி கூறும்போது குரலில் கவலை நிறைந்திருந்தது.

"தாயே, தங்களுக்குச் சமுத்திரநாதனைத் தெரியுமா?" என்று கேட்டாள் சுந்தரி.

செவிலி நேரிடையே மறுமொழி கூறவில்லை. "அவர் இங்கே வருவதாகவா கூறியிருக்கிறார்" என்று கேட்டாள்.

"ஆம்; அவரைக் கண்டாலே எனக்குப் பிடிக்கவில்லை" என்றாள் சுந்தரி.

"ஆனால் அவனுக்கு மிகவும் பிடிக்கும். அவனது பார்வையைத் தவிர்க்க வேண்டும். அவன் வருவதைத் தவிர்க்க வேண்டும். இன்றைய பிறந்த நாள் கொண்டாட்டத்தை நிறுத்திவிடு. வாயில் கதவுகளைத் தாளிட்டுவிடு. வாயிலிலேயே வருபவர்களுக்கு 'உடம்பு சரியில்லை" என்று சொல்லித் திருப்பியனுப்பிவிட ஏற்பாடு செய்துவிடுகிறேன்" என்று மளமளவென்று கூறினாள் தாய்.

"ஏன் அம்மா..." என்று கேட்டாள் ராஜசுந்தரி.

"முக்கியமான காரியம். உடல் சரியில்லாதவளாகவே இன்று முழுவதும் நீ நடிக்க வேண்டும்" என்றாள் தாய்.

"அம்மா...!"



"ஆமாம், குழந்தாய். உன் நன்மைக்குத்தான் சொல்லுகிறேன்..."

"பிறந்த நாள் விழாவுக்கு நவரத்தின வியாபாரிகள் வருவார்கள். அரண்மனை அதிகாரிகள் வருவார்கள்... இன்னும் இன்னும் குமாரதேவன் வருவதாகக் கூறியிருக்கிறார்... கதவை மூடிவிட்டால், என்னை என்னவென்று நினைத்துக் கொள்வார்கள்...?"

"நினைத்துக் கொள்ளட்டுமே... சமுத்திர நாதனைத் தடுக்க வேண்டுமென்றால், இப்படிச் செய்துதானாக வேண்டும்..."

"எல்லாருக்கும் அழைப்பு அனுப்பியுள்ளோமே".

"இருக்கட்டுமே சமுத்திரநாதனுக்கு அனுப்பினாயா?"

"இல்லை..."

"அழைப்பு அனுப்பாதவன் வருகிறான். அழைப்பு அனுப்பப்பட்டவர்கள் வராமல் தடுக்கப்பட வேண்டும்".

"அ...ம்...மா... இதென்னம்மா யோசனை..."

"ஆமாம்; உனது நன்மைக்காகத்தான். அந்த சமுத்திரநாதன் விரோதி நாட்டு ஒற்றன். அவன் வருவதால் நமக்குப் பெரும் அபாயம்..."

செவிலி இவ்வாறு கூறியவுடன் ராஜசுந்தரி திடுக்கிட்டாள். "அப்படிப்பட்ட ஒற்றனை உடனே பல்லவ அதிகாரிகளிடம் சிக்க வைத்து விடுவோம்" என்று பரப்புடன் கூறினாள் சுந்தரி.

"அதுவும் சரியில்லை..."

"ஏன் அம்மா...?"

"அவர் என் கணவர்" என்று செவிலி கூறவும் சுந்தரி திடுக்கிட்டாள்.

# அத்தியாயம் - 15

## பாறையில் மோதிய அலை

பல்லவ சக்கரவர்த்தி பரமேச்வரவர்மர் கூறிய செய்தியைக் கேட்டுத் திடுக்கிட்டாலும் அவர் மனதில் ஓர் தைரியம் இருந்தது. தனது ஒரே மகன் நரசிம்மன் அஜந்தாக் காடுகளுக்குச் செல்லாமல் வழியிலேயே அங்கிருந்து திரும்பி விட்டான் எனும் செய்திதான் அது. அதில் திடுக்கிடும் அச்சம் ஏதுமில்லை, அவரைப் பொறுத்தவரை. ஆனால், ஒற்றனுக்கும், அமைச்சருக்கும் அந்தச் செய்தி கவலையைத்தான் அளித்தது. இளவரசர் காஞ்சிபுரம் வந்து பல நாட்களாகின்றன என்பதே அந்தச் செய்தி. காஞ்சி வந்த தன் குமாரன் தன்னைச் சந்திக்க வரவில்லையே என்ற கவலை இருந்தாலும் அவன் ஏதாவது முக்கியமான அலுவலை ஏற்றுக்கொண்டு தான் தன்னை வந்து பாராமல் இருக்கிறான் என்பதை உணர்ந்து கொண்டார். மாமல்லபுரத்திற்குப் போயிருப்பார் என்று எண்ணினார். அவருக்குச் சிரிப்பு வந்தது. சிரிப்பை மெல்ல அடக்கிக் கொண்டு "இளவரசரைக் கடைசியாக எங்கே பார்த்தீர்கள்? மாமல்லபுரத்திலா?" என்று கேட்டார்.

ஒற்றர் படையைச் சேர்ந்த அந்த வீரன் திகைத்தவாறு, "ஆமாம் சக்கரவர்த்திகளே! மாமல்லபுரத்தில்தான்" என்றான்.

"மாறு வேடத்திலா?" என்று பரமேச்வரவர்மர் கேட்டார்.

"மாமல்லபுரம் வரும்வரை வேறு உருவத்தில்தான் விளங்கினார்" என்றான் ஒற்றன்.

"இப்போது எங்கே போய்விட்டார்" அமைச்சர் கேட்டார்.



"தெரியவில்லை. அவரைத் தொடரவும் முடியவில்லை" என்றான் வீரன்.

பரமேச்வர வர்மர் பெரு மூச்சுவிட்டார். அரசாங்க அலுவல்களில் பொறுப்பு இல்லாமலேயே கலை, கலை என்று தன் மனத்தை மாற்றிக் கொண்டுவிடுவானோ என்று கவலை கொண்டார்.

அமைச்சர் மெல்லிய குரலில் கேட்டார்:

"இளவரசரை நான் உடனே சந்திக்க வேண்டும். அவர் எங்கே இருக்கிறார் என்பதை எப்படியாவது தெரிந்து வருகிறேன். தங்களுக்கு கவலை தரக்கூடாது; அதே சமயம் மிகவும் அவசரமான செய்தியை இளவரசரிடம் கூறி அதை நிறைவேற்ற வேண்டும். இளவரசர் இதுபோல் சிற்பம் சித்திரம் என்று அலைந்து கொண்டிருந்தால் பெரும் நெருக்கடியே உருவாகிவிடுமோ என்று அஞ்சுகிறேன்".

பரமேச்வர வர்மன் ஏதும் மறுமொழி கூறவில்லை. அவருடைய சிந்தனை பல ஆண்டுகளுக்குப் பின் நோக்கி விரிந்தது. தனது கண் முன்பு அந்த நிகழ்ச்சியைக் கொண்டு வர முயன்றார்.

அப்போது நரசிம்மனுக்கு இள வயது. இளவரசுப் பட்டம்கூட சூட்டவில்லை. கவலையே இல்லாத பருவம். காலை நான்கு மணிக்கு எழுந்து விடுவான். ஏகாம்பர ஈசர் கோயிலுக்கருகிலுள்ள திருநாவுக்கரசர் மடத்திற்குச் சென்று நாவுக்கரசரது பதிகங்களைப் பாடச் சொல்லிக் கற்றுக் கொள்வான். பரமேச்வர வர்மர் அரசியல் அலுவலாக சபை மண்டபத்திற்குச் செல்லும்போது நரசிம்மனையும் உடன் அழைத்துச் செல்வதற்காகத் தேடுவார். மலர்ந்த முகத்துடன் ஆயத்தமாக நிற்பான்.

"அப்பா, கூரம்வரைப் போய் வரட்டுமா?" என்று கேட்பான். இல்லாவிடில், "வல்லத்தில் ஒரு பெரும்

பாறையைப் பாட்டனார் குடைந்தாராமே அதைப் போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன்" என்பான்.

பரமேச்வர வர்மர் ஏதும் பேசமாட்டார். பிறகு மெல்லிய குரலில், "நரசிம்மா வல்லத்திற்குப் போக வேண்டாம். கூரம் அருகேதான் இருக்கிறது. மற்றொரு நாள் போகலாம். அவற்றைவிட மிக முக்கியமான பணி ஒன்றிருக்கிறது. என்னுடன் சபை மண்டபத்திற்கு வா. அடுத்த மாதம் உனக்கு இளவரசுப் பட்டம் சூட்ட எண்ணியுள்ளேன். அதற்குள் உள்படு கருமத் தலைவரையும், ஆளும் கணத்தாரையும், திருமந்திர ஓலை நாயகத்தையும் நீ சந்தித்து அவர்களுடன் பேசிப் பழக வேண்டும். புதிய வரி விதிப்பு பற்றி யோசிக்கப் போகிறோம். நாங்கள் பேசும்போது நீ உடனிருந்தால் பலவற்றை அறிந்து கொள்ளலாம்..." என்பார்.

நரசிம்மன் மௌனமாயிருப்பான். தந்தையுடன் சபை மண்டபத்திற்குச் செல்வான். அமைச்சர் மண்டலத்தாரும், மற்றவர்களும் விவாதித்துக் கொண்டிருக்கும்போது நரசிம்மன் கவனம் வேறு எங்கோ இருக்கும்.

கடிகாசலத்தைப் பற்றிய பேச்சு வந்தது. அப்போது நரசிம்மன் ஆவலுடன் "அப்பா!" என்று ஏதோ கூற, வாயெடுத்தான். அருகே இருந்த அமைச்சர் அவன் காதருகே சபை மண்டபத்தில் இருக்கும்போது சக்கரவர்த்திகளே என்று அழைக்க வேண்டும்" என்றார்.

இளைஞன் நரசிம்மனுக்கு அவை ஏதும் கவனத்தில் இல்லை. மல்லைக் கடற்கரையிலேயே இருந்தது. அந்த அழகிய கடற்கரை அவனது மனத்திலே பதிந்துவிட்டது. சிறுசிறு குன்றுகளும், குன்றுகளுக்கு அப்பால் பரந்த மணல் வெளியும் பிறகு மறுபடியும் பாறைகளும் பாறைகளின் மீது அலைமோதும் அழகும் அவனை இந்த உலகைவிட்டு வேறு உலகிற்கே அழைத்துச் சென்றுவிடும். ஒரு சமயம் - அது சாளுக்கிய விக்கிரமாதித்தனின் படையெடுப்பிற்கு முன்பு -



காஞ்சி மாநகருக்கு கடல் கடந்த நாட்டினின்று பல வணிகர்கள் வந்தனர். அவர்கள் அனைவரும் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு சோழ நாட்டினின்று வாணிபம் செய்யும் பொருட்டுச் சென்றவர்கள். மல்லைத் துறைமுகத்தில் அவர்கள் வந்த கலன்கள் நங்கூரம் பாய்ச்சப்பட்டு நின்றிருந்தன. கடல் மல்லைத் துறையினின்று காஞ்சிமா நகரத்திற்கு நேர் சாலை. சோனக நாட்டுக் குதிரைகளும், அத்திரி எனப்படும் கலப்புமிக்க கோவரிக் கழுதைகளும், யானைகளும் அந்தச் சாலையில் சென்றவாறு இருக்கும்.

வணிகர்கள் தங்கள் குடும்பத்துடன் வந்திருந்தனர். அவர்களுக்குள் சாவக நாட்டு அரச குடும்பத்தைச் சேர்ந்த வயது முதிர்ந்த ஒருவரும் அவருடைய நெருங்கிய உறவினரின் மகள் என்று சொல்லப்படும் சிறுமி ஒருத்தியும் வந்திருந்தனர். காஞ்சி மாநகரைக் காணும் ஆவலில் அவர்கள் வந்திருந்தனர். அவர்களுள் சிலர் பல்லவ நாட்டிலுள்ள வடமொழி, தமிழ்மொழி பயில்விக்கும் பல்கலைக் கழகத்தைப் பற்றி விசாரித்து அறிந்து கொண்டு தங்கள் நாட்டிற்குத் திரும்பிச் சென்று இளைஞர்களைக் கல்வி பயில அனுப்ப வேண்டும் எனும் நோக்கத்துடன் வந்திருந்தனர். சில புத்த பிக்குகளும் இருந்தனர்.

சின்னஞ்சிறு கிளியைப்போல் இருந்த அந்தச் சிறுமி மீது இளைஞன் நரசிம்மனுடைய கவனம் சென்றது. அகன்ற கண்களுடன், செம்பொன் மேனியும், நகைக்கும்போது முத்துப் பரல்களை உள்ளடக்கியிருந்த சிவப்பு விரித்தாற் போன்ற தோற்றமும், மெல்ல நடப்பதே கிடையாதோ - எப்போதும் மான் போல் துள்ளல்தானோ எனும் படியான நடையும் இன்னும் நான்கு, ஐந்து ஆண்டுகள் கழிந்தால் அவளது மேனி அமைப்பு எவ்வாறு எழிலுடன் விளங்கும் என்பதை முன்பாக அறிவிக்கும் தோற்றமும் நரசிம்மன் சிந்தையைக் கவர்ந்ததில் வியப்பில்லை.

பரமேச்வரருடைய பிரத்யேக விருந்தினராக அந்த முதியவர் அமைந்துவிட்டார். மன்னரும் அவரும் நீண்ட

நேரம் கடல் கடந்து நாடுகளைப் பற்றிப் பேசுவர். பிராகிருத மொழியில் அவர் பாண்டித்யம் பெற்றிருந்த படியால் பேச்சு இலக்கியம், புராணம், ஆட்சி முறை, கலை இப்படியாக விரிந்தது.

முதியவர் கேட்டார்: "நான் கலத்திலிருந்து இறங்கும் போது அங்கே சிறு நகரமே உருவாகியிருப்பதைக் கண்டேன். தங்கள் பாட்டனார் புதுவிதக் கோயில்களை அமைக்க முயன்றிருக்கிறாராமே" என்று.

பரமேச்வரவர்மர் முதியவரையும், அவருடன் வந்த சிறுமியையும் அழைத்துக்கொண்டு கடல் மல்லைக்குச் சென்றார். அவர்களுடன் நரசிம்மனும் சென்றான்.

பாறைகளைக் குடைந்து மண்டபங்களாக ஆக்கியுள்ள அதிசயத்தை பல்லவ சக்கரவர்த்தி விளக்கிக் கொண்டே சென்றார். பாறைச் சரிவுகளில் குடையப்பட்ட குகைபோன்ற கோயில்களைக் காண்பதில் என்றுமே நரசிம்மனுக்கு மகிழ்ச்சி.

"ஏன் தந்தை பாதியிலேயே பாறைகளைக் குடைவதை நிறுத்திவிட்டார்கள்?"

"ஏன் அப்பா இந்தப் பாறையை அரைகுறையாகச் செதுக்கியுள்ளார்கள்?"

"ஏன் அப்பா இங்கே ஒரு பெரிய யானையை எதற்காக பாட்டனார் அமைத்துள்ளார்" என்று கேள்விகளை நரசிம்மன் கணைபோல் விடுப்பார்.

பல்லவ சக்கரவர்த்தி புன்முறுவல் மட்டுமே மறுமொழியாகக் கூறுவார். ஒரே ஒரு சமயம், "எல்லாம் நீ வந்து பூர்த்தி செய்ய வேண்டும் என்பது அவர் ஆசை. அதனால் அப்படியே விட்டுவிட்டுச் சென்றுவிட்டார்" என்பார்.



"என்னை அவருக்குத் தெரியுமா அப்பா? மாமல்லரென்று புகழ் பெற்ற நரசிம்மவர்மருக்கு என்னைத் தெரியுமா அப்பா?" என்று இளைஞன் நரசிம்மன் களங்கமற்ற கேள்வியைக் கேட்பான். சக்கரவர்த்தி கலகலவென்று நகைத்து, "ஓ! தெரியுமே! நீ எங்களுக்கு மகனாகப் பிறக்கப் போகிறாய் என்பது அவருக்குத் தெரியும். தான் அறிந்தவற்றையெல்லாம் உனக்குக் கற்றுத் தருமாறு கூறியிருக்கிறார்" என்பார்.

இளைஞன் நரசிம்மனுக்குப் பெருமை பிடிபடாது. அன்றே தனது பாட்டனாரைப் போல் மாவீரனாகவும், கலை, வல்லவனாகவும் ஆகிவிட்டதுபோல் நினைத்துக் கொள்வான்.

மாமல்லபுரத்தைக் கடல் கடந்த நாட்டிலிருந்து வந்த சிறுமியுடன் சுற்றிப் பார்க்கையில் நரசிம்மனுக்கு மிகப் பெருமையாக இருந்தது. தன் மனத்தில் தோன்றும் கற்கனைகளுக்கெல்லாம் உருவங்கொடுத்து உற்சாகமாகப் பேசுவான். "வடக்கே அஜந்தா என்ற ஊர் இருக்கிறது. அங்கே இப்படித்தான் பாறைகளைக் குடைந்து கோயில்களாக்கி அழகிய சித்திரங்களை வரைந்திருக்கிறார்களாம். அதேபோல் இங்கும் நான் மற்றொரு அஜந்தாவைக் கொண்டுவரப் போகிறேன்" என்பான். சிறுமி கலகலவெனச் சிரிப்பாள். அவை கோயில் கதவுகளிலுள்ள சிறுசிறு மணிகள் ஒலிப்பதுபோல் இருக்கும்.

மாமல்லபுரத்தை மற்றொருமுறை சுற்றிப் பார்த்தபோது இளைஞன் நரசிம்மனுக்கு உற்சாகம் ஒரு புறமும், சோர்வு ஒருபுறமுமாக ஏற்பட்டன. இந்தப் பாறைகளெல்லாம் வீணே இந்தப் பூமியில் முளைத்து இருக்கின்றனவே என்ற கவலை அவனுக்கு ஏற்பட்டது.

கடற்கரை ஓரமாகவே நடந்தான். இப்படி நடப்பதில் அவனுக்கு மிகுந்த உற்சாகமாக இருந்தது. மக்கள் ஆரவாரமற்ற இந்த இடத்தில் சமுத்திர கோஷம் மட்டுமே ஓசை எழுப்பிக் கொண்டிருந்தது. கடலலைகளுக்கு ஓய்வே

இருக்காதா. அவை மண்ணென்னும் நல்லாளிடம் நாள்தோறும் நொடிதோறும் என்ன கூறிச் செல்கின்றன? ஓர் அலை வருகிறது. மற்றொன்று வருகிறது. மற்றொன்று இப்படியாகத் திரும்பிப் போகும்போது புதிதாக வரும் அலைகளிடம் அவை என்ன சொல்லிச் செல்கின்றன?

நரசிம்மனுக்கு நடந்து நடந்து களைப்பு ஏற்பட்டு விட்டது. ஓரிடத்தில் கடற்கரையை ஒட்டிப் பெரும்பாறை அந்தப் பாறையின் காலடியில் அலை வந்து மோதிக் கொண்டிருக்கிறது.

மிகவேகமாக ஆர்ப்பரித்துக்கொண்டு வரும் அலைகள் பாறைகளின் மீது மோதித் திரும்பும்போது எழும் புகைபோன்ற நீர்த்திவலைகள் நரசிம்மனின் சோர்வைப் போக்கின. அவன் அந்தப் பாறை மீது ஏறி அமர்ந்தான். ஒவ்வொரு முறையும் பாய்ந்து வரும் குதிரைப் படைகளைப் போல் அலைகள் விரைந்து வந்து மோதும் அழகை ரசித்துக் கொண்டிருந்தான். 'ஓம்' என்று கடலோசை எழுந்து ஒலித்துக் கொண்டிருந்தது.

"நரசிம்மா..." என்ற குரல் எங்கோ கேட்டது. பரமேச்வர வர்மர் தேடிக் கொண்டிருந்தார்.

மீண்டும் மீண்டும் யாரோ தொலை தூரத்தில் அழைக்கும் குரல்.

சக்கரவர்த்தி பரபரப்படைந்தார். சற்று முன்புவரை அங்கே இருந்த நரசிம்மன் எங்கே சென்று விட்டான்?

"இப்படிக் கரையோரமாகச் செல்வதைப் பார்த்தேன்?" என்றார் ஓர் கலைஞர்.

காவல் வீரர்கள் தேடிப் புறப்பட்டனர். கடைசியில் நரசிம்மன் அமர்ந்திருக்கும் இடத்தைக் கண்டு பிடித்து விட்டனர். காவலரில் வயது முதிர்ந்த ஒருவன் சற்று



உரிமையுடன், "குழந்தாய்! சக்கரவர்த்தி தங்களை எங்கெல்லாம் தேடுகிறார். வாருங்கள் போகலாம்" என்றான்.

நரசிம்மன் தலையை அசைத்தான்.

"சக்கரவர்த்திகளை இங்கே வரச் சொல்லுங்கள். இங்கே ஓர் அதிசயம் இருக்கிறது" என்றான்.

சொல்வதும், செய்வதுமறியாது திகைத்து நின்றனர் காவல் வீரர்கள். மீண்டும் அழைப்பு, வற்புறுத்தல்;

நரசிம்மன் சற்றுக் கோபத்துடன், "உம், நான் சொல்வதைக் கேளுங்கள். உடனே சென்று சக்கரவர்த்திகளை அழைத்து வாருங்கள், அவருக்கு ஓர் அதிசயம் காத்திருக்கிறது" என்றான்.

சிறிது நேரத்தில் பரிவாரங்களுடன் பரமேச்வர வர்மர் அங்கு வந்து சேர்ந்தார்.

"நரசிம்மா, சிறிது நேரத்தில் எனக்குப் பெரும் கவலை ஏற்பட்டுவிட்டது. இங்கே தனியே வந்து என்ன செய்கிறாய்?" என்று கேட்டார்.

நரசிம்மன் கலகலவென்று சிரித்தான்.

"அப்பா, இந்த இடம் எனக்குப் பிடித்துவிட்டது அப்பா..." என்றான்.

பரமேச்வரவர்மர் ஏதும் பேசவில்லை. தன் மகனையே உற்று நோக்கியவாறிருந்தார்.

நரசிம்மனுக்குக் கவலையாயிருந்தது; "தங்களை நான் எப்படி அழைப்பது; தந்தை என்றா? சக்கரவர்த்திகளே என்றா?" என்று கேட்டான்.

"நீ எப்படி வேண்டுமானாலும் அழைக்கலாம் மகனே நரசிம்மா! இங்கே பாறை மீது வந்தமர்ந்து என்ன செய்கிறாய்?" என்று பரமேச்வர வர்மர் கேட்டார்.

"கடற்கரை ஓரமாக நடந்து வந்தேன். இந்த இடம் எனக்கு மிகவும் பிடித்துவிட்டது இங்கே தங்கி இருக்கலாம் என்று தோன்றுகிறது" என்றான் நரசிம்மன்.

"இங்கேயா? இங்கே தங்கி...? நமக்கு ஏராளமான பணிகள் இருக்கின்றன. நீ வருகிற பௌர்ணமியன்று கடல் கடந்த நாடுகளுக்குச் செல்லப்போகிறாய்... அதற்கு வேண்டியவற்றை ஏற்பாடு செய்துகொள்ள வேண்டாமா?" என்றார்.

நரசிம்மன் திடுக்கிட்டு, "கடல் கடந்த நாடுகளுக்கா?" என்று கேட்டான்.

"ஆமாம், நமது விருந்தினராகத் தங்கியிருக்கிறாரே பெரியவர், அவருடன் அந்த நாடுகளைச் சுற்றிப் பார்க்க வேண்டும். அவர்களது வாழ்க்கை முறை, ஆட்சி, கலை ஆகியவற்றைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும்" என்றார்.

நரசிம்மனுடைய உள்ளத்தில் மகிழ்ச்சி எனும் அலைகள் ஆர்ப்பரிக்க ஆரம்பித்தன. கடல் கடந்து செல்லப்போகிறோம். எல்லையற்ற கடலைப் பார்த்துக் கொண்டே கற்பனை செய்ய மிகவும் எளிது என்று எண்ணினான்.

அந்த அழகிய சிறுமியுடன் போகப் போகிறோமல்லவா! ஆகா; அவளுக்குத்தான் எத்தனை கலை ஆர்வம் என்று எண்ணினான்.

"நரசிம்மா அந்த முதியவருடன் ஒரு சிறுமி வந்திருக்கிறாளே, அவள் உன்னிடம் ஒரு பரிசு கொடுத்து அனுப்பப் போகிறாள். நீ அதை அவளுடைய தந்தையிடம் கொண்டு சேர்க்க வேண்டும்" என்றார் பரமேச்வர வர்மர்.



நரசிம்மன் திடுக்கிட்டான். அந்தவிழி அழகி தன்னுடன் வரப் போவதில்லை என்பதை நினைக்கும்போது அவனுடைய உற்சாகம் குறைந்தது.

"அப்பா, நான் மட்டுமா செல்கிறேன்?" என்று கேட்டான் நரசிம்மன்.

"நீ மட்டுமா? உன்னுடன் மெய்க் காவலர் வருகிறார். உனது ஆசிரியர் வருகிறார்" என்று கூறிக்கொண்டே போன சக்கரவர்த்தியின் பேச்சு அவனுக்குச் சுவாரஸ்யப்படவில்லை.

"சக்கரவர்த்திகளே! அந்த முதியவரும் அவருடன் வந்த பெண்ணும்...?" என்று நரசிம்மன் கேட்டான். சக்கரவர்த்திகள் சிரித்துக்கொண்டு, "அவர்கள் இங்கேயே இருக்கப் போகிறார்கள்" என்றார்.

"அப்படியென்றால் நான் அயல் நாடுகளுக்குப் போகப் போவதில்லை" என்றான் நரசிம்மன் அழுந்தத் திருத்தமாக.

அன்று நடந்த சம்பவம் பல ஆண்டுகள் கழித்து இப்போது படுத்த படுக்கையாக இருந்த சக்கரவர்த்திகளுக்கு நினைவுக்கு வந்தது.

அன்று இளைஞனாயிருந்த நரசிம்மன் இன்று மாமல்லபுரம் வந்திருக்கிறான். ஆனால், காஞ்சிக்கு வரவில்லை. ஹூம்! காலம்தான் எப்படியெல்லாம் மாறுகிறது என்று எண்ணினார்.

# அத்தியாயம் - 16

# சிற்பியின் குடில்

பரமேச்வர வர்மர் மஞ்சத்தில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டு அமைச்சரை நோக்கி, "நீங்கள் நரசிம்மனை அவ்வளவு எளிதில் கண்டுபிடிக்க முடியாது. கலை ஆர்வம் அவனைப் பிடித்துவிட்டது என்றால் பித்துப் பிடித்தவன் போலாகிவிடுவான். அவனுடன் குமாரதேவனும் சேர்ந்து விட்டால் கேட்கவே வேண்டாம்" என்றார்.

"குமாரதேவனை இளவரசரிடமிருந்து பிரித்துவிட வேண்டும் சக்கரவர்த்திகளே! இளவரசருடைய நண்பர் என்ற எண்ணத்தில் அவர் ஒருவரையும் மதிப்பதில்லை" என்று முறையிட்டுக் கொண்டார் அமைச்சர்.

"இளைய குமாரதேவனா பெரிய குமாரதேவனா?" என்று சக்கரவர்த்தி கேட்டார்.

"எனக்கு அடையாளம் தெரிவதில்லை. இளவரசருடன் எப்போதும் இணைபிரியாமல் இருக்கிறானே அந்த வாலிபன்".

"இரண்டு குமாரதேவனும் இளவரசரிடம் மாறிமாறிப் பிரியாமல் இருப்பார்கள். இருவரும் இரு கண்கள்; பெரிய குமாரதேவன் சித்திரக் கலையில் ஆர்வமுடையவன். இளையவன் மல்யுத்தம், யானை ஏற்றம், குதிரை ஏற்றம், வாள் வீச்சு, ஈட்டி எறிதல் இவற்றில் கெட்டிக்காரன். நரசிம்மன் இரு கலைகளிலும் திறமை உடையவன். அதனால் எந்தக் குமாரதேவன் துடுக்குத்தனம் நிறைந்தவன் என்று சொல்லுதல் கடினம்" என்றார் பரமேச்வர வர்மர்.



"என்னால் இப்போது சொல்லிவிட முடியும். இளைய குமாரதேவன்தான் சற்றுத் துடுக்குத்தனம் உடையவன். அவன்தான் காபாலிகர்களிடம் சிக்கிக்கொண்டு இருக்கிறானாம்" என்றார் அமைச்சர்.

"காபாலிகர்களிடமா? குமாரதேவனா? காபாலிகர்கள் முன்புபோல் நமது வேலையுண்டு தாமுண்டு என்று இருப்பதில்லையா" என்று கவலை தெரிவித்தார் பரமேச்வர வர்மர்.

"ஆமாம், நரபலி இட விரும்புகிறார்களாம். பஞ்சமும், பாதகமும் நாட்டை விட்டுத் தொலைய வேண்டுமாம். மழை பெய்ய வேண்டுமாம். அதற்காக அவர்கள் சாமுத்ரிகா லட்சணத்துடன் கூடிய இளைஞனைத் தேடினர். குமாரதேவன் சிக்கிக் கொண்டான்" என்றார் அமைச்சர்.

சக்கரவர்த்தி திடுக்கிட்டார். "என்ன சொல்லுகிறீர்கள்! மிகவும் அமைதியாகக் கூறுகிறீர்களே! இளைய குமாரதேவனோ பெரிய குமாரதேவனோ?சரிவரக் கண்டறிந் தீர்களா? பெரிய குமாரதேவன் என்றால் நரசிம்மனையும் உடன் கொண்டு சென்றிருப்பார்களே! உடனே வீரர்களை அனுப்பினீர்களா?

"ஏதாவது செய்தி வந்ததா? இதுவரையில் என்னிடம் சொல்லவில்லையே? ஏன்! பல்லவ நாட்டில் இப்படியொரு பயங்கரமா? ஏகாம்பரநாதா!" என்று கூறிப் பெருமூச்சு விட்டார் சக்கரவர்த்தி.

'சக்கரவர்த்திகளுக்கு அதிர்ச்சி ஏற்படும் எந்த செய்தியும் கூறக்கூடாது என்று வைத்தியர் சொல்லியிருக்கும்போது இப்படிப்பட்ட செய்தியைக் கூறலாமா? என்று தன்னைத்தானே நொந்து கொண்டார் அமைச்சர். எனினும் சக்ரவர்த்திகளுக்கு உற்சாகமும் புதுத் தெம்பும் ஏற்படும் வகையில் "சக்கரவர்த்தி அவர்களே! நமது வீரர்கள் எப்படியும் காபாலிகர்கள் இருக்குமிடத்தைக் கண்டு பிடித்து

விடுவார்கள். மற்றொரு புதிய செய்தியும் கிடைத்திருக்கிறது. காபாலிகர்களுக்குச் சாளுக்கிய நாட்டவரது தூண்டுதல் இருக்குமெனத் தோன்றுகிறது. அதை ஆராயுமாறு நமது ஒற்றர் படையினை முடுக்கிவிட்டு இருக்கிறேன். என்றாலும் இந்தச் சமயத்தில் இளவரசர் காஞ்சியில் இருப்பது நல்லது என்று தோன்றுகிறது. அதனால் நானே நேரே சென்று இளவரசரைச் சந்திக்க விரும்புகிறேன்" என்றார்.

சக்கரவர்த்தி சிறிது நேரம் ஏதும் பேசவில்லை. மௌனமாயிருந்தார். பிறகு "உம்... முயன்று பாருங்கள். நரசிம்மன் என்ன சின்னக் குழந்தையா? நாட்டு நடப்பு அவனுக்குத் தெரியாதா? குமாரதேவனைப் பலியிட அழைத்துச் சென்றிருக்கும் செய்தி தெரிந்தால் அவன் மௌனமாக இருக்கமாட்டான். அவன் தெரிந்து கொண்டிருக்க மாட்டான்" என்றார். தொடர்ந்து, "உடனே செல்லுங்கள். நரசிம்மனைச் சந்திக்க வேண்டுமென்றால் சிற்பி சுந்தரமூர்த்தியின் வீட்டிற்குச் சென்று பாருங்கள்" என்றார்.

சிற்பி சுந்தரமூர்த்திக்கு வயது அறுபத்தைந்துக்கு மேலாகிவிட்டது. திருக்கழிகுன்றத்திற்கு அருகேயுள்ள கிராமத்தில் அமைதியாக தன் வாழ்நாளைக் கழித்துக் கொண்டிருந்தார். அவரது மனைவி மனோன்மணி இறந்த பிறகு தனது மகள் மரகதவல்லியின் பணிவிடையிலும் அன்பிலும் வாழ்நாளைக் கழித்துக் கொண்டிருந்தார்.

காலை வேளையில், இளம் பனியின் திவலைகள் புல்நுனியில் முத்துக்களைப் போல் பளபளத்து நிற்கும் வேளையில், இளவரசர் நரசிம்மனும், குமாரதேவனும் குடிசைக்கு அருகேயுள்ள மரத்தருகே குதிரையைக் கட்டிவிட்டு வந்தார்கள். மரகதம் அப்பொழுதுதான் எழுந்து குடிசை வாயிலில் சாணம் தெளித்துக் கொண்டிருந்தாள். குதிரைகள் வந்து நிற்பதையும் கம்பீரமான இளைஞர் இருவர் வருவதையும் பார்த்துவிட்ட மரகதம் குடிசைக்குள் விரைந்து சென்று படுக்கையில் படுத்தவாறு நாவுக்கரசர் பதிகங்களைச் சொல்லி கொண்டிருக்கும் தன் தந்தையின் அருகே சென்று,



"அவர்கள் வருகிறார்கள்" என்று கூறிவிட்டுக் குடத்தை எடுத்துக் கொண்டு வெளியே சென்றுவிட்டாள்.

இளவரசரும், குமாரதேவனும் குடிலுக்குள் நடந்து சென்ற இளங்கொடி, மின்னல் கொடியைப் போல் விரைந்து சென்று விட்டதைக் கவனித்தனர்.

"சிற்பியின் மகளா?" என்று குமாரதேவன் கேட்டான்.

"எனக்கு எப்படித் தெரியும்? பலமுறை நீ இங்கே வந்திருக்கிறாய்?" என்றார் இளவரசர், மரகதவல்லி நடந்து செல்வதைக் கவனித்தவாறு.

"நான் வந்து இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டன. அப்போது தாவணி மட்டும் அணிந்திருந்தாள்" என்றான் மெல்ல நகைத்தபடி.

"இதோ இந்தக் கொடியைப் பார்த்தாயா? விதை விதைத்தது போலவா இருக்கிறது? நேற்றுப் பார்த்தால் ஒரு மொட்டு இருக்கும். பிறகு பூவைக் காணலாம். சில நாள் பார்க்காது இருந்தால் அழகிய காய் கொடியில் தவழும்" என்றார்.

குடிலுக்கு வெளியே நின்று பேசிக் கொண்டிருப்பதை அப்போதுதான் உணர்ந்த இளவரசர், 'ஐயா' என்று குரல் கொடுத்தார்.

மரகதவல்லி அதற்குள் குடத்தில் நீருடன் திரும்பிவந்து விட்டாள். அவர்கள் வெளியே நிற்பதைக் கண்ட மரகதம் பரபரப்புடன், "அப்பா வரவில்லையா... இதோ போய்ச் சொல்கிறேன். இப்படி உட்காருங்கள்" என்று திண்ணையைக் காட்டினாள். சாணமிட்டு மெழுகப்பட்ட சிறு திண்ணை செம்மண் காவி ஓரத்தில் இடப்பட்டு காய்ந்து கிடந்தது.

"அப்பா... அப்பா... அவர்கள் வெளியே நிற்கிறார்கள் அப்பா" என்று மெல்லிய குரலில் அவள் கூறுவது கேட்டது.

"யாரையம்மா சொல்கிறாய்... யார் வந்திருக்கிறார்கள்?" என்று சிற்பி கேட்பதும், மரகதம் அவர் செவியருகே மட்டும் கூறுவதும் தெளிவாகக் கேட்டது.

உடனே அங்கே ஒரு பரபரப்பு. சிற்பி ஆடைகளைச் சரிப்படுத்திக் கொண்டு வெளியே வந்தார். "வாங்க வாங்க..." என்று முகமலர்ச்சியுடன் கூறி வரவேற்றார்.

வயதுக்கு மீறிய முதுமை அவரை வந்தடைந்திருந்தது. கண்களிலே ஓர் ஏக்கம். அவர் இளவரசரைப் பார்த்துப் பல மாதங்கள் ஆகியிருந்தன. உடனே அடையாளங் கண்டு கொள்ள அவரால் முடியவில்லை.

"சிற்பியாரே நலமா?" என்று குமாரதேவன் கேட்டான். சுந்தரமூர்த்தி அடையாளம் கண்டு கொண்டார்.

"வா தம்பி வா; குமாரதேவனா... நலமா இருக்கிறாயா?; என்று கேட்டுவிட்டு அருகே நிற்பது யார் என்பதை அறிய முயல்வதுபோல் புருவத்தில் கை வைத்து உற்றுப் பார்த்தபோது குமாரதேவனே குறுக்கிட்டு "தங்களைத் தேடி இளவரசரே வந்திருக்கிறார்" என்றான்.

சுந்தரமூர்த்திக்குப் பரபரப்பு அதிகமாகியது. இளவரசரை உட்கார வைப்பதற்கு அவருக்கு எந்த இடமும், ஆசனமும் கிடைக்கவில்லை.

"வாங்க... வாங்க... பல்லவ சாம்ராஜ்ய இளவரசர் அவர்களே வருக... வருக..." என்று கூறி இங்குமங்கும் ஓடினார்.

"சிற்பியாரே, அமைதி, அமைதி... நீங்கள் இப்படி உட்காருங்கள்" என்று திண்ணையைச் சுட்டிக் காட்டிவிட்டுத் தானும் உட்கார்ந்து கொண்டார்.

"அடடா... மண் தரையில் உட்காரலாமா?" என்று கவலையுடன் கேட்டார் சிற்பி சுந்தரமூர்த்தி.



"இந்தத் திண்ணைதான் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது... நீங்களும் உட்காருங்கள்..." என்றார் நரசிம்மர்.

"மிகவும் இளைத்துவிட்டீர்களே... திருக்கழிக் குன்றத்தை விட்டு இப்படிக் கிராமப் பகுதிக்கு வந்து விட்டீர்களே..." என்று கேட்டார் நரசிம்மர்.

சிற்பி சிறிது நேரம் மௌனமாயிருந்தார். பிறகு பெருமூச்சுவிட்டு "ஹூம்... கழிக்குன்ற வாசம் அவ்வளவுதான். மனோன்மணி போன பிறகு எனக்கு இந்த உலக வாழ்க்கையே பிடிக்கவில்லை. தெய்வமாகப் போற்றும் கலைக்கும் வரவேற்புக் குறைந்துவிட்டது. இரண்டு பெரும் ஏக்கமாகி விட்டது" என்று கூறி நிறுத்தினார்.

சிற்பி பேச்சைத் தொடங்குவதற்குள், இளவரசர் குறுக்கிட்டு "தங்கள் துணைவியார் இறந்த செய்தி இப்போதுதான் தெரியும். நாங்கள் வடக்கே சென்றிருந்தோம்..." என்றார்.

"படையெடுப்பு ஏதாவது?" என்று சுந்தரமூர்த்தி கேட்கவும், "இல்லை, இல்லை; கலையைக் கொண்டுவர ஓர் சதித் திட்டம் வகுத்தோம்" என்று கூறி நகைத்தார் இளவரசர்.

"என்ன, அஜந்தா காடுகளுக்குச் சென்றீர்களா?" என்று சிற்பி ஆவலுடன் கேட்டார்.

"எப்படி, மிகச் சரியாகக் கேட்டுவிட்டீர்கள்?" என்றான் குமாரதேவன்.

"நீங்கள் முன்பு அடிக்கடி பேசிக் கொள்வீர்கள். நானும் உங்களுடன் வந்திருப்பேன். இயலாமல் போய்விட்டது" என்று கூறிப் பெருமூச்சு விட்டார் சிற்பி.

"கவலைப்படாதீர்கள்... நானும்தான் பார்க்கவில்லை. சுவர்க்கத்தின் வாசலை மிதித்துவிட்டு வந்துவிட்டேன்."

32952
S008114

என்றார் இளவரசர். பிறகு, "குமாரதேவன் பாக்கியசாலி, ஓவியம் வரையும் முறையைக் கற்று வந்துள்ளான். பல்லவ நாட்டில் ஓர் அஜந்தாவைக் கொண்டுவரப் போகிறான்..." என்றார்.

குமாரதேவன் பெருமூச்சு விட்டான். "கண்ணற்றவன் பெற்று இழந்ததைப்போல் சில நாட்கள் வாசம்" என்றான். பிறகு, "நீங்கள் முதலில் என்ன சொன்னீர்கள்! தெய்வமாகப் போற்றும் கலைக்கு வரவேற்பு இல்லையென்றா? வரவேற்பு உங்கள் வீட்டு வாயிலைத் தேடி வந்துவிட்டது. பொழுது புலரா முன்னர் இதுபற்றி உங்களுடன் பேசவே வந்தோம்" என்றான்.

காலை வேளையில் வந்திருக்கும் தங்களுக்குக் கொடுக்கப் பால்கூட இல்லை. போனவாரம்தான் இருந்த ஒரு பசுவும் இறந்துவிட்டது. அது வாயில்லா ஜீவன். அதன் வயிற்றுக்கு ஏற்ற ஆகாரம் கிடைக்கவில்லை. வைக்கோல் தின்று பல மாதங்கள் ஆகிவிட்டன. கண்டதைத் தின்றதால் வயிற்றுப்போக்கு ஏற்பட்டு மாண்டுவிட்டது" என்று கூறியவர் மீண்டும், "இளவரசே! என்னைக் கோபிக்கக்கூடாது. சில நாட்களாகச் சோற்றுக்கு அரிசியே கிடைக்கவில்லை. ஏதோ கடவுள் புண்ணியத்தில் உள்ளே குதிரில் கொஞ்சம் நெல் இருக்கிறது. பத்து நாட்களுக்குப் பஞ்சமில்லை. அதற்குப் பிறகு? பல்லவ நாட்டில் பஞ்சம் எப்படி வந்தது?" என்று கேட்டார்.

"நாங்களும் நேற்றுத்தான் கேள்விப்பட்டோம். கிராமங்களை விட்டு மக்கள் நகரங்களில் குடியேறு கிறார்களாம். நிலைமை இப்படியே போகவிடக்கூடாது என்பதற்காகவே நான் ஒரு முடிவுக்கு வந்துள்ளேன்" என்றார் இளவரசர்.

"இளவரசரே! குதிரிலுள்ள தானியங்களைக் கொள்ளை யடிக்கிறார்களாம். விரோதிகளின் கொடிய செயலைக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் நமது மக்களிடையே



பொல்லாதவர்கள் இருப்பதை இப்போதுதான் அறிந்தேன்! நேற்று இரவு இந்தப் பக்கமாக காபாலிகர்களின் கூட்டம் சென்றது. நரபலி இடப்போகிறார்களாம் நரபலி. இளம் வாலிபன் ஒருவனை இழுத்துச் சென்றார்களாம். மரகதம் பார்த்துப் பயந்துவிட்டாள்" என்றார் கவலையுடன்.

இளவரசரும், குமாரதேவனும் திடுக்கிட்டார்கள். "நரபலியா! காபாலிகர்களா! இந்தப் பக்கமாகவா சென்றார்கள்?" என்று பரபரப்புடன் கேட்ட இளவரசர் துள்ளி எழுந்தார்.

"குமாரதேவா, உடனே புறப்படு! நரபலியா? பயங்கரமாயிருக்கிறதே! சிற்பியாரே, இன்னும் இரண்டொரு நாட்களில் சந்திக்கிறோம். மீண்டும் மகத்தான சிற்பப் பணியைத் தொடங்கவிருக்கிறோம். கவலையை விடுங்கள். உங்கள் கலைத் திறமையைப் பயன்படுத்தப் போகும் காலம் வந்துவிட்டது!" என்று கூறிய நரசிம்மர் குதிரையை நோக்கி விரைந்து நடந்தார்!

குமாரதேவன் திரும்பிப் பார்த்தான்! குடிலின் வாயிலில் தந்தை அருகே மரகதம் நின்றுகொண்டு அவர்கள் செல்வதையே பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது!

"குழந்தாய், குமாரதேவன் நன்றாக வளர்ந்துவிட்டான்" என்றார்.

"அஜந்தாவுக்குச் சென்று கலைச் செல்வங்களைக் கண்டு வந்திருக்கிறார்கள். இளவரசர் என்ன சொன்னார் பார்த்தாயா, மீண்டும் சிற்பக் கலைக்குப் புத்துயிர் ஏற்படப் போகிறதாம்" என்றார் உற்சாகத்துடன்!

"அப்பா, எனக்கு என்னவோ இங்கு இருக்கவே பயமா யிருக்கிறது. அடிக்கடி சிறுத்தையின் நடமாட்டமிருக்கிறது என்பது இருக்கட்டும்... பொல்லாத காபாலிகர்களின் நடமாட்டம்தான் எனக்கு அதிக பயத்தை அளிக்கிறது" என்றாள்.

"பயப்படாதே மரகதம், நம்மை எந்தக் காபாலிகர்களும் ஒன்றும் செய்துவிட மாட்டார்கள். எனக்குக் காபாலிகர்கள் மிகவும் வேண்டியவர்கள்" என்றார் சுந்தரமூர்த்தி.

"அவர்களும் என்ன செய்வார்கள் பாவம்... பஞ்சமும் பசியும் அவர்களை வாட்டுகின்றன..." என்றாள் மரகதம்.

சுந்தரமூர்த்தி சிரித்தார். "மரகதம், எனக்கு ஒரு காலத்தில் காஞ்சிபுரமும் மாமல்லபுரமும் மிகவும் பிடித்த ஊர்களாயிருந்தன. பிறகு மண்டகப்பட்டு, மகேந்திரவாடி, சுடிகாசலம் என்று ஒவ்வொரு ஊராகச் சுற்றினேன். திருக்கழிக்குன்றத்தில் கடைசியாக வந்து அமைதியுடனிருந்தேன். அமைதியைக் குலைத்து கழிக்குன்றத்து மறைமலைப் பெருமான் உன் தாயை அழைத்துக்கொண்டு விட்டான்..." என்று கூறும்போது அவர் கண்கள் கலங்கின.

"அப்பா, உடனே வருத்தப்படத் தொடங்கி விடுகிறீர்களே! காலை வேளையில் கவலைப்படாதீர்கள் அப்பா... உள்ளே போவோம் வாருங்கள்..." என்றாள் மரகதம்.

உள்ளே சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் யாரோ வரும் ஓசை கேட்டது.

"ஐயா... ஐயா..." என்ற குரல் கேட்டு மரகதம் வெளியே வந்தாள்.

கையில் உயரமான கோலுடனும், உடல் எல்லாம் சாம்பல் பூசி தலையில் உத்திராட்ச மணி மாலையுடன் கையில் கமண்டலத்துடன் பாசுபதர் நின்றுகொண்டிருந்தார்.

"நமச்சிவாய..." என்று முணுமுணுத்தார். மரகதம் அவரது தோற்றத்தைக் கண்டு, "சுவாமி... யார் வேண்டும்?" என்று கேட்டாள்.

"சிற்பி சுந்தரமூர்த்தியின் வீடுதானே இது...?" என்று கேட்டார் பாசுபதர்.



"ஆமாம்... நீங்கள் யார்... எங்கிருந்து வருகிறீர்கள்" இப்படி உட்காருங்கள் என்றாள் அவரது தோற்றத்துக்கு மதிப்பு அளிக்க.

"ஜெய் பசுபதே!" என்று மும்முறை முழக்கிவிட்டு "உன் தந்தை எங்கே பெண்ணே?" என்று கேட்டார்.

"இப்போதுதான் சற்று ஓய்வு எடுக்கச் சென்றார். சிறிது இருங்கள் எழுப்புகின்றேன்" என்றாள் மரகதம்.

"வேண்டாம், வேண்டாம். இளவரசர் செய்தியொன்று சொல்லி அனுப்பினார். அதைக் கூற வந்தேன். எழுந்திருக்கட்டும் பிறகு சொல்கிறேன்..." என்றார் திண்ணையில் உட்கார்ந்தபடி.

மரகதம் பாசுபதரை உற்றுப் பார்த்தாள். பிறகு "என்ன சுவாமி சொல்கிறீர்கள்... இளவரசர் அனுப்பினாரா? இப்பொழுது சிறிது நேரத்திற்கு முன்புதானே அவருடன் அவரது நண்பரும் இங்கு வந்து சென்றார்கள்" என்றாள்.

பாசுபதர் உள்ளத்துள் திகைத்தாலும் அதை வெளிக்குப் புலப்படுத்திக் கொள்ளாமல், "ஓகோ! அவர் முந்திக் கொண்டு விட்டாரா? நான் சற்றுப் பின் தங்கிவிட்டேன். அவருக்குக் குதிரை இருக்கிறது. என்ன இருந்தாலும் வயதானவன்தானே" என்று கூறியவர் மெல்ல நழுவ முயன்றார்.

"சுவாமி, உட்காருங்கள்... கொஞ்சம் நீராகாரம் கொண்டு வருகிறேன்" என்று கூறி உள்ளே சென்றாள்.

கையில் பாத்திரத்துடன் வெளியே வந்த மரகதம் திடுக்கிட்டாள். அங்கே உட்கார்ந்திருந்த பாசுபதரைக் காணவில்லை. மிகவேகமாக தொலைவில் சென்று கொண்டிருப்பது தெரிந்தது.

# அத்தியாயம் - 17

## இரகசியப் பாதை

ராஜசுந்தரியின் பிறந்த நாள் விழா கொண்டாட்டத்திற்கு வந்தவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிப் போய்க் கொண்டிருந்தனர். 'ராஜசுந்தரிக்கு உடல்நிலை சரியில்லையாம்' என்ற காரணம் தெரிவிக்கப்பட்டது.

"ஆச்சர்யமாயிருக்கிறதே! நேற்று மாலை என் கடைக்கு வந்து பல விலையுயர்ந்த பொருள்களை வாங்கினாள்'' என்றான் இரத்தின வியாபாரியின் மகன். அவன் ஆவலுடன் வந்திருந்தான். அந்த வைர மாலையை அவளிடம் தரும்போது தனியே அவள் செவியில் மட்டும் கேட்கும் வண்ணம் மெல்லிய குரலில் கூறவேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தான். என்ன கூறுவது என்பதற்கு ஒத்திகை நடத்திக்கொண்டு வந்திருந்தான்.

அழகியே! உலகின் சிறந்த ஆடலழகியே! உனது கழுத்தில் தவழ வேண்டிய வைரம் இது. இந்த வைரத்தை வட நாட்டினின்று கொண்டு வந்திருந்த வணிகர் களிடமிருந்து ஏராளமான பொன் கொடுத்து வாங்கினேன் என்று கூறுவோம்.

அழகி தன் விழியைச் சுழலவிட்டு என்னை அப்படியே கொள்ளை கொண்டு விடுவதுபோல் பார்ப்பாள். ஆகா... அந்த ஒரு கணம்...'' அவன் அவ்வாறு சிந்தித்தவாறு நின்று கொண்டிருந்தபோது மாளிகைக் காவல்காரன் தயவு தாட்சண்யமில்லாமல், ''போய்விடுங்கள்... கூட்டம் போடாதீர்கள்'' என்று தள்ளாத குறையாகக் கேட்டுக் கொண்டான்.



அந்த இளம் வியாபாரிக்கு மிக வருத்தம்தான். அந்தச் சமயத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. காஞ்சி நகரத்தின் பிரபல வணிகர் சமுத்திரநாதன் வந்து கொண்டிக்கிறார் என்ற செய்திதான் அது.

யானை இரண்டு அசைந்தாடி வந்தன. குதிரைகள் மீது ஆறு வீரர்கள் அணிவகுத்து வந்தனர். சோனக நாட்டினின்று வந்த ஒட்டகம் இரண்டு தனது நீண்ட கழுத்தை நீட்டி நீட்டிக் கொண்டு வந்தது. ஒட்டகத்தைப் பார்க்க ஏகப்பட்ட கூட்டம். ஒட்டகத்தைத் தாண்டி பத்துபேர் கையில் வெள்ளித் தாம்பாளங்களை ஏந்தி வந்து கொண்டிருந்தனர். அவர்களுக்குப் பின்னால் வெள்ளைக் குதிரையில் கம்பீரமான, வெள்ளை அங்கியும் வெள்ளைத் தலைப்பாகையும் அணிந்தவர் ஒருவர் அமர்ந்து வந்தார்.

மாளிகையின் வாசலில் கூடியிருந்தோர் ஒரு கணம் அயர்ந்து நின்றனர்.

"சமுத்திரநாதன், சமுத்திரநாதன்'' என்று முணு முணுத்தனர் அனைவரும். மெல்ல ஒவ்வொருவரும் முணு முணுத்தது பெரும் ஒலியாக மாறியது.

"சமுத்திரநாதன், சமுத்திரநாதன்" என்ற குரல் ரத்தின வியாபாரியிடமிருந்து வியப்பு நிறைந்த வகையில் எழுந்தது.

'"அவரா?"

"பிரபல வணிகரா இங்கு வருகிறார்?"

"இருக்காது, இருக்கவே இருக்காது".

''ராஜசுந்தரியைத் தேடி வருவானேன்? தேவைப் பட்டால் ராஜசுந்தரியைத் தன் மாளிகைக்கு வரவழைத்துக் கொள்ளும் சக்திபடைத்த அவர் இங்கு வருவானேன்?"

இப்படி ஒவ்வொருவரும் பேசிக் கொண்டனர். "பாவம் இவ்வளவு பரிசுப் பொருட்களுடன் வருகிறார். பிறந்த நாள் என்று மகிழ்ச்சியுடன் வருகிறார். கடைசியில் ஏமாறப் போகிறார்" என்று மிகவும் வேதனைப்பட்டார் ஒருவர்.

"ஏமாறப் போகிறாரா? எப்படி ஆத்திரம் வரப்போகிறது பார்" என்றார் ஆத்திரப்பட்ட மற்றொருவர்.

"ஆ! அவரை ஒன்றும் செய்ய முடியாது. பார், பார்த்துக்கொண்டே இரு; உள்ளேயிருந்து ராஜசுந்தரியே ஓடோடி வந்து அழைத்துச் செல்லப் போகிறாளா இல்லையா பார்" என்றார் ஒருவர்.

ராஜசுந்தரி வீட்டு மாளிகைக் கதவு மூடி இருந்தது. கதவின் வாயிலில் பரிவாரங்கள் நின்றன. தேர் திருவிழாவைப் போல் கூட்டம்.

சமுத்திரநாதனுக்கு என்ன நடக்கிறது என்று தெரியவில்லை. சிறிது நேரம் கழித்து அவரது பணியாள் அவர் அருகே ஓடோடி வந்தான்.

"தலைவரே! கதவு மூடி இருக்கிறது" என்றான். ஓடி வந்த களைப்பு மிக அதிகமிருப்பதுபோல் புலப்படுத்தியவாறு.

"கதவைத் தட்டுங்களேன் முட்டாள்களே! இதை என்னிடம் ஓடி வந்துச் சொற்கிறீர்களே" என்று சீறினார் சமுத்திரநாதன்.

கதவை உடைத்து விடுவதுபோல் தட்டினார்கள் சமுத்திரநாதனின் ஆட்கள்.

ராஜசுந்தரியின் மாளிகைக் காவலாளர்கள் மறு பக்கத்திலிருந்து குரல் கொடுத்தார்கள்.

"கதவைத் தட்டாதீர்கள், இன்று கொண்டாட்டம் கிடையாது..." என்று உரத்த குரலில் கூவினார்கள்.



"இன்று ராஜசுந்தரியின் பிறந்த நாள். எங்கள் தலைவர் அவளை வாழ்த்த வந்திருக்கிறார். கதவைத் திறவுங்கள்" என்று சமுத்திரநாதனின் ஆட்கள் குரல் கொடுத்தனர்.

"எங்கள் தலைவிக்கு உடல் நிலை சரியில்லை. விழா கிடையாது..." என்று ராஜசுந்தரியின் ஆட்கள் மறுமொழியாகக் கூறினர்.

சமுத்திரநாதனிடம் இதைக் கூறியவுடன் சமுத்திரநாதனுக்கு ஆத்திரம் பொங்கியது.

"நேற்று இரவுகூட அவளுக்கு உடல்நிலை சரியாகத்தானே இருந்தது..." என்று சமுத்திரநாதன் கோபப்பட்டார்.

கூடியிருந்தவர்கள் சமுத்திரநாதன் அருகே வந்தனர். அவர் எவ்வளவு பிரபலமானவராயிருந்தாலும் அவரையும் சாதாரணமாக மதிப்பவர் இருக்கத்தான் செய்தனர்.

"ஏனய்யா... நாங்கள் எல்லாம் வருத்தத்துடன் கூடியிருக்கிறோமே, உள்ளே போக முடியவில்லையே என்று நீங்கள் மட்டும் என்ன உயர்வு, கதவை உடைக்கிறீர்களே...? பிறந்த நாள் விழா இல்லை என்றால் போய்விட வேண்டியதுதானே" என்றார் ஒருவர்.

சமுத்திரநாதன் மறுமொழி பேசவில்லை. கோபம் பொங்கியது. கோபத்தை யாரிடம் புலப்படுத்த முடியும்?

சமுத்திரநாதன் குதிரைமீது ஏறிக்கொண்டார். ஒரு கையால் தனது மீசையைத் தடவிக் கொண்டு மற்றொரு கையால் தனது அந்தரங்க பணியாளை அழைத்து ஏதோ காதருகே கூறினார்.

மறுகணம் வெள்ளித் தாம்பாளங்கள் கீழே கவிழ்க்கப் பட்டன. தட்டில் இருந்த பழங்கள் உருண்டோடின. உணவுப் பண்டங்கள் சிதறின. மலர்கள் மண்ணில் வீழ்ந்தன. ஒரு தட்டில் இருந்த பொன் நாணயங்களில் ஒரு பிடியை எடுத்து வீசினான் ஒரு பணியாள். கூடியிருந்த கூட்டத்தினர் கீழே

சிதறியவற்றைப் பொறுக்க ஓடினர். ஒருவர் மீது ஒருவர் விழுந்தடித்துக் கொண்டு மண்ணிலே கிடந்தவற்றைப் போட்டி போட்டுச் சேகரித்தனர். ஒருவரை யொருவர் இடித்துத் தள்ளினர். மண்ணிலே புரண்டனர் காஞ்சி நகரத்து வணிகர்கள்.

"நான் மட்டும் என்ன உயர்வு என்றீர்களே... நான் வீசியதைத்தானே நீங்கள் பொறுக்குகிறீர்கள் - உம்" என்று சமுத்திரநாதன் கர்ஜித்தான். மறுகணம் அவனது வீரர்கள் சாட்டையைக் கொண்டு அடிக்கத் தொடங்கினர்.

"ஐயோ... ஐயோ" என்ற கூக்குரல்.

"செத்தோம், செத்தோம்" என்ற அழுகுரல். முட்டி தேய்ந்தவரும், முதுகில் காயம் பட்டவருமாக ஓடினர்.

சிறிது நேரத்தில் ராஜசுந்தரி வீட்டு வாசரில் ஒருவருமில்லை. சமுத்திரநாதனின் பணியாட்கள் சற்றுத் தொலைவில் நின்றனர்.

சமுத்திரநாதன் ராஜசுந்தரியின் மாளிகையின் மேல் மாடத்தை உற்று நோக்கி, "ராஜசுந்தரி உனது தலைக் கர்வத்தை அடக்குகிறேன். உன்னிடம் அழகு, செல்வம், செல்வாக்கு அனைத்தும் இருக்கின்றன. என்னிடம் அதையும்விட மற்றொன்று இருக்கிறது" என்று கருவினான்.

மேல் மாடத்தில் ராஜசுந்தரியின் அறைக்குள் செவிலி நுழைந்தாள்.

"தெரியுமா சேதி ராஜசுந்தரி, சமுத்திரநாதன் பெரும் குழப்பத்தையே ஏற்படுத்திவிட்டார்!" என்று கூறி, நடைபெற்றவற்றை விவரித்துவிட்டு, "சுந்தரி அவர் மிகப் பொல்லாதவர். என்ன செய்யக் காத்திருக்கிறாரோ?" என்று கவலையில் ஆழ்ந்தாள். ராஜசுந்தரி மஞ்சத்தில் பஞ்சணையில் சாய்ந்து கொண்டு, "அம்மா, கவலைப்பட வேண்டியவள் நான். நீ ஏன் அம்மா கவலைப்படுகிறாய்?" என்று அவளைத் தேற்ற முயன்றாள்.



"உனக்குத் தெரியாது சுந்தரி. அவர் நமக்குப் பெரும் தீங்கு இழைத்துவிடுவார். நமது வீட்டு வாசலில் தான் கொண்டு வந்த பரிசுப் பொருட்களைக் கொட்டி வீணடித்து வணிகர்களைச் சாட்டையால் அடித்துத் துன்புறுத்தி விட்டார். அப்படிச் செய்தவர் நம்மை ஒழித்துவிட அதிக நேரமாகுமா? அவரே நேரிடையாக இடையூறு செய்யா விட்டாலும், சக்கரவர்த்தியிடம் புகார் கூறுவார்" என்று செவிலி விம்மினாள்.

"அம்மா, ஏன் பயப்படுகிறாய்... சக்கரவர்த்தியார் என்னை என்ன செய்து விடுவார்?"

"உனக்குத் தண்டனை தருமாறு செய்துவிடுவார் சமுத்திரநாதர்" செவிலி நடுநடுங்கக் கூறினாள்.

"அம்மா, அஞ்சாதே! சமுத்திரநாதரை நடு நடுங்க வைக்க எனக்கு வழி தெரியும். என்னைச் சிறிது நேரம் அமைதியாக இருக்கவிடு. உச்சி வேளை ஏகாம்பரநாதர் சந்நிதியில் நான் இன்று நாவுக்கரசின் திருத்தாண்டகத்துக்கு அபிநயம் பிடித்து ஆடுகிறேன். உம்... போ... போய் ஒய்வு எடுத்துக் கொள்" என்றாள்.

செவிலி ராஜசுந்தரியின் மஞ்சத்தில் சாய்ந்து கொண்டு ஒயிலுடன், "சமுத்திரநாதா! உன்னுடைய சதி வேலைகள் என்னிடம் பலிக்காது. என்னை அழித்து விடலாமென்று நினைக்காதே!" என்று வாய்விட்டு நாடக ஒத்திகை பேசுபவள் போல் பேசினாள்.

திரை அசைந்தது. "ராஜசுந்தரி, வீணே சபதம் செய்யாதே! சமுத்திரநாதன் கூறுவதுபோல் நடப்பதுதான் நல்லது" என்ற குரல் திரையின் மறுபுறமிருந்து கேட்டது.

ராஜசுந்தரி திடுக்கிட்டுத் துள்ளி எழுந்தாள்.

"யாரது?" என்று அதட்டும் குரலில் கூறினாள்.

"நான்தான்... என்று கூறியவாறு புத்த பிட்சு திரை மறைவிலிருந்து வெளியே வந்தார். பிறகு தொடர்ந்து, "இன்று

ஏகாம்பரர் ஆலயத்துக்குப் போக வேண்டாம்...'' என்று எச்சரித்தார் பிட்சு.

"நீங்கள் இங்கே எப்படி வந்தீர்கள்? என் அந்தரங்க அறைக்குள் நுழைய உமக்கு எப்படித் தைரியம் வந்தது? இங்கிருந்துப் போய்விடுங்கள்" என்று ராஜசுந்தரி கர்ஜித்தாள்.

"ராஜசுந்தரி... வீணே கோபப்படாதே. உனது நன்மைக்காகவே இதைக் கூறுகிறேன். உனது அறைக்கு மட்டுமென்ன சக்கரவர்த்தியின் அந்தப்புரத்திற்குள்ளும் செல்லும் இரகசியப்பாதை எனக்குத் தெரியும்" என்றார் பிட்சு.

இரகசியப் பாதையா?" ராஜசுந்தரி நடுங்கினாள்.

"ஆம்; உனது மாளிகைக்குள் வர இரகசியப் பாதை இருக்கிறது. அந்த வழியே இன்னும் சிறிது நேரத்தில் சமுத்திரநாதனே இங்கு வருவான்" என்றார் பிட்சு.

ராஜசுந்தரி நடுங்கினாள்.

## அத்தியாயம் - 18

# பூட்டிய கதவு

"ராஜசுந்தரி, உன்னை மிகவும் அழகானவள் என்றும் திறமைசாலியென்றும் புகழ்கிறார்கள். உன் பிடிவாத குணத்தை மட்டும் நீ இனி விட்டுவிட்டால் பல்லவ நாட்டையே உன் கைப்பிடிக்குள் வைத்துக் கொள்ளலாம்" என்றார் புத்த பிட்சு. அதே புத்த பிட்சுதான், சந்திரகுமாரியைத் துரத்தி வந்த பிட்சு.

இந்தப் பிட்சுவுக்கு இதே வேலைதானா? இளம் பெண்களின் மீது கண்ணோட்டத்தை விட்டு அவர்களைத் தன் வலைக்குள் விழ வைப்பதுதான் அவருடைய வேலையா?



பொதுவாக அப்படியிருந்தாலும் ராஜசுந்தரியைச் சந்தித்ததைப் பொறுத்தவரை அவருக்குக் காம உணர்ச்சி இல்லை. அவருடைய உள்ளத்தில் தீட்டப்படும் பெரும் திட்டத்தின் ஒரு பகுதிதான் அவளைச் சந்திக்க முயன்றது.

பிட்சு அவளைச் சந்திக்கப் பல நாட்களாக முயன்றவாறிருந்தார். இயலவில்லை. காஞ்சியில் இன்று அவருக்கு வேறு முக்கிய அலுவலிருந்தது. அந்த அலுவலுடன் கூட ராஜசுந்தரியின் பிறந்த நாள் விழாவும் ஏற்பட்டுவிடவே அதைப் பயன்படுத்திக் கொண்டார். விழாக் கூட்டத்தினருடன் கூட்டமாக அங்கே நுழைந்து விடலாம் என்று திட்டமிட்டார். சமுத்திரநாதன் அங்குவரப் போவது தெரியவே, அவன் கண்களில் பட்டுவிடக்கூடாது என்பதற்காக மறைமுக வழியைத் தேடலானார்.

ராஜசுந்தரியின் மாளிகைக்கு அவளது வீட்டு நந்தவனத்து உல்லாசக் குடிலிலிருந்து ஓர் வழி செல்கிறது என்பதை அவர் அறிவார். அந்த இடம் எங்கே இருக்கிறது என்பதைக் கண்டுபிடிக்க விரும்பி அன்று காலையிலேயே மாளிகையின் அருகே வட்டமிடலானார்.

மாளிகையின் சமையற் கூடத்தில் பணியாற்றும் அழகு முத்துவை அவர் அறிவார். அழகு முத்து கையில் பெரும் கூடையொன்றுடன் வந்து கொண்டிருப்பது தெரிந்தது.

மாளிகையின் வடக்குப் புறமதிலின் ஓரத்தில் உள்ள மர நிழலில் மறைந்து நின்று கொண்டிருந்தார்.

அவன் மிக அருகே வந்தவுடன், "அழகு, உன்னை எங்கே எல்லாம் தேடுவது?" என்று கரகரப்பான குரலில் கூப்பிட்டார்.

அந்தச் சமயம் வேறு ஏதோ நினைவில் வந்த அழகு முத்து திடுக்கிட்டவனாக கைக்கூடையைக் கீழே போட்டுவிட்டு 'ஐயோ' என்று கூவி ஓடத்

தலைப்பட்டவளைப் பிட்க கையைப் பிடித்து தடுத்து நிறுத்தி, "ஏன் பயந்து விட்டாயா?" என்று கேட்டார்.

பிட்கவின் குரலைக் கேட்டவுடன் சற்றுப் பயந் தெளிந்தவளாக "நீங்கள் தானா?" என்று கூறிவிட்டு கூடையை மெல்ல எடுத்து வைத்துக் கொண்டாள்.

"நீங்கள்தானா? என்று அலட்சியமாகக் கூறுகிறாயே... என்ன என்னைக் கண்டு பயந்த காலமெல்லாம் போய்விட்டதா?" என்று கேட்டார் பிட்க.

அழகுமுத்து முகவாயைத் தோளில் இடித்துக் கொண்டு "நான் என்ன சின்னக் குழந்தையா இன்னும் பயப்பட? அப்போ பெரிய அம்மாவுக்காகப் பயந்தேன்..." என்று மெல்ல நடக்க ஆரம்பித்தாள்.

பிட்க சிரித்தார். "இப்போ நீ சின்னக் குழந்தை இல்லையா? பயம் தெளிஞ்சுப் போச்சா..? அப்ப என் மீது உனக்கு ஆசை இல்லையா?" என்று கேட்டு அவள் கையைப் பிடித்து பிடியைப் பிட்க அழுத்தினார்.

"சாமி, என்னைத் தொந்தரவு செய்யாதீங்க. எனக்கு விவரம் தெரியாத காலத்தில் நடந்த சம்பவத்தை வைத்துப் பயமுறுத்தாதீங்க. இப்ப எனக்குப் பயமில்லை... பெரிய அம்மாவுக்கும் பயமில்லை... என்னைப் போக விடுங்க..." என்றாள்.

"அழகு, இன்னும் எனக்கு அந்த நாளைய நினைவுதான் வருகிறது. உன் முகத்தில் பழைய இளமை மாறவில்லை. ஆனால், என்முகம்தான் கோடுகள் விழுந்து கண் உள்ளடங்கி மாறிவிட்டது..." என்று பெருமூச்சுவிட்டார் பிட்க.

தன் முகத்தை வர்ணித்த பிட்கவை மீண்டும் நோக்கவே வெட்கமாயிருந்தது அழகுமுத்துவுக்கு. "போங்க சாமி... இந்த அழகு யாருக்கு வேண்டும். அழகு சத்ரு என்று உங்கள் சாமிதான் சொல்லியிருக்கிறாங்களே... இதோ எங்க சின்ன



அம்மாவுக்கும்தான் அழகு சத்ருவாகப் போகுது" என்று கூறி, பேச்சை அத்துடன் நிறுத்தினாள்.

"அழகு, எல்லோருக்கும் சத்ருவாக இருப்பதில்லை. உங்க சின்ன அம்மாவுக்கு அழகுதான் பெரும் உதவிதரும் மூலதனம்" என்று கூறி நகைத்தார்.

"ஆமாம்; மூலதனம்... இருக்கிற தனம் ஏழு தலைமுறைக்குக் காணும். இன்னும் எங்க சின்ன அம்மாவுக்கு பணத்தின் மேல் என்ன ஆசையோ? இன்றைக்குப் பிறந்த நாள்விழா கொண்டாடுகிறார்கள். ஊரிலுள்ள வணிகர்கள் வரப்போகிறார்கள். அந்தப் பொல்லாத சமுத்திரநாதனும் வரப்போகிறானாம்" என்று உடலைச் சிலிர்த்துக் கொண்டாள் அழகுமுத்து.

"எனக்குத் தெரியும்" என்றார் பிட்க.

"என்ன தங்களுக்குத் தெரியுமா?"

"சமுத்திரநாதனால் உன் சின்ன எஜமானிக்கு ஆபத்து வரப்போகிறது"

"ஆபத்தா? உங்களுக்குத் தெரியுமா?"

"ஆமாம்! அதைத் தடுக்கவே வந்தேன். என்னை உள்ள விடமாட்டார்களே?"

"ஏன் விடமாட்டார்கள்?"

"விடாமல் என்ன? ஆனால் நாட்டியக்காரியின் பிறந்த நாள் விழாவுக்கு பிட்க வந்தால் நன்றாக இருக்குமா?"

"ஆமாம். என் சாமி செய்யாத அக்கிரமம் இல்லை. இதில், பிறந்த நாள் விழாவுக்குவருவதுதான் தவறா?"

"தவறுதான் அழகு. தெரியாமல் எவ்வளவு தவறும் செய்யலாம். தெரிந்து ஏதும் செய்யக்கூடாது".

"தெரியாமல் என்றால் உங்களுக்குத் தெரியாமலா அல்லது பிறருக்குத் தெரியாமலா?" என்று கேட்டு அழகுமுத்து சிரித்தாள்.

"அழகு, இப்போது வாதாட நேரமில்லை... சமுத்திரநாதனின் சூழ்ச்சியை உன் தலைவியிடம் சொல்லி எச்சரிக்கவே வந்திருக்கிறேன்" என்றார் பிட்சு.

"என்னிடம்தான் சொல்லுங்களேன்", என்றாள் அழகுமுத்து.

"அழகுமுத்து உன்னிடம் சொல்லக் கூடியவற்றை உன்னிடம் சொல்வேன். உன் தலைவியிடம் சொல்லக்கூடியவற்றை உன் தலைவியிடம் சொல்வேன். மிகவும் அவசரமான செய்தி, உன் சின்ன எசமானியிடம் சொல்லவேண்டும். உன்னால் உதவி செய்ய முடியுமா முடியாதா? சொல்லிவிடு" என்றார் பிட்சு.

"அழகுமுத்து சிரித்தாள், தங்களுக்கு உதவி செய்ய முடியாது என்று சொல்லிவிட முடியுமா? என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள். நான் மாளிகைக்குப் போக வேண்டும். மலர்க்கூடையை சின்ன அம்மாவின் அறையில் வைக்க வேண்டும்" என்றாள்.

"சின்ன அம்மாவைச் சந்திக்கப் போகிறாய் அல்லவா அப்போது நான் வந்திருப்பதாகச் சொல்கிறாயா?"

"ஐயோ, அது மட்டும் முடியாது, சின்ன அம்மாவுடன் நான் நேரடியாகப் பேசமுடியாது. பெரிய அம்மாவிடம் சொல்லிவிட்டுத்தான் சின்ன அம்மாவையே சந்திக்கலாம். பெரிய அம்மாவிடம் சொல்லட்டுமா?" என்று அழகுமுத்து கேட்டவுடன், "அது மட்டும் வேண்டாம். பெரிய அம்மா காரியத்தைக் கெடுத்துவிடுவாள்" என்று கூறி அவள் காதில் மட்டும் விழக்கூடியவாறு சில செய்திகளைச் சொன்னார்.



"ஏன் சாமி, இந்த இடத்தில் யாரும் இல்லையே! ஏன் காதருகே ரகசியம் சொல்கிறேன் என்று தங்கள் கை என்னவோ விஷமம் செய்கிறதே. உம் பெரிய அம்மாவுக்கும் இந்த சமுத்திரநாதனுக்கும் அப்படியொரு தொடர்பா? ரொம்ப சத்தியவதிபோல பேசுகிறானே!" என்று கூறிய அழகுமுத்து "சாமி இங்கேயே நில்லுங்கள். நான் பூக்கூடையை வைத்துவிட்டு நீங்கள் மாளிகைக்குள்ளே நுழைவதற்கு வழி செய்கிறேன்" என்றாள்.

சிறிது நேரம் கழித்து விரைந்து வந்தாள், "சாமி, சாமி இன்றைக்குப் பிறந்த நாள் விழா கிடையாதாம்" என்றாள்.

"ஏன்...?" என்று கவலைப்படுபவர் போல் பிட்சு கேட்டார்.

"எதனாலோ... வெளிக் கதவைத் தாளிட்டு விட்டார்கள். எப்படி உங்களை உள்ளே அழைத்துச் செல்வது என்று தெரியவில்லை" என்று கூறிச் சிறிது நேரம் யோசித்த அழகுமுத்துவை நோக்கி "நந்தவனத்தில் உல்லாசக் குடிலுக்குப் போகலாமா?" என்று கேட்டார்.

நாணமும், கோபமும் கொண்ட அழகு "ஏன் சாமி. நீங்க வேண்டுமானாலும் இளமை முறுக்குடன் இருக்கலாம். ஆனால் நான் பால்யவதி அல்லள்..." என்றாள்.

"பைத்தியமே, இப்போது சரசமாட நேரமில்லை. மேலும் சரசமாடும் வயதுமில்லை. வயது இருந்தால்கூட உன்னைவிட அழகிகள் எனக்குப் பலர் கிடைப்பர். உல்லாசக் குடிலுக்குப் போனால் அங்கிருந்து ஓர் வழி மாளிகைக்குப் போகிறது..." என்றார்.

அழகுமுத்து வியப்புடன் அவரை நோக்கினாள் "சாமி உங்களுக்கு எல்லாம் தெரியும் போலிருக்கிறதே" என்றாள்.

"எனக்கு வழி தெரியாது என்றா உன்னைக் கேட்டேன். உன்னையும் கேட்டு வைத்தால் உன் உதவியும் எனக்கு

இருந்தால் நல்லதாயிற்றே என்று கேட்டேன். மேலும் சுரங்க வழியை நீண்ட நாள்களாக உபயோகப்படுத்தவில்லை" என்று கூறி நிறுத்தினார்.

"அப்படியொன்றும் நீண்ட நாள்களாக உபயோகப் படுத்தப்படாமலில்லை. சென்ற மாதங்கூட ஒரு நாள் பல்லவ படைத் தலைவரொருவர் வந்தார். இயற்கைக் காற்று உள்ளே புகும் இடத்தில் கொடியும், புதரும் மறைந்திருக்கும். அதை நீக்கி விட்டால், உள்ளே காற்று எளிதில் போகும். உல்லாசக் கூடத்தில் நுழையும் இடம் உங்களுக்குத் தெரிந்த இடமாக இருக்க முடியாது." என்று கூறி பிட்சுவை நோக்கினாள்.

"பிறகு, வேறு வழியா?" என்று கவலையுடன் கேட்டார் பிட்சு.

"வாருங்கள் காட்டுகிறேன். இப்பொழுதே போய் சின்ன அம்மாவிடம் சொல்லிவிட்டு வந்துவிடுங்கள்" என்று கூறி உல்லாசக் குடிலில் சுரங்க வழி இருக்குமிடத்தைச் சுட்டிக் காட்டிவிட்டு இயற்கைக் காற்று நுழையும் இடங்களுக்கிருந்த தடையையெல்லாம் மளமளவென்று நீக்கினாள்.

அந்த வழியே விரைந்து சென்ற பிட்சு ராஜசுந்தரியின் படுக்கை அறை அருகேயிருந்த வாசலின் வழியே படுக்கை அறைக்குள் நுழைந்து ராஜசுந்தரியிடம் பேசினார்.

"என்ன இங்கிருந்து போகச் சொல்லுவதில் உனக்கு ஏதும் பயனில்லை சுந்தரி. உன்னை ஆபத்து சூழ்ந்திருக்கிறது. சமுத்திரநாதன் மிகவும் பொல்லாதவன். உன்னைக் கபடத்தனமாக மயக்கி உன்னைப் பலி இடப் போகிறான்" என்றார் பிட்சு.

ராஜசுந்தரி ஆத்திரத்துடன் பேச நினைத்தவள் சற்றுக் கோபத்தை அடக்கிக்கொண்டாள். பிட்சுவிடமிருந்து பல உண்மைகளை அறிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன், "என்னைப் பலி இடப் பலர் சுற்றுகிறார்கள். அவர்களுள் சமுத்திரநாதன் ஒருவர், மற்றொருவர் நீங்கள்.



என்னைப் பலியிடுவதில் யாருக்கு என்ன பயன்?" ராஜசுந்தரி கோபமாக பேசுவதுபோலவும் அதேசமயம் சாந்தம் நிறைந்த குரலிலும் பேசினாள்.

"பலி என்றால் உயிர்ப்பலி இல்லை சுந்தரி; உடல் பலி. உன்னைத் தனது சொந்தக் காரியத்திற்குப் பயன்படுத்தத் தொடங்கிவிடுவான் சமுத்திரநாதன்"

"வேறுவித பலியிடத் துணியமாட்டார் அவர். அவருக்கும் எங்கள் குடும்பத்துக்கும் உள்ள தொடர்பு உங்களுக்குத் தெரியாது. நீங்கள்தான் வீணே என்னைப் பலி கொள்ள துணிந்துவிட்டீர்கள். நீங்கள் போய்விடலாம்" என்றாள் சுந்தரி.

"சுந்தரி, உனக்கும் சமுத்திரநாதனுக்கும் உள்ள தொடர்பு எனக்குத் தெரியும். அதைக் கொண்டு அவர் உன்னிடம் என்ன யாசிக்கிறார் என்பதும் எனக்குத் தெரியும். அந்த விஷயம் வெளியே தெரிந்தால் பல்லவ சக்ரவர்த்தி உன்னை என்ன செய்வார் என்றும் எனக்குத் தெரியும். பெரும் ஆபத்து பல்லவ நாட்டைச் சுற்றப்போகிறது. அந்தச் சமயத்தில் உன்னைப் பயன்படுத்திக் கொள்ளத் துணிந்துள்ளான் சமுத்திரநாதன்..."

பிட்சு சொல்லிக் கொண்டே போகும்போது ராஜசுந்தரி நடுங்கினாள். அமைதியாக இருந்த அவளுக்கு நேற்று முதல் ஏன் இப்படிப் பயமுறுத்தல்கள்? பிட்சு பொல்லாதவர் என்று அவளுக்குத் தெரியும். தாம் பயப்படுகிறோம் என்பதை வெளிக்குப் புலப்படுத்தினால் பிட்சு மேலும் - தொல்லைக் கொடுப்பார் என்பதற்காகச் சற்றுக் கடுமையான குரலில், "பிட்சு அவர்களே! என்னை பயமுறுத்த யாராலும் முடியாது. போய் விடுங்கள் இங்கிருந்து..." என்றாள்.

பிட்சு பயங்கரமாகச் சிரித்தார். "போகிறேன் சுந்தரி. போகிறேன். என்னால் உனக்கு எந்த விதத் துன்பமும்,

தொல்லையும் ஏற்படாது அதற்கு மாறாக மாபெரும் உதவி செய்ய வந்தேன். அந்த உதவி உனக்கு அன்று; ஓர் வாலிபனுக்கு. அழகிய வாலிபனுக்கு..." என்று கூறி நிறுத்திவிட்டு வெளியே செல்ல எத்தனித்தார்.

சுந்தரி மஞ்சத்தினின்று எழுந்து ஓடிவந்து கதவுக்கருகே நின்று இரண்டு கரங்களையும் நீட்டித் தடுத்து, "பிட்சு அவர்களே... உங்களுடைய சாகசத்தை என் சாமர்த்தியம் ஒரு நாளும் வெல்லாது சொல்லுங்கள்... அழகிய வாலிபனுக்கு உதவியா... நீங்கள் கூட உதவி செய்வதுண்டா?" என்று கேட்டு பிட்சுவின் கரத்தைப் பிடித்து மஞ்சத்திற்கு அழைத்துச் சென்றாள்.

ராஜசுந்தரி மஞ்சத்தில் படுத்திருந்தபோது ஆடைகளை நெகிழும் நிலையில் அணிந்திருந்தாள். எழுந்து கதவுக்கருகே வந்த வேகத்தில் அவளுடைய மேலாடை சரிந்து கச்சை அணிந்திராத அவளின் மார்பகங்களின் செழுமை பிட்சுவை கதிகலங்கச் செய்தது. என்றாலும், அதைப் பார்த்ததும் பாராதவர்போல், "என்னைத் தடுக்காதே சுந்தரி, உனக்கு விருப்பம் இல்லாத எந்த விஷயத்தையும் வற்புறுத்த மாட்டேன்" என்றார்.

"என்னை வற்புறுத்தி யாரும் அடைய முடியாது. ஆனால் என்னை விரும்பி வந்து நானும் விரும்பிவிட்டால்" என்று கூறி நகைத்தாள் சுந்தரி.

போதைச் சிரிப்பில் மனம் தளரவிடாத பிட்சு, "சுந்தரி, உன் பார்வைக்காக ஏங்கும் ஆயிரக்கணக்கானவர் காஞ்சியிலே இருப்பது எனக்குத் தெரியும். அஜந்தா ஓவியத்திலுள்ள அழகிய கன்னியைப்போல உடற்கட்டு கொண்டிருக்கிறாய், உன் விழிகளைப் 'பார்த்து ஓவியர் சித்திரம் தீட்டினரோ? உனது செழுமையான மார்பகத்தைப் பார்த்து அந்தத் திட சித்தமுள்ள ஓவியர் சித்திரம் வரைந்து மற்றவர்களைக் கலங்க வைத்துவிட்டாரோ?" என்றார்.



"அஜந்தாவுக்குப் போய் இருக்கிறீர்களா சுவாமி" என்று கேட்டாள் ராஜசுந்தரி.

"போயிருக்கிறேனா? அதுதானே எனது பிறப்பிடம்".

"அஜந்தா ஓவியங்களைக் காண ஆவலுள்ளவளாய் இருக்கிறேன் சுவாமி. ஆயிரம் வருடத்திற்கு முன்பு வரையத் தொடங்கிய சித்திரத்தை இன்றளவும் வரைந்து கொண்டிருக்கிறார்களாமே? அழியாத வர்ணத்தைக் கொண்டு சித்திரம் தீட்டுகிறார்களாமே!" ராஜசுந்தரி பிட்சுவை நெருங்கிக் கேட்டாள். பிட்சுவின் தோளின்மீது அவளது தோள் பதிந்தது.

பிட்சு நிலை குலையவில்லை.

"அஜந்தா சித்திரங்களை வளர வளர நிறுத்திவிட்டார்கள்" என்றார் பிட்சு.

"ஏன் சுவாமி?" என்று சுந்தரி பரபரப்புடன் கேட்டாள்.

"எல்லாம் பல்லவநாட்டு வாலிபனால் வந்த வினை".

"பல்லவ நாட்டு வாலிபனா? யார் அவன்...?"

"உனக்குத் தெரிந்தவன்".

"எனக்குத் தெரிந்தவனா... எனக்குத் தெரியாத பல்லவ நாட்டு இளைஞர்கள் யார் இருக்கிறார்கள்?" என்று கண்களைச் சிமிட்டிக் கூறினாள் சுந்தரி.

"குமாரதேவன்..." என்றார் பிட்சு.

"குமாரதேவனா?" என்று கூறிய ராஜசுந்தரியின் முகம் மாறியது.

"கர்வம் பிடித்தவன்; கடின இதயமுடையவன்; அவனால் ஓர் ஒவியப் பணியே நின்றுவிட்டதா?" பரபரப்புடன் கேட்டாள் சுந்தரி.

"ஆம். அந்தக் கர்வம் பிடித்தவன், கடின சித்தமுடையவன், பெரும் ஆபத்தில் சிக்கியிருக்கிறான்..." என்றார் பிட்சு.

"ஆபத்திலா... நன்றாகச் சிக்கட்டும்... சாகட்டும்..." சுந்தரி அலட்சியமாகக் கூறினாள்.

"அப்படிச் சொல்லாதே. அவனைக் காபாலிகர்கள் பலி கொடுக்கப் போகிறார்கள்..." பிட்சு பரபரப்புடன் கூறினார்.

"நன்றாகக் கொடுக்கட்டும். சாகட்டும். என்னை அவமானப்படுத்திய கர்வம் பிடித்தவன் உலகத்தை விட்டே ஒழியட்டும். அவனைப் பலி கொடுக்கும் காபாலிகர்களுக்கு நூறுகுடம் மது பரிசாகத் தருகிறேன்" என்று சீறினாள் ராஜசுந்தரி.

"அப்படிச் சொல்லாதே சுந்தரி. அவனைக் காப்பாற்றினால் சமுத்திரநாதன் கொட்டம் ஒடுக்கலாம்..." என்று பிட்சு கூறவும் சுந்தரி சற்றுக் கோபத்தைக் குறைத்துக் கொண்டாள்.

"ஆமாம், சுந்தரி... சமுத்திரநாதனுக்கு எதிரி அவன்தான். அந்த ஒவியனைக் கொண்டே சமுத்திரநாதனை ஒழித்து விடலாம்".

"உண்மையாகவா?"

"ஆமாம், அவனை அந்க் காபாலிகர்களிடமிருந்து காப்பாற்றி விடு. நரபலி கொடுப்பதிலிருந்து காப்பாற்றிவிடு" பிட்சு கெஞ்சினார்.



"காப்பாற்றினால் அந்த குமாரதேவன் எதைத் தருவான்? தன்னையே தருவானா? இந்த உலகத்தில் யாரிடமும் என் உள்ளத்தைத் திறந்து ஆசையைக் கொட்டி, காமக் குறிப்பைக் காட்டி யாசித்ததில்லை. அவன் என்னைப் புறக்கணித்தான். அவன் என்னை ஏற்றுக் கொள்வானா?" சுந்தரி குழைந்தாள்.

"உன் காலடியில் விழச் செய்கிறேன்" என்றார் பிட்சு

"நான் என்ன செய்யவேண்டும்?"

"இப்போதே காபாலிகர்கள் பலி கொடுக்கக் கொண்டு சென்றிருக்கும் இடத்திற்கு வர வேண்டும்" என்று பரபரப்புடன் பிட்சு கூறினார்.

"இப்பொழுதே வாவேண்டுமா? நான் வெளியே புறப்படுவது என்றால் எனது பரிவாரங்கள் வரும். மற்றவர்களுக்குத் தெரிந்துவிடுமே"

"மாறு வேடத்தில் வா".

"எந்த வேடத்தில்?"

"காபாலிகப் பெண் உடையில்".

சுந்தரி ஹோ ஹோ என்று சிரித்தாள். "சிறிது நேரம் இருங்கள் பிட்சு அவர்களே! காபாலிகர் உடை அடுத்த அறையில் இருக்கிறது. அணிந்து வருகிறேன்" என்று கூறி வெளியே வந்த சுந்தரி கதவை வெளியே தாளிட்டாள்.

## அத்தியாயம் - 19

# தப்பி ஓடி விடு

**கா**பாலிகர்கள் தன்னைப் பலியிடப் போகிறார்கள் என்பதைப் பெரிய குமாரதேவன் தெரிந்து கொண்டு விட்டான். 'மனித பலி. மனித ரத்தத்தைக் குடிக்கும் பல்லவ பிரஜைகள். மதத்தின் பேரால் கொடுமை. 'அன்பே சிவம்' என்றழைக்கப்படும் சிவபெருமானின் மதத்தவர்கள் என்று கூறிக் கொள்பவர்களும்; காபாலிகர்களும், பைரவர்களும் இவ்வாறு நரபலியிடத் துணிந்து விட்டார்கள். உம்..' என்ற வேதனையில் திரும்பிப் படுத்தான் குமாரதேவன்.

'தனது கையில் ஏற்பட்டு இருக்கும் புண் தன் உயிரைக் காப்பாற்றிவிடும். வாழ்க அந்தப் புண்! போர்க்களத்திலே விழுப்புண் பெற்றால் நாட்டிலே பெருமை. இந்தக் கொடியவர்களிடமோ உயிர்ப்பிச்சை பெற முடியும் போல் இருக்கிறதே. சூலாயுதத்தை எடுத்து மார்பில் கீறிக் கொள்ளலாமா?'

குமாரதேவன் இவ்வாறு எண்ணிக்கொண்டே மீண்டும் உறங்கிவிட்டான். மீண்டும் விழித்தபோது தேவசோமை அவன் அருகே அமர்ந்திருப்பது தெரிந்தது.

"காலையிலிருந்தே உறங்குகிறீர்களே! அப்படியொரு களைப்பா?" எங்களுக்கெல்லாம் உறக்கமே வருவதில்லை என்றாள் தேவசோமை.

நிலவு இன்னும் உதயமாகவில்லை. தீவர்த்தியின் மங்கிய ஒளி எங்கிருந்தோ வீசிக் கொண்டிருந்தது. குமாரதேவனை அப்படியே அணைத்துக் கொண்டுவிட வேண்டும் என்ற துடிப்பு தேவசோமையிடம் எழுந்தது. சத்திய சோமனுக்கு தன் கூட்டாளி தேவசோமையின் மனம் புரிந்துவிட்டது.



அவளது மனம் அந்த இளைஞனிடம் தாவுகிறது என்பது அவனுக்குத் தெரிந்துவிட்டது. பொதுவாக தேவசோமை விரும்பியவரிடம் செல்வதைத் தடுக்காத சத்தியசோமனுக்கு இப்போது பொறமை எழுந்தது. கோபம் தோன்றியது.

"சாமுத்திரிகா இலட்சணம் நிறைந்த வாலிபன் வேறு எவரும் கிடைக்கமாட்டார்களா?" என்று தேவசோமை கேட்டாள்.

சத்தியசோமனுக்குக் கோபம் வந்தது. அது என்ன இப்படிக் கேட்கிறாள். மிகவும் சிரமப்பட்டு தேடிக் கொண்டு வந்திருக்கிறோம். நாட்டின் சுபீட்சத்திற்காக பலியிட வாலிபன் கிடைத்துவிட்டானே என்ற மகிழ்ச்சி ஏற்படுவதுபோக இவள் வேறு விதத்தில் நினைத்துக் கேட்கிறாளே.

"கிடைப்பார்கள், கிடைப்பார்கள். ஆனால் பலியிட முடியாமல் போய்விடும்" என்றான் சத்தியசோமன்.

"ஏன்...?"

"அந்த அழகிய வாலிபனையும் கண்டு நீ மயங்கி விடுவாய். உனக்கு இப்போது வாலிபர்களைத் தான் பிடிக்கிறது" என்று கூறிச் சிரித்தான் சத்தியசோமன்.

தேவசோமைக்குச் சிறிது கோபம் ஏற்பட்டது. "ஆண் பித்துப் பிடித்து நான் அலையவில்லை... ஆனால்..."

"ஆனால் என்ன சொல்லு?"

"இவனைக் கண்டவுடன் சிறிது நேரம் பேசிக் கொண்டிருக்க வேண்டும் என்று தோன்றியது."

"பேசி விட்டாயல்லவா?"

"பேசினேன். பேசிய பிறகு அவனிடத் தனித்து இருக்க வேண்டும்போல் தோன்றுகிறது சத்திய சோமா! இவனைப் பலியிடாமல் தடுக்க முடியாதா?"

"முடியாது. குரு என்ன சொன்னார் என்று கேட்டுக் கொண்டிருந்தாயல்லவா? வரும் அமாவாசையன்று காபாலீச்வரருக்குப் பலியிடுவோம். இரத்தத்தைக் குடிப்போம். உடனே மழை பெய்யும். ஏரி, குளம் நிரம்பும். பயிர்த் தொழில் நடக்கும். நமது பிரார்த்தனையால் மழைபெய்தால் பரமேச்வரவர்மர் நம்மை நம்புவார். நமது சமயத்தை ஏற்பார். நம்மீது உள்ள கோபத்தை மறப்பார். புதிதாக முளைத்திருக்கும் சைவர்களையும் வைணவர்களையும் மன்னர் மறப்பார். நம் சொற்படிக் கேட்பார். மொட்டைத் தலை பிக்குகளை ஓட்டுவோம்..." என்று மளமளவென்று கூறினான் சத்தியசோமன்.

"ஒன்றும் நடக்கப் போவதில்லை. சிவபெருமானுடைய கோபத்தைச் சம்பாதித்துக் கொள்வது ஒன்றுதான் மிச்சமாகப் போகிறது. பலியாகப் போகும் வாலிபன் சிவபக்தன்..." என்றாள் தேவசோமை.

"தேசசோமா! உனக்குப் பைத்தியமா பிடித்துவிட்டது? இங்கிருந்து நீ போய்விடு. இப்படி நீ சொல்வதைக் கேட்டால் உனக்குத் தண்டனைதான் தருவார்கள். உன் கருத்தைக் கூறாதே. போய் விடு..." என்று கூறி தேவசோமையை இழுத்துக்கொண்டு சத்தியசோமன் விரைந்தான்.

நடு நிசி நெருங்கிக் கொண்டிருந்தது. திடீரென அங்கே பரபரப்பு. 'ஹா-ஹா' என்ற குரல். ஏதோ அதிவேகமாக காரியங்கள் நடைபெறும் ஓசை. காபாலிகர்களும் பைரவர்களும் அங்கிருந்து புறப்பட்டுக் கொண்டிருந்தனர். 'நமது இருப்பிடத்தைப் பல்லவ வீரர்கள் தெரிந்து கொண்டுவிட்டார்கள். காபாலீச்வரருக்குப் பலி கொடுக்கும் விஷயமும் அவர்களுக்குத் தெரிந்துவிட்டது. அவர்கள்



வருவதற்குள் நாம் இங்கிருந்து ஓடிவிட வேண்டும்" என்று தலைமைக் குரு பரபரப்புடன் பேசினார்.

குமாரதேவன் உறங்கிக் கொண்டிருந்தான். அவனைத் தூக்கி இருவர் சுமந்து கொண்டனர். அதிவேகமாக அங்கிருந்த காபாலிகர் கூட்டம் மறைந்தது.

அவ்வளவு வேகமாக எப்படித்தான் அவர்களால் நடக்க முடிந்ததோ! பொழுது விடிவதற்குள் திருக்கழுக் குன்றத்திற்கு வடக்கே மலை சூழ்ந்த பகுதியை அவர்கள் அடைந்தனர். அவர்கள் செல்லும்போதுதான் சுந்தரமூர்த்தி அந்தக் குழுவினரைப் பார்த்தார்.

அமாவாசை நெருங்கிக் கொண்டிருந்தது. குமாரதேவன் காபாலிகர்கள் நடுவே சிறைப்பட்டுக் கிடந்தான். அவனது கரத்தில் ஏற்பட்டிருந்த ரணம் நன்றாக ஆறிவிட்டது.

ரணத்தை விரைவில் சுகப்படுத்தும் மூலிகைகளைத் தெரிந்து வைத்திருந்தார்கள் காபாலிகர்கள். மீண்டும் அந்த ரணத்தைச் சிதைக்க விரும்பினான் குமாரதேவன். ஆனால், கண்ணும் கருத்துமாக அவனைப் பாதுகாத்துக் கொண்டிருக்கும் காபாலிகர்கள் அவனை அசைய விடவில்லை. தேவசோமையையும் சத்திய சோமனையும் காணோம்.

மறுநாள் அமாவாசை. முதல் நாள் குமாரதேவனுக்கு இராஜோபசாரம் நடைபெறத் தொடங்கியது. எண்ணெய் தேய்த்து நீராடுமாறு சொன்னார்கள். விலையுயர்ந்த ஆடைகளைக் கொடுத்து அணியுமாறு கூறினார்கள். அவன் எதிரே சுவையான உணவு பரிமாறப்பட்டது. குமாரதேவன் அவற்றை கண் எடுத்தும் பார்க்கவில்லை. இதுவரை உயிருக்கு அஞ்சாதிருந்தவனுக்கு உயிரின்மீது கவலை ஏற்பட்டுவிட்டது.

போர்க்களத்தில் மடிந்தால் வீரப் பெயர் கிடைக்கும். எதிரியை மாய்த்துத் தானும் மாய்ந்தால் வீர மான்யம்

கிடைக்கும். இப்படி எதற்கும் பயனற்றவர்களிடம் சிக்கிக் கொண்டோமே என்று வருந்தினான். இந்த உடலை நாட்டிற்காகப் பலியிட்டாலும் நல்லதே. ஆனால் எதற்கும் உதவாத, ஒரு மூடச் செயலுக்காகப் பலியிடத் துணிந்து விட்டார்களே...

நாட்டில் பஞ்சம் ஏற்படத் தொடங்கிவிட்டது. கிராமப் பகுதிகளில் உள்ள தான்யங்களைப் பதுக்கிவிட்டார்கள். ஒரு வாய்ச் சோற்றிற்காக மக்கள் ஓடி வருகிறார்கள் காஞ்சியை நோக்கி. காஞ்சி நகரம் இடம் போதாமல் பிதுங்குகிறது. ஒரு கும்பல் சதி செய்கிறது என்பதை அறிந்த காஞ்சி நகர ஆளுங் கணத்தார் குமாரதேவனைத் தேர்ந்தெடுத்தார்.

"தம்பி, உன்னிடம் மிகவும் முக்கியமான பொறுப்பை ஒப்படைக்கிறேன் பருவ மழை தவறிவிட்டது. தோற்று ஓடிய சாளுக்கியர் நிலங்களைப் பாழ்படுத்திவிட்டனர். தான்யங்களைச் சேமித்து வைத்திருந்த களஞ்சியங்களைத் தீக்கிரையாக்கிவிட்டனர். இதைப் பயன்படுத்திக்கொண்ட சமூக விரோதிகள் நெல்லைப் பதுக்கிவிட்டனர். நீ அந்தக் கொடியவர்களைக் கண்டு பிடிக்க வேண்டும்" என்று கட்டளையிட்டார்.

அந்தப் பணியை ஏற்றுக் கொண்ட குமாரதேவன் சுற்றியலைந்து கொண்டிருந்தபோது தான் காபாலிகர்களிடம் சிக்கிக் கொள்ள நேர்ந்தது. தன்னைப் பலியிடப் போகிறார்கள் என்பதை அறிந்தவுடன் பதுக்கல்காரர்களைக் கண்டு பிடிக்காமல் காபாலிகர்களிடம் பலியாகிவிடப் போகிறோமே என்று வருந்தினான்.

"சுவையான விருந்தைக் கண் எடுத்தும் பாராமல் ஏன் இப்படி இருக்கிறாய்" என்று காபாலிகன் ஒருவன் கேட்டான். குமாரதேவன் மறுமொழி கூறவில்லை.

"பசியோடு இருப்பது பாவம்..." என்றாள் காபாலிகை ஒருத்தி!



"யாருக்குப் பாவம்..." என்று கேட்டான் குமாரதேவன்.

அங்கே ஒரே ஆரவாரம். "இதுவரை பேசாமல் இருந்த இளைஞன் பேசிவிட்டான்" என்று குதூகலம்.

"எங்களுக்குப் பாவம்..." என்றான் ஒரு பைரவன்.

"உங்களுக்கு நிறைய பாவம் வரட்டும். பாவக் கடலில் நீங்கள் மூழ்கித் தத்தளியுங்கள்" என்றான் குமாரதேவன்.

"எங்களுக்குப் பாவம் வந்தால் நாட்டுக்குக் கெடுதல்" என்றான் காபாலிகன்.

"இனி வராத கெடுதல் ஏது. இந்தக் கெடுதலும் சேரட்டும்" என்றான் குமாரதேவன்.

"நாங்கள் கூறினால் நீ கேட்க மாட்டாய். தேவசோமையை அழைத்து வருகிறோம்" என்று கூறி அவர்கள் சென்றனர்.

தேவசோமை சோமமே வடிவெடுத்தாற்போல் வந்தாள். அவள் கண்கள் இயற்கையிலயே சிவந்திருக்கும். இப்போது அழுது அழுது மேலும் சிவந்திருந்தது.

"இதோ பார் தேவசோமா! இவன் நாங்கள் சொல்வதைக் கேட்க மாட்டேன் என்கிறான்... நீதான் அவனுக்கு யோசனை சொல்ல வேண்டும்" என்றனர் காபாலிகர்கள்.

"நாளை இரவு காபாலீச்வரருக்குப் பூசை. அதற்குள் இவன் நன்றாக் உண்டு, உறங்கி மகிழ்ச்சியுடனிருக்க வேண்டும். இன்று இரவு நடைபெறும் நடனத்தில் இவனும் சந்தோஷமாகக் கலந்து கொள்ள வேண்டும். அதற்கான வழியை நீதான் சொல்ல வேண்டும்" என்றனர்.

தேவசோமை சிறிது யோசித்தாள். பிறகு ஆவேசம் வந்தவள்போல் தலையை விரித்துப்போட்டு ஆடி,

சூலாயுதத்தைப் பூமியில் குத்தி, "இங்கிருந்து எல்லோரும் போயிவிடுங்கள். நான் இவனது மனத்தை மாற்றிவிடுகிறேன்" என்றாள்.

அனைவரும் அங்கிருந்து அகன்றனர். தேவசோமை குமாரதேவன் அருகே அமர்ந்தாள். அவனையே உற்று நோக்கினாள். அவள் விழிகளிலிருந்து நீர் தாரை தாரையாகப் பெருகியது.

காபாலிகை அழுவது அவனுக்கு வியப்பாயிருந்தது. "நீ ஏன் அழுகிறாய்?" என்று கேட்டான் குமாரதேவன். அவள் மறுமொழி பேசவில்லை. அவனைச் சுட்டிக் காட்டினாள்.

''நானா காரணம்...?'' என்றான் குமாரதேவன். தேவசோமை 'ஆம்' என்று தலையசைத்தாள்.

"நான் என்ன செய்தேன்...?"

"நீ இன்னும் தப்பிப் போகாமலிருக்கிறாயே... உனக்கு உயிர் மீது ஆசையில்லையா?" தேவசோமை அவனுடைய மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

பாறையைப் போன்ற வலிமையுடைய அவனது உடல் அவள் மேனியில் ஓர் விதச் சிலிர்ப்பை ஏற்படுத்தியது.

அவனுடைய கரங்கள் அவள் விழிநீரைத் துடைத்தன.

''எனக்காக நீ ஏன் அழுகிறாய்?'' குமாரதேவன் உண்மையிலேயே புரியாமல் கேட்டான்.

தேவசோமை சிரித்தாள். தன் விழி நீரைத் துடைத்து அவனது கரத்தை எடுத்துத் தன் கரங்களில் வைத்துக் கொண்டாள். ''வாள் சுழற்றும், வேல் எறியும் கரத்தில் எவ்வளவு மென்மை" என்று கூறினாள். அந்தக் கரத்தைத் தன் மார்பருகே இழுத்துச் சென்று சந்தனம் அப்புவதைப் போன்று தன் கரங்களை இஷ்டப்படிச் செயலாற்றினாள்.



குமாரதேவன் துள்ளி எழுந்தான். இதென்ன செய்கை என்று வெறுப்பு அவனுக்கு ஏற்பட்டது. தேவசோமை கீழே விழுந்து கிடந்தாள். முன்பே சரியான முறையில் அணியாத ஆடை இன்னும் குலைந்திருந்தது. குமாரதேவன் முகத்தைத் திருப்பிக் கொண்டான். மறுநாள் உயிர்ப்பலியாவதே மேல் என்று அவனுக்குத் தோன்றியது.

"தேவசோமை... இங்கிருந்து போய்விடு... நான் நாளைய தினம் உங்கள் தெய்வத்திற்குப் பலியாகத் துணிந்துவிட்டேன்" என்றான்.

தேவசோமை துள்ளி எழுந்தாள். "என்ன சொன்னாய்? பலியாகப் போகிறாயா? நான் சம்மதிக்க மாட்டேன். இதோ பார். இன்று இரவு கடைசி ஜாமத்தில் இங்கிருந்து தப்பி ஓடிவிடு. நான் அதற்கு வழி காட்டுகிறேன்" என்றாள்.

குமாரதேவன் திரும்பிப் பார்க்கவில்லை. தேவசோமை அவன் முன்பு நின்று, "குமாரதேவா... உனது உயிரின் மதிப்பு இவர்களுக்குத் தெரியாது. எனக்குத் தெரியும்... உம், இலையிலுள்ளதை எடுத்து உண்டு. பிறகு தூங்கு... நாட்டியம் ஆரம்பமானவுடன் நான் உன்னை அனுப்பி விடுகிறேன். இருளோடு இருளாக ஓடிவிடு" என்றாள்.

குமாரதேவன் அவளைத் திரும்பிப் பார்த்தான். தேவசோமை அவனைத் திரும்பிப் பாராமலே சென்று கொண்டிருந்தாள். மறுகணம் காபாலிகர்கள் அவனைச் சூழ்ந்து கொண்டார்கள்.

''என்ன வேண்டும்? மது வேண்டுமா? அதிரசம் வேண்டுமா? பணியாரம் வேண்டுமா?'' என்று உபசாரம் செய்தனர்.

வயிறார உண்டான் குமாரதேவன். உறங்குவதுபோல் பாவனை செய்தான். இரவு காபாலிகர்களின் நடனம் தொடங்கிவிட்டது. விதவிதமான வாத்தியங்கள் ஒலித்தன.

யாரோ அவனருகே வந்த ஓசை கேட்டது. அவன் காதருகே தேவசோமை கிசுகிசுத்தாள்.

"உம்... எழுந்திருந்து இந்தப் பக்கமாக ஓடிவிடு. அடுத்த பௌர்ணமியன்று உன்னைச் சந்திக்கிறேன்" என்றாள். அவன் பேச வாயெடுக்க முடியாமல் அவளது மது நெடி வீசும் அதரங்கள் அழுத்தின. தன் மேலிருந்து அவனைக் கீழே தள்ள அவன் பட்டபாடு!

குமாரதேவன் அங்கிருந்து ஓடினான். புனர் ஜென்மம் எடுத்தவன் போல் ஓடினான். விடியும் வேளையில் கால் தடுக்கிக் கீழே விழும்வரை ஓடினான்.

கீழே அவனை விழுமாறு செய்தது மரக்கிளையல்ல - ஒரு பெண்ணின் உடல்.

சந்திரகுமாரி மயங்கி அங்கே வீழ்ந்து கிடந்தாள்.

## அத்தியாயம் - 20

# கலையும் கவலையும்

சிற்பியின் மகள் மரகதம் பாசுபதர் செல்லும் திக்கை நோக்கித் திகைத்தவாறு நின்று கொண்டிருந்தாள். இளவரசர் செய்தி ஒன்று சொல்லி அனுப்பியதாகக் கூறிய அந்தப் பாசுபதர் செய்தியைச் சொல்லாமலே போய்விட்டாரே.

உண்மையிலேயே இளவரசர் ஏதாவது செய்தி சொல்லியனுப்பியிருப்பாரா?

மரகதம் விரைவாக உள்ளே சென்றாள். தூங்கிக் கொண்டிருந்த தன் தந்தையை எழுப்பினாள்.

"அப்பா, அப்பா! இப்போது ஓர் அதிசயம் நடந்தது" என்று அவர் அருகே உட்கார்ந்தாள். அவள் அருகே நீராகாரப் பாத்திரம் இருந்தது.



சிற்பி சுந்தரமூர்த்தி தூங்கவில்லை. காலை வேளையில் தூக்கம் எப்படி வரும். சற்றுக் களைப்பாக இருந்திருக்கும். அவர் சிந்தனைக் குதிரை சிறகடித்துப் பறக்க ஆரம்பித்துவிட்டது.

இளவரசர் நரசிம்மர் வந்தார். சிற்பப் பணி தொடங்குவதைக் குறித்து ஆவலைக் கிளறிவிட்டுப் போய்விட்டார்.

மாமல்லபுரத்தில் பல சிற்பப் பணிகளை மேற்கொண்டவர் அவர். மாமல்லர் ஜீவியவந்தராக இருந்த சமயம். சுந்தரமூர்த்தியும் மாமல்லரும் நேரம் போவதே தெரியாமல் பேசிக்கொண்டிருப்பார்கள்.

துறைமுகத்துக்குச் சற்று தொலைவிலுள்ள பாறைகளைச் சிற்பங்களாக அமைக்கத் தேர்ந்தெடுத்திருந்தார் மாமல்லர். சுந்தரமூர்த்தியைப் போன்று திறமை மிகுந்த நூற்றுக் கணக்கான சிற்பிகள் இருந்தனர். சாளுக்கிய நாட்டினின்றும் வந்த சிற்பிகள் தங்கள் திறமையை எப்படிப் புலப்படுத்தலாமென்று கனவு கண்டு கொண்டிருந்தனர். அதெல்லாம் வேறு கதை.

சுந்தரமூர்த்திக்குப் பெரும் அதிர்ச்சி வாழ்வில் ஏற்பட்டது. அதனால் தனியே இந்தக் குடிலுக்கு வந்துவிட்டதுதான் இப்போது முக்கியமானது.

சிற்பத்தை மறந்திருந்தார். கலையென்றாலே கசப்பாயிருந்தது. அந்தக் கசப்புத் தீர இப்போது விடிவெள்ளி ஏற்பட்டிருக்கிறது.

சுந்தரமூர்த்தி எழுந்து உட்கார்ந்து கொண்டார்.

"என்னம்மா, அதிசயம் என்கிறாயே... இளவரசர் வந்துவிட்டு வேகமாகச் சென்றுவிட்டார். பிறகு என்ன நேர்ந்தது?" என்று கேட்டார். பிறகு, மகளை மறுமொழி கூறவிடாமல், "மரகதம், மறுபடியும் சிற்பப் பணியைத் தொடங்க வேண்டுமென்று இளவரசர் கட்டளையிட்டார். நான் ஓர் நிபந்தனை விதிக்கப் போகிறேன்" என்றார்.

மரகதத்திற்கு அவர் சொல்வது சரியாகக் காதில் விழவில்லை. "அப்பா, அந்தப் பாசுபதர் ஏன் உடனே எழுந்து போய்விட்டார்?" என்று கேட்டாள்.

சுந்தரமூர்த்திக்கு அவள் கூறுவது மனத்தில் பதியவில்லை.

"என்ன நிபந்தனை தெரியுமா? மேற்கே அஜந்தா காடுகளுக்குப் போய் வர என்னை அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்ளப்போகிறேன்..." என்றார்.

மரகதம்: "அப்பா, அந்தப் பாசுபதரைப் பார்த்தால் எனக்கு என்னவோ சந்தேகமாயிருக்கிறது".

சுந்தரமூர்த்தி: "மாமல்லர் சொல்லுவார், அஜந்தாவையே பல்லவ நாட்டிற்குக் கொண்டு வந்துவிட வேண்டும் என்று, சிற்பப் பணியைத் தொடங்குவதற்கு முன்பு கலையாத்திரை செல்லாமல் எப்படி என்னுடைய திறமையைப் புலப்படுத்துவது?"

மரகதம்: "இளவரசர் ஏதோ முக்கிய செய்தி சொல்லியனுப்பியிருப்பதாப் பாசுபதர் சொன்னார். இப்போது பாசுபதர், காபாலிகர், பௌத்த பிக்கு யாரையும் நம்ப முடியவில்லை".

சுந்தரமூர்த்தி: "என்னம்மா இது, நான் ஏதோ சொல்கிறேன். நீ ஏதோ சொல்கிறாய்? அஜந்தாவுக்கு நீயும்தான் வரவேண்டும்".

மரகதம் கலகலவெனச் சிரித்தாள். "நாம் இருவரும் ஒருவர் சொல்வதை ஒருவர் புரிந்து கொள்ளாமல் பேசுகிறோம். இப்போது பாசுபதர் ஒருவர் வந்து விட்டுப் போகிறார் என்றேன்" என்றாள்.

"இளவரசரிடம் சொல்லி உடனே கலையாத்திரைக்குப் புறப்பட வேண்டும். பஞ்சமும் பட்டினியும் இங்கே வாட்டி வதைக்கும்போல் தோன்றுகிறது. இந்தக் கஷ்டகாலத்தில் இங்கே இருந்து என்ன செய்வது? யாத்திரைக்கு யாத்திரை,



பஞ்சத்தினின்று தப்பியதுபோலும் இருக்கும்" என்றார் சுந்தரமூர்த்தி.

மரகதம் சில கணம் ஏதும் பேசவில்லை. "அப்பா, நான் சொல்வதை நீங்கள் கேட்கவே மாட்டீர்கள்... சரி, அஜந்தாவுக்குச் செல்வோம்; அதற்கு முன்பு இங்கே எதிர்பாராத பல சம்பவங்கள் நடைபெறும்போல் தோன்றுகிறது. பாசுபதர் என்று பொய் வேடம் பூண்டு ஒருவர் வந்தார். அதைப் பற்றிச் சிறிது நான் சொல்லுவதைக் கேளுங்கள்" என்று சற்றுக் கோபமாகவே பேசினாள் மரகதம்.

சுந்தரமூர்த்தி நகைத்தார். "குழந்தாய், நீ சொல்வது என் காதில் விழுகிறது. பாசுபதர் வருவார், காளாமுகர் வருவார்; காபாலிகர் வருவார்; சிவனடியார் வருவார்; சாக்தர் வருவார். இவர்களெல்லாம் வந்து என்ன செய்யப் போகிறார்கள்? நாட்டிலே பஞ்சம் பசியைத் தீர்க்கப் போகிறார்களா? உம். பாசுபதர் வந்தார். உடனே போய்விட்டார் என்றுதானே சொல்கிறாய். போனால் போகட்டும். நாட்டிலே ஏதோ குழப்பத்துக்கு இவர்கள் எல்லோரும் விதை விதைக்கிறார்கள். குழப்பம், பஞ்சம் இவற்றிற்கு முன்பு நாம் யாத்திரைப் புறப்பட்டுவிட வேண்டும்" என்றார்.

மரகதம் ஏதும் பேசவில்லை. வெளியே சென்று திரும்பி வந்தவள், "ஏன் திடீரென குழப்பம் செய்கிறார்கள். நர பலிக்குப் காபாலிகர்கள் ஏன் முயல்கிறார்கள்?" என்று கேட்டாள்.

"நரபலி இடட்டும், தங்களையே கொற்றவைக்குப் பலி இட்டுக் கொள்ளட்டும். மரகதம், பலி என்றவுடனே நினைவுக்கு வருகிறது. கொற்றவைக்குத் தன்னைத்தானே பலி கொடுத்துக் கொள்ளும் வீரர்களை உனக்குத் தெரியுமா?" என்று கேட்டார்.

"பலி என்றாலே எனக்குத் தெரியாது. நீங்கள் சில கதைகளைச் சொல்வீர்கள். அதுதான் எனக்குத் தெரியும்."

"திருநாவுக்கரசு நாயனார் சொன்னார் என்று ஒரு கதை சொல்வீர்களே: தன் மகனையே வாளார் அறுத்துச் சமைத்த பக்தரைப் பற்றி..." என்று சொல்லும்போது மரகதம் உடல் சிலிர்த்தது.

"கதை இல்லை பெண்ணே! கலை இல்லை. நிஜமாக நடந்தது. சிவபெருமான் மீதும், சிவனடிகளார் மீதும் தணியா பக்தி கொண்டவர்களின் செயல் அது. அதுபோல் காபாலிகர்கள் யாரையாவது பலி கொடுக்கலாம். நமக்கென்ன? நேரமாகிறது. அடுப்பை மூட்டு" என்றார் சுந்தரமூர்த்தி.

"நமச்சிவாயா" என்று கூறிக்கொண்டே அவரும் எழுந்தார்.

மரகதம் அடுக்களையினுள் சென்று திரும்பி வந்து பரபரப்புடன், "அப்பா, பானையில் மணி அரிசிகூட இல்லையே..." என்றாள்.

"நேரமாகவில்லை. நான் வல்லத்துப் பிள்ளை வீடுவரை போய் வருகிறேன். அவர் அரிசி தருவார். அரிசி இல்லை என்றால் நெல் தருவார்" என்று புறப்பட்டார் சுந்தரமூர்த்தி.

"அப்பா வெயில் ஏறுவதற்கு முன்பு வந்துவிடுங்கள்" என்று குரல் கொடுத்தாள் மரகதம்.

வல்லம் என்பது அருகேயுள்ள சிறு கிராமம். வல்லத்து வாகீசம் என்பவர் சுந்தரமூர்த்தியிடம் மிக அன்பு கொண்டவர். அவருக்கு நிறைய நஞ்சை, புஞ்சை நிலங்கள் உண்டு. சுந்தரமூர்த்தியின் குடும்பம் கவலையின்றி நடத்த வேண்டிய உதவிகளை அவர் செய்து வந்தார். அந்த உதவிக்காக அவர் கேட்பது ஏதாவது சிற்பத் தொகுதியில் தன் உருவத்தையும் சேர்த்துவிட வேண்டும் என்பதுதான். சிற்பக்கலை என்பது உள்ளவற்றைப் படைப்பதற்காக ஏற்படவில்லை. நடந்தவற்றை மக்களுக்கு எடுத்துக்காட்ட ஏற்பட்ட தெய்வீகக் கலை. அதனால்தான் தேவர்களையும்



கின்னர கிம்புருடர்களையும், ரதி மேனகா ஊர்வசிகளையும், மும்மூர்த்திகளையும், போதி சத்வரையும், தீர்த்தங்களையும் சிற்பமாக அமைக்கிறோம்... தங்களையும்..." என்று புன் சிரிப்புத் தவழ சுந்தரமூர்த்தி கூறும்போது, "புரிகிறது, புரிகிறது. என்னை என் காலத்திற்குப் பிறகு சிற்பமாக அமைக்கிறேன் என்கிறீர்கள். அப்படித்தானே, சுந்தரமூர்த்தி என்னைச் சிற்பமாக அமைக்க உம்மால் ஒருநாளும் முடியப் போவதில்லை" என்பார்.

"ஏன்?" என்று சுந்தரமூர்த்தி கேட்டார்.

"உமக்கு முன்பு நான் காலமாகப் போவதில்லை. ஏனென்றால் உமக்கு எனது புதல்வர்கள் ஆதரவு தருவார்கள் என்று சொல்ல முடியாது. உமது காலம் முடிந்துவிட்டால் மறுகணம் நான் உயிருடன் இருக்க மாட்டேன்" என்பார்.

சுந்தரமூர்த்தி அவரை அன்புடன் அணைத்துக் கொள்வார். "வாகீசம், உம்முடைய கலை அன்புக்கு ஓரிடம் கட்டாயம் தரத்தான் போகிறேன். நீர் குபேரனுக்குச் சமம். உம்மைக் குபேரனாகப் படைக்கிறேன்" என்பார்.

அவ்வளவு அன்பும் பண்பும் நிறைந்த வாகீசம் இருக்கும் கிராமத்திற்குச் சுந்தரமூர்த்தி சென்றார்.

சமீப காலமாக வயல்களில் வேளாண்மை ஏதும் நடைபெறவில்லை. மழை இல்லாததால் வயல்கள் காய்ந்துப் போயிருந்தன என்பது அவருக்குத் தெரியும். ஆனால், வாகீசம் வீட்டுக் குதிர் எப்போதும் நிறைந்திருக்கும். வற்றாத களஞ்சியம் அது.

சுந்தரமூர்த்தி அந்தக் கிராமத்து எல்லையில் செல்லும்போதே மனத்தில் ஏதோ வேதனை ஏற்படுவதை உணர்ந்தார்.

கிராமத்தில் ஆள் நடமாட்டமே இல்லை. சுந்தரமூர்த்தி பரபரப்புடன் வாகீசம் வீடு நோக்கிச் சென்றார்.

வாகீசம் வீடு பாதி எரிந்த நிலையில் இருந்தது. வீட்டில் ஒருவரையும் காணவில்லை. வீட்டிலுள்ள பொருள்கள் தாறுமாறாகக் கிடந்தன. சிறு குன்றைப் போன்ற களஞ்சியம் கருகிக் கிடந்தது.

"வாகீசம்" என்று கூவினார் சுந்தரமூர்த்தி. பித்துப் பிடித்தவர் போல் அங்குமிங்கும் ஓடினார். தொண்டை கிழியக் கூவினார்.

வெளியே வந்தார். வீதியில் ஓடினார். எல்லா வீடுகளுக்கும் அதே கதிதான். ஒவ்வொரு வீடாக ஏறி இறங்கினார். தெரு நாயைக் கூடக் காணவில்லை. தெரு முனையில் இருந்த மரக் கோயில்கூட எரிந்த நிலையில் இருந்தது.

"இது என்ன அக்கிரமம்...." என்று வாய்விட்டுக் கூவினார். பெரும் சூறாவளியும், காட்டுத் தீயும் பற்றியதால் அழிந்தது போன்ற நிலையில் இருந்தது அந்த அழகிய கிராமம்.

"ஐயோ... வாகீசம்.... வாகீசம்.... நீ எங்கே போனாய்...?" என்று கதறினார் சுந்தரமூர்த்தி.

தெருவிலே ஓடினார். குளக்கரைக்குச் சென்றார். குளத்தின் நடுவே தேங்கி இருந்த சிறிது நீரை ஒரு பசு குடித்துக் கொண்டிருந்தது. உயிரை இன்னும் சிறிது நாட்களுக்கு வைத்திருக்கவேண்டும் எனும் ஆசையில் அந்தத் தண்ணீரை மெல்லக் குடித்துக் கொண்டிருந்தது.

"பசுவே, பசுவே... வாகீசத்தைப் பார்த்தாயா?" என்று கூவினார்.

காய்ந்த ஆலமரத்தினின்று ஒரு பறவை பறந்தது. "ஏ கானப் பறவையே! உனது அன்பர் வாகீசத்தைப் பார்த்தாயா?" என்று கேட்டார்.

அலைந்தார்... திரிந்தார்... வெயில் உச்சிக்கு ஏறிக் கொண்டிருந்தது.



"இதென்ன அக்கிரமம், என்னவென்று சொல்லக்கூட நாதியில்லமல் கிராமமே பூண்டோடு அழிந்து விட்டதா?" என்று கூவினார்.

ஊர்ப் பஞ்சாயத்து நடைபெறும் அரசமர மேடையின் அருகே இருந்து ஒரு குரல் வந்தது.

"யாரது?"

சுந்தரமூர்த்தி குரல் வந்த பக்கம் ஓடினார். ஒரு கிழவி படுத்திருந்தாள்.

உயிர் இருப்பதால்தான் குரல் கொடுத்தாள் கிழவி. கிழவியின் அருகே உட்கார்ந்து பரபரப்புடன் கேட்டார்.

"பாட்டி, பாட்டி... வாகீசம் எங்கே? கிராமத்தில் உள்ளவர்கள் எங்கே? சுடுகாடு போல் காட்சி அளிக்கிறதே ஊர்..." என்று கேட்டார்.

கிழவிக்குப் பேசக்கூட சக்தியில்லை. 'தண்ணீர், தண்ணீர்' என்று ஜாடை காட்டினாள்.

சுந்தரமூர்த்தி குளக்கரைக்கு ஓடினார். குளத்தின் நடுவே தேங்கியிருக்கும் தண்ணீரை எப்படிக் கொண்டு வருவது? தண்ணீரைப் பருகிக் கொண்டிருக்கும் பசுவை விரட்டிவிட்டு தனது மேல் உடையை நனைத்தார். தண்ணீர் பொசுக்கென்று தீர்ந்துவிட்டது.

ஓடினார், ஓடினார் கிழவி இருப்பிடம். கிழவியின் வாயைத் திறக்கச் செய்து தண்ணீரைப் பிழிந்தார்.

கிழவிக்குச் சற்று உயிர் வந்தது. ஆனால் பேசமுடியவில்லை. சற்றுமுன்பு "யாரது?" என்று குரல் கொடுத்தவுடனேயே சக்தியெல்லாம் போய்விட்டது.

"பாட்டி, என்ன நடந்தது சொல்லுங்கள்?"

"பாட்டி, ஊரே பேய் புகுந்தது போலிருக்கிறதே!"

"பாட்டி, வாகீசம் எங்கே?"

"பாட்டி, மெல்ல முணுமுணுத்தான்". அவள் ஏதோ சொல்ல விரும்புகிறாள், சொல்ல முடியவில்லை. தன் செவியை அவளுடைய உதட்டுக்கருகில் வைத்துக் கொண்டார்.

"கொள்ளை... நெருப்பு... வாகீசத்தைத் தூக்கிப் போய்விட்டார்கள்!" - இவ்வளவுதான் அவள் கூறியது. மீண்டும் சிரமப்பட்டு அவள் கூறியது. "கிராம மக்கள் ஓடி விட்டார்கள்".

சுந்தரமூர்த்தி சோர்ந்துபோய், தள்ளாடியவாறு நடந்தார். வாகீசத்தை யார் தூக்கிக்கொண்டு போயிருப்பார்கள்? அவரது வீட்டுக் களஞ்சியத்தைக் கொள்ளையடித்துத் தானியம் முழுமையும் கொண்டு போய் விட்டார்களே...

சுந்தரமூர்த்தி வீட்டை அடையும்போது வீட்டு வாசலில் மரகதம் காத்திருந்தாள்.

சுந்தரமூர்த்தி வீட்டிற்குள் நுழைந்து மயங்கி விழுந்தார். பதறிப்போன மரகதம் அவரது மயக்கம் தெளிய வழி செய்து நடந்தவற்றைக் கேட்டறிந்து நடுங்கினாள்.

"யாரப்பா அவர் வீட்டைக் கொள்ளையடித்திருப்பார்கள்?" மரகதம் கவலையுடன் கேட்டாள்.

"அப்பா, எனக்குப் பயமாயிருக்கிறது. அந்த பாசுபதர் வந்து போனது முதல் எனக்குப் பயம்தான்..." என்று தந்தையின் கரத்தைப் பிடித்துக் கொண்டாள்.

சுந்தரமூர்த்தி கண் கலங்க, "வாகீசத்தை என்ன செய்தார்களோ?" என்று கூவினார்.

"அப்பா சமைக்க அரிசி..?" என்று மரகதம் கேட்டாள்.

"அரிசி... நெல்... இதைக் கொடுத்த வாகீசத்தையே காணவில்லை. இனி எது இருந்தால் என்ன இல்லாவிட்டால் என்ன..." என்று சிறு குழந்தை போல் விம்மினார் சுந்தரமூர்த்தி.



வெளியே யாரோ வரும் காலடி ஓசை கேட்டது. மரகதம் பயத்துடன் தந்தையை அணைத்துக் கொண்டாள்.

புத்தபிட்சு ஒருவர் நின்று கொண்டிருந்தார்.

மரகதம் வீறிட்டுக் கத்தி விட்டாள். சுந்தரமூர்த்தி மெல்ல பிட்சுவை நோக்கினார்.

"பயப்படாதே, சுந்தரமூர்த்தி... உங்களை ஒன்றும் செய்துவிடமாட்டேன். நானும் காபாலிகனில்லை. அதிலும் உம்மைப்போன்ற கலைஞர்களைக் காப்பாற்ற வந்துள்ளேன்" என்று கூறி அவர்கள் அருகே நெருங்கி வந்தார்.

"அருகே வராதே... அப்படியே நில்..." என்று கூவினாள் மரகதம்.

## அத்தியாயம் - 21

# நான்காவது நாள்

களைப்பு மிகுதியாலும் சோகத்தாலும் தன் நிலையை மறந்திருந்த சுந்தரமூர்த்தியின் அருகே புத்த பிட்சு வந்தார்.

"சுந்தரமூர்த்தி" என்று அழைத்து மெல்ல அவரது முதுகை வாஞ்சையுடன் தடவினார். சுந்தரமூர்த்தி சுயநிலை அடைந்தவராகத் திரும்பிப் பார்த்தார். மரகதம் கவலையுடன் அவரருகே நின்று கொண்டிருந்தாள்.

"யார் யார்?" என்று குழப்பத்துடன் கேட்டார் சிற்பி.

"என்னைத் தெரியவில்லையா? நான்தான் தர்மசேனர்" என்று அன்பும் ஆசையும் ததும்பும் குரலில் கூறினார் பிட்சு.

சுந்தரமூர்த்தி தர்மசேனரை அடையாளங் கண்டு கொள்ளவில்லை. அவருக்கு அப்போதிருந்த குழப்ப நிலையில் எதையும் சரிவரப் புரிந்து கொள்ள முடியவில்லை.

சுந்தரமூர்த்தியும் தர்மசேனரும் ஒரு காலத்தில் நெருங்கிய நண்பர்களாக இருந்தனர். அது ஒரு காலம்!

மாமல்லபுரத்துக்கு அருகேயுள்ள பூஞ்சேரியில் சுந்தரமூர்த்தி வசித்து வந்தார். அங்கிருந்துதான் நாள்தோறும் மாமல்லபுரத்துக்குச் சென்று சிற்பப் பணிகளைச் செய்து வருவார். தர்மசேனர் சாத்திரம் பல கற்றவர். வடக்கே நாலாந்தாவில் பயின்றவர். காஞ்சிபுரம் வந்ததே நுண்ணிய சாத்திரங்கள் பல கற்கவே. கடிகாசலம் என்றழைக்கப்படும் சிங்கபுரத்தில் உள்ள கல்விக் கூடத்தில் தங்கி வியாகர்ணம், தர்க்கம், வானசாத்திரம் கற்கத் தொடங்கினார். அதிகம் பேசமாட்டார். பேசத் தொடங்கினால் அவரை வெல்ல ஒருவராலும் முடியாது. சாந்தம் தவழும் அவரது முகமும் நெடிய தோற்றமும் எதையும் ஊடுருவிப் பார்க்கும் கண்களும், சிரித்தால் பளிச்சிடும் வெண்பற்களும் காண்பவரைக் கவர்ந்துவிடும். பாலி, பிராகிருதம் கற்றறிந்தது போல் தமிழிலும் புலமை மிக்கவர்.

மாமல்லபுரத்தில் பெரும் பாறையில் மதில்போல் உயர்ந்த பாறையில் மாமல்லர் அற்புதமான வரலாறொன்றை சிற்ப வடிவில் வடித்துக் கொண்டிருந்தபோது சுந்தரமூர்த்திக்குப் பலவிதத்தில் தர்மசேனர் யோசனை கூறியுள்ளார்.

"சுந்தரமூர்த்தி, உங்கள் அரசர் மாமல்லர் மிக அறிவாளி. அவர் கொடுத்துள்ள சிற்பக் குறிப்பைப் பார்த்தீர்களா?" என்று தர்மசேனர் கேட்டார்.

"ஆகா, பலமுறை படித்தேன். மாமல்லருடன் நேரிடையே விவாதித்தேன். மகாபாரதத்தைக் கதைத் தலைவன் அர்ச்சுனனுடைய தவத்தைச் சிற்பமாக வடிக்கு



மாறு மாமல்லர் கூறினார். எந்தெந்த சிற்பங்கள் எங்கெங்கே அமைய வேண்டும் என்று அவரே கூறியது எங்களுக்கு வியப்பை அளித்தது. சிறந்த போர் வீரராகவும் ஆட்சி நடத்துபவராகவும் விளங்கும் அவர் சிற்பக் கலையில் திறமை பெற்றிருப்பது எனக்குப் பெருமையாக இருந்தது. அவர் சிற்பக்கலையில் வல்லவர்; நான் ஆட்சித் துறையில் வல்லவனாக முடியுமா?" என்று சுந்தரமூர்த்தி பெருமையுடன் பேசினார்.

"மாமல்லர் சிறந்த அரசர்தான். ஆனால் அவருக்குப் புத்த பிட்சுக்கள் மீது கோபம் வந்ததைத்தான் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. சைவ-வைணவப் பெரியவர்களை ஆதரிக்கட்டும்; ஆனால் எங்களை வெறுப்பானேன்?" என்றார் தர்மசேனர்.

"சுவாமி, அதைப்பற்றி எனக்குத் தெரியாது. நான் தான் சொன்னேனே எனக்கும் ராஜிய விவகாரங்களுக்கும் காத தூரம் என்று... என் நினைவு எல்லாம் அந்த மாபெரும் சிற்பத் தொகுதியை எவ்வாறு உருவாக்குவது என்பதுதான்" என்றார் சுந்தரமூர்த்தி.

"நான் உதவுகிறேன்" என்றார் தர்மசேனர்; சொன்னபடி செய்தார்.

அந்தச் சிற்பத் தொகுதி புடைச் சிற்ப வகையைச் சேர்ந்தது. பெரும் பாறையைச் சமமாகச் செதுக்கி, அதிலே பலவித உருவங்களைப் புடைத்தெழுந்த வகையில் அமைக்க வேண்டும். பல சிற்பிகளின் உழைப்பு தேவைப்படும். சிற்பிகள் பாறையைச் சமன் செய்து முடித்துவிட்டனர். மாமல்ல சக்கரவர்த்தி அளித்த கதைக் குறிப்பைக் கொண்டு சிற்பங்களை அமைக்க வேண்டும்.

மாமல்லருக்குப் பாரதக் கதை மீது மிகவும் பிரியம் அதிகம். அர்ச்சுனன் தவம் கதையைச் சிற்பமாக வடிக்கலாம் என்று கூறினார். சுந்தரமூர்த்தி இந்தக் கருத்தை

தர்மசேனரிடம் தெரிவித்தார். அவர் தெரிவித்த கருத்து சுந்தரமூர்த்தியை ஒருகணம் திடுக்கிடச் செய்தாலும் சரியானது அதுதான் எனத் தோன்றியது.

அவர் சொன்ன கதை: சகரர் என்ற சக்கரவர்த்தி பாரத நாட்டை ஆண்டபோது இந்திரனை நோக்கித் தவஞ் செய்தார். இந்திரன் அவருடைய தவத்திற்கு மகிழ்ந்து நவநிதிகள் எனப்படும் ஒன்பது நிதிகளை அன்பளிப்பாக அளித்தார். சகர சக்கரவர்த்திகளுக்கு அறுபதினாயிரம் பிள்ளைகள் பிறந்தனர். சகரர்கள் என்று அவர்களுக்குப் பெயர். சகரர்கள் பெரியவர்களாக ஆனவுடன் உலகைச் சுற்றி வந்தனர். இமயமலையின் உச்சிக்குச் சென்றனர். அங்கே அவர்களுடைய முன்னோர் ஒரு கோயிலைக் கட்டியிருந்தனர். அக்கோயிலைச் சுற்றி அகழி வெட்ட வேண்டுமென்று விரும்பினார். ஆகவே தம்முடன் கொண்டு வந்திருந்த தண்டரத்தினத்தால் ஆழமான அகழிகளைத் தோண்டினர்; அந்த அகழி நாகலோகம் வரை ஆழ்ந்து இருந்தது. கங்கையைக் கொண்டுவந்து அகழியில் பாய்ச்சினார்கள். கங்கையின் நீர் ஆழமான அகழியில் பாயவே பாதாளலோகம்வரை பாய்ந்து பாதாளத்தில் இருந்த நாகர்களைத் துன்புறுத்தியது. நாகராசன் சினங்கொண்டு சகர குமாரர்களைச் சாம்பலாக்குமாறு செய்தான். தமது பிள்ளைகள் இறந்துபோனதை அறிந்த சகர சக்கரவர்த்தி தன் பேரனான பகீரதனை அழைத்து கங்கை வெள்ளத்தைக் கடலில் கலக்குமாறு செய்யக் கட்டளையிட்டான்.

சுந்தரமூர்த்தி இந்தக் கதையைக் கவனமாகக் கேட்டார். சிற்பமாகச் செதுக்க ஏற்ற கதை என்பதைப் புரிந்து கொண்டார்.

மாமல்ல சக்கரவர்த்தியிடம் இதைக் குறித்து விவாதித்தார். மாமல்ல சக்கரவர்த்தி கூறினார்: 'சிற்பியாரே! சைவப் பெரியார் நாவுக்கரச சுவாமிகள்கூட பகீரதன் கங்கையைப் பூமிக்குக் கொண்டு வந்த கதையைக் கூறினார். அவர் கூறியது கிட்டத்தட்ட இதைப் போலவே உள்ளது.



"வெள்ளம்
ஒரு சடைமேல்
ஏற்றார் தாமே
மேலார்கள் மேலார்கள் மேலார்தாமே..."

என்று நாவுக்கரசர் பாடிய பாடலைப் பாடிக் காட்டினார். சிற்பத் தொகுதி உருவாக ஆரம்பித்தது. தர்மசேனரைச் சந்திக்க விரும்பினார் மாமல்லர். ஆனால், 'தர்மசேனர் வரவில்லை. சிற்பம் பூர்த்தியான பிறகு சுந்தரமூர்த்தியைப் பாராட்டிவிட்டு வடக்கே சென்றவர்தாம்.

அந்த நினைவு சுந்தரமூர்த்திக்கு இப்போது வந்தது. தர்மசேனரது பாதங்களில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்தார். தர்மசேனர் பரபரப்புடன் அவரைத் தூக்கி நிறுத்தி, "சுந்தரமூர்த்தி, என்ன காரியம் செய்தாய்! என் பாதங்களில் விழலாமா?" என்றார்.

விம்மும் குரலில், "நீங்கள் தவமுனிவர்கள், கற்றறிந்தவர்கள். உங்களுடைய தொடர்பு இருந்தபோது நான் மகிழ்ச்சியுடன் இருந்தேன். தங்களைக் காணாதபோது என்னுடைய கலையே மறைந்துவிட்டது போன்ற நிலை. சுவாமி சகரசாகரர்கள் கதையை உருவாக்கிய பிறகு சிற்பமே செய்யவில்லை. பல்லவ நாட்டில் இப்போது பஞ்சம் தாண்டவமாடுகிறது. எனது நண்பருடைய கிராமமே பாழாகிக் கிடக்கிறது. அவரைக் காணவில்லை. என்ன செய்வேன் சுவாமி நான்..." என்றார் சுந்தரமூர்த்தி.

"கவலைப்படாதீர்கள் சிற்பியாரே! நீங்கள் மகாமேதை. உங்கள் கை வண்ணத்தைப் பாராட்டக் கூடியவர்கள் பல்லவ நாட்டில் இல்லை..." என்று தேற்றினார்.

சுந்தரமூர்த்தி தலை நிமிர்ந்தார். "என்ன சொன்னீர்கள்? என் கை வண்ணத்தைப் பாராட்டக் கூடியவர்கள் பல்லவ நாட்டில் இல்லையா? ஏன் இல்லை. மாமல்லவருக்குப் பிறகு அவர் பெயரையே கொண்ட நரசிம்மர் பிறந்துவிட்டார். இளவரசராகத் திகழும் நரசிம்மருக்குக் கலைதான் உயிர்.

அஜந்தாவுக்குப் போய் வந்திருக்கிறார். அந்தப் பிறவாத அதிசயப் பெண்ணைப் பார்ப்பதற்காக அவர் காடு மலையெல்லாம் கடந்து சென்று வந்தார். அந்த அதிசயங்களைப் பல்லவ நாட்டிலும் கொண்டு வர வேண்டுமாம்... இன்று காலையில் என் குடிலைத் தேடி வந்துவிட்டார்..." என்று பெருமிதத்துடன் கூறினார்.

பிட்சு ஒரு கணம் திடுக்கிட்டார். "பல்லவ இளவரசர் அஜந்தாவுக்குச் சென்று வந்தாரா? ஒருவரும் அறியாத ரகசியத்தை இந்தச் சிற்பி வெளிப்படுத்திவிட்டாரே... சாளுக்கிய நாட்டு ஒற்றர்கள் உறங்குகிறார்களா" என்று எண்ணினார். அதைப் புலப்படுத்திக் கொள்ளாமல், "சிற்பியாரே! கலை வளர்வதற்கு ஏற்ற இடம் சாளுக்கிய நாடுதான். சிற்பமும் சித்திரமும் கொஞ்சுகிறது அங்கே... உங்களைப் போன்றவர்களுக்கு அங்கே சிறந்த வரவேற்பு இருக்கும்..." என்றார்.

சிறிது நேரம் மௌனம் நிலவியது அங்கே. பிறகு பிட்சுவே பேச்சைத் தொடங்கினார். "சுந்தரமூர்த்தி, உமக்குத் தெரியும் நான் அரசியலுக்கு அப்பாற்பட்டவன் என்பது. ஆனால் அஜந்தாவிலுள்ள வண்ணச் சித்திரங்களைப் பார்த்த பிறகு எனக்கு உமது நினைவுதான் வந்தது. சுந்தரமூர்த்தி, புத்தபிரானின் வண்ண ஓவியம் ஒன்றை அங்கே பார்த்தேன். கருணை ததும்பும் விழிகள். அந்த நெடிய தோற்றம் ஒன்று போதுமே. அவரது ஆடையின் வண்ணத்தைப் புகழ்வதா? புன்சிரிப்பு நிறைந்த இதழின் செம்மையைப் புகழ்வதா? அவர் அருகே நிற்கும் அவரது பூர்வஜென்ம துணைவியையும் சித்தரமாகத் தீட்டியுள்ள விதத்தைப் புகழ்வதா... சுந்தரமூர்த்தி தங்களை அந்தக் குகை மண்டபத்தில் நினைத்துக் கொண்டேன்..."

சிறிது நேரம் மௌனம் நிலவியது. பிறகு, சுந்தரமூர்த்தி, அஜந்தாவில் இதுவரை குடையப்பட்டுள்ள குகைகளில் தீட்டப்பட்டுள்ள வண்ண ஓவியங்களைப் பார்த்தபோது நீங்கள் கட்டாயம் அந்தச் சித்திரத்தைக் காண வேண்டும்



என்ற ஆர்வம் தோன்றியது. தேவேந்திரனுடைய தோற்றமும், பறக்கும் கந்தர்வர்களுடைய ஓவியமும், யானைகளும், குழந்தைகளும் - ஆகா... சுந்தரமூர்த்தி நீங்கள் எப்போது காணப் போகிறீர்கள்..." என்று கூறி நிறுத்தினார்.

சுந்தரமூர்த்தியின் அகமும், முகமும் மலர்ந்தது. "சுவாமி, நான் பிறவியெடுத்து என்ன பயன்? இளம் வயதிலிருந்து உடல் பலம் இப்போது இல்லை. உற்சாகம் உள்ளத்திலிருக்கிறது; என்ன பயன்? அது கிடக்கட்டும்... சுவாமி அஜந்தாவில் சித்திரம் மட்டுந்தான் உண்டா? சிற்பங்கள் இல்லையா?" என்று கேட்டார்.

பிட்சு துள்ளியெழுந்தவர் போல், "ஏன் இல்லை... குகைகளைக் குடைந்த விதங்கள் ஒன்றே போதும். பெரிய குகையின் முகஅமைப்பின் சிறப்பை என்னவென்று சொல்வேன்? போதிசத்துவரின் சிற்ப அழகை வர்ணிப்பதா? அவரது கம்பீர தோற்றத்தை வர்ணிப்பதா? சுந்தரமூர்த்தி ஓர் அமர சிற்பத்தைக் கண்டேன். புத்தபிரானின் கடைசி நாட்களைத் தெரிவிக்கும் அந்தச் சிற்பியின் உயர்வை எப்படி வர்ணிப்பேன்... மகான் புத்தர் நீண்டு படுத்திருக்கிறார். அவருடைய மறைவு குறித்து அனைவரும் கண்ணீர் விடுகிறார்கள். அவரது ஜீவன் முக்தியடைய மேலுலகத்துக்குப் புறப்படுகிறது... ஆகா... அதை எப்படி வர்ணிப்பேன்" என்றார்.

சுந்தரமூர்த்தி பரபரப்புடன், "சுவாமி, என் வாழ் நாளில் நான் அந்தச் சிற்பங்களைக் காண்பேனா?" என்று கேட்டார்.

"நிச்சயம் நீங்கள் பார்க்கத்தான் போகிறீர்கள்" என்றார் பிக்கு. "என் மகளுக்குத் திருமணத்தைச் செய்து வைத்துவிட்டால் உடனே புறப்பட்டு விடுவேன்..." என்றார் சுந்தரமூர்த்தி.

"தங்கள் மகளுக்கா... சிறு பெண்... என்ன அவசரம்? தங்கள் மகளையும் துணைக்கு அழைத்துச் செல்லுங்கள். தங்களுக்குத் துணையாக அங்கே ஓவியர் ஒருவர் தன் மனைவி, மகளுடன் இருப்பார்" என்றார் பிட்சு.

தர்மசேனர் எழுந்து நின்றார். சுந்தரமூர்த்தி மறுமொழியைக் கேட்காமலேயே, "சுந்தரமூர்த்தி, நீங்கள் களைப்புடன் இருக்கிறீர்கள். இந்தத் தனிக்காட்டில் உணவு வசதி இல்லாமல் எப்படி வாழ்கிறீர்களோ..." என்றார்.

"எனது நண்பர் வீட்டிற்கு அரிசி வாங்கிவரச் சென்றேன். அந்தக் கிராமமே பாழ்பட்டுக் கிடக்கிறது. என் நண்பரைக் காபாலிகர்கள் கூட்டம் தூக்கிச் சென்று விட்டதாம். என்ன அக்கிரமம். கேட்பதற்கு ஆளில்லை..." என்று பெருமூச்சு விட்டார் சுந்தரமூர்த்தி.

"அதைத் தான் நானும் சொல்ல வந்தேன். கேட்க ஆளில்லை. பல்லவ நாட்டில் ஆட்சி முறை சீர்குலைந்துவிட்டது. கலையை யார் வளர்க்கப் போகிறார்கள். அதனால்தான் சொல்கிறேன்..." என்று கூறி நிறுத்தினார்.

"தாங்கள் என்ன சொல்கிறீர்கள்?" என்று சுந்தரமூர்த்தி கேட்டார்.

பிட்சு எழுந்து வெளியே சென்றார். திரும்பி வரும்போது சிறு மூட்டையைச் சுமக்க முடியாமல் சுமந்து வந்தார். "சிற்பியாரே! இதோ அரிசி, பருப்பு நவதானியங்கள். நான்கு நாள்களுக்குப் போதுமானதாக இருக்கும். பசியைப் போக்கிக் கொள்ளுங்கள். பிறகு வருகிறேன்" என்று புறப்பட்டார்.

சுந்தரமூர்த்தி அவருடன் பின் தொடர்ந்து, "சுவாமி பல ஆண்டுகளுக்குப் பிறகு தங்களைச் சந்திக்கிறேன். என் வீட்டில் பிட்சை ஏற்றுச் செல்ல வேண்டும். என் மகள் கணத்தில் சமைத்துவிடுவாள். அதுவரை தங்களுடன் பேச நிறைய விஷயங்கள் இருக்கின்றன" என்றார்.

பிட்சு புன்முறுவலுடன் "எனக்கும்தான் பேச நிறைய விஷயங்கள் உள்ளன. நான்கு நாட்கள் கழித்துப் பேசுவோம். அதற்குள் தங்கள் மனத்தைத் திடப்படுத்தி வையுங்கள்" என்றார்.



"என் மனத்தின் திடச் சக்தியைச் சொல்ல வேண்டுமா? எதற்குத் திடப்படுத்திக் கொள்ள வேண்டும் சொல்லுங்கள்?" என்றார் சிற்பி.

"சுந்தரமூர்த்தி, நான்கு நாள் கழிந்தவுடன் நான் அஜந்தா பயணம் செல்கிறேன்; என்னுடன் வருகிறீர்களா?" என்று கேட்டார் பிட்சு.

சுந்தரமூர்த்தி குதூகலத்துடன், "கரும்பு தின்னக் கூலியா? இப்போதே வருகிறேன்" என்றார்.

"இல்லை, இல்லை. நன்றாக யோசனை செய்யுங்கள். அஜந்தா பயணம் சாதாரணமானதன்று. உடனே திரும்பிவிட முடியாது நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்" என்றார் பிட்சு.

"ஒரு மாதமாகுமா?" என்று கேட்டார் சிற்பி.

"அதற்கும் மேலாகலாம்".

"ஒரு வருடம்?"

"அதற்கும் மேலாகலாம்".

"ஆகட்டும்! சுவர்க்கத்திற்குச் சென்றவர்கள் திரும்பும் நாளை எதிர்பார்ப்பார்களா?"

"ஓ! அப்படியென்றால் என் திட்டத்தை நீங்கள் ஏற்கிறீர்களா?"

"உங்கள் திட்டம் என்ன?"

"தங்களுக்கு நிரந்தரமான பணியொன்றைச் சாளுக்கிய நாட்டில் அளிப்பது?"

பிட்சு கூறிய இந்த வார்த்தையைக் கேட்டு சுந்தரமூர்த்தி திடுக்கிட்டார். திகைத்தார்.

"என்ன சிற்பியாரே! அமைதியாகி விட்டீர்கள்? என்ன முடிவு?" என்று பிட்சு கேட்டார்.

சிற்பியின் முகத்தில் ஏற்பட்ட மாறுதலக்குப் பொருள் அறிய முடியவில்லை. சிறிது நேரம் யோசித்த சிற்பி, "தங்களுடன் வருகிறேன் சுவாமி. அஜந்தாவைப் பார்த்துவிட்டு உயிரை விட்டுவிடுகிறேன்" என்று உணர்ச்சி வசப்பட்டுக் கூறினார்.

அந்தச் சமயம் மரகதம், வீட்டிற்குள்ளிருந்து பரபரப்புடன் ஓடி வந்தாள். பிட்சுவைப் பார்த்து கோபத்துடன் "சுவாமி! என் தந்தையின் மனத்தைக் கலைத்துவிடாதீர்கள். அவர் எங்கும் வரமாட்டார். கருணை கூர்ந்து இங்கிருந்து போய்விடுங்கள்" என்றாள்.

தன் மகளைச் கட்டெரிப்பவர் போல் பார்த்த சுந்தரமூர்த்தி, "சுவாமி என் மகள் அறியாமல் சிறு குழந்தை போலப் பேசுகிறாள். நான்கு நாட்களில் நான் ஆயத்தமாகி விடுவேன். என்னை அழைத்துப் போக மறந்துவிடாதீர்கள்" என்றார்.

பிட்சு புன்முறுவலுடன் "சிற்பியாரே! நான்காம் நாள் மாலை இங்கு வருவேன். என்னுடன் வருவதனால் வாருங்கள். இல்லாவிடில் எனக்கு ஏதும் கவலையில்லை. நஷ்டம் சாளுக்கிய நாட்டிற்கன்று, தங்களுக்குத்தான்" என்றார்.

"நான்கு நாட்கள் கழித்து நீங்கள் வரவேண்டாம்" என்று கூவினாள் மரகதம். மேலும் ஏதோ சொல்ல வாயெடுத்த அவளது வாயை சுந்தரமூர்த்தி அழுத்திப் பொத்தினார்.

பிட்சு தர்மசேனர் கையை வீசியவாறு சென்று கொண்டிருந்தார்.

மூன்று நாட்கள் சென்றன. நான்காவது நாள் காலை விடிந்தது.

32952
5008114

# கடல் மல்லைக் காதலி

## இரண்டாம் பாகம்

தஞ்சைப் பல்கலைக் கழக 'தமிழன்னை' விருதுபெற்ற

கலைமாமணி

**விக்கிரமன்**

ஜெயலட்சுமி பதிப்பகம்
4, முத்து கிருஷ்ணன் தெரு,
(பாண்டிபஜார் அருகில்)
தி. நகர், சென்னை - 600 017.

## நூல் விளக்கம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | கடல் மல்லைக் காதலி<br>இரண்டாம் பாகம் |
| ஆசிரியர் | : | கலைமாமணி. விக்கிரமன் |
| பதிப்பாளர் | : | நா. பாலகிருஷ்ணன் |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | சரித்திர நாவல் |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| முதல் பதிப்பு | : | டிசம்பர் 2001 |
| நூலின் அளவு | : | 1 x 8 கிரவுன் |
| எழுத்து | : | 10 புள்ளி |
| பக்கம் | : | 200 |
| தாள் | : | 11.6 kg |
| விலை | : | ரூ.50.00 |
| நூல் வெளியீடு | : | ஜெயலட்சுமி பதிப்பகம்<br>4, முத்து கிருஷ்ணன் தெரு<br>தி. நகர், சென்னை - 600017 |
| ஒளியச்சு | : | போனிக்ஸ் கம்ப்யூட்டர்ஸ்<br>சென்னை - 87. ✆ : 4868128 |
| அச்சிட்டோர் | : | ஸ்ரீ சரவணா ஆப்செட் பிரிண்டர்ஸ்<br>சென்னை - 81 |



32953
5008179


## முன்னுரை

வரலாற்றுப் புதினத்தைத் தொடர்கதையாக எழுதி பல்லாயிரக் கணக்கான வாசகர்களைப் படிக்கத் தூண்டியவர் அமரர் கல்கி. சமூக நாவல்களால் சமூகத்திற்குப் பயன் ஏற்படுகிறதோ இல்லையோ, வரலாற்று நாவல்களால் ஏற்படும் என்பது உண்மை. அதுதான் நம் பண்டைய பெருமையை அறிய வழி செய்வது.

'பார்த்திபன் கனவு', 'சிவகாமியின் சபதம்' இரு உயர் உரை நடைக் காவியங்களை அமரர் கல்கி எழுதிய பிறகுதான் பல்லவர்களின் பெருமை நாட்டு மக்களுக்குத் தெரிய வந்தது. பல்லவர்களின் கலைத் திறமையைத் தமிழ் மக்கள் உணர்ந்தனர். 'மகாபலிபுரம்' என்று புராணக் கதைகளுடன் தொடர்புப் படுத்தி அழைக்கப்பட்ட, மாமல்லபுரத்தின் பெயர்க் காரணம், அங்குள்ள சிற்ப அற்புதங்களின் சிறப்பு, பெருமை அனைத்தும் பிறகே மக்கள் உணர்ந்தனர்.

நானும், என் உயர் நண்பர் ஓவியர் ஸீபாவும் 1945-46ல் மாமல்லபுரத்தைக் காண மிகப் பிரயாசையுடன் சென்றோம். 'மாமல்லபுரம் வழி குறிப்புப் புத்தகம்' என்ற பெயரில் மாமல்லபுரச் சிற்பங்களின், குடைவரைக் கோயில்களின் சிறப்பு, பாறையில் செதுக்கப்பட்ட புடைச் சிற்பங்களின் அற்புதம் இவற்றை அந்த நூலில் குறிப்பிட்டிருந்தேன். பல பதிப்புகள் விற்பனையானதுடன், மாமல்லபுரத்தை நிலைக் களனாகக் கொண்ட புதினம் ஒன்று எழுத வேண்டும் என்ற ஆவலும் என் உள்ளத்தில் எழுந்தது. பரிவாதினி, உதயசந்திரன், காஞ்சி சுந்தரி போன்ற வரலாற்றுப் புதினங்களையும் எழுதினேன். ஆனால் 'கடல் மல்லைக் காதலி' எழுதும்போது பல்லவ சக்கரவர்த்தி இராஜசிம்மனின் இளம் பிராய நிகழ்ச்சிகளுக்காக நான் பல ஆண்டுகள் குறிப்புகளைத் தேடினேன்.

மாமல்லபுரக் கடற்கரையிலுள்ள கடற்கரைக் கோயில் ஓர் அமர படைப்பு. இராஜசிம்மனின் கனவு அது. தம் பாட்டனார் மாமல்லன் என்ற புகழ்ப் பெயர் கொண்ட நரசிம்மவர்மரைப் போன்று கலை ஆர்வம் படைத்தவர் ராஜசிம்மன். நரசிம்மவர்மன்தான் கடற்கரைக் கோயிலை அமைத்தவன் என்று எண்ணியிருந்த காலம் உண்டு.

அவர் அரியணை ஏறும்போது நாட்டில் பஞ்சமும், சாளுக்கியர்களால் தொல்லையும் சமயவாதிகளால் குழப்பங்களும் ஏற்பட்டன. ஆனால், பல்லவ நாட்டை மகத்தான பெருமையுடன் ஆண்டவர் நரசிம்மன் என்ற பிள்ளைப் பிராயப் பெயர்கொண்ட இராஜசிம்மன்.

"கடல் மல்லைக் காதலி" - புதினம் மலேசியா நாட்டில் தமிழ் நேசன் நாளிதழின் வாரச் சிறப்புப் பகுதியில் தொடராக வெளிவந்தது.

இந்த வரலாற்று நாவலில் பல சம்பவங்கள், எதிர்பாராத பல திருப்பங்கள் கற்பனை செய்யப்பட்டிருந்தாலும், புதினத்தின் சிறப்புக்கு, போக்குக்கு அவை பெரிதும் துணை செய்துள்ளன என்று நம்புகிறேன்.

ஜெயலட்சுமி பதிப்பத்தார் இந்த நாவலை வெளியிட்டதற்காக அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் ஆதரவும் எனக்கு எப்போதும்போல் இருக்கும் என்று நம்புகிறேன்.

விக்கிரமன்

32953
5008179

அத்தியாயம் - 1

# எதிரே வந்தவள்

சில நாட்களாக தேவசோமை யாருடனும் பேசாமல் எதிலும் பிடித்தம் கொள்ளாமல் அலைந்து கொண்டிருந்தாள். அலைவது என்பது அவளுக்குக் கைவந்த கலை. காடு, மலை, மேடு, தோட்டம், நீர் நிலை, கடற்கரை என்று சுற்றாத இடமில்லை. காபாலிகை என்பதால் அவளை ஏன் என்று கேட்பவர்கள் யாரும் இல்லை.

சத்யசோமனும், தேவசோமையும் நினைத்த இடத்திற்குப் போவார்கள். கிடைத்ததை உண்பார்கள் என்றாலும் காபாலிகர் தலைவரிடத்தில் அவர்களுக்குப் பயபக்தி உண்டு. அவர் கூறியதை நிறைவேற்றத் துடிப்பார்கள். சத்தியசோமனைவிட தேவசோமை எந்தக் காரியத்தையும் உடனுக்குடன் முடித்து விடுவாள்.

அதனால் காபாலிகர்கள் கூட்டத்தில் சத்யசோமனுக்கும் தேவசோமைக்கும் மிகுந்த மதிப்பு இருந்தது. மேலும் தேவசோமை பிறவியிலேயே துடுக்கு

மிகுந்தவள். காபாலிக மதக் கட்டுப்பாட்டை முழுவதும் உணர்ந்தவள். என்றாவது ஒருநாள் காபாலிக வடிவிலுள்ள சிவபெருமானைக் கண்கூடாகக் கண்டுவிட முடியும் எனும் நம்பிக்கை மிகுந்தவள். சத்யசோமனுடைய அழகில் மயங்கித்தான் அவனைக் கணவனாக ஏற்றுக்கொண்டாள். ஆனால் அவளுடைய உணர்ச்சிகளுக்கு சத்யசோமனால் ஈடு கொடுக்க முடியவில்லை. நடனமாடுவதிலும் ஊர் சுற்றுவதிலும் சுடுகாட்டில் நடுநிசியில் தவம் செய்வதிலும் அவளுடைய வேகத்தை அவனால் பின்பற்ற முடியவில்லை. திடீர் என்று ஒருநாள் திருக்கழிக்குன்றம் போக வேண்டும் என்று அவள் அவனை அழைப்பாள்.

"இன்று வேண்டாமே சோமை, வருகிற திங்கட்கிழமை போகலாமே" என்பான். அவள் பிடிவாதமாக அன்றே புறப்பட வற்புறுத்துவான். கழுக்குன்ற மலைமீது ஏறி மறுசரிவில் இறங்கி பச்சிலை ஒன்றை மடி நிறையப் பறித்து வருவாள். அந்தப் பச்சிலை படுகாயங்களை ஆற்றிவிடும். ரணத்தை உடனே சரி செய்துவிடும்.

"உனக்கு எதற்குப் பச்சிலை?" என்று சத்தியசோமன் கேட்பான்.

"ஏகாம்பரேச்வரர் கோயிலிலுள்ள ஆதுார சாலைக்கு வேண்டுமென்று வைத்தியநாத வைத்தியர் கேட்டார்" என்பாள்.

"ஏகாம்பரேச்வரர் கோவிலுக்கு நீ போனாயா?" என்று கோபமாகக் கேட்பான் சோமன்.

"ஆமாம் போனால் என்ன?" என்று அலட்சியமாக மறுமொழி கூறுவாள் சோமை. பிறகு அவளைச் சீண்டும் வகையில்:

"அத்திகிரிக்கோ, உலகளந்த பெருமாள் கோயிலுக்கோ போனால் என்னைக் கண்டித்துக் கேட்பது நியாயம்" என்று சொல்வாள்.



"ஏகாம்பரேச்வரர் கோயிலில் நாவுக்கரசர் வந்த பிறகு பெரிய மாறுதல் ஏற்பட்டு வருகிறது. பாசுபதர்களையும் காபாலிகர்களையும் கோயிலிலுள்ளவர்கள் இப்பொழுது கொஞ்சம் கொஞ்சமாக வெறுக்கிறார்கள். குளித்துவிட்டு வரவேண்டுமாம். சுடுகாட்டிற்கு நினைத்தபோது போகக் கூடாதாம். இவர்கள் கட்டளை விசித்திரமாக இருக்கிறது. நம்மை வரக்கூடாது என்று சொல்வதற்கு இவர்களுக்கென்ன உரிமை தேவசோமை?" என்று கூறுவான்.

தனது விழிகளை அகல விரித்து அப்போதுதான் அதைப் புரிந்து கொள்பவன் போல், "ஓ! அப்படியா சொல்கிறார்கள்? எனக்குத் தெரியாமல் போய்விட்டதே. ஏகாம்பரர் கோயிலில் இருப்பவரும் சிவபெருமான்தானே. பிணங்களிடுகாடதனுள் நடமாடும் பிஞ்சகன் என்று வைணவர்கள் கூறுவதுபோல் மாமரத்தடியில் வாழ்பவரென்றாலும் அவனும் தலைமாலையை அணிபவன்தானே... அப்படியா சொல்லிவிட்டார்கள். இப்போதே போய்க் கேட்போம். இந்த மூலிகைகளை அவர்களுக்குக் கொடுக்க மாட்டேன். தர்மசேனர் என்ற பிக்கு கேட்டிருக்கிறார். வா, வா, இப்போதே காஞ்சி போவோம்" என்பாள்.

ஏண்டா சொன்னோம் என்று தோன்றிவிடும் சத்யசோமனுக்கு. "ஓ! தர்மசேனருடன் உனக்குப் பழக்கமுண்டா? ஏகாம்பரேச்வரர் கோயில் ஆதுார சாலைக்காவது தரலாம். இந்த புத்தபிட்சுக்குத் தரக்கூடாது- பச்சிலையை அவர் சாளுக்கிய நாட்டிற்கு அனுப்பி விடுவார்" என்பான்.

"அனுப்பினால் என்ன? அவர் காஞ்சியில் ஆதுாரசாலை ஏற்படுத்தியிருக்கிறார். அரசாங்க உதவி இப்போது இல்லை. ஏழை எளியவர்களுக்கு இலவசமாக மருந்து தருகிறார். அவருக்கு உதவியாக இருக்கட்டும் இந்த மூலிகை" என்று கூறும் சோமை உடனே காஞ்சிக்குப் புறப்படும்படி அவனை வற்புறுத்துவாள்.

தேவசோமையும், சத்யசோமனும் இவ்வாறு பலமுறை கருத்து வேற்றுமை கொண்டியங்கினாலும் காபாலிக சமய சம்பிரதாயங்களை என்றென்றும் விட்டுக் கொடுக்க மாட்டார்கள். மது அருந்திய மயக்க நிலையில்கூட ஈசன் திரு நாமத்தை மறக்க மாட்டார்கள். குருவின் கட்டளை வந்துவிட்டால் அதை நிறைவேற்றுவதில் இருவரும் உயிரைத் தியாகம் செய்யவும் தயங்கமாட்டார்கள்.

வானம் பொய்த்து மழை பெய்யாது போய்ப் பஞ்ச நிலை ஏற்பட்ட அந்த சமயத்தில் குருவின் கட்டளை வந்தது? நரபலி இட அழகிய இளைஞன் ஒருவன் வேண்டும் என்று.

காபாலிகர்கள் சுற்ற ஆரம்பித்தார்கள். தேவசோமையும் சத்யசோமனும் அழகிய இளைஞனைத் தேடி அலையத் தொடங்கினர். அப்போதுதான் குமாரதேவன் கிடைத்தான்.

குமாரதேவனின் இளமை தேவசோமையைப் பெரிதும் கவர்ந்தது. அவள் உள்ளத்தில் புரிய முடியாத உணர்ச்சி ஏற்பட்டது குமாரதேவனை ஒருமுறை ஆரத் தழுவ வேண்டும் என்ற துடிப்பு அவளுக்கு ஏற்பட்டது. அவனைப் பலி கொடுக்கப் போகிறார்கள் என்பது அவளுக்கே பிடிக்காத ஒன்றாகப் போய்விட்டது. அவனது உடலில் ஏற்பட்ட காயம் மட்டும் இல்லாதிருந்தால் அவனைப் பலி கொடுத்திருப் பார்கள். குருவின் கட்டளையை நிறைவேற்றுவதா அல்லது தனது மனத்தின் உள் அந்தரங்கம் கூறுவதுபோல் குமாரதேவனை தப்புமாறு செய்து எங்காவது அழைத்துக் கொண்டு ஓடிவிடுவதா?

பலி கொடுக்கும் முதல்நாள் தேவசோமை எங்கோ சென்றுவிட்டாள். எப்படியாவது குமாரதேவனைப் போன்ற ஓர் அழகனைத் தேடிப்பிடித்து குருதேவர் எதிரே நிறுத்திவிட்டு குமாரதேவனையும் அழைத்துக்கொண்டு வேறு எங்காவது ஓடிவிடுவது என்பது அவளுடைய திட்டம்.

இளைஞனைத் தேடி அலைந்தாள். இரவு வந்துவிட்டது. இந்நேரம் குமாரதேவனைப் பலியிட்டிருப்



பார்கள் என்று நினைக்கும்போது அவளுக்கு அழுகை தாங்கவில்லை. தன் தலையில் அடித்துக் கொண்டாள். கழுத்து மாலையைப் பியித்துக் கொண்டாள். மண்ணில் படுத்துக் கொண்டு புரண்டாள். எழுந்து பித்துப் பிடித்தவள்போல் ஓடினாள்.

கரிய இருளில் வழி சரியாய்த் தெரியவில்லை. எங்கோ ஓடினாள். பாறை தடுக்கி விழுந்தாள். புதரில் உள்ள கூர்மையான முட்கள் அவள் உடலின் பல பாகங்களைக் கிறி ரத்தம் கசியுமாறு செய்தன. எங்கெங்கோ நடந்தாள். சிறு பாறையின் மீது ஏறினாள் இறங்கினாள். அவளுக்குத் தாகத்தால் நா வறண்டது, உடல் தளர்ந்தது. கால்கள் தள்ளாடின. களைப்பு மிகுந்தது. துவண்டு அங்கேயே படுத்துவிட்டாள்.

எவ்வளவு நேரம் உறங்கியிருப்பாளோ விழித்தெழுந்த போது கிழக்கே கதிரவனின் பொன் ரேகைகள் தோன்ற ஆரம்பித்துவிட்டன. இலேசான குளிர் இருந்தது. கீழே சாய்ந்து கிடந்த புல்லின் மீது அவள் உடல் தழுவியபோது இதுவரை தோன்றாத சோக உணர்ச்சி ஏற்பட்டது. சுற்று முற்றும் பார்த்தாள், அவள் உடல் சிலிர்த்தது. இரண்டு காரணங்கள்: இன்னும் சிறிது அவள் நகர்ந்திருந்தாலும் கீழே பெரும் பள்ளத்தில் வீழ்ந்திருப்பாள். பெரிய பாறை அது.

பாறையின் கீழே பெரும் பள்ளத்திற்கு அப்பால் அவள் கண்ட காட்சி -

மரத்தடியில் இளைஞனொருவனும் ஓர் இளம் மங்கையும் அமர்ந்திருந்தார்கள்.

தேவசோமை கண்ணைக் கசக்கிக்கொண்டு பார்த்தாள். துள்ளி எழுந்து உட்கார்ந்தாள்.

ஓ! என்று கூவ வேண்டும் என்று தோன்றியது அவளுக்கு. பலி கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அதே இளைஞன் இவன் இங்கே எப்படி வந்தான். அதிகாலை

வேளையில் இந்த வனாந்திரத்தில் உட்கார்ந்திருக்கிறானே! அவனருகே அவள். அதே நாட்டிய மங்கை சந்திரமாலா.

தேவசோமையின் உடலில் ஒருவித உணர்ச்சி ஏற்பட்டது. அப்படியே குதித்து அந்த இடத்திற்கு ஓடிவிடலாமா என்ற பரபரப்பு ஏற்பட்டது. தான் காண்பது கனவா நனவா என்று மீண்டும் ஒருமுறை நோக்கினாள்.

காலை இளம் பொழுதின் பொற்கிரணங்கள் பொய் சொல்லாது. அவை குமாரதேவனையும், சந்திரமாலையையும் தென்னத் தெளியப் புலப்படுத்தின.

குமாரதேவன் பலியிடுபவர்களின் - காபாலிகர்களின் - பிடியினின்று தப்பியவன். ஓடி வந்தபோது தடுக்கி விழுந்தானன்றோ? சந்திரமாலா மயங்கிக் கிடப்பதை உணர்ந்தான். இருள் பிரியவில்லை. அவளை மெல்ல உலுக்கினான். மூச்சு வந்து கொண்டிருந்தது. பாதமும், நெற்றியும் சில்லென்றிருந்தன.

பாதத்தைப் பலம் கொண்ட மட்டும் தேய்த்தான். நெற்றியைத் தன் கரங்களால் தேய்த்தான். அவள் கண் விழித்தாள். அவள் முகத்தையே குமாரதேவன் உற்று நோக்கிக் கொண்டிருந்தான்.

அவள் எழுந்திருக்க முயன்றாள். குமாரதேவன் சைகை காட்டினான். "களைப்பாக இருந்தால் சிறிது நேரம் இப்படியே படுத்திருக்கலாம். ஆனால் நான் உன்னருகே இருக்க முடியாது" என்றான்.

சந்திரமாலா எழுந்துவிட்டாள். 'நீங்களா' என்று கூறியவளுடைய முகத்தில் நாணம் படர்ந்தது. அந்த இளங்காலைப் போதில் தெளிவாகத் தெரிந்தது.

"ஆம்; நானேதான். இவ்வளவு சீக்கிரத்தில் உன்னை இரண்டாவது தடவையாகச் சந்திக்க முடியும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அதிகம் பேசிக் கொண்டிருக்க எனக்கு



நேரம் இல்லை. அவர்கள் தொடர்ந்து வந்துவிடுவார்கள்" என்று பரபரப்புடன் கூறினான் குமாரதேவன்.

அவள் பாதங்களும், நெற்றியும் மீண்டும் அவன் ஸ்பரிசம் படாதா என ஏங்கின..

"என்னைக் காப்பாற்றினீர்கள்.. அதற்கு நன்றி எப்படி கூறுவது என்று தெரியவில்லை" என்று உதடுகளில் நாணம் தவழப் பேசினாள்.

"இப்போது காப்பாற்றியதற்கு நன்றியா? இல்லை முன்பு காப்பாற்றியதற்கு நன்றியா? இப்போது நான் ஒன்றும் உனக்குச் செய்துவிடவில்லை. நீ களைப்பாய் இருக்கிறாய். ஒரு வாய் தண்ணீர் கொண்டுவரக்கூட எனக்கு முடியவில்லை.." என்றான் குமாரதேவன்.

"முன்பு பெரும் ஆபத்திலிருந்து காப்பாற்றினீர்கள், ஒரு சொல்கூட சொல்ல முடியாமல் போய்விட்டது. தங்களை ஆபத்தினின்று காப்பாற்ற வந்தேன்" என்றாள் சந்திரமாலா.

"என்னைக் காப்பாற்ற வந்தாயா?" ஆவலுடன் கேட்டான் குமாரதேவன். அவளது அழகு அவனைக் கவர்ந்தது. இலேசான பய உணர்வு அவளது உடல் நடுக்கம் மூலம் தெரிவதை அவன் உணர்ந்தான். சிரிப்பு வந்தது.

"ஏன் சிரிக்கிறீர்கள்? அலங்கோல நிலையில் நானிருக்கிறேனே என்றா?" என்று கூறிய அவள் ஆடையைச் சரிப்படுத்திக் கொண்டாள்.

"அதற்காக சிரிக்கவில்லை. உன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள அந்த இரவில் ஓடினாயே.. இப்பொழுது என்னைக் காப்பாற்ற வந்தேன் என்கிறாய். உன் உடலில் இன்னும் நடுக்கம் குறையவில்லை. அதை நினைத்துச் சிரித்தேன்.." என்றான் குமாரதேவன்.

"ஆம்; தங்கள் உயிரைக் காப்பாற்ற வந்தேன். தங்களைக் காபாலிகர்கள் கவர்ந்து சென்றுவிட்டனர் என்பதை

அறிந்தவுடன் நானும் வல்லபனும் ஓடிவந்தோம்" என்றாள் சந்திரமாலா.

"யார் வல்லபன்?..."

"அவர் நாட்டிய குழுவைச் சேர்ந்தவர். காபாலிகையைப் போல் வேடமணிந்து தங்கள் இருப்பிடம் தேடி வந்தேன். அந்தப் பொல்லாத கூட்டத்தினின்று எப்படித் தப்பினீர்கள்..." சந்திரமாலாவுக்குப் புதுத் தெம்பு வந்தது. சற்று நெருங்கி அமர்ந்தாள்.

"என்னை நீங்கள் மறந்து விட்டீர்களே" என்று கேட்டாள் ஓவியம் பயில வந்த குமாரதேவன் என்று அவனைத் தவறுதலாக நினைத்துக் கொண்டாள்.

குமாரதேவனுக்கு அந்தச் சம்பவம் தெரியாது. அந்தக் கிராமத்தில் பிட்சுவிடமிருந்து காப்பாற்றிய சம்பவத்தை அவள் குறிப்பிடுகிறாள் என்று நினைத்தான்.

"எப்படி மறக்க முடியும்" என்று மெல்லக் கூறினான். சந்திரமாலாவுக்குக் களைப்பு முழுமையும் ஓடிவிட்டது.

"விரதபங்கம் என்னால்தானே நேர்ந்தது தங்களை என் தந்தை கோபித்துக் கொண்டார். நீங்கள் போன பிறகு எனக்கு உறக்கம் வரவில்லை. என் தாயிடம் கதறி அழுதேன்" என்று அவள் கூறியபோது குமாரதேவன் குறுக்கிட்டு "தந்தை கோபித்துக் கொண்டாரா? தாயிடம் கதறி அழுதாயா?" என்று கேட்டான்.

"ஆமாம்; தங்களுக்கு வேடிக்கையாக இருக்கிறது அல்லவா! பல நாள்கள் நான் உண்ணவுமில்லை; உறங்கவுமில்லை, சோகமே வடிவாக அமர்ந்து விட்டேன். சிறிது நாள்கள் கழிந்தவுடன் சாளுக்கிய தலைநகரான வாதாபியினின்று வீரர்கள் வந்தனர். என் தந்தை மீது குற்றஞ்சாட்டினர். அவரை வாதாபிக்கு அழைத்துச் சென்றுவிட்டனர். நானும் தாயும் திக்கற்றவர்களானோம்" என்று கூறும்போது அவள் விம்மினாள்.



"அங்கிருந்து பல்லவ நாட்டிற்கு வந்தீர்களே எங்களைப் பற்றிய நினைவு தங்களுக்கிருந்ததா? என்னைக் காஞ்சிபுரம் அழைத்துச் செல்வதாக வாக்களித்திருந்தீர்களே; அதை நிறைவேற்றினீர்களா" என்று கண்ணீர் விட்டாள்.

குமாரதேவன் திகைத்தான் ஒருகணம்; பிறகு நடந்த சம்பவத்தின் ஆதி அந்தத்தைப் புரிந்து கொண்டான். அவனுக்கு அடக்க முடியாத சிரிப்பு வந்தது.

"என்னைத் தவறாக நினைத்துவிட்டாய் சந்திரமாலா" என்று குமாரதேவன் கூறிச் சற்று நகர்ந்து உட்கார்ந்தான்.

"நான் தவறாக நினைக்கவில்லை, காஞ்சி வந்த பிறகு தங்களுக்குப் பல முக்கியமான வேலைகள் இருந்திருக்கும். அதனால் மறந்திருப்பீர்கள் என்றேன். தங்களைத் தவறாக நினைக்கவில்லை. ஆனால், தூரிகை பிடித்த கரங்கள் எவ்வாறு எதிரிகளை வீழ்த்தக்கூடிய சக்தி படைத்தன! பல மாதங்களுக்கு முன்பு பார்த்ததைவிட நீங்கள் மிகவும் மாறியிருக்கிறீர்கள். இதயத்தில் மாறாது இருந்தால் போதும்..." என்று கூறிய சந்திரமாலா அவன் அருகே நகர்ந்து உட்கார்ந்தாள்.

குமாரதேவன் எழுந்து நின்றான். "மாலா! என்னைப் பொருத்தருள். நீ நினைப்பதுபோல் நான் ஓவியனல்லன்" என்றான்.

சந்திரமாலா திடுக்கிட்டாள். "என்ன சொல்கிறீர்கள்? அஜந்தாவுக்கு வந்தது, என்னைச் சந்தித்தது எல்லாம் மறந்துவிட்டீர்களா?" என்று விம்மினாள்.

"சந்திரமாலா, மிகவும் ஆபத்து நிறைந்த காலை வேளையில் நாம் இருக்கிறோம். உன்னைவிட எனக்கு ஆபத்து அதிகம். நான் பலி பீடத்திலிருந்துத் தப்பிவிட்டேன். என்னைத் தேடிக் காபாலிகர்கள் கூட்டமே ஓடி வந்து கொண்டிருக்கிறது. இந்தச் சமயத்தில் உன்னுடன் நான்

வாதாடிக் கொண்டிருப்பது உயிருக்கே அபாயம் - நீ நினைப்பதுபோல் நான் ஓவியனல்லன். என் பெயர் குமாரதேவன்தான். ஆனால் ஓவியனின் சகோதரன் நான். நாங்களிருவரும் இரட்டையர்கள். ஒருவன் கலைஞன். நான் வீரன். ஆனால் கலை எனக்கு விரோதியன்று. உன்னைச் சந்தித்து எதேச்சையாக உன்னைக் காப்பாற்றினேன். ஆனால் நான் சிக்கிக் கொண்டேன். மரணத்தின் பிடியினின்று விடுபட்டு ஓடி வந்துவிட்டேன். நான் உன் காதலன் அல்லன். இப்போது இருவருமே இந்த இடத்திலிருந்து ஓடவேண்டும். பிறகு உனக்கு வேண்டியவற்றை நான் கவனிக்கிறேன். உன்னால் நடக்க முடியாவிட்டால் நீ இங்கேயே இரு உன்னைக் காபாலிகர்கள் ஒன்றும் செய்துவிடமாட்டார்கள். நான் அருகிலுள்ள ஊருக்குச் சென்று துணைக்கு ஆட்களை அழைத்து வரும்வரை இதே மரத்தடியில் இரு" என்று கூறிப் புறப்பட எத்தனித்தான். அவன் எதிரே வந்து நின்றாள் தேவசோமை.

## அத்தியாயம் - 2

# இளவரசர் எங்கே?

**கா**பாலிகர்கள் இளைஞன் ஒருவனைப் பலியிட அழைத்துச் சென்று இருக்கிறார்கள் என்ற செய்தியைக் கேள்விப்பட்ட இளவரசர் நரசிம்மரும், ஓவியர் குமாரதேவனும் குறிப்பிட்ட இடத்தை நோக்கி விரைந்தனர்.

மலைச் சரிவில் பெரும் பாறைகள் சூழப்பட்ட பகுதியில் ஒருவரையும் காணோம். அவர்கள் செல்வதற்கு முன்பே காபாலிகர்கள் நான்கு திசைகளிலும் பிரிந்து விரைந்து சென்று பலியினின்று தப்பிச் சென்ற குமாரதேவனைக் கண்டு பிடிப்பதற்கு முனைந்தனர். ஆனால்



அந்த இடத்தில் உடைந்த மதுக்கிண்ணங்களும் நசுங்கிய மலர்களும், பாதி எரிந்த மரத்துண்டுகள் மட்டுமே கிடந்தன.

பெரும் பாறை ஒன்றில் செங்கோடுகளால் வரையப்பட்டிருந்த சித்திரம் ஒன்றை இளவரசர் குமாரதேவனுக்குச் சுட்டிக் காட்டினார்.

சரிவான பாறையில் நடனமாடும் சிவபெருமானின் உருவம் வரையப்பட்டிருந்தது. அந்தப் பாறையின் எதிரில் வட்ட வடிவமான சிறு பாறை. அதன் அருகே கூர்மையான வாள் ஒன்று மண்ணில் கிடந்தது. செம்மலர்களும் அரிசியும் சிதறிக் கிடந்து நடக்கவிருந்த பயங்கரத்தை நினைவூட்டின.

காபாலிகர்கள் வைத்திருக்கும் மண்டை ஓடுகள் சில கிடந்தன. ஓர் உடுக்கையும் சூலாயுதமும் முதல் நாள் நடைபெற்ற நடன நிகழ்ச்சிக்குச் சாட்சி கூறின.

"பரபரப்புடன் இடத்தைவிட்டு ஓடி இருக்கிறார்கள்" என்றான் குமாரதேவன்.

"பலி முடிந்திருக்குமோ?" என்று கவலையுடன் கேட்டார் இளவரசர்.

"காபாலிகர்களின் அட்டகாசம் ஒன்றும் புதிதன்று இளவரசே! தங்களின் முப்பாட்டனார் மகேந்திர சக்கரவர்த்தியின் காலத்தில் இதைவிட அட்டூழியங்கள் அதிகமாம்! அவற்றைக் கண்டித்து நாடகம் ஒன்றை மகேந்திர சக்கரவர்த்தி இயற்றிய செய்தியைத் தாங்கள் மறந்து விட்டீர்களா?" என்றான் குமாரதேவன்.

"ஆமாம்! ஆமாம்! முப்பாட்டனார் சமணர்களுடனும் பௌத்தர்களுடனும் காபாலிகர்களுடனும் மிகவும் போராட வேண்டி இருந்தது. அதனால்தான் மத்த விலாசம் எனும் நாடகத்தை எழுதி எங்கும் நடிக்கச் செய்தார். போலியான மதவாதிகளின் முகத்திரையைக் கிழித்தெறிந்தார்" என்று ஆவேசமாகப் பேசினார் இளவரசர்.

"இப்போது மீண்டும் அதற்கான காலம் வந்துவிட்டது. தங்களிடம் சொல்ல மறந்துவிட்டேன். காஞ்சி மாநகரில் ஆறு சமயவாதிகளும் தங்கள் தங்கள் கருத்தைப் பரப்பச் செய்யும் முயற்சிகளுக்கு எல்லையில்லை" என்றான் குமாரதேவன்.

"ஆறு சமயவாதியர் என்று யாரைச் சொல்கிறாய்? சமணர்கள், பௌத்தர்கள்" என்று விரல்விடத் தொடங்கிய இளவரசர் பேச்சில் குமாரதேவன் குறுக்கிட்டு, "அவர்களைச் சொல்லவில்லை இளவரசே! காபாலிகர்கள், பாசுபதர்கள், காளாமுகர்கள், காணாபத்யர்கள், சாக்தர்கள், கௌமாரர்கள் இவர்களனைவரும் ஒருவரோடொருவர் இடும் பூசலைக் கண்டால் ஒருபுறம் சிரிப்பும் மறுபுறம் கோபமும் வருகின்றன" என்று வருத்தமும் கோபமும் கலந்த குரலில் பேசினான்.

இளவரசர் மெல்ல நகைத்தார். "குமாரதேவா! உனக்கே வெறுப்பும் ஆத்திரமும் வருகின்றன என்றால் ஏதோ முக்கிய விஷயம் இருக்கத்தான் வேண்டும்" என்றார்.

"ஆம், ஆம், இளவரசே! இவர்கள் அனைவரும் வணங்கும் தெய்வங்களைக் கொண்டு தாங்களே பெரியவர்க்ள், த்ங்கள் தெய்வமே பெரிது என்று வாதாடுகின்றனர். வாயால் சொன்னால் போதாது என்று கைகலப்பும் ஏற்பட்டு விடுகின்றன. காபாலிகர்களும், பாசுபதர்களும் செய்யும் அட்டூழியத்துக்குக் குறைவே இல்லை" என்றான் குமாரதேவன்.

"காபாலிகர்கள் ஆரம்ப காலத்தில் தவமும், விரதமும் சிறப்பாகக் கொண்டவர்களாக இருந்தனர். நாளாக நாளாக அவர்கள் குணமும் மாறிவிட்டது என்பதைக் கவனித்து வந்திருக்கிறேன். இங்கே காபாலிகர்கள், பாசுபதரங்கள், காளாமுகர்கள் அனைவரது கூட்டு முயற்சி இருக்கும் என்றே தோன்றுகிறது" என்று கூறிய இளவரசர் அந்த இடம் முழுமையையும் சுற்றிப் பார்த்துவந்தார். ஓரிடத்திற்கு வந்தவுடன் அவர் திடுக்கிட்டு நின்றார். குமாரதேவனை சைகை காட்டி "வா" என்று அழைத்தார்.



பாறை ஒன்றின் மீது சாய்ந்துகொண்டு உடலில் ஆடையின்றி காபாலிகன் ஒருவன் உறங்கிக் கொண்டிருந்தான். அவன் படுத்திருந்த இடம் உடனே ஒருவரும் கண்டு பிடிக்க முடியாததால் அவனை ஒருவரும் எழுப்பி அழைத்துச் செல்லவில்லை.

"நல்ல வேளையாக இவன் ஒருவன் கிடைத்துவிட்டான். இவனைக்கொண்டு நாம் பலியிடும் பயங்கரக் கூட்டத்தையே கண்டுபிடித்துவிட முடியும் என்று நினைக்கிறேன்" என்றார்.

மதுவின் மயக்கத்தில் ஆழ்ந்து தன் நினைவின்றிக் கிடந்த காபாலிகன் மீது அருகேயிருந்த துணியை எடுத்து மூடிவிட்டு, "இப்படியொரு நிலை பல்லவ நாட்டில் இருக்கிறதே; உழைக்காமல் பிழைக்க வேண்டும் என்று நினைக்கிறார்களே! இவன் உடல் வலுவினைப் பார்த்தாயா! வீணே உடலை வெயிலிலும் மழையிலும் சிதறவிட்டு வருத்திக் கொள்கிறான்" என்றார் இளவரசர்.

"இவர்கள் நாட்டிலுள்ள நிலையைப் பெரிதுபடுத்த முயல்கிறார்கள் என்று நினைக்கிறேன்" என்றான் குமாரதேவன்.

மழை பெய்யவில்லை; சாளுக்கிய வீரர்கள் பல இடங்களில் சூறையாடிச் சென்றிருக்கிறார்கள். அவற்றைப் பயன்படுத்தி காபாலிகர்கள் அடையும் பயன் என்ன? நரபலி எதற்காக இட முயல்கிறார்கள்?" என்று கவலையைத் தெரிவித்தார் இளவரசர்.

"இவனை எழுப்பி விசாரிப்போம்" என்று இளவரசர் அருகே கிடந்த சூலாயுதத்தை எடுத்து அவன் விலாப் புறத்தில் தட்டி, "ஏய்.. எழுந்திரு- இன்னுமா உறக்கம்?" என்று கூவினார். காபாலிகன் அசையும் வழியாயில்லை.

இளவர்சர் அங்குமிங்குமாகச் சுற்றி வந்தார். பல காலடிகளைக் கண்டார். சற்றுத் தொலைவில் பெரும் அடுப்பின் மீது உள்ள பாத்திரத்தில் ஒருவித கூட்டாஞ்சோறு

இன்னும் கொதித்துக் கொண்டிருந்தது. அடுப்பினடியில் உள்ள விறகு நீரு பூத்துக் கிடந்தது. அண்டாவை எட்டிப் பார்த்தார் இளவரசர்.

"அண்டாவிலுள்ள சோற்றைப் பார்த்தால் குறைந்தது நாற்பது பேர்களாவது இந்தக் கூட்டத்திலிருப்பார்கள் என்று தோன்றுகிறது" என்றார் இளவரசர்.

"பஞ்சம், பசி என்று கூறுகிறார்கள்; இவர்களுக்கு மட்டும் இவ்வளவு சோறு சமைக்க அரிசி எப்படிக் கிடைத்தது?" என்று குமாரதேவன் கேட்டான்.

இளவரசர் சற்று யோசித்தார். பிறகு உறங்கிக் கொண்டிருந்த காபாலிகன் அருகே சென்று அவன் இதயத்தில் தன் செவியை வைத்துப் பார்த்தார். உடல்நிலை சரிவரவே இருந்தது.

குமாரதேவன் எங்கிருந்தோ ஒரு மட் குடத்திலுள்ள நீரைக் கொண்டு வந்தான். காபாலிகன் தலையில் கொட்டினான். காபாலிகன் அப்படியும் இப்படியுமாகப் புரண்டு படுத்தான். இளவரசர் பலமான குத்து ஒன்றை அவனை தூக்கி நிறுத்தி வீசினார். நிலை தடுமாறினான் காபாலிகன். கண்களை மெல்லத் திறந்து பார்த்துவிட்டுக் கீழே வீழ்ந்தான். ஆனால் மயக்கம் தெளியவில்லை.

இளவரசர் சிறிது நேரம் யோசித்தார். குமாரதேவன் அருகே சென்று மெல்லிய குரலில், "குமாரதேவா! நீ விரைந்து சென்று அருகேயுள்ள சாவடியிலிருந்து காவல் வீரர்களை அழைத்து வா. இந்தக் காபாலிகனைச் சிறையில் தள்ளிக் கொடுப்பதைக் கொடுத்தால் நமக்கு மற்றவர்களைப் பற்றிய செய்தி கிடைத்துவிடும். நான் இங்கேயே இருக்கிறேன். இவன் விழித்துக் கொண்டால் இவனிடம் கேட்டு அறிய வேண்டியவற்றை அறிகிறேன்" என்றார். குமாரதேவன் சற்றுத் தயங்கினான்.



"ஏன் தயங்குகிறாய்? பயமாக இருக்கிறதா?" என்று மெல்ல நகைத்தவாறு கேட்டார் இளவரசர்.

"பயமொன்றுமில்லை... தங்களைத் தனியே விட்டுச் செல்ல வேண்டியுள்ளதே என்ற கவலைதான்" என்றான் குமாரதேவன்.

"என்ன குமாரதேவா, என்னை யார் என்ன செய்து விட முடியும்? என்னுடைய மல்யுத்த முறைகளை மறந்துவிட்டாயா?" என்று இளவரசர் கேட்டார்.

"தங்கள் திறமையிடமோ புஜபலத்திடமோ எனக்கு அவ நம்பிக்கையில்லை. ஆனால்..." குமாரதேவன் தயங்கினான்.

"ஆனால் என்ன... அவர்கள் திடீரென பல நூறு பேர் வந்துவிட்டால் என்ன செய்வது என்கிறாயா?" என்று கேட்டார்.

தலையை அசைத்தான் குமாரதேவன். இளவரசர் கேலியாக நகைத்தார். பிறகு என் உடைவாள் இன்னும் பழுதாகிவிடவில்லை. இதோ கிடக்கும் சூலாயுதம் தற்பொழுது சிலம்பமாக உதவும். கவலைப்படாதே. போய் காவல் வீரர்களை அழைத்து வா..." என்றார்.

குமாரதேவன் நடந்தான். "சற்று விரைந்து செல்" என்றார் இளவரசர். பிறகு கை தட்டி அவனை அழைத்து "உனக்கு வழியில் ஏதாவது ஆபத்து ஏற்பட்டால்..." என்று கேட்டார்.

குமாரதேவன் சிரித்தான். "கவலைப்படாதீர்கள் இளவரசே! அஜர்நா காட்டினின்று தப்பி வந்தவனாயிற்றே! விரைந்து சென்று வீரர்களுடன் திரும்புகிறேன்" என்றேன்.

குமாரதேவன் விரைந்து ஓடினான் என்றே கூறலாம். சிறிது தூரம் சென்றவுடன் அவனை நோக்கி பாசுபதர் ஒருவர் வந்து கொண்டிருந்தார். சிற்பி சுந்தரமூர்த்தி வீட்டிற்கு இளவரசைத் தேடி வந்து சொல்லிக் கொள்ளாமல் சென்றுவிட்ட அதே பாசுபதர்.

"தம்பி, தம்பி எங்கே ஓடுகிறாய்?" என்று அவர் குமாரதேவனை வழி மறித்துக் கேட்டார்.

குமாரதேவன் சீறினான். "வழியை விடும் ஐயா! உம்மைப் போன்ற சமயவாதிகள் கொடுக்கும் தொல்லை தாங்க முடியவில்லை. அவசரமான வேலை இருக்கிறது. வழி விடுங்கள்" என்று கூறி அவர் கரத்தைத் தள்ள முயன்றான்.

பாசுபதர் அவன் கரத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார். "என் கையை விடுங்கள். காபாலிகன் ஒருவன் அகப்பட்டுக் கொண்டான். அவனைச் சிறைப்படுத்த வேண்டும்" என்று பரபரப்புடன் கூறி அவரது பிடியினின்று விடுதலை பெற முற்பட்டான். முடியவில்லை.

"நமச்சிவாயா! தம்பி என்னையும் காபாலிகனைப்போல் நினைத்துவிடாதே நான் யார் தெரியுமா? சைவ சித்தாந்தத்தில் தலைசிறந்த கொள்கையுடையவன். சைவ சித்தாந்தம் தெரியுமோ?" என்று கேட்டார் பாசுபதர்.

தலையை அசைத்தான் குமாரதேவன், விட்டு விடுவார் என்ற எண்ணத்தில் அவர் விடுவதாக இல்லை.

"நமச்சிவாயா! கேள் தம்பி! சைவ சித்தாந்தத்தில் ஆறுவகை. பாசுபதம், மாவிரதம், காபாலிகம், வாமம், பைரவம், சைவம். ஆத்மா எல்லாம் ஒன்றே. நான் - நீ - தான் என்ற ஆணவமே கிடையாது. இதோ பார் எனக்கு எதிலும் பற்று இல்லை. உடம்பு முழுவதும் சாம்புல் பூசியுள்ளேன். சிலர் கறுப்பு உடைகளை அணிவார்கள். நான் மிகப் பழங்காலக் கொள்கையை அனுசரிப்பவன். லிங்க வடிவிலுள்ள சிவபெருமானை வழிபடுவதே என் தொழில். சிவபெருமான் தனது பூதகணங்களுடன் கைலாசத்தில் இருக்கிறார். அவரது நினைவு ஒன்றே எனது தொழில். இதோ பார்" என்று தன் தோளைத் திறந்து காட்டினார். லிங்க வடிவ முத்திரை இடப்பட்டிருந்தது மார்பைக் காட்டினார். லிங்க வடிவம் இருந்தது. "ஞானம் ஒன்றே சிறந்த விரதம் எனக்



கொள்பவன்..." என்று அவர் கூறும்பொழுது குமாரதேவனுக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது.

"சுவாமி! பிறகு உம்மிடம் வந்து பாசுபத தத்துவத்தைக் கேட்டு அறிகிறேன். இப்போது பொல்லாத காபாலிகனைச் சிறையில் அடைக்க வேண்டும். இளவரசர் தனியே இருக்கிறார். என்னை விட்டு விடுங்கள்" எனக் குழைந்தான்.

"ஜெய் பாசுபதே! தம்பி! நான் காபாலிகனைப்போல் கொடியவன் அல்லன். ஞானாசிரியனான சிவபெருமான் என் கண் முன் எப்போது வேண்டுமானாலும் தோன்றுவார். வேண்டியதைக் கேட்பேன். சிவபெருமான் ஞானத்தை பூலோகத்தில் தநிச முனிவர், அகத்தியர், உபமந்யு, குருதேவர் ஆகிய நால்வருக்கு உபதேசித்தார். அந்த நால்வரும் இந்த ஞானத்தை இந்த நாட்டில் பலருக்கும் உபதேசித்தனர்" என்று கூறிக் கொண்டிருக்கும்போதே குமாரதேவன் அவர் பிடியினின்று விடுவித்துக் கொண்டு, "சுவாமி... சுவாமி தங்களை குருவாக ஏற்றுக்கொள்ள பிறகு ஒருநாள் வருகிறேன். இப்போது இந்தப் பாடம் போதும். எனக்கு இதைவிட முக்கியமான வேலை இருக்கிறது" என்று சொல்லிவிட்டு ஓடினான்.

பாசுபதர் அவன் ஓடும் திசையைப் பார்த்து மெல்லச் சிரித்தார்.

"ஓ! இளவரசர் இங்கே தான் இருக்கிறாரா? மாறுவேடம் போட்டுக்கொண்டு அலைந்தால் ஒருவர் கண்ணிலும் படமாட்டோம் என்று அவருக்கு எண்ணமா? நான் கண்டு பிடித்துவிடுகிறேன்?" என்று பாசுபதர் தனக்குள்ளே கூறிக்கொண்டு இளவரசர் இருந்த இடம் நோக்கி விரைந்தார்.

பாறை மறைவில் காபாலிகன் மயக்க நிலையிலிருந்தான். ஆனால் அவன் அருகே இளவரசரைக் காணவில்லை. பாசுபதர் இங்கும் அங்கும் தேடினார். 'இளவரசே, இளவரசே' என்று கூவினார். பாறைகளில் எதிரொலித்தது.

## அத்தியாயம் - 3

# நான் அவனல்லன்

அஜந்தாக் காடுகளில் தான் சந்தித்து, மனத்தைப் பறி கொடுத்த ஓவியன் இதோ அருகே இருப்பவனல்லன் என்பதைப் புரிந்துகொண்ட சந்திரமாலாவுக்கு வியப்பு மேலிட்டது.

"என்னைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் தங்களுக்கு எப்படி ஏற்பட்டது?" என்று கேட்டாள் சந்திரமாலா.

அப்படிக் கேட்பதன் மூலம் உண்மையை வரவழைக்கலாம் என்ற எண்ணம்.

"உட்கார்ந்து பேச நேரமில்லை. நாம் விரைவாக நடந்து கொண்டே பேசுவோம்" என்று கூறி குமாரதேவன் நடந்தான். சந்திரமாலாவுக்கு களைப்பு மிகுதியால் நடக்க முடியவில்லை என்றாலும் குமாரதேவனைச் சந்தித்தது அவளுக்கு புதுத் தெம்பை அளித்தது. ஒரே மாதிரியாக இருவரும் இருப்பது எப்படி? கடவுளின் படைப்பில் இப்படி ஓர் அதிசயமா?" என்று சந்திரமாலா வியப்படைந்து ஆவல் ததும்பும் விழிகளுடன் அவனைக் கண் இமைக்காமல் பார்த்தாள்.

"சந்திரமாலா! உன்னை இதற்கு முன்பு எனக்குத் தெரியாது. தெரிந்த மங்கையைத்தான் காப்பாற்ற வேண்டும் என்ற கட்டாயமில்லை. தெரிந்தவர்களையும் அறிமுக மாகாதவர்களையும் ஆபத்து வேளையில் காப்பாற்றுவது என்னைப் போன்ற வீரர்களின் கடமை" என்று கூறியவாறு நடந்தான் குமாரதேவன். அவன் நடையில் இருந்த வேகம், படபடப்பு அவளுக்கு வியப்பை அளித்தன.



"வாளைச் சுழற்றவல்ல வீரராயிற்றே! ஏன் இப்படி பயந்து வேகமாக நடக்கிறீர்கள்?" என்று கேட்டாள் சந்திரமாலா. அவளுக்குத் தாகமாக இருந்தது.

முதல் நாள் இரவும் ஏதும் உண்ணவில்லை.

ஊரில் இருந்தால் முத்தம்மா கஞ்சி கொண்டு வந்து, இந்த நேரத்தில் அவளை எழுப்புவாள்.

முத்தம்மா பெருந்துணையாக இருந்தாள்.

"உயிருக்குப் பயந்து நான் மெதுவாக நடக்கிறேன். நியாயமாக நான் ஓடவேண்டும். நீ இருப்பதால் வேகமாக நடக்கிறேன் என்று வைத்துக் கொள்ளேன்" என்றான் குமாரதேவன்.

"ஓ, உயிருக்குப் பயப்படுவது சுத்த வீரமா?" சந்திரமாலா கேட்டாள்.

"இப்போது என் உயிர் விலை மதிப்பிட முடியாதது. நான் வேகமாகச் சென்று இளவரசரைச் சந்தித்தாக வேண்டும். அல்லது பல்லவ சக்கரவர்த்தியிடம் முறையிட்டாக வேண்டும். அதற்கு உயிரில்லாமல் வெறும் உடலுடன் சென்று என்ன பலன்?" என்றான் குமாரதேவன்.

"சக்கரவர்த்திகளிடம் என்ன சொல்லப்போகிறீர்கள்?" சந்திரமாலா கேட்டாள்.

"நடந்ததைச் சொல்லுவேன்".

"சந்திரமாலா என்ற நாட்டியப் பெண்ணைக் காப்பாற்றச் சென்றது ஏன் என்று சக்ரவர்த்தி கேட்டால் என்ன மறுமொழி கூறுவீர்கள்?"

"ஓ! எனக்கு இடப்பட்டுள்ள கட்டளை சாளுக்கிய ஒற்றர்களைக் கண்டு பிடிக்க வேண்டும் என்பது. மற்றொன்று பல்லவ நாட்டில் உணவுப் பஞ்சத்தை ஏற்படுத்த

முயலுபவர்களைக் கண்டு பிடித்து தண்டனைக்குள்ளாக்க வேண்டும் என்பது" என்று கூறிய குமாரதேவன், "சந்திரமாலா, ஒரு காரியம் செய்கிறாயா? நான் கொஞ்சம் வேகமாகப் போகிறேன். நீ சற்று மெதுவாக வருகிறாயா?" என்று கூறி ஓட்டமும் நடையுமாய் நடக்க ஆரம்பித்தான்.

"என்னை விட்டுவிட்டு நீங்கள் போய்விடாதீர்கள். தங்களைத் தேடி வரும் காபாலிகர்கள் என்னை இந்த இடத்தில் பார்த்தால் சந்தேகப் படுவார்கள். நீங்கள் போகும் திசையைக் கேட்பார்கள். என்னையும் தங்கள் கூட்டத்தாருடன் சேர்த்துக்கொண்டு..." என்று கூறிய சந்திரமாலாவின் குரலில் தடுமாற்றம் இருந்தது. நடையும் தளர்ந்தது.

"உன்னை ஒன்றும் செய்ய மாட்டார்கள். அப்படியே உன்னைத் தூக்கிச் சென்றாலும் நீ சந்தோஷப்படலாம்..." என்று கூறி மெல்ல நகைத்தான் குமாரதேவன்.

"சந்தோஷமா?"

"ஆமாம்; நடந்து வர வேண்டிய அவசியமில்லை அல்லவா? கால் வலிக்காது" என்று குமாரதேவன் கூற, இருவரும் கலுக்கென்று சிரித்துவிட்டனர். சந்திரமாலாவுக்கு இந்த குமாரதேவனின் பேச்சு பிடித்திருந்தது. பார்வை, பேச்சு அனைத்திலும் ஓர் உறுதி இருந்தது. ஒருவேளை அவரேதான் இவரா? வேடம் போடுகிறாரா? வேண்டுமேன்றே தான் ஓவியரல்லர் என்று நடிக்கிறாரா?

"அஜந்தாக் காடுகளில் இப்படிப்பட்டதொரு வீரமும், துடிப்பும் தங்களிடம் காணவில்லையே..." என்று கூறி அவனை நோக்கினாள்.

"சந்திரமாலா, நீ இன்னும் தவறாக என்னை அடையாளம் கண்டு கொண்டிருக்கிறாய். அஜந்தாவில் பழகிய என் சகோதரனுக்கும் எனக்கும் வேற்றுமை காண முடியவில்லையா? நான் என்ன செய்வது? ஒரே தாய் வயிற்றில்



பிறந்தோம். இரட்டைப் பிறவி நாங்கள். ஆனால், குணத்தில் எப்படி ஒன்றாக இருக்க முடியும்? அவன் ஓவியன்; நான் வாள்வீச்சு, வில்வித்தை, மல்யுத்தம் கற்றவன். கலைஞனுக்குள்ள மென்மை அவனுக்கு. ஆயுதம் பிடித்த முரட்டுத் தன்மை எனக்கு..." என்று குமாரதேவன் கூறினான்.

"எங்கே தங்கள் கையைக் காட்டுங்கள் பார்ப்போம்..." என்று கூறி அவன் எதிர்பார்க்கும் முன்பே அவனது கையை எடுத்துத் தன் விரல்களுடன் பிணைத்துக் கொண்டு ஸ்பரிசித்தாள்.

இவன் விரல் வாள், வேல், ஈட்டி பிடித்துக் காய்த்துப் போயிருந்தது. ஓவியனின் உள்ளங்கையை அவள் அறிவாள். ஆக இவர் அவரல்லர்.

குமாரதேவன் முதன் முதலாக ஓர் மங்கையின் கரத்தைப் பிடிக்கிறான். விரல்களின் மென்மையை உணர்கிறான். மங்கையர் கரங்களுக்கு இப்படி ஒரு மென்மையா? குளத்தில் இறங்கி நீந்தும்போது அல்லித் தண்டுகளைப் பறித்து இருக்கிறான். அதைவிட மென்மை இவள் கரங்கள்!

சந்திரமாலாவிடமிருந்து தன் கரத்தை விடுவித்துக் கொண்டு, "புரிந்து விட்டதா? ஓவியர் குமாரதேவன் வேறு, நான் வேறு என்பதைப் புரிந்து கொண்டு விட்டாயா?" என்று கேட்டான்.

"இரண்டு பேரும் ஒன்றாக இருக்க வேண்டும் என்றே ஆசைப்படுகிறேன்" என்று கூறி சந்திரமாலா விழியால் நகைத்தாள்.

ஆம், இந்த குமாரதேவனே ஓவியனாக இருந்துவிட்டால்? "காஞ்சிக்கு அழைத்துச் செல்லுங்கள்" என்று அவரைக் கேட்டுக் கொண்டோமே, இப்போதும் அதே கேள்வியை வற்புறுத்தலாமல்லவா?

பல்லவ நாட்டிற்கு வந்தும் அவள் இன்னும் காஞ்சியைப் பார்க்கவில்லை.

"என்னைக் காஞ்சிக்கு அழைத்துச் செல்கிறீர்களா?" என்று சந்திரமாலா கேட்டாள்.

"காஞ்சிக்கா! உன்னை வானுலகத்திற்குக் வேண்டுமானால் அழைத்துச் செல்ல முடியும். இன்னும் சிறிது நேரமிருந்தால் காபாலிகர்கள் வந்து விடுவார்கள். அவர்கள் நம்மிருவரையும் கூண்டோடு கைலாசம் அனுப்பி விடுவார்கள்" என்று கூறிய குமாரதேவன் திரும்பிப் பார்த்தான்.

தங்களுடன் நான் கைலாசமென்ன, வேறு எந்த உலகத்திற்கு வேண்டுமானாலும் வரத் தயார். நாம் அஜந்தாவில் பேசிக்கொண்டதை மறந்து விட்டீர்களா?" என்று கேட்டாள் சந்திரமாலா, அவன் கரத்தை மெல்லப் பிடித்துக் கொண்டு.

"என்ன பேசிக் கொண்டோம்?" என்று கேட்ட குமாரதேவன் உதட்டை மடித்துக் கொண்டு "ஐயோ! இதென்ன அசட்டுக் கேள்வியைக் கேட்டுவிட்டோமே! நாம் இவளை இதுவரை சந்தித்ததில்லையே" என்று வேதனையடைந்தான்.

"பார்த்தீர்களா, பார்த்தீர்களா! சில மாதங்களுக் குள்ளேயே மறந்துவிட்டீர்கள்!" என்றாள் சந்திரமாலா. அவளுடைய சந்தேகம் ஊர்ஜிதம் அடைவது போல தோன்றியது.

"இதோ பார்! நீ இன்னும் தவறாக நினைக்கிறாய். எனக்கு அஜந்தாவையும் தெரியாது. சித்திரங்களையும் தெரியாது. எனக்கும் சித்திரங்களுக்கும் ரொம்ப தொலைவு. எதிரிகளின் மேனியில் வாளால் ஓவியம் எழுதுவேன். துரோகிகளின் குடலை மாலையாகக் கிழித்து பச்சை ரத்தத்தை எடுத்து காளிக்குப் பூசுவேன். என்னுடைய கடமை



துரோகிகளைக் கண்டு பிடிப்பது. காபாலிகர் வேடத்திலும் பிட்சுக்களின் வடிவிலும் பாசுபதர் தோற்றத்திலும் துரோகிகளும் ஒற்றர்களும் பல்லவ நாட்டில் ஊடுருவி இருக்கிறார்கள். அவர்களைப் பிடித்து ஒழிக்காவிடில் பல்லவ நாட்டில் பெரும் பஞ்சம் வந்துவிடும். பஞ்சத்தைக் காரணமாகக் கொண்டு மக்கள் பீதியடைந்து ஓடுவார்கள். அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்வான் சாளுக்கியன்' என்று வேகமாக அவன் பேசுவதைக் கேட்ட சந்திரமாலாவுக்குச் சந்தேகம் ஏற்பட்டது. உண்மையிலேயே நான் காதலித்த குமாரதேவன் இவனல்லனோ? என்ற எண்ணத்தில் அவனை மீண்டும் உற்று நோக்கினாள்.

"இதோ பார், மறுபடியும் சொல்கிறேன்; நீ நினைப்பது போல் அஜந்தாக் காடுகளில் உன்னுடன் சுற்றியவன் நானல்லன். என் சகோதரன். எனக்குப் பெரும் பணிகள் உள்ளன. என்னை, என் வழியே போகவிட்டு உன் வழியைப் பார்த்துக் கொண்டு நீ செல்" என்றான் குமாரதேவன்.

சந்திரமாலாவுக்குச் சற்று எரிச்சல் ஏற்பட்டது. "என் வழியா? என் வழி தங்களைத் தேடி அலைந்ததுதான். தங்களைக் கண்டுபிடித்துவிட்டேன். இளவரசர் தங்களைத் தேடி அலைகிறார். அவரிடம் தங்களைச் சேர்ப்பிக் வேண்டாமா? என்னைக் காப்பாற்றிய தங்களை நான் காப்பாற்ற வேண்டாமா?" என்று அழுத்தந் திருத்தமாகக் கூறினாள்.

குமாரதேவன் "ஹோ! ஹோ!" என்று நகைத்தான்.

"என்னைக் காப்பாற்றப் போகிறாயா? எப்படிக் காப்பாற்றுவாய்?" என்று கேட்டான்.

"இதோ இப்படித்தான்" என்று அவனது கரங்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்!

காலை இளம் வேளை மறைந்து கதிரவன் தன் கொடிய கிரணங்களை வீசத் தொடங்கிவிட்டான். மழையின்மையால்

காய்ந்த தரையில் அவள் ஆட்சி மேலும் பலமாக நடக்கத் தொடங்கியது. பாறைகளின் மேல் கதிரொளி பட்டுச் 'சுரீர்' என்று எங்கும் பாய்ந்தது.

குமாரதேவனுக்குப் பசி மயக்கமில்லாவிடினும் உள்ளத்திற்குள்ளேயே துடித்துக் கொண்டிருந்த கடமை உணர்ச்சியும், வீணே இந்தப் பெண்ணுடன் பேசிக் கொண்டிருக்கிறோமே என்ற கவலையும் ஒருவித எரிச்சலை ஊட்டின!

அவளது பிடியை உதறி "இதோ பார்! வீணாக என்னைத் தடுத்துத் தாமதம் செய்யாதே! என்னைப் போகவிடு" என்று உரத்த குரலில் கூறினான்.

"நானும் வருவேன்" என்றாள் அழுத்தந் திருததமாக சந்திரமாலா!

"நீ வரக்கூடாது" என்று கடினமும் அழுத்தமும் நிறைந்த மூன்றாவது குரல் திடீரெனக் கேட்டது. சந்திரமாலாவும் குமாரதேவனுய திடுக்கிட்டனர். எதிரே தேவசோமை நின்றிருந்தாள். அவள் முகத்தில் மகிழ்ச்சியும் அதே சமயம் ஏக்கமும் நிறைந்திருந்தன.

"ஏ, நாட்டியப் பெண்ணே! ஏன் அவரைத் தடுக்கிறாய்?" என்று அதட்டினாள் காபாலிகை தேவசோமை!

உள்ளத்துள்ளே நடுக்கம் இருந்தாலும் சந்திரமாலா துணிவுடன், "நான் தடுப்பேன்; என்ன வேண்டுமானாலும் செய்வேன். நீ யார்?" என்று கேட்டாள்.

"ஓ! என்னைத் தெரியாதா? நான் தேவசோமை. உனக்குத் தெரியாவிட்டாலும் அவருக்குத் தெரியும்" என்று சந்திரமாலாவின் கரங்களை விடுவிக்க வந்தாள்.

"தொடாதே! நரமாமிசப் பட்சணிகளே! தொட்டால் தெரியும்" என்று சீறினாள் சந்திரமாலா. மென்மையான மங்கையிடம் இப்படியொரு சீற்றமா?



குமாரதேவன் காபாலிகையைப் பார்த்த வண்ணம் நின்று கொண்டிருந்தான். தேவசோமை எங்கிருந்து வந்தாள்? காபாலிகர்கள் கூட்டம் நெருங்கி வந்து கொண்டிருக்கிறதோ?

"என்ன செய்து விடுவாய்? நான் ஒன்றும் நரமாமிசப் பட்சணியல்லள். இவரைப் பலி பீடத்திலிருந்து காப்பாற்ற வழி செய்தவள். நீ யார்? நீ ஏன் அவரைத் தடுத்து நிறுத்துகிறாய்! வழியை விடு" என்று கூறிய தேவசோமை குமாரதேவனின் மற்றொரு கரத்தைப் பிடித்து, "குமாரதேவா! இங்கே எப்படி வந்தாய்?" என்று கேட்டாள்.

குமாரதேவன் மௌனமாக இருந்தான். பிறகு இங்கே எப்படி வந்தாய்? எப்போது வந்தாய்? என்று கேட்டான். குரலில் அடுத்து செய்ய வேண்டியதை யோசிப்பதற்கான திட்டமிருந்தது.

"உன்னைத் தேடி வந்தேன். என் கூட்டத்தாரின் போக்கு எனக்குப் பிடிக்கவில்லை. நரபலி கொடுக்க உன்னை நான்தான் தேர்ந்தெடுத்தேன். ஆனால், பிறகு மனத்தை மாற்றிக்கொண்டேன்!" என்று கூறி அவனருகே நெருங்கினாள்.

சந்திரமாலாவுக்கு ஏற்பட்ட அதிர்ச்சி அவள் முகத்தில் பிரதிபலித்தது.

"ஏய், நீ கையை விடு" என்று தேவசோமை எச்சரிப்பது போல் பார்த்தாள்.

"நீ தொடாதே!" என்று சந்திரமாலா கூவினாள்.

"நான் தொடுவேன். குமாரதேவன் உயிர்மீது எனக்கு ஆசை!" என்று தேவசோமை கூறினாள்.

"அதனால்தான் பலி கொடுக்கத் திட்டமிட்டுத் தேர்ந்தெடுத்தாயோ?" என்று சந்திரமாலா கர்ஜித்தாள்.

"ஆமாம், நான் முதலில் ஏமாந்து போனேன். எங்கள் குருவின் கட்டளைப்படி சாமுத்திரிகா லட்சணத்துடன் கூடிய ஒரு வாலிபனைத் தேர்ந்தெடுத்தது நான்தான். பிறகு தான்

எத்தகைய தவறு செய்தோம் என்று எனக்குத் தெரிந்தது. ஆணழகனைப் பலியிடுவதாவது?" என்று கூறி நிறுத்திய தேவசோமை குமார தேவனது கரத்தை இழுத்துத் தன் இடையைச் சுற்றித் தவழுமாறு செய்து கொண்டு, "என் அரசே! என் அன்பே! உன்னைத் தேடி அலைந்தேன். சுற்றித் திரிந்தேன். கல்லிலும் முள்ளிலும் அலைந்தேன். சோர்ந்து விழுந்தேன். உனது அருமையான முகத்தில் இன்று காலை விழித்தேன். நீயும் இவளும் நெருங்கி உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். என் ஆவலைத் தூண்டிவிட்டு விட்டீர்கள். ஓடி வந்தேன். என் அன்பே! என்னுடன் வந்து விடு" என்று கூறி அவன் கரத்தை அழுத்தினாள். சந்திரமாலாவின் கரத்தை விடுவிக்குமாறு செய்தாள்.

"ஏ! காபாலிகப் பெண்ணே! உனக்கு வெட்கமில்லையா? நீ மணமானவளாயிற்றே! இப்படி ஓர் ஆடவனைத் தொடலாமா?" என்று சந்திரமாலா கூவினாள்.

"ஏ நாட்டியப் பெண்ணே! உனது சாகசத்தை இவனிடம் காட்டாதே. உன்னைக் காப்பாற்றியவன் என்பதால் உனக்குச் சொந்தம் என்று நினைக்காதே. எனக்கு இந்த அழகன் மீது தணியாத ஆசை! இவனுடன் வாழப்போகிறேன், என்னைத் தடுக்காதே" என்று கூறி சந்திரமாலாவைத் தள்ளினாள். சந்திரமாலா தடுத்தாள். தேவசோமை ஆத்திரத்துடன் அவளைத் தாக்க முற்படவும் சந்திரமாலா சற்று நகர்ந்துகொள்ள காபாலிகை தடால் என்று மண்ணில் விழுந்தாள்.

குமாரதேவன் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு அங்கிருந்து ஓட முற்பட்டான். அவனுடைய அவசரம் அவனுக்குத் தெரியும். கீழே வீழ்ந்த தேவசோமை பரபரப்புடன் எழுந்து,

"குமாரதேவா, ஓடாதே நில்... நில்... ஒரு முக்கிய செய்தி" என்று கூவிக் கொண்டே அவனைப் பின் தொடர்ந்தாள்.

அத்தியாயம் - 4

# குகையில் குமாரதேவன்

"ஓடாதே! ஓடாதே நில்... நில்..." என்று கூவிக் கொண்டே தேவசோமை குமாரதேவனைப் பின் தொடர்ந்தாள். காபாலிகையிடம் அவனுக்குப் பயம் ஏதுமில்லை. அவளை ஒரே கணத்தில் வீழ்த்திவிட முடியும். அவன் விரும்பவில்லை. அவனுடைய நோக்கமெல்லாம் அருகே உள்ள காவல் சாவடிக்குச் சென்று காபாலிகர்களின் நடவடிக்கையைத் தெரிவித்து பயங்கரவாதிகளைச் சூழ்ந்துகொண்டு சிறைப்படுத்த வேண்டுமென்பதே!

குமாரதேவன் பலசாலியானாலும் அவனுடலில் ஏற்பட்டிருந்த சோர்வு அவன் ஓட்டத்தைத் தடைப்படுத்தின. கால்கள் தள்ளாடத் தொடங்கின. ஓடும் பாதையும் நேராக இல்லை. கல்லும் பருக்கைக் கற்களும் நிறைந்திருந்தன. சிறு சிறு புதர்கள் மண்டிக் கிடந்தன. சப்பாத்தியும், கள்ளியும், கொடிய வெய்யிலால் கருகிக் கிடந்தன. காய்ந்துபோன முட்புதர்கள் அவனது காலைக் கிழித்தன. என்றாலும் குமாரதேவன் தன் முழுச் சக்தியையும் பயன்படுத்தி ஓடினான். ஓரிடத்தில் சிறு குன்று குறுக்கிட்டது. ஒற்றையடிப்பாதை ஓரிடத்தில் இரண்டாகப் பிரிந்தது. குன்றை நெருங்கியபோதுதான் குன்றின் மறுபுறம் செல்வதற்கு குறுகிய வழி இருப்பது தெரிந்தது.

குமாரதேவன் ஒரே தாவலில் பாறை மீது ஏறி மறுபுறம் குதித்து விரைவாக ஓடினான்.

சிறிது தொலைவு ஓடிய பிறகு திரும்பிப் பார்த்தான். காபாலிகையை காணவில்லை. அப்பாடா என்று சற்று நின்றான். கண்ணுக்கெட்டிய தொலைவுவரை பார்த்தான். காபாலிகையைக் காணவில்லை. அவனுக்குத் தன் மீது ஏற்பட்டிருப்பது காதலா, காமமா, அன்பா, ஆசையா என்று

குமாரதேவனுக்குப் புரியவில்லை. காபாலிகையின் தோற்றத்தை ஒருமுறை கண்முன் கொண்டு வந்தான். வாளிப்பான தோற்றம்; வயதை மறைக்கும் இளமை; மழை என்றும் வெய்யில் என்றும் பாராமல் சுற்றுவதால் ஏற்பட்டுள்ள கடினமான மேனி அவளுடைய இயற்கையான உடல் வாளிப்புக்கு மெருகு ஊட்டியது. ஆடைகள் குறைவாக இருப்பதால் மறைக்கப் படவேண்டிய பகுதிகள் முழுமையாக மறையாததால் காண்பவர் விழிகளை அகலாது செய்து கொண்டு இருந்தன. காவி ஏறிய பற்களாயினும் அழகிய அதரங்கள் அவள் சிரிக்கும்போது சிந்தையைக் கவரத்தக்க உணர்ச்சியை வீசுகின்றன. கருமையான விழிகளும் கூர்மையான நாசியும் அந்த முகத்தில் தனி வித ஆண்மைத் தனத்தை வீசி நின்றன.

அந்த மங்கை சந்திரமால, தன் சகோதரன் என்று தன்னைத் தவறாக எண்ணிக் கொண்ட விசித்திரத்தை நினைத்துப் பார்த்தான். அவன் அதிர்ஷ்டசாலிதான். இத்தகைய அழகிய மங்கையைக் காதலியாகப் பெற்றிருப்பது அவனுடைய முற் பிறவிப் புண்ணியமாகத்தான் இருக்க வேண்டும்; இல்லாவிடில் பெண் எனும் வாடையே அவனுக்கு ஏற்படாதிருக்கும்போது அவன் கானகத்தில் கட்டிள மங்கையின் சுழல் விழியில் சிக்கியது எவ்வாறு? பெண்ணின் ஸ்பரிசத்தையே அறியாத அவனுக்குச் சற்று முன்பு அவளது கரங்களன் மென்மையை உணரும் பேறு கிடைத்தது. "நான் தான் ஓவியன்" என்று கூறியிருந்தால் அந்தப் பேதைப் பெண் நம்பியிருப்பாள். குமாரதேவன் தனக்குள்ளே சிரித்துக் கொண்டான்.

சகோதரன் குமாரதேவன் இப்போது எங்கே இருக்கிறானோ? இளவரசர் எங்கிருக்கிறாரோ? இளவரசர் சற்று முன்பு சந்திரமாலா சொன்னாளே இளவரசரைப்பற்றி - இளவரசர் வந்துவிட்டாரா? அவரைச் சந்தித்து நாட்டின் நிலையை எடுத்துக் கூற வேண்டும். குமாரதேவன் எழுந்திருக்க முயன்றான், அவனால் இயலவில்லை. கால்கள் தள்ளாடின. ஓர் அடிகூட எடுத்து வைக்க முடியவில்லை. அங்கேயே



அப்படியே உட்கார்ந்திருக்க வேண்டும் என்று தோன்றியது. பாறையின் மீது உட்கார்ந்தால் ஒருவேளை காபாலிகை கண்டு விடுவாளோ என்று இரு பாறைகளின் மறைவில் சற்று நிழலான பகுதியில் உட்கார்ந்தான். சூரியன் உதயமாகி சில நாழிகை நேரமே ஆகியிருந்தாலும் வெயிலின் கடுமை அதிகமிருந்தது. உடலும், உஷ்ணத்தால் காயத் தொடங்கின. நா வறண்டது.

சலசல வென்ற மெல்லிய ஓசை கேட்டது. தட்டுத் தடுமாறி நடந்து அருகே சப்தம் வந்த திக்கை நோக்கி மெல்ல நடந்தான் குமாரதேவன். மிக அருகேதான் ஓசை கேட்டது. உயரமான இரு பாறைகளுக்கு நடுவே குகை போன்ற ஒரு பகுதி. எட்டிப் பார்த்தான். ஒரே இருட்டு. அங்கிருந்து தான் ஓசை வருகிறது.

சிறிது நேரத்தில் அந்தக் குகைப் பகுதிக்குள் மெல்லிய வெளிச்சம் வந்தது. அருவி மெல்லக் கொட்டிக் கொண்டிருந்தது தெரிந்தது. அருவி நீரோடையாக மாறிக் குகைப்பகுதிப் பாறை இடுக்குகளின் வழியே பாய்ந்து எங்கோ சென்று மறைந்தது.

குமாரதேவனின் உடலில் புதுத் தெம்பு ஏற்பட்டது. ஒருவாய் தண்ணீர் குடித்தால்தான் களைப்பு நீங்கும் எனத் தோன்றியது. தண்ணீரில் சலசலப்புச் சப்தம் வந்த குகைப்பகுதிக்குள் மெல்ல நுழைந்தான். கொடிய வெப்பம் அந்தக் காலை வேளையிலும் வெளியே சூழ்ந்து நின்றாலும் அந்தக் குகைக்குள் குளிர்ச்சி நிறைந்திருந்தது. இயற்கையாகக் குடையப்பட்டிருந்த அந்தக் குகைக்குள் எங்கிருந்து தண்ணீர் வருகிறது என்பது தெரியாமல் சலசலவென நீர் கொட்டிக் கொண்டிருந்தது. குமாரதேவன் அருவியின் கீழே போய் நின்றான். அவன் தலையில் நீர் கொட்டியது; தோளில் கொட்டியது; முகத்தில் தெளித்தது. உடல் முழுமையும் குளிர்ந்த நீரின் அபிடேகம் அவனது சோர்வைப் போக்கியது. நேரம் போவதே தெரியாமல் குளித்துக் கொண்டிருந்த அவன் செவியில் யாரோ வெளியே உரத்த குரலில் பேசிக் கொண்டு வருவது கேட்டது.

குமாரதேவன் நீராடும் இடத்தைவிட்டு மெல்ல வெளியே வந்து இருளோடு இருளாக மறைந்து கொண்டான்.

காபாலிகர்கள் நான்குபேர் குகைக்குள் நுழைந்தனர். வெளியே கூச்சல் போட்டதுபோல் உள்ளே நுழைந்தவுடன் அமைதியடைந்தனர். அருவிக்கு அப்பால் சென்றனர். சிறிது நேரம் கழித்து திரும்பி வரும்போது அவர்கள் காபாலிகர்களாகத் தோற்றமளிக்கவில்லை.

தலையில் முண்டாசு அணிந்திருந்தார்கள். பெரிய மீசையும் தாடியுமாக அவர்கள் அயல்நாட்டவரைப்போல் காட்சியளித்தார்கள். காலில் அவர்கள் அணிந்திருந்த செருப்பு விசித்திர வேலைப்பாடுடன் கூடியதாக இருந்தது. குமாரதேவன் தன் விழிகளைக் கசக்கிக்கொண்டு பார்த்தான். அவர்களேதான்; சற்று முன்பு சென்ற அதே காபாலிகர்கள்தாம்.

அவர்கள் வெளியே சென்ற பிறகு குமாரதேவன் அருவி விழும் இடத்தைத் தாண்டிச் சென்றான். முதலில் ஒரே இருட்டாக இருந்தது. ஒன்றுமே புலப்படவில்லை. பிறகு மெல்ல அங்கிருப்பவை புலப்படத் தொடங்கின. எங்கிருந்தோ மெல்லிய ஒளி வந்து கொண்டிருந்தது. எங்கிருந்து வருகிறது என்பதை முதலில் கண்டுபிடிக்க முடியவில்லை. பிறகு அது மலை இடுக்குகளில் இயற்கையாக உள்ள பிளவுகள் எனத் தெரிந்தது.

அங்கே விதவிதமான பொருள்கள் இருந்தன. ஆடை அணிகள் ஒருபுறம் குவிந்திருந்தன. வேலும் வாளும் ஒருபுறம் இருந்தன. குமாரதேவன், பரபரப்புடன் சுற்று முற்றும் பார்த்தான். வேறு யாராவது வந்து விடுவார்களோ என்று. பிறகு அங்கிருந்து அருவியைத் தாண்டி வெளியே வந்தான்.

அவன் மன அரங்கில் சற்று முன்பு கண்டவை அனைத்தும் பதிந்துவிட்டன.



மிகவும் விரைந்து செயல்பட வேண்டும் என்று தோன்றியது. கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல் ஓடினான்.

பசி தெரியவில்லை.

உடல் சோர்வு தெரியவில்லை.

அவன் சென்ற சிறிது நேரம் கழித்து தேவசோமை அங்கே வந்தாள்.

குகை வாயிலில் உட்கார்ந்து கொண்டாள்.

ஏமாற்றமும் ஆத்திரமும் ஒன்றுகூடி அவளைக் களைப்படையச் செய்தன. குமாரதேவன் அவளிடமிருந்து தப்பி ஓடிய வருத்தம் அவள் உள்ளத்தில் பெரும் ஆத்திரத்தை உண்டாக்கியது.

பல்லைக் கடித்துக் கொண்டாள்.

பசியும் சோர்வும் அவள் கண்களைச் சுழற்றின. சிறிது கண்ணயர்ந்து விழித்துக்கொண்டபோது ஓவியர் குமாரதேவன் அங்கு விரைந்து வந்த கொண்டிருந்தான்.

மங்கலான தன் பார்வை நன்றாகத் தெரியச் சற்றுக் கண்களைத் துடைத்துக் கொண்டாள். இவன் யார்? குமாரதேவனைப் போலவே இருக்கின்றானே-

ஆனால் நடையில் சற்று மாறுதல். ஏதாவது மாய மந்திரமோ? அல்லது நம்மை ஏமாற்ற அவன் பூண்டிருக்கும் மாறுவேடமா? இவனை விட்டுவிடக்கூடாது-

அதையும் பரீட்சித்து விட முடிவு செய்து தேவசோமை "குமாரதேவா" என்று குரல் கொடுத்தாள்.

குமாரதேவன் திரும்பிப் பார்த்தான். காபாலிகையைக் கண்டவுடன் அவனுக்கு யோசனை ஒன்று தோன்றியது.

எப்படியாவது அந்தக் காபாலிகையிடம் பேச்சுக் கொடுத்து அவளை இள்வரசர் இருக்குமிடத்துக்கு அழைத்துச் சென்றுவிட எண்ணினான்.

குமாரதேவன் தேவசோமைக்கு அருகே வந்தான். தேவசோமை அவனைத் தலைமுதல் உள்ளங்கால்வரை ஆராய்ந்து பார்த்தாள்.

"யார் நீ" என்று சந்தேகத்துடன் கேட்டாள் தேவசோமை. "நான்தான்... குமாரதேவன்..." என்று மறுமொழி கூறினான் ஓவியன். அவனுக்கு விரைவாகச் செல்லவேண்டும் என்றும் தோன்றியது. அதே சமயத்தில் காபாலிகையிடம் பேச்சுக் கொடுக்க வேண்டும் என்றும் தோன்றியது.

"இல்லை... இல்லை... நீ பொய் சொல்கிறாய்... நீ குமாரதேவனில்லை" என்று கூறி அவனுடைய முகத்தையே உற்று நோக்கினாள். ஏதாவது சலனம் ஏற்படுகிறதா என்று பார்க்க. குமாரதேவன் முகத்தில் எந்தவித சலனமுமில்லை.

"நான் ஏன் பொய் சொல்ல வேண்டும்? என் பெயர் குமாரதேவன்" என்றான் குமாரதேவன் அழுத்தமாக.

தேவசோமை சிறிது நேரம் மௌனமாக இருந்தாள். பிறகு "எங்கிருந்து வருகிறாய்?" என்று கேட்டாள். அவனுடைய நளினமாக தோற்றத்தை மனத்துக்குள் அளவெடுத்துக் கொண்டு. பிறவியிலேயே கலைஞன் ஆதலால் பெண்மை அவனிடம் இலேசாகப் படர்ந்திருந்தது.

"உனக்கே தெரியுமே... நேற்று நீங்கள் பலி பீடத்தைச் சுற்றிக் கொம்மாளமிட்டீர்களே அங்கிருந்து" என்றான் குமாரதேவன்.

தேவசோமை திடுக்கிட்டாள். "என்ன... நேற்று உன்னைப்போல் ஒருவனை பலியிட என் கூட்டத்தார்கள் முடிவு செய்திருந்தனர். அவன் தப்பி ஓடிவிட்டான். தப்பி



வந்தவன் நீ தானா?" என்று கூறி அவனை ஒரு தடவைப் பார்த்தாள்.

"நான்தான் அவன். தப்பி ஓடிவில்லையே நான்! அங்கேயே மறைந்திருந்தேன்..." என்றான் ஓவியன் குமாரதேவன்.

தேவசோமை அப்படியே திக் பிரமை பிடித்தவள்போல் அவனைப் பார்த்தாள். அதிர்ச்சியும் சேர்ந்திருந்தது.

"என்ன பார்க்கிறாய்? எங்கே நீ போய்விட்டாய்? உன்னை அங்கே தேடுகிறார்கள்" என்றான் குமாரதேவன்.

"எங்கே தேடுகிறார்கள்?" என்று தேவசோமை கேட்டபோது அவளுக்குச் சற்றுப் பயமாகக்கூட இருந்தது. இதுவரை அவள் யாருக்கும் எதற்கும் பயப்பட்டதே கிடையாது. ஒரே முகத்தோற்றம், ஆனால் பேச்சில் செயலில் வித்தியாசம். நாம் ஏமாற்றுகிறோமா? அல்லது நம்மை ஏமாற்றுகிறார்களா?

"எங்கே தேடுகிறார்கள்? இதென்ன கேள்வி? இளைஞன் ஒருவனைப் பலி கொடுக்க நேற்றுப் பூசை போட்டீர்களே அந்த இடத்தில்" என்று குமாரதேவன் கூறினான்.

தேவசோமைக்கு புரிந்துவிட்டது, பலி கொடுக்கத் தேர்ந்தெடுத்த வாலிபன் வேறு, இவன் வேறு என்று. பிறகு ஒரே தோற்றத்துடனிருக்கும் இரட்டைப் பிறவிகளா? அந்த நாட்டிய மங்கையும் தவறாக நினைத்து விட்டாளோ? தேவசோமையால் ஊகிக்க முடியவில்லை.

"ஏன் தம்பி, நீ எங்கிருந்து வருகிறாய்? என்னைத் தேடுகிறார்கள் என்று எப்படித் தெரியும்? நான் இங்கே இருக்கிறேன் என்று எப்படித் தெரியும்?" என்று தேவசோமை கேட்டாள். அவள் உள்ளர்த்தத்துடன் கேட்கவில்லை. ஆனால் குமாரதேவன் திகைத்தான். என்ன மறுமொழி கூறுவது? பேச்சை மாற்ற விரும்பினான். சற்று மௌனமாக இருந்தான்.

தேவசோமை எழுந்தாள். "தம்பி, நீ என்ன சொல்கிறாய் என்றே புரியவில்லை" என்று கேட்டாள். குமாரதேவன் நேரிடையே மறுமொழி கூறாமல், "நான் ஓர் ஓவியன். சித்திரம் தீட்டுவதற்குப் பாறைகளைத் தேடி அலைகிறேன். அப்படி அலையும்போது உங்கள் கோஷ்டியினரைச் சந்தித்தேன். உன்னைத் தேடி அவர்கள் திசைக்கு ஒருவராகப் போயிருக்கிறார்கள்" என்றான் குமாரதேவன்.

"நல்ல வேடிக்கை, உன்னைப்போல ஒருவனைப் பலிகொடுக்க எங்கள் கோஷ்டியினர் முயன்றார்கள். எனக்குப் பிடிக்கவில்லை. நான் அங்கிருந்து ஓடி வந்துவிட்டேன்" என்றாள் தேவசோமை. பிறகு, "அதுசரி! நீ சித்திரம் வரைபவன் என்று சொல்கிறாயே! அஜந்தாவுக்குச் சென்றிருந்தாயா?" என்று கேட்டாள்.

"ஆமாம்" என்றான்.

"அங்கே ஒரு பெண்ணைச் சந்தித்தாயா?"

"ஆமாம்".

"அவள் பெயர் சந்திரமாலா இல்லையா?"

"ஆமாம்; உனக்கு எப்படித் தெரியும்?" குமாரதேவன் திடுக்கிட்டான்.

"நீ முதலில் சொல்லு; என்னைத் தேடுகிறார்கள் என்பது எப்படித் தெரியும் என்பதைச் சொல்லு!" என்று கூறிய தேவசோமையின் முகத்தில் வெற்றிப் பெருமிதம் துள்ளியது.

குமாரதேவனுக்கு ஆவல் துள்ளியது; சந்திரமாலாவை இவள் எப்படி அறிவாள் என்று அவன் ஆச்சரியப்பட்டான்.

"நீ முதலில் சொல்லு. சந்திரமாலாவை உனக்குத் தெரியுமா?" குமாரதேவன் ஆவலுடன் கேட்டான்.



"தெரியும், சற்று முன்புகூட பார்த்தேன்" என்று கூறிய தேவசோமை அவன் என்ன கூறப்போகிறான் என்பதை அறிய உதட்டை மடித்துக் கொண்டாள்.

"எங்கே பார்த்தாய்?"

"சிறிது தூரத்திற்கு அப்பால், மிகவும் களைத்துப் போய் இருந்தாள். உன்னைப் போன்ற ஒருவனிடம் பேசிக் கொண்டிருந்தாள்" என்றாள் தேவசோமை.

"எந்தப் பக்கம்?" என்று கேட்டான் குமாரதேவன்.

"எந்தப் பக்கம் என்பதைச் சொல்கிறேன். முதலில் நீ சொல்லு, உனக்குச் சகோதரன் ஒருவன் இருக்கிறானா?"

"ஆம்; இருக்கிறான். நாங்கள் இருவரும் இரட்டைப் பிறவிகள்" குமாரதேவன் கூறியதைக் கேட்ட தேவசோமை சற்று யோசித்தாள். இவனைப் பலி கொடுத்துவிட்டால் என்ன என்று அவளுக்குத் தோன்றிவிட்டது. குமாரதேவனுக்கோ சந்திரமாலாவைச் சந்திக்க வேண்டும் என்ற ஆவல். "சந்திரமாலா எங்கே இருக்கிறாள்?" என்று மறுபடியும் கேட்டான்.

அவன் கேட்டதற்கு மறுமொழி கூறாமல், "என்னைத் தேடுகிறார்கள் என்று சொன்னாயே, அங்கே யார் யார் இருக்கிறார்கள், அவர்களிடம் போகலாமா?" என்று தேவசோமை கேட்டாள். மெல்ல அவனை அழைத்துச் சென்று பலியிட ஏற்பாடு செய்துவிடலாம் என்பது அவள் திட்டம். குமாரதேவன் சரி என்று சொன்னான். மெல்ல அவளை இளவரசர் இருக்குமிடத்திற்கு அழைத்துச் சென்றால் நரபலியிடும் காபாலிகர்கள் கோஷ்டியினரை எளிதில் கண்டுபிடித்து விடலாம் என்று எண்ணினான்.

ஒருவரை மற்றவர் வெல்ல நினைத்தனர். குமாரதேவனும் தேவசோமையும் விரைவாக நடந்தனர்.

# அத்தியாயம் - 5

# மதுவும் மங்கையும்

**கா**பாலிகை தேவசோமை குமாரதேவனைப் பின் தொடர்ந்து ஓடியதைக் கண்ட சந்திரமாலா செய்வதறியாது திகைத்து நின்றாள். அவள் மனத்தில் பயம் தோன்றிவிட்டது. கடல்மல்லைக்கு அடுத்த கிராமத்தில் தானும், முத்தம்மாவும் அமைதியாக வாழ்ந்து கொண்டிருந்ததை ஒருமுறை நினைத்துக் கொண்டாள். எதற்காக அந்தக் கிராமத்தைவிட்டு வரவேண்டும்? மூதாட்டி முத்தம்மாளைத் தனியே விட்டுவிட்டுத் துணிவுடன் வருவதற்கு அவளிடம் அந்தச் சக்தியை வளர்த்தது யார்? அவள் ஒரு கணம் சிந்தித்தாள். அந்த இரவு நிகழ்ச்சி அவள் மனக் கண்முன் நிழலாடியது. தன்னை மிருக வெறியுடன் துரத்திவந்த பிட்சுவிடமிருந்து காப்பாற்றிய குமாரதேவனை நினைத்துக் கொண்டாள். இரவு நேரத்தில் அவனை அப்பொழுது அடையாளம் தெரியவில்லை. அவனது காயத்திற்கு மருந்திட்டுக் கட்டும்போதும் அவள் மனத்தில் இலேசான நினைவுகள் எழுந்தன. ஆனால், தன்னைக் காப்பாற்றிய குமாரதேவனைக் காபாலிகர்கள் பலியிடக் கவர்ந்து சென்றுவிட்டனர் என்பதை அறிந்து அவனைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் தனக்கு எப்படி ஏற்பட்டது என்பதை ஒரு கணம் எண்ணிப் பார்த்தாள். அவள் உடல் சிலிர்த்தது. அஜந்தாக் காடுகளில் சந்தித்து மனத்தைப் பறிகொடுத்த ஓவியரும், இந்த வீரரும் ஒருவரா வெவ்வேறானவரா என்பதை இனம் புரிந்து கொள்ள அவளால் முடியவில்லை. பசியும், சோர்வும் அவள் கண் எதிரே இருளைத் தோற்றுவித்தன. அவள் எதிரேயுள்ள யாவும் சுழல்வது போல் தோன்றின. மறுகணம் மயக்கமுற்று வீழ்ந்தாள்.



அவள் கண் விழித்தபோது வானில் பால் நிலவு கொட்டிக் கிடந்தது. பகலில் இருந்த வெயிலின் கொடுமைக்கு நேர்மாறாகக் குளுமை நிறைந்திருந்தது. சிலுசிலுவென்ற காற்று வீசியது. பலவிதக் குரல்களில் செவிப்பறையைக் கிழிக்கும் வகையில் பாடும் குரல் கேட்டது.

பிணங்களிடும் காடுதனில் நடமாடும் எம்பிரானை
வணங்கிடுவோம்! வாழ்த்திடுவோம்! கூத்தாடிடுவோம்!

நிணம் படைப்போம் மது ரசம் படைப்போம்
நர்த்தனமாடுவோம் ததோம்! ததோம்! ததோம்!

என்று காபாலிகன் ஒருவன் சற்று உரத்த குரலில் பாடிக் கூத்தாடினான்.

எல்லோரும் எழுந்து ஆட ஆரம்பித்தார்கள்.

சந்திரமாலாவுக்கு மயக்கம் முழுமையும் தெளிந்துவிட்டது.

"பெண்ணே, கண் விழித்தாயா?" என்ற குரல் அவளருகேயிருந்து கேட்டது. பரபரப்புடன் எழுந்து உட்கார்ந்தாள். கச்சின் மீது அணியும் மேல் துகிலைக் காணவில்லை. வெட்கம் அவளை வேதனைப்படுத்தியது. இரு கைகளாலும் மேனியைத் தழுவி மறைத்துக் கொண்டாள். அவள் விழிகளில் பயம் பொங்கியது. தான் இருக்கும் சூழ்நிலையை உணர்ந்தாள். ஆனால் வெளியே புலப்படுத்திக் கொள்ளாமல், "நீங்கள யார்... நான் எங்கே இருக்கிறேன்...?" என்று மெல்லக் கேட்டாள்.

காபாலிகன் பரிவுடன் அவளை நோக்கி அவள் கரத்தை மெல்ல தடவ எத்தனித்தான்.

"சீ, தொடாதே... நான் கேட்டதற்கு மறுமொழி கூறு" என்று சீறினாள். சோர்வுற்ற நிலையிலும் பெண்மை சீறியது. அந்தக் காபாலிகன் சிரித்தான். அவன் சிரிப்பொலி கேட்டு

கூத்தாடிக் கொண்டிருந்த காபாலிகர்கள் ஆட்டத்தை நிறுத்திவிட்டு அவனருகே வந்தனர்.

சற்று வயதானவன் கூட்டத்தை விலக்கிக் கொண்டு வந்தான்.

''ஏ முட்டாள்களே! அவள் கண் விழித்தவுடன் பழரசமும், உணவும் கொடுக்குமாறு சொன்னேனே, அவளது அங்கத்தை வர்ணிக்கிறீர்களா?'' என்று கர்ஜித்தான். சிரிப்பொலி அடங்கியது. இருவர் பரபரப்புடன் ஓடினர். கிண்ணத்தில் பழரசமும், தட்டில் உணவும் வந்தன. சந்திரமாலா வெறுக்கவில்லை. தடுக்கவில்லை, பழரசம் பருகினாள். போய்க்கொண்டிருந்த உயிர் மெல்லக் கூட்டிற்குள் நுழைவதுபோன்ற உணர்ச்சி. சுற்றிலும் இருந்தவர்களை ஒருமுறை சுழலும் விழியால் பார்த்தாள். தட்டிலிருந்த சோற்றை ஒரே மூச்சில் தின்று தீர்த்தாள். உடலில் புது ஜீவன் புகுந்தது.

''உம்... எல்லோரும் விலகுங்கள். தீயை மூட்டுங்கள்'' என்று அந்த முதிய காபாலிகன் மீண்டும் முழங்கினான். சேனைத் தலைவனுக்குக் கட்டுப்படும் வீரர்கள்போல் அனைவரும் விலகி நின்றனர். காபாலிகன் ஒருவன் முதியவரின் காதில் ஏதோ சொன்னான். அவர் திகைப்படைந்தவர்போல் அவனை நோக்கி, ''அப்படியா?'' என்றார். தனக்குத் தெரியாத ஒன்றை அவன் கூறிவிட்டது தெரிந்தது அவர் குரலில்.

''ஆமாம், குருதேவா'' என்று வாயைப் பொத்திக் கொண்டு சொன்னான் இளம் காபாலிகன்! அவனுக்கு சந்திரமாலாவின் மீது ஒரு கண். அவளது மென்மையான உடலை ஒரு தடவையாவது ஸ்பரிசிக்க வேண்டும் என்ற ஆவல்.

குருதேவர் சற்று யோசித்தார். சந்திரமாலாவை நோக்கி, "ஏய்! நீ யார்?" என்று கேட்டார்.



''பார்த்தால் தெரியவில்லையா? நான் ஒரு பெண்'' என்று குறும்புத் தனமாகப் பேசினாள் சந்திரமாலா.

காபாலிகர்கள் சிரித்தனர்.

சிரித்தவர்களை விழுங்கிவடுபவர்போல் பார்த்த குருதேவர், சந்திரமாலாவை நோக்கி, "அது தெரிகிறது. நீ ஒரு பெண் என்று. உன் அங்க அடையாளங்களைப் பார்த்தால் தெரிகிறது. உன் பெயர் என்ன?" என்று கேட்டார்.

''என்னைப் பெண் என்று புரிந்து கொண்டதற்கு மகிழ்ச்சி. ஆண், பெண் என்று வித்தியாசம் தெரியாதவர்கள் காபாலிகர்கள் என்று நாட்டில் சொல்வார்கள். நான் நம்பவில்லை. ஆனால் காணது கண்டவர்கள்போல் என்னை உங்கள் சீடர்கள் பார்த்ததிலிருந்து பெண்ணையே பார்த்திராதவர்களோ என்று எண்ணிவிட்டேன். நீங்கள் பெண்களைப் பார்க்காதவர்களும் இல்லையே. உங்கள் கோஷ்டியில் அழகான பெண் ஒருத்தி இருந்தாளே..'' என்று கூறி நிறுத்தினாள்.

குருதேவர் திடுக்கிட்டார். அதை வெளியே புலப்படுத்த விரும்பாமல் ''ஏ, சத்தியசோமா'' என்று கூவினார். சத்யசோமன் வந்து நின்றான்.

''சத்யசோமா, உன் மனைவியை இவளுக்குத் தெரிந்திருக்கிறதே'' என்று வியப்புடன் கேட்டார். சத்யசோமன் சந்திரமாலா அருகே வந்து அவளை உற்றுப் பார்த்து "இவளா! இவள் ஒரு நாட்டியக்காரி" என்றான்.

"உனக்குத் தெரியுமா?" என்று குருதேவர் கேட்டார்.

"இவளைத் துரத்திக் கொண்டு அந்த மொட்டைத் தலையன் ஓடிவந்தான். இவளைக் காப்பாற்ற வந்த இளைஞனைத்தான் நாங்கள் பலியிடத் தூக்கி வந்தோம்".. என்று சத்தியசோமன் கூறவும் குருதேவர் கோபம் நிறைந்த குரலில், ''ஆமாம் தூக்கி வந்தீர்கள்! தப்பி ஓட

விட்டுவிட்டீர்கள். அந்த வாலிபன் தப்பி ஓடுவதற்கு உன் மனைவி தேவசோமைதான் காரணம். அவளுக்கு அவன் மீது ஆசை வந்துவிட்டது. அதுபோல் ஆசை ஏற்பட நீதான் காரணம். அந்த வாலிபன் இன்னும் இரண்டு நாள்களுக்குள் இங்கு வந்தாக வேண்டும். கபாலீச்வரருக்குப் பலி கொடுத்தாக வேண்டும். அப்போதுதான் நாட்டுப் பஞ்சம் நீங்கும். மழை பெய்யும். இல்லாவிடில் ஊர் பற்றி எரியும்; பூமி வெடிக்கும், ஹஹ்ஹா..." என்று பயங்கரமாக நகைத்தார்.

கூடியிருந்தவர்கள் நடு நடுங்கினர். குருதேவரின் குரல் சந்திரமாலாவுக்கும் நடுக்கத்தை ஏற்படுத்தியது.

"ஏ, நாட்டியப் பெண்ணே! நீ எங்கே வந்தாய்? மலைப் பாதையில் மயங்கிக் கிடக்கக் காரணம் என்ன?" என்று கேட்டார்.

சந்திரமாலா உடனே மறுமொழி கூறவில்லை. சற்று யோசித்தாள். கோபமாகப் பேசுவதா, சாந்தமாகப் பேசுவதா என்று சிந்தித்தாள்.

"ஏன் மௌனம்... தேவசோமையை நீ எங்காவது பார்த்தாயா?" என்று மீண்டும் குருதேவர் கேட்டார்.

"யாரது தேவசோமை?" என்று சந்திரமாலா ஏதும் தெரியாதவள் போல் கேட்டாள். குருதேவர் நகைத்தார்.

"கெட்டிக்காரப் பெண். சற்று முன்பு கூறினாய்... எங்கள் கோஷ்டியிலுள்ள ஒரு பெண்ணைத் தெரியுமென்று" குருதேவர் அவளது முகத்தை உற்று நோக்கினார்.

"அவள் பெயர் தேவசோமை என்று யாருக்குத் தெரியும்?" உதட்டை மடித்தாள் சந்திரமாலா.

குருதேவர் சிறிது நேரம் மௌனமாக இருந்தார். அவர் உதடுகள் ஏதோ முணுமுணுத்தன. அவர் உடல் ஆடியது, அவர் நெற்றி சுருங்கியது. அவர் தனது வலது கரத்தை உயர்த்தி, 'ஏ பெண்ணே, நீ பொய் சொல்கிறாய்... உனக்கு



தேவசோமையின் இருப்பிடம் தெரியும். நீ மறைக்கிறாய் என்னிடம் மறைக்க முடியாது! மறைத்தால் தொல்லைகள் உனக்கும் வரும்'' என்று அழுத்தந் திருத்தமாகச் சாபமிடுபவர்போல் கூறினார்.

சந்திரமாலா பயப்படவில்லை. ஆனால் அஞ்சுவதுபோல நடித்தாள். "குருதேவா! என்னைச் சபித்து விடாதீர்கள்'' என்று தேம்பி அழுவதுபோல பாவனை செய்தாள்.

குருதேவர் முகத்தில் ஒளி ஏற்பட்டது. "உம்... உண்மையைச் சொல். தேவசோமையை நீ பார்த்தாயா?" கேட்டார்.

"ஆம், பார்த்தேன்!" என்று பயந்து கூறுபவள்போல் பேசினாள்.

"எங்கே பார்த்தாய்?"

"நான் மயங்கி விழுந்த இடத்தில். எங்கே மயக்கமாக விழுந்தேன்; இப்போது எங்கே இருக்கிறேன் என்று எனக்குத் தெரியவில்லை" என்று நடுங்கியவாறு சந்திரமாலா கூறினாள்.

"பயப்படாதே பெண்ணே! உனக்கு ஒன்றும் நேராது. நீ எங்களுக்குள் ஒருத்தியாகிவிட்டாய். நீ அனாதை. கடல் மல்லைக்குச் சென்று என்ன செய்யப் போகிறாய்? உனது நாட்டியத் திறமை பிரகாசிக்க நான் உதவுகிறேன். நீ எங்களுடன் இருந்துவிடு..." என்றார் குருதேவர்.

"உங்களுடனா...? உங்களுடன் இருந்து என்ன செய்வது?"

"காபாலிகையாகிவிடு... உனக்கு நடனமாடத் தெரிகிறது. பரமேச்வரன் நடனமாடுவார்... அவரது இடது பாகத்து சக்தியும் நாட்டியமாடுவாள்..."

"எந்த பரமேச்வரன்... நமது சக்கரவர்த்தியைச் சொல்கிறீர்களா?" என்று சந்திரமாலா கேட்கவும் அனைவரும் சிரித்துவிட்டனர்.

"பாவம் சக்கரவர்த்தி! படுத்த படுக்கையாகக் கிடக்கிறார். அவருக்குக் காபாலிகர்கள் என்றால் பிடிக்கும்.. அவரது அருமைப் புதல்வன் இளவரசன் நரசிம்மன் எப்படி இருக்கப் போகிறானோ... அது கிடக்கட்டும் நீ நன்றாக நடனமாடுவாயா?" என்று குருதேவர் கேட்டார். குரலில் குழைவு இருந்தது.

"ஏதோ ஆடுவேன்..." என்று சொல்லும்போது காபாலிகன் ஒருவன் குறுக்கிட்டு, "அவளது நடனத்தையும், அவள் நடிக்கும் மத்த விலாசநாடகத்தையும் பார்த்துப் பாராட்டாதவர்களே இல்லை" என்றான்.

"மத்த விலாசமா?.. மகேந்திரவர்மர் எழுதிய அந்தக் கோமாளிக் கூத்தைச் சொல்கிறாயா? சிவபெருமானைப் போற்றிப் புகழும் அந்த நாடகத்தில் எங்களைக் கேலி செய்திருக்கிறார், அந்தப் பைத்தியக்கார சக்கரவர்த்தி. மத்த விலாசம் நாடகம் தெரியுமென்றால் காபாலிகர்களது பழக்க வழக்கங்களும் உனக்குத் தெரிந்திருக்குமே" என்று கேட்டார் குருதேவர்.

"ஓ தெரியுமே.. மண்டை ஓட்டில் மதுவைச் சுவைத்துக் குடிப்பேன்.." என்று சந்திரமாலா கூறியவுடன், 'ஹா ஹ் ஹா ஹ ஹா' என்ற ஒலி அனைவரிடமிருந்தும் எழுந்தது.

குருதேவர் பரபரப்புடன், "ஏ சந்திரசூடா, காபாலி, பிஞ்சகா கொண்டு வாருங்கள் மதுக் குடத்தை. சந்திரமாலாவிடம் கிண்ணத்தைக் கொடுங்கள். மதுவைக் கொண்டு வாருங்கள். நீங்களும் குடியுங்கள்... குடியுங்கள். வானத்திலே வட்டமதி காய்கிறான். நிலவை வீணடிக்காதீர்கள். சந்திரமாலா ஆடுவாள். நீங்களும் பாடுங்கள். இந்த பிரபஞ்சமெனும் சுடுகாட்டில் நர்த்தனமாடும் ஈசன் திரிசூலமும், மண்டை ஓடும் கொண்டு தாண்டவமாடும் போது நமது நடனத்தையும் கண்டு களிப்பான். சந்திரமாலா உனக்கு வேண்டிய மட்டும் மதுவை ஊற்றுகிறேன். குடி, குடி... நர்த்தனமாடு.. தாம்.. தாம் தாதும் தா.. என் ஆடு... உன் ஆட்டத்துக்கு கைகொடுக்க இளம்



காபாலிகன் யாராவது வருவான்.." என்று குதூகலத்துடன் கூறினார்.

மதுக்கிண்ணம் நிறைந்தது. தீ செந்நாக்கிட்டு எரிந்து கொண்டிருந்தது. மத்தளம் முழங்கியது. சல்லிகை முழங்கியது. உடுக்கை ஒலித்தது.

ததும்... ததும்...

ஜல்... ஜல்...

சந்திரமாலா மெல்ல எழுந்தாள். அவளது ஒயிலான இடை அசைந்தது. வாழைத் தண்டைப் போன்ற தொடையும் முழங்காலும் நெளிந்தன. மார்பகம் துள்ளியது. மூங்கில் தோளும் கரங்களும் வளைந்தன. துள்ளலும், சுழற்சியும் கூடியிருந்த காபாலிகர்களை மெய்மறக்கச் செய்தன.

கிண்ணங்களில் மது வழிந்தது. சத்தியசோமன் சந்திரமாலாவையே உற்று நோக்கிக் கொண்டிருந்தான். சிறுஇடை துவள்வதையும், செங்கமலக் கொங்கை சிலிர்ப்பதையும் வெண்பவள அதரங்கள் துடிப்பதையும், கயல்மீன் விழிகள் சுழல்வதையும் பார்க்கும்போது சந்திரமாலா நாட்டியமாடுவதாகவே அவனுக்குத் தோன்றவில்லை. சந்திரமாலா தேவசோமை ஆனாள்.

சத்தியசோமன் துள்ளி எழுந்தான். மதுவின் மயக்கத்தால் அவன் கால்கள் தள்ளாட சந்திரமாலாவைத் தாவிப் பிடித்தான்.

சுற்றிலுமிருந்த காபாலிகர்கள் 'ஹோ ஹோ' என்று கைதட்டிக் குதூகலத்துடன் கோஷமிட்டனர்.

சந்திரமாலாவின் உடலில் பயத்தால் நடுக்கம் ஏற்பட்டது. அவள் நடுக்கமுற்றாலும் தன் திறமையெல்லாம் செலுத்தி ஆடிக்கொண்டிருந்தாள். சத்யசோமனால் அவளுடைய ஆட்டத்துக்கு ஈடுகொடுத்து ஆட முடியவில்லை. மதுவெறி உச்சிக்கு ஏறியது. தள்ளாடினான். கீழே வீழ்ந்தான். மது உண்ட அனைவரும் ஒவ்வொருவராகச்

சாய்ந்தனர். குருதேவர் நன்றாகக் குறட்டைவிட்டார். வாத்ய முழக்கங்கள் ஓய்ந்தன. அனைவரும் இருந்த இடத்திலேயே வீழ்ந்து கிடந்தனர்.

சந்திரமாலா ஒவ்வொருவர் அருகிலும் சென்று பார்த்தாள். தங்கள் நினைவே இல்லாமல் கிடந்தனர். அருகே இருந்த சூலாயுதத்தை எடுத்துக்கொண்டு சந்திரமாலா அங்கிருந்து ஓடினாள். அவள் உடலில் புத்துணர்ச்சி பரவியது. கையிலே ஆயுதம். உள்ளத்தில் தைரியம். சந்திரமாலா அங்கிருந்து தப்பி ஓடிய சிறிது நேரம் கழித்து தேவசோமை அங்கே வந்தாள். அவள் தோளில் ஓவியன் குமாரதேவன் மயங்கிய நிலையில் கிடந்தான்.

## அத்தியாயம் - 6

# குருதேவர் திட்டம்

மதுவின் மயக்கத்தில் அனைவரும் கிறங்கிச் சாய்ந்திருந்த வேளையில் சந்திரமாலா காபாலிகர்கள் கும்பலிலிருந்து தப்பி ஓடினாள். அவள் வெளியேறுவதற்கும் தேவசோமை ஓவியன் குமாரதேவனைச் சுமந்து வருவதற்கும் சரியாக இருந்தது. வெவ்வேறு திக்கில் சென்றதால் இருவரும் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்ளவில்லை.

ஓவியனைக் கீழே மெல்லக் கிடத்திய தேவசோமை அங்கிருப்பவர்கள் மயங்கிய நிலையில் கிடப்பதைக் கண்டவுடன் மிகவும் கோபங் கொண்டாள். சத்தியசோமனும் குப்புறக் கிடந்தான்.

"ஏ..." என்று கூவினாள் தேவசோமை. தீவர்த்தி அணைந்து கிடந்தது. வானத்து மதியின் ஒளியில்



அலங்கோலமாகக் கிடப்பவர்கள் பாறை கிடப்பதைப்போல் காட்சியளித்தனர். தனது காலால் சிலரை மெல்ல இடறினாள். கிண்ணத்தில் மீதியிருந்த மதுவைச் சிலரது முகத்தில் ஊற்றினாள். அந்த ஜன்மங்கள் உதடுகளில் வழிந்த மதுவை நாவை நீட்டி ரசித்தனவேயொழிய கண்விழிக்க முற்படவில்லை.

குருதேவரின் அருகே சென்று பார்த்தாள். அவரும் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தார். தேவசோமைக்குக் கோபம் தலைக்கு மேல் ஏறியது. அருகேயிருந்த பாறையின் மீது உட்கார்ந்துகொண்டு ஏதோ சிந்தனை செய்தாள். அவள் நினைத்தபடி ஏதும் நடக்காததால் வெறுப்புணர்ச்சி உடலில் பரவியது. பசி வேறு வயிற்றைக் கிள்ளியது. ஏதாவது தின்பதற்கு இருக்கிறதா என்று எழுந்துச் சுற்று முற்றும் பார்த்தாள். ஓர் பானையில் இறைச்சி இருந்தது. வாழைப் பழமும், பலாப் பழமும், ஓர் வாழை இலையில் சுருட்டி வைக்கப்பட்டிருந்தன. ஒரே மூச்சில் எல்லாவற்றையும் தின்று தீர்த்த அவளுக்கு மயங்கிய நிலையில் இருந்த ஓவியனின் நினைவு வந்தது. அவனது தலையில் மரக்கட்டையால் அடித்து நினைவிழக்கச் செய்ததையும் பிறகு தூக்கிக்கொண்டு வந்ததையும் நினைத்துப் பார்த்தபோது அவளுக்குச் சிரிப்புத்தான் வந்தது. ஒரே உருவ ஒற்றுமையுடைய இரண்டு பேர் இருக்கிறார்கள். இவர்களை வைத்துக்கொண்டு நாம் பலவித காரியங்களைச் சாதித்துக் கொள்ள வேண்டும் என்ற முடிவு செய்தாள். குமாரதேவனை அடைய முடியவில்லையே என்ற கவலையும் அவளை வாட்டியது என்றாலும் இந்த ஓவியனும் அழகாகத்தானிருக்கிறான். இவனைக் கொண்டு தனது ஆசையை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்று மனத்தைச் சமாதானப்படுத்திக் கொண்டாள். அதனால் ஓவியன் குமாரதேவனைத் தூக்க முடியாமல் தூக்கி வந்து கொண்டிருந்தபோது தனது கூட்டத்தார் அங்கே இருக்கிறார்கள் என்பதை அறிந்தாள். அவளுக்குச் சற்று தெம்பாகவும் இருந்தது. அனைவரும் உறங்கிக் கொண்டிருக்கிறார்களே - மிதமிஞ்சிய மது மயக்கமோ?

மீண்டும் குரல் கொடுத்துப் பார்த்தாள். ஒருவரும் எழுந்திருக்கவில்லை. அனைவரும் கூடிக் கூத்தாடியிருந்தால்தான் இத்தகைய அசாதாரண உறக்கம் ஏற்பட்டிருக்கும். இவர்களுடன் நடனமிட யாராவது ஒரு பெண் வந்திருக்க வேண்டும். தன்னைத் தவிர வேறு பெண்ணா? தேவசோமை யோசித்தாள்.

கீழே மலர்கள் சிந்தியிருந்தன. தேவசோமை கீழே குனிந்து மோப்பமிடுபவள் போல் பார்த்தாள். ஆம்; யாரோ ஒரு பெண் அங்கு வந்த மணம்...! தேவசோமை சுற்றி வந்தாள். சத்யசோமன் கீழே வீழ்ந்து கிடக்குமிடத்தில் வர்ண ஆடையின் கிழிந்த ஒரு சிறு துண்டு கிடந்தது. புரிந்து விட்டது அவளுக்கு.

தேவசோமைக்குக் கோபம் பொங்கியது. அப்படியே அங்கு இருப்பவர்களைச் சூலாயுதத்தால் தாக்கிவிட வேண்டும் என்ற கோபம் ஏற்பட்டது. உறங்கும்போது அவர்களை ஏதும் செய்யக்கூடாது. விழித்தெழுந்த பிறகு அனைவரையும் வேதனையால் துடிதுடிக்க வைக்க வேண்டுமென்று முடிவு செய்தாள். ஓவியன் குமாரதேவன் விழித்து எழுந்து தப்பி ஓடிவிடப் போகிறான் என்பதற்காக உறங்காமல் அவனருகேயே அமர்ந்திருந்தாள்.

மெல்ல மெல்ல ஒளிக்கற்றைகள் கீழ்வானினின்று பாய ஆரம்பித்தன. குமாரதேவன் கண் திறந்தான், உடல் மீது ஏதோ பாறையை ஏற்றி இருப்பது போன்ற உணர்ச்சி. எங்கிருக்கிறோம் என்றே அவனுக்குத் தெரியவில்லை. அருகே தன்னையே நோக்கியவாறு காபாலிகை அமர்ந்திருப்பதைக் கண்டான்.

நேற்று அவளைப் பகல் வேளையில் கண்ட நினைவு ஏற்பட்ட பிறகு என்ன ஏற்பட்டது தனக்கு?

"உறக்கம் கலைந்ததா?" என்று கேட்டாள் தேவசோமை. குமாரதேவன் எழுந்து உட்கார்ந்து கொண்டான்.



32953
5008179

"நான் எங்கிருக்கிறேன்? நீ யார்?" என்று பரபரப்புடன் கேட்டான். "நீங்கள் நல்லதொரு இடத்தில் இருக்கிறீர்கள்" என்று கூறிச் சிரித்தாள் தேவசோமை.

"நல்லதொரு இடமென்றால்?" என்று எரிச்சலுடன் கேட்டான் குமாரதேவன். அவனுக்குப் பசி.

"காபாலிகர்களின் நடுவே இருக்கிறீர்கள்..." என்று நகைத்தாள். காவி படிந்த பற்களாயினும் அந்தப் பற்களில் கவர்ச்சியிருப்பதைக் கவனித்தான் ஓவியன். தன்னையே இமைக்காமல் அவன் நோக்குவதில் ஒரு மகிழ்ச்சி அவளுக்கு. சற்று அவனருகே நெருங்கினாள்.

காலை இளம்போதில் தன்னருகேயுள்ள காபாலிகையைக் குமாரதேவன் ரசித்தான். அங்கம் அங்கமாக அவன் மனத்தில் ஓவியமாக எழுந்தது.

"உன் பெயரைச் சொல்லவில்லையே" என்று கேட்டான் குமாரதேவன்.

"பெயரைச் சொல்வதில் என்ன பெருமை? நான் ஒரு காபாலிகை..." என்று சோம்பல் முறித்தாள் தேவசோமை. அந்த நிலையின் அழகு அவனைச் சிலிர்க்கச் செய்தது. ஓவியச் சிந்தனை கிளர்ந்தது. கைகள் துடித்தன.

"அது தெரிந்துவிட்டது. நேற்றே உன்னைப் பார்த்தேன். பிறகு என்ன நேர்ந்தது என்ற நினைவு எனக்கு வரவில்லை. இப்போது எங்கே இருக்கிறேன். எப்படி வந்தேன்?" என்று வியப்புடன் கேட்டான் குமாரதேவன்.

"நான் தூக்கிக் கொண்டு வந்தேன்..." என்று சொல்லிச் சிரித்தாள் காபாலிகை. குமாரதேவன் திடுக்கிட்டான். நம்பவும் முடியவில்லை, நம்பாமல் இருக்கவும் முடியவில்லை.

"நீங்கள் மயங்கி விழுந்து விட்டீர்கள். நான் தூக்கிக் கொண்டு வந்தேன்" என்றாள் தேவசோமை மீண்டும் அவன் மீது மெல்ல சாய்ந்து.

"நன்றி. இங்கே இவர்கள் என்ன செய்கிறார்கள்?" என்று கேட்டான் குமாரதேவன், சற்று நகர்ந்தவாறு.

காபாலிகை சிரித்தாள். என்ன செய்கிறார்களா? காபாலிகர்கள் என்ன செய்வார்கள்? அவர்கள் பலியிட உங்களைப்போல் ஒருவனைக் கொண்டு வந்தார்கள். உங்களைப் போல் என்ன, அப்படியே துளிக்கூட வித்தியாசமில்லாத தோற்றம். அவன் தப்பி விட்டான். நீங்கள் கிடைத்தீர்கள்..." என்றாள்.

"என்னைப் பலியிடப் போகிறீர்களா?" என்று குமாரதேவன் கேட்டு நகைத்தான். உள்ளூரப் பயமிருந்தாலும் வெளிக்குப் புலப்படுத்தவில்லை.

தேவசோமை ஒரு கணம் ஏதும் மறுமொழி கூறவில்லை. அவனைப் பலியிடத்தான் அழைத்து வந்தாள். அந்த எண்ணத்தைக் கொஞ்சங் கொஞ்சமாக மாற்றிக் கொண்டு வருகிறாள். அந்த எண்ணத்தை உறுதிப்படுத்த மெல்ல நகைத்தாள். உதடுகள் விரியா ஒரு நிலை.

"பலியிடவா என்னைச் சுமந்து வந்தாய்?" மீண்டும் கேட்டான் குமாரவேன். "என்னைப் பலியிடுவதால் இந்த நாட்டின் ஓர் ஓவியனை இழக்கிறீர்கள்" என்றான்.

தேவசோமை நிமிர்ந்து உட்கார்ந்தாள்! "ஓவியன்... ஓவியன்" அவள் உதடுகள் முணுமுணுத்தன. அவள் ஒரு முடிவுக்கு வந்துவிட்டாள். ஒரே தோற்றமுள்ள இருவரும் சகோதரர்கள். ஒருவன் வீரன். இவன் ஓவியன். வீரனைப் பலியிடத் துணிந்தோம். அவன் தப்பிவிட்டான். இவன் சிக்கிக் கொண்டான்! இவனைப் பலியிடக் கூடாது; தன்னுடன் பிணைத்துக் கொள்ள வேண்டும்.

"நீங்கள் சித்திரக்காரரா? நன்றாக சித்திரம் வரைவீர்களா?" என்று கேட்கும்போது பெண்மைக் குரலில் நாணம் கொப்பளித்தது!



"சித்திரத்தால் பல்லவ நாட்டின் பெருமையை உயர்த்தவே காடுமலை பாராமல் சுற்றினேன். அஜந்தாக் காடுகளுக்குச் சென்று ஓவியம் கற்க முயன்றேன். நானும் இளவரசரும் சாளுக்கிய நாட்டிற்கு இணையாகப் பல்லவ நாட்டைக் கலைத்துறையில் மேன்மையடையச் செய்ய நினைக்கிறோம்" என்றான் குமாரதேவன். குரலில் பெருமை இருந்தது.

தேவசோமை சுறுசுறுப்படைந்தாள். "இந்த ஓவியன் இளவரசரின் நண்பனா? சற்று ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்; அதே சமயம் இவனிடமிருந்து பலவற்றை அறியவும் முற்படவேண்டும்" என்று எண்ணமிட்டாள்.

"இளவரசரை விட்டு விட்டு இந்த மலைப் பகுதிக்கு எங்கே வந்தீர்கள்?" என்று கேட்கும்போது அவள் கேள்வியில் பல விடைகளுக்கான கேள்விகள் இருந்தன.

"நாங்கள் சிற்பியைச் சந்திக்க வந்தோம். அங்கு ஒரு செய்தியை அறிந்தோம். நர பலியிட ஓர் இளைஞனைக் காபாலிகர்கள் அழைத்துச் செல்வதாக. அவனை மீட்பதற்காக அந்த இடத்தைத் தேடிச் சென்றோம். நாங்கள் போனபோது அங்கே யாருமில்லை" என்றான் ஓவியன்.

"அந்த இளைஞன் தப்பி ஓடிவிட்டான். ஒரே சாயல் நீங்களும் அவனும் ஒரே அமைப்பு... சரி, என்னைப்போல் சித்திரம் வரைவீர்களா?" என்று கேட்டாள் தேவசோமை.

"ஆகா! ஓவியத்துக்கு ஏற்றவர்களே பெண்கள்தாம். அஜந்தாக் குகைகளில் எழில் மிகுந்த மங்கையர்களின் வடிவங்களைக் கண்டேன். அங்கேயும் ஓர் இளமங்கை. நாட்டிய மங்கை ஓவியமே உயிர் பெற்றதுபோல் அவளது வனப்பு என்னைக் கவர்ந்தது. அவளைச் சித்திரமாக வரையத் துடிக்கிறேன்..." என்று கூறும்போது அவன் கண்களை மூடிக்கொண்டு ரசிக்கத் தொடங்கிவிட்டான்.

'ஓகோ! அந்த அஜந்தா மங்கையின் நினைவு வந்துவிட்டதோ? என்னை மறந்துவிட்டீர்கள் போலிருக்கிறது" என்று தேவசோமை சிரித்தபடி கேட்டாள்.

குமாரதேவன் உடல் சிலிர்த்தது. தேவசோமையின் கரங்கள் அவன் கழுத்தைச் சுற்றிப் படர்ந்திருந்தன. அப்பொழுது ஒரு குரல்...

"தேவசோமை... எப்போது வந்தாய் நீ? உன்னைக் காணவில்லையே என்று நான் கோபமாக இருந்தேன்" என்ற குரல் கேட்டு தேவசோமை திடுக்கிட்டு எழுந்தாள். குருதேவர் பாறை மறைவிலிருந்து வந்துகொண்டிருந்தார். அவருடைய குரலில் கம்பீரம் மட்டுமன்று, கண்டிப்பும் இருந்தது.

"ஏ, தேவசோமை! நீ இரண்டு நாள்களாக எங்கே போய்விட்டாய்? அந்தப் பலியைத் தப்பி ஓடச் செய்தாய். அவன் மீது உனக்கு ஆசை என்பது எனக்குத் தெரியும். நீ செய்த தவறுக்குத் தண்டனை என்ன தெரியுமா?" என்று கேட்டவர் குமாரதேவன் பக்கம் திரும்பினார், திடுக்கிட்டார்.

"தேவசோமை, இது யார்? தப்பி ஓடினவனைக் கண்டு பிடித்துக் கொண்டு வந்து விட்டாயா? பலிகொடாவிட்டால் மழை பெய்யாது. மழை இல்லாவிட்டால் பஞ்சம்தான்... நல்லவேளை கடமையை மறக்காமல் செய்தாயே...!" என்று கூறி 'ஹோ ஹோ' என்று சிரித்தார்.

"குருதேவா! இவர் ஒரு சித்திரக்காரர்..." என்றாள் தேவசோமை.

குருதேவர் குமாரதேவனை உற்று நோக்கினார்.

"சித்திரக்காரரா?" என்று கேட்டார் குருதேவர். தேவசோமை குமாரதேவனைப் பற்றிச் சுருக்கமாகக் கூறினாள்.

குருதேவர் ஏதோ யோசனையிலாழ்ந்தார். பிறகு நினைவுக்கு வந்தவராக "நேற்று இரவு இங்கே ஒரு பெண் வந்தாள். மிக அழகி. இங்கே ஆடினாள். அவளையே பலி கொடுக்க எண்ணினேன்..." என்றார்.



"பெண்ணா? ஆடினாளா? நான் நினைத்தேன்" என்றாள் தேவசோமை.

"நினைத்தாயா... உனது சத்தியசோமன் அவளை விட்டுவிடவில்லை, அவளுடன் ஆடினான். அந்தப் பெண் எங்கே?" என்று கேட்டார்.

ஒவ்வொரு காபாலிகராக எழுந்து வந்தனர். "பெண் எங்கே? பெண் எங்கே?" என்ற குரல் எங்கும் எதிரொலித்தது.

குமாரதேவன் அந்தக் காட்சியை ரசித்துக் கொண்டிருந்தான். தேவசோமை சத்ய சோமனை எழுப்பி வந்து அவன் முகத்தில் தண்ணீரைத் தெளித்து, "நேற்று ஒரு பெண்ணுடன் ஆடினாயாமே, அவள் யார்? இப்போது எங்கே அவள்?" என்று கேட்டாள் ஆக்ரோஷத்துடன்.

"நானும்தான் கேட்கிறேன்; எங்கே அவள்?" என்று சத்யசோமனும் கேட்டான்.

"எங்கேயா?" என்று சீற்றத்துடன் கேட்ட தேவசோமை அருகே இருந்த சூலாயுதத்தைத் தூக்கிக்கொண்டு ஓடி வந்தாள். சத்தியசோமன் அவளுடைய தாக்குதலுக்குப் பயந்து ஓடினான். அந்த இடத்தைச் சுற்றி இருவரும் சுற்றிச் சுற்றி ஓடிவந்தது குழந்தை விளையாட்டைப்போல இருந்தது.

குமாரதேவன் ரசித்துக் கொண்டிருந்தான்.

குருதேவர் அவனருகே வந்தார்.

"தம்பி, நீ நன்றாக சித்திரம் வரைவாயா?"

"ஏதோ தெரிந்தவரை"

"உலகமெனும் சுடுகாட்டில் நடனமாடும் பரமேச்வரனை வரைவாயா?"

"செய்கிறேன் குருதேவா! ஈசனை வணங்குவதற்கு நல்ல சிலை வேண்டும். நான் வரைந்து தருகிறேன். அதைக் கொண்டு சிற்பம் அமையுங்கள்".

"நீ வரைந்து தா. அதைச் சிற்பமாகச் செதுக்க சிற்பி வருவார்" என்றார் குருதேவர்.

குமாரதேவன் ஒரு திட்டத்துடன் பாறையில் சித்திரம் வரைந்தான். குருதேவர் ஒரு திட்டத்துடன் அவனைச் சித்திரம் வரையுமாறு கூறினார். அவனையும் இன்னும் சிறிது நேரத்தில் வரப்போகும் சிற்பி சுந்தரமூர்த்தியையும் சாளுக்கிய நாட்டிற்குக் கடத்திப் போகத் திட்டமிட்டுவிட்டார் குருதேவர். அவரது எண்ணம் ஈடேறாவிட்டால் அவரது தலை தப்பாது.

## அத்தியாயம் - 7

# விழியும் வாளும்

தனது அறையின் கதவை வெளிப்புறம் தாளிட்டுவிட்டு ராஜசுந்தரி செவிலியிடம் தன் அறையில் வந்துள்ள பிட்சுவைப் பற்றிச் சொல்வதற்கு விரைந்தாள். அவளுக்கு அந்த வேலையை வைக்க விரும்பாமல் செவிலி சீமந்தனி அந்த அறைக்கு மிக அருகிலேயே நின்று கொண்டிருந்தாள்.

"அம்மா! அம்மா... மிகவும் ஆபத்து" என்று பதட்டத்துடன் ஏதோ சொல்லப்போன ராஜசுந்தரியின்... கரத்தைப் பிடித்துக்கொண்டு மெல்ல அவளை அணைத்து, "பயப்படாதே ராஜசுந்தரி! அந்த ஆபத்து என்ன என்பது எனக்குத் தெரியும்" என்றாள். ஆறுதல் கூறுவதையா ராஜசுந்தரி அப்பொழுது விரும்பினாள்?



ராஜசுந்தரி பயத்துடன் வியப்பு நிறைந்த விழிகளால் அவளை நோக்கினாள்.

"எனக்கு எப்படித் தெரியும் என்று நினைக்கிறாயா? பிட்சு பானுகேசிதானே வந்திருப்பது?" என்று செவிலி மிகச் சாதாரணமாகக் கேட்டாள்.

"ஆமாம், அம்மா. அவனுடைய திட்டம் மிகப் பயங்கரமாக இருக்கிறது".

"என்ன சொல்கிறார்?"

"காபாலிகையைப் போல் நான் உடை அணிந்து கொள்ள வேண்டுமாம்."

"அணிந்து கொண்டு?"

"குமாரதேவனைக் காப்பாற்ற வேண்டுமாம்."

"குமாரதேவனையா?" என்று கேட்ட செவிலி சற்றுத் தயக்கத்துடன் நின்றாள் ஏதும் பேசாமல்.

"அம்மா, சீக்கிரம் ஏதாவது சொல் அம்மா. அந்தப் பிட்சுவை நாம் இங்கேயே..." என்று கூறும்போது ராஜசுந்தரியின் உடல் நடுங்கியது!

"ஊஹூம் அப்படி ஏதும் செய்துவிட வேண்டாம். குமாரதேவனைக் காப்பாற்ற வேண்டும் என்று சொல்கிறாரே... ஏன் எதற்காக" என்று செவிலி வினவினாள்.

"'குமாரதேவனைப் பலியிட முயல்கிறார்களாம். அவரைக் காப்பாற்ற வேண்டுமாம்... அவரைக் காப்பாற்றினால் சமுத்திரநாதனை வென்றுவிடலாமாம்... ஆனால் உனக்கு அது பிடிக்காது. அவர் உன் கணவர் அவர் என்னை விரும்புகிறார். என் இளமையை விரும்புகிறார்... நான் என்ன செய்வது தாயே?

"பிட்சுவிடமிருந்து தப்பினால் சமுத்திரநாதனின் காலில் விழ வேண்டும். சமுத்திரநாதனிடம் சிக்கினால்

பிட்சுவின் சீற்றத்துக்கு ஆளாக வேண்டும். என்ன செய்வது தாயே... இந்த இளமை, பருவம், நாட்டியக்கலை எல்லாவற்றையும் துறந்து விடட்டுமா? நானும் பிட்சுணியாக மாறிவிடட்டுமா?" என்று வேதனையும், கவலையும் ததும்பக் கேட்டாள்.

"பிட்சுணியாக மாறி விட்டால் மட்டும் கவலைகள் தீர்ந்துவிடுமா? அப்போது மட்டும் பயமில்லையா? புத்த பிரானின் புனிதக் கொள்கைகளை மறந்ததால் அல்லவா இந்த நாட்டிலே அவர்களுக்கு மதிப்பே போய்விட்டது. உன் இளமையும், கலையும் உனக்கு விரோதி என்று நினைத்து விடாதே..." என்று செவிலி கூறும்போது சுந்தரி குறுக்கிட்டு, "அம்மா, இப்போது பேசிக் கொண்டிருப்பதற்கு நேரமில்லை. என்ன செய்யலாம் என்று சொல்லம்மா... காவலாட்களைக் கூப்பிட்டு பிட்சுவைப் பாதாள அறையில் போட்டுப் பூட்டி வைக்கச் சொல்கிறாயா... சொல் அம்மா... சீக்கிரம் செய் அம்மா... என்று சுந்தரி பரபரத்தாள்.

செவிலி சில வினாடிகள் மௌனமாக நின்றாள். பிறகு, "சுந்தரி, பிட்சு சொல்வதைப் போல் செய்..." என்றாள்.

சுந்தரி திடுக்கிட்டாள். "அம்மா... சமுத்திரநாதனை விரோதித்துக் கொள்ளச் சொல்கிறாயா?" என்று கேட்டாள்.

"பிட்சுவும் சமுத்திரநாதனும் நமக்கு விரோதிகள்தாம்... ஆனால் அவர்களிருவரிடைய பலத்த போட்டி உண்டு. ஆனால் அவர்கள் இலட்சியம் ஒன்று. நமது நோக்கம் யாருடனாவது சேர்ந்து மற்றொருவரை வீழ்த்த வேண்டும்" என்று அழுத்தந் திருத்தமாகக் கூறினாள் செவிலி.

"சமுத்திரநாதனும், பிட்சுவும் ஒரே நோக்கம் கொண்டவர்களா?"

"ஆமாம், இருவரும் எப்படியாவது பல்லவ நாட்டைச் சாளுக்கியர்களுக்கு அடிமைப்படுத்திவிட நினைக்கிறார்கள்". செவிலி இவ்வாறு கூறவும் ராஜசுந்தரி திடுக்கிட்டாள்.



"என்ன சொல்கிறீர்கள் அம்மா" என்று கேட்டாள்.

"உம்; உடனே பிட்சு சொல்வதைப் போல் செய். உனக்கு எந்த ஆபத்தும் வராமல் நான் காப்பாற்றுகிறேன்..." என்றாள் செவிலி.

"என்னைக் காபாலிகப் பெண்ணைப் போல் உடுத்தி வருமாறு கூறுகிறாரே! அது அவ்வளவு சாத்தியமா?" என்றாள் ராஜசுந்தரி.

"அந்த வேடம் உனக்குக் கடினமான செயலா? உடனே அந்த உடைகளை அணிந்து கொண்டு புறப்படு. ஆனால் எனக்கு ஒரு சந்தேகம்; ஓவியன் குமாரதேவனை ஏன் பலியிடப் போகிறார்களாம்?" என்று கேட்டாள் செவிலி.

"சமுத்திரநாதனுக்குக் குமாரதேவனைக் கண்டால் பிடிக்காது. அதனால் அவனுடைய ஆட்கள் குமாரதேவனைப் பலியிடப் போகிறார்கள்..." என்று ராஜசுந்தரி கூறிவிட்டு அலங்காரம் செய்து கொள்ளும் அறைக்குள் நுழைந்தாள்.

அவள் உடை அணிந்து வெளியே வரும்போது செவிலிக்கே அவளை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. பிட்சு, ராஜசுந்தரியின் மெத்தென்ற பஞ்சணையில் படுத்து நன்றாக உறங்கிக் கொண்டிருந்தார்.

ராஜசுந்தரி அவரை எழுப்பினாள். "சுவாமி, நல்ல உறக்கமோ... வேண்டுமானால் இளைப்பாறுங்கள். நாளைக்குச் செல்லலாம்..." என்று கூறி நகைத்தாள்.

"ஏன், அதற்குள் சமுத்திரநாதனுக்குச் சொல்லியனுப்பி என்னைப் பாதாள அறையில் தள்ளி விடலாமென்ற எண்ணமோ" என்று பிட்சு கேட்டார். ராஜசுந்தரி திடுக்கிட்டாள், தானும் செவிலியும் பேசிக்கொண்டது பிட்சுவுக்கு எப்படித் தெரிந்தது?"

"எனக்கு எப்படித் தெரிந்தது என்று நினைக்கிறாயா?" என்று அவர் கேட்டவுடன் அவளுடைய திகைப்பு மேலும் அதிகமாகியது.

"சுந்தரி, என்னைப் பாதாளச் சிறையிலடைக்கவும் முடியாது. சமுத்திரநாதனிடம் காட்டிக் கொடுக்கவும் முடியாது. அப்படி நீ எப்போது நினைத்தாலும் நீதான் ஆபத்தில் சிக்கிக் கொள்வாய். வடக்கே சென்றிருந்த இளவரசர் திரும்பி வந்துவிட்டாராம். இனி சமுத்திரநாதனின் திட்டம் ஏதும் நிறைவேறாது. அதற்குள் குமாரதேவனை மீட்டு உன் வயப்படுத்திக் கொள்..." என்றார் பிட்சு.

ராஜசுந்தரி ஏதும் பேசவில்லை. பிட்சுவை விரோதித்துக் கொள்வது சரியன்று என்றே அவளுக்குத் தோன்றியது.

ராஜசுந்தரிக்கு, குமாரதேவன் மீது கொள்ளை ஆசை. அவனது வடிவழகும், கலைத் திறனும் அவள் இதயத்தை நெகிழ வைத்தன. அவனை நினைத்துக்கொண்டு உறங்காத இரவுகள் பல. தன்னை அணைக்க வருபவரிடம் அவனது தோற்றத்தைக் கற்பனையில் காண்பாள். இப்போது அவனை மீட்கப் போகிறோம். இப்படிச் செய்தால் பிட்சுவுக்கு என்ன பலன்?

"அடிகளே! ஒன்றுமில்லை; தவறாக நினைத்துக் கொள்ள மாட்டீர்களே..." என்று பேச்சைத் தொடங்கினாள் ராஜசுந்தரி.

பிட்சுவின் பார்வை அவளுடைய பாதியே மறைக்கப்பட்டிருந்த மார்பகத்தின் மீதிருந்தது. தனது பார்வையை புரிந்து கொண்ட சுந்தரி அதைக் குறித்துக் கேட்கப் போகிறாள் என்று நினைத்து "நான் ஏன் தவறாக நினைக்கப்போகிறேன், நீ கோபிக்காமல் இருந்தால் சரி; உன்னைத் தவறாக நோக்கவில்லை. அந்த குமாரதேவன் உண்மையிலேயே பாக்கியசாலி என்றுதான் நினைத்தேன். உன்னை அணைக்கும்போது அவனுக்கு ஏற்படும் சுகத்தைக்



கற்பனை செய்து பார்த்தேன்; அவ்வளவுதான்... சரி... சரி. நாம் இங்கிருந்து புறப்பட்டு நடந்து கொண்டே பேசுவோம். இன்று இரவு முழுமையும் நாம் பயணம் செய்தால்தான் குமாரதேவன் தங்கியிருக்கும் இடத்தை அடைய முடியும். வாவா... சீக்கிரம் வா..." என்று அவளது கரத்தைப் பிடித்து இழுத்துக்கொண்டு சுந்தரியின் படுக்கை அறையினின்று நந்தவனத்திற்குச் செல்லும் சுரங்கப்பாதை வழியே விரைந்தார். ராஜசுந்தரி சிறு விளக்கு ஒன்றைக் கையில் எடுத்துக் கொண்டாள்.

ராஜசுந்தரியே அந்தப் பாதை வழியே சென்றது கிடையாது. பிட்சு இவ்வளவு எளிதாக, அதிகம் பழகியவர்போல் நடப்பதைக் காண வியந்தாள். அவளது கரத்தைப் பிடித்துக்கொண்டு அவர் விரைந்து நடப்பது அவளுடைய வியப்பை மேலும் அதிகமாக்கியது.

"இந்த வயதிலும் நீங்கள் விரைவாக நடக்கிறீர்கள். என்னால் உங்கள் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியவில்லை..." என்றாள் சுந்தரி.

"நாள்தோறும் எனக்கு பல கல் தொலைவு நடந்து பழக்கம். உனக்கு பஞ்சணை மெத்தையில் இருந்து பழக்கம்" என்றார் பிட்சு.

"நாம் இருவரும் நமது தொழிலை மாற்றிக் கொள்ளலாமே" என்று கூறிச் சிரித்தாள் சுந்தரி.

பிட்சு சிரிக்கவில்லை. "சுந்தரி, தொழிலை மாற்றிக் கொள்ள நான் ஆயத்தமாயிருக்கிறேன். இந்த காவி உடையைக் களைந்து தலையில் முடியை வளர விட்டுப் பட்டுடை உடுத்தி நடமாடவே எனக்கு ஆசை" என்றார். இப்படிக் கூறிவிட்டு அவர் சுந்தரியைத் திரும்பிப் பார்த்தார். இருளில் அவள் முகம் தெரியவில்லை.

"ஓ! பிட்சு சுவாமிக்கு உள்ளத்தில் காதல் தீ இன்னும் அணையாமல் இருக்கிறதுபோலும்..." என்றாள் சுந்தரி. மெல்ல

பிட்சுவின் பிடியை விடுவித்துக் கொள்ள முயன்றாள். ஆனால் பிட்சுவின் பிடி மேலும் அவள் கரத்தை இறுக்கியது.

"ஆம்! சுந்தரி. நீறு புத்த நெருப்பு என் நெஞ்சு. இளம் பெண்களைப் பார்க்கும்போது என்னால் என் தாபத்தை அடக்க முடியவில்லை. ஆனால் நான் ஏற்றுக் கொண்டுள்ள மகத்தான் பணிக்கு எனது ஆசைகள் இடையூறாக இருக்கக் கூடாது என்பதற்காகவே நான் என்னைக் கட்டுப்படுத்திக் கொள்கிறேன்..." என்று பேசிக்கொண்டே போனார்.

சுந்தரி "ச்சூ" கொட்டினாள். "நீங்கள் மேற்கொண்டுள்ள பணி ஏன்ன என்று சொல்ல முடியுமா?" என்று கேட்டாள்.

"நான் அதை இப்போது சொல்ல விரும்பவில்லை. ஆனால் இந்த நிமிடத்தில் நான் ஏற்றுக்கொண்டுள்ள பணி உன்னைக் குமாரதேவனிடம் சேர்ப்பிக்க வேண்டும் என்பதே..."

"நான் இந்த வேடத்தில் அங்கே போய் அவரை எப்படித் தப்புமாறு செய்ய முடியும்?"

"அதை நான் கவனித்துக் கொள்கிறேன். நீ அவனை உயிராபத்திலிருந்து தப்புமாறு செய்தால் அவன் உனக்கு நன்றி செலுத்துவான். வெறும் நன்றியை வேண்டாம் என்று கூறிவிடு. அவன் உனது எழிலில் நிச்சயம் மயங்கிவிடுவான். அவனுடைய பணிக்கு இப்போது அழகிய பெண் ஒருத்தி வேண்டும். காஞ்சிமா நகரை மற்றொரு அஜந்தாவாக மாற்றப்போகிறான் அவன். அதற்கு முன் மாரிரியாக அமையப் பேரழகி ஒருத்தி தேவை. உன்னைவிட அழகி வேறு உண்டோ?"

"என்னை மிகவும் உயர்வாக வர்ணிக்கிறீர்கள்!"

"இல்லை... இல்லை... சுந்தரி மிகவும் உண்மை. உன் மேனி அழகை வர்ணிக்க நான் பாரவி இல்லை... கவி தாமோதரரரைப்போல் கவிதை எழுதத் திறமை எனக்கு இல்லை".



"சுவாமி, ரொம்பவும் வர்ணிக்கிறீர்கள்".

"அதிகமாக வர்ணிக்கவில்லை. உண்மையைச் சொல்கிறேன்... உனது விழிகளைக் காணும்போது நந்தவனத்தில் மலரைச் சுற்றி ரீங்காரமிடும் வண்டினங்கள் உன் முக மலரைத் தேடி வந்துவிடும். அயல் நாட்டு வணிகர்கள் உன் இல்லத்தில் ஏன் சுற்றுகிறார்கள் என்பதை இப்பொழுதுதான் உணர்ந்தேன்; உன்னிடம் முத்து இருக்கிறது. பவழம் இருக்கிறது. எப்படித் தெரியுமா? உனது பவழப் பெட்டகமாகிய உதடுகளை விரித்தால் பற்களாகிய முத்துக்கள் வணிகர்களைக் கவர்கின்றன. உனது சங்கு போன்ற கழுத்தையும், பச்சை மூங்கிலைப் போன்ற தோள்களையும், இடையையும்... ஆகா" பிட்சு கூறிக்கொண்டே வரும்போது ராஜசுந்தரி நாணம் மிகுதியால் ஒரு கரத்தால் அவரது வாயைப் பொத்தினாள். அவளும் பெண்தானே! நந்தவனத்தில் அவர்கள் வெளியேற வேண்டிய இடம் வந்துவிட்டது. படிக்கட்டுகளின் வழியே மெல்ல ஏறும்போதும் பிட்சு பேசிக்கொண்டே அவளை அணைத்தபடி ஏறினார். அவளது மார்பகம் அவரது தோளில் மெல்ல படர்ந்தன. கச்சணியாத அந்த செங்கலசம் அவரது மேனியை வருடியது. மயில் தோகையை மேனியில் அனுபவித்தது போலும் சந்தன விழுதை உடலில் பூசிக் கொண்டதுபோலும் அவரது உணர்ச்சிகள் பெரும் உருவம் எடுக்கத் தொடங்கின.

"சுந்தரி, உன்னைப் படைத்த பிரம்மதேவன் மிகவும் சாமர்த்தியசாலி. உனக்கு அளித்த அழகுக்காக அவனை எவ்வளவு பாராட்டினாலும் தகும். சுந்தரி, நான் உண்மையில் பிட்சு அல்லன்! நான் யார் என்பதைப் பிறகு சொல்கிறேன். உன்னைக் குமாரதேவனிடம் சேர்த்த பிறகு உன்னை நான் தீண்ட முடியாது. உனது மேனி சுகத்தை ஒருமுறை சுவைத்து மகிழ ஆசைப்படுகிறேன் எனது உள்ளத்துக்குள்ளேயே எரியும் தீயை நீ மனம் வைத்தால் அணைத்துவிடலாம். இதோ எனது உடலிலேயே உனது மிருதுவான அங்கங்கள் தழுவி நிற்கின்றன. அவற்றை எடுத்து அணைக்க அனுமதி கொடு.

உனது, பொய்யோ என்று கூறும்படியான இடையைத் தழுவி மகிழ ஒரே ஒரு வாய்ப்புக் கொடு. உனக்குக காலமெல்லாம் அடிமையாகி இருந்து இட்ட வேலைகளைத் தட்டாமல் செய்து உன்னைக் காஞ்சி மாநகர அரசியாக்கிவிடுகிறேன். ஒரே ஒருமுறை" என்று கூறிய பிட்சு சுந்தரியை மார்போடு அணைத்துக்கொண்டு அவளது இதழ்ச் சுவையை உணர முற்பட்டபோது ராஜசுந்தரி தன் பலங்கொண்ட மட்டும் அவரைத் தள்ளி தன் இடையிலிருந்து மெல்லிய சுருள் கத்தியை வெடுக்கென்று எடுத்து சாய்ந்து கிடந்த பிட்சுவின் மீது பாய்ந்தாள்.

## அத்தியாயம் - 9

# குற்றவாளிப் பெண்

பல்லவ மாமன்னர் பரமேச்வரவர்மன் நோய்வாய்ப் பட்டுப் படுத்த படுக்கையாக இருந்தார். அவருடைய உடல் நோயைவிட உள்ள நோய்தான் அவரைக் கொல்லாமல் கொன்று கொண்டிருந்தது. அடுத்து பட்டமேற வேண்டிய அவரது மகன் இளவரசன் நரசிம்மன் தலைநகர் விட்டுச் சென்றவன் இன்னும் திரும்பி வரவில்லை. சாளுக்கியர்களின் படையெடுப்பிற்குப் பிறகு விளை நிலங்கள் பாழ்பட்டதால் விளைச்சல் குறைந்துவிட்டது. விளைந்துவந்த தான்யங் களையும் மக்களுக்குக் கிடைக்காமல் பதுக்கி வந்தனர் சமூக விரோதிகள். இவ்வளவு மனிதச் சதியுடன் இயற்கையின் சதி வேறு. பருவ மழை காஞ்சி மண்டலத்தில் பொய்த்தது.

இவை பரமேச்வர வர்மனின்மன வேதனையை மிகவும் அதிகரித்துவிட்டன. அந்த வேதனைக்கு மகுடம் வைத்ததுபோன்ற நிகழ்ச்சி ஒன்று ஏற்பட்டது. அவர் எதிரே



ராஜசுந்தரியைக் கொண்டு நிறுத்திவிட்டார் நகரக் காவல் தலைவர்.

பரமேச்வரவர்மர் ராஜசுந்தரியை அடையாளங் கண்டு கொள்ளவில்லை. ஆளுங் கணத்தாரும், அமைச்சரும் விசாரிக்காமல் தன்னிடமே குற்றவாளியைக் கொண்டு நிறுத்துகிறார்கள். அதனால் அதில் ஏதோ முக்கியம் இருக்க வேண்டும் என்று நினைத்தார்.

தன் முன் நிறுத்தப்பட்டிருப்பவள் யார் என்ற கேள்விக் குறி மன்னரது முகத்தில் எழுந்ததைக் கண்ட காவல் தலைவர் தொண்டையைக் கனைத்துக் கொண்டார். 'சக்கரவர்த்திக்கு காஞ்சிமா நகர நடன ராணியை அடையாளம் தெரியாமல் இருக்குமா' என்ற ஐயத்துடன்தான் அவர் மௌனமாக இதுவரையிருந்தார். மன்னர் அவளைத் தெரிந்து கொள்ளவில்லை.

"சக்கரவர்த்தி அவர்களே... காஞ்சிமா நகரத்து நடன ராணி ராஜசுந்தரியைத் தங்கள் முன் நிறுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டது" என்று பூர்வ பீடிகை போட்டார் தலைவர்.

சக்கரவர்த்திகளுக்கு அடையாளம் தெரிந்துவிட்டது. "ஓ... ராஜசுந்தரியா?" என்று முணுமுணுத்துக் கொண்டார்.

ராஜசுந்தரி தனது அங்கங்கள் யாவும் கூச நின்று கொண்டிருந்தாள். பொதுவாக அவள் மன்னரின் சமூகத்தை நாடிச் செல்வதும் மன்னர் அவளைத் காண முயல்வதும் அவ்வளவு எளிதாக நடைபெறுவதில்லை... இன்று அவள் வந்து நிற்கும் காரணம் அவளது மதிப்பைக் குறைப்பதாக இருந்தது.

மன்னர் மீண்டும் காவல் தலைவரை நோக்கினார். விழிகளிலே கேள்வி இருந்தது.

"மன்னாதி மன்னா, நாட்டிய ராணியின் வீட்டுத் தோட்டத்தில், புத்த பிட்சு கொலை செய்யப்பட்டுக் கிடந்தார்..." என்ற குற்றப் பட்டியலைப் படிக்கத் தொடங்கினார் காவல் தலைவர்!

மன்னரின் விழிகளில் வியப்புக்குறி பிரதிபலித்தது. ராஜசுந்தரி தலைகுனிந்து நின்றாள்.

மேலும் விவரித்தார் தலைவர்: "நாட்டிய ராணியின் மாளிகைக்கும் தோட்டத்திற்கும் சுரங்கப் பாதை இருக்கிறது. அதன் வழியே பிட்சுவும் இவளும் வந்திருக்கின்றனர். தோட்டத்திற்கு வந்தவுடன் பிட்சு கொலை செய்யப்பட்டிருக்கிறார். இவள் அந்த இடத்தில் நில்லாமல் மாளிகைக்கே திரும்பி ஓடியிருக்கிறாள்."

சக்கரவர்த்தி ராஜசுந்தரியை நோக்கினார். மெல்லிய, ஆனால் கம்பீரமான குரலில், "காபாலிகையாக எப்போது மாறினாய் ராஜசுந்தரி?" என்று கேட்டார். அவள் மறுமொழி கூறுவதற்கு முன்பே, "ராஜசுந்தரி, உன்னைச் சந்தித்த ஓராண்டுக்குமேல் இருக்குமா?" என்று கேட்டார்.

ராஜசுந்தரி மெல்லிய குரலில் தலைகுனிந்தவாறு "ஆம்..." என்றாள்.

"இளவரசர் உன் வீட்டிற்கு வந்து எவ்வளவு நாட்களாகின்றன?" என்று கேட்டார்.

ராஜசுந்தரி திடுக்கிட்டாள். இளவரசரை அவள் சந்தித்து ஓராண்டிற்கும் மேலாகின்றது. அரசரோ எவ்வளவு நாட்களாகின்றன என்று கேட்கிறார்.

"சக்கரவர்த்திகளே! இளவரசர் இப்போதெல்லாம் என் குடிலுக்கு வருவதில்லை. அவரைச் சந்தித்துப் பேசி மாதங்களாகிவிட்டன..." என்றாள்.



இளவரசர் நரசிம்மவர்மர் ராஜசுந்தரியின் மாளிகைக்கு அடிக்கடி செல்வார். அவளுடைய நடனத்தின் மீது அவருக்கு தனி மோகம். நாட்டியக் கலையைப் பற்றி இருவரும் நேரம் போவது தெரியாமல் பேசுவார்கள். இளவரசரின் கலைப் புலமையைக் கண்டு ராஜசுந்தரி உள்ளத்துக்குள்ளே மகிழ்ந்து போவாள். அவரது வருகையை ஒவ்வொரு நாளும் எதிர் நோக்குவாள். அவர் இளவரசர்; நாமோ சாதாரண பிரஜை என்ற எண்ணமே அவளுக்குத் தோன்றுவதில்லை. மிகவும் சரளமாகப் பழகுவாள். திடீரென்று ஒருநாள் அவர் வரவில்லை. மறுநாளும் வரவில்லை. நாள், வாரம், மாதங்கள் என ஓடின. இளவரசர் எங்கோ வெளிநாடுகளுக்குச் சுற்றுப் பயணம் சென்றிருப்பதாக அறிந்தாள். இளவரசர் வருவது மற்றவர்களுக்குத் தெரியாது என்று எண்ணினாள். குறிப்பாக பல்லவ மன்னருக்குத் தெரியாது என்று எண்ணினாள்.

இன்று அரசர் கேட்கிறார் 'எவ்வளவு நாள்களாகின்றன' என்று. ராஜசுந்தரியின் வேதனை மேலும் அதிகரித்தது. உள்ளத்தின் உள்ளே பொங்கித் ததும்பிய பிரிவாற்றாமையுடன் குற்றவாளியென்ற அவப் பெயர் வேறு. மன்னரை இந்த நிலையிலா சந்திக்க வேண்டும்!

"ராஜசுந்தரி, உன்னுடைய நாட்டியக்கலை எவ்வாறு உள்ளது? அண்மையில் கடல் மல்லைக்குச் சென்றிருந்தாயா?" என்று கேட்டார் சக்கரவர்த்தி.

காவல் தலைவருக்கு ஒன்றும் புரியவில்லை. குற்றஞ் சுமத்தியுள்ளோம்; அரசரோ குசலம் விசாரிக்கிறார்.

"காஞ்சியை விட்டு எங்கும் செல்வதில்லை" என்று மெல்லப் பேசினாள் ராஜசுந்தரி.

"கலகலப்புடனும், கம்பீரமாகவும் கணீரென்றும் பேசக்கூடிய சுந்தரி உனக்கு என்ன நேர்ந்துவிட்டது? உன்னைக் காவலர்கள் இங்கு கொண்டு நிறுத்துவானேன்?" என்று மன்னர் புன்முறுவலுடன் கேட்டார்.

ராஜசுந்தரிக்கு மெல்ல தைரியம் உதயமாகியது.

"செய்யாத குற்றத்திற்கு உங்கள் முன் நிறுத்தப்பட்டிருக்கிறேன். அதுவும் ஒரு விதத்தில் நன்மைக்கே. இல்லாவிடில் எனக்குத் தங்களைச் சந்திக்கும் வாய்ப்பு எளிதில் கிடைக்குமா?" என்றாள் தலை நிமிர்ந்து.

பரமேச்வரவர்மன் அவளது வடிவத்தை ஒருமுறை உச்சந்தலை முதல் உள்ளங்கால்வரை பார்த்தார்.

ராஜசுந்தரியின் எழில் நாளுக்கு நாள் அதிகமாகிறதே தவிர குறையவில்லை. ஏகாம்பர ஈசர் பாக்கியசாலி. நாள்தோறும் இவளது நடனத்தைக் கண்டு களிக்கிறார். அரசர் தனக்குள்ளே சிரித்துக் கொண்டார். அதன் எதிரொலி அவர் முகத்திலும் தெரிந்தது.

"காபாலிகையாக எப்பொழுது மாறினாய்?"

மீண்டும் கேட்டார் மன்னர்.

ராஜசுந்தரி என்ன மறுமொழி கூறுவாள்? வேடம் பூண்டதாகக் கூறுவாளா? நாடகத்திற்கு ஒத்திகை என்று கூறுவாளா?

"மத்தவிலாசம் நாடகம் நடிக்கிறாயா? காபாலிகை வேடம் நீ பூண்டால் காபாலிகனாக யார்? பிட்சுவாக யார்? என் மேல் பிட்சுக்களுக்கும், காபாலிகர்களுக்கும் கடுங் கோபம். நான் அவர்களைக் கேலி செய்கிறேனாம். ஆதரவு தருவதில்லையாம். அடக்குமுறையைக் கையாளுகிறேனாம். அடக்கப் பார்க்கிறேனாம். மத்தவிலாசம் நாடகத்தை நானா எழுதினேன். என் பாட்டனார் மகேந்திரவர்மர் எழுதினார்" என்று உற்சாகத்துடன் பேசினார் மன்னர்.

ராஜசுந்தரியின் முகம் மாறியது. அவள் கண்கள் கலங்கின. துயரம் அவள் தொண்டையை அடைத்தது. வார்த்தைகள் விம்மல் மூலம் வெளிவந்தன. இவ்வளவு நல்ல



குணம் படைத்த பல்லவ மன்னன் பரமேச்வரவர்மரைச் சமயப் போர்வையிலுள்ளவர்கள் வெறுக்கிறார்களே. அவர்களைப் பயன்படுத்திக்கொண்டு நாட்டில் குழப்பத்தை விளைவிக்க சாளுக்கியர்கள் முயல்கிறார்களே?

"ராஜசுந்தரி, ஏன் கண் கலங்குகிறாய்? நீ மத்த விலாசத்தில் நடிப்பதை யாராவது தடுக்க முற்பட்டார்களா? அதைப்போல்தான் கடல்மல்லைக்கருகிலுள்ள கிராமத்தில் வாழ்ந்து வந்த சந்திரமாலா எனும் நடனப் பெண்ணையும் ஒரு பிட்சு துன்புறுத்த முயன்றிருக்கிறர். தக்க சமயத்தில் உதவப் போன இளைஞனைக் காபாலிகர்கள் பலியிட அழைத்துச் சென்றுவிட்டார்களாம். நாட்டில் குழப்ப மூட்ட முயல்கிறார்கள். இளவரசன் நரசிம்மன் இன்னும் காஞ்சி திரும்பவில்லை. அவன் வந்துவிட்டால் நான் நிம்மதியாகக் கண்ணை மூடிவிடுவேன்" என மன்னர் பேசமுடியாமல் பேசினார். அவருக்கு மூச்சுத் திணறியது. அருகே இருந்த மருத்துவர் அவரைத் தாங்கிக்கொண்டு மெல்லப் படுக்கையில் சாய்த்து, "அரசே! அதிகம் பேசக் கூடாது என்று நான் எச்சரித்துள்ளேனே. கவலையும் கூடாது மன்னவா. குற்றவாளியை விசாரிக்கத் தங்களைத் தொந்தரவு செய்ய வேண்டுமா?" என்று மெல்லக் கடிந்து கொள்வது போல் கூறினார்.

பரமேச்வரவர்மன் சிறு நகை பூத்து, "இந்த உடலுக்கு என்றுமே வேதனைதான். எனது கடைசி நாட்களை அமைதியாகக் கழிக்க விரும்புகிறேன். ஆனால் ஈசனின் திரு உள்ளம் அப்படியில்லை போலிருக்கிறது. சாளுக்கியர்களை வெற்றி கொண்ட பெருமையில் நான் ஆண்டவனைச் சிலகாலம் மறந்திருந்தேன். கடல் மல்லையில் சிவபெருமானுக்கு அழகிய கோயில் கட்ட விரும்பினேன். என் வாழ்நாளில் அதை நிறைவேற்ற முடியாது போலிருக்கிறது..." என்று வேதனைப்பட்டுக் கொண்டார்.

ராஜசுந்தரி கண்களைத் துடைத்துக் கொண்டாள். ஏதோ சொல்ல வாயெடுக்கும் முன்பு, பரமேச்வரவர்மர்

மீண்டும் நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டு, "ராஜசுந்தரி, கண்கலங்காதே! உனது நாட்டியத் திறமை எனக்குத் தெரியும். என் மகனுக்கு உன் திறமையை நான் விளக்கிக் கூறியிருக்கிறேன். உனது அழகும் இளமையும் கலைக்குப் பயன்பட வேண்டும் என்று அவனிடம் கூறியுள்ளேன். அவனது கலை ஆர்வம் பலருக்குத் தெரியாது. நரசிம்மன் அவதாரப் புருஷன். எப்படி என்று கேட்பீர்கள். தெய்வம் தான் அவதாரம் எடுக்கும் என்று சொல்வீர்கள். எனது பாட்டனார் நரசிம்மர் மாமல்லர் என்று புகழப்பட்டார். அவர் தந்தை எனது முப்பாட்டனார் மகேந்திரவர்மர் ஆகா; இவர்களது திறமையையும், பராக்கிரமத்தையும் நினைத்துப் பார்க்கும்போது என் மெய் சிலிர்க்கிறது. உனக்குத் தெரியுமா ராஜசுந்தரி? மகேந்திரவர்மர் காஞ்சியில் அரியணை ஏறியபோது துறைமுகமாக இருந்த கடல்மல்லை வெறும் பாறைகளாலும், அடர்ந்த மரங்களாலும் சூழ்ந்திருந்தது. கடல் மல்லையைப் பெரும் நகரமாக உயர்த்த ஆசைப்பட்டார் என் முப்பாட்டனார். கலையார்வம் சொல்ல முடியாதது. கடல் மல்லையைச் சுவர்க்க பூமியாக்கக் கனவு கண்டார். அதை நிறைவேற்றச் சபதம் பூண்டார். பாறைகள் குடையப்பட்டன. இந்த நாட்டிற்கே புதுமையான மண்டபங்களை மலைச் சரிவில் குடைந்தெடுத்தார். அவர் திருக்குமாரன், நரசிம்மன் தன் தந்தையின் கனவை நனவாக்கத் தொடங்கினார். கடல் மல்லை மாமல்லபுரம் என்ற சிறப்புப் பெயர்ப் பெற்றது.

ஆனால் பொல்லாத சாளுக்கியர்களின் படையெடுப்பு அவர்களது கலைக் கனவு நிறைவேறாமல் செய்தது. என் காலத்தில் சாளுக்கியர்களுடன் போரிட்டுக் கொண்டே, என்னால் முடிந்த வரை கனவை நனவாக்க முயன்றேன். என் மகன் நரசிம்மன் என் ஆர்வத்தை நன்றாக அறிந்தவன். என் பாட்டனார், அவன் பாட்டனார் இருவரது கலைத்திறமையும், வீரமும் அவனிடம் நிறைந்துள்ளன. அதனால்தான் அவதார புருஷன் என்று அவனைச் சொன்னேன். உண்மை வீரனுக்குக் கலையார்வமும் இருந்துவிட்டால் நாட்டிற்கு நன்மை. வருங் காலத்துப் பல்லவ நாட்டு மக்கள் பாக்கியசாலிகள்.



அவர்களுடைய காலத்தில் இந்த நாடு உலகத்திலேயே தலை சிறந்து நிற்கப் போகிறது" என்று கூறிச் சற்று நேரம் மௌனமாக இருந்தார்.

மருத்துவருக்குக் கோபம் பொங்கியது. அருகே நின்ற காவலர்களை எரித்து விடுபவர்போல் பார்த்து, 'சக்கரவர்த்திகளுக்கு ஏற்பட்டுள்ள நோயின் கடுமை உங்களுக்குத் தெரியாதா? யாரோ ஒரு பெண்ணை அவர் முன் கொண்டு வந்து நிறுத்தி அவரை உணர்ச்சி வசப் படுத்துகிறீர்களே. மன்னருக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால் பழியை உங்கள்மேல்தான் சுமத்துவேன்" என்று கோபமாகக் கூறினார். ராஜசுந்தரி திடுக்கிட்டாள். மருத்துவர் அருகே விரைந்து "ஐயா, ஐயா" என்றாள். "சக்கரவர்த்திக்கு ஏதும் நேரவேண்டாம். குற்றவாளியாக அவரது விசாரணைக்கு என்னை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். நீங்களே விசாரித்துத் தண்டனை வழங்கிவிடுங்கள். என்னால் மன்னருக்கு ஏதும் நேரவேண்டாம்" என்று நா தழுதழுக்கக் கூறினாள். மருத்துவர் சீற்றத்துடன் "நான் அதிகாரி அல்லன். எனக்கு மருந்து கொடுக்கத் தெரியும். நான் அரண்மனை வைத்தியன், தீர்ப்புக் கூறுவது என் வேலை அன்று. நீ என்ன கடுமையான குற்றம் செய்திருக்கிறாயோ? அதனால் தான் அரசரின் முன்னால் உன்னை நிறுத்தி வைத்துள்ளார்கள் பஞ்சாயத்தார்கள் இல்லையா? நீதிபதிகள் இல்லையா விசாரிக்க? முதல் அமைச்சர் எங்கே சென்றுவிட்டார்- என்ன குற்றம் செய்துவிட்டாய் பெண்ணே?" என்று மருத்துவர் கேட்டார்.

"கொலைக் குற்றம்" என்றான் காவல் தலைவன்.

"யாரை?" என்று திடுக்கிட்டுக் கேட்டார் மருத்துவர்.

"பிட்சுவை..." என்று காவலன் கூறவும் மருத்துவர் நடுக்கத்துடன், "ஐயோ! கொலை வழக்கை அரசர் இப்போது விசாரிக்கவே கூடாது. அழைத்துச் செல்லுங்கள் இவளை. என்ன காரியம் செய்தீர்கள்! மன்னரின் உயிர் உடனே போக

வேண்டுமென்பதுதான் உங்கள் விருப்பம் என்றால் இவளை இங்கேயே நிறுத்தி வையுங்கள்" என்று கூவினார்.

காவலர்கள் நடுநடுங்கினர். முதல் அமைச்சர் வரும்வரையில் சிறையில் அடைத்து வைக்க ராஜசுந்தரியை அழைத்துச் சென்றனர்.

பரமேச்வர வர்மர் இதைப் பார்த்துக் கொண்டே இருந்தார். ஏதோ சொல்ல முயல்கிறார். முடியவில்லை. கையை அசைத்து தடுத்து நிறுத்த முயல்கிறார், கரங்களை அசைக்க முடியவில்லை. சொல்லும், செயலும் அவரது கட்டளைக்குப் பணிய மறுத்தன. எதிரே உள்ள பொருள்கள் கூட மறைவனபோல் தோன்றின. வைத்தியர் அவர் அருகே விரைந்தார்.

## அத்தியாயம் - 9

# இளமைக் கனவு

பல்லவ நாட்டின் இளவரசர் நரசிம்மன் மாமல்லபுரத்து கடற்கரையோரமாக நடந்து சென்று கொண்டிருந்தார். காலை இள ஞாயிறு தோன்றும் வேளை. கீழ்வானம் செவ்வரிக் கோடுகளைக் காட்டி விழித்தெழுந்துவிட்டது. கடற்கரையை நோக்கிப் பறவைகள் பறந்து வந்தன. பாறைகள் மீது மோதும் அலைகளின் ஆர்ப்பரிக்கும் ஒலி, ஓங்காரமிட்டு எழுந்து கொண்டிருந்தது.

இரவெல்லாம் கரையில் வெகு தூரம்வரை தனது வெண்கரங்களை நீட்டித் தழுவியிருந்த அலைக் கன்னி மெல்ல, மெல்ல நாணமடைந்தவள்போல் உள்ளே சென்று கொண்டிருந்தாள். போகும்போது தனது செல்வங்களான



சங்குகளையும், கிளிஞ்சல்களையும் நத்தைகளையும் விட்டுச் சென்றிருந்தாள். மணலிலே ஏற்பட்ட துவாரங்களின் உள்ளே நுழைவதும் வெளியே வருவதுமாக நண்டுகள் களிநடம் புரிந்து கொண்டு இருந்தன. தொலைவில் பாய்விரித்துச் செல்லும் கலங்களின் நிழலுருவம் தெரிந்தது. மீனவர்கள் கட்டு மரங்களில் செல்வதும் சிலர் அலைகள் வருவதற்காகக் காத்திருப்பதும் இளங்காலையின் புதுச்சோபையை அதிகரித்தன.

நரசிம்மன் பலவிதச் சிந்தனைகளை மனத்தில் கொண்டு நடந்து சென்று கொண்டிருந்தார். ஈர மணலில் அவரது பாதங்கள் அழுந்தி அடிச்சுவட்டை ஏற்படுத்தின. அடிச் சுவடுகள் அப்படியே இருப்பதில்லை. பின்னால் ஓர் அலை அதை அழித்துச் சென்றுவிடும். நரசிம்மனின் சிந்தனையோட்டம் கடந்த சில நாட்களில், நடைபெற்ற சம்பவங்களை எண்ணியது. காபாலிகர்கள் பலியிட அழைத்துச் சென்ற இளைஞன் ஓவியனின் சகோதரன் என்பது அவருக்குத் தெரியாது. ஆனால் யாரோ ஓர் இளைஞனைக் காபாலிகர்கள் பலி வாங்க முற்பட்டிருக்கிறார்கள் என்பதை உணர்ந்தார். ஓவியன் குமாரதேவனை விரைந்து சென்று ஊர்க் காவல் வீரர்களிடம் கூறி அழைத்துவருமாறு கட்டளையிட்டார். அங்கேயே சிறிது நேரமிருந்தார். பிறகு என்ன தோன்றியதோ என்னவோ அந்த இடத்தைவிட்டுப் புறப்பட்டுக் கிழக்கு நோக்கி நடந்தார். பசி, தாகம் ஏதும் அவரை வாட்டவில்லை. மாமல்லபுரத்தை அடைந்துவிட வேண்டும் எனும் ஒரே குறிக்கோள்.

மாமல்லபுரத்தை அடையும்போது இருட்டிவிட்டது மீனவர் வசிக்கும் சிற்றூரில் சிறிது உணவு உட்கொண்டு அங்கே இருந்த குடிலொன்றில் இரவைக் கழித்தார். அங்கே தங்கியபோது மக்கள் சோறு சமைக்க அரிசி கிடைக்காமல் அவதிப்படும் செய்தியை அறிந்தார். கடலில் பிடித்துவரும் மீனைத் தானியங்களுக்கு மாற்றாக வாங்கிச் செல்ல சமீப காலத்தில் யாரும் வரவில்லை. மீன்கள் விலைபோகாமல் வீணாகும் மீனவர்களுக்கு உணவும் கிடைக்கவில்லை,

நரசிம்மன் மனத்தில் பெரும் கவலை ஏற்பட்டது. பஞ்சகாலத்திலும் மக்கள் இடர்ப்படாமல் உண்பதற்காகச் சேமித்து வைக்கப்பட்ட களஞ்சியங்களிலிருந்த தானியங்கள் எங்கே சென்றன? அவருக்கு இரவெல்லாம் உறக்கம் வரவில்லை. பொழுது புலர்வதற்கு முன்பே எழுந்து கடற்கரையை நோக்கி நடந்தார். கடற்கரை ஓரமாக ஒரு காததூரம் நடந்தால் கடல்மல்லை நகரம் வந்துவிடும்.

மாமல்லபுரத்தை நினைக்கும்போது நரசிம்மனுக்கு நெஞ்சில் பலவிதப் புதுமை எண்ணங்கள் தோன்றும். வீணே கிடக்கும் பாறைகள் விதவிதச் சிற்பங்களாக உருப்பெறும். மண்டபங்களாக மாறும். கோயில்களாக எழும். அஜந்தாவில் உள்ளவை போன்று ஓவியங்களைக் குடையப்படும் மண்டபங்களில் தீட்ட வேண்டும் என்ற உற்சாகம் ஏற்படும். இந்தப் பணியை உடனே தொடங்க வேண்டாமா? சிற்பி சுந்தரமூர்த்தியைச் சந்தித்து எங்கெங்கோ சிதறிக் கிடக்கும் சிற்பிகளைத் திரட்டிக் கொண்டுவர வேண்டும் என்ற பரபரப்பான எண்ணம் ஏற்படும்.

நரசிம்மன் மாமல்லபுரத்தை நெருங்கிக் கொண்டிருந்தார். சற்றுத் தொலைவில் மரக்கலங்கள் துறையை நெருங்கிக் கொண்டிருப்பதைக் கண்டார். உதய சூரியனின் ஒளி மெல்ல மெல்ல கலங்களின் பாய்மரங்களின் மீது வீசி அவற்றிற்குப் புதுச்சோபையை உண்டாக்குவதைக் கண்டார். அங்கேயே அமர்ந்து அந்த இயற்கை அழகை ரசிக்க வேண்டும் எனும் ஆவல் ஏற்பட்டது.

வசதியாக அமர்ந்து கொள்ளும் பாறை ஒன்றின் மீது ஏறி அமர்ந்து கொண்டார். இதே பாறை மீது சிறு வயதில் அவர் உட்கார்ந்திருக்கிறார். இளமைக் கனவுகள் உதயமாகி அவரது பிஞ்சு நெஞ்சில் இலட்சியங்களை உருவாக்கியிருக்கின்றன. தந்தை பரமேச்வர வர்மன் அவரது திறமையை ஊக்குவித்து உற்சாகமூட்டிக் கூறிய சொற்கள் அவரது நினைவுக்கு வந்தன.



சாவகத் தீவிற்குச் செல்ல வேண்டும் என்று சக்கரவர்த்தி கூறியது இதே இடத்தில்தான். கடல் கடந்த நாடுகளுக்குச் செல்ல வேண்டும் என்ற ஆவல் அவருக்கு இருந்தது. ஆனால் கலத்தில் ஏறும்போது அவருக்கு உற்சாகமில்லை. அவரது இளம் உள்ளத்தில் நடனமிடத் தொடங்கிவிட்ட அந்த வேல்விழியாளைப் பிரிந்து எவ்வாறு செல்வது என்ற கவலை.

தந்தை மிகவும் தந்திரசாலி. அயல் நாட்டு வணிகருடன் வந்த சிறுமி காஞ்சியில் தங்கியிருக்கத் தன்னை சாவகத்திற்கு அனுப்புகிறாரே? - ஏனாம்? காதல் உணர்வு ஏற்படாத பருவம். ஆனால், அயல் நாட்டுச் சிறுமியின் கலகலப்பு மிகுந்த சிரிப்பு இளைஞன் நரசிம்மனைப் பெரிதும் கவர்ந்தது. அவளிடமிருந்த ஒவ்வொரு பொருளையும் உன்னிப்பாகக் கவனித்து அதைப்பற்றி அறியும் குணம் அவனைக் கவர்ந்தது.

ஏகாம்பரர் ஆலயத்தில் நடனமிடும் பெண்களைக் கண்டு இமை கொட்டாமல் அவன் பார்த்துக் கொண்டிருந்தபோது தான் அணுகிக் கேட்ட அந்த நிகழ்ச்சிகளை இப்போது நினைத்துக் கொண்டார்.

"உனக்கு நாட்டியம் பிடிக்குமா?" என்று அந்த இளஞ் சிறுமியை சிறுவன் நரசிம்மன் கேட்டான்.

மை எழுதிய விழியை மேலும் அகலவிரித்து, "நாட்டியம் என்றால் என்ன?" என்று அவள் கேட்டாள். களங்கமற்ற முகத்தில் எழுந்த கேள்விக்குறி இப்போதும் அவரது நினைவில் அழியாது இருக்கிறது.

"மனத்தில் நினைப்பதை முகத்தின் மூலம் காட்டுவது அபிநயம். அதற்கேற்ப அங்கங்களை அசைத்து ஆடுவது நாட்டியம்" என்று தனது இளம் உள்ளம் உணர்ந்ததைக் கூறினான்.

அவள் சிரித்தாள்.

"ஓ! நான் மயிலை நினைத்துக் கொண்டேன். அதுபோல் அபிநயம் பிடிக்க முடியுமா?" என்று அவள் கேட்டாள்.

"ஆகா; செய்ய முடியுமே!" என்றான் சிறுவன் நரசிம்மன்.

"மானைப் போல?"

"முடியும்".

"யானை நடப்பதைப் போல..."

"ஆகா; முடியும். உன்னை நடனப் பெண்ணிடம் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்துகிறேன்" என்று கூறிய நரசிம்மன் அவ்வாறே செய்தான்.

கோயில் உச்சிவேளை பூசை முடிந்து தனது நிருத்திய அஞ்சலியை ஈசனுக்குச் செலுத்திவிட்டு வந்து கொண்டிருந்த நடன மாதின் எதிரே நரசிம்மன் சென்றான்.

"நடனராணி! மயிலைப் போல ஆட முடியுமா? மானைப்போல அபிநயம் பிடிக்க முடியுமா?' என்று இவள் கேட்கிறாள் என்று கேட்டான்.

அந்தச் சிறுமியை ஒரு கணம் உற்று நோக்கிய நடனமாது, "ஆகா; நிச்சயமாகச் செய்ய முடியும். காதால் கேட்டதைக் கண்ணால் பார்த்ததை, ஏட்டில் எழுதி வைத்திருப்பதை, இதயத்தில் நினைப்பதை எல்லாம் முக உணர்ச்சி மூலம், கரங்களின் மூலம், பாத அசைவுகளின் மூலம் புலப்படுத்த முடியும்" என்றாள்.

மானைப் போல் துள்ளினாள்; காதல் மதப்பிடியும் களிறும் சேர்ந்து நடப்பதுபோல் நடந்து காட்டினாள்.



மயில் நடையையும் தேவ அரம்பையர் நடனத்தையும் தனது நாட்டியத் திறன் மூலம் கண்ட சிறுவன் நரசிம்மன் உடலில் அவனறியாமலே ரோமாஞ்சலி ஏற்பட்டது.

தானும் அது போல ஆடவேண்டும் என்ற துடிப்பு ஏற்பட்டது. வைத்த விழி மாறாமல் கவனித்துக் கொண்டிருந்த சாவக நாட்டுச் சிறுமியோ ஓடிச் சென்று நடன மங்கையை அணைத்துக் கொண்டு, "அத்தை, எனக்கும் நடனம் கற்றுத் தருவீர்களா?" என்று கொஞ்சும் மொழியில் கேட்டாள்.

அத்தை - ஆகா - அந்தச் சொற்கள் நடன மங்கையின் செவிகளில் தேன் போல் வீழ்ந்தன.

அத்தை - அந்தச் சிறுமியின் தந்தையின் சகோதரிதானே அத்தை உறவு ஆவார். அந்தச் சிறுமி, கடல் கடந்த சாவக நாட்டுப் பெரும் செல்வந்தரின் மகளாகத்தான் இருக்க வேண்டும். அல்லது சாவக நாட்டு அரசராகவும் இருக்கலாம். அப்படிப்பட்ட பெரும் பாக்கியம் தான் செய்திருந்தால் நடனமாடி வாழ வேண்டியதிருக்காதே.

நடன மங்கை மறுமொழி கூறுவதற்குள் சக்கரவர்த்தி பரமேசவரவர்மன் அங்கு வந்துவிட்டார். அவருடன் சாவகத் தீவிலிருந்து வந்த வணிகரும் வந்தார். பல்லவ சக்கரவர்த்தி சிறுமியை அணைத்துக் கொண்டு "என்னம்மா, கேட்கிறாய்?" என்று வினவினார்.

நரசிம்மன் முந்திக் கொண்டான். "அப்பா, அவளுக்கும் நாட்டியம் பயில ஆசையாம்..." என்றான்.

பிறகு தொடர்ந்து, "நானும் கற்றுக் கொள்ளட்டுமா? கரங்களையும் உடலினையும் வளைக்க நான் எளிதில் பழகிவிடுவேன்..." என்றான் உற்சாகத்துடன்.

பரமேச்வரவர்மன் மெல்லிய புன்முறுவல் பூத்தார். "கையையும் காலையும் அசைப்பது, வளைப்பது மட்டுமே நாட்டியமாகாது மகனே! நாட்டியம், நிருத்தியம், அபிநயம்

இவையெல்லாம் தெய்வீகக் கலை. தெய்வ அருள் வேண்டும். சில நொடிகளில் உணர்ச்சிகளைப் பிரதிபலிக்கும் இந்தக் கலை பெண்களுக்கு வரப்பிரசாதம்!" என்றார்.

"பெண்களுக்கு வரப்பிரசாதம், முன்பிறவிப் பயன் என்றால் ஏகாம்பரர் கோயிலில் நடராசர் ஆடுவதுபோல் அழகிய சிலை எப்படி அமைந்தது? நீங்கள் அடிக்கடி சொல்வீர்களே தூக்கிய பொற்பாதம் என்று; அந்தப் பொற்பாதம் நடராசருக்குத் தானே அமைந்திருக்கிறது. இறைவனுக்கு நடராசர் என்ற பெயர் இருக்கிறதே தவிர, இறைவிக்கு நடராணி என்று இல்லையே" என்றான்.

பரமேச்வரவர்மன் வாய் விட்டுச் சிரித்துவிட்டார். மகனை மற்றொரு புறம் அணைத்துக் கொண்டார். ஒரு பக்கம் அந்தச் சிறுமியும் மற்றொரு பக்கம் நரசிம்மனுமாக சக்கரவர்த்தி நடன மாதை அழைத்து, "இந்த இளங்கொடிகள் இருவருக்குமே நாட்டியக் கலையைக் கற்றுத் தாருங்கள்" என்றார்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு கூட நடனமாதின் இல்லத்தில் நடனம் பயின்ற அந்த இனிய நாட்களை எண்ணும்போது இனிமையாக இருந்தது. நடனமாது வியப்படைவாள்; இரு செல்வங்களும் இவ்வாறு எளிதில் பயின்று விடுகிறார்களே என்று வியப்பு அவளுடைய ஆர்வத்தை மேலும் மேலும் தூண்டும்.

ஆனால் அவளுக்கு ஒரு சந்தேகம்; நாட்டை வருங்காலத்தில் ஆட்சி செய்து பெரும் பொறுப்பினை ஏற்க வேண்டிய இளவரசர் நரசிம்மன் நாட்டியக் கலையில் மனத்தைப் பறிகொடுத்துவிட்டால், கவனத்தை இனிய கலையில் செலுத்திவிட்டால், ஆட்சித் திறன் என்னாவது" என்று கவலை அடைந்தாள்.



அவள் கவலைக்கு மருந்து கிடைத்துவிட்டது. இளவரசர் நரசிம்மவர்மர் கடல் கடந்து பல நாடுகளுக்கெல்லாம் செல்லப் போகிறார்.

இளைஞன் நரசிம்மனுக்கு ஏமாற்றமும், ஏக்கமும் சேர்ந்தன. தந்தையிடம் வாதாட முற்பட்டான்.

"நரசிம்மா! இந்தப் பரந்த உலகத்தில் நாட்டியக் கலை ஒன்று மட்டுமே கலை என்று நினைத்துவிடாதே! அறுபத்து நான்கு கலைகள் உள்ளன. திறம்பட ஆட்சி நடத்துவதும் ஒரு கலைதான். அந்தக் கலையை நீ கற்றுத் தேர்ச்சியடைய வேண்டும். வாள் வீசுதல், அம்பெய்தல், ஈட்டி எறிதல், குதிரை ஏற்றம், யானை ஏற்றம், மற்போர், சிலம்பம் அனைத்தும் பழக வேண்டும். எனது பாட்டனார், உனது முப்பாட்டனார் நரசிம்மவர்மர் கலைகளில் நிபுணர். அதேபோது மகாவீரர். மாமல்லர் என்ற புகழ்ப் பெயர் அவருக்கு எப்படி வந்தது தெரியுமா? பல்லவ பாண்டிய நாட்டு வீராதி வீரர்கள் அவரது திறமைக்கு வணக்கம் தெரிவித்தனர். நீயும் உன் முப்பாட்டனாரைப் போன்று மாமல்லனாக வேண்டும். வீராதி வீரனாக வேண்டும். பல நாட்டரசர்கள் பணிந்து வணங்கும் பராக்கிரம சாலியாக வேண்டும். கலை பல கற்றுணர்ந்த கலை மேதையாக வேண்டும். பல நாடுகளைச் சுற்றி வந்து அநுபவ அறிவு பெற வேண்டும்" என்று பல்லவ சக்கரவர்த்தி, நரசிம்மனுடைய வாதங்களுக்கு ஆணித்தரமாக மறுமொழி கூறிவிட்டார். விழி அழகுடன் விசால அறிவும் படைத்த அயல் நாட்டுச் சிறுமியைப் பிரிந்துச் செல்ல வேண்டுமே என்ற கவலை சிறுவன் நரசிம்மனுக்கு அப்பொழுது எழுந்தது.

"தந்தையே, நான் எந்தெந்த நாடுகளுக்குச் செல்ல வேண்டும்?" என்று தழுதழுத்த குரலில் கேட்டான்.

"எவ்வளவு ஊர்களுக்கு முடியுமோ - கடல் கடந்த நாடுகளுக்குச் செல்வது முன் பிறவியில் செய்த புண்ணியமாகும். எனக்குக் கிடைக்காத பெரும்

அதிர்ஷ்டத்தை நீ அடைகிறாய். உன்னுடன் வரும் படைத் தளபதி உனக்கு உறுதுணையாக இருப்பார். காஞ்சிமா நகரத்து வணிகர் குழுவினர் உன்னுடன் வருகிறார்கள். வாணிபத் தொடர்பான பல ஒப்பந்தங்களை அவர்கள் அங்கெல்லாம் செய்து கொள்வார்கள்" என்று சக்கரவர்த்தி கூறினார்.

"கடல் கடந்த நாடுகளிலும் நமது நாட்டைப் போன்று கோயில்கள் உள்ளனவா? கலை வளர்ந்து இருக்கிறதா? யார் ஆளுகிறார்கள்?" என்று நரசிம்மன் கேட்டான்.

"அவற்றையெல்லாம் அறிந்துகொள்ளத்தான் உன்னை அனுப்புகிறேன். நமது மூதாதையர்களின் உறவினர்கள் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு கடாரம், மாநக்கவாரம், நாகத் தீவு, சாவகம், புட்பகம், சோனகம் முதலிய நாடுகளுக்குச் சென்றனர். புதியவிதமான கோயில்களைக் கற்களின் உதவி கொண்டு செய்கிறார்களாம். புத்தபிரானுக்குப் பெரிய பெரிய கோயில்களை எடுப்பித்திருக்கிறார்களாம். நீ அவற்றை கொண்டு வா. தெரிந்து கொள்ளாததைத் தெரிந்து வா" என்று கூறி மேலே பேச்சுக்கு இடமில்லாமல் அங்கிருந்து புறப்பட்டு விட்டார் சக்கரவர்த்தி.

நரசிம்மனை ஏற்றிக் கொண்ட கலம் கடல் மல்லைத் துறையினின்று பாய் விரித்து மெல்ல மெல்ல அசைந்து அசைந்து நகர்ந்தது. கடற்கரையிலே அந்த விழி அழகிச் சிறுமி நின்று கொண்டிருந்தாள். சக்கரவர்த்திக்கு இதயமே கிடையாதா? சாவக நாட்டுப் பெண் பல்லவ நாட்டில்! பல்லவ இளவரசன் கடல் கடந்த நாடுகளில்!

அவனது விழியில் நீர் ததும்பித் திரையிட்டது. மறைந்தது. விழி நீர்த்திரை கரைந்தபோது கடற்கரையும், மாளிகைகளும் மறைந்துவிட்டன.

பல ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற நிகழ்ச்சி இது. மாமல்லபுரத்துப் பாறையில் அமர்ந்து இளவரசர் நரசிம்மர்



கனவு போன்ற அந்தச் சம்பவங்களை நினைவுப்படுத்திக் கொண்டார். தந்தை கூறியதைபோல் கடல் கடந்த நாட்டில் கண்டவற்றை அறிந்தவற்றையெல்லாம் நல்ல அநுபவமாகப் பெற்று வந்திருக்கிறார் இளவரசர். மேலும் வடக்கே அஜந்தா காடுகளிலும் மாறுவேடத்தில் சுற்றியலைந்து குகை ஓவியங்களைக் கண்டு மகிழ்ந்திருக்கிறார். அவரது உள்ளத்தில் ஆர்வத் தடாகம் ததும்பி நிற்கிறது. இலட்சியக் கனவு எனும் அலைகள் மோதி மோதிக் கரையைத் தழுவிச் செல்கின்றன.

கடல் கடந்த நாடுகளினின்று திரும்பிய பிறகு அவர் செய்த முதல் வேலைதான் நடனம் பயின்ற அந்த நாட்டிய மகளின் இல்லத்துக்கு விரைந்து சென்றதுதான். ஆனால், அவர் கண்டதும் நடந்த சம்பவங்களைக் கேட்டறிந்ததும் அவரது இளமைக் கனவுகளைக் குலைப்பனவாக இருந்தன.

## அத்தியாயம் - 10

# பிட்சு கொடுத்த ஓலை

நடனமணியின் வீட்டிற்குள் நுழைந்த நரசிம்மன் அங்கே தன் மனத்தைக் கவர்ந்த நல்லாளைக் காண முடியாது திகைத்தார். நடனமங்கையையும் காணவில்லை.

மூதாட்டி ஒருத்தி இளவரசரை வரவேற்றாள். இளவரசர் அங்கே வந்ததும் அவளுக்குப் பெருமையாக இருந்தது. எந்த விதமான உபசரணை செய்வது என்று புரியாமல் இங்குமங்கும் சிறித நேரம் ஓடினாள்.

"சுந்தரி, இங்கே வா... ஓடிவா" என்று குரல் கொடுத்தாள் மூதாட்டி. அவள்தான் செவிலித் தாய்.

மறுமொழி வரவில்லை. ராஜசுந்தரி பின் கட்டில் இருந்ததால் அவளது குரல் கேட்கவில்லை.

"சுந்தரி! சுந்தரி... சீக்கிரம். இங்கே யார் வந்திருக்கிறார்கள் என்று வந்து பார்" என்று மீண்டும் கூவினாள் செவிலி.

ராஜசுந்தரி குலுங்கும் நடையுடன் ஓடி வந்தாள். பாதச் சிலம்பு கலீர் கலீர் என்றது. கை வளையல்கள் குலுங்கின.

வாலிப இளமை வடிவெடுத்து நிற்கும் நரசிம்மவர்மரை அவள் கண்டாள். பரந்த தோள்களும், திரண்ட மார்பும் கம்பீரமான நோக்கும் கொண்டு, மேல் உத்தரியம் கீழே தவழ வெண் பட்டாடை சரசரக்க, ஒரு கரம் இடையிலே உள்ள வாளைப் பிடித்திருக்க, மற்றொரு கரம் மெல்ல முகவாயைத் தடவி யோசிக்க அவர் நின்ற கோலம் ராஜசுந்தரியை ஒரு கணம் சிலிர்க்க வைத்தது. புருவம் உயர்ந்தது. விழிகள் வட்டமிட்டன. கருவண்டு மலரில் இப்புறமிருந்து அப்புறத்திற்குப் பறப்பதுபோல் இருந்தது விழிகளின் நர்த்தனம்.

நரசிம்மனுக்கு உடனே ஏதும் பேசத் தோன்றவில்லை. அந்த வீட்டில் முன்பு இருந்தவர்கள் எங்கே? இவர்கள் வேறு குடும்பத்தவர்கள் போல் தோன்றுகிறது என்று எண்ணினார் நரசிம்மர்.

ராஜசுந்தரிக்கு இளவரசரை யார் என்று அடையாளம் தெரியவில்லை. அவரது வடிவழகில் திளைத்து நின்றாள். செவிலி எதற்காக அழைத்தாள்? அவளை நாணம் வந்து சூழ்ந்து கொண்டது.

"எதற்காக அம்மா அழைத்தீர்கள்?" என்று செவிலியை நோக்கிக் கேட்டாள் ராஜசுந்தரி, கடைக்கண்ணால் நரசிம்மனைப் பார்த்தவாறு.



செவிலி திடுக்கிட்டு, "என்ன, அப்படிக் கேட்டுவிட்டாய்...! வந்திருப்பவர் யார் என்று தெரியவில்லையா? மஞ்சத்தைக் கொண்டு போடு. தட்டிலே பழம் கொண்டுவா! ஆலம் கரைத்து எடுத்து வா! மயில் பீலிச் சாமரத்தை எடுத்து வா விசிறலாம்..." என்று "பரபரப்போடு கூறினாள்.

சுந்தரி மெல்ல நடந்தாள். இடை அசைந்தது. ஆனால் விழிகள் நகரவில்லை.

"அம்மா, அவர் யார் என்று நீங்கள் சொல்லவில்லையே..." என்று சுந்தரி மெல்லப் பேசினாள். செவிலி அவளருகே ஓடி, "இளவரசர் வந்திருக்கிறாரடி! சீக்கிரம் போய் நான் சொன்னதைச் செய்..." என்றாள்.

நரசிம்மர் தொண்டையைக் கனைத்துக் கொண்டு, "இந்த வீட்டில் முன்பு இருந்தவர்கள் இப்போது எங்கே இருக்கிறார்கள் என்று தெரியுமா?" என்று கேட்டார். தான் அவர்களைக் காணவரவில்லை என்பதை மறைமுகமாகத் தெரிவிக்க, செவிலி சற்று யோசித்தாள்... "நாங்கள் இங்கு வந்து ஒரு மாதம்கூட ஆகவில்லை. இதற்கு முன்பு இங்கு இருந்தவர்கள் தெற்கே மதுரைக்குச் சென்றுவிட்டார்களாம்..." என்றாள்.

நரசிம்மன் திடுக்கிட்டு, தன் உணர்ச்சியைப் புலப்படுத்திக் கொள்ளாமல், "அப்படியென்றால் அவர்களிடம் நாட்டியம் பயின்றவர்கள்...?" என்று கேட்டார், அயல் நாட்டினின்று வந்த வணிகர் குலச் செல்வியைப் பற்றி அறிய விரும்பி,

செவிலியால் சரியான தகவல் கூற முடியவில்லை.

"நாங்கள் வடக்கே இருந்து வந்தோம். ஏகாம்பர ஆலயத்தில் நிர்த்யாஞ்சலி செய்ய பல்லவ சக்கரவர்த்தி வரவழைத்தார். நான் வரும்போது இந்த வீட்டில் யாரும் இல்லை..." என்றாள் செவிலி.

''பல்லவச் சக்கரவர்த்திக்குத் தங்களை எப்படித் தெரியும்?'' என்று கேட்டார் நரசிம்மர்.

செவிலியால் உடனே மறுமொழி கூற முடியவில்லை. அதற்குள் உட்புறமிருந்து கையில் தோகையுடன் வந்த சுந்தரி மெல்ல விசிறியவாறு, "காஞ்சிக்கு வரவேண்டும் என்று எனது தாய் துடித்துக் கொண்டிருந்தாள்..'' என்று கூறவும், நரசிம்மர் சுந்தரியின் அங்க எழிலமைப்பை ஒரு முறை பாதாதி கேசம்வரைப் பார்த்து ''ஓகோ... அப்பொழுது இவர்கள்...'' என்று செவிலியைச்சுட்டிக் காட்டிக் கேட்டார்.

ராஜசுந்தரி மறுமொழி கூறுவதற்கு முன்பு செவிலியே முந்திக் கொண்டு, "நான் வளர்ப்புத் தாய்; எங்கள் வரலாறு மிகச் சோக மயமானது. இப்போது தாங்கள் அறிந்து வேதனைப்பட வேண்டாம். ஏகாம்பரர் கோயிலில் இறைவன் முன்பு நடனாஞ்சலி செய்யும் பணியை ஏற்று ஏதோ எங்கள் பசிக்குக் கால் வயிறு குடித்து வருகிறோம்'' என்றாள்.

நரசிம்மன் பெருமூச்சு விட்டார். பிறகு, புறப்படுவதற்காகத் திரும்பியவரைத் தடுத்த செவிலி, ''இளவரசர் அயல் நாடுகளுக்குச் சென்றிருந்ததாகக் கேள்விப்பட்டேன். இப்பொழுதுதான் வந்தீர்களா...?'' என்று கேட்டாள்.

"இன்றுதான்'' என்றார் இளவரசர்.

"வந்தவுடனே இங்கு வருவதற்கு நாங்கள் பாக்கியம் செய்துள்ளோம்''.

''இந்த வீட்டிலிருந்த நடனமாதிடம் நானும் அயல் நாட்டுப் பெண் ஒருத்தியும் நடனம் கற்றோம்...''

"தாங்களுமா? நாட்டியக் கலை மிகுந்த அதிர்ஷ்டம் செய்துவிட்டது. நாட்டியத்தைத் தொடர்ந்து பயிலலாமே...'' செவிலி கூறவும், இளவரசரிடமிருந்து என்ன மறுமொழி வரப் போகிறதோ என்று ராஜசுந்தரி எதிர் பார்த்தாள்.



இளவரசர் பெருமூச்சு விட்டார். "இறைவனின் சித்தம் எப்படியோ, அலைகடலுக்கு அப்பால் தமிழ் நாட்டுக் கலைகளுக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது. நமது சிற்பிகளும் சித்திரக்காரர்களும் அங்கே பணி புரிகிறார்கள். நாட்டியத்தை அறிய அங்குள்ளவர்களுக்கு மிகுந்த ஆவல் இருக்கிறது. உம்..'' என்று கூறிப் பெருமூச்சு விட்டார்.

ராஜசுந்தரியின் விழிகள் மலர்ந்து விரிந்தன. "நாட்டியக் கலைக்கு அவ்வளவு ஆதரவா அங்கு...?'' எனக்குக் கூட அங்கெல்லாம் சென்று கற்ற கலையை மற்றவருக்குப் புலப்படுத்த வேண்டும் எனும் ஆவல். இங்கே ரசனை போதாது...'' என்று கூறி ஏதோ சொல்லக் கூடாததைச் சொல்லி விட்டதுபோல் நடுக்கமுடன் தலைகுனிந்து கொண்டாள்.

இளவரசர் திரும்பி ராஜசுந்தரியைப் பார்த்தார், "என்ன சொல்கிறாய்? இங்கே ரசனை போதாது என்றா கூறுகிறாய்...?'' என்று கேட்டார்.

செவிலி குறுக்கிட்டு ''அவள் குழந்தை... ஏதோ ஆர்வத்தில் அப்படிச் சொல்லிவிட்டாள்...'' என்று பரபரப்புடன் கூறிச் சமாதானப்படுத்த முயன்றாள்.

"சொல்வதில் ஏதும் தவறில்லை. மக்களின் ரசனைதான் கலையை வளர்க்கும். அது மன்னனின் ரசனையைப் பொறுத்தது. என் தந்தை கலை ஆர்வம் மிக்கவர். ஆனால் கொடிய போர் அவரது கவனத்தை வேறு எங்கெல்லாமோ மாற்றிவிட்டது...'' என்றார் இளவரசர்.

''இப்படி அமர்ந்து பேசலாமே'' என்று கேட்டுக் கொண்டாள் செவிலி.

''இல்லை, இல்லை. இன்று பல முக்கியமான வேலைகள் உள்ளன. மற்றொரு நாள் வருகிறேன்'' என்று கூறிப் புறப்பட்டார் இளவரசர்.

இளவரசருக்கு ராஜசுந்தரியின் வடிவம் மனத்திலே பதிந்துவிட்டது. இப்படியொரு சித்திரம் போன்ற வடிவமா? நான்முகனிடம் படைப்பில் நாரிமணிகளின் அங்க அமைப்பு இதயத்தைச் சுண்டுகிறது என்று எண்ணினார்.

ராஜசுந்தரிக்கு இரவு உறக்கம் வரவில்லை! செவிலியின் உறக்கத்தையும் கெடுத்தாள்.

"அம்மா... இளவரசருக்கு மிகுந்த கலையார்வம்தானே!"

"ஆமாம், ராஜசுந்தரி!"

"இதற்கு முன்பு இந்த வீட்டில் யார் இருந்தார்கள் என்று உனக்குத் தெரியுமா?"

"தெரியாது..."

"பிறகு எப்படிச் சொன்னாய், மதுரைக்குச் சென்றுவிட்டார்கள் என்று?"

"கேள்விப்பட்டேன்! இந்த வீட்டில் ஒருவிதப் பேய் நடனமாடுவதாகவும், அந்தப் பேயை அவள் நேரிடையே ஒரு நாள் பார்த்துவிட்டதாகவும் அதனால் பயந்து இந்த வீட்டை விட்டே ஓடிவிட்டாள் என்றும் கூறுவார்கள்...!"

ராஜசுந்தரி சிரித்தவாறு, "பேயா... அதுவல்லவா அந்தப் பெண்ணின் நடனத்தைக் கண்டு பயந்திருக்க வேண்டும்...?" என்றாள்.

"உனது நடனத்தைக் கண்டு பயந்து அது வரவில்லை போலிருக்கிறது" செவிலியும் சொல்லிச் சிரித்தாள்.

"ஆமாம், அம்மா! நாம் ஒருநாள்கூட இந்தப் பேயைச் சந்தித்ததில்லையே" என்று கூறியவள், "ஏனம்மா, பேய் இருக்கும் வீட்டில் நாம் குடியிருக்கலாமா?" என்று தன் அச்சத்தைத் தெரிவித்தாள்.



"நாம் இந்த வீட்டிலே நிரந்தரமாக வாழ்வதற்காக வரவில்லை சுந்தரி. உனக்குத் தெரியாது. நமது இலட்சியமே பழிக்குப் பழி... பல்லவ குலத்தின் மீது பழிவாங்க வேண்டும் என்ற சாளுக்கிய மன்னரின் கட்டளையை மறந்துவிட்டாயா? அதை நிறைவேற்ற வந்துள்ளோம்".

"கட்டளை எனக்கு எப்படித் தெரியும். நீங்கள்தாம் அடிக்கடி சொல்வீர்கள். எனக்கென்னவோ பழிவாங்கும் மனப்பான்மையே கிடையாது".

"சரி சரி, இரவு நேரமாகிறது தூங்கு. விடிவெள்ளி முளைக்கு முன்பு எழுந்திருக்க வேண்டாமா? உடலைச் சரிவரப் பாதுகாத்தால்தான் பொருளீட்ட முடியும். பொருளீட்டினால்தான் இந்தப் பேய் வீட்டை விட்டுப் பெரிய மாளிகைக்குள் குடிபுகலாம் சுந்தரி. இளவரசரது பார்வை உன்மீது விழுந்துவிட்டது. அவரை உன் வலையில் சிக்க வைக்க மறந்துவிடாதே" என்று கூறியவளின் விழிகளை உறக்கம் சுற்றவும் நித்திரையில் ஆழ்ந்தாள்.

அப்பொழுது கதவு தட்டும் சப்தம் கேட்டது. சுந்தரி உறங்காது விழித்திருந்தாள். அந்த ஒலி அவளுக்குப் பயத்தை அளித்தது. கண்ணை இறுக மூடிக் கொண்டாள்.

கதவு தட்டப்பட்டது. விட்டு விட்டுத் தட்டப்பட்டது. மெல்ல தட்டப்பட்டது. ராஜசுந்தரி காது கொடுத்துக் கேட்டாள். அவளுக்கு ஒருவித பயம் ஏற்பட்டது.

கதவு மீண்டும் தட்டப்பட்டது. ராஜசுந்தரி எழுந்து சென்று செவிலியை எழுப்பினாள். திடுக்கிட்டு விழித்த செவிலி கதவு தட்டப்படும் ஓசையை நன்றாகக் கேட்டாள். கதவைத் திறந்து யார் என்று பார்க்க எழுந்தாள்.

"அம்மா, அவசரப்பட்டுக் கதவைத் திறக்காதே" என்று சுந்தரி எச்சரித்தாள்.

ஆனால் செவிலி ஜாடை காட்டி விட்டுக் கதவை நோக்கிக் கையில் விளக்குடன் சென்றாள். அவள் ஒரு கையில் குறுங்கத்தி மறைந்திருந்தது.

"யாரது?" என்று குரல் கொடுத்தாள் செவிலி.

கதவின் மறுபுறமிருந்து மெல்லிய குரலில் செய்தி வந்தது. "நான் தான், கதவைத் திற. உரக்கப் பேச முடியாது".

நடப்பது நடக்கட்டும் என்று செவிலி கதவை மெல்லத் திறந்தாள்.

பிட்சு - இப்பொழுது குத்திக் கொல்லப்பட்டாரே - பிட்சு அவர் நின்று கொண்டிருந்தார்.

"நீ எங்கே வந்தாய்" செவிலி அதட்டினாள். பிட்சு சிரித்தார்.

"கதவைத் தாளிடு செவிலி... முக்கியமான பல விஷயங்கள் பேசவேண்டும்" என்று மெல்லச் சிரித்தார்.

"பேசுவதற்கு இது நேரமா? பெண்கள் தனியே இருக்கும்போது வருவதும் நியாயமா?" செவிலி சீறினாள்.

"நான் என்ன அந்நியனா? சில நிமிடங்கள் முக்கியச் செய்தியைச் சொல்லிவிட்டுப் போய் விடுகிறேன்" என்று செவிலியை மெல்லத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தார்.

"என்ன, சொல்லு... பாதி தூக்கத்தில் எழுந்து வந்தேன். கையில் என்ன பார்த்தாயா? தவறிப் போய் உன் மீது பாய்ச்சியிருப்பேன்..."

"ஓகோ! பல்லவநாட்டில் இத்தகைய பாதுகாப்புத் தேவையாக இருக்கிறதா? ஆமாம், ஆமாம். அழியப்போகும் ஒரு நாட்டில் இப்படியெல்லாம் சூழ்நிலை ஏற்படும்".

"உம்; வந்த காரியத்தைப் பேசு..."

"சாளுக்கிய சேனாதிபதி செய்தி அனுப்பியுள்ளார்!"

"கொடுத்துவிட்டுப் போய்விடு"

"செவிலி, இவ்வளவு கண்டிப்பாகப் பேசுகிறாயே, இருளிலும் இரவு கடைசி ஜாமத்திலும் வந்த எனக்கு இதுதானா வரவேற்பு?"



"துறவிக்கு வேறு எப்படி வரவேற்பு அளிப்பது? பெண்கள் தனியே இருக்கும்போது உன்னைப் போன்ற துறவிகளை இருட்டு வேளையில் சந்திப்பது பிசகு. சரி; செய்தியைப் படித்துப் பார்க்கிறேன். நீங்கள் போகலாம்..."

"பிறகு எப்போது வருவது?"

"இரவில்லாத இருளற்ற வேளையில்".

"என்ன இப்படிச் சொல்கிறாய் செவிலி. பகலில் நான் இங்கு வருவதை யாராவது பார்த்துவிட்டால்...?"

"இரவு வேளையில் வருவது இன்னும் மோசம். இங்கு வருபவர் யாராவது பார்த்து விட்டால்...?"

"ஓகோ... இரவில் நகர பிரமுகர்கள் வர ஆரம்பித்துவிட்டார்களா?"

"வருகிறார்கள், வந்தமர்ந்துச் செல்கிறார்கள். சுந்தரி இணங்குவது இல்லை. அவள் இலட்சியமே புரியவில்லை. சரி, சரி போய் வாருங்கள்" என்று கூறிய செவிலி குரலைத் தாழ்த்திக்கொண்டு, "சுந்தரி விழித்துக் கொண்டிருக்கிறாள். இன்னொரு நாளைக்கு வாருங்கள். ஓலையிலுள்ளதைப் பிறகு படித்துப் பார்க்கிறேன்..." என்றாள்.

பிட்சு போய்விட்டார். கதவு தாழிடும் ஓசை கேட்ட பிறகு சுந்தரி வந்தாள்.

"யாரம்மா...? பேயோ என்று பயந்துவிட்டேன்..." என்று தாயின் தோளைப் பற்றியவாறு கேட்டாள்.

"பேயைவிடக் கொடியவன், சரி வா, படுப்போம். உறக்கம் விழிகளை உண்டுவிடத் துடிக்கிறது. இன்னும் சிறிது நேரத்தில் பொழுது புலர்ந்துவிடும், கோயிலுக்குப் போக வேண்டும்" என்றாள்.

சுந்தரிக்கு உறக்கம் வரவில்லை. விழித்துக்கொண்டே இருந்தாள். சிறிது நேரத்திற்கெல்லாம் உறக்கம் கண்களைச் சுழற்றியது. எவ்வளவு நேரம் உறங்கினாளோ, செவிலி அவளைப் பலமாக உலுக்கி எழுப்பிக் கொண்டிருந்தாள்.

எழுந்து குளித்து ஆடையணிந்து ஏகாம்பரர் கோயிலுக்கு விரைந்தபோது சந்நிதியிலே இளவரசர் நின்று கொண்டிருப்பதைக் கண்டாள்.

"உனக்காகக் காத்திருக்கிறேன் சுந்தரி" என்று அவர் கூறிய வார்த்தையைக் கேட்டு சுந்தரியின் மெய் சிலிர்த்தது.

## அத்தியாயம் - 11

# பல்லவர்கள் கலை அழியக் கூடாது

நரசிம்மவர்மன் சிந்தையில் கடல் கடந்து வந்த வணிகரின் மகள் திடீரென்று மீண்டும் தன் நாட்டிற்குச் சென்றுவிட்டதைப் பற்றிய நினைவே நடமாடியது. தந்தையிடம் அந்த விழி அழகியைப் பற்றிக் கேட்கத் துணிவு இல்லை என்று சொல்ல முடியாது. நாணம் மேலிட்டு நின்றது என்று வேண்டுமானாலும் சொல்லலாம். இப்பொழுது முழு இளமையும் ததும்பி நிற்கும் வீர இளைஞனாகத் திகழ்ந்தார் இளவரசர். அவர் இதயத்தின் ஒரு மூலையில் விழி அழகியைப் பற்றிய நினைவு வந்து நின்றது. அந்த நினைவு அழகிய உருவெடுத்தது. அந்த உருவத்திற்கு அங்கங்கள் தோன்றின. அழகிய முகமும், கரங்களும், செம்பொற் பாதங்களும் காணப்பட்டன. முகத்தில் உள்ள கருவிழிகள் கருவண்டினைப் போல் வட்டமிட்டுப் பறந்தன. இரு கரங்களும் பெண் யானையின் துதிக்கையைப் போல் அசைந்தாடின. இரு பாதங்களும் மஞ்ஞையின் பாத நெளிவுகளுக்கு இணையாயின.



ஓர் நடனப் பெண்ணின் தோற்றம் அதில் உருவாகியது. அந்த உருவத்தைக் கற்பனையிலிருந்து நீக்கிப் புறத்தோற்றத்தில் கொண்டு வர முயன்றபோது அந்த விழி அழகி வந்து நின்றாள்.

விழி அழகி எங்கே? அவள் பெயரைக் கூடக் கேட்டுக் கொள்ள மறந்துவிட்டோமே. அவளும் இளவரசரும் நாட்டியம் பயின்ற இடத்தில் நாட்டியங் கற்றுக் கொடுத்த நடன மணியையும் காணவில்லை.

சக்கரவர்த்தியைத் துணிந்து கேட்டு விட விரும்பி வாய்ப்பொன்றை ஏற்படுத்திக் கொண்டார். தந்தையிடம் பேசியதில் இருந்து அந்த விழி அழகிக்கு அவளுடைய நாட்டினின்று அவசர அழைப்பு வந்துவிட்டதாகவும் அவள் சென்று விட்டதாகவும் அறிந்தார். சிறிது நாட்களாக நரசிம்மன் மனத்தில் சலனமிருந்தது. அந்தச் சலனம் மெல்ல மெல்ல ராஜசுந்தரியின் இல்லத்திற்குச் சென்று வருவதால் குறைந்தது.

ராஜசுந்தரியின் கலை ஆர்வம் இளவரசரை மிகவும் கவர்ந்தது.

"நான் நாட்டியங் கற்றுக் கொண்டேன். தொடர்ந்துப் பயிலவும் எனக்கு விருப்பம். தங்களிடம் பயில விரும்புகிறேன்" என்று இளவரசர் கேட்டபோது, ராஜசுந்தரிக்கு நாணம் மேலிட்டது.

"ஒன்று தங்களை வேண்டிக் கொள்ளலாமா?" என்று ராஜசுந்தரி கேட்டாள்.

"ஒன்று என்ன, ஓராயிரம் கூட வேண்டிக் கொள்ளலாம். நான் இந்த நாட்டு இளவரசர் என்ற முறையில் இங்கே பழகவில்லை. நடனம் கற்றுக் கொள்ள வந்ததும் அந்த உயர் நிலையில் அன்று. பல்லவ நாட்டுக் கலைஞன் என்ற முறையில்தான். நீங்கள் என்ன வேண்டுமானாலும்

கேட்கலாம். ஒரு குடிமகனால் என்ன செய்ய முடியுமோ அதை நிறைவேற்றுவேன்" என்று நரசிம்மன் கூறினார்.

"நான் சாதாரண நாட்டியக்காரி. என் வீட்டிற்கு நீங்கள் வருவதே எனது முற்பிறப்பின் புண்ணியம். என்னை மரியாதை மிகுந்த சொற்களால் 'நீங்கள் - தாங்கள்' என்று அழைப்பதை நான் விரும்பவில்லை..." என்றாள் ராஜசுந்தரி.

இளவரசர் மெல்ல நகைத்தார். "மரியாதை எனது தந்தை கற்றுக் கொடுத்தது. கலைஞர்களை மிக மரியாதையுடன் பாராட்ட வேண்டும். மரியாதையுடன் பழக வேண்டும். அந்த முறையில்தான் நான் தங்களை அழைக்கிறேன்" என்றார்.

ராஜசுந்தரியின் விழிகள் இளவரசரை நோக்கின. கம்பீரம் மிகுந்த அந்த விழிகளில் ததும்பி நிற்கும் கலை உணர்வு அவளை மிகவும் கவர்ந்தது.

நரசிம்மன் வாரத்தில் இரண்டு மூன்று முறைகள் ராஜசுந்தரியின் இல்லத்திற்கு வந்து பரத முனிவரின் நாட்டியக் கலையைப் பற்றி விவாதிப்பார். அபிநய முத்திரைகளைக் கற்றுக் கொள்வார்.

ஒருநாள் வரும்போது ஓவியரான பெரிய குமார தேவனை அழைத்து வந்தார். அறிமுகப்படுத்தினார்.

"ஓவியரே... வணக்கம்" என்று ராஜசுந்தரி குதூகலத்துடன் வரவேற்றாள்.

"எனக்குச் சித்திரம் என்றால் கொள்ளை ஆசை" என்றாள் ராஜசுந்தரி.

"இவனுக்கு நாட்டியம் என்றால் மிகவும் ஆர்வம்" என்று குமாரதேவனைப் பார்த்தபடியே கூறினார் இளவரசர்.



குமாரதேவனையே இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் ராஜசுந்தரி. அந்தச் சமயம் குமாரதேவன் வேறு எங்கோ பார்த்துக் கொண்டிருந்தான். ராஜசுந்தரியை நோக்கியபோது அவள் தன் விழியைத் தாழ்த்திக் கொண்டாள். ஒரே கணத்தில் இருவரது விழிகளும் சந்தித்துக் கொண்டன.

"சித்திரமும் நாட்டியமும் இரட்டைக் குழந்தைகள்" என்றாள் ராஜசுந்தரி.

"இரட்டைக் குழந்தைகள் ஒரே மாதிரி கலையுணர்வுடன் திகழ்வதில்லை. இவன் சித்திரக் கலைஞன். இவனுடன் பிறந்த இளையவன் பெரும் வீரன். அவனுக்கும் கலைக்கும் தொடர்பே இல்லை. கலையும் வீரமும் ஒரே இடத்தில் இருக்காது எனத் தோன்றுகிறது" என்று கூறி இளவரசர் மெல்ல நகைத்தார்.

குமாரதேவன் குறுக்கிட்டு, "இளவரசர் அதற்கு விதிவிலக்கு. ஏன்? - பல்லவ சக்கரவர்த்திகள் அனைவருமே கலைஞர்கள்; வீரர்கள், மாமல்ல சக்கரவர்த்தினை எடுத்துக் கொள்ளுங்களேன். அவர் சிறந்த சிற்பக் கலைஞர். அவரது தந்தை மகேந்திரவர்மருக்குச் சித்திரக்காரப் புலி என்ற பெயருண்டு. நமது இளவரசர் சிறந்த ஓவியர்; நாட்டியக் கலையையும் அறிய இப்போது வந்திருக்கிறார்..." என்றான்.

ராஜசுந்தரியின் விழிகளில் தனி ஒளி பொங்கிப் பரவியது.

நரசிம்மன் வரும்போதெல்லாம் குமாரதேவனையும் அழைத்து வரத் தவறுவதில்லை. ஒருநாள் பொதுவாக சித்திரக் கலையைப் பற்றிப் பேச்சு வந்தது. அஜந்தா ஓவியங்களைப் பற்றி அது விரிந்தது. ராஜசுந்தரி அஜந்தா சித்திரங்களைப் பற்றிப் பேசத் தொடங்கினாள். அதைக் கேட்கக் கேட்க இளவரசருக்கு ஆர்வம் மிகுந்தது" உம். உம். இன்னும் சொல்..." என்று சுவாரஸ்யமாகக் கேட்கத் தொடங்கினார்.

"ராஜசுந்தரி, நீங்கள் அஜந்தா போயிருக்கிறீர்களா?" என்று கேட்டார் இளவரசர்.

"ராஜசுந்தரி மறுமொழி ஏதும் கூறாமல் எழுந்து திரையின் மறுபுறம் சென்றாள். திடீரென்று அவள் எழுந்து சென்றது இருவருக்கும் வியப்பாயிருந்தது

"ராஜசுந்தரி ஏன் சென்றுவிட்டாய்?" என்று குமாரதேவன் கேட்டான்.

"நீங்கள் உரிமையுடன் அழைத்துப் பேசுகிறீர்கள். ஆனால் உங்கள் இளவரசைப் பார்த்தீர்களா? நீங்கள் - தாங்கள் என்று அழைத்து என்னைத் தலைகுனிய வைக்கிறார்..." என்றாள்.

இளவரசர் கலகலவென்று நகைத்தார். "சரி, சரி... இனி உன்னை நீங்கள் என்று அழைக்க மாட்டேன். என்ன?"

ராஜசுந்தரி அஜந்தாவில் உள்ள குடையப்பட்ட மண்டபங்களின் சுவர்களின் தீட்டப்பட்டுள்ள சித்திரங்களைப் பற்றி விவரித்தாள்.

நரசிம்மன் ஆவலுடன் கேட்டார். குமாரதேவன் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

"மகான் புத்தரின் சரித்திரம் விவரிக்கப்பட்டுள்ளது. இன்றைக்கெல்லாம் அந்த அற்புதச் சித்திரத்தைப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருக்கலாம்..." என்று ராஜசுந்தரி விவரித்துக் கொண்டே போனபோது நரசிம்மன் ஆவேச மிகுதியில் உணர்ச்சியுடன், "ராஜசுந்தரி நீ அஜந்தாவுக்கு எப்போது சென்றாய்?" என்று கேட்டார்.

ராஜசுந்தரி சிரித்தாள். "நான் அஜந்தாவைப் பார்த்ததில்லை. எனது தாயார் கூறியிருக்கிறாள்" என்றாள்.

"உனது தாயார் அஜந்தாவைப் பார்த்திருக்கிறாளா?" என்று குமாரதேவன் ஆவலுடன் கேட்டான்.



"ஓ...? அவர்கள் அஜந்தா மலைக் காடுகளில் வாழ்ந்திருக்கிறார்கள்" என்றாள்.

"அங்கேயே இருக்கிறார்களா? உன் தாய் பாக்கியசாலி. அவர்களுடைய வயிற்றில் பிறந்த நீ மிக மிக பாக்கியசாலி. இன்னும் என்ன சொல்லியிருக்கிறாள். சொல்கிறாயா? உணவு வேண்டாம்; உறக்கம் வேண்டாம். கேட்டுக் கொண்டே இருப்போம்?" என்று பரபரப்புடன் கூறினார் நரசிம்மன்.

"நான் அவ்வளவு பெரிய பாக்கியசாலி இல்லை. ஓரளவுக்குத்தான் எனக்கு அந்த சித்திரத்தைப் பற்றித் தெரியும். என் தாயைக் கேட்டுச் சொல்கிறேன்... அவர்களையே அஜந்தாக் கதையைச் சொல்ல சொல்கிறேன்..." என்று ராஜசுந்தரி உற்சாகத்துடன் கூறி விரைந்து உள்ளே ஓடினாள்.

அவளுடைய செவிலி கவலை தோய்ந்த முகத்துடன் நின்று கொண்டிருந்தாள்.

"அம்மா... அம்மா... இளவரசருக்கு அஜந்தாவின்மீது கொள்ளை ஆசை அம்மா..." என்று கூறிக்கொண்டே ஓடி வந்தாள்.

"உன் மீதுதான் ஆசை வந்துவிட்டது என்று கூறப்போவதாக நினைத்தேன்..." என்றாள் செவிலி. மெல்ல சிரித்துக் கொண்டே ராஜசுந்தரி நாணமடைந்தவளாக, "போ, அம்மா! உனக்கு விளையாட்டுப் பேச்சுப் பேச இப்போதுதான் நேரம் கிடைத்ததா? இளவரசருக்கு அஜந்தா சித்திரங்களைப் பற்றிக் கேட்டறிய மிகுந்த ஆர்வம். நீங்களே சொல்கிறீர்களா...?" என்று கேட்டாள்.

செவிலி மௌனமாக இருந்தாள். "ஏன் அம்மா இப்படி மௌனமாக இருக்கிறாய். சற்று என்னுடன் வாருங்கள்! நீ பார்த்த அதிசயத்தை அவர்களுக்குக் கூறுங்கள்!" என்று மீண்டும் வற்புறுத்தினாள்.

செவிலி சுற்சிலையாய் இருந்தாள். ராஜசுந்தரி தாயின் தோளைப் பிடித்து உலுக்கி, "அம்மா, அம்மா... ஏன் இப்படி மௌனமாகிவிட்டீர்கள்? அவர்கள் காத்திருப்பார்கள்" என்றாள் பரபரப்புடன்.

"அவர்கள் என்றும் காத்திருக்க வேண்டியதுதான்" என்று அழுத்தமாகக் கூறினாள்.

"என்னம்மா சொல்கிறாய்...?"

"அஜந்தாவைப் பற்றி அவர்களுக்குச் சொல்லக்கூடாது!"

"ஏனம்மா?"

"பல்லவர்கள் அஜந்தாவைப் பற்றி அறியக் கூடாது."

"நாம் பல்லவ நாட்டிலேதானே இருக்கிறோம்!"

"தெரியும். நாம் இங்கே இருப்பது வேறு காரணத்திற்கு. அஜந்தாவைப் பற்றி அவர்கள் அறியக் கூடாது."

"ஐயோ நான் சொல்லி வந்திருக்கிறேனே அம்மா!"

"வேறு ஏதாவது காரணம் சொல்லித் தப்பித்துக் கொள்!"

செவிலி கண்டிப்பாகக் கூறிவிட்டாள். வெளிக் கூடத்தில் குமாரதேவனின் குரல் கேட்டது. ராஜசுந்தரி சோர்ந்த முகத்துடன் சென்றாள்.

அவள் கண்களில் நீர் தளும்பியது. "என்ன ராஜசுந்தரி சோர்வுடன் வருகிறாய்..." என்று குமாரதேவன் கேட்டான்.

"என் கதையைக் கூற நான் மறந்துவிட்டேன். இங்கிருப்பவர் எனது வளர்ப்புத் தாய். அவர்கள் அஜந்தாவைப் பார்த்தது இல்லையாம்... என் தாய்



கூறியிருக்கிறார்களாம். அவர்கள் கூறியதைத்தான் இதுவரையில் எனக்குக் கதை போல் சொல்லியிருக்கிறாள்..." என்று ராஜசுந்தரி கூறும்போது அவள் குரல் தழுதழுத்தது.

"ஓகோ...!" என்றார் நரசிம்மன். அவர் எழுந்துவிட்டார். "எப்படியாவது அஜந்தாவைப் பார்த்து வந்துதானாக வேண்டும்..." என்று முணுமுணுத்தார்.

ராஜசுந்தரியிடம் விடை பெற்றுக் கொண்டார். மறுநாளிலிருந்து இளவரசரை அங்கே காணவில்லை.

இளவரசரும் குமாரதேவனும் அஜந்தா செல்லும் திட்டத்தை மேற்கொண்டு அதை நிறைவேற்றப் புறப்பட்டு விட்டனர்.

ராஜசுந்தரி இளவரசரையும் குமாரதேவனையும் எதிர்பார்த்துக் காத்திருந்தாள். ஒருநாள் ஏமாற்றம், பல நாட்கள் ஏமாற்றமாகியது. இதற்கிடையில் ராஜசுந்தரியின் நாட்டியத் திறன் காஞ்சியிலே பிரபலமாகியது. அவளது அழகும், கலைத்திறமையும் அனைவரையும் கவர்ந்தன. அவள் காலடியில் விழப் பல பெருஞ் செல்வந்தர்கள் சித்தமாக இருந்தனர். அவளோ இளவரசருடைய வரவை எதிர்பார்த்திருந்தாள்.

ஓராண்டு ஓடியது. அந்தக் கலையரசி கொலைக் குற்றம் சாட்டப் பெற்று இன்று காஞ்சி சிறையில் வாடும் நிலைமை திடீரென்று ஏற்பட்டுவிட்டதே!

அத்தியாயம் - 12

# இறங்கிய கயிறு

**கா**ஞ்சிக் கோட்டையின் வாயிலுக்கு அருகேயுள்ள மேற்குச் சிறைச்சாலையில் ராஜசுந்தரி அடைக்கப்பட்டாள். காஞ்சியின் புகழ் பெற்ற நடனக்காரி இருள் நிறைந்த அறையில் தள்ளப்பட்டாள். அங்கு அசைவுகள் மூலமும் விழியின் மோகனப் பார்வை மூலமும் நகரத்தையே போதை கொள்ளச் செய்த நங்கை தன்னந் தனியளாய்ச் சிறையில் தள்ளப்பட்டாள்.

ராஜசுந்தரிக்கு முதலில் ஒன்றுமே தோன்றவில்லை. கொலைக் குற்றம் சிறைத் தண்டனை என்ற பேச்சு, மன்னனின் எதிரே ஒலிக்கும்போது ஏதோ தனி உலகத்திலிருப்பது போன்ற உணர்வில் இருந்தாள். பல்லவ சக்கரவர்த்தியை அவள் இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். இவ்வளவு அருகில் சக்கரவர்த்தியைக் காணமுடியும் என்று அவள் கனவில் கூடக் கருதவில்லை. ஏதோ ஓரிரு முறை அவள் அவரைச் சந்தித்துப் பேசியிருக்கிறாள். என்ன பேசினோம் என்று கூட இப்பொழுது நினைவில்லை. அவர் ஏதோ பாராட்டிக் கூறிய வார்த்தைகளும் அருகே இருந்தவர் அதைக்கேட்டு நகைத்ததும் பிறகு தொடர்ந்து புகழ்ந்து கொண்டிருந்ததும் மட்டுமே இப்பொழுதும் நினைவிலிருக்கின்றன.

சக்கரவர்த்தியின் இனிய தோற்றமும் அவரது விழிகளில் ததும்பும் கனிவும் அவளை அப்போதும் கவர்ந்திருக்கின்றன. இளவரசர் நரசிம்மன் பேரழகுடையவராயிருக்கிறார் என்றால் ஏன் இருக்க மாட்டார்? சக்கரவர்த்தியின் அழகும் ராணியின் பொலிவும் ஒன்று சேர்ந்து இளவரசரை உருவாக்கியிருக்கின்றன.



நோய்வாய் பட்டிருக்கும் சக்கரவர்த்தியின் இளைத்த உடலைப் பார்க்கும்போது ராஜசுந்தரிக்கு ஒன்றுமே பேசத் தோன்றவில்லை. வைத்தியர் உத்தரவு போட்டு சிறைச் சாலைக்கு அழைத்துச் செல்லுங்கள் என்று சொல்லிய குரல் கூட எங்கோ பாதாள லோகத்திலிருந்து கேட்பதுபோலவே தோன்றியது. சில நிமிடங்கள் சக்கரவர்த்தியைப் பார்த்துக் கொண்டிருந்த இனிய நினைவோடு அவள் காவலருடன் சென்றாள்.

அப்போதும் தன்னைச் சிறையிலடைக்கப் போகிறார்கள் என்ற எண்ணம் அவளுக்குத் தோன்றவில்லை.

நல்ல வேளையாக அவளுக்குண்டான மரியாதையைக் காவலர்கள் குறைக்கவில்லை. மூடியிட்ட சிவிகை வந்தது. இரு புறமும் குதிரை வீரர்கள் வந்தனர்.

இளவரசி அல்லது அரசகுலப் பெண்கள் செல்லும்போது இத்தகைய மரியாதை உண்டு. முன்னும் பின்னும் ஏந்திய வேலுடன் வீரர்கள் செல்வர். இப்போது இருபுறமும் செல்கிறார்கள். ஒரு வேளை அவள் தப்பி ஓடிவிட்டால்...?

"தப்பி ஓடிவிடுவாளா? அவ்வளவு பயங்கரவாதியா அவள்?"

"ஏய், சிங்கா! இன்றைக்கு யார் முகத்தில் விழித்தாய்?" என்று ஒரு காவல் வீரன் கேட்டான்.

"வழக்கம்போல் என் மனைவியின் முகத்தில்தான்! எதற்காகக் கேட்கிறாய்?"

"இந்த நாட்டின் பிரபல நாட்டியக்காரியை இவ்வளவு அருகில் சந்திக்கிறோமே! சாதாரண காரியமா?"

சிரிக்கிறான்!

"இது என்ன பிரமாதம்! ஏகாம்பரேச்வரர் ஆலயத்தில் கடைசி சாம பூசையின்போது இன்னும் நெருக்கமாகப் பார்க்கலாமே!"

"கடைசி சாம பூசையா அதற்குப் பிறகு!"

"ஏய், உனக்கு ஒரு செய்தி தெரியுமா? நாட்டியக்காரியுடன் இரவெல்லாம் பேசிக் கொண்டிருக்க வேண்டும் என்று நமது குதிரை வியாபாரி ஆசைப்பட்டார்."

"குதிரை வியாபாரியா! அவருக்கு இந்த குமரியின் மீது எதற்கு ஆசை? குதிரையின் பல், கண், கால், வால் என்று ஆராய்ச்சி செய்து அதைப் பற்றி பிரமாதமாகப் பேசி அரண்மனையிலிருந்து பொன் பொன்னாக மூட்டைக் கட்டிக் கொண்டு போகத்தானே அவருக்கு ஆசை!"

"பொன்னை எதற்காக மூட்டைக் கட்டிக்கொண்டு போகிறார்? எல்லாம் ராஜசுந்தரிக்காகத்தான்! ஒருநாள் எப்படியாவது நாட்டியக்காரியைச் சந்தித்துப் பேச ஆசை கொண்டார்!"

"உம்... அப்புறம்!"

"ஏய், முதலில் சுவாரஸ்யம் இல்லாமல் பேசினாய். இப்பொழுது 'உம்' கொட்டுகிறாயே" என்று கூறிப் பலமாகச் சிரித்தான்.

சிவிகைக்குள்ளிருந்த ராஜசுந்தரியின் காதில் இந்த உரையாடல் விழத்தான் செய்தது!

"குதிரை வியாபாரியா? ஆமாம்; இப்பொழுது நினைவிற்கு வருகிறது. அவளுக்குச் சிரிப்பு வந்தது.

"நாள்தோறும் கடைசி சாந் பூசையின் போது ஒருவர் சந்நிதிக்கு அருகே நிற்பார். அவரது பார்வை ஆண்டவனிடம் இருப்பதைவிட அவளிடம்தான் அதிகமிருக்கும்!



ஒரு நாள் அவளிடம் துணிந்து பேசினார். பேசுவதற்குள் அவர் பட்ட பாட்டை இப்போது நினைத்தாலும்...

'குதிரை, சோனகம், ஹி ஹி' என்று ஏதோ கூற முயன்றும் அவரால் முடியவில்லை. நறுமணத் திரவியங்களை ஏராளமாகப் பூசிக் கொண்டிருந்தார். விலையுயர்ந்த பாட்டாடை அணிந்திருந்தார். முத்துமாலைகள் மார்பை வெளிக்குத் தெரியப்படுத்தாமல் அலங்கரித்தன. வைர வைடூரியங்களின் ஒளி நான்கு புறமும் மற்றொரு நட்சத்திரமோ என்று எண்ணுமாறு மின்னின. அவர் நகைக்கும்போது அதில் அசட்டுத்தனம் நன்றாகத் தெரிந்தது"

சிவிகை வீரன் தொடர்ந்தான். ராஜசுந்தரி பரிதாபப்பட்டாள். "வீட்டுக்கு வாங்க பேசிக் கொள்ளலாம்" என்று ஒரே வார்த்தை சொன்னாள். அவள் விழிகள் அவரை வெட்டிக் கொன்றிருக்க வேண்டும்! பாவம்! அவர் அவளைத் தேடி நாள்தோறும் மாளிகை வாசலில் காத்துக் கொண்டிருக்கிறார்".

"உம்... அப்புறம் சொல்லு; குதிரை வியாபாரி இவளைச் சந்தித்தாரா இல்லையா?" என்று வீரன் சுவாரஸ்யமாகக் கேட்டான்.

"ஏண்டா, எனக்கு இது தான் வேலையா? யார் யாரைச் சந்தித்தார்கள் என்று அறிவதுதான் என் வேலையா..." என்று அவன் சீறினாலும் அதில் தனி மகிழ்ச்சியொன்றைக் கண்டான் மற்றொரு வீரன்.

"அதில்லையப்பனே. இவ்வளவு தூரம் தெரிந்து வைததிருக்கிறாயே குதிரை வியாபாரியை எனக்கும் தெரியும்... அதனால் கேட்டேன்.." என்றான்.

"உம்... எந்த வியாபாரியும் இப்போது இந்த நாட்டியக் காரிக்கு உதவ முன் வரமாட்டார்கள். ரொம்பவும் தலைக்கனம். இவள் மாளிகை வாசலில் நாய்போல்

32953
5008179

கிடந்தவர்கள் மனம் என்ன பாடு பட்டிருக்கும் தெரியுமா?" அவர்கள் பேசும் குரல் ராஜசுந்தரியை வேதனைக் குள்ளாக்கியது.

அவள் செய்யாத குற்றத்திற்கு அவளை விசாரிக்க அழைத்துச் செல்கிறார்கள். விசாரிக்க எவ்வளவு நாளாகுமோ அதுவரை சிறையில் கிடக்க வேண்டுமே.

சிவிகை நின்றது. அதை கீழே இறக்கி வைத்தார்கள்.

"வாம்மா..." என்று காவலர் வீரன் கூப்பிடும் குரல் கேட்டது. திரையை நீக்கி வெளியே வந்தாள் சுந்தரி.

காஞ்சி நகரின் ஓலச் சந்தடியற்ற இடத்தில் அந்தச் சிறைக் கோட்டமிருந்தது. கோட்டத்து நுழை வாயிலின் மீது பல்லவ ரிஷபக்கொடி கம்பீரமாகப் பறந்தது. சற்றுத் தொலைவில் கோட்டை வாயில் தெரிந்தது.

காவல்வீரன் குரல் கொடுத்தான். சிறைச் சாலையின் திட்டி வாயிலைத் திறந்து சிறைக் காவல்காரர் எட்டிப் பார்த்தார்.

"கதவைத் திறப்பா!" என்று குதிரை மீதிருந்த வீரன் குரல் கொடுத்தான்.

சிறைக் காவல்காரருக்கு ஒரு கணம் வியப்பாக இருந்தது. காஞ்சியின் நாட்டியராணி சிறை வாசலில் நிற்கிறாள். எதற்காக நாட்டியக்காரி இங்கே வந்திருக்கிறாள்? சிறையிலுள்ளவர்களுக்கு ஏதாவது நாட்டிய நிகழ்ச்சி நடத்துவதற்காக வந்திருக்கிறாளா?

"ஏய், முத்துக் கண்ணா, நாட்டியக் காரியை எதற்காக அழைத்து வந்திருக்கிறாய்?" என்று சிறைக்கூடக் காவலன் கேட்டான்.



"சாதாரண நாட்டியக்காரி என்று சொல்லாதே. பல்லவ சாம்ராஜ்யத்தின் அழகு நர்த்தகி என்று சொல்லு" என்றான் குதிரை வீரன் முத்துக் கண்ணன்.

"எதற்காக அழைத்த வந்திருக்கிறாய்?"

"சிறைச்சாலைக்கு எதற்காக வருவார்கள்?... நாட்டியமாடவா? இவள் மீது கொலைக்குற்றம்..."

"ருஜுவாகிவிட்டதா?"

"விசாரணைவரை அடைத்து வைத்திருக்குமாறு உத்தரவு..."

"சிறைக் காவலன் சிரித்தான். விசாரணைவரை அடைத்து வைக்குமாறு உத்தரவு என்றால்... நாட்டியக்காரி என்ற மதிப்பு எதற்கு...? சிவிகையில் ஏன் அழைத்து வந்தீர்கள்-கழுத்தைப் பிடித்து உள்ளே தள்ளுங்கள்" என்றார்.

குதிரை வீரர்கள் பரிதாபமாக ராஜசுந்தரியைப் பார்த்தார்கள்! பஞ்சணை மெத்தையில் நறுமணங் கமழ உல்லாசமாகக் கழித்தவளுக்கு இருட்டறை, முரட்டுத் தரை!

ராஜசுந்தரியை அந்த எட்டடிக் குச்சுக்குள் தள்ளிக் கதவைத் தாளிட்டார்கள்.

ராஜசுந்தரி செய்வதறியாது சிறிது நேரம் திகைத்து நின்றாள். சிறிய பலகணி. முழுவதும் கருங்கல்லால் கட்டப்பட்ட அந்த அறையின் மேல்கூரை மிக உயரமாக இருந்தது.

"கடவுளே இதென்ன சோதனை? நேற்றுவரை இப்படியொரு சோதனை ஏற்படுமென்று நான் எதிர்பார்க்கவில்லை. புத்த பிட்சுவை வரவேற்றுப் பேசியதில் எவ்வளவு தவறு செய்துவிட்டோம். நாமா அவரை வரவேற்றோம்... இரகசிய வழியின் மூலம் அவர்

மாளிகைக்குள் வந்தார். அவரை யார் கொன்றிருப்பார்கள்..?" ராஜசுந்தரிக்கு மனம் விட்டு அழவேண்டும் போல் தோன்றியது.

நின்று கால் வலித்தது. மிகவும் களைப்பாக இருந்தது. புழுதி படிந்திருந்த தரையில் உட்கார்ந்து கொண்டாள்.

தன்னை மீட்க யாராவது வரமாட்டார்களா? கடை வீதியில் உள்ள வணிகர்கள் ஓடி வரமாட்டார்களா?

செவிலியின் முயற்சியில் எப்படியாவது விடுதலை கிடைத்துவிடும்; இந்தச் சமயத்தில் இளவரசர் இருந்திருந்தால்...

ராஜசுந்தரிக்குப் பசியாலும், களைப்பாலும் கண்களைச் சுழற்றியது. மெல்லப் படுத்தாள்.

மேலேயுள்ள பலகணியின் வழியாக மதிஒளி மெல்ல மெல்ல வீசிக் கொண்டிருந்தது.

ஏதோ சப்தம், யாரோ பாறையை இழுப்பது போன்ற ஓசை மேலேயிருந்து சிறுசிறு கற்கள் பெயர்ந்து விழுந்தன. ராஜசுந்தரி எழுந்து உட்கார்ந்தாள். தன்மேல் கற்களோ, மேலேயிருந்து விழும் எந்தப் பொருளோ படாமல் சற்றுத் தள்ளி நின்றாள். அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

மளமளவென்று கயிறு ஒன்று பாம்பைப்போல மேலேயிருந்து இறங்கியது... கயிற்றின் முனையில் முடிச்சு ஒன்று இருந்தது.

ராஜசுந்தரி ஒன்றும் புரியாமல் விழித்தாள்.

ஓலைச் சுருள் ஒன்று மேலேயிருந்துத் தொப்பென்று விழுந்தது. மெல்ல மதி ஒளியில் நடுக்கத்துடன் அதை எடுத்துப் படித்தாள்.



"கயிற்றைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்..." என்று எழுதப்பட்டிருந்தது. கயிற்றைப் பிடித்துக் கொள்வதா? "பிடித்துக் கொள்" மற்றொரு ஓலை மீண்டும் விழுந்தது.

"தாமதம் செய்யாதே. பொழுது புலர்வதற்குள் தப்பி விடவேண்டும். இல்லாவிடில் உனக்கு, உன் குடும்பத்துக்கு ஆபத்து".

ராஜசுந்தரி நிமிர்ந்து நோக்கினாள். ராஜசுந்தரி செய்வதறியாது திகைத்து நின்றாள். சிறைச்சாலையில் வாடுவதா அல்லது கயிற்றைப் பிடித்துக் கொண்டு மேலே செல்வதா என்ற குழப்பம் அவளைச் சூழ்ந்து நின்றது. கயிற்றை உறுதியாகப் பிடித்துக் கொண்டாள். கயிறு மளமளவென்று மேலே எழுந்தது. அவளும் அதனுடன் மேலே மேலே சென்றாள்.

## அத்தியாயம் - 13

# மீனவப் பெண்

கதவு திறக்கப்படும் ஓசை கேட்டது. "ஐயோ மேலே ஓட்டையிட்ப் பட்டிருப்பதை யாராவது பார்த்துவிட்டால்" என்று எண்ணும்போது அவளது எல்லா அங்கங்களும் நடுங்கின.

மளமளவென்று சிறைக் கதவுக்கருகே ஓடினாள்.

கையில் மூடப்பட்ட பாத்திரத்தில் உணவு கொண்டு வந்திருந்தான் பணியாள். ராஜசுந்தரியைப் பார்த்து அவன் அசட்டுச் சிரிப்பு சிரித்தான்.

"எம்மா, காலையிலிருந்து ஒன்றுமே ஆகாரம் ஏற்றுக் கொள்ளவில்லையா? ரொம்பப் பசிக்குமே" என்றான்.

அவனிடம் பேச்சுக் கொடுக்க விரும்பாத ராஜசுந்தரி அவன் கையிலிருந்த பாத்திரத்தை வலியப் பறித்து அவனை எரித்து விடுபவள் போல் பார்த்தாள். அசட்டுத்தனமாக ஏதாவது பேச எண்ணி வந்த காவல்காரனுக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. பேசாமல் திரும்பிப் போய்விட்டான். கதவைத் தாழிட்டுக் கொண்டாள். நல்லவேளை அவள் சிறையின் மேல் தளத்தில் இடப்பட்டிருந்த ஓட்டையைக் கவனிக்கவில்லை.

ராஜசுந்தரிக்கு அப்போதிருந்த அசுரப் பசியால் உணவுத் தட்டைத் திறந்து பார்த்தாள். ஆகா! அவளுக்குப் பிடித்தமான வெண் பொங்கல். அப்பொழுதுதான் செய்யப்பட்டிருந்தது. மணக்க மணக்க ஆவி பறக்கக் காட்சி அளித்தது. அவளுடைய ருசியை அறிந்த யாரோ கொடுத்து அனுப்பியிருக்கிறார்கள். ஒருவேளை சிறைக் கைதிகளுக்கு உயர்தரப் பொங்கல், பாயசம் என்று தருகிறார்களோ...?

ராஜசுந்தரி மெல்ல தனக்குள்ளே நகைத்துக் கொண்டாள். "நான் ஒரு குற்றவாளியா? பிட்சுவைக் கொல்வதற்கு எந்தவித முயற்சியையும் நான் செய்யவில்லையே! சொல்லப்போனால் சிறு காயம் ஏற்படுத்தக்கூட கையில் நகத்தை வளர்த்துக் கொள்ளவில்லையே.... சுருள் கத்தியைத் தற்காப்புக்கு எடுத்தோம். அவரை யார் கொன்றிருப்பார்களோ?

சிந்தனையில் மூழ்கியவளை மீண்டும் மேலே இருந்து கீழே வீழ்ந்த சிறு கல் நினைவுப் படுத்தியது. கயிறு ஆடியது. அசைந்தது.

மேலே இருந்து ஒரு குரல். "கயிற்றைப் பிடித்துக் கொள்..."

ராஜசுந்தரி கயிற்றின் நுனியைப் பிடித்துக் கொண்டாள். கயிறு அசைந்தது. மேலே நகர்ந்தது. அவளும் மெல்ல மெல்ல மேலே சென்று கொண்டிருந்தாள். அவளுடைய பலத்தையும் தாங்கி அவளை மேலே யாரோ இழுக்கிறார்கள்.



இப்பொழுது கூட ஒன்றும் நேரமாகிவிடவில்லை. கயிற்றின் பிடியினின்று நழுவிக் கீழே குதித்து விடலாம். ஆம்; அதுதான் நல்லது. தப்பி ஓடி எங்கே செல்வது? எதற்காகத் தப்பி ஓடுவது? செய்யாத குற்றத்தை ஏன் ஏற்றுக்கொள்ள வேண்டும்? விசாரணை முடியும்வரை இந்த இருட்டுச் சிறையில் ஏன் வாடவேண்டும்...?

கயிற்றின் நுனியை விட்டுவிட விரும்பினாள். ஆனால், மற்றொரு கயிறு சுருக்கு வடிவத்தில் மேலே இருந்து இறங்கி அவளது கழுத்தையும் தாண்டி, இடுப்பருகே நுழைந்து இறுகியது. கையைவிட்டாலும், இடுப்பை யாரோ பக்குவமாக அணைத்துத் தூக்குவதுபோல் தோன்றியது.

மளமளவென்று ராஜசுந்தரி சிறைக் கூடத்தின்மேல் விதானத்தின் அருகே வந்துவிட்டாள். நிமிர்ந்து பார்ப்பதற்கு முன்பே, வலுவான இரு கரங்கள் அவளை மேலே இழுத்துக் கொண்டன. அவ்வளவு தான் அவளுக்குத் தெரியும். மயக்க நிலை...

மயக்கம் தெளிந்து அவள் கண் விழித்தபோது சில்லென்ற கடற் காற்று அவள் முகத்தில் வீசிக் கொண்டிருப்பது தெரிந்தது. சிறு குடில். சுற்றிலும் வீடுகளே இல்லை. விடிய இன்னும் சில நாழிகைகள் இருக்க வேண்டும் என்பது சாய்ந்த மதியரசனின் ஆகாய பவனியினின்று தெரிய வந்தது.

குடிலிலும் ஒருவரையும் காணவில்லை. ராஜசுந்தரி உறக்கத்தினின்று விழித்தவள்போல் துள்ளி எழுந்தாள். தன்னைத்தானே ஒருமுறை பார்த்துக் கொண்டவுடன் அவளுக்குப் பயம் மேலிட்டது.

முதல் நாள் அவள் அணிந்திருந்த உடை இப்போது இல்லை. மீனவர் குலத்துப் பெண் போன்ற உடை. மார்பில் கச்சுகூட இல்லை. முழங்கால்வரை ஆடை. பச்சை வண்ணத்தில் சிவப்புப் புள்ளி போட்ட அந்த ஆடையை அவளுக்கு அணிவித்தவர் யார்? கச்சு அணியா அவளது

மார்பகங்கள் சுதந்திரமாக அவளைப் பார்த்து நகைத்தன அவளுக்கே வெட்கத்தை அளித்தது.

இந்த உடை மாற்றத்தை யார் செய்திருப்பார்கள். வெட்கத்தால் அவளுடைய முகம் சிவந்திருக்க வேண்டும். சேச்சே? யாருடைய வேலையாக இருக்கும்? பழைய ஆடையை அவிழ்த்துவிட்டு, புது ஆடையை அணிவிப்பது என்றால்...

சிறைக்கூடத்தின் மேல் தளத்திற்கு வந்தது மட்டுமே அவளுக்குத் தெரியும். அவளை மயக்கமுறச் செய்து இங்கே இரவுக்கு இரவே கொண்டு வந்திருக்கிறார்கள்... அது போகட்டும். பாஞ்சாலியின் ஆடையைத் துகிலுரித்தாற்போல் இவ்வாறு செய்தது ஓர் ஆடவராயிருந்தால்...

"ஐயோ..." என்ற குரல் நாண மிகுதியால் வெளியே பொங்கி வந்தது.

"கூப்பிட்டாயா!" என்று கேட்டுக் கொண்டே செவிலி குடிலுக்குள் நுழைந்தாள். செவிலியைப் பார்த்தவுடன் ராஜசுந்தரிக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. "அம்மா" என்று அலறியவாறு அணைத்துக் கொண்டாள்.

"அம்மா, இந்த உடை மாற்றம் செய்தது யாரம்மா?" என்று எடுத்தவுடனேயே ராஜசுந்தரி பரபரப்புடன் கேட்டாள்.

"அதைப் பிறகு சொல்கிறேன். பொழுது விடிவதற்குள் இந்த இடத்தை விட்டுப் புறப்பட வேண்டும். அதற்கு ஆயத்தமாகிவிடு. உன்னை எழுப்ப எண்ணி நானே வந்தேன். அதற்குள் நீயே எழுந்துவிட்டாய்..." செவிலி கூறினாள்.

"நான் கேட்டதற்கு நீங்கள் மறுமொழி கூறவில்லையே! என் உடையைக் களைந்தது யார்...?" ராஜசுந்தரி கோபத்துடன் கேட்டாள்.

செவிலி நகைத்தாள். "கோபப்படாதே, நான்தான் உன் உடையை மாற்றினேன். உன் அனுமதியில்லாமல் உன்



மேனியைத் தீண்டினேன். சின்னஞ்சிறு வயதில் தொட்டணைத்த மேனியைப் பருவ எழில் பூத்துக் குலுங்கும் வயதில் தனியே பார்க்கும்போது எனக்கு ஒருபுறம் மகிழ்ச்சியும், மறுபுறம் வேதனையுமாக இருந்தது..." செவிலி கூறும்போது ராஜசுந்தரி அவளைத் தடுத்து "எதற்கு மகிழ்ச்சி— எதற்கு வேதனை...?" என்று கேட்டாள்.

"நான்முகன் படைப்பின் அற்புதத்தை எண்ணி மகிழ்ச்சி..."

"அதில் மகிழ்ச்சிக்கு ஏது இடம்...?"

"ஆமாம்; அவன் மனம் மாறி கோர வடிவாய் படைத்திருக்கலாம். பட்டாடை தைத்தாற்போல் சந்தனப் பூச்சை அப்பியதுபோல் செண்பக மலரைக் கோத்தாற்போல் ஓர் படைப்பை ஏற்படுத்துவது எளிதா?"

"ஹூம்... வேதனைக்குக் காரணம்?"

"அதோ, மேல் வானில் இறங்குகிறதே வட்டமதி அது காட்டிலும் கடலிலும் தன் நிலவைப் பொழிந்தால் யாருக்கு என்ன பலன்? அதுபோல்..."

"அதுபோல்...?"

"அதுபோல் அழகின் திருவுருவாகத் திகழும் உன்மேனி பருவக் கனியின் மணம் வீசித் திகழும் உன் இளமை யாரும் அனுபவியாமல் இப்படி வீணே செல்கிறதே என்ற வேதனை..." செவிலி இவ்வாறு கூறியது கேட்டு ராஜசுந்தரி சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறாய் என் மகளே...?"

"என் இளமையை நான் பறிகொடுக்கவில்லை என்று உங்களுக்கு எப்படித் தெரியும். என் மெய்யைத் தீண்டவில்லை என்று உமக்கு எப்படித் தெரியும்?"

"எனக்குத் தெரியாதா! பாம்பின் கால் பாம்பு அறியும், நீ கூடக் குதூகலமாய் பேசுவாய். கொவ்வைச் செவ்விதழ் விரிய இனிய சொல்லாடலால் பிறரை மகிழ்விப்பாய்... அங்க

அசைவுகளால் காண்போரின் மதியைக் கலங்க வைப்பாய். உன் காலடியில் கிடப்பது போல் பாவனை செய்யும் செல்வந்தர்கள் நீ ஏமாறும்போது உன் உடலைச் சொந்தமாக்க நினைக்கும்போது அந்தக் காலால் எட்டி உதைத்திடுவாய். கொடியில் பூத்த மலரைப் பறித்துவிட்டால் தெரியாதா? அனிச்ச மலரை முகர்ந்துவிட்டால் அடையாளம் தெரியாதா... உனது ஆடையை மாற்றியபோது என் கண்ணே, நிலவு ஒளியில் உன் அங்கத்தை அணு அணுவாய் ரசித்தேன். உனது இடையின் அழகை எனது கரத்தால் தடவி மகிழ்ந்தேன். மேலும்...'' செவிலி சொல்லிக்கொண்டே போகும்போது ராஜசுந்தரி வெட்கம் மேலிட்டு 'கிரீச்'செனக் கத்தி 'போதும், போதும்' என்று அவள் வாயைப் பொத்தினாள்.

"செவிலி, உனக்கு வெட்கமாக இல்லை? யாராவது கேட்டுக் கொண்டிருக்கப் போகிறார்கள் என்னை நீயா சிறைக்கூடத்தினின்று தப்புமாறு செய்தாய்... என்னை மயக்கம் கொடுத்துக் கொண்டு வந்தது நீதானா?" என்று பரபரப்புடன் கேட்டாள்.

"சிறைக் கூடத்தினின்று உன்னைத் தப்புமாறு செய்தது அந்த சமுத்திரநாதன். அவன் உதவி எனக்குத் தேவைப்பட்டது. உன்னைச் சிறையிலடைத்து விட்டார்கள் என்றவுடன் குதிரை வியாபாரியும் சமுத்திரநாதனும் உடனே என்னைத் தனித்தனியே சந்தித்தனர். சமுத்திரநாதன் சொன்ன யோசனை எனக்குச் சரியெனத் தோன்றியது. அவனது இஷ்டப்படியே செய்யுமாறு சம்மதித்தேன். ஆனால் தீவிரமாகப் பிறகு யோசித்தால் சமுத்திரநாதன் திட்டம் மிகவும் ஆபத்து நிறைந்தது எனத் தோன்றியது. உன்னைச் சாளுக்கிய நாட்டிற்கு உதவியாக, பல்லவ நாட்டிற்கு விரோதமாக பயன்படுத்தத் திட்டமிட்டிருப்பதாக அறிந்தேன்.

"ஏன் தங்களுக்குப் பிடித்தமான திட்டம் தானே? என்னை வளர்த்து ஆளாக்கி, நடனக் கலை பயிலச் செய்ததே



பல்லவர்களுக்கு விரோதமாகப் பயன்படுத்தத்தானே..." என்றாள் ராஜசுந்தரி.

செவிலி குறும்புத்தனமாகச் சிரித்து, "அது உண்மைதான். ஆனால் இப்போது மாற்றிக் கொண்டுவிட்டேன். சரி, நேரமில்லை; நான் சொல்வதை முழுவதும் கேள். சமுத்திரநாதன் மிகவும் சாமர்த்தியமாக சிறையின் மேல் தளத்திற்கு உன்னைக் கொண்டு வந்தவுடனேயே மயங்கி விடுமாறு செய்துவிட்டான் அப்பப்பா... அவனுக்குத் தான் பல்லவ நாட்டில் எவ்வளவு உதவியாட்கள். உன்னை இரதத்தில் ஏற்றி வந்து குறிப்பிட்ட இடத்தில் நிறுத்தி, உன்னை என்னிடம் ஒப்படைத்துக் கடிகாசலம் வழியாக திருவேங்கடத்துக்கு அழைத்துச் செல்லுமாறு கூறினான். நான் அவனது திட்டத்திற்கு உடன்படுவது போல் தலையசைத்து ரதத்தை இங்கே ஓட்டி வந்துவிட்டேன். காபாலிகை உடையிலிருந்த உன்னை அடையாளம் தெரியாமல் மாற்றினேன். நீ இப்போது மீனவக் குடும்பப் பெண். கடலில் சிறிது நேரத்திற்கெல்லாம் கட்டு மரம் ஒன்று வரும். நீ அதில் ஏறிச் செல்ல வேண்டும்..." என்று கூறிய செவிலியின் கண்களில் நீர் வடிந்தது.

"இப்போது, என்ன, ஏது என்று கேட்காதே. இந்த மரப்பெட்டியில் உனக்கு மாற்றுடை இருக்கிறது ஓர் ஓலைச் சுருளில் சொல்ல வேண்டியவற்றைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். ஆண்டவன் அருளால் நாம் மீண்டும் சந்திப்போம். நீ உயர்ந்த இடத்தை அடைய வேண்டும் என்பதே எனது கனவு - இலட்சியம்..." என்று கூறும்போது, 'தாயே" என்று கூவி, ராஜசுந்தரி செவிலியை அணைத்துக் கொண்டாள்.

கட்டுமரம் கடலில் ஆயத்தமாகிவிட்டது என்பதற்கு அடையாளமாக சமிக்ஞை ஒலி கேட்டது. ராஜசுந்தரியை அணைத்து அவள் கன்னத்தில் முத்தமிட்டாள் செவிலி.

## அத்தியாயம் - 14

# கடலில் ஒரு கலம்

கட்டுமரம் கரையருகே ஒதுங்கி நின்றது. பொழுது புலரா அவ்வேளையில் செவிலி ராஜசுந்தரியை அழைத்துக் கொண்டு கடற்கரைக்குச் சென்றாள்.

"அம்மா, நாம் எங்கே போகிறோம்?" என்று வினவினாள் ராஜசுந்தரி. புதிய உடை அவளுக்குப் புதுமையாக இருந்தது. நடப்பவை எல்லாம் விசித்திரமாகவே தோன்றின. தான் மயக்கமுற்றதும் தன்னைக் கடற்கரைக் குடிலுக்கு செவிலி அழைத்து வந்ததும் ஏதோ கனவில் நடப்பவைபோல் தோன்றின. சிறையினின்றுத் தப்பி வந்துவிட்டதை யாராவது கண்டு விட்டால் பிறகு அதற்கான தண்டனை மிகப் பயங்கரமாயிருக்கும்.

"நாம் போகப் போவதில்லை. நீ மட்டும் தான்..." என்றாள் செவிலி. ராஜசுந்தரியை மெல்ல அணைத்துக் கொண்டு, "சுந்தரி, தைரியமாகக் கட்டுமரத்தில் செல். ஒரு நாழிகைப் போது பயணம் செய்தால் நடுக் கடலில் கலம் ஒன்று நிற்கும். கலத்தில் ஏற நூலேணி ஒன்று இறங்கும். பயமின்றி அதில் ஏறிக்கொண்டுவிடு. பிறகு நடப்பவை நல்லதாக இருக்கும்" என்றாள் செவிலி.

ராஜசுந்தரி மௌனமாக நின்றாள். அவளுக்கு ஏதும் புரியவில்லை. தன்னை எதற்காகக் கட்டுமரத்தில் ஏற்றிச் செவிலி அனுப்புகிறாள்? எந்த இடத்திற்குப் போகப் போகிறோம்...

"அம்மா, என்ன சொல்கிறாய்?" என்று கவலையுடன் கேட்டாள் ராஜசுந்தரி.



"எல்லாம் உன் நன்மைக்குத்தான் சொல்கிறேன். இனி பல்லவ நாட்டிலிருந்தால் ஆபத்துதான். அதனால் உன்னைக் கடல் கடந்த நாட்டிற்கு அனுப்புகிறேன்..." என்றாள் செவிலி.

"கடலில் செல்வதை விடப் பெரும் ஆபத்து பல்லவ நாட்டில் இருக்கும் என்றா சொல்கிறாய்? எந்த நாட்டிற்குச் செல்ல வேண்டும் தாயே..." சுந்தரியின் குரலில் அச்சம் பிரதிபலித்தது.

"ஆமாம், சுந்தரி. உன்னிடம் இதுவரை நான் சொல்லாமல் மூடி மறைத்தேன். பல்லவ நாட்டிற்கு விரோதமான செயல்களைச் செய்வதற்காகவே காஞ்சி நகரத்திற்கு நாம் வந்தோம். இதுவரை அது தெரியாமல் இருந்தது. இப்போது புரிந்துவிட்டது அவர்களுக்கு. கொலைக் குற்றச்சாட்டு வேறு ஏற்பட்டுவிட்டது..." என்று செவிலி கூறும்போது சுந்தரி பரபரப்புடன், "பிட்சுவை நான் கொலை செய்துவிட்டேன் என்று நினைக்கிறாயா?" என்று கேட்டாள்.

"நான் நினைப்பதையா அரசு ஏற்கும்? சுந்தரி, இப்போது பேச நேரம் இல்லை. கட்டுமரம் ஆயத்தமாக இருக்கிறது. தாமதிக்கக் கூடாது. வா... வா..." என்று செவிலி பரபரப்புடன் அழைத்தாள்.

ராஜசுந்தரிக்கு ஒன்றுமே புரியவில்லை. கண்களை ஒருமுறை கசக்கிக் கொண்டாள். பொய்யாகப் போய்விடக் கூடாதா இந்தச் சம்பவம் என்று நினைத்தாள். பொய்யில்லை. இருள் விலகிக் கொண்டு இருக்கிறது. கதிரொளி இன்னும் சிறிது நேரத்தில் எழுந்துவிடும்.

ராஜசுந்தரி கட்டுமரத்தை நோக்கி நடந்தாள். செவிலி அவளைப் பின் தொடர்ந்தாள். 'ஹோ' என்று முழக்கமிட்டுக் கொண்டிருந்தது கடல். சில்லென்று காற்று வீசி உடலை ஒரு முறை நடுங்க வைத்தது.

கட்டுமரத்துக்கு அருகே அடையாளந் தெரியாத உருவம் ஒன்று நின்று கொண்டிருந்தது.

செவிலி ராஜசுந்தரியை அணைத்துக் கொண்டாள். கண்ணீர் பெருகிக் கொண்டிருந்திருக்க வேண்டும்.

"சுந்தரி, கடவுள் அருளால் நாம் மீண்டும் இதே காஞ்சியில் சாளுக்கிய வேந்தர் ஆட்சி செலுத்தும்போது நீதான் பட்டத்து அரசி. அதுவரை இன்னல்களை ஏற்க வேண்டியதுதான்" என்று கூறி விம்மினாள்.

சுந்தரியும் நெஞ்சடைக்க, "அம்மா, கட்டுமரம் எங்கே செல்கிறது? நான் எங்கே செல்ல வேண்டும்..." என்று மீண்டும் கேட்டாள் செவிலி. ஒன்றும் மறுமொழி கூறவில்லை.

'எல்லாம் திட்டமிட்டபடி நடக்கும். நீ மெல்லப்போ... கட்டுமரம் ஆடும், சாயும். ஆனால் கவிழ்ந்துவிடாது..." என்றாள்.

ராஜசுந்தரி கட்டு மரத்தில் ஏறி அமர்ந்தாள். கட்டு மரத்தைத் தள்ளிக் கொண்டு அலையின் வாகுக்கு ஏற்பக் கடலில் செலுத்தினான் அதை ஓட்ட வந்தவன். அவன் முகத்தை முக்கால் பாகம் மூடியிருந்தான்.

கடல் அலைக்கு ஏற்பக் கட்டுமரம் ஏறி இறங்கியது. சாய்ந்தது. கட்டு மரம ஆடும், சாயும். ஆனால் கவிழ்ந்துவிடாது என்று தாய் சொல்லி அனுப்பினாள். அது மிக உண்மை. நமது வாழ்க்கையும் அப்படித்தான் என்று சுந்தரி எண்ணினாள்.

பெரிய அலை ஒன்று வந்து கொண்டிருந்தது. அது நிச்சயம் கவிழ்த்துவிடப் போகிறது.

"அம்மா, கெட்டியாகப் பிடித்துக் கொள்ளுங்கள்" என்றான் கட்டுமர ஓட்டி மிகவும் கெட்டியாகப் அவள் பிடித்துக் கொண்டாள்.

கிழக்கே செங்கோடுகள் தெரிய ஆரம்பித்துவிட்டன. அவள் ஏறிய கரை, கோடு போல்தான் இப்போது தெரிந்தது.



பெரிய அலை. அதோ நெருங்கிவிட்டது ஊழியின் போது ஏற்படும் பிரமாண்டமான அலை. அது கட்டுமரத்தைத் தாக்கியது. ராஜசுந்தரி அம்மா என்று அலறினாள்.

கடல் நடுவே அவள் குரலைக் கேட்கக் கடலரசனைத் தவிர வேறு யார் உளர்?

இந்த நேரத்தில் அவன் ஏகாம்பரேச்வரர் திருமுன்னே நடனமாடுவான். பூசை மணி அடிக்கும். தீப ஆரத்தி நடக்கும். திருநாவுக்கரசரது பதிகங்களை ஓதுவார், பாடுவார். எத்தனை நாட்கள் நாம் அந்த இனிய அனுபவத்தில் மூழ்கி ஈசனது திருவுருவுடன் லயித்திருக்கிறோம். அந்த ஈசன் இப்போது வந்து உதவக்கூடாதா?

மற்றொரு அலை.

கட்டுமரம் அலைகளினூடே சிக்கிவிட்டது. "அம்மா, பலமாகப் பிடித்துக் கொள்ளுங்கள்" என்ற குரல்தான் கேட்டது.

அலை போய்விட்டது. மற்றொன்று வராமலா இருக்கும்? ஆனால் முதல் அலையின் விளைவு?

கட்டுமரம் கவிழவில்லை. ஆனால், அதைச் செலுத்த வந்தவன் கவிழ்ந்தவிட்டான். அவனைக் காணவில்லை.

"ஐயோ..." என்ற குரல் ராஜசுந்தரியிடமிருந்து எழுந்தது. அது ஐயோவா, ஐயாவா! அவளுடைய இதயம் நின்று போகாதது ஆச்சரியமே!

கட்டுமரம் மெல்ல மெல்லச் சென்று கொண்டிருந்தது. தகதகவென்று செங்கதிரோன் கீழ் வானின் கோடியில் முளைத்தெழுந்துவிட்டான். பொன்னும், செந்நிறக் குழம்பும் கலந்தது போன்ற ஒளி கருங்கடலில் பரவியது. நான்கு திக்குகளிலும் கடல், கடல், கடல்...

ஏதோ ஒரு கலம் நின்று கொண்டிருக்கும் என்று செவிலி கூறினாளே என்று சுந்தரி யோசித்தாள். அவள் உடல் முழுவதும் கடல் நீரால் நனைந்திருந்தது. கதிரொளி மட்டும் அவள் மேனியில் படாதிருந்தால் குளிரால் உடல் நடுக்கம் அதிகமாகியிருக்கும்.

சுந்தரிக்கு அந்தக் கட்டுமரத்தில் தொடர்ந்து செல்வதில் விருப்பம் இருப்பதாகத் தெரியவில்லை. புரிந்துகொள்ள முடியாத செயல்களை, இலட்சிய மற்ற பயணத்தைத் தொடர்ந்து செய்வதில் என்ன பயன்? கடலில் குதித்து மீளாத இடத்திற்குச் சென்றுவிட்டால் எந்தவிதத் தொல்லைகளும் இல்லாமல் நிம்மதியாக இருக்கலாம்.

சுந்தரி எழுந்து நின்றாள். கடல் அலையில் ஏற்றத்திற்கும் இறக்கத்திற்கும் ஏற்ப கட்டுமரம் ஆடி அசைந்தது. அவள் விழிகள் கீழ்த் திசையை நோக்கின.

சுந்தரி கரங்களை எடுத்துத் தலைமீது வைத்துக்கொண்டு கூப்பினாள்.

அதோ... அதோ! அவள் விழிகளைத் துடைத்துக் கொண்டாள். மிகப் பெரிய மரக்கலம் நின்று கொண்டிருந்தது. அது நின்று கொண்டிருந்ததா அசைந்து அசைந்து சென்று கொண்டிருந்ததா என்பது தெரியவில்லை.

சுந்தரி தன்னை அறியாமல் கூவிவிட்டாள். மேல் தலைப்பை எடுத்து வீசினாள். 'ஹோ ஹோ' என்று கூவினாள். கட்டுமரம் அசைந்து அசைந்து மேலே சென்றது.

ஆம்; மரக் கலத்துக்கருகே கட்டு மரம் செல்லும். நூல் ஏணி இறக்கப்படும். அதில் ஏறி கலத்தினுள்ளே செல்வோம். அங்கிருப்பவர்கள் என்ன மொழி பேசுபவர்களோ... எந்த நாட்டவர்களோ எத்தகைய குணமுடையவர்களோ? அவர்களுடன் வாழ்ந்து அவர்களுடைய உடந்தையாக இருந்து என்ன செய்யப்போகிறோம். யாருக்காக வாழ வேண்டும். மேலும் - காஞ்சி இளவரசருக்காக வாழச்



சங்கல்பம் செய்து கொண்ட நாம் அவருக்கு எதிரான நடவடிக்கைகளைக் கொள்ளக்கூடாது. அதனால் இந்தக் கடலில் வீழ்ந்து, இறந்து விடுவது நல்லது.

அவள் அந்த முடிவிற்கு வந்ததற்கு உதவுவதுபோல் திடீரென் பேரலை ஒன்று எழுந்தது. கட்டுமரம் கவிழ்ந்தது. ராஜசுந்தரி கடலில் வீழ்ந்தாள்.

ராஜசுந்தரி கண்விழித்தபோது மரக்கலத்தின் மேல் தளத்தில் தாவிருப்பதை உணர்ந்தாள். அவள் மீது முரட்டுக் கம்பளம் போர்த்தப்பட்டிருந்தது. கடலில் அவளுடைய ஆடைகள் அவிழ்ந்து அலையோடு அலையாகச் சென்றுவிட்டன. மரக்கலத்தின் மேல் தளத்தினின்று பார்த்துக் கொண்டிருந்த மரக்கலப் பணியாட்கள் தொலைவில் கட்டுமரம் வருவதையும் அது கவிழ்ந்து விட்டதையும் கண்டவர்கள், கடலில் குதித்து நீந்தினர். தேடிக் கண்டு பிடித்து மரக்கலத்தின் மேல் தளத்திற்குக் கொண்டு வந்தனர். அவளைக் கீழே கிடத்திய பிறகுதான் அவளுடைய உடலில் ஆடையில்லாததை அறிந்தனர். மறுகணம் அங்கிருந்து அனைவரும் ஓடினர். அவள் மீது போர்த்த கம்பளி ஒன்றுதான் உடனே கிடைத்தது. அவள் மீது போர்த்திய பிறகே மற்றவர்கள் அவளருகே வர அனுமதிக்கப்பட்டனர். அவர்கள் பண்பு மகத்தானது.

சுந்தரி எழுந்திருக்க முயன்றாள் முடியவில்லை.

"நான் எங்கே இருக்கிறேன்?" என்று மெல்லக் கேட்டாள். அவள் பேசும் மொழி ஒருவருக்கும் புரியவில்லை. ஒருவரையொருவர் பார்த்து அவள் என்ன கேட்கிறாள் என்று பேசிக்கொண்டனர்.

அவள் பேசும்மொழி அவர்களுக்குப் புரியவில்லை. 'கலபதியை அழைத்து வருவோம்' என்று அனைவரும் மரக்கலத்துத் தலைவன் இருக்குமிடம் விரைந்தனர்.

"தலைவா, தளத்தின் மீது ஒரு பெண் இருக்கிறாள்" என்று ஒருவன் கூறினான்.

தூக்கக் கலத்தினின்று திடுக்கிட்டு எழுந்த மரக்கலத் தலைவன், "பெண்ணா?" என்று பரபரப்புடன் கேட்டார்.

"ஆமாம்; கடலிலிருந்து..." என்றனர் மாலுமிகள். அவர்கள் குரலில் ஆவல் நிறைந்திருந்தது. "காப்பாற்றினோம். அவள் பேசும் மொழி நமக்குத் தெரியவில்லை. திரமிளம் பேசுகிறாள் என்று நினைக்கிறேன்..." என்றான் அவன்.

கலபதி முகத்தை மட்டும் கழுவிக் கொண்டு மேல் தளத்திற்கு விரைந்தார்.

சுந்தரி இன்னும் படுத்துத்தானிருந்தாள். அவளால் எழுந்திருக்க முடியவில்லை. பெரும் சாட்டையால் அடித்ததுபோல் உடலில் பெரும் வலி இருந்தது.

"பெண்ணே நீ யார்? கடலில் எப்படி வீழ்ந்தாய்?" என்று கலபதி கேட்டார். அவருக்குத் தமிழ் பேச வந்தது. தெளிவாகப் பேசினார்.

"நீங்கள் யார்... இந்தக கலம் எங்கே செல்கிறது?" என்று சுந்தரி கேட்டாள்.

சுந்தரியின் வடிவத்தில் ஒரே கணத்தில் மனத்தைப் பறிகொடுத்த கலபதி, அவளது பேச்சின் இனிமையிலும் மயங்கி, "இந்தக் கலம் கலிங்கத்தினின்று சாவகம் செல்கிறது" என்றார்.

"கடல் மல்லைக்கு வரவில்லையா?" சுந்தரி கேட்டாள்.

"இரண்டு நாட்களாகக் கடல் மல்லையில் தானிருந்தோம். நேற்றுப் பிற்பகல் புறப்பட்டோம்... நீ பெண்ணே...?" அவன் அவளை அறிவான். இருந்தாலும் வாய்மொழி வழியே அறிய விரும்பினான்.



"ஒரே வார்த்தையில் என்னால் கூறிவிட முடியாது. எனக்கு முதலில் ஆடை கொடுங்கள். நான் எழுந்துக் களைப்பாறிய பிறகு பேசுகிறேன். நீங்கள் எல்லாம் நல்லவர்கள்போல் தோன்றுகிறது" என்றாள் சுந்தரி. தைரியமாகப் பேசவேண்டும் எனும் சக்தி ஒன்று அவளுள்ளத்தில் எழுந்தது. அங்குக் கூடியிருந்தவர்களது விழிகளில் காம உணர்ச்சி இல்லை என்பது தெரிந்தது. ஆனால் கலபதியின் பார்வையைப் புரிந்துகொள்ள முடியவில்லை... பார்வையில் ததும்பியது அன்பா, காமமா? அவள் ஆடையின்றி இருப்பதை அப்பொழுதுதான் புரிந்துகொண்ட கலபதி சுற்றும் முற்றும் பார்த்து, "பெண்களின் புடவை யாராவது வைத்திருக்கிறார்களா?" என்று கேட்டார்.

ஒருவரும், இல்லையென்று தலையசைத்தனர். "உங்கள் அருமைக் காதலிக்கு, மனைவிக்கு, சகோதரிக்கு, காஞ்சியில் நீங்கள் ஒன்றும் வாங்கவில்லையா?" என்று கலபதி கேட்டார்.

"காஞ்சியில் கடைவீதிதான் மூடப்பட்டுக் கிடக்கிறதே. தங்களுக்குத் தெரியாதா... என்னென்னவோ மனக் கோட்டைகள் கட்டி வந்தேன். கடைசியில் எல்லாம் ஒரே ஏமாற்றம். காஞ்சியிலிருந்து மக்கள் வெளியேறுகிறார்கள். காஞ்சியே குழப்பம் மிகுந்துக் காணப்படுகிறது. தங்களுக்குத் தெரியாதா?" என்றான் மூச்சுவிடாமல் அந்தப் பணியாள்.

"ஆமாம்... ஆமாம்... காஞ்சி தன் பொலிவை இழந்துவிட்டது. மக்களுக்கு உண்ண உணவு இல்லை. பல்லவ சக்கரவர்த்தியின் நிலையும் கவலைக்கிடமாக இருக்கிறதாம். இதற்கிடையே தன் மகனுக்கு மகுடாபிஷேகம் செய்துவிட அவர் துடிக்கிறார்... புரியமுடியாத குழப்பநிலை..." என்றார் கலபதி.

சுந்தரிக்குச் கவலை மிகுந்தது. "காஞ்சியில் குழப்பமா?" என்று கேட்டவளுக்கு ஏனோ மயக்க நிலை ஏற்பட்டது. தன் நினைவிழந்தாள்.

## அத்தியாயம் - 15

# பருவக் கனல்

தனக்கு அளிக்கப்பட்ட கம்பளி உடையை மேலே போர்த்திக்கொண்டு ராஜசுந்தரி மெல்ல எழுந்தாள். காஞ்சியிலுள்ள நிலையைப் பற்றி மரக்கலத்து ஊழியர்கள் பேசிக் கொண்டது அவளுக்கு அதிர்ச்சியை அளித்தது. பல்லவ சக்கரவர்த்தியின் உடல்நிலை மோசமடைந்து விட்டதா அல்லது அவர் இறையடியை எய்துவிட்டாரா என்பது தெரியாமல் அவள் தவித்தாள். காஞ்சிக் கடை வீதியிலுள்ள அங்காடிகள் மூடப்பட்டிருக்கின்றன என்ற செய்தி கேட்டபோது சக்கரவர்த்திக்கு ஏதோ நேர்ந்திருக்க வேண்டும் என்று எண்ணினாள். அந்த எண்ணமே பெரும் சுடுகோலாய் அவள் நெஞ்சில் இறங்கியது.

கலபதியை தவிர மற்றவர்களுக்குத் தமிழ் தெரியாது. கலபதியிடம் பேசவேண்டும். கலபதியின் பார்வையைக் கொண்டு அவரை எடைபோட முடியவில்லை. தன் மானத்தைக் காப்பதில் அவர் அதிக அக்கறை கொண்டிருப்பது தெளிவாகப் புரிகிறது. இங்குமங்கும் ஓடுகிறார். ஏதோ கூச்சல் போடுகிறார். கலத்திலுள்ளவர்கள் மிகவும் பண்பு தெரிந்தவர்களாக இருக்க வேண்டும். பொதுவாகப் பெண்கள் என்றால் விழுங்கி விடுபவர்கள் போல் உற்றுப் பார்க்கும் கலத்தில் பணியாற்றுபவர்கள் போலன்றி இவர்கள் நடந்து கொள்ளவில்லை. சுந்தரி அருகே சூழ்ந்து நிற்கவில்லை.

கடலில் ஓர் அழகிய பெண் கிடைத்து இருக்கிறாள் என்றால் அவர்கள் ஒரு விழாவே கொண்டாடி இருக்க வேண்டும். அதிலும் மாதக் கணக்கில் பெண்டு பிள்ளை சுற்றம் மறந்து கடலில் பயணம் செய்பவர்களின் மன நிலை வேறு விதமாகத்தான் இருக்க வேண்டும். பெண் என்ற உருவச் சிலை



இருந்தாலே மதிமயங்கக் கூடியவர்கள். பருவ எழில் குலுங்கும் பெண் ஒருத்தி கப்பலின் மேல் தளத்தில் நிற்கிறாள் என்றால் சும்மா இருப்பார்களா? அந்தக் கலத்திலிருப்பவர்கள் ஒதுங்கி மறைவான இடத்தில் நின்றார்கள். மான் போல் மிரட்சியுடன் பார்க்கும் ராஜசுந்தரியை மறைவான இடத்திலிருந்து பார்த்த பணியாட்கள், இவள் ஓர் அரசகுமாரியோ என்று நினைத்தனர். கடலில் வாழும் கன்னியோ என்று ஐயமடைந்தனர். தங்களது சந்தேகத்தைக் கப்பல் தலைவனிடம் தெரியப்படுத்தினர்.

"கடலில் மிதப்பதை நாங்கள் பார்த்தோம்..." என்றான் ஒருவன்.

"சரி; பார்த்தீர்கள். அப்போது பெண்ணா ஆணா என்பது தெரியவில்லை, அல்லவா?" கலபதி கேட்டார்.

"ஆமாம்! கடலில் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருப்பவர்களைக் காப்பாற்றுவது தர்மம். அதனால்..."

"அதனால் காப்பாற்றனீர்கள். அப்படியிருக்கும் போது கடல் கன்னியா, தேவதையா? அரசகுமாரியா என்ற சந்தேகம் ஏன் வந்தது?"

"இவளைப் போன்ற அழகியை இதுவரை நாங்கள் பார்த்ததில்லை..."

"பொய் சொல்லாதீர்கள். கொற்கைத் துறையில் ஒரு தடவை இப்படியொரு தேவதை நமது கலத்திற்கு வரவில்லையா?"

"தேவதை - நீங்களே சொல்லிவிட்டீர்களே, தேவதை என்று. இவளும் தேவதைதானோ?"

"சரி, சரி! மிகவும் மிரண்டுபோய் அவள் இருக்கிறாள். நீங்கள் இங்கிருந்து போய் உங்கள் வேலைகளைக் கவனியுங்கள். நான் அவளிடம் விசாரிக்கிறேன்" என்று கலபதி கூறவும் கட்டுப்பாடுமிக்க கலப் பணியாட்கள் அங்கிருந்து விரைந்துத் தத்தம் வேலைகளைக் கவனிக்கச் சென்றனர்.

"அவர்கள் என்ன கேட்டார்கள்? நீங்கள் என்ன சொன்னீர்கள். சரசரவென்று இங்கிருந்து போய்விட்டார்களே!" என்று ராஜசுந்தரி கேட்டாள்.

"எங்கள் கலத்துப் பணியாட்கள் ஒழுக்கத்தில் உயர்ந்தவர்கள். கட்டுப்பாடு மிக்கவர்கள்" என்று கூறினார் கலபதி.

"அப்படியென்றால் மற்ற கலத்திலுள்ளவர்கள் ஒரு மாதிரியோ?" என்று ராஜசுந்தரி மெல்ல நகைத்தவாறு கேட்டாள்.

ஒரு கப்பலின் மேல் தளத்தில் புரியாத மொழி பேசும் மக்களிடையே அவள் சிரித்துக்கொண்டே பேசுவது ஆச்சரியம்தான்.

"நீ நன்றாகப் பேசுகிறாய். பார்க்கவும் நன்றாக இருக்கிறாய். அதைத்தான் அவர்களும் கேட்கிறார்கள்" கடல் கன்னியோ, அரச குமாரியோ என்று சந்தேகப்பட்டார்கள்!" என்றார் கலபதி.

"நீங்கள் என்ன சொன்னீர்கள்?"

"தேவதை என்றேன்".

"தேவதை என்று எப்படித் தெரியும்?"

"வர்ணிப்பதைத் தவறாக எடுத்துக் கொள்ள மாட்டாய் என்று நினைக்கிறேன். உனது பாதங்களைப் பார்த்தேன் விரல்களும், குதிகாலும் இதுவரை மானிடப் பெண்களிடம் நான் பார்த்ததில்லை. பாதத்தில் மீது பூந்தண்டு போல் வளர்ந்துள்ள கால்களை எங்கள் நாட்டு வாழைத் தண்டிற்கு உவமை கூறலாம்!"

ராஜசுந்தரி சிரித்தாள். வயது ஆக ஆக ஆடவர்களுக்குப் பெண்களிடம் கவர்ச்சி அதிகமாகும்போல் தோன்றுகிறது.



"பெண்ணே... உன் உடலை மறைத்துக் கொண்டிருக்கும் கம்பளியின் மறுபுறம் உள்ள உனது எழில் சிந்தும் அங்கங்கள் சாதாரண பெண்களுக்கு இருக்கமாட்டா!"

இதைக் கேட்டு ராஜசுந்தரி திடுக்கிட்டாள். பிறந்த மேனியாக என்னை இந்தக் கலத் தளபதி எப்படியோ பார்த்திருக்கிறார்?

"உன் கண்களில் கலக்கம் ஏற்பட்டிருப்பது எனக்குப் புரிகிறது. ஒரு பெண்ணின் மானமும் அவள் தன் மறைவான அங்கங்களைப் பிறர் பார்க்காமல் செய்வதில் தான் இருக்கிறது... உனது அழகு ததும்பும் அங்கங்களை நான் எவ்வாறு கண்டுவிட்டேன் என்று நாணத்தாலும், பயத்தாலும் நீ கலக்கமடைவது தெரிகிறது. ஆனால், பெண்ணே, உனது பாதங்களின்றும் உனது முகத்திலிருந்தும் உனது மூக்கின் வடிவினின்றும் உனது மறைக்கப்பட்ட அங்கங்களைப் பற்றிக் கற்பனை செய்தேன். நான் உன்னை நிர்வாணமாகப் பார்க்கவேயில்லை. கவலைப்படாதே. உன்னை இந்த மேல் தளத்தில் அதிக நேரம் நிற்க வைக்கக்கூடாது. நீ களைத்து இருப்பாய். கடலில் தவறி விழுந்து விட்டதால் உனது உடல் வேதனைக்கு உள்ளாகியிருக்கும்... வா எனது இருப்பிடம் செல்லலாம்" என்று கலபதி அழைத்தார்.

கலபதியைப் பின் தொடர்ந்தாள் ராஜசுந்தரி. தனது மாளிகையைவிட்டு வெளியே செல்வதென்றால் சிவிகையோ ரதமோ அன்றி பாதங்களைத் தேவையற்ற இடத்தில் வைத்து அறியா சுந்தரி, கப்பலின் தளத்தில் மரப்படிக்கட்டுகளில் குறுகலான பாதையில் இறங்கி ஏறிக் குனிந்து கலபதியின் அறையை அடைந்தாள். ஓரிரண்டு இடங்களில் கலபதி, அவளைப் பிடித்துக் கொண்டார். கீழே விழுந்து விடாமலிருக்க. அவள் சற்று நின்று அவரை முறைத்துப் பார்த்தாள்.

கலபதியின் அறை விசாலமாக இருந்தது. மாளிகையின் ஒரு கூடம் போல் காட்சியளித்தது. விசித்திரமான

பண்டங்கள் அங்கே காணப்பட்டன. பல நாட்டு மங்கைகளின் நிர்வாண ஓவியங்கள் காணப்பட்டன. அவளுக்கே கூச்சமாக இருந்தது. இதை எழுதிய ஓவியருக்கு சகோதரி தாய் இருக்கமாட்டார்களா?

காஞ்சியில் இளவரசருடன் வருவாரே; அவரும் இப்படித்தானே சித்திரங்கள் வரைவார். அஜந்தாவிலும் சித்திரங்களை வரைந்திருக்கிறார்கள். ஆனால் இவ்வாறு பிறந்த மேனியாக வரையவில்லை. காஞ்சி ஓவியர் எப்படியோ...

உம்; காஞ்சியை விட்டு வந்துவிட்டோம். இனி காஞ்சிக்குச் செல்லப் போகிறோமோ இல்லையோ. தலைவிதியை நிர்ணயிக்கும் ஆண்டவனுக்குத்தான் தெரியும்.

"என்ன விசித்திரமாகப் பார்க்கிறாயே... உனது மாளிகையில் இல்லாத சித்திரங்களா?" என்றார் கலபதி பெட்டியைத் திறந்து ஏதோ தேடியவாறு.

"மாளிகையா? நான் மாளிகையில் வாழ்கிறேன் என்று இவருக்கு எப்படித் தெரியும்!" ராஜசுந்தரியின் உடல் ஒரு கணம் நடுங்கியது.

"என்னை உங்களுக்குத் தெரியுமா?" ராஜசுந்தரி நா குழறக் கேட்டாள்.

"தெரியும்" என்று கூறிய கலபதி மும்முரமாக ஏதோ தேடிக்கொண்டு இருந்தார். ராஜசுந்தரி கம்பளியை மேலும் இறுக்கமாகச் சுற்றிக் கொண்டு நின்று கொண்டிருந்தாள். உடலில் ஒருவித நடுக்கம்.

கலபதி ஏதோ மூட்டையைக் கையில் எடுத்தார். விரைவாகப் பிரித்தார். பட்டாடை புதுவிதமாக இருந்தது.

கலபதி அவற்றைக் கையிலெடுத்துக் கொடுத்துவிட்டு, "பெண்ணே கம்பளித் துணியைப் போர்த்திக்கொண்டு



எவ்வளவு நேரம் நிற்பாய்? எப்போதோ வாங்கிய உடைகள். யாருக்காக வாங்கியது என்று கேட்காதே? நல்ல வேளையாக இதுவாவது இருந்ததே! இதுவும் இல்லாவிட்டால் உனக்கு உடைகள் வாங்கக் கலத்தை நாகப்பட்டினத்துக்குத் திருப்பியிருப்பேன்" என்றார்.

கலம் புறப்பட்டுவிட்டது என்பது அந்த அறையில் ஏற்பட்ட ஆட்ட அதிர்ச்சியிலிருந்துத் தெரிந்தது ராஜசுந்தரிக்கு ஆட்டம் இயற்கையாகக் கைவந்தது. அதனால் அவள் தடுமாறவில்லை. ஆனால் மனத்தில் தடுமாற்றம். இரண்டும் பட்டாடைகள். ஒன்று ஆண்கள் அணியும் துகில் மாதிரி இருந்தது. மற்றொன்று அவளுக்கே புரியவில்லை. ஒரு கணம் தன் நிலையை நினைத்துப் பார்த்தாள். கம்பளித் துணிக்குள் வெற்று உடம்பு. கச்சு அணியா மார்பகங்கள் சுற்றியிருந்த புடவையும் கடலோடு போய்விட்டது. கலபதி கொடுத்துள்ள உடையை அணிய வேண்டியதுதான்.

"எப்படி அணிவது என்று பார்க்கிறாயா? நான் எப்படிச் சொல்லித் தருவது. அதைக்கொடு எப்படி அணிவது என்று சொல்கிறேன்" என்று கூறி மீசை தாடிக்கு வெளியே தனது பற்கள் புலப்படச் சிரித்தார் கலபதி.

ராஜசுந்தரி திடுக்கிட்டாள். இவர் சொல்லித் தருகிறாராமே... ஐயோ! கம்பளித் துணியை எடுத்து எறிந்துவிட்டு எனக்கு உடை அணியச் சொல்லித் தரப் போகிறாரா? ஐயோ... இந்தக் கடலிலேயே குதித்துச் செத்து விடலாம்.

"நான் இந்த அறைக்கு வெளியே போய்விடுகிறேன். கதவைத் தாளிட்டுக் கொள். உடையை அணிந்த பிறகு கதவைத் திறந்துக் கூப்பிடு" என்று கூறிவிட்டுக் கலபதி வெளியே போய்விட்டார். ஒரு கணம் நெஞ்சு நிமிர்ந்து அடங்கியது. பிழைத்தோம் என்று எண்ணினாள். அவரது பண்பையும் பெருந்தன்மையையும் நினைத்து அவரை மனத்திற்குள்ளேயே பாராட்டினாள் ராஜசுந்தரி.

கப்பலுக்குள் இருக்கும் அறையைப் போலவே அது தோன்றவில்லை. ஒவ்வொரு பொருளும் தூய்மையாக வைக்கப்பட்டிருந்தன. பெண்களே இல்லாத ஒரு சிறு நாடுபோல் கப்பல் காட்சியளித்தது. கட்டிலில் விரிக்கப்பட்டிருந்த மெத்தையில் பட்டுத் துணி பரவியிருந்தது. தங்கத் தாம்பாளத்தில் பழங்கள் வைக்கப்பட்டிருந்தன. அவளுக்குப் பிடிக்காதது அந்த மதுக்கிண்ணம்தான். அறையில் ஓர் ஓரத்தே வாளும் ஈட்டியும் வைக்கப்பட்டிருந்தன. கோடாரி ஒன்று பளபளப்பான முனையுடன் ஓர் பலகையில் வைக்கப்பட்டிருந்தது.

கதவைத் தாளிட்ட ராஜசுந்தரி அந்த இடத்தில் ஏதாவது பலகணியிருக்கிறதா, அந்நியர் யாராவது அவள் உடை மாற்றிக் கொள்வதைப் பார்த்துவிட முடியுமா என்று ஆராய்ந்தாள். ஒரே ஓர் இடத்தில் மட்டும் தொட்டவுடன் கதவு திறந்து கொண்டது. சிறு கதவு. முகத்தின் அளவே சிறு இடைவெளி. அதன் வழியே நீலக்கடல் தெரிந்தது. கடலில் கப்பல் சென்று கொண்டிருப்பது புரிந்தது.

குளிர்ந்த காற்று அந்தக் கதவு வழியே அறைக்குள் நுழைந்து அவளது மேனியைத் தடவின. அதுபோல் அவள் ஆடையற்ற நிலையில் தனது மாளிகையில் இருந்தது கிடையாது. படுக்கும்போது மிகவும் கவனமாக ஆடை விலகாமல் இறுக்கமாக அணிந்து படுப்பாள். கோடிப்பொன் கொடுப்பவர் இருப்பினும் அவள் தன் பிறந்த மேனியைப் பிறர் காண ஒப்புவதில்லை.

பருவம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. சூரியனும், சந்திரனும் தத்தம் கடமைகளைச் செய்வதுபோல் பருவ காலம் தனது பணியைச் செய்து வந்தது. குறிப்பாக பெண்களிடம் பருவம் கருணை காட்டுவதில்லை.

ராஜசுந்தரியைத் தேவதை என்றும் நாகக் கன்னிகை என்றும் மற்றவர் நினைப்பது சரிதான். பருவ தேவன் அவளது மேனியில் ஒவ்வொரு அணுவையும் புது மெருகிட்டுப் பொலியச் செய்திருந்தான்.



தன்னைத்தானே இப்படி ஆராய்ந்து கொள்வதற்குக் கடல் நடுவே ஓர் இடம் கிடைத்ததே என்று அவள் எண்ணும்போது காலத்தின் அடிச்சுவடுகள் தன்னை எப்படி எப்படி எல்லாம் அலைக்கழிக்கப் போகின்றனவோ என எண்ணினாள்.

நடப்பவையெல்லாம் உண்மைதானா? நடந்தவை எல்லாம் கற்பனையாகப் போய்விடக் கூடாதா?

விவரம் அறியாப் பருவத்தில் காஞ்சிக்குச் செவிலியுடன் வந்தது அவளுக்கு அதிகம் நினைவு இல்லை. சிறு வீட்டில் உண்பதும் உறங்குவதும் காஞ்சியைச் சுற்றிப் பார்ப்பதுமாகக் கழித்தது மட்டும் மெல்லிய கோடுகளாக இப்போது அவள் நினைவுத் தடாகத்தில் பிரதிபலிக்கின்றன.

நாட்டியப் பெண் ஒருத்தியிடம் தன்னைச் செவிலி அழைத்துச் சென்றதும் நினைவிருக்கிறது. அங்கே காஞ்சியில் பேசும் மொழியையும், இசையையும் கற்றுக் கொடுக்க ஓர் உபாத்தியாயரிடம் தான் நாள்தோறும் ஒரு நாழிகை நேரம் செலவிட்டதும் நினைவிருக்கிறது.

செவிலியைத் தன் சொந்தத் தாயென்று பல ஆண்டுகள் நினைத்திருந்தாள். ஆனால் ஒரு நாள், அவளுக்கு விவரம் தெரிந்த பிறகு செவிலி உண்மையை வெளியிட்டுவிட்டாள்.

அவள் நடனக் கலை அறிந்த குடும்பத்தைச் சேர்ந்தவளல்லள். அவளது பிறப்பில் பெரும் இரகசியம் அடங்கியிருந்தது. அவள் அரச குடும்பத்தைச் சேர்ந்தவள். ஆனால் ஏன் காஞ்சிக்கு வந்தாள். ஏகாம்பரர் ஆலயத்தில் நடனமாடும் பணி எதற்காக அவளிடம் ஒப்படைக்கப் பட்டது. திடிரென பெரும் மாளிகையும், சிப்பந்திகளும், செல்வங்களும் அவளுக்கு எப்படி வந்தன. அவளது கடைக் கண் பார்வைக்காக காஞ்சியில் செல்வந்தர்கள் கொண்டு கொட்டியவை அவை.

"சுந்தரி, செல்வங்களை ஏராளமாகச் சேர்த்துக் கொள்வோம். செல்வந்தர்கள் நட்பைப் பெறுவோம்.

செல்வாக்கை வளர்த்துக்கொள்வோம். அவை எல்லாம் தக்க சமயத்தில் நமக்கு உதவப்போகின்றன. ஆனால் உனது பெண்மையை மட்டும் இழந்துவிடாதே. பெண்ணின் பொக்கிஷமான கற்புக்குக் களங்கம் தேடிக்கொள்ளாதே" என்று செவிலி அவ்வப்போது கூறியவற்றை அவளால் மறக்கவே முடியாது.

இப்போது செவிலி சொல்லியபடிதான் கட்டு மரத்தில் ஏறினோம். கடலலைகள் என்னை விழுங்கியிருக்கலாம். ஆண்டவன் சித்தம் வேறு விதமாக இருக்கிறது போலும்.

கலபதி கொடுத்த பட்டாடையை எப்படி அணிவது என்று அவள் தெரிந்து கொண்டாள். கம்பளியை மடித்து ஓரிடத்தில் வைத்துவிட்டு வேட்டியைப் போன்ற ஆடையை அணிந்தாள். மேலுடை ஒன்றை அணிந்தாள் ஆகா! இப்போது புதிய தோற்றம்!

கதவைத் திறந்து கொண்டு "கலபதி, கலபதி" என்று கூறி வெளியே வந்தாள்.

அவளது புதிய தோற்றத்தைக் கண்டு கலபதிக்கு ஏற்பட்ட வியப்புக்கு எல்லையில்லை.

ஆனால் அவளது புதிய தோற்றத்தையும்விட அவளை பிறந்த மேனியாக அணு அணுவாக ரசித்தானே ஓர் பணியாள் - அவஃ உள்ளத்தில் காமத் தீ கொழுந்துவிட்டெரிந்து கொண்டிருந்தது ஒருவருக்கும் தெரியாது.

ராஜசுந்தரி உடையை மாற்றிக் கொள்ளும்போது அந்த அறையில் நடைபெறுவனவற்றை இரகசியமாகக் கண்டறியும் சிறு துவாரம் வழியே அவன் ராஜசுந்தரியை ரசித்தான். அவன் ஒருவனுக்குத்தான் அந்த இரகசியம் தெரியும். அவ்வப்போது கலபதியின் அறையில் நடப்பதை அறியும் அவனுக்கு இதுபோன்ற சுவை அநுபவம், காட்சி இதற்கு முன்பு ஏற்பட்டதில்லை.

## அத்தியாயம் - 16

# கலத்தில் நடந்த சம்பவம்

ராஜசுந்தரி அணிந்திருந்த புது உடை கலத்திலிருந்த அனைவரது கருத்தையும், கவனத்தையும் கண்டி இழுத்தது. அவர்களது நாட்டு மங்கையைப் போலவே அவள் காட்சியளித்தாள். அனைவரும் அவளை நெருங்கிப் பேச முயன்றனர். ராஜசுந்தரி அவர்களை இலட்சியம் செய்யவில்லை. கலபதியிடம் மட்டும் நெருங்கினாள். அவர் ஒருவருக்குத்தானே தமிழ் தெரியும்.

"என் பெட்டியில் ரொம்ப காலமாக இந்த உடை இருக்கிறது. இது இருந்ததோ நான் பிழைத்தேனோ?" என்று கூறினார் கலபதி. ராஜசுந்தரி மெல்லச் சிரித்தாள்.

"நீங்கள் பிழைத்தீர்களா? என் மானம் பிழைத்தது என்று சொல்லுங்கள்" என்றாள் ராஜசுந்தரி.

"நானும் அதைத்தான் சொல்ல வந்தேன். ஒரு பெண்ணின் மானத்தைக் காக்க முடியாத கப்பல் தலைவன் இருப்பதைவிட உயிர் விடுவதே மேலல்லவா? என் உயிரை இந்த உடை காப்பாற்றியது. அதனால்தான் நான் பிழைத்தேன் என்று சொன்னேன்." என்று விளக்கினார் கலபதி.

கலபதியின் பொறுப்புணர்ச்சியையும், பெருந்தன்மையையும் மனத்திற்குள்ளேயே வியந்துப் பாராட்டிய ராஜசுந்தரி மேலும் அவருடன் பேச விரும்பினாள்.

காற்றின் சக்தியால் மரக்கலம் கடலைக் கிழித்தவாறு சென்று கொண்டிருந்தது. மெல்ல மெல்லக் கதிரவன் மேல் திசையில் இறங்கிக் கொண்டிருந்தான். காலையில் கிழ்த்திசையில் செங்கதிரோனின் உதயத்தைக் கண்டான்

ராஜசுந்தரி. ஆனால் ரசிக்க முடியவில்லை. இப்போது அஸ்தமனமாவதைக் காண்கிறாள். செவ்வட்டப் பரிதி பழுக்கக் காய்ச்சிய பந்துபோல் மிக வேகமாகக் கடலில் குளிக்க இறங்கிக் கொண்டிருந்தது. வட்டத் தணல் போலும், உருக்கிய செம்புக் குழம்பு போலும் மெல்ல அது கடலுக்குள் நீராடச் செல்வதைப் போல் மறைவதைக் கண்டு பெருமூச்சுவிட்ட ராஜசுந்தரியைச் சுற்றி மறுகணம் இருள் சூழ்ந்தது.

காற்று வீர் வீர் என்று பாய்மரத்தின் மீது மோதுவதால், பாய்கள் அசைவதால், அசையும் வேகத்தில் கலம் நகர்வதால் ஏற்படும் ஓசையும், கூம்பினை இழுத்துக் கட்டியவற்றை அறுக்க முயலும் காற்றின் வேகத்தால் ஏற்படும் ஓசையும், கப்பல் பணியாட்கள் கீழ்த்தளத்தில் பாடும் ஓசையும் எழுந்து அவளது தனிமை உணர்வை மேலும் அதிகரிக்கச் செய்தன. விதியின் விளையாடலை எண்ணிப் பார்த்தாள். சில நாட்களுக்கு முன்பு அவள் காஞ்சியில் ஒய்யாரமாக இருந்த நிலை என்ன; இன்று எங்கோ கண்காணா நாட்டிற்குச் செல்லும் மரக்கலத்தில் இருக்கும் நிலை என்ன...

"ஆண்டவனே, ஏகாம்பரனே; தில்லைச் சிற்றம்பலவாணனே! உனது திருவிளையாடல் இப்போதுதான் தொடங்குகிறதா? அல்லது திருவிளையாடல் முடியப்போகிறதா? செவிலித்தாய் என்னை எதற்காகக் கட்டு மரத்தில் ஏற்றிவிட்டாள்? அவள் நோக்கத்திற்கு நேர் விரோதமான செயலன்றோ நடைபெறுகிறது!" என்று அவள் எண்ணியவாறிருக்கும்போது,

அவள் தோளை யாரோ தொடுவது போன்றும் இடையைச் சுற்றி வளைப்பது போன்றும் ஓர் உணர்ச்சி ஏற்படவே ராசுந்தரி திடுக்கிட்டுத் திரும்பினாள்.

இருளில் அந்த உருவத்தைத் தெரிந்துகொள்ள முடியவில்லை. முரட்டுக்கரம் அவளைத் தன் பக்கமாக இழுத்துக் கொள்ள முயன்றது. ஒருகணம் அவளால்



பேசமுடியவில்லை. இவ்வளவு துணிவுடன் அவளை எந்த ஆடவரும் தொட்டது கிடையாது. அவளது தனிமையைப் பயன்படுத்திக் கொண்டு அவளைச் கலைக்கத் துணிந்தவனது முகங்கூட அவளுக்குத் தெரியவில்லை.

ஆபத்துக் காலத்தில் ஏற்படும் அசாதாரண பலம் அவளிடம் தோன்றியது. ஆனால் அந்த வெறியனிடமிருந்து அவளால் எளிதில் தப்பிட முடியுமென்று தோன்றவில்லை.

அவளது தொண்டையினடியிலிருந்து 'ஐயோ' என்ற ஒலி எழுந்தது.

அது அந்தக் கடல் கோஷத்தை மீறி ஒலிக்கும் சக்தி படைத்ததாயிருந்தது.

எட்டுத் திக்கும் கேட்கும் மரண ஒலி போல் தோன்றியது. அந்த ஒலி பெண்மையைக் காப்பாற்றிக் கொள்ள இறைவனே அளித்த பெரும் சத்தமாக ஒலித்தது.

அவள் குரலைத் தடுப்பதற்காக ஒரு கரத்தால் அவள் வாயைப் பொத்த அந்தக் கயவன் முயன்றபோது தனது பலங்கொண்ட மட்டும் அவனிடமிருந்து விடுவித்துக் கொள்ள முயன்றாள். அந்த வேகத்தில் அவளுடைய மேல் ஆடை கிழிந்தது. அந்த இருளில் உடையும் உடையின்மையும் ஒன்றாகவே தோன்றின. ஆவென்றலறிய அவளது வாயை மீண்டும் மீண்டும் பொத்தினான் அந்தத் தீயவன். மேல் தளத்தில் இருவரும் உருண்டனர். ராஜசுந்தரி தன் உயிரைவிட மானத்தை மதித்தாள். மானத்தைக் காக்க அவள் போராடினாள். பகலில் உடுத்திய ஆடை தாறுமாறாகக் கிழிந்தது.

அவளது ஓலம் கேட்டு தடதடவென்று பலர் ஓடிவரும் ஓசை கேட்டது. தீவர்த்தி ஏந்திச் சிலர் வந்தனர்.

ராஜசுந்தரி மூர்ச்சை அடைந்தாள்.

* * * * *

கண் விழித்துப் பார்த்தபோது கலபதியின் அறையில் படுத்திருப்பதை அறிந்தாள். கலபதி கவலையுடன் அவளருகில் அமர்ந்திருந்தார். தன்னைப் பலாத்காரம் செய்ய முற்பட்டவர் கலபதி அல்லர் என்பதைப் புரிந்து கொண்டாள். கலபதியின் முகத்தில் மலர்ச்சி ஏற்பட்டது. அவளது மயக்க நிலை தீர்ந்ததற்கு மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார் கலபதி.

எதற்கும் கவலைப்பட வேண்டாம் என்று இனி எந்த வித ஆபத்தும் நேராது என்றும் ஆறுதல் கூறினார் கலபதி.

ராஜசுந்தரி சிரித்தாள். கலத்திலுள்ளார் அனைவரும் கட்டுப்பாடும், ஒழுக்கமும் உடையவர்களாகத் திகழும்போது அந்த ஒருவனுக்கு மட்டும் மிருக உணர்ச்சி திடீரென்று ஏற்படக் காரணம் என்ன என்று சிந்தித்துக்கொண்டே யிருந்தாள். சில ஆண்களுக்குப் பெண்களைக் கண்டவுடனேயே உடற் பசி உணர்வு ஏற்படுவதை அவள் அறிந்திருக்கிறாள். கலை ஆர்வம் என்ற பெயருடன் அவளுடன் பழக வருபவர்களது உள்ளத்தில் காமம் விசுவரூபம் எடுத்து வளர்ந்து நிற்பதை அறிந்திருக்கிறாள். பொதுவாக அவள் எதிரே சற்றுத் தொலைவில் மஞ்சத்தில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பவர்களுக்கு அவளது மேனியின் மீது கண் செல்லும் அவளை அப்பொழுதே விழுங்கி விடுவோமா என்ற எண்ணம் ஏற்படும். அவர்களது மனவிகாரத்தை அவள் சமாளித்துக்கொண்டு தன் கற்பு நிலை தவறாமல் காஞ்சியில் காலத்தைக் கழித்து வந்திருக்கிறாள். கடலில் அவளுக்கு ஏற்பட்ட அனுபவம் பயங்கரமானதுதான். நல்ல வேளையாக அவள் உடலுக்கு ஒன்றுமே நேரவில்லை. கப்பலில் வேலை செய்பவர்களுக்கு மிருகபலம் ஏற்பட்டிருப்பது இயற்கைதான். உடலில் மட்டுமன்று - உள்ளத்திலும் அரக்க உணர்ச்சிதான்.

கலபதியின் அறையில் அவள் உடையணிந்துத் தனது உடல் வனப்பைத் தானே கண்டு ரசித்தபோது மறைவான துளை வழியே ஒரு பசித்த கண் பார்த்துக் கொண்டிருந்தது அவளுக்குத் தெரியாது. அவளது வடிவத்தைப் பார்த்தவுடன்



கப்பலில் பாய்மரம் ஏற்றி இறக்கும் அந்த பணியாளின் உள்ளத்தில் அரக்க குணம் கிளர்ந்தெழுந்தது. அப்படியே அவளைக் கட்டித் தழுவி இன்பம் அனுபவித்துவிட்டுக் கடலில் குதித்துவிட வேண்டும் என்ற முடிவுடன் வாய்ப்பை எதிர் நோக்கியிருந்தான்.

இருள் சூழ்ந்த நேரத்தில் தனது திட்டத்தை முடித்துக் கொள்ள முற்பட்டான். அந்தோ, பாவம்! ராஜசுந்தரியின் ஓலம் கப்பலில் பணியாற்றியவர்களை விரைந்து ஓடி வருமாறு செய்தது.

கலபதி வந்தார். நிலையை உணர்ந்தார். வேறு ஒன்றும் பேசவில்லை. தளத்தின் மீது அவனைக் கட்டிப்போட்டு வைக்குமாறு கட்டளையிட்டார்.

பகல் சாயும் நேரம். ராஜசுந்தரி தனது படுக்கையில் எழுந்து உட்கார்ந்து பலகணியின் வழியே கடலை நோக்கிக் கொண்டிருந்தாள். கண்ணுக்கு எட்டிய தொலைவுவரை கருங்கடல். எங்கோ தொலைவில் வானமும் கடலும் ஒன்று கலந்து கொண்டிருந்தது. பறவைகள் பறந்து வந்து கொண்டிருந்தன.

'சுந்தரி' என்ற குரல் கேட்டு ராஜசுந்தரி திரும்பினாள். கலபதி நின்று கொண்டிருந்தார்.

"சற்றுக் காற்று வாங்க மேல் தளத்திற்குச் செல்லலாம்" என்று அழைத்தார். அவளது உடைகள் கிழிந்திருந்தன. அதைக் கலபதி கவனித்திருந்தார். தனது பெட்டியைத் திறந்து பெரிய பட்டாடை ஒன்றை எடுத்துப் போர்த்திக் கொள்ளுமாறு கொடுத்தார்.

"சில நாட்களாகவே தொல்லைக்கு மேல் தொல்லை உனக்கு வந்து கொண்டிருக்கிறது என நினைக்கிறேன். நீ அணிந்திருந்த உடை மிக நேர்த்தியாக இருந்ததென எண்ணினேன். அதற்கு இடையூறு வந்துவிட்டது. உன்னைக்கொண்டு உரியவரிடம் ஒப்படைக்கும் வரையில்

எனக்கு உறக்கமே வராது..." என்று கவலை நிறைந்த குரலில் கூறினார் கலபதி. அவரது கரத்தில் மிகப் பெரிய பட்டாடை இருந்தது. ராஜசுந்தரி அதைப் போர்த்திக் கொண்டாள்.

"உரியவரிடம் என்று கூறினீர்களே; எனக்கு உரியவர்யார்? நான் ஓர் அனாதை" என்று ராஜசுந்தரி கலக்கம் நிறைந்த குரலில் கூறினாள்.

கலபதி மெல்லச் சிரித்தார். "சுந்தரி, உன்னைப் பற்றி எனக்குத் தெரியும். உன் செவிலித்தாய் என்ன செய்ய நினைத்தாள் என்பதும் எனக்குத் தெரியும்" என்று கூறியபோது ராஜசுந்தரியின் உடல் மெல்ல நடுங்கியது.

"உன் செவிலியை எனக்கு இதற்கு முன்பே தெரியும். நாற்பது நாட்களுக்கு ஒருமுறை நான் காஞ்சி வருவேன். காஞ்சி கடை வீதியில் சுற்றுவேன். ஏகாம்பரீசர் கோயிலில் உன்னை நான் கண்டேன். உனது அழகு என் இதயத்தில் ஒருவிதக் கிளர்ச்சியை ஊட்டியது... உன்னைப் பற்றி விசாரித்தேன். உன் செவிலியைச் சந்தித்தேன். என்னிடமிருந்து விலையுயர்ந்த பொருள்களைப் பெற்றுக்கொண்டாள். உன்னைச் சந்திக்க ஏற்பாடு செய்வதாகக் கூறினாள்..."

இதைக் கேட்கும்போது ராஜசுந்தரியின் மெய் சிலிர்த்தது. செவிலியின் கொடூர உள்ளம் அப்பொழுதுதான் அவளுக்குத் தெரிந்தது.

"அவள் குறிப்பிட்ட அன்று நான் உனது மாளிகைக்கு வந்து இரகசிய வழியின் மூலம் படுக்கை அறைக்கு வந்துவிட வேண்டும் என்பது திட்டம். நான் வருவதையும் போவதையும் சமுத்திரநாதன் எனும் காஞ்சியின் பெரிய வணிகனும், குதிரை வியாபாரி ஒருவனும் கவனித்துக் கொண்டிருப்பது எனக்குத் தெரிய வந்தது..."

ராஜசுந்தரியிடமிருந்து 'ஆ' என்ற மெல்லிய ஒலி எழுந்தது.



"கவலைப்படாதே சுந்தரி. நடந்ததை, அப்படியே சொல்கிறேன். எனக்கு இப்போது வயது ஐம்பது. உனக்கு இருபது வயதிருக்கலாம். எனது மகள் போன்ற உன்மீது நான் ஆசை கொண்டதே தவறு. ஆனால் என் உள்ளத்தில் நீண்ட நாட்களாய்த் தீய்ந்து கொண்டிருக்கும் ஆசை எனும் தீ என்னைச் சுட்டெரித்தது. செவிலி கூறியதுபோல் இரகசிய வழியின் மூலம் மாளிகைக்குள் வந்து படுக்கை அறை அருகே காத்திருந்தேன். நேரம் ஆகிக் கொண்டிருந்தது நீ வரவில்லை. நான் மாமல்லபுரம் திரும்பியாக வேண்டும். எனக்கு வெறுப்பு ஏற்பட்டது. செவிலியிடம் சொல்லிக் கொள்ளாமலேயே நான் வந்த வழியே திரும்பினேன். என் நடவடிக்கைகளைக் கவனிக்க சமுத்திரநாதன் இரகசிய ஆட்களை நியமித்திருந்தது எனக்குத் தெரிய வந்தது. குறிப்பிட்ட நாளன்று பிட்சு பலியான செய்தி இப்பொழுது தான் கேள்விப்பட்டேன்.

எனக்கு அன்று இரவு தூக்கமே வரவில்லை. என் மகள் போன்ற உன்னைத் தவறான கண்ணோட்டத்தில் பார்த்தது பெரும் வருத்தத்தை அளித்தது. சுவரில் என்னை நானே மோதிக் கொண்டேன். இரத்தம் கசிந்தது. பெரும் வலி ஏற்பட்டது. உள்ளத்தே ஏற்பட்ட மாசு நீங்கியது..." என்று சொல்லி நிறுத்தியவுடன் சுந்தரி பரபரப்புடன் "பிட்சு கொலை செய்யப்பட்டது சில நாட்களுக்கு முன்புதானே..." என்றாள்.

"ஆமாம். பிறகு காஞ்சிக்கு வரும்போதெல்லாம் நான் செவிலியைச் சந்திப்பேன். ஒன்றும் கேட்கமாட்டேன். அவளே ஏதோ பேசுவாள். அயல் நாட்டிலிருந்து நான் கொண்டு வந்திருக்கும் விலையுயர்ந்த பொருளை நான் கொடுப்பேன். "இன்று முடியாமல் போய்விட்டது. பொறுத்துக் கொள்ளுங்கள். சுந்தரியை சந்திக்க எப்படியும் நான் ஏற்பாடு செய்கிறேன்" என்பாள். நான் சிரித்துக் கொள்வேன். பிட்சு கொலையுண்ட நாளன்று என்னை வருமாறு செவிலி அழைத்திருந்தாள். ஆனால் நான் செல்லவில்லை. அதற்கு மாறாகா பிட்சு எப்படியோ அங்கு வந்திருக்கிறார். நான் வருவேன், என்னைக் கொன்றுவிடலாம் என் சமுத்திரநாதன்

தனது ஆட்களை ஆயத்தமாக சுரங்கப் பாதையின் அருகே இருளில் நிறுத்தி இருக்கிறார். நான் வரவில்லை. பாவம், பிட்சு கொலை செய்யப்பட்டார். அந்தப் பழியை உன் மீது சுமத்தி உன்னைச் சிறையில் அடைத்துவிட்டதாகப் பிறகு கேள்விப்பட்டேன். செவிலி, சமுத்திரநாதன் உதவியை நாடியதும் அவன் உன்னைச் சிறைக் கோட்டத்திலிருந்து தப்புமாறு செய்ததும் நீ அறிந்ததே. பிறகு, செவிலி என்னைச் சந்தித்து உன்னைக் காப்பாற்றுமாறு கேட்டுக் கொண்டு ஓர் செய்தி கூறினான்" என்று கூறியபோது கப்பல் பணியாட்கள் வந்து, "எல்லாம் சித்தமாக இருக்கிறது" என்றனர். சுந்தரியையும் அழைத்துக் கொண்டு கலபதி புறப்பட்டார்.

## அத்தியாயம் - 17

# நாக நாட்டில் நாட்டிய மணி

ராஜசுந்தரி "கப்பலின் மேல் தளத்தில் கண்ட காட்சி அவளைத் திடுக்கிட வைத்தது. "இவர்களுக்கென்ன இதயமே இருக்காதா? மனிதப் பிறவிதானா?" என்று அவள் வேதனையால் துடித்தாள்.

மரக்கலத்தில் வாழ்பவர்களுக்கு மனித உணர்ச்சியே பாழடைந்துவிடும் போல் தோன்றுகிறது. நேற்று மேல் தளத்தில் அவளிருந்தபோது அந்த முரடன் நடந்துகொண்ட விதம் அவன் பெண்களோடு பிறந்திருக்க மாட்டான் என்பதற்குச் சாட்சியாக விளங்கியது.

இப்போது அந்தத் தவறு செய்தவனுக்குக் கப்பலிலுள்ளவர்கள் அளித்த தண்டனை பயங்கரமாக இருந்தது.



நடுக்கத்துடன் ஓர் ஓரமாக நின்றவளிடம் கலபதி நெருங்கி, "பார்த்தாயா, எங்கள் தண்டனையை?" என்றார்.

"மிகவும் குரூரம்" என்று முகத்தைத் திருப்பிக் கொண்டாள் ராஜசுந்தரி.

"உன்னிடம் நடந்து கொண்ட விதம் மட்டும் மென்மையானதோ?"

"பெண்களிடம் ஆண்கள் சாதாரணமாக சந்தர்ப்பம் வாய்த்தால் அப்படித்தான் நடந்து கொள்கிறார்கள். அதனால் அனைவரும் தண்டனை அடைந்து விடுகிறார்களா?"

"நான் நீதிபதியாக அமர்ந்தால் கால் வேறு கை வேறாகப் பிய்த்து எடுத்து விடுவேன்!"

"நீங்கள் இதுவரை வேறு பெண்களை ஏறிட்டுப் பார்த்ததே கிடையாதா?"

"அது வேறு விஷயம். பெண் சம்மதம் பெறாமல் அவளைத் தொடக்கூடாது. அதுதான் எங்களூர் சட்டம்".

"உங்களூர் சட்டமா?" என்று கேட்ட ராஜசுந்தரி கேள்விக்குறி ஒன்றை எழுப்பினாள். பிறகு "உங்களூரா? எது உங்களூர்? தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களில்லையா தாங்கள்?" என்று கேட்டாள்.

"எனது மூதாதையர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களாம். ஆனால் அவர்கள் நாக நாட்டிற்குச் சென்று குடியேறி முந்நூறு ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டன. நாகநாட்டைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாயா? தொண்டை மண்டலத்தை ஆண்ட தொண்டைமான் எங்கள் நாட்டவர்..." என்று பெருமையுடன் பேசிக் கொண்டார் கலபதி.

"கேள்விப்பட்டிருக்கிறேன். இந்தக் கலம் கடாரம் செல்வதாகக் கூறினீர்களே..." என்று ராஜசுந்தரி தனது மனத்தில் எழுந்த சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்ளக் கேட்டாள்.

"ஆமாம். இந்தக் கலம் கடாரம் செல்கிறது. நாகநாடு சென்று பிறகு கடாரம் செல்லும். நாக நாட்டில் வாழும் சுந்தவர்மருக்கு இந்தக் கலம் சொந்தமானது..." என்றார் தளபதி.

ராஜசுந்நரி ஏதோ கேட்க வாயெடுத்தாள். ஆனால் அதற்குள் அவள் கண்ட காட்சி அவள் ரத்தத்தையே சுண்டச் செய்துவிட்டது. 'ஐயோ' என்று அலறிவிட்டாள்.

"நீ கவலைப்படாதே சுந்தரி, கயவன் ஒழிந்தான். பெண் பித்தன் ஒழிந்தான். அவனை உயிருடன் உலவவிட்டால் என்றைக்குமே உனக்கு ஆபத்து" என்றார் தளபதி.

"எனக்கா? என்றுமே ஆபத்தா? இவ்வளவு தண்டனைகள் கிடைத்த பிறகும் அவன் என்னை நினைப்பானா?"

"நிச்சயம் நினைப்பான். சுந்தரி, உன் எழில் மிகுந்த மேனியைக் கண்டுவிட்ட அவன், உன்னைத் தன் பசிக்கு விருந்தாக்கிக் கொள்ளாமல் விடமாட்டான்" என்று தளபதி கூறியபோது ராஜசுந்தரி திடுக்கிட்டாள்.

"ஆமாம், சுந்தரி! எனது அறையில் நீ தங்கி உடைமாற்றிக் கொண்டபோது ஓர் இரகசிய துவாரம் வழியாக உன்னை அணுஅணுவாக அனுபவித்துப் பித்தம் தலைக்கேறச் செய்து கொண்டான்..."

இதைக்கேட்ட சுந்தரி தன் செவிகளைப் பொத்திக் கொண்டாள். பயமும் நாணமும் அவளைக் கவ்வின.

"எனது அறையில் இப்படியொரு துளையைச் செய்து வைத்திருக்கும் தீயவன் எவன் என்பதை நான் அடுத்துக் கண்டு பிடிக்க வேண்டும். கப்பல் என்பது ஒரு தனி சாம்ராஜ்யமாகும். அதில் ஒழுங்கு கட்டுப்பாடு யாவும் வேண்டும். அதை மீறுபவர்களுக்கு இதுதான் தண்டனை" என்று அழுத்தந்திருத்தமாகக் கூறினார் கலபதி.



கலத்தின் மீது பெரும் அலைகள் மோதிக் கொண்டிருந்தன. அந்த அலைகளினூடே அந்தக் கப்பல் பணியாளனின் உடல் சுழன்று வீழ்ந்திருக்கும். பயங்கரமாக வாயைத் திறந்து வரும் திமிங்கலம் இதற்குள் அவனது உடலைச் சுவைத்து மாலை உணவுக்கு வழி செய்திருக்கும்.

ராஜசுந்தரிக்கு அதற்கு மேல் அங்கே இருக்கப் பிடிக்கவில்லை. ஓய்வு எடுத்துக்கொள்ள ஒதுக்கப் பட்டிருக்கும் அறைக்குள் விரைந்து ஓடினாள்.

சாளரத்தின் வழியே கீழ்க்கடலில் வட்டமதி உதயமாவது தெரிந்தது. காஞ்சியில் மதிவாணன் உதயமாவதை அவள் கண்டிருக்கிறாள். ஏகாம்பரேச்வரர் திருக்கோயில் விமானத்தின் மீது மதியின் இளங்கதிர் வீழ்வதை அவள் கண்டிருக்கிறாள். எங்கோ பிறந்தாள்; எங்கோ வளர்ந்தாள்; எங்கோ சென்று கொண்டிருக்கிறாள். காஞ்சியிலேயே இருந்து அந்த ஓவியரிடம் இன்னும் சற்று மனம் விட்டுப் பேசிப் பழகியிருந்தால் அவனது காதலைப் பெற்றிருக்கலாம். எல்லாம் பகல் கனவாகிவிட்டது. புதிய தீவிற்குப் போய் எப்படிப் பழகப் போகிறோமோ? யாருடன் பழகப் போகிறோமோ? அதை நினைக்கும்போது அவளுக்கு வாழ்க்கையின் மீது வெறுப்பேற்பட்டது. யாருக்காக வாழ வேண்டும்? கப்பலில் ஏற்பட்ட அநுபவம் போல் புதிய தீவில் ஏற்படாது என்று என்ன நிச்சயம்? அழகும் இளமையும் பெண்களுக்கு உடன் பிறந்த விரோதிகள்.

புதிய தீவில் பௌத்த மடம் ஏதாவது ஒன்றில் சேர்ந்து பிட்சுணியாகிவிடலாம். தலையை மழுங்க வழித்துக் காவி உடை அணிந்து கையில் திருவோட்டுடன் காட்சியளிக்கும் அவளை அப்போது யார் ஏறிட்டுப் பார்ப்பார்கள். மணிமேகலையின் நினைவு வந்தது.

மணிமேகலைக்கும் இப்படிப்பட்ட அனுபவம்தான் ஏற்பட்டது. அதனால்தானே துறவறம் பூண்டாள்.

ராஜசுந்தரி படுக்கையில் வீழ்ந்தாள். தொட்டிலை மெல்ல ஆட்டுவது போன்ற உணர்ச்சி. தூக்கம் கண்

இமைகளைத் தொட்டது. முதல் நாள் நடந்த பயங்கர நிகழ்ச்சிகளை மறக்க முயன்றாள். ஆழ்ந்த உறக்கத்தில் அவள் சஞ்சரித்தாள்.

மறுநாள் அவளது அறைக் கதவை யாரோ பலமாகத் தட்டும் ஓசை கேட்டு விழித்து எழுந்த சுந்தரி பலகணி வழியே பார்த்தபோது கதிரவன் தோன்றிப் பல நாழிகை ஆகியிருக்கும் என்பதை அறிந்தாள்.

கலபதி கதவைத் தட்டிக் கொண்டிருந்தார். ஆடையைச் சரிசெய்து கொண்டு சுந்தரி கதவைத் திறந்தாள்.

"பல நாட்கள் உறக்கத்தைச் சேர்த்து வைத்துத் தூங்கிவிட்டாயோ?" என்று கலபதி கேட்டார்.

சுந்தரி மென் முறுவல் பூத்தாள். இரண்டு மூன்று நாட்களாக நாட்டியம் பயிலாமல் அவள் உடலில் ஒருவிதச் சோர்வு ஏற்பட்டிருந்தது.

"சோம்பல் என்னை வந்து சூழ்ந்துகொண்டது" என்றாள் சுந்தரி.

"நான்கு பகல், இரவு பயணம் செய்தால் நாகநாட்டை அடைந்துவிடலாம். அங்கே சுந்தவர்மரிடம் உன்னை ஒப்படைத்துவிட்டால் பெரும் கடமையை நிறைவேற்றியவன் ஆவேன்" என்றார் கலபதி.

"பெரும் கடமையா!" சுந்தரி தன் விழிகள் விரியக் கேட்டாள்.

"ஆமாம், இளவரசரின் கட்டளை".

"இளவரசரின் கட்டளையா? என்ன கட்டளையிட்டார்?"

"உன்னை நாகநாட்டில் சேர்ப்பிக்குமாறு..."

கலபதி இவ்வாறு கூறியதைக் கேட்ட ராஜசுந்தரி திடுக்கிட்டாள். "இளவரசருக்கு என்னைப் பற்றி என்ன



அக்கறை? மேலும், நான் கலத்தில் ஏறிப் போகப் போகிறேன் என்று அவருக்கு எப்படித் தெரியும்?"

"சுந்தரி, இளவரசருக்கு எல்லா செய்திகளும் தெரியும். பல்லவ நாட்டில் நடைபெற்று வரும் சதியனைத்தும் அவர் அறிவார். உன்னைச் சாளுக்கிய நாட்டிற்கு உன் செவிலி அனுப்பி வைக்க இருந்த செய்தியும் அவர் அறிவார்.

அதனால்தான் என்னை அழைத்து மிகக் கவனத்தோடு நாக நாட்டில் சேர்க்கச் சொன்னார்!" என்றார்.

ராஜசுந்தரி ஒரு கணம் விழிகளை மூடிக் கொண்டாள்.

"ஆகா, பல்லவ இளவரசருக்கு என் நினைவு என்றுமே இருக்கிறதா? கலையுள்ளம் படைத்த அவர் ராஜதந்திர விஷயங்களிலும் மிகவும் திறமை படைத்தவராக விளங்குகிறாரே..." என்று எண்ணினாள்.

நாக நாட்டில் யார் இருக்கிறார்கள்? அங்கே எதற்காகச் செல்ல வேண்டும்? சுந்தரிக்குப் புரியவில்லை என்றாலும் கப்பல் தலைவனின் உற்சாகமான பேச்சு அவளுக்குப் புதுத் தெம்பை அளித்தது.

குறைமதி வானத்தின் உச்சியில் தவழ்ந்த ஒரு நாள் இரவு கப்பலில் உள்ள பணியாட்களுக்கு உற்சாக மூட்டுவதற்காக அவள் தனது நாட்டியத் திறமையைப் புலப்படுத்தி நடன விருந்தளித்தாள்.

அன்று அவள் ஆடியது தேவலோக அரம்பையர்கள் ஆடியதுபோலவே இருந்தது.

யாழும் குழலும் இல்லை. சுருதியும் இசையும் இல்லை. தாளமும் மத்தளமும் இல்லை. சதங்கையும் கிண்கிணியும் இல்லை.

ராஜசுந்தரி கப்பலின் மேல் தளத்தில் ஆடினாள். அவள் நடனத்தைக் கப்பலின் பாய்மரம் அசைந்து அசைந்து ரசித்தது.

கப்பலின் கொடிகள் ஆடி ஆடிக் களித்தன. கப்பலின் தொழிலாளிகள் கரங்கொட்டி ஆர்ப்பரித்தனர். "ஓ" என்று ஓலமிடும் கடல் மெல்லிய ரீங்காரமிட்டது போல் வாழ்த்தியது.

வார்த்தை இல்லை; சொற்கள் சேர்ந்த பாடல்கள் இல்லை. சுந்தரி ஆடினாள்; நேரம்போவது தெரியாமல் ஆடினாள்; கால்கள் துவளும்வரை ஆடினாள்; இடை சோர்வுறும்வரை ஆடினாள்.

விடியும் நேரம் வந்துவிட்டது; கீழ்வானத்து மஞ்சள் சாடு இழைந்த வெள்ளிக் கோடுகள் அவளுக்கு மாலை சூட்ட வந்துவிட்டன.

ராஜசுந்தரி தளர்ந்து போய்க் கீழே விழப்போகும் சமயம் கலபதியும் மற்றும் இருவரும் அவளைத் தாங்கிக் கொண்டு கலபதியின் அறையில் கொண்டு சேர்த்தனர்.

மறுநாள் பொழுது விடிந்து உச்சி வேளையைக் கதிரவன் அடையும்போது ராஜசுந்தரி கண் விழித்தாள்.

"ராஜசுந்தரி... சீக்கிரம் வா - இதோ பார்?" என்று கலபதி அழைத்தார்.

கப்பலின் மேல் தளத்திற்கு வந்தபோது தொலை தூரத்தில் மாட மாளிகைகளின் நிழற் தோற்றம் தெரிந்தது.

"அதுதான் நாக நாட்டின் தலைநகர்" என்று கலபதி கூறினார். மாலைச் சூரியன் மறையும் வேளையில் அந்தக் கலம் நாகநாட்டின் துறையில் வந்து நங்கூரம் பாய்ச்சியது. அந்தக் கலத்தை வரவேற்கத் துறையில் ஏராளமான மக்கள் கூடியிருந்தனர்.

வெண்கொற்றக் குடை பிடித்து நாகநாட்டின் புகழ் பெற்ற வணிகர் கந்தவர்மன் ஓர் அரசருக்குள்ள கம்பீரத்தோடு நின்று கொண்டிருந்தார்.

## அத்தியாயம் - 18

# 'எனக்காகத் தூது செல்லுங்கள்!'

காஞ்சியில் தன்னிடம் பழகிய சிறுமியைப் பல ஆண்டுகளுக்கு பிறகு ராஜசுந்தரி சந்தித்தபோது அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை. கடல் கடந்துத் திக்கற்ற பூமிக்கு வந்துவிட்டதாக இதுவரை இருந்த உணர்ச்சி இப்போது விடுபட்டது. துறைமுகத்தில் ஏராளமான மக்கள் கூடியிருந்தனர். கலம் கரைவரை நெருங்கிச் சென்றது. மாமல்லபுரத்தைப் போலன்றி கட்டுமரம் அல்லது சிறு படகுகளில் செல்ல வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. ஆழமான அந்தப் பகுதியில் கலம் மெல்ல மெல்ல வந்து நின்ற அழகை ராஜசுந்தரி மீண்டும் ஒருமுறை மனக் கண்ணில் கொண்டு நிறுத்தினாள்.

நாகநாட்டின் முக்கிய நகரமான முத்துப்பட்டினத்திற்கு மூன்று மாதங்களுக்கு ஒருமுறைதான் தமிழ் நாட்டிலிருந்து கலங்கள் வரும். அதனால் நகரத்து முக்கிய வணிகர்கள் அங்குக் கூடி கலத்திலிருந்து இறங்குபவர்களை மகிழ்ச்சி ஆரவாரத்துடன் வரவேற்பர். அந்தத் தீவிற்கே உரிய நாகலிங்க மலர்களால் ஆன மாலையைச் சூட்டி வரவேற்பார்கள்.

நாகத் தீவின் பிரபல வணிகர் கந்த வர்மனும் வெண் கொற்றக் குடை நிழலில் வந்து நின்று கொண்டிருந்தார். அவர் அந்தத் தீவின் முடிசூடா மன்னர். அவரது கட்டளைப் படியே அந்த நாட்டு மக்கள் இயங்கிக் கொண்டிருந்தனர். அவரது மூதாதையர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள்தாம். அதனால் தமிழை மறக்காமல் அவர் பேசினார். அவரைச் சூழ்ந்திருந்த மக்களும் மற்ற வணிகர்களும் பணியாட்களும் அலுவலர்களும் தமிழில் பேசியதைக் கேட்க ராஜசுந்தரிக்கு இன்பமாக இருந்தது.

துறைமுகத்துக்கு அருகேயே உயரமான மாளிகைகள் தென்பட்டன. பசுமையான செடிகளும், உயர்ந்த மரங்களும் தீவு எங்கும் வளர்ந்திருந்தன.

கலபதி எல்லோரையும் அறிமுகப்படுத்தினார். ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு பொருளை வணிகர் தலைவருக்கு அளித்துத் தங்கள் வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டனர். வணிகர் தலைவரும் இன்முகத்துடன் வரவேற்று அவர்கள் அந்தத் தீவில் தங்கியிருப்பதற்கு வேண்டிய உணவு உண்டி உறைவிடத்தை ஏற்பாடு செய்யக் கட்டளையிட்டார்.

துறையில் கூடியிருந்த பெரும்பான்மையோர் சென்ற பிறகு கலபதி முகமலர்ச்சியுடன், "ஐயா, மற்றொரு முக்கியமான விருந்தாளியைத் தங்களுக்கு அறிமுகப்படுத்த விரும்புகிறேன்" என்று கூறி கப்பலிலிருந்து ராஜசுந்தரியைக் கரைக்கு அழைத்து வந்தார்.

கப்பல் தலைவன் ராஜசுந்தரியை சுந்தவர்மனுக்கு அறிமுகப்படுத்தினார்.

ராஜசுந்தரியை வைத்த விழி வாங்காமல் நோக்கிய சுந்தவர்மன் ஏதோ யோசனை செய்தார். அவர் சிந்தனையைக் கலைக்கும் வகையில் 'காஞ்சியினின்று தங்கள் நாட்டிற்கு வரும் நாட்டியராணி' என்று அறிமுகப்படுத்திய கலபதி காஞ்சி இளவரசர் தன்னிடம் தெரிவித்திருந்த செய்தியையும் ராஜசுந்தரியை அவரது நாட்டிற்கு அனுப்பி வைத்ததையும் தெரிவித்தார்.

வணக்கத்தை ஏற்றுக்கொண்ட சுந்தவர்மன், "உன்னை எனக்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே தெரியும்" என்றார்.

"என் மகளுக்கு நாட்டியப் பாடம் ஆரம்பித்துக் கொடுத்தது நினைவிருக்கிறதா?" என்று கேட்டார்.



ராஜசுந்தரிக்கு புரிந்துவிட்டது. காஞ்சிமா நகரில் கடல் கடந்த நாட்டிலிருந்து வந்த விழி அழகுடைய இளம் பெண்ணுக்கு அவள் நாட்டியம் கற்றுக் கொடுத்தது நினைவுக்கு வந்தது. இளவரசரும் அந்தப் பெண்ணும் சேர்ந்து நாட்டியம் பயின்றது நினைவுக்கு வந்தது.

ராஜசுந்தரியை மாளிகைக்கு அழைத்துச் செல்லுமாறு கூறிய சுந்தவர்மன் கலபதியிடம் தனியே பேச விரும்புவதாகக் கூறினார். ராஜசுந்தரியும், சுந்தவர்மனின் மகளும் சில நொடிகளிலே கலகலப்பாகப் பேசத் தொடங்கிவிட்டனர்.

"உன் பெயரை முன்பே கேட்டுக்கொள்ள நினைத்தேன். அப்போது நீ சிறுமியாக இருந்தாய்" என்று ராஜசுந்தரி பேச்சைத் தொடங்கினாள்.

அவர்கள் ஒரேயிடத்திலிருந்து பேசவில்லை. மாளிகையைச் சுற்றி வந்தனர். மாளிகைக்கு அருகேயிருந்த தடாகக் கரைக்குச் சென்றார்கள். தடாகக் கரையில் அமர்ந்து நேரம்போவது தெரியாமல் பேசிக் கொண்டிருந்தார்கள்.

காஞ்சியில் நடைபெற்றவற்றை ராஜசுந்தரி ஒன்று விடாமல் மனம் விட்டுப் பேசலானாள். காஞ்சியைவிட்டு இளவரசர் வேறு நாட்டிற்குச் சென்றதையும், காஞ்சியைச் சுற்றியுள்ள பகுதியில் பஞ்சம் ஏற்பட்டிருப்பதையும், மதவாதிகள் பலர் குழப்பம் ஏற்படுத்த முயல்வதையும் சுந்தரி விவரித்து வந்தாள்.

சுந்தவர்மன் மகள் பெயர் பச்சைக்கொடி. அவளுடைய அழகையும் வனப்பையும் சுந்தரி மனத்திற்குள்ளேயே வியந்து கொண்டாள். ராஜசுந்தரியைவிட பத்து வயதாவது பச்சைக்கொடி வயதில் இளையவளாயிருப்பாள். ஆனால் வளர்ச்சியும் வனப்பும் ராஜசுந்தரிக்கு ஈடாக அவளைத் தோன்றச் செய்தன.

பச்சைக்கொடி காஞ்சியைப் பற்றி விசாரிக்கலானாள். "நானும் எனது தந்தையும் பல ஆண்டுகளுக்கு முன்பு உங்கள்

நாட்டிற்கு வந்திருந்தோம். எனக்குக் காஞ்சியை மிகவும் பிடித்திருந்தது கடை வீதியில் மக்கள் குதூகலமாக நடமாடிக் கொண்டிருப்பதும் பொன்னும் மணியும் குவிந்து கிடப்பதும், பட்டுப் பாவாடைகள் கடைகளில் பளபளவென்று மின்னுவதும் பார்க்க வியப்பாக இருக்கும். என் தந்தை ஏராளமாக வாங்கித் தந்தார். எல்லாவற்றையும் விட எனக்கு மிகவும் பிடித்தது கடல் மல்லைதான்'' என்று கூறிப் பெருமூச்சுவிட்டாள் பச்சைக்கொடி.

கடல்மல்லையில் அவனும், இளவரசியும் கைகோத்துக் கொண்டு ஓடியாடிய சம்பவங்கள் நினைவுக்கு வந்தன. பெரும் பாறைகளில் அலை மோதும்போது குதூகலமாக கை கொட்டிச் சிரித்து மகிழ்ந்த சம்பவங்கள் நினைவுக்கு வந்தன.

''இளவரசர் நலமுடன் இருக்கிறாரா?'' என்று கேட்டாள் பச்சைக்கொடி.

"இளவரசர் நலமுடன் இருப்பதாக நினைக்கிறேன். நான் அவரைச் சந்தித்து ஓராண்டுக்கு மேலாகிறது" என்றாள் ராஜசுந்தரி. பச்சைக்கொடி இளவரசரைக் குறித்துக் கேட்டவுடனேயே ராஜசுந்தரிக்கு காஞ்சியின் நினைவு வந்துவிட்டது.

காஞ்சி மாநகரில் வாழ்ந்த காலத்தில் இளவரசரைச் சந்திக்காமலேயே இருந்துவிட்டதை நினைத்து இப்போது வேதனைப்பட்டாள் சுந்தரி.

"சகோதரி! தாங்கள் மிகவும் பாக்கியம் செய்தவர்கள். நான்தோறும் இளவரசரைத் சந்திக்கும் வாய்ப்பு தங்களுக்கு ஏற்பட்டிருக்குமல்லவா?" என்று பச்சைக்கொடி கேட்டாள். சுந்தரி சிறிது நேரம் மௌனமாக இருந்தாள்.

''என்ன யோசிக்கிறீர்கள்? இளவரசருக்கு நடனம் கற்பித்தீர்கள். அந்த நாளை நினைத்துப் பார்க்கிறீர்கள் அப்படித்தானே?" என்று பச்சைக்கொடி கேட்டாள்.



உண்மையில் ராஜசுந்தரி அந்த நாட்களை நினைவில் கொண்டுவர முயன்றாள்.

"நான் திடீரென்று காஞ்சியை விட்டுப் புறப்படும்படி நேர்ந்துவிட்டது. அந்த விவரம் புரிந்தும் புரியாத பருவத்தின் நினைவு இன்றளவும் என் மனத்தைவிட்டு மாறவில்லை" பச்சைக்கொடி இவ்வாறு பேசும்போது ராஜசுந்தரிக்கு பழைய நினைவுகள் மனக் கண்ணில் வட்டமிட்டன.

இளவரசர் நாள்தோறும் வருவார். அவருடன் அந்த ஓவியரும் வருவார். மனம் விட்டுப் பழகியிருக்கலாம். ஓவியக் குமாரதேவனின் விழிகளில் தேங்கியிருந்த பாச உணர்ச்சியைப் புரிந்து கொள்ளத் தவறிவிட்டோமோ?'' ராஜசுந்தரி எண்ணினாள்.

''அக்கா, ஏதும் பேசாமல் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருக்கிறீர்களே" என்று பச்சைக்கொடி கேட்டாள்.

ராஜசுந்தரி மெல்ல நகைத்து, "ஒன்றுமில்லை; உன் பெயர் ஒற்றுமையை எண்ணி எண்ணி வியப்படைகிறேன்.." என்றாள்.

"பெயர் ஒற்றுமையா?"

''ஆமாம்; பச்சைக் கொடி இளங்கொடி போல் இருக்கிறாய்; உனது அழகிய உடல் மெல்லிய கொடிபோல் தோன்றுகிறது. உனது விழிகள் கொடியில் துளிர்த்த இலைகளைப்போல் விளங்குகின்றன. உனது மெல்லிய அதரங்களையும், அவற்றுள் புதைந்து கிடக்கும் வெண்முத்துப் பற்களையும் நான் எப்படி வர்ணிப்பது என்றே தெரியவில்லை'' என்று ராஜசுந்தரி சொல்லிக்கொண்டே வரும்போது பச்சைக் கொடி முகத்தை இரு கரங்களாலும் புதைத்துக்கொண்டு, 'போ, அக்கா.. ரொம்பவும் புகழ்கிறீர்கள். என் உடல் நாணத்தால் துவள்கிறது" என்று அவள் மடியில் சாயவும், சுந்தரி அவளது தோள்களை மெல்லத் தடவி, ''பச்சைக் கொடி, உண்மையைச் சொன்னேன். உனது

தோற்றம் கண்டவர்களை மயக்கமடையச் செய்வது. உன் வடிவழகில் மயங்காதவர்களே இருக்க முடியாது. உன்னை மணப்பதற்குப் பல நாட்டு அரச குமாரர்கள் போட்டிப் போட்டுக்கொண்டு வருவார்கள்" என்றாள்.

பச்சைக் கொடி விழிகளை அகலப்படுத்திக் கொண்டு, 'தங்களை இளவரசர் நாள்தோறும் சந்தித்தாரே அவருக்குத் தங்கள் மீது மையல் ஏற்படவில்லையா?" என்று திடீரென்று கேட்டாள்.

ராஜசுந்தரி திடுக்கிட்டாள். இதுவரை அவள் காதல், மையல், ஆசை இத்தகைய எண்ணங்கள் எதிலும் ஈடுபட்டவளல்லள். நினைத்துக்கூடப் பார்க்க அவளுக்கு நேரமில்லை. நடனக்கலைக்கே தன்னை முழுமையும் அர்ப்பணித்துக் கொண்ட அவள் எப்போதாவது இதயத்தில் காதல் அநுபவத்தை நினைத்துப் பார்ப்பாள். அந்த நினைவு ஓவியன் உருவமாகவே காட்சியளிக்கும்.

ஓவியனது விழியை அவள் சந்தித்திருக்கிறாள். ஓவியனுடன் பேசியிருக்கிறாள். அப்போதெல்லாம் அவள் நெஞ்சில் வேறு விதமான எண்ணம் ஏதும் ஏற்பட்டது கிடையாது. காஞ்சிநகரத்துப் பெரும் புள்ளிகள் அவளது வீட்டிற்கு வரத் துடிக்கும்போது பல்லையிளித்து அசடு வழியப் பேசும்போது அவளுக்கு எந்தவித எண்ணமும் தோன்றுவது கிடையாது. தனது அழகு, தனது கலை இவை யாவும் கலைத் தொண்டாற்றவே ஏற்பட்டவையாக அவள் எண்ணினாள். அதனால் பச்சைக் கொடி கேட்டபோதுதான் அவளுக்குக் காதல், நேசம், அன்பு என்பன போன்ற நினைவுகள் தோன்றலாயின.

"என்ன, நீங்கள் திடீரென்று சிந்தனையில் ஆழ்ந்து விடுகிறீர்கள்... நான் கேட்ட எதற்கும் மறுமொழி கூறவில்லை. விருப்பமில்லையா?" என்று பச்சைக்கொடி கேட்டாள்.

ராஜசுந்தரி, பச்சைக்கொடியை அன்புடன் அணைத்துக் கொண்டு, "பச்சைக்கொடி இளவரசரைப் பார்க்கும்போது



எனக்கு வேறு எந்தவித உணர்ச்சியும் ஏற்படவில்லை..." என்றாள்.

பச்சைக்கொடி பெருமூச்சு விட்டாள். ராஜசுந்தரியை அணைத்துக் கொண்டு, "இப்பொழுதுதான் எனக்கு உயிரே வந்தது. இளவரசரை நீங்கள் காதலித்திருந்தால் நான் போட்டிக்கு வரக்கூடாதல்லவா?" என்றாள்.

ராஜசுந்தரி சிரித்தாள். "இளவரசரை நீ எப்படிக் காதலித்தாய்?"

"மானசீகமாக. காஞ்சியினின்று வந்ததிலிருந்து என் நினைவெல்லாம் அவரது வடிவத்தின் மீதே..."

"நீ காதலிக்கிறாய், அவர் உன்னைக் காதலிப்பார் என்பது என்ன நிச்சயம்?"

ராஜசுந்தரியின் இந்தக் கேள்வி பச்சைக்கொடியைத் திகைக்க வைத்தது. சிறிது நேரம் யோசித்தாள். பிறகு "அக்கா, தங்களை மூத்த சகோதரியாக மட்டும் நான் கருதவில்லை. என் குரு தாங்கள். நீங்கள்தான் எனக்கு ஒரு வழி காட்ட வேண்டும். இளவரசரிடம் என் இதயத்தைப் புரிய வைக்க வேண்டும்!" என்றாள்.

ராஜசுந்தரி சிரித்தாள். "நான் என்ன செய்வேன் பச்சைக்கொடி. காஞ்சியைவிட்டு நான் நாகநாட்டிற்கு வந்துவிட்டேன். இளவரசரிடம் உன் இதயத்தை எப்படி எடுத்துச் சொல்வது? மேலும் அவரோ பல்லவ இளவரசர். அவரை மணக்க "நான் நீ" என்று பல நாட்டு அரசகுமாரிகள் போட்டி போடும்போது ஒரு வணிகரின் மகளை அவர் விரும்புவாரா?" என்றாள்.

பச்சைக்கொடியின் முகம் சுண்டியது. "என்னைப் போல் அவரும் என்னையே நினைத்துக் கொண்டிருப்பார் என்று நினைக்கிறேன். பல தடவை அவர் என் கனவில் தோன்றியிருக்கிறார். அவரும் நானும் சந்தித்துப் பேசிக்

கொண்டிருக்கிறோம். அவர் என்னைக் காஞ்சிக்கு வாவென்று பலமுறை அழைத்திருக்கிறார்" என்றாள் பச்சைக் கொடி.

ராஜசுந்தரி மனம்விட்டுச் சிரித்தாள். "பச்சைக்கொடி! சிறு வயதுப் பழக்கம் எப்படிக் காதலாக மாறும்? உன்னை அவர் நினைத்துக் கொண்டிருப்பார் என்பது என்ன உறுதி?"

"அக்கா, எனக்கென்னவோ தோன்றுகிறது. அவர் என்னை மறந்திருக்க மாட்டார் என்று. நீங்கள் மனம் வைத்தால் நான் பல்லவ நாட்டு இளவரசியாவேன்" என்று பச்சைக்கொடி ராஜசுந்தரியிடம் குழைந்த குரலில் பேசினாள்.

ராஜசுந்தரி நகைத்தாள். "பச்சைக்கொடி, நீ பேசுவது விசித்திரமாக இருக்கிறது! நான் ஓர் அனாதை. நாடு விட்டு நாடு வந்திருக்கிறேன். நாக நாட்டிற்கு வரப் போகும் எண்ணம் எனக்கு எள்ளளவும் இல்லை. ஆனால் விதி என்னை இங்கே கொண்டு சேர்த்துவிட்டது. மீண்டும் நான் காஞ்சிக்கு எப்படிச் செல்வது. அடுத்த ஊர்ப் பயணம்போல் எளிதானதா? அப்படியே சென்றால்கூட இளவரசரை அணுகி என்னவென்று கேட்பது?" என்று கேட்டாள்.

பச்சைக்கொடி, ராஜசுந்தரி கரங்களைப் பிடித்துக்கொண்டு "தங்களால் முடியும், தங்களுடைய பயணத்துக்கு நான் ஏற்பாடு செய்கிறேன். என் தந்தையிடம் இப்போதே போய்ச் சொல்கிறேன்" என்றாள். ராஜசுந்தரிக்கு ஒன்றுமே புரியவில்லை. "காஞ்சிக்குச் செல்வதும் இளவரசரைச் சந்திப்பதும் எளிதான செயலா? இது என்ன கனவா?" என்று எண்ணினாள்.

மறு நாளே கந்தவர்மன் ராஜசுந்தரியைச் சந்திக்க விரும்பிக் கூப்பிட்டனுப்பினார். கந்தவர்மன் அருகே பச்சைக்கொடி நின்று கொண்டிருந்தாள்.

"மீண்டும் காஞ்சிப் பயணமா?" என்ற கவலையுடன் ராஜசுந்தரி கந்தவர்மனைச் சந்திக்கச் சென்றாள்.

32953
5008179

அத்தியாயம் - 19

## வேண்டாம் நாகத் தீவு

பச்சைக் கொடியும், ராஜசுந்தரியும் மனம் விட்டுப் பேசிக்கொண்டிருந்த அதே நேரத்தில் கப்பல் தலைவனுடன் கந்தவர்மன் பேசிக்கொண்டிருந்தார். ராஜசுந்தரியைப் பற்றிய முழு விவரமும் கேட்டறிந்தார். அவள் சிறந்த நாட்டியக்காரி என்பதை அறிந்திருந்த அவர் மற்றொரு விஷயத்தை அறிய விரும்பினார்! பல்லவ மன்னரிடம் ராஜசுந்தரிக்கு உள்ள செல்வாக்கைக் கேட்டறிய ஆவல் கொண்டார்.

"ஐயா, அதைப்பற்றி எனக்கு அதிகம் தெரியாது ஆனால் ராஜசுந்தரியின் நலனைப் பற்றி இளவரசருக்கு மிகுந்த அக்கறை இருக்கிறது" என்றார்.

"உங்களுக்கு எப்படித் தெரியும்..?" என்று கந்தவர்மன் கேட்டார். நடந்த விஷயங்களைக் கூறி ராஜசுந்தரியை நாகத் தீவில் கொண்டு சேர்க்குமாறு அவர் தன்னைக் கேட்டுக் கொண்டதையும் கப்பல் தலைவர் கூறினார்.

"இளவரசர் ராஜசுந்தரியின் நலனைப் பெரிதும் கருதுவதிலிருந்து ராஜசுந்தரிக்குப் பல்லவ அரசிடம் செல்வாக்கு இருக்கிறது என்பது தெரிகிறது!" என்றார் கலபதி.

இவ்வளவும் எதற்காக கந்தவர்மன் கேட்கிறார். இளவரசர் ராஜசுந்தரியை நாகநாட்டில் கொண்டு சேர்க்குமாறு ஏன் கூறினார்? என்பது கலபதிக்கு புரியவில்லை. நாளை மறுநாள் கலம் நாகத்தீவை விட்டுப் புறப்படப் போகிறது. அதைப் பற்றி கந்தவர்மனிடம் கூறுவதற்கு மறுபடியும் கலபதி சென்றார்.

"கலபதியாரே, எனக்காக ஓர் காரியம் செய்ய வேண்டும். ராஜசுந்தரியைச் சந்தித்து இன்று இரவு நடன நிகழ்ச்சிக்கு ஒப்புக் கொள்ளச் சொல்ல வேண்டும்!" என்றார் கந்தவர்மர்.

கலபதி மெல்ல நகைத்தார். "தங்கள் மகளும் ராஜசுந்தரியும் இணைபிரியாதவர்களாகி விட்டார்கள். அப்படி இருக்கும்போது என்னைப் பரிந்துரை செய்யச் சொல்வதா? வேண்டாமே என்று எண்ணுகிறேன்" என்றார்.

"அது எனக்குத் தெரியும். என் மகளும் ராஜசுந்தரியும் ஒரு கணம்கூட விட்டுப் பிரியா தோழிகளாகிவிட்டார்கள் என்பதை அறிவேன். வயது வித்தியாசம் நட்புக்குக் குறுக்கே நிற்கவில்லை. மேலும், என் மகளுக்கு நாட்டியம் கற்றுக் கொடுத்தவர் என்ற முறையில் ராஜசுந்தரி குருவின் இடத்தில் வகிக்கிறாள். அவள் கேட்பதைவிட அவள் உயிரைக் காப்பாற்றிய நீங்கள் கேட்பதே முறை. நாட்டிய நிகழ்ச்சிக்கு பிறகு வேறு ஒரு வேண்டுகோளையும் நீங்கள் நிறைவேற்ற வேண்டியிருக்கும்..." என்றார் கந்தவர்மன்.

நாகத் தீவின் முடிசூடா மன்னரான கந்தவர்மன் வேண்டுகோளைத் தட்ட முடியாமல் கலபதி ராஜசுந்தரியை அணுகி நடன நிகழ்ச்சியைப் பற்றிக் கேட்டார். மறுபேச்சுக்கு இடமில்லாமல் அவள் சம்மதித்தாள். கலபதிக்கு வியப்பாக இருந்தது.

"உடனே சம்மதம் தெரிவிப்பாய் என்று நான் நினைக்கவில்லை..." என்றார் கலபதி.

"ஏன்? இதில் தடங்கலுக்கு என்ன இருக்கிறது? கடந்த பல நாட்களாக எனது பாதங்கள் ஆடத் துடிக்கின்றன. விழிகள் பாவங்களைப் புலப்படுத்தச் சித்தமாயிருக்கின்றன. பச்சைக் கொடி தினமும் என்னை வற்புறுத்துகிறாள், தடாகக் கரையில் ஆடுமாறு. கற்றுக்கொண்ட நடனக் கலையை மறந்துவிட்டாளாம். நான் நாகத் தீவிலேயே இருக்க வேண்டுமாம்..." என்று சொல்லி நிறுத்திய ராஜசுந்தரி



பெருமூச்சுவிட்டு, "காஞ்சிக்கு அவள் சென்றால் நானும் வந்துவிட வேண்டுமாம். என்னை அவளுடைய தோழியாகக் கருதிவிட்டாள் போலிருக்கிறது..." என்றாள்.

"இந்தத் தீவின் தலைவரின் மகளான அவள் உன்னைத் தோழியாக எண்ணுவது உனக்குப் பெருமைதானே..." என்றார் கலபதி.

"பெருமை, பெருமை... உலகம் உலகம் என்கிறீர்களே. இந்த உலகத்தில் உள்ள பெருமை, புகழ் அனைத்தையும் நான் பெற்றுவிட்டேன். கண் காணாத நாட்டில் எனக்குப் புகழ் வேண்டுமா?" என்று சோர்வுடன் கூறினாள் ராஜசுந்தரி.

கலபதி அவள் முகத்தைக் கூர்ந்து நோக்கினார்.

"சுந்தரி, உன் குரலில் ஏன் சோகம் புலப்படுகிறது?"

"சோகம், வருத்தம் எல்லாவற்றையும் கடந்துவிட்டேன். நான், எனக்கு என்று இந்த உலகத்தில் ஒன்றுமே கிடையாது. என்னை அன்புடன் நேசிப்பவர், பாராட்டுபவர் யாரும் இல்லை. பெற்ற தாயை இழந்தேன். தந்தையை அறிய மாட்டேன். நான் மிகவும் நம்பிய செவிலியும் துரோகம் செய்துவிட்டாள். இன்னும் ஒரேயொரு எண்ணம் மட்டும் உள்ளத்திலுள்ளது".

"அதைத்தான் தெளிவாகக் கூறிவிடு. என்னால் முடிந்தவரை ஏற்பாடு செய்கிறேன்" என்று உண்மையிலேயே ஆர்வத்துடன் கூறினார் கலபதி.

சுந்தரி கலபதியை உற்று நோக்கினாள். "உண்மையாக செய்வீர்களா?"

"நிச்சயம் செய்வேன். ஆழ்கடலிலிருந்துக் காப்பாற்றிய நான் உனது வேண்டுகோளை நிறைவேற்ற முடியாதா? சொல்லு சுந்தரி".

"என்னை மீண்டும் கடல் மல்லைக்குக் கொண்டு சேர்த்து விடுங்கள்'.

சுந்தரி கூறியதைக் கேட்டு கலபதி திடுக்கிட்டார். "என்ன சொல்கிறாய் சுந்தரி?"

"தெளிவாகச் சொல்கிறேன். கடல் மல்லைத் துறைமுகத்துக்கு என்னைக் கொண்டு சேர்த்துவிடுங்கள்."

"நிஜமாகவா? உனக்கு நாகநாடு பிடிக்கவில்லையா? தனாதிபதி சுந்தவர்மனைப் பிடிக்கவில்லையா? உன் மீது உயிரையே வைத்துள்ள பச்சைக் கொடியைப் பிடிக்கவில்லையா?"

"பிடிக்கிறது. எல்லோரையும் பிடிக்கிறது. ஆனால், அதற்கும் மேலாக கடல் மல்லையைப் பிடிக்கிறது..." சுந்தரி கலபதியை உற்று நோக்கினாள்.

"கடல் மல்லையைப் பிடிக்கிறதா! அந்தத் துறைமுகம் வரவரக் கேட்பாரற்றுப் போய்க் கொண்டிருக்கிறதே! பெருங்கலங்கள் துறைக்கு வர முடியவில்லை. வெறும் மலைகளும் பாறைகளும் நிறைந்த அந்த கடல்மல்லையையா உனக்குப் பிடிக்கிறது?"

"ஆமாம். அந்தக் கடல் மல்லைப் பாறைகள் எனக்கு ஏதோ நெடுநாள் பழகியவை போல் கனவில் வந்து பேசுகின்றன. உடனே நான் கடல் மல்லைக்குச் செல்ல வேண்டும்."

"சென்று?"

"நான் கடல் மல்லையைக் காதலிக்கிறேன். கடல் மல்லைக் காதலியான நான் நாகநாட்டிலிருந்து என்ன செய்யப் போகிறேன்?" சுந்தரியின் இந்தப் பேச்சுக்கு கலபதி மௌனம் சாதித்தார்.



"என்ன கலபதி, பேசாமலிருக்கிறீர்கள்? எனது வேண்டுகோளை நிறைவேற்றுவதாக சற்று முன்புவரை சொன்னீர்கள்!" என்று அழுத்தந் திருத்தமாகப் பேசினாள் சுந்தரி.

தடுமாற்றம் நிறைந்த குரலில், "நிச்சயம் என் வாக்கை நிறைவேற்றுவேன். நாளை மறுநாள் நாகத் தீவை விட்டு எனது கலம் புறப்படுகிறது. மீண்டும் இந்தத் தீவுக்கு வர சில மாதங்கள் ஆகலாம். அப்போது அழைத்துச் செல்கிறேன்" என்றார் கலபதி.

"இல்லை, இல்லை. நாளையே கலம் புறப்படும்போது அழைத்துச் சென்றுவிடுங்கள். நான் உங்கள் கலத்தில் பயணம் செய்கிறேன். அருமையான தீவுகளைக் காண்பேன். விதவிதமான நாடுகளைப் பார்ப்பேன். அங்குள்ள மக்களின் இசையையும், நாட்டியத்தையும் கண்டு ரசிப்பேன்" என்று கூறிக்கொண்டே போகும்போது கலபதி குறுக்கிட்டு, "சுந்தரி, என்னுடன் கப்பலில் வரமுடியாது. பெண்களுக்கு எங்கள் கலத்தில் இடமில்லை. அது கிடக்கட்டும். இன்றைய நடன நிகழ்ச்சியைப் பற்றி உனது முடிவு என்ன?" என்று கேட்டார்.

"நான் சம்மதம் என்று சொல்லிவிட்டேனே. நீங்களும் உங்கள் வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும்" என்றாள் சுந்தரி.

"சுந்தவர்மனிடம் உனது சம்மதத்தைத் தெரிவித்துவிட்டு வருகிறேன்..." என்று புறப்பட்டார் கலபதி.

"உங்கள் வாக்குறுதி நினைவிருக்கட்டும்" என்ற சுந்தரியின் குரல் கலபதியின் செவிகளில் ஒலித்துக் கொண்டே இருந்தது.

சுந்தவர்மனது பெரும் மாளிகையின் கூடத்தில் தீவின் முக்கியப் பிரமுகர்கள் கூடியிருந்தனர்.

சுந்தரி நடன அணிகலன்களுடன் அந்தக் கூடத்திற்கு வந்தாள். அழகுக்கு அழகு செய்வது போன்ற அவளுடைய தோற்றத்தைக் கண்டு அனைவரும் மின்னலைக் கண்டவர்கள்போல் திகைத்தனர்.

மலை அருவி விழும் இடத்தில் நடந்து வரும் மயிலைப் போன்ற அவள் நடனத் தோற்றத்தைக் கண்டனர். மான்களின் துள்ளல்களையும், தடாக அன்னத்தின் நெளிவையும் அவர்கள் சுந்தரியின் நடன விருந்தில் கண்டனர்.

ராஜசுந்தரி தன் திறமையெல்லாம் புலப்படுத்தி அங்கே ஆடினாள். தன்னை மறந்து ஆடினாள். கலைத் தாய்க்கு அஞ்சலி செய்வதுபோல் ஆடினாள். தன் பாதம் நொந்துபோகும்வரை ஆடினாள். இடை துவண்டு போகும்வரை ஆடினாள். கால்கள் செயல் இழக்கும்வரை நாட்டிய முத்திரைகளைப் புலப்படுத்தி ஆடினாள்.

நாட்டியம் முடிந்து அனைவரும் கலைந்து செல்லும்போது சுந்தவர்மனை ஒரு முகமாகப் பாராட்டினார். "நீ பாக்கியசாலி, சுந்தவர்மா! ஒரு தேவதை உனது மாளிகைக்கு வந்துவிட்டாள்" என்று ஒருவர் தவறாமல் பராட்டிக் கூறினர்.

ராஜசுந்தரியைத் தேடிப் பச்சைக்கொடி வந்துவிட்டாள். தன் தந்தையின் புகழ்ச் சொற்களை எடுத்துக் காணிக்கைச் செலுத்த வந்ததாகக் கூறிய அவள் விலைமதிப்பற்ற ஆபரணம் ஒன்றை சுந்தரியின் கழுத்தில் அணிவித்தாள்.

"இது என்ன பச்சைக்கொடி?" என்று வியப்புடன் கேட்டாள் சுந்தரி.

"மாணவியின் காணிக்கை" என்று சொல்லிச் சிரித்த பச்சைக்கொடி, "என்னைவிட்டு நீங்கள் என்றும் பிரியாமலிருக்க பாசப்பிணைப்பு மாலை - ஒரு பந்த ஹாரம்" என்றாள்.



"ஓ! ஒப்பந்த ஹாரமா?" என்று கூறிச் சிரித்தாள் சுந்தரி.

பொழுது புலர்ந்தது. நாக நாட்டை விட்டுக் கலம் புறப்பட்டது. கரையைவிட்டு வெகு தொலைவு சென்ற பிறகு எல்லாம் சரிவர இருக்கின்றனவா என்று சரி பார்த்த பிறகு தனது அறைக்குள் நுழைந்தார் கலபதி.

அங்கே சுந்தரி மஞ்சத்தில் உட்கார்ந்திருப்பதைக் கண்டு திடுக்கிட்டார்.

சுந்தரி புன்முறுவலுடன் கலபதியை வரவேற்றாள். "என்ன, கலபதி அவர்களே! என்னை இந்த இடத்தில் காண்பது தங்களுக்கு வியப்பாயிருக்கிறதா?" கொஞ்சு மொழியில் கேட்டாள் சுந்தரி.

"ஆச்சரியமில்லை, ஆத்திரமாக இருக்கிறது. உன்னை நான் இங்கே எதிர்பார்க்கவில்லை. கலத்தின் கட்டுப்பாட்டை மீறி நீ செய்த செய்கையை என்னால் ஒப்புக் கொள்ள முடியவில்லை" என்று கூறினார் கலபதி.

"ஏன்? திரும்பி வரும்போது அழைத்துச் செல்வதாகக் கூறியிருந்தீர்கள். இப்போதே வந்துவிட்டேன். இதில் என்ன ஆத்திரம்?" சுந்தரி குழைந்தாள்.

"இல்லை... இல்லை... இப்போது அழைத்துச் செல்ல முடியாது. உடனே கலத்தை நாக நாட்டுக்கே திருப்புவேன். சுந்தவர்மனின் அனுமதி இல்லாமல் உன்னை அழைத்துச் செல்ல முடியாது. உம்... இப்போதே கலத்தைக் கரையை நோக்கித் திரும்புமாறு செய்கிறேன்" என்று கூவிக்கொண்டே மேல் தளத்திற்குச் செல்ல முயன்ற கலபதியை நோக்கி வந்த சுந்தரி, "கலபதி... கலபதி, நான் சொல்வதைக் கேளுங்கள். மீண்டும் நாக நாட்டிற்கு என்னை அழைத்துச் செல்லாதீர்கள். அங்கே எனக்கு ஆபத்து காத்திருக்கிறது" என்று விம்மினாள்.

அத்தியாயம் - 20

# மீண்டும் அவளைச் சந்தித்தேன்...

கடல் மல்லைத் துறைமுகம் கலகலப்புக் குறைந்து காணப்பட்டது. கடந்த இரண்டு மூன்று நாட்களாக அயல் நாட்டுக் கலங்கள் எதும் வருவதில்லை. ஏனென்றால் கலங்களில் பணியாற்றுபவர் கடல் மல்லையில் தங்கும்போது உணவருந்த வழியில்லாமல் போய்விட்டது. அரசினரின் மாளிகைகளில் விருந்தோம்ப ஆட்களில்லை. பணியாட்கள் இறங்குமிடங்களில் உணவாக்கப் பண்டங்கள் எதும் இல்லை.

பண்டங்களை இறக்கிய பிறகு, மாற்றுப் பொருள்களை ஏற்றுமதிக்குத் தர எந்த வணிகருமில்லை.

பட்டினமே வெறிச் சோடிக் கிடக்கத் தொடங்கியது. உண்ண உணவின்றி, மக்கள் நடந்து காஞ்சிக்குச் சென்றனர். காஞ்சியிலும் உணவில்லாமையால் தெற்கே திருமுனைப்பாடி நாடு, இடைக்கழி நாடு, சோழ நாடு என்று உயிர் வாழச் செல்லத் தொடங்கினர். சிலர் வெகு தொலைவிலுள்ள கதம்ப நாட்டிற்குச் சென்றனர்.

மாமல்லபுரத்துப் பாறைகள் தனியே இருந்தன. அவற்றைச் சுற்றிப் படர்ந்திருந்த செடி கொடிகள், வேர்விட்ட உயர்ந்த மரங்கள், குட்டையான செடிப் புதர்கள் யாவும் கடுமையான வெய்யிலில் கருகத் தொடங்கின. இரை தேடிக் கொடிய விலங்குகள் ஊர்களுக்குள் உலவத் தொடங்கின.

காபாலிகர்களிடமிருந்து தப்பிய ஓவியன் குமாரதேவன் மாமல்லபுரம் வந்தடைந்தான். அவனுக்கு அறிமுகமான முகங்கள் ஒருவரும் அங்கில்லை. கிராமப் பகுதிகளிலும் இல்லை. கடல் மல்லைக்கருகே கடலோடு கலக்கும் பாலாற்றங்கரை வரையில் சென்று பார்த்துத் திரும்பினான் குமாரதேவன். பாலாறு வற்றிக் கிடந்தது. சிறுசிறு நாவாய்கள்



காஞ்சிவரை செல்லும் வசதி படைத்திருந்த பாலாற்றில் நீரோட்டமில்லாமையால் ஆறு செல்லும் பகுதிகளிலுள்ள ஊர்களிலுள்ளவர்கள் வறுமையால் வாடினர். வறுமையின் பிடி தாங்காமல் அவர்களும் தங்கள் கிராமங்களை விட்டு வெளியேறினர். ஆக, தொண்டை மண்டலத்துச் செழுமையான பகுதிகள் எழில் குன்றின. அழிவின் பாதைக்கு அணி வகுத்தன.

குமாரதேவன், சந்திரமாலா இருந்த கிராமத்தை நோக்கி நடந்தான். முதல் முதலில் அவளைச் சந்திக்க முற்பட்டதையும் பிறகு முடியாமல் போய்விட்டதையும் நினைத்துக் கொண்டான்.

அந்தச் சிறு கிராமம் களையிழந்துக் காணப்பட்டது. குமாரதேவன் ஒவ்வொரு வீடாகத் தேடிக் கொண்டு சென்றான். கிராமத்து வீதி பாழடைந்து கிடந்தது. வீடுகள் பூட்டப்பட்டுக் கிடந்தன.

ஒரு வீடு மட்டும் திறந்திருந்தது. குமாரதேவன் அந்த வீட்டினுள் நுழைந்தான். மிகவும் தாகமாக இருந்ததால் தண்ணீராவது வாங்கிக் குடிக்க எண்ணினான்.

"அம்மா..." என்று குரல் கொடுத்தான். முத்தம்மாள் கூடத்தில் முடங்கிக் கிடந்தாள். இரவும் பகலும் அவளுக்கு இப்போது ஒன்றுதான். மனமிருந்தால் எழுந்துச் சோறாக்குவாள். இன்னும் ஓராண்டுக் காலத்திற்குச் சோறு சமைக்க வேண்டிய நெல் அந்த வீட்டிலிருந்தது. அந்த மூதாட்டி எவ்வளவு உண்டுவிடப் போகிறாள். சந்திரமாலா வந்தால் பசியால் வாடிவிடக் கூடாது என்பதற்காக ஒவ்வொரு நாளும் உண்ணாமல் காத்திருப்பாள்.

கடற்கரைக்கு மிக அருகே இருந்த அந்தக் கிராமத்தில் கடல் ஓசையைத் தவிர வேறுவித ஒலி எழுவதில்லை. பசியால் வருந்தி ஊளையிடும் நரியின் குரல் இரவு வேளையில்

கேட்கும். சில நாட்களில் அந்த வீட்டிற்குள்ளேயே நரி நுழைந்துவிடும்.

"அம்மா..." என்ற குரல் முத்தம்மாளின் செவிகளில் ஒலித்தது.

படுத்திருந்த முத்தம்மாள் எழுந்தாள். மீண்டும் அதே குரல். இதுபோன்ற குரலைக்கேட்டு எவ்வளவோ நாட்களாகிவிட்டன. மனித இனம் பல்லவ நாட்டில் இருக்கிறதா? ஆட்சி நடக்கிறதா? அரசர் என்று ஒருவர் இருக்கிறாரா? அப்படி நல்லாட்சி நடக்கும் நாடாயிருந்தால் வெளியே சென்ற தந்தச் சிலை சந்திரமாலா திரும்பி வராமல் போய்விடுவாளா? ரத்தப்பசி பிடித்த காபாலிகர்கள் துணிவுடன் நடமாடுவார்கள்?

வேதனையால் துடித்தாள் முத்தம்மாள். இன்னும் இரண்டு மூன்று நாட்கள்வரை அந்தக் கிராமத்தில் சந்திரமாலாவுக்காகக் காத்திருக்க முடிவு செய்திருந்தாள். அதன் பிறகு எப்படியாவது காஞ்சிக்குச் சென்றுவிட வேண்டும் என்றும் அங்கே சக்கரவர்த்திகளைச் சந்தித்து முறையிட வேண்டும் என்றும் எண்ணியிருந்தாள்.

"அம்மா..." என்று மீண்டும் குமாரதேவன் அழைத்தான். யாராவது அந்த வீட்டில் இருப்பார்கள் என்ற நம்பிக்கை அவனுக்கு.

முத்தம்மாள் கூர்ந்து கேட்டாள். பெண்குரல் இல்லை சந்திரமாலா ஏன் வாயிற்படியருகே நின்று கூப்பிடுகிறாள். பிறகு யாராக இருக்க முடியும்? கேட்ட குரலா? இல்லை? ஆனால் பிரியமான குரலாகத் தோன்றியது.

முத்தம்மாள் மெல்ல எழுந்து வெளியே வந்தாள்? பொழுது இன்னும் சாயவில்லை. மேல்திசைக் கதிரவனின் சாயும் கிரணங்கள் வீட்டுத் திண்ணை மீது படர்ந்தன. அதற்குப் பஞ்சமில்லை.



"யாரது...?" என்று குரல் கொடுத்துக் கொண்டே, வெளியே வந்தாள் முத்தம்மாள். வந்திருப்பவர் முகம் அவளுக்குத் தெரியவில்லை.

விழிகளை இடுக்கிக் கொண்டு கூர்ந்து நோக்கினாள்.

"நான்தான் அம்மா, குமாரதேவன்" என்று கூறினான் குமாரதேவன்.

குமாரதேவன் என்றால் முத்தம்மாளுக்குத் தெரியுமா? ஆனால் எப்படித் தெரிவிப்பது? யாரென்று கூறுவது? அதனால் குமாரதேவன் என்று பொதுவாகக் கூறினான்.

முத்தம்மாள் ஒரு கணம் பேசாமல் நின்றாள். யாராக இருக்குமென்று யோசிக்கிறாளா?

"அம்மா! என்னைத் தாங்கள் அறிந்திருக்க நியாயமில்லை. நான் ஓர் ஓவியன். இங்கே... சந்திரமாலா என்ற நங்கை தங்கி இருந்தாளா?" என்று கேட்டான் குமாரதேவன். சந்திரமாலா என்ற வார்த்தையைக் கேட்டவுடனேயே முத்தம்மாள் பரபரப்படைந்தாள். சந்திரமாலா... சந்திரமாலா! ஆ- சந்திரமாலாவை அறிந்தவர்களும் இருக்கிறார்களா?

"யாரது...? சந்திரமாலாவைத் தேடிக் கொண்டு வந்த நீ யாரப்பா?" என்று முத்தம்மாள் கேட்டாள். அவனை உட்காரச் சொல்லத் தோன்றவில்லை. கேள்வி மேல் கேள்வி கேட்க முனைந்தாள்.

"கேட்பாரற்ற இந்தக் கிராமத்தில் சந்திரமாலாவைத் தேடி வந்த நீ உண்மையிலேயே அவளை அறிந்தவனா? அல்லது காபாலிகர்கள், பிட்சுக்கள் உன்னை வேவு பார்க்க அனுப்பினார்களா?" என்று கேட்டாள்.

குமாரதேவன் கால் கனத்தது. நிற்க முடியாமல் துவண்டது. அப்படியே அங்கேயே சுருண்டு விழுந்து விடத் தோன்றியது.

"அம்மா... நான் என்னைப்பற்றி வேண்டிய மட்டும் சொல்கிறேன். கருணை கூர்ந்து எனக்கு ஒரு வாய் தண்ணீர் தருவீர்களா?" என்று கேட்டான் குமாரதேவன்.

முத்தம்மாள் அப்பொழுதுதான் தன் தவறை உணர்ந்தாள். வந்தவனை வாவென்று கூப்பிடவில்லை. குடிக்கத் தண்ணீர் அவன் கேட்டா கொடுப்பது? இதுதானா விருந்தோம்பல்? ஒரு காலத்தில் சிற்பிக்கும் ஓவியனுக்கும் பசி போக்கிய கிராமமாயிற்றே.

முத்தம்மாள் பரபரப்புடன், "தம்பி, உன்னை உட்கார வைத்துப் பேசாமல் நிற்க வைத்துவிட்டேன். குடிக்கத் தண்ணீர் என்ன? வேண்டிய மட்டும் சோறு போடுகிறேன். ஊர் உலகத்தில் பஞ்சம்; ஆனால் இந்த வீட்டில் இல்லை. சுவையான தண்ணீர் ஊற்று இங்கு இருக்கிறது. சந்திரமாலாவைத் தேடி வந்தாயே! சமீபத்தில் அவளைப் பார்த்தாயா?'' என்று கேள்விமேல் கேள்வி கேட்டாள் முத்தம்மாள். பிறகு வீட்டிற்குள்ளேயே சென்று கலயம் நிறையத் தண்ணீர் கொண்டு வந்தாள்.

குமாரதேவன் களைப்பு நீங்கிய பிறகு சொன்னான்: "சந்திரமாலாவை நான் சில நாட்களுக்கு முன் சந்தித்தேன். பிறகு காணவில்லை. காபாலிகை ஒருத்தி அவளைப் பழி வாங்கக் காத்திருக்கிறாள். ஒரு வேளை சந்திரமாலா மீண்டும் கிராமத்துக்கே வந்துவிட்டாளோ என்று பார்க்க வந்தேன். சாளுக்கிய நாட்டிற்கு அவளைக் கடத்திச் சென்றுவிட முடிவு செய்தனர்" என்று நடந்த கதையைக் கூறினான் குமாரதேவன். முத்தம்மாள் சொன்னாள்: "சந்திரமாலா எங்கே சென்றாலும் இங்கே திரும்பி வந்துவிடுவாள். அவள் சாதாரணப் பெண் அல்லள். நாட்டியமாடும் பெண் என்று நினைக்காதே. அவளுடைய இருப்பிடம் மாளிகை. இன்றில்லாவிட்டாலும் மற்றொரு நாள் நடக்கத்தான் பேகிறது. அவள் பெற்றோரை இழந்து வாடும் வேதனையுடன் என்னை அடைந்தாள். ஒவ்வொரு நாளும் கடல் மல்லைக் கடற்கரையில் அமர்ந்துத் தனது தாய் வருவாளா என்று பார்ப்பாள். அப்போது



அவளது சித்தம் கலங்கியிருக்கும்... அமாவாசையின் போது அவளுடைய ஏக்கம் அதிகமாகிவிடும்".

முத்தம்மாள் நேரம்போவது தெரியாமல் பேசிக்கொண்டே சென்றாள். இருள் சூழ்ந்துவிட்டது. இருளின் பயங்கரத்தைக் கடல் ஓசை அதிகப்படுத்தியது.

முத்தம்மாள் சுவையான அமுது படைத்தாள். "எனக்கு நம்பிக்கை இருக்கிறது குமாரதேவா. இந்த அமாவாசை யின்போது சந்திரமாலாவைக் கடற்கரையில் காணலாம்..." என்று உறுதியாகச் சொன்னாள்.

குமாரதேவன் வானத்தைப் பார்த்தான். நாளை அமாவாசை. அவன் பரபரப்படைந்தான். இன்றே அமாவாசையாக இருக்கக்கூடாதா?

முத்தம்மாளிடம் சொல்லிவிட்டுக் கடற்கரையை நோக்கி அந்த இருளில் சென்றான். கடலும் வானும் ஒரே நிறத்திலிருந்தது. திரைகளின் வெண் நிறம் மட்டும் உயர்ந்து உயர்ந்துத் தாழ்ந்தது.

இரவு குமாரதேவனுக்கு உறக்கம் வரவில்லை. பொழுது விடியும் முன் எழுந்துவிட்டான். கடற்கரையை நோக்கி மீண்டும் சென்றான். கடற்கரை அருகேயுள்ள பாறை மீது ஏறி நின்று சூரியோதயத்தைக் காணக் காத்திருந்தான்.

தொலைவில் ஒரு பெண் விரைந்து ஓடி வருவது தெரிந்தது. குமாரதேவன் பாறையினின்று குதித்தான். நிச்சயம் அது சந்திரமாலாதான்...

## அத்தியாயம் - 21

# என்றும் பிரியமாட்டேன்

குமாரதேவன் எதிர் பார்த்ததுபோல் ஓடி வந்து கொண்டிருந்தவள் சந்திரமாலாதான்.

சந்திரமாலா அந்த நேரத்தில், அந்தப்போதில், அந்த வேளையில் குமாரதேவனை எதிர்பார்க்கவில்லை. அவளுக்குக் களைப்பாக இருந்தது. மூச்சுவிட முடியாமல் தவித்தாள். ஓடி வந்ததால் ஏற்பட்ட சோர்வு, அதைத் தவிர பயத்தால் ஏற்பட்ட படபடப்பு - எல்லாமாகச் சேர்ந்து அவளைத் துவளச் செய்தது.

குமாரதேவனை அவள் இறுகத் தழுவிக் கொண்டாள். அவள் விழிகள் சோர்வால் சுழன்றன. மார்பு விம்மி விம்மி எழுவது குமாரதேவனுடைய இதயத்துக்கு நன்றாகப் புலப்பட்டது.

"சந்திரமாலா... சந்திரமாலா" என்று அழைத்தான். மூச்சு வந்துகொண்டிருந்தது. அஜந்தாக் காடுகளில் பார்த்த சந்திரமாலாவா இவள்?

களைப்பால் முகம் கறுத்துவிட்டதா? சோர்வால் களையிழந்துவிட்டதா?

குளிர்ந்த நீர் பட்டதால் சந்திரமாலாவின் மயக்கம் மெல்லத் தெளிந்தது. கண் விழித்த அவளுக்குப் பனிப்படலத்தில் தெரிவது போன்ற தெளிவற்ற குமாரதேவனின் உருவம் தெரிந்தது. அவள் ஏதோ சொல்ல முயன்றாள். உதடுகள் அசைந்தன.

"என்ன நேர்ந்தது சந்திரமாலா?" என்று பரபரப்புடன் கேட்டான் குமாரதேவன். மிரள மிரள விழித்தாள்



சந்திரமாலா பயத்தால் பேசும் சக்தியை இழந்திருக்கிறாள் என்பதைப் புரிந்து கொண்ட குமாரதேவன் அவளை மெல்லத் தூக்கிக்கொண்டு கிராமத்திலுள்ள அவளுடைய வீட்டை நோக்கி நடந்தான்.

முத்தம்மாளுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை. பார்வையற்றவள் பார்வையைப் பெற்றதுபோல் துள்ளினாள். வயது திரும்பிவிட்டது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது.

"கண்ணே எங்கே சென்றிருந்தாய்? இந்த முத்தம்மாளைப் பிரிய எப்படி மனம் வந்தது? எந்தத் தீயவர்கள் உன்னைக் கொண்டு சென்றனர்?" என்று கேள்வி மேல் கேள்வி கேட்டாள். அவளைத் தன் மடிமீது கிடத்திக் கொண்டாள்.

குமாரதேவன் அருகே நின்று கொண்டு சந்திரமாலாவை வைத்த விழி வாங்காது பார்த்துக் கொண்டிருந்தான். உடுத்தி உண்டு, நீராடிப் பல நாட்கள் ஆகியிருக்கும்போல் தோன்றியது. மண்ணிலே புதையுண்ட மாணிக்கம்போல் காணப்பட்டாள். பூமிக்கடியில் புதையுண்ட பூஜை விக்கிரகம்போல் விளங்கினாள். துவண்ட புஷ்பஹாரம்போல் அவள் முத்தம்மாளின் மடிமீது கிடந்தாள். அவள் கிடந்தது வீட்டுக் கூரைமீது படர்ந்திருக்கும் முல்லைக் கொடிபோல் தோன்றியது. கணுக்காலும், அதற்கு மேல் அல்லித் தண்டைப் போன்றிருந்த தொடைகளும் காடு மலை புதர் என்று சுற்றியதால் ஏற்பட்ட சிராய்ப்புடன் காணப்பட்டன. முகத்தாமரை வாடியிருந்தது. தோள்கள் இளைத்துக் காணப்பட்டன.

"தம்பி, இவளைச் சற்றுத் தாங்கிக்கொள்; உள்ளே சென்று சுடச் சுட ஏதாவது செய்து கொண்டு வருகிறேன்" என்றாள் முத்தம்மாள். அவன் மீது அவளுக்கு அவ்வளவு நம்பிக்கை.

சந்திரமாலாவைக் குமாரதேவன் மெல்லத் தாங்கிக் கொண்டான். சற்று முன்பு அவளைச் சுமந்து வந்தபோது புலப்படாத ஸ்பரிச உணர்ச்சி இப்போது அவனுக்கு ஏற்பட்டது.

பஞ்சுக் குவியலைத் தூக்கியதுபோலும், மல்லிகைச் செண்டை அணைத்ததுபோலும் பட்டுத் துகில்களை எல்லாம் ஒன்று சேர்த்து சுமந்ததுபோலும் அவனுக்குத் தோன்றியது. அவளது தோள்களை வருடினான். கரங்களைத் தடவினான், கலைந்திருந்த கேசத்தைச் சரி செய்தான்.

சந்திரமாலா கண் விழித்தாள். தான் ஓர் ஆடவனின் மடியில் படுத்திருப்பதை உணர்ந்தாள். பரபரப்புடன் எழுந்து நகர்ந்து உட்கார்ந்த அவள் குமாரதேவனைப் பார்த்து, "நான் எங்கே இருக்கிறேன்?" என்று கேட்டாள்.

"இருக்க வேண்டிய இடத்தில்"

"எப்படி வந்தேன்?"

"நீ விரும்பியபடி"

"தொடர்ந்து வந்த காபாலிகை எங்கே?"

"எனக்குத் தெரியாது. நீ மட்டுந்தான் ஓடி வந்தாய். காபாலிகை உன்னைத் தொடர்ந்து வந்தாளா?"

குமாரதேவன் இதைக் கேட்டவுடன் சந்திரமாலாவின் முகம் பயத்தால் கறுத்தது. ஏதோ அதிர்ச்சி அவளுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பது தெளிவாகத் தெரிந்தது. இந்தச் சமயத்தில் அதைப்பற்றிக் கேட்கக் கூடாது என்று பேச்சை வேறு திசையில் திருப்ப எண்ணிய குமாரதேவன், "சந்திரமாலா! மேகத்தில் மறைந்துள்ள மதியைப் போன்றிருக்கிறாய்" என்று வர்ணிக்கத் தொடங்கினான்.



ஆனால், சந்திரமாலாவின் பார்வை வாயிற் புறத்தைப் பார்த்தபடியே இருந்தது.

"வாயிற் கதவைத் தாழிடுங்கள். அவள் வந்துவிடப் போகிறாள். அவள் வந்து விடுவாள்" என்று கூறினாள்.

"யாரும் வரமாட்டார் சந்திரமாலா. நானிருக்கிறேன் கவலைப்படாதே. சற்று இளைப்பாறினால் எல்லாம் சரியாகிவிடும். இனி நீ யாருக்கும் பயப்பட வேண்டாம்" என்று சமாதானப்படுத்த முயன்றான் குமாரதேவன்.

"இல்லை! இல்லை... அவள் என்னை ஒருகாத தொலைவிலிருந்துத் துரத்தி வருகிறாள். என்னைப் பிடிக்காமல் விடமாட்டாள். என்னைக் கொல்லாமல் விடமாட்டாள்" என்று நடுங்கியவாறு கூறும்போது அவளுக்கு ஏற்பட்ட அதிர்ச்சி சாதாரணமானதன்று என்பது தெரிந்தது.

முத்தம்மாள் ஒரு கலயத்தில் சூடான மோருடன் வந்தாள். ஒரே ஒரு பசு மட்டும் உயிரைக் கையில் பிடித்து வாழ்கிறது. அது தரும் பால் முத்தம்மாளை வாழ வைக்கிறது.

"குழந்தாய்! நீ பயந்திருக்கிறாய். சூடான மோரைச் சாப்பிடு. பிறகு படுத்துத் தூங்கு. அதற்குள் சமைத்து விடுகிறேன். இன்று விருந்தே செய்துவிட எனக்கு எண்ணம். ஆனால் அரிசியைத் தவிர வேறு ஒன்றுமே இல்லை..." என்று கவலையும் அதே போதில் உற்சாகமும் நிறைந்துப் பேசினாள் முத்தம்மாள். சந்திரமாலா திரும்பி வந்துவிட்ட மகிழ்ச்சி அவளுக்கு.

சந்திரமாலா மோரைக் குடித்தாள். பசியாலும் ஓடி வந்த களைப்பாலும் அதிர்ச்சியாலும் ஏற்பட்ட சோர்வைப் போக்க மெல்லக் கண்ணயர்ந்தாள்.

முத்தம்மாள் சோறாக்கப் போய்விட்டாள். குமாரதேவன் ஒன்றும் புரியாமல் திகைத்தவாறு குறுக்கும்

நெடுக்கும் உலவினான். பிறகு முத்தம்மாளிடம் சென்று, "எல்லாம் புதிராக இருக்கிறதே; இதுவரை சந்திரமாலா எங்கே இருந்தாள்; என்ன நேர்ந்தது என்று தெரியவில்லையே..." என்று கேட்டான்.

"தம்பி! கவலைப்படாதே. களைப்பு நீங்கியதும் சந்திரமாலவே எல்லாவற்றையும் சொல்லுவாள். மிகவும் துணிவு நிறைந்த பெண் அவள்" என்றாள்.

குமாரதேவனுக்குச் சமாதானப்படவில்லை. மீண்டும் வாயிற்கதவுவரைச் சென்று அதைத் தாளிட்டு வந்து சந்திரமாலாவை நோக்கினான். அவள் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தாள்.

முத்தம்மாளிடம் சென்று, "பாட்டி, சந்திரமாலா யார்? இங்கே எப்படி வந்தாள்?" என்று கேட்டான்.

முத்தம்மாள் குமாரதேவனை உற்றுப் பார்த்தாள். "தம்பி! உனக்குச் சந்திரமாலாவைத் தெரியாதா? அவளைப் பற்றித் தெரிந்து கொள்ளாமலா அவளைத் தேடி வந்தாய்?" என்று கேட்டாள்.

குமாரதேவன் பெருமூச்சு விட்டான். "சந்திரமாலாவை அஜந்தாக் காடுகளிலேயே நான் அறிவேன். அவளுடைய தந்தை சிறந்த ஓவியர். அவளுடைய பெற்றோர்கள் இப்போது எங்கே?" என்று கேட்டான்.

"ஓ! உனக்கு அவளுடைய பெற்றோர்களைத் தெரியுமா? பாவம். அவள் நாள்தோறும் தன் தாய் வருவாள் என்று கடற்கரையிலேயே காத்திருப்பாள். இன்றுவரை அவளுடைய தாயோ, தந்தையோ வரவில்லை..." என்று கவலை தோய்ந்த குரலில் கூறினாள் முத்தம்மாள்.

"கடற்கரையில் காத்திருந்தால்... பெற்றோர்கள் வந்துவிடுவார்களா?"



"ஆமாம். கடல் கடந்த நாட்டிற்கு அவளுடைய தாய் சென்றிருப்பாள் என்று எண்ணியிருந்தாள். எப்படியும் கடல் மல்லைக்குத் திரும்பி வந்து விடுவதாக அவள் தாய் வாக்குறுதியளித்திருந்தாளாம். அதெல்லாம் வேறு கதை. நாம் இப்போது அவற்றை நினைவுபடுத்தக்கூடாது. அதுசரி நீ ஏன் அவளைப்பற்றி விசாரிக்கிறாய். உன்னைப் பார்த்தால் நல்ல பிள்ளைபோல் தோன்றுகிறது? அதனால்தான் இவ்வளவும் உன்னிடம் தெரிவித்தேன்!" என்று முத்தம்மாள சொன்னவுடன் குமாரதேவன் மெல்ல நகைத்து, "நீங்களே அவளைக் கேளுங்கள். அவள் விழித்து வந்தவுடன் கேளுங்கள். கடற்கரைக்குச் சென்றேனே காலையில். அப்போது இவள் ஓடிவருவது தெரிந்தது. என்னைக் கண்டவுடன் மயங்கிப்போய் என் தோளில் சாய்ந்துவிட்டாள். என் மீது நம்பிக்கை ஏற்படாவிட்டால் அப்படிச் செய்வாளா? எந்தப் பெண்ணும் ஆபத்து வேளையில்கூட பிற ஆடவரைத் தொடுவதற்குச் சம்மதிக்கமாட்டாள். இதிலிருந்தே என்னிடம் அவள் வைத்துள்ள நம்பிக்கையை உணரலாம்" என்று குமாரதேவன் பெருமிதத்தோடு கூறினான்.

முத்தம்மாள் குமாரதேவனை இமைகொட்டாமல் நோக்கினாள். "தம்பி! சந்திரமாலா நெருப்பைப் போன்றவள். அவளை அவ்வளவு எளிதில் யாரும் நெருங்கிவிட முடியாது. அவளிடம் பல்லிளித்து வாங்கிக் கட்டிக் கொண்டவர் பலர். நீ சொல்வது உண்மையானால் எனக்கு மகிழ்ச்சிதான். சந்திரமாலாவுக்கு ஓர் துணை கிடைத்துவிட்டால் எனக்குப் பெரும் நிம்மதி... நான் எவ்வளவு காலம் இந்த உலகில் வாழ்வேன் என்று நினைக்கிறாய்? சந்திரமாலாவின் தாய் திரும்பி வருவாள் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை" என்றாள்.

சந்திரமாலா கண் விழித்து எழுந்தபோது குமாரதேவன் அவள் அருகிலேயே உட்கார்ந்திருந்தான்.

சந்திரமாலா புன்முறுவல் பூத்தாள். மெல்ல எழுந்து உட்கார்ந்தாள்.

"இப்போது எப்படி இருக்கிறது சந்திரமாலா?" என்று குமாரதேவன் கேட்டான். அதற்குள் முத்தம்மாள் பெரிய சட்டியில் சோற்றில் தயிரை விட்டுக் கலந்து கொண்டு வந்தாள்.

"முகம் கழுவி வாருங்கள். இருவருக்கும் கையிலே தயிர் சோறு போடுகிறேன். உணவு உட் கொண்டே பேசுவோம்" என்றாள்.

அன்பைக் குழைத்துக் கலந்து மணக்கும் தயிர்சோறை அவள் இடும்போது குமாரதேவன் சொன்னான்:

"பாட்டி, பஞ்ச காலத்தில் இப்படிப்பட்ட சோறு தேவர்கள் தரும் அமுதத்தைவிடச் சிறந்தது."

"எல்லாம் சந்திரமாலாவுக்காகச் சேர்த்து வைத்த அரிசியிலிருந்துச் சமைத்தவைதான்" என்றாள் முத்தம்மாள்.

"பஞ்சம், பஞ்சம் என்கிறோம். ஆனால் காட்டின் நடுவே ஆயிரக்கணக்கான நெல், கம்பு, சோளம் மூட்டைகளை நான் பார்த்தேன். நான் அந்த இரகசியத்தைத் தெரிந்து கொண்டுவிட்டேன் என்பதற்காகத்தான் என்னை ஒழித்துவிடத் தீர்மானித்தார்கள். நான் அவர்களிடமிருந்துத் தப்பி வந்துவிட்டேன். என்னைக் காபாலிகைப் பெண் துரத்தி வந்தாள். நான் ஓடோடி வந்தேன். கால் சோர்வடையும்வரை ஓடி வந்தேன். பிறகு... பிறகு..." என்று கூறிய சந்திரமாலாவின் வதனத்தில் நாணமிருந்தது.

குமாரதேவனுக்குப் புரிந்துவிட்டது. சந்திரமாலா காபாலிகர்கள் குழுவிடம் சிக்கியிருக்கிறாள். தப்பி வந்த அவளைப் பழிவாங்க காபாலிகை ஓடிவந்திருக்கிறாள். அந்தக் காபாலிகை எங்கே?

"அவள் எங்கே?" என்று குமாரதேவன் கேட்டான்.



"அதைத்தான் நானும் கேட்கிறேன். அவள் எங்கே? என்னைத் தொடர்ந்து வந்த அவள் திடீரென்று எங்கே போனாள்" என்று சந்திரமாலா கவலை தெரிவித்தாள்.

"இதற்கெல்லாம் கவலைப்படாதே சந்திரமாலா. இனி அந்தக் காபாலிகை வந்தால் கம்பத்தில் கட்டி வைத்துக் காவலர்களிடம் ஒப்படைத்து விடுவோம்" என்றாள் முத்தம்மாள்.

"காவலா... ஹூம்... பல்லவ நாட்டில் அரசாட்சி நடக்கிறதா என்ற சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. நினைக்கும்போதே நடுக்கம் ஏற்படுகிறது. பல்லவ நாட்டில் சாளுக்கிய ஒற்றர்கள் ஏராளமான பேர் மாறுவேடத்தில் இருக்கிறார்கள். சாளுக்கிய படைவீரர்கள் காஞ்சியைச் சுற்றியுள்ள கிராமங்களில் மாறுவேடத்தில் இருக்கிறார்கள். அவர்களைக் கண்டுபிடிக்க முடியாத ஆட்சி ஓர் ஆட்சியா?" என்று சந்திரமாலா குறைபட்டுக் கொண்டாள்.

குமாரதேவன் வியப்புற்று, "என்ன சொல்கிறாய் சந்திரமாலா? சாளுக்கியப் படைவீரர்கள் கிராமப் பகுதிகளில் மறைந்திருக்கிறார்களா?" என்று கேட்டான்.

"ஆமாம், அவர்கள் பெரிய சதித் திட்டத்தை வகுத்திருக்கிறார்கள். அடுத்த பௌர்ணமிக்குள் காஞ்சிக்கோட்டையில் சாளுக்கிய கொடி பறக்கப் போகிறதாம்" என்றாள் சந்திரமாலா.

குமாரதேவன் துள்ளி எழுந்தான். "சந்திரமாலா, இப்போதே காஞ்சிக்குச் சென்று இளவரசரிடம் தெரிவித்து விடுகிறேன். நீயும் உடன் வருகிறாயா...?" என்று கேட்டான்.

சந்திரமாலா அவனைக் குறும்புப் பார்வைப் பார்த்து "நானே தங்களை ஒரு சமயம் வேண்டினேன். காஞ்சிக்கு அழைத்துச் செல்லுமாறு. நினைவிருக்கிறதா?" என்று கேட்டாள்.

"நன்றாக் நினைவிருக்கிறது. அதனால்தான் உன்னைத் தேடிவந்தேன். நானும் பல ஆபத்துகளில் சிக்கி மீண்டவன்தான். காஞ்சிக்கு இன்றே புறப்படுவோம்" என்று உற்சாகமாகக் கூறினான்.

"தம்பி! இன்று வேண்டாம். பின்னிலாப்போது. நாளை அமாவாசை. இன்னும் இரண்டு நாட்கள் கழித்துப் புறப்படு. நானும் வருகிறேன் என்றாள் முத்தம்மாள்.

மாலை வெயில் மறையத் தொடங்கியபோது குமாரதேவன் உறக்கத்தினின்று விழித்தெழுந்தான். கிணற்றடியில் நீராடிவிட்டுப் படுத்தவன்தான். சுகமான உறக்கம். விழித்தவுடனேயே சந்திரமாலாவைத் தேடினான்.

"இங்குதானே இருந்தாள்" என்று கூறினாள் முத்தம்மாள். பரபரப்புடன் வீட்டைச் சுற்றித் தேடிய குமாரதேவன் கடற்கரையை நோக்கி ஓடினான். "சந்திரமாலா, சந்திரமாலா என்று குரல் கொடுத்தான். கடல் அலை ஓசைக்கு நிகராக அது எதிரொலித்தது.

இங்குமங்கும் பரபரப்புடன் தேடினான். அப்போது அவன் செவிகளில் எங்கிருந்தோ சிரிப்பொலி கேட்டது. ஒலி வந்த திசையை நோக்கி ஓடினான்.

பாறை அருகே சந்திரமாலா நின்றிருந்தாள். குமாரதேவனை கண்டதும் களுக்கென்று சிரித்துவிட்டாள்.

"என்னைக் காணாமல் பயந்துவிட்டீர்களா?" என்று கொஞ்சும் குரலில் கேட்ட அவள் பாறையின் மறைவில் உட்கார்ந்தாள். குமாரதேவனையும் கரத்தைப் பிடித்து இழுத்துத் தன் அருகே உட்கார வைத்தாள்.

அவளுடைய அழகில் இப்போது புதுக் களை ஏற்பட்டிருந்தது தெரிந்தது. சந்திரமாலாவின் விழிகளில் புதிய வீரபோதை தெரிந்தது. உதடுகள் துடித்தன.



குமாரதேவனின் கரங்களைப் பிடித்து, "எனக்கு ஒரு உறுதி தரவேண்டும்" என்று கேட்டாள். குமாரதேவன் மெல்ல அவளருகே நெருங்கினான்.

"உறுதியை நான் தந்தால்தானா... உன் உள்ளத்தில் உறுதியாய் அமர்ந்துவிட்ட என்னிடம் வாய்ச் சொல்லாகக் கேட்டுப் பெற வேண்டுமா? என்ன உறுதி வேண்டும்..." என்றான். "சந்திரமாலா, உன்னைத் தேடி எவ்வளவு நாட்களாக ஏங்கினேன். எப்போதும் உன் நினைவுதான். உறக்கத்திலும் நீ என் இதயத்தில் சதங்கை ஒலிக்க ஆடுவாய்..." என்று கூறிக்கொண்டே அவளைத் தன் மார்பருகே இழுத்தணைத்துக் கொண்டான்.

சந்திரமாலாவின் கண்களில் நீர் தளும்பியது.

"பெற்றோரற்ற அனாதையான நான் சில சமயங்களில் எதற்காக வாழ வேண்டும் என்று எண்ணுவேன். ஆனால், உங்கள் நினைவு வந்துவிடும். என்றாவது உங்களைச் சந்தித்து விடுவோம் என்ற நம்பிக்கை பிறந்துவிடும். இப்போது சந்தித்துவிட்டேன். என்னைப் பிரியாமல் இருப்பதாக உறுதி தருவீர்களா?" அவள் விழிகளிலிருந்து நீர் முத்துக்கள் உதிர்ந்தன.

"என்றுமே பிரியமாட்டேன்" என்று முணுமுணுத்த குமாரதேவனின் விலக்க முடியா அணைப்பில் திணறிய சந்திரமாலா, "கலைஞர்களுக்கு உணர்ச்சி மிக அதிகம். பொறுமை தேவை" என்று சிரித்துக்கொண்டே கூறினாள்.

"ஆமாம். பொறுமை தேவைதான்" என்ற குரல் பாறை மறைவினின்று கேட்டது. குமாரதேவன் திடுக்கிட்டு எழுந்தான்.

"ஹோ, ஹோ" என்ற பயங்கரச் சிரிப்புடன் காபாலிகை அங்கே நின்று கொண்டிருந்தாள்.

## அத்தியாயம் - 22

# சக்கரவர்த்தியின் கட்டளை

காஞ்சி அரண்மனை பரபரப்பு மிகுந்துக் காணப்பட்டது. தூங்கி வழிந்து கொண்டிருந்த பணியாட்கள் முகத்தில் கவலையுடன் இங்குமங்கும் ஓடினர். மாளிகையில் உள்ளவர்களுக்கு உணவுக்குப் பஞ்சமில்லை. வேளைக்கு உணவு கிடைத்து வந்தது. ஆனால் காஞ்சிமா நகரத்தில் அங்காடிகளின் முன்பு பெரும் கூட்டம்; கிராமப் புறங்களிலிருந்துத் தானியங்கள் வருவது நின்றுவிட்டதால் இருக்கும் தானியங்களைப் பங்கிட்டு முடிந்தவரையில் அளித்து வந்தனர். அதுவும் தீர்ந்த பிறகு என்ன செய்வது என்று புரியாமல் கடைக்காரர் திகைத்தார். நீண்டநேரம் நின்றுப் பார்த்துச் சிலர் கலைந்துச் சென்றனர். சிலர் முணுமுணுத்தனர். சிலர் புரட்சிக் கொடி உயர்த்தினர். கடைக்காரர் கடையை விட்டு விட்டு ஓடி அரண்மனைக்குள் தஞ்சம் புகுந்தார்.

நகரத்தில் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டுவிட்டது என்ற செய்தி பரவியவுடன் மக்கள் நகரைவிட்டு வெளியேறத் தொடங்கினர். தெற்குக் கோட்டை வாயில் வழியே மக்கள் சாரை சாரையாகச் செல்வது மந்திரி மண்டலத்தாருக்கு நடுக்கத்தை அளித்தது.

சக்கரவர்த்தி பரமேச்வரவர்மர் உடல் நிலை மிகவும் மோசமாக இருந்தது. தக்க யோசனையைக் கூறுவதற்கு மந்திரி மண்டலத் தலைவருக்கும் ஏதும் தோன்றவில்லை. பரமேச்வரவர்மர் படுத்திருக்கும் கூடத்தின் வெளியே கவலை தோய்ந்த முகத்துடன் நின்றுகொண்டிருந்தனர். சக்கரவர்த்திகளுக்குப் பேச்சு அடைபட்டுப் போய்விட்டது. அரண்மனை வைத்தியர் அவருக்குப் பூரண ஓய்வு தேவை என்று சொல்லிவிட்டார். மேலும் அவரது இறுதியும்



நெருங்கிக் கொண்டிருப்பதாக மிக வருத்தத்துடன் அறிவித்து விட்டார்.

இந்தச் சமயத்தில் இளவரசர் அங்கே இருந்தாக வேண்டுமே என்ற கவலை அனைவருக்கும் ஏற்பட்டது. அனைவரும் கவலையுடன் எதிர்பார்த்த இளவரசர் திடீரென மாளிகைக்குள் வந்து விட்டார் என்று செய்தி எங்கும் பரவியது. அனைவர் முகத்திலும் மகிழ்ச்சிக் களை கூத்தாடியது.

இளவரசர் ஏன் இவ்வளவு காலம் பல்லவ நாட்டிலிருந்தும், சக்கரவர்த்தியின் உடல் நிலை சரியில்லை என்று தெரிந்தும் காஞ்சிக்கு வராமலிருந்தார்? இந்தக் கேள்வி அனைவர் உள்ளத்திலும் எழுந்தது. ஒவ்வொருவரும் காரணத்தைக் கற்பித்துப் பேசினர். எந்தக் காரணமாயிருந்தாலும் இளவரசர் நரசிம்மன் குறிப்பிட்ட நேரத்திற்கு வந்து சேர்ந்துவிட்டார்.

வழக்கமாகக் கூறப்படும் கட்டியங்களைக் காணோம், வாழ்த்தொலிகள் கேட்கவில்லை. வாத்யங்கள் முழங்கவில்லை.

நரசிம்மன் நேரே தந்தை இருக்குமிடத்துக்கு விரைந்தார்.

தந்தை இருக்கும் நிலை அவர் கண்களில் கண்ணீரை வரவழைத்தது. தந்தையின் உடல் நிலை இவ்வளவு சீரற்றுப்போகும் என்று அவர் நினைக்கவேயில்லை. எப்பொழுதாவது ஒரு முறை வரும் உடல் நோய்தான் என்று எண்ணினார். அதைவிட நாட்டின் நிலை மிகவும் சீர்கெட்டு இருந்ததால் அதைக் கவனிப்பதில் அதிகக் கவனம் செலுத்தியதால் தந்தையைக் காண அவரால் வர முடியவில்லை. காஞ்சிக்கு மிக அருகில் இருந்திருக்கிறார்; காஞ்சிக்குள்ளேயே இருந்திருக்கிறார். கடல் மல்லைத் துறையருகே இருந்திருக்கிறார். ஆனால் அங்கெல்லாம் அவர்

அலைந்தது. திரிந்தது சதிகாரர்களைக் கண்டு பிடிக்க, வேற்று நாட்டு ஒற்றர்களைக் கண்டு பிடிக்க.

மிகவும் பயங்கரமான திட்டமொன்று காஞ்சிக்கு மிக அருகே உருவாகிக் கொண்டிருந்தது. அதை முறியடிக்க அவர் முயன்று கொண்டிருந்தார்.

காஞ்சியை வீழ்த்திட மூன்று அம்சத் திட்டம் தீட்டியிருந்தார் சாளுக்கிய மன்னர். முதலாவது, நாட்டில் பஞ்சத்தை ஏற்படுத்துவது. அதற்கு உறுதுணையாக மழையும் பெய்யவில்லை.

சாளுக்கியப் படை வீரர்களைக் காஞ்சியைச் சுற்றி மாறு வேடத்தில் உலவ விடுவது இரண்டாவது.

மூன்றாவது, பல்லவர்களுடைய கலை முன்னேற்றத்தை முளையிலேயே கிள்ளிவிடுவது; அழித்து விடுவது.

இம் மூன்றையும் முறியடிக்கப் பாடுபட்டார் பல்லவ இளவரசர். பல்லவ நாட்டிலிருந்து அஜந்தா காடுகளுக்கு ஓவியர் ஒருவன் வந்திருக்கிறான் என்பதை அறிந்த சாளுக்கிய மன்னன் ஓவியன் குமாரதேவனை உயிருடன் பிடிக்க ஏற்பாடு செய்தார். முடியவில்லை. அதற்கு மாறாக அவனை ஆதரித்த ஓவியரையும் அவர் மனைவியையும் தனது தலைநகருக்கு வரவழைத்துச் சிறையில் இட்டார். பிறகு கண்காணாத இடத்துக்கு அனுப்பிவிட்டார்.

திட்டமிட்டபடி காஞ்சி நகருக்குச் செவிலியை அனுப்பி அவளுடன் ராஜசுந்தரியையும் அனுப்பினார். அவள் மூலம் காஞ்சியை வீழ்த்த முயன்றார். ஆனால், அந்தத் திட்டமும் நிறைவேறவில்லை.

பசியும், பஞ்சமும் மட்டும் வெற்றியடைந்தன. இயற்கையின் சதி சேர்ந்தது. அந்தத் தாக்குதலை நரசிம்மனால் வெற்றிகொள்ள முடியவில்லை. பஞ்சம் பட்டினியைத் தடுக்க



முடியவில்லை. காஞ்சி நகரைவிட்டு மக்கள் ஏராளமாக வெளியேறத் தொடங்கினர்.

அதை அறிந்து காஞ்சிக்கு விரைந்தபோதுதான் சக்கரவர்த்திகளின் உடல் நிலை அவருக்குப் புரிந்தது.

தந்தை மூர்ச்சை அடைந்துவிட்டார் என்பதை அறிந்தபோது நரசிம்மன் மாளிகை நோக்கி விரைந்தார்.

"சக்கரவர்த்தி அவர்களே! தங்கள் திருக்குமரன் இளவரசர் வந்துவிட்டார்" என்று முதல் அமைச்சர் சக்கரவர்த்திகளின் செவிகளில் விழுமாறு கூறினார்.

"நாடி விழுந்துவிட்டது. இன்னும் சில நாழிகைகள்தாம்" என்று கவலையுடனிருந்த வைத்தியர் முகத்தில் பிரகாசம் ஏற்பட்டது.

"சக்கரவர்த்தி..." என்று மகிழ்ச்சியால் கூவிக்கொண்டே மன்னனிடம் நெருங்கினார் இளவரசர்.

பரமேச்வர வர்மன் கண்விழித்துப் பார்த்தார். அவர் முகத்தில் புன்னகை ஏற்பட்டது. சுற்றிலுமுள்ளவர்களை அடையாளம் தெரிந்து கொண்டதுபோல் அவரது முகத்தில் தெரிந்தது.

நரசிம்மன் தந்தை அருகே அமர்ந்து அவர் கரங்களை எடுத்துத் தன் இரு கரங்களிலும் வைத்துக் கொண்டார்.

என்ன ஆச்சர்யம்! சக்கரவர்த்தி வாய் திறந்துப் பேசினார்.

"மகனே! வந்துவிட்டாயா?" என்று மெல்லிய குரல் அவரது கண்டத்திலிருந்து ஒலித்தது.

நரசிம்மன் கண்களில் நீர் தளும்பியது.

"வந்து விட்டேன், சக்கரவர்த்தி. எதிரியின் சதியை முறியடித்து வந்துவிட்டேன்" என்று கம்பீரமாகக் கூறினார் இளவரசர்.

சக்கரவர்த்தி என்று தன் மகன் அழைத்த சொல்லில் இருந்த உறுதியும், கம்பீரமும் அரசரைக் கவர்ந்தன. என்றாலும், "தந்தையே" என்று அவன் அழைக்கும் வாஞ்சை நிறைந்த குரலை எதிர்பார்த்தார்.

பரமேச்வரவர்மன் ஏதோ கூற முயலுகிறார் என்பது தெளிவாக மற்றவர்களுக்குப் புலப்பட்டது. தனியே இரகசியமாக ஏதோ சொல்ல விரும்புகிறார் என்பதையும் முதல் அமைச்சர் புரிந்துகொண்டார். அதனால் அருகே இருந்தவர்களை அங்கிருந்து வெளியே சென்றிருக்குமாறு கேட்டுக் கொண்டார்.

நரசிம்மன் தந்தையின் மிக அருகே அவர் பேசுவதைக் கேட்கக் குனிந்து கொண்டார்.

பரமேச்வரவர்மன் மெல்லப் பேசினார். மெல்லிய குரலில் பேசினார். அந்தக் குரலில் சற்றுத் தெளிவு இருந்தது. ஏராளமாகப் பேச வேண்டும் என்று அவர் நினைத்திருக்கிறார். ஆனால் சொற்கள் நெஞ்சிலேயே தடைப்பட்டன. ஆனால், நரசிம்மனின் புத்திக் கூர்மை சக்கரவர்த்தி சொல்ல விரும்பியதை எளிதில் புரிந்து கொண்டது.

"பேரரசே! தந்தைக்கு மகன் ஆற்றும் கடமையை இதுவரையில் செவ்வனே செய்துவிட்டதாக நான் மனத்தில் நினைத்துக் கொண்டிருக்கிறேன்" என்று நரசிம்மன் தொடங்கும்போது சக்கரவர்த்தி "ஆம்" என்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தார்.

"பல்லவ நாட்டிற்கு ஏற்பட்ட தொல்லைகளைத் தங்களுடைய கடைசிக் காலத்தில் தாங்கள் முறியடித்தச் சாளுக்கியர்கள் கரங்களுக்கு இந்த நாடு அடிமையாகாமல்



செய்துவிட்டீர்கள். உலகை விட்டே போர் ஒழிய வேண்டும் என்ற தங்களுடைய மேலான கருத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். அதை அப்படியே நிறைவேற்றுகிறேன். போர்முறை ஒழிய வேண்டுமானால் கலைதான் அதை வெல்ல வேண்டும். சிற்பமும் சித்திரமும் வளர வேண்டும் எனும் தங்களுடைய உள்ளக் கிடக்கையை நான் நிறைவேற்றுவேன் என்று உறுதி கூறுகிறேன். ஆனால் அதிலும் பொறாமை பொங்கி வழிகிறது. நமது நாடு கலையில் சிறந்தது என்ற புகழைப்பெற்று விடக்கூடாது என்பதற்காக எதிரிகள் நமது சிற்பிகளை ஏமாற்றி அழைத்துச் சென்றுவிட்டனர். அப்படிச் செல்லாத சுயமரியாதை உள்ள கலைஞர்களைக் கொன்றுவிடவும் திட்டமிட்டிருக்கிறார்கள். அவற்றை நான் முறியடித்துவிட்டேன். ஆனால், பஞ்சத்தையும் பட்டினியையும் எப்படி ஒழிப்பது என்பதுதான் எனக்குப் புரியவில்லை" என்று சொல்லிக் கொண்டேபோன தனது ஒரே மகன் நரசிம்மன் கரங்களை வருடி, மெல்லிய குரலில், "நரசிம்மா, பாண்டிய நாட்டிலிருந்து செய்தி ஒன்று வந்திருக்கிறது. இதோ பேழையில் இருக்கிறது. எடுத்துப் படி" என்றார் சக்கரவர்த்தி.

நரசிம்மன் பேழையைத் திறந்தான். பாண்டிய மன்னர் பல்லவச் சக்கரவர்த்திக்கு வேண்டுகோள் விடுத்திருந்தார். பாண்டிய மன்னர் தன் மகள் மீன்விழியாள் என்றழைக்கப்படும் மீன லோசனியை நரசிம்மனுக்கு மணமுடிக்க வேண்டியும் பல்லவ பாண்டிய உறவு அதன் மூலம் பலப்படும் என்றும் அதில் அவர் குறிப்பிட்டிருந்தார்.

நரசிம்மன் பேழையை மூடினான். முகத்தில் புன்முறுவலுடன், "சக்கரவர்த்திகளே! எனது இலட்சியம் நிறைவேறும்வரை நான் திருமணம் செய்துகொள்ளப் போவதில்லை!" என்றார்.

சக்கரவர்த்திகள் திடுக்கிடுவதற்கு மாறாக புன்னகை புரிந்தார். மகனது முதுகைத் தடவி, "மகனே! எனது வாழ்வு இன்னும் சில நாட்களோ, நாழிகையோ. அதற்குள் சில

கட்டளைகளை நான் இட வேண்டியிருக்கிறது. அத்துடன் சில இரகசியங்களையும் கூற வேண்டியுள்ளது" என்று கூறிச் சற்று நிறுத்தினார்.

"நரசிம்மா. உனக்கு உடனே மகுடாபிஷேகம் செய்து வைக்கத் திட்டமிட்டுவிட்டேன். பஞ்சமும், பசியும், வரட்சியும் இயற்கை செய்த கொடூரம் அல்ல. மனிதன் செய்தவையே. வேண்டிய தானியங்கள் பல்லவ நாட்டில் உள்ளன. உடனே மக்களுக்கு வேலை கொடு. ஏரிகளைச் செப்பனிடு. சில திருப்பணிகளைத் தொடங்கு. பணியாற்றுபவர்களுக்குப் பசி நீங்க நெல்லாகக் கொடு. பணிகளை உடனே தொடங்கு. பஞ்ச வாரியத்தார், ஏரி வாரியத்தார் இவர்களை உடனே கூட்டு. ஊர்ச் சபைகளை உடனே ஆங்காங்கே கூடுமாறு செய்தி அனுப்பு. போரின்போது பரபரப்புடன் எப்படி நெருங்கிச் செயலாற்றுவோமோ அதுபோல் அதிகாரிகளை முடுக்கிவிடு. படைவீரர்களை உழு நிலங்களுக்கு அனுப்பு. பல்லவ நாட்டினின்று திரும்பிச் சென்ற மக்கள் உடனே திரும்பி வந்துவிடுவார்கள்" என்றார்.

நரசிம்மன் மெய் சிலிர்த்தது. சக்கரவர்த்தி கை அசைத்து முதல் அமைச்சரை அருகே வரச் செய்து நரசிம்மனுக்கு முடி சூட்டுவிழா நடத்த ஏற்பாடுகளைச் செய்யுமாறு கூறினார். மேலும் அவர், "முதல் அமைச்சரே! பஞ்ச காலத்தில் கோலா கலமான விழா வேண்டாம். இந்த இடத்திலேயே முடிசூட்டு விழா நடைபெறட்டும். என் முப்பாட்டனார் சிம்மவிஷ்ணு சக்கரவர்த்தி அணிந்த மகுடத்தைக் கருவூல அறையினின்று எடுத்துவர ஏற்பாடு செய்யுங்கள். நாளை கழித்த மறுநாள் பூர்ணிமை. அன்று என் கரத்தால் மகுடம் சூட்டுகிறேன். இராசசிம்மன் என்ற அபிஷேகப் பெயரையும் சூட்டுகிறேன். நகரில் தங்கியிருக்கும் ஆதிசங்கரரின் பீடத்தை அலங்கரிக்கும் சங்கராச்சாரிய சுவாமிகளைத் தக்க மரியாதையுடன் அரண்மனைக்கு வரவழையுங்கள். பௌத்த குருவையும், சைவசமய ஆச்சாரியரையும் உபசரணை செய்து அழைத்து வாருங்கள்.



திருப்பருத்திக் குன்றம் சென்று சமண சமய தலைமை அடிகளை அழைத்து வாருங்கள்" என்றார். பிறகு மகன் பக்கம் திரும்பி, "பாண்டிய மன்னருக்கு என்ன மறுமொழி எழுதுவது? அவரது மகளை மணக்கச் சம்மதம்தானே நரசிம்மா?" என்று கேட்டார் சக்கரவர்த்தி.

நரசிம்மன் தன்து கருத்து வேற்றுமையை எவ்வாறு தெரிவிப்பது எனத் திகைத்தார்.

## அத்தியாயம் - 23

# இளவரசருக்கு யார் காதலி?

சந்திரமாலாவின் கண் எதிரே காபாலிகை குமாரதேவன் மண்டையில் ஒரு போடுபோட்டு விட்டான். ஓவியன் குமாரதேவன் கண்கள் எதிரே பூமியே பிளந்து தூள் தூளாகச் சிதறுவதுபோல் தோன்றியது. கடல் எங்கோ ஆகாயத்திற்குள் சென்றுவிட்ட உணர்ச்சி. மயக்கமடைந்து கடற்கரை மணலில் சாய்ந்தான் குமாரதேவன்.

காபாலிகை அட்டகாசமாகச் சிரித்தான். சந்திரமாலாவை நெருங்கினான். "என்னிடமிருந்துத் தப்பிவிட முடியும் என்று நினைத்து வந்தாயா?" என்று தன் காவிப் பற்கள் தெரிய நகைத்துக் கொண்டே சந்திரமாலாவின் கரங்களைப் பிடிக்கத் தாவினான்.

கீழே குமாரதேவன் மயங்கிய நிலையில் வீழ்ந்து கிடக்கிறான். அவனை எடுத்துத் தேற்றி மயக்கம் தெளிவிப்பதா? அல்லது காபாலிகையிடமிருந்து தப்பி ஓடுவதா?

குமாரதேவனின் மயக்கத்தைத் தெளிவிக்க முடியாது. அவனது பின் மண்டையில் பலத்த அடிபட்டிருக்க வேண்டும். காபாலிகையின் கரத்தில் இருப்பது மனிதனின் தொடை எலும்பு. அதனால் மெல்ல அடிபட்டாலே மரணத்தை வாவென்று அழைத்துவிடும். தான் என்னதான் ஓவியனை மடிமீது ஏற்றி வைத்துப் பணிவிடை செய்தாலும் அவன் மயக்கத்தைத் தெளிவிக்க முடியாது. அதுவரை பொல்லாத காபாலிகை மௌனமாக இருக்கமாட்டாள். இரண்டு பேரையும் இந்த உலகத்தைவிட்டே அனுப்பிவிடுவாள். இப்படி எண்ண அவளுக்கு கணநேரங்கூட ஆகவில்லை. மறுகணம் அங்கிருந்து ஓடினாள். மணலில் மான்போல் விரைந்து, கால்கள் பூமியில் பாவுகின்றனவா என்று அறியாமலே ஓடினாள். எங்கே செல்கிறோம் என்பது தெரியாமலே ஓடினாள்.

அவள் ஓடிவிடுவாள் என்பதை எதிர்பாராத காபாலிகை "ஹாய்... ஊய்..." என்று கூவிக்கொண்டே சந்திரமாலாவைப் பின் தொடர்ந்தாள்.

காபாலிகையின் ஆக்ரோஷம் அதிகரித்தது. தன் கையிலிருந்த எலும்பு ஆயுதத்தைச் சந்திலமாலாவை நோக்கி வீசினாள்.

ஆனால் குறி தவறிவிட்டது. காபாலிகைக்கு உதவியாக இருந்த ஆயுதமும் கடலில் விழுந்துவிட்டது.

சந்திரமாலாவைப் பின் தொடர்ந்து ஓடிய காபாலிகை பயங்கரக் கூக்குரலிட்டாள்.

கடற்கரை ஓரமாக இருவரும் ஓடினர். உயிரைக் காப்பாற்றிக் கொள்ள சந்திரமாலா ஓடுகிறாள். அலைகள் அவர்களது பாதங்களைத் தழுவிச் செல்கின்றன. ஒரு சமயம் கணுக்கால்வரை தடவுகின்றன. ஆடையை நனைத்து விடுகின்றன. ஒரு பெரிய அலை இடுப்புவரை வருகிறது. அலையின் பயங்கரத்திற்கிடையே அவர்கள் ஓடுகிறார்கள்.



காபாலிகைக்கு ஆத்திரம்; சந்திரமாலாவுக்கு உயிர் பிழைக்க வேண்டி வேகம்.

பெரும் அலை; அந்த அலைக்குத் தப்பமுடியாது. சந்திரமாலாவும், காபாலிகையும் அலைகளின் போர்வைக்குள் புகுந்துவிட்டனர்.

சந்திரமாலா கண்விழித்தபோது அவளைச் சுற்றிப் பலர் நின்று கொண்டிருந்தனர். அதோ பேசும் குரல்; தெளிவாகக் கேட்கவில்லை. கடலலைகள் அவளை இழுத்துக்கொண்டு போனதும் "அம்மா, அப்பா" என்று அலறியது மட்டும் இப்போது நினைவிற்கு வந்தன. அதைத் தொடர்ந்து காபாலிகையும் அவள் கண் எதிரே தோன்றினாள்.

"அவள்... அவள்" என்று சந்திரமாலா முணுமுணுத்தாள். அவள் அருகே நின்றுகொண்டிருந்த ஓவியன் குமாரதேவனின் சகோதரன் வீரன் குமாரதேவன் "சந்திரமாலா யாரைத் தேடுகிறாய்...?" என்று கேட்டான்.

சந்திரமாலா குரல் வந்த திசையைப் பார்த்தாள். மங்கிய உருவமாகத் தெரிந்த குமாரதேவனை ஓவியன் என்று எண்ணிய சந்திரமாலாவுக்கு மகிழ்ச்சி ஒருபுறம்; ஓவியன் குமாரதேவன் பிழைத்துவிட்டான் என்று குதூகலத்தில் "நீங்கள் பிழைத்துவிட்டீர்களா?" என்று தடுமாற்றத்துடன் கேட்டாள்.

"குமாரதேவன் மெல்லிய புன்னகையுடன், "எனக்கு ஒன்றுமே நேரவில்லையே... நேர்ந்தால் அல்லவா பிழைப்பதற்கு...?" என்றான்.

"காபாலிகை உங்கள் மண்டையில் தாக்கினாள். மணலில் வீழ்ந்துவிட்ட உங்களை விட்டுவிட்டு நான் உயிர் பிழைக்க ஓடினேன். காபாலிகை துரத்தி வந்தாள்..." என்று பேசமுடியாமல் பேசினாள் சந்திரமாலா.

மூதாட்டி முத்தம்மாள் மெல்ல அருகே வந்து, "சந்திரமாலா, அந்தக் கவலையெல்லாம் இப்போது வேண்டாம். நீ பிழைத்ததே ஏகாம்பரர் அருள்தான். நாளைக்கு மற்றவற்றைப் பேசிக் கொள்ளலாம்" என்றாள்.

ஆனால், சந்திரமாலாவுக்கு ஆவல் தாங்கவில்லை. "நடந்தவற்றை அறிய வேண்டும் என்ற துடிப்பு அவள் உள்ளத்தில் ஓங்கி நின்றது. களைப்பும், உடல் சோர்வும் அவளை ஏதும் செய்துவிடவில்லை. குமாரதேவனை அவள் நோக்கினாள். இப்போது பார்வை தெளிவாகத் தெரிந்தது. குமாரதேவனிடம் ஏதோ மாறுதல் இருப்பதுபோல் தோன்றியது. ஓவியன் குமாரதேவன் வேறு. இவன் வேறு என்பதை அவள் இன்னும் புரிந்து கொள்ளவில்லை.

குமாரதேவனுக்குப் புரிந்துவிட்டது. தன் குரலைக் கூடவா அவளுக்கு அடையாளம் கண்டு கொள்ள முடியாது என்று எண்ணிய அவன், "சந்திரமாலா, நீ நினைப்பதுபோல் உன் மனத்தைக் கவர்ந்த குமாரதேவன் நான் அல்லன். நான் அவனது சகோதரன். நானும் ஓவியனும் இரட்டைப் பிறவிகள். காபாலிகையால் தாக்குண்ட எனது சகோதரன் - உன் உயிருக்கு உயிரானவன் இங்கேதான் இருக்கிறான். அடுத்த அறையில் கட்டிலில் படுத்திருக்கிறான். அவனுக்கு எந்தவித ஆபத்தும் இல்லை" என்றான்.

சந்திரமாலாவுக்கு வியப்பு அதிகமாயிற்று என்பது அவளுடைய முகமலர்ச்சியினின்று தெரிந்தது. அவளை மேலும் பேசவிடாமல் குமாரதேவன், "சந்திரமாலா, காபாலிகையைப் பற்றிக் கவலைப்படாதே. அவளைக் கடல் கொண்டுவிட்டது. பெரும் அலையொன்று உங்களிருவரையும் கவர்ந்திழுத்துச் சென்றது. கடல் மல்லைத் துறைக்கருகே உங்களிருவரையும் கரையில் சேர்த்தது. நீ பிழைத்தாய். அவள் உயிர் கடலோடு கலந்துவிட்டது. பாவம் அவள்; காபாலிகை சமயத் தொண்டோடு நின்றிருக்கலாம். அரசாங்க விஷயங்களில் வீணே தலையிட்டாள். எதிரியுடன் சேர்ந்து கொண்டாள். அவளை மணந்த காபாலிகன்



ஒருவனிருக்கும்போது மற்ற ஆடவர் மீது வீண் ஆசை கொண்டாள். அதனால் அழிந்தாள். அவள் வணங்கிய அந்தச் சிவபெருமானே அவளை அழித்துவிட்டார். என்னைப் பலி கொடுக்க முதலில் முயன்றாள். பிறகு என்னைப் போன்ற உருவ ஒற்றுமைகொண்டு என் இளவல் ஓவியன் குமாரதேவனைப் பிடித்துக் கொண்டாள். கடைசியில் கடலுக்கு இரையானாள்" என்றான்.

சந்திரமாலா வருத்தப்பட்டது தெரிந்தது. கண்களில் இருதுளி நீர் முத்துப்போல் படர்ந்ததும் புலப்பட்டது.

"தாடகை, சூர்ப்பனகை போன்றவள் காபாலிகை. அவள் மறைவுக்கு வருத்தப்படத் தேவையில்லை. அவளும் மற்ற காபாலிகக் கோஷ்டியினரும் பல்லவ நாட்டைச் சாளுக்கியர்களிடம் காட்டிக் கொடுக்கத் திட்டமிட்டனர். நரபலி என்பதன் மூலம் என்னையே கொல்லத் திட்டமிட்டனர். மாமல்லபுரத்திற்கே உயிர் நாடியான சிற்பியைச் சாளுக்கிய நாட்டிற்குக் கடத்திச் செல்லத் திட்டமிட்டனர். பல்லவ நாட்டைக் கலைப் பூமியாகக் கனவு கண்டு காடு மலை என்று பாராமல் சுற்றி வந்து எதிரிகளின் முகாமான அஜந்தாவுக்குச் சென்று ஓவியம் பயில முயன்ற எனது சகோதரனுக்கு அவர்கள் செய்த இடையூறுகள் கொஞ்சமல்ல. அஜந்தாவில் அமரச் சிற்பங்கள் வரைந்த சைத்திரகரை எனது சகோதரன் சந்தித்து அவரிடம் ஓவியம் கற்றதோடன்றி அவரைப் பல்லவ நாட்டிற்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தான். ஆனால், அதை எப்படியோ அறிந்த விரோத சதிகாரர்கள் ஓவியரையும் அவரது மனைவியையும் இருள் குகையில் அடைத்திருந்தனர்..." இதைக் குமாரதேவன் கூறும்போது சந்திரமாலா "அம்மா..." என்று அலறி எழுந்து உட்கார்ந்து விட்டாள்.

"என் தந்தை இருக்கிறாரா? என் அருமைத் தாயார் இருக்கிறாரா? உயிருடன் அவர்கள் இருக்கிறார்களா?

அவர்களை எங்கே காண்பேன்?'' என்று சந்திரமாலா புலம்பினாள்.

அவளைச் சமாதானப்படுத்த அனைவரும் முயன்றனர். பெற்றோர்கள் உயிருடனிருக்கிறார்கள் என்றறிந்த பிறகு சந்திரமாலாவுக்கு கடலில் வீழ்ந்ததால் ஏற்பட்ட களைப்பு என்னளவும் தெரியவில்லை. பெற்றோர்களைக் காணச் சென்று விடுபவள்போல் அப்பொழுதே துள்ளி எழுந்தாள்.

அவளைச் சமாதானப்படுத்த முத்தம்மாள் அவளருகில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

''சந்திரமாலா... நீ இன்னும் இரண்டு நாள்களுக்கு அமைதியாக இருக்க வேண்டும். சுவர் இருந்தால்தானே சித்திரம் வரைய முடியும். நீ இருந்தால்தானே இந்தப் பல்லவநாடு முழுமையும் கலைவளம் மிக்கதாக ஆகும். அதனால் தம்பி குமாரதேவன் சொல்வதை நீ கேட்க வேண்டும். தம்பி, இளவரசருக்கு மிகவும் வேண்டியவர். முதன் முதலில் அன்று இரவு உன்னைக் காப்பாற்றியவரே இவர்தான். உன்னைத் தேடித்தான் வந்தார். உனது பெற்றோர்கள் உயிருடனிருக்கிறார்கள் என்பதைச் சொல்லத்தான் வந்தார். வந்த இடத்தில் காபாலிகர்களிடம் அகப்பட்டுக் கொண்டார். உனக்காகத் தியாகம் செய்ய வந்தவர் சொல்வதைக் கேட்க வேண்டும்..." என்று அறிவுரை கூறினாள்.

சந்திரமாலா மௌனமானாள். குமாரதேவன் தொடர்ந்து "சந்திரமாலா, நீ இன்னும் இரு நாள்களாவது அமைதியாக இருக்க வேண்டும். பல்லவ நாடே நெருக்கடியான கட்டத்தில் இருக்கிறது. உண்ண உணவின்றி மக்கள் தென்னாட்டிற்குச் செல்கிறார்கள். ஆனால் உண்மையில் உணவு இல்லாமல் இல்லை... பஞ்சத்தை உண்டாக்கி மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்திவிடத் திட்டமிட்டனர், சாளுக்கிய ஒற்றர்கள். அதற்கு உடந்தையாக முன் ஏற்பாடாக காஞ்சியில் பல துறைகளில் பல்லவ நாட்டு



மக்கள் சிலரைத் தங்கள் கைக்குள் போட்டிருந்தனர். பெரிய வியாபாரி, நடனமாது, படைத் தலைவர், புத்த பிட்சு, காபாலிகர் தலைவன், மத ஆசாரியர்கள் இப்படியாகப் பலர். அவர்கள் அனைவரையும் சிறைப்படுத்திவிட்டோம்" என்று குமாரதேவன் கூறிவரும்போது சந்திரமாலா குறுக்கிட்டு, ''நடனமகளா?... யாரைச் சொல்கிறீர்கள்...'' என்று ஐயப்பாட்டை எழுப்பவே, குமாரதேவன், "நீ நினைப்பது சரிதான்; ராஜசுந்தரிதான். ஆனால், அவள் மீது எந்தவிதத் தவறுமில்லை. அவளைக் கருவியாகப் பயன்படுத்த முயன்றவர்கள் தோல்விகண்டு விட்டார்கள். அவள் கடல் கடந்த நாட்டிற்குப் போய்விட்டாள்..." என்றான்.

"கடல் கடந்த நாட்டிற்கா? ஐயோ, ராஜசுந்தரி நடனக் கலையில் மிகச் சிறந்தவள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அவளைக் காண வேண்டும் என்று துடிப்பு எனக்கு அஜந்தாவிலிருந்தபோதே இருந்தது. ஆனால், நான் வந்த வேளை சரியில்லை. பெற்றோர்களைப் பிரிந்தேன். வயிற்றைக் கழுவ ஏதோ நாட்டியங்களை ஆட நேர்ந்தது. கற்பையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டியிருந்தது. நான் தேடிவந்த இருவரையும் நான் சந்திக்க முடியவில்லை..." என்று பெருமூச்சு விட்டாள்.

"நீ தேடி வந்தவர்களுள் ஒருவர் ராஜசுந்தரி. மற்றவர்?" என்று குமாரதேவன் கேட்டான்.

சந்திரமாலா நாணத்தால் தலைகுனிந்தாள். முத்தம்மாள் அவளுடைய மன எண்ணத்தைப் பூர்த்தி செய்யுமாறு ஆகிவிட்டது.

''தங்களுடைய சகோதரர்தான். சித்திரம் வரைபவர். அஜந்தாக் காடுகளில் அவரைச் சந்தித்ததால் இருவரும் பழகினர். இருவரும் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்ளாது இருந்தாலும் காதல் கருகாமல் இருக்கிறதா என்று சோதனை புரிந்தார் அவரது தந்தை. சோதனையில் குமாரதேவன் வெற்றி பெற்றான்.. என்றாலும் விதி பிரித்தது. சந்திரமாலாவுக்கு

எப்போதும் ஓவியரின் நினைவுதான்" என்று கூறும்போது சந்திரமாலாவுக்கு முகம் நாணத்தால் சிவந்தது.

"ஓகோ!" என்று கூறி வாய்விட்டு நகைத்த குமாரதேவன், "இளவரசருக்கு இந்தச் சம்பவங்கள் எல்லாம் தெரியும். அதனால் தான் அவர் பெரிய பெரிய திட்டங்களை வகுத்திருக்கிறார்" என்றான்.

"பெரிய பெரிய திட்டமா?" என்று சந்திரமாலா ஆவலுடன் கேட்டாள்.

"ஆமாம், அவற்றையெல்லாம் இளவரசரே நேரே விளக்கிச் சொல்லுவார்?" என்றான்.

"நேரே என்னிடமா விளக்கிச் சொல்வார்?"

"ஆமாம்; உன்னிடம் மட்டுமன்று. நம் எல்லோரிடமும் தான். இளவரசருக்கு ஏராளமான பொறுப்பு. இப்போதுதான் காஞ்சி சென்று சக்கரவர்த்திகளைச் சந்தித்திருக்கிறார். இன்னும் இரண்டு நாள்களில் அவர் இங்கே வருவார். நிலவு நாளில் கடற்கரையில் அமர்ந்து அவர் தனது காதலியைக் குறித்து நம் எல்லோரிடமும் விளக்குவார்".

"காதலியா? நம்மிடம் விளக்குவாரா?" சந்திரமாலா பிரமிப்புடன் கேட்டாள்.

"ஆமாம். இளவரசருக்குத் திருமணமாக வேண்டுமல்லவா? அதற்குப் போட்டிமேல் போட்டி. சக்கரவர்த்தி பாண்டி நாட்டு மங்கையைத் தேர்ந்தெடுத்தார். கங்க நாட்டரசர் பல்லவ நாட்டுடன் சமாதானமாக இருக்கப் பெண் கொடுக்க முன் வருகிறார். ஆனால் இளவரசர் நெஞ்சிலுள்ள காதலியோ வேறு ஒருத்தி!"

"இளவரசர் இதயம் கவர்ந்த காதலி யாரோ?" சந்திரமாலா மட்டுமன்று அனைவரும் ஆவலுடன் மறு மொழியை எதிர்பார்த்தனர்.



"எனக்கே தெரியாது! இளவரசர் இன்னும் இரண்டொரு நாளில் நம்மிடம் தெரிவிப்பார்".

"இளவரசர் நம்மைச் சந்தித்துப் பேசுவாரா?"

"ஆகா; இளவரசரது குடும்பத்தில் நாமெல்லாம் முதன்மை பெற்றவர்கள்... பிறகு தான் மந்திரி மண்டலத்தார், தளபதிகள் அனைவரும். கலைஞர்கள் அவரது ஆருயிர் நண்பர்கள்" என்று குமாரதேவன் கூறியதைக் கேட்கக் கேட்க சந்திரமாலாவுக்கு ஆவல் பொங்கியது.

"இளவரசர் என்று வருவார்? எப்போது வருவார்?" என்று ஆவலுடன் கேட்டாள் சந்திரமாலா.

"இன்று மாலை நான் காஞ்சி செல்கிறேன். இளவரசரைச் சந்திப்பேன். இளவரசருக்கு முடிசூட்டு விழா நடக்கப் போகிறதாம். அது முடிந்தவுடன் இளவரசர் மாமல்லபுரம் வருவார்" என்று குமாரதேவன் குதூகலமாகக் கூறினான். பிறகு புறப்பட எழுந்த குமாரதேவன், "அடுத்த அறையில் மண்டையில் அடிபட்டுக் கிடக்கும் எனது சகோதரனுக்குப் பூரண ஓய்வு தேவை. அவனைச் சந்தித்துப் பேசாமல் இருப்பது நல்லது. உன் தந்தை முன்பு கூறினாரே அந்தக் கட்டளையை இப்போது நிறைவேற்றுவது நல்லது" என்று மெல்லிய புன்னகையுடன் சந்திரமாலாவை நோக்கிக் கூறினான்.

சந்திரமாலா மௌனமாயிருந்தாள். அவள் கண் எதிரே பழைய சம்பவங்கள் உயிர்ப் பெற்று நின்றன. அஜந்தாவிலிருந்து கடல் மல்லை வந்ததுவரை நினைத்துக் கொண்டாள்.

வீரன் குமாரதேவன் புறப்பட்டான். "சீக்கிரமே திரும்பி வாருங்கள்... அடுத்த முறை காஞ்சிக்கு நானும் வருவேன்" என்றாள் சந்திரமாலா.

வீரன் குமாரதேவன் புறப்படும்போது காஞ்சியிலிருந்து விரைந்து வந்த காவல் வீரர்கள் குமாரதேவனைச சந்தித்துச் சொன்ன செய்தி குமாரதேவனை 'ஆ'வென அலற வைத்தது.

வீரர்களிடமிருந்து குதிரை ஒன்றைப் பெற்றுக் காஞ்சிக்கு விரைந்தான் குமாரதேவன்.

## அத்தியாயம் - 24

# கடல் மல்லைக் காதலி

காஞ்சி மாநகரமே துயரத்திலாழ்ந்து கிடந்தது. பல்லவச் சக்கரவர்த்தி பரமேச்வரவர்மர் சிவபெருமான் திருவடி நிழலை அடைந்துவிட்டார். தனது மகன் நரசிம்மவர்மனுக்குப் பல்லவ நாட்டின் பரம்பரை மகுடத்தைச் சூட்டி, "நரசிம்மா! இன்று முதல் உனக்குச் இராசசிம்மன் என்ற பெயரையும் பெரியோர்கள் கருத்துப்படி சூட்டுகிறேன். உனது பாட்டனார் மாமல்ல சக்கரவர்த்தியைப்போல் பெயரும் புகழும் கொண்டு சிறந்த ஆட்சியை நடத்து. பல்லவர்களுடைய புகழ் வீரத்தாலும் வெற்றியாலும் மட்டும் ஓங்கக்கூடியது என்று நினைக்காதே..." என்று கூறிய மறுகணம் அவரது தலை சாய்ந்துவிட்டது.

பரமேச்வரவர்மர் இறந்த துக்கம் ஒரு புறமும், நரசிம்மன் இராசசிம்மனாக அரியணை அமர்ந்த மகிழ்ச்சி ஒரு புறமுமாக காஞ்சி மாநகரம் பரபரப்பும் கலகலப்பும் கொண்டு விளங்கியது.

நகரை விட்டுத் திரும்பிச் சென்றிருந்த மக்கள் ஒவ்வொருவராகத் திரும்ப முற்பட்டனர். கடைவீதியில் அட்டியின்றித் தானியங்களை மக்களுக்கு விற்குமாறு இராசசிம்மன் கட்டளையிட்டார்.



தொண்டைமண்டலம் எங்கும் ஏரிகளைச் செப்பனிடும் பணிகள் நடைபெறத் தொடங்கின. மழை பெய்தால் நீரைத் தேக்குவதற்கு ஏற்ப ஏரிகள் தடாகங்கள் அமைக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டன. ஆங்காங்குள்ள கிராம ஊர் மக்கள் மிகுந்த ஊற்சாகத்துடன் ஏரிகள் அமைக்கும் பணியினை மேற்கொண்டனர்.

பொலிவிழந்த வீடுகளுக்குப் புது சுண்ணம் அடித்தனர். வேத பாட சாலையில் வேத கோஷம் எழுந்தது. தேவாரப் பதிகங்கள் சைவ மடாலயங்களில் ஒலித்தன. உலகளந்த பெருமாள் கோயிலில் பாசுரங்கள் பாடப்பட்டன.

தூய்மையான அறநெறி வழுவா புத்த பிட்சுகளின மடாலயங்களில், "புத்தம் சரணம் கச்சாமி, சங்கம் சரணம் கச்சாமி, தர்மம் சரணம் கச்சாமி" என்ற குரல் மெய் சிலிர்ப்பு ஏற்படும் வண்ணம் ஒலித்தது.

இராசசிம்மன் சைவ, வைணவ, சமயத்தவர்களின் முக்கியமானவர்களை அழைத்தார். அவர்கள் கலந்து உரையாடி சநாதன வேத மதத்திலுள்ள பல்வேறு பிணக்குகளைத் தீர்ப்பதற்கு வழி கூறுமாறு கேட்டுக் கொண்டார்.

சிவனை மட்டும் வணங்கும் சமயத்தில் ஒரு பிரிவினரான காபா'லிகர்கள், பைரவர்கள் தவறான தங்கள் கொள்கையாம் நரபலியிடுதல், மது அருந்துதல், சுடுகாட்டில் தவம் புரிதல் போன்ற தர்மங்களைக் கடைப்பிடித்து வருவதிலுள்ள அறநெறிக்கு மாறான கோட்பாடுகளை எடுத்துக் கூறி விளக்க சமய அறிவுமிக்க பெரியோர்களைக் கேட்டுக் கொண்டார்.

காபாலிகர்களும், பைரவர்களும், பாசுபதர்களும், காளாமுகர்களும் ஒன்று சேர்ந்தனர். பலி இடுதல் கொடுமையானது. இறைவனுக்கு ஏற்காதது, பாவமானது என்பதைப் புரியச் செய்தார். விநாயகரை மட்டும்

வணங்குபவர்கள், முருகனை மட்டும் வணங்குபவர்கள், சூரியனை வணங்குபவர்கள், சக்தி உபாசனையை மூர்க்கத்தனமாகக் கொள்பவர்களை அழைத்து வாதப்பிரதிவாதங்களுடன் எடுத்துக் கூறி எல்லாம் சிவமயம் என்று உணர்த்தும் பணியை, தங்கள் தலையைத் தாங்களே கொற்றவைக்குப் பலி தரும் ஒரு பிரிவினரின் கொள்கை, நடவடிக்கை தவறானது என்பதை விளக்கும் பணியை அபிநவ சங்கரர் மேற்கொண்டார். வேதமதம் மீண்டும் மக்கள் குலத்துக்குத் தொண்டு செய்யப் புது ஒளிபெற்று விளங்க வழிசெய்த இராசசிம்மனை ஆதிசங்கரர் வழிவந்த சங்கராச்சாரியார் ஆசி கூறி அருளினார்.

காஞ்சி நகரத்துக் காமகோடிபீடம் புதுப்பொலிவு பெற்றது.

இராசசிம்மன் அவரிடம் தன் உள்ளத்திலிருந்த நெடுநாள் எண்ணத்தை, இலட்சியத்தைப் புலப்படுத்தி அவரது அனுக்கிரகத்தை வேண்டினான்.

"கடவுள் ஒன்றே. ஓர் நாமம், ஓர் உருவம் அற்றவர். ஆனால் பக்தர்கள் வேண்டும்போது பல வடிவங்களில் தோன்றுகிறார். நாராயணனாகவும், சந்திர சூடனாகவும் அவர் காட்சி தருகிறார். இருவரிடையே வேற்றுமையில்லை. அரனுக்கும் அரிக்கும் ஓரிடத்திலேயே கோயில் அமைக்க வேண்டும்.

"கடற்கரை அருகே ஒரு கோயில் அமைக்க வேண்டும். காஞ்சிமா நகரில் கைலாசபதிக்கும், வைகுண்ட நாதருக்கும் கோயில் கட்ட வேண்டும். காஞ்சி நகரில் மலையைக் குடைந்துக் கோயில் கட்ட மலைகள் இல்லை. அதனால் புதிய விதமாகப் பாறைகளை அடுக்கிக் கோயில் கட்டப்போகிறேன். தங்கள் ஆசி தேவை" என்று இராசசிம்மன் சங்கராச்சாரியாரைக் கேட்டுக் கொண்டார்.



அபிநவரின் சுவாமிகளின் பரிபூரண ஆசி இராசசிம்மனுக்குக் கிடைத்தது.

முன்பே திட்டமிட்டபடி கடல்மல்லையில் இராசசிம்மன் சிற்பிகளையும், ஓவியர்களையும் சந்தித்துப் பேசினார்.

அஜந்தாவில் வர்ண ஓவியங்கள் வரைந்த ஓவியர் சித்திரசேனரும் அவரது மனைவியும் அங்கே இருந்தனர். சந்திரமாலா தந்தையும் தாயையும் மீண்டும் சந்தித்துவிட்ட பேரானந்தத்தில் இங்குமங்குமாக நடமாடி கலைஞர்களை உபசரிப்பதில் ஈடுபட்டிருந்தாள். ஓவியர் குமாரதேவன் சிற்பிகளுடன், சித்திரக்காரர்களுடன் பேசிக் கொண்டே, சந்திரமாலாவையும் அவ்வப்போது கடைக் கண்ணால் பார்த்துக் காதல் மொழி பேசிக் கொண்டிருந்தான்.

பல்லவ நாட்டில் சிற்பப் பணியினை மீண்டும் தொடங்குவது பற்றித் தத்தம் கருத்தினை ஒவ்வொரு சிற்பியும் தெரிவித்தனர்.

வண்ண ஓவியங்களைத் தீட்டுவதற்கான திட்டமொன்றை ஓவியர் சித்திரசேனரும், குமாரதேவனும் தெரிவித்தனர். பனங்காடுகள் நிறைந்த பனைமலை அருகே கைலாயநாதர் ஆலயம் ஒன்று அமைந்து அதில் அழியாத வர்ணங்களுடன் கூடிய சித்திரங்களை வரைவதை உடனே தொடங்குவதற்கான திட்டத்தை ஓவியர் கூறினார்.

சிற்ப, ஓவியப் பணிகள் உடனே தொடங்க வேண்டியதன் அவசியத்தை இராசசிம்மன் வலியுறுத்தி, பல்லவ நாட்டின் புகழ் எங்கும் விரைவாகப் பரவ வேண்டியதையும் தெரிவித்தார்.

"அரசி இல்லாது அரசர் அரியணையிலமர்ந்திருப்பது அரச தர்மத்திற்கு மாறுபட்டது" என்று பெரியவர்கள் வலியுறுத்தினர்.

ராஜசிம்மனுக்கோ கடல் கடந்து சென்றிருக்கும் பச்சைக் கொடியின் மீதே எண்ணமிருந்தது.

நடனராணி ராஜசுந்தரியும் திரும்பி வந்துவிட்டாள். ஓவியர்களுக்கு உதவிய வண்ணம் தன் வாழ்நாளைக் கழிக்கப் போவதாகத் தன் விருப்பத்தை அவள் தெரிவித்தாள்.

"உன் வாழ்க்கைக்கு என்றுமே உறுதுணையாயிருக்க நான் பரிசு ஒன்று தரப் போகிறேன்" என்றான் ராஜசிம்மன்.

பரிசு என்றவுடன் முத்தாரமோ, வைரமாலையோ என்று எண்ணிய ராஜசுந்தரியிடம் ராஜசிம்மன் கூறியவை அவளைத் திகைக்க வைத்தன.

"சுந்தரி, கடந்த சில மாதங்களில் பல துயரங்களை நீ அநுபவித்துவிட்டாய். ஒரு பெண்ணுக்கு, அழகில் சிறந்தவளுக்குத் துணை அவசியம். உன் மனத்திற்கு ஏற்ற மணாளன் குமாரதேவன் என்பதை நான் அறிந்தேன். உங்கள் இருவருக்கும் திருமணத்தை நடத்தி வைக்க முடிவு செய்துவிட்டேன்" என்றார்.

"குமாரதேவனா? எந்தக் குமாரதேவன்?" புரிந்து கொள்ள முடியாத நிலையில் சுந்தரியின் முகம் நாணத்தால் சிவந்தது. "சக்கரவர்த்தி அவர்களே, என் வாழ்நாளில் எதிர்பாராத திருப்பு முனைகள் பல ஏற்படுகின்றன. நான் நினைத்தது ஒன்று, நடந்தது ஒன்று. ஒவ்வொரு நொடியும் எதிர்பாராத சம்பவங்கள் நடைபெறுகின்றன. கடல்மல்லைக்கு என்னைத் திரும்பவும் அழைத்து வர கலபதி சம்மதிக்கவில்லை. செவிலித்தாய் சாளுக்கிய நாட்டிற்கு ஆதரவாக என்னைப் பயன்படுத்தப் பார்த்தாள். சமுத்திரநாதன் என்னை அடையத் திட்டமிட்டார். உயிரிழந்த பிட்சுவுக்கோ என்னை எப்படியாவது அடைய ஒரு வெறி. இவர்களிடமிருந்து மீண்டு கடலில் சென்ற போது, அங்கேயும் ஓர் ஆபத்து, நாகநாட்டில் நிம்மதியாக இருக்கலாம் என நினைத்தால், அங்கு என் நாட்டியத்தை



ரசிப்பதற்கு மாறாக என்னை ரசிக்க முற்பட்டனர். அதனால் உடனே மாமல்லபுரம் திரும்ப முடிவு செய்தேன். கலபதி ஒப்பவில்லை. ஆனால் கடலிலிருந்துக் குதித்து உயிரை மாய்த்துக் கொள்வதாக நான் பயமுறுத்திய பிறகே அவர் என்னை இங்கு அழைத்து வந்தார்.

"நல்ல வேளையாக நான் இங்கு வந்தேன். மனம் விட்டுப் பேசுகிறேன். என்னைத் தவறாகக் காஞ்சியிலுள்ளவர்கள் எண்ணுமாறு நான் நடந்து கொண்டதன் காரணம் தாங்கள் அறிவீர்கள். எனக்கு இதுவரை எந்த யுவ புருடரிடமும் ஆசை ஏற்பட்டதில்லை. ஓவியரைக் கண்டபோது என் மனத்தில் சஞ்சலம் ஏற்பட்டது உண்மை. இதயங் கலந்த காதல் என்று அதைச் சொல்ல முடியாது. நாகநாட்டில் பச்சைக்கொடி தங்களையே நினைத்தவாறிருக்கிறாள்.

"நான் நாகநாடு சென்றதும் உடனே திரும்பி வந்ததும் கனவு போலவே இருக்கின்றன. அந்த நாட்டுச் சிற்றரசரின் மகள் பச்சைக்கொடி கலைத் தாகம் தாங்காமல் தவிக்கிறாள். தங்களையே மறக்காது இதயத்தில் வைத்துப் பூஜித்து வருகிறாள். நான் வயதில் சிறியவள். நான் யோசனை கூறுவதாகத் தவறாக நினைக்கக் கூடாது. பச்சைக்கொடியைத் தாங்கள் ஏற்றுப் பல்லவ நாட்டின் அரசியாக்க வேண்டும். கலை உணர்வு மிக்க அரசி, இந்த நாட்டிற்குக் கிடைப்பது ஒன்றே பல்லவ நாட்டு மக்கள் புண்ணியத்தின் பலனாகும்" என்றாள்.

இராசசிம்மன் மெல்லிய புன்முறுவல் பூத்தார்.

"சுந்தரி, என் எதிரே கடல்போல் பல பணிகள் விரிந்துக் கிடக்கின்றன".

"சுந்தரி, இனி உனக்கு எந்தவிதத் துயரமும் இருக்காது. உன்னைக் கண்போல் பாதுகாக்க ஓர் துணையைத்

தரப்போகிறேன். நீ ஓவியர் குமாரதேவனை மறந்து விடவேண்டும்.

"ஓவியர் மகள் சந்திரமாலாவுக்கும், ஓவியர் குமாரதேவனுக்கும் மணம் புரிவிக்க வேண்டும், உனக்கும், வீரன் குமாரதேவனுக்கும் மணம் புரிவிக்க வேண்டும். ஆனால் என் திருமணம் சிறிது காலம் கடந்து நடக்கலாம். என் மனத்தில் நின்று நிலவும் காதலே வேறு" என்று கூறும்போது, சந்திரமாலாவும் குமாரதேவனும் அங்கே வந்துவிட்டனர். வீரன் குமாரதேவனும் வந்து சேர்ந்தான். "சக்கரவர்த்தி அவர்களே! தங்கள் உள்ளத்தில் நாகநாட்டு நங்கை பச்சைக்கொடி அசைந்தாடவில்லையா? அவளைத் தாங்கள் காதலிக்கவில்லையா? தங்களுக்கு வேறு ஒருத்தி மீது காதலா? நான் நினைத்தேன் பாண்டிய மன்னரும் கலை ஆர்வம் மிக்கவராக விளங்குகிறார். சித்தன்ன வாசலில் அவரது சித்திரப்பணி சிறந்து விளங்குகிறது என்று கேள்விப்பட்டேன். அதனால் பாண்டியர் மகளை மணம் புரிந்துகொள்ள விரும்புகிறீர்கள் போலிருக்கிறது. உம்... தங்களுடைய கருத்து இவ்வாறு இருக்கும் எனத் தெரிந்திருந்தால் நான் நாக நாட்டினின்று வந்திருக்கவே மாட்டேன். கலபதி என்னை மீண்டும், கடல்மல்லைக்கு அழைத்து வரவே விரும்பவில்லை. நாக நாட்டிலோ பச்சைக்கொடி என்னைப் பிரியவே விரும்பவில்லை. நடனம் பாடல்கள் முழுமையும் அவளுக்குக் கற்றுத்தரவில்லை. அங்கே தங்கியிருந்து நான் அவளுக்கு நடனத்தைக் கற்றுக் கொடுத்து என் காலத்தைக் கழித்திருப்பேனே..." என்று வருத்தம் நிறைந்த குரலில் கூறினான்.

ஓவியர் குமாரதேவனும் இப்போது பேச்சில் சேர்ந்து கொண்டான்.

"தாங்கள் காதலிப்பது வேறு ஒருத்தியை என்றால் நானும் என் கருத்தை மாற்றிக் கொள்ளவேண்டியதுதான். தங்கள் அருகே நிற்கிறாரே என் சகோதரர் அவரது கட்டளை, என்ன தெரியுமா? கடற்கரை கோயில் திருப்பணி



முடியும்வரை, காதலை நினைக்கக்கூடாது; திருமணம் என்பதைப்பற்றிப் பேசக்கூடாது என்று சொன்னார். நானும் சந்திரமாலாவை மறந்துவிடப் போகிறேன்" என்று சந்திரமாலாவைக் கடைக் கண்ணால் பார்த்துக்கொண்டே கூறினான்.

"திருமணம் புரிந்து கொள்ளாமல் பௌத்த மடத்தில் சேர்ந்து மணிமேகலை போன்ற பிட்சுணியாகத் தொண்டாற்றவே நான் விரும்புகின்றேன்" என்றாள் ராஜசுந்தரி.

ராஜசிம்மர் புன்முறுவலுடன் அவர்கள் பேச்சைக் கேட்டுப் பின் மெல்லப் பேசத் தொடங்கினார்.

"என் அருமை நண்பர்களே! பல்லவ நாட்டின் புகழ் ஓங்குவது உங்களிடம்தான் இருக்கிறது. ஓவியரும், சிற்பியும் ஒத்துழைக்காவிடில் நான் பல்லவ மன்னராகப் புகழடைவது என்பது இயலாது. நான் திருமணம் செய்து-கொள்ளாமலும் இருக்க முடியாது. இன்னும் சில நாட்களில் நான் பட்டத்து அரசியைத் தேர்ந்தெடுக்க வேண்டும். என் மனத்திலுள்ள இளம் பிராயக் கனவு இரண்டு. இரண்டு காதலிகள். ஒருத்தி - இப்போது நாக நாட்டில் இருக்கிறாளே பச்சைக் கொடி அவளது விழியை என்னால் மறக்கவே முடியாது. அந்தக் காதல் அழியாக் காதல் - அந்த காதலுக்காக நான் நாட்டையே துறக்கச் சித்தமாக இருக்கிறேன். கடைசி காலத்தில் என் தந்தை சக்கரவர்த்தி பரமேச்வரவர்மர் விருப்பமோ வேறுவிதமாக இருந்தது. பாண்டியர் மகளை நான் மணக்க வேண்டும் என்பது அவர் விருப்பம், நான் சிந்தித்தவாறிருக்கிறேன்..." என்று கூறிச் சிறிது நிறுத்தினார் இராசசிம்மன்.

வீரன் குமாரதேவன் பரபரப்புடன் குறுக்கிட்டு, "மற்றொரு காதலியைப்பற்றிச் சொல்லவில்லையே...?" என்றான்.

ராஜசிம்மன் மெல்ல நகைத்து, "அந்தக் காதலியைச் சொல்லாமல் இருப்பேனா அவளைப் பற்றிச் சொல்வதற்காகவே இவ்வளவு பூர்வ பீடிகை பரந்து விரிந்து கிடக்கும் மாமல்லக் கடற்கரை ஓரத்தில், திகழும் குன்றுகளுக்கு இடையில், சிற்ப அற்புதம் நிறைந்த என் சிற்பக் காதலியை அமர்த்தப் போகிறேன். என் இதயத்தில் பல ஆண்டுகளாக வாழும் "கடற்கரைக் கோயில்" என்று புகழ் பெறப்போகும் காதலி அவள். அவள் மீது அழியாக் காதல் கொண்டுள்ளேன். கடல்மல்லைக் காதலி உருவானவுடன்தான் மற்ற திருமணப் பேச்சு. அந்தக் காதலியை என்னுடன் சேர்த்துவைக்கும் கடமை தங்களுடையது" என்றார் இராசசிம்மன்.

சந்திரமாலாவும் ஓவியர் குமாரதேவனும், சித்திரசேனரும், ராஜசுந்தரியும் 'ஹா ஹா' என்று கோஷமிட்டனர்.

"தங்களுடைய கடல்மல்லைக் காதலி பூரண செளந்தர்யத்துடன், கடல்மல்லைப் பூமியில் நீல வானத் திரைச் சீலையின் கீழ் எழுந்து நடனமிட தாங்கள் முழு மூச்சுடன் பாடுபடுவோம்" என்று ஒருமித்தக் குரலில் அனைவரும் கூறினர்.

சந்திரமாலா நாணம் மிகுந்த குரலில், "சக்கரவர்த்தி அவர்களுக்கு ஒரு வேண்டுகோள். இவர் என் செவி அருகே மெல்லிய குரலில் என்ன கூறுகிறார் தெரியுமா?" என்றாள்.

"கடல்மல்லைக் காதலியைத்தான் நானும் ஆராதிக்கிறேன். அவள் பூரண நிலவில் எழுந்து யௌவன சோபையுடன் நிற்கும் வரையில் உன்னைப் பார்க்கவே மாட்டேன் என்கிறார். இது நியாயமா சொல்லுங்கள். ஓவியருக்குக் கட்டளையிடுங்கள்; இவர் இப்படிச் சொன்னால் இவரது சகோதரர் உங்கள் ஆருயிர் நண்பர் வீரர்



குமாரதேவனும் ராஜசுந்தரியை மணக்கும் நாளைத் தள்ளிப் போட்டுவிடுவார்" என்றாள்.

"ஆகா! அப்படியெல்லாம் நடக்க விடமாட்டேன். முதலில் ராஜசுந்தரி குமாரதேவன் திருமணம். அடுத்து சந்திரமாலா, ஓவியர் குமாரதேவன் திருமணம். மணம் புரிந்து கொண்டவுடன் நீங்கள் பனைமலைக்குச் செல்கிறீர்கள். தந்தைக்கு உதவியாக சித்திரப் பணியை நிறைவேற்றுகிறீர்கள். ராஜசுந்தரி காஞ்சியில் இருப்பாள். நாக நாட்டினின்று விரைவில் காஞ்சிக்கு வரும் பச்சைக்கொடியாளுக்கு பரதக் கலையைக் கற்றுத்தருவாள்.

"அதற்கு முன்பு, என் தந்தையின் இறுதி ஆசையை நிறைவேற்ற பாண்டியர் மகளை நான் மணக்கிறேன்" என்றார்.

"இராசசிம்ம மாமன்னர் வாழ்க! பல்லவ குலத்தைப் பெருமைப்படுத்த வந்த, மாமல்லரின் பெயர் நிலைநாட்ட வந்த இராசசிம்ம சக்கரவர்த்தி வாழ்க! வாழ்க!" என்ற வாழ்த்தொலி கடலோசையையும் மீறி ஒலித்தது.

"கடல் மல்லைக் காதலியும் நீடூழி வாழ்க" என்ற தனிக்குரல் ஒலித்தது. அனைவரும் திரும்பிப் பார்த்தனர்.

சிற்பி சுந்தரமூர்த்தி அங்கே வாழ்த்தியவாறு நின்று கொண்டிருந்தார்.

"ஆகா! இதோ நாம் ஆவலுடன் எதிர்பார்த்த சிற்பி சுந்தரமூர்த்தி" என்று மகிழ்ச்சியுடன் கூவி இராசசிம்மன் ஓடிச் சென்று சிற்பியை அணைத்துக்கொண்டார்.

"தாங்கள் பிட்சுவின் பேச்சை நம்பி கோபங்கொண்டு பல்லவ நாட்டைவிட்டுச் சென்றுவிட்டீர்கள் என்று எண்ணிவிட்டேன். தாங்களில்லாமல் கடல்மல்லையில் சிற்பக் கோயிலை எவ்வாறு அமைப்பது என்று திகைத்தேன்" என்று இராசசிம்மன் கூறினார்.

"அவ்வாறு செய்வேனா? நான் பிறந்த புண்ணிய பூமியாம் தமிழ்த் திருநாட்டிற்குத் தொண்டாற்றாமல் பகைநாட்டிற்குச் சென்றுவிடுவேனா? இதோ-"

சிற்பியின் கரங்களில் சுருட்டப்பட்ட பட்டுத் துணியில் ஓர் ஓவியம் காணப்பட்டது. அதுதான் கடற்கரையில் எழவிருக்கும் புதுமாதிரியான கோயிலின் சித்திரம்.

இராசசிம்மன் சித்திரத்தைப் பார்த்து மகிழ்ச்சி பொங்கக் கூத்தாடினார்.

"ஆகா, ஆனந்தக் கூத்தாடும் சிவபெருமானுக்கும் அரிதுயில் புரியும் திருமாலுக்கும் ஒரே இடத்தில் இருகோயில்கள், வாழ்க சிற்பியாரே, வாழ்க வாழ்க!"

"கண்டு விட்டேன் கடல் மல்லைக் காதலியை!" என்று குழந்தைபோல் கூவியவாறு ஆனந்தக் கூத்தாடினார் பல்லவ மன்னர் இராசசிம்மன்

- முற்றும் -

சென்னை மாவட்ட கிளை நூலகம்
கொளத்தூர், சென்னை
32953
5008/79